TB 1977/1930

[illegible]

[illegible]

[illegible]

C

Δ : 87
N: 9
67621

ஜாலம்.
பீதாம்பர ஐயர்
ஜாலத்திரட்டு
ஸ்ரீபாரதி புத்தகசாலை,
சூளை போஸ்டு, மதராஸ்.

கேரவெஞ்
செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
April
மார்ச் மாதம் வருடம் 1985
செப்பனிட்டு முடித்த
மார்ச் மாதம் வருடம் 1985
April
ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

67621

1177
1930

பிரபஞ்ச மிரட்டென்னும்

பீதாம்பர ஐயர்

ஜாலத்திரட்டு-1500

இது

ம-ா-ா-ஸ்ரீ, பீதாம்பர ஐயர் மாணாக்கருள் மாணாக்கராகிய

சி. பாஷிய ஐயங்காரவர்களின் அனுக்கிரகத்தின்படி

செஞ்சிமாநகர்

ஏகாம்பர முதலியார் அவர்களால்

எழுதப்பட்டு

ஏழாம் பதிப்பு.

கீழ்க்கட்டளை

எஸ். துரைசாமிமுதலியார் அவர்களால்

தமது

சென்னை-சூளை, ஸ்ரீ "பாரதி" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

1929

ரெஜிஸ்தர் செய்தது.]

[இதன் விலை 1 0 0

©

Δ 187

67621

உ

கடவுள் துணை

பிரபஞ்ச மிரட்டென்னும்

பீதாம்பர ஐயர்

ஜாலத்திரட்டு-1500

விநாயகர் - காப்பு

விருத்தம்

சீரோங்கும் சென்னைமுதல் பலதேயத்தும்
சித்திரயா யாடிவரும் ஜாலந்தன்னை
ஏரோங்கும் கலியுகத்திலுள்ளா ரெவருங்கண்டு
இன்புறவே செய்வதற்குத் தேடியின்று
பேரோங்கும் பீதாம்பர ஐயர்ஜாலம்
பெருமையுடன் புவியிலிது விளங்கவேண்டி
காரோங்கும் செந்தமிழால் கழறுதற்கு
கந்தரொடு கணபதிபொற் பாதங்காப்பே.

1. அந்தரமாக விநாயகர் நிற்க காட்டும் ஜாலம்.

மரத்தினால் நான்கு அடி அல்லது ஐந்து அடி உயரமுள்ளதாக, நான்கு கால்கள் நிறுத்தி அதற்குக் கீழ்மேலும் ஓரடி அகலமும் ஒன்றரை அடி நீளமுமுள்ள பலகையைக்கோர்த்து அந்த தோல்பலகையின் உள்புறத்தில் காந்தத்தைப் பதித்து, கழட்டவும் பூட்டவுமாக செய்து வைத்துக் கொள்ளவும். வேறொரு மரத்தினால் விநாயகரைப்போல் அவயவங்கள் பின்னப்படாமல் பக்குவமாகச்செய்து வர்ணம் முதலானதும் பூசிவைத்துக் கொள்ளவும். ஜாலமாடுங் காலத்தில் அச்சபையில் மேற்சொன்ன சப்பிரத்தை சோடித்து பின்பு விநாயகருக்கு புஷ்பத்தினால் சாத்துபடி செய்து நகைகள் முதலானதுங்கொண்டு அலங்கரித்து, சப்பிரத்திற்கு மேலேயிருக்கும் காந்தத்திற்கு நேர் கீழாக காந்தம் இழுக்கும்படியான கனமுள்ள இரும்பு பலகைப்போட்டு உடனே கணேசரை அதின்மேல் வைத்து சபையோருக்குக் காட்டி விட்டு, கற்பூரத்தைக் கொளுத்தி வலதுகையில் மணியெடுத்து இடதுகையிலும் பிடித்துநின்று விநாயகரைத் தோத்திரஞ்செய்ய விநாயகர் அந்தரமாகக் கிளம்புவார். சபையிலுள்ளோர்கள் பார்த்து ஆச்சரியப்படுவோர்கள். மிகவும் உன்னதமான

வேடிக்கையாகவிருக்கும். சபையோர்கள் பார்த்து களித்தவுடனே விநாயகர் கயிலாயத்திற்குப் போகப் போகிறாரென்று சிகப்பு துணியை மேலே போட்டு மூடி உடனே விநாயகரை மறைத்துவிடவேண்டும்.

2. சபையோர்க்கு பந்திசெண்டு தாம்பூலம் கொடுக்கும் ஜாலம்.

கருப்புத்துணியில் அரைமுழம் நீளத்தில் குட்டிச்சாத்தானைப்போல் ஒரே மாதிரியாக நாலைந்து பொம்மையாகத் தைத்து வைத்துக்கொள்ளவும். ஜாலமாடச் சபைக்கு வருமுன்னமே அப்பொம்மையின் தலைமுதற் கொண்டு முழங்கால்வரையிலும் ஒரு பொம்மையில் புஷ்பச்செண்டும், ஒரு பொம்மையில் பாக்கும், ஒரு பொம்மையில் வெற்றிலையும், ஒரு பொம்மையில் சாதிக்காயும், ஒரு பொம்மையில் ஜாபத்திரியும், ஒரு பொம்மையில் ஏலக்காயும், ஒரு பொம்மையில் லவங்கமும் போட்டுத் திருத்து ஒவ்வொன்றுக்கும் அடையாளம் வைத்துக்கொண்டு இவைகளை ஜோல்னைபையில் வைத்துக்கொள்ள வேண்டும். முதலாவது புஷ்பச் செண்டு திருத்து வைத்திருக்கும் பொம்மையை எடுத்து அதன்காலை யிரண்டையும் பிடித்துக்கொண்டு சபையோர்களுக்குக் காட்டி, சல் குட்டிச்சாத்தான் சீக்கிரத்தில் ஓடிப்போய் பூந்தோட்டத்திற் புகுந்து தோட்டக்காரன் கண்களை மறைத்து நன்றாய் மலர்ந்த புஷ்பமாய் பறித்து பந்திசெண்டுகளாகக் கட்டிக்கொண்டு வா வா என்று சொல்லி மேஜைமேல் வைத்து மேலே ஒரு வஸ்திரம்போட்டு மூடிவிட்டு மந்திர கோலை கையிலெடுத்து (ஏக் தோ தீன்) (ஒன் டூ த்ரீ) (ஒகடி ரெண்டு மூடு) (ஒன்னு ரெண்டு மூனு) என்று நாலு பாஷையாக எண்ணி அதின் தலைபுறமாக வாயைவைத்து, ஆ குட்டிச்சாத்தான் பூச்செண்டு கொண்டு வந்தாயாவென்று கேட்கவும், அப்படி கேட்கும்போது அருகிலிருப்பவர் சபையோருக்குத் தெரியாமல் வந்தேனென்று சொல்லவேண்டும். பின்பு வஸ்திரத்தின் கீழாகக் கைவைவிட்டு பொம்மையின் காலின் வழியாக இருந்து ஒவ்வொரு செண்டாக வெடுத்து வெளியில் போடவும். மற்றொருவன் எடுத்து வரிசையாக கொடுக்க பிரமித்து ஆச்சரியப்படுவார்கள். இவ்வாறே அந்த ஒரே பொம்மையைக் காட்டி மற்ற பொம்மைகள் சபையோருக்குத் தெரியாமல் சாமர்த்தியமாய் வரிசையாக வெடுத்து மேற்கூறியவாறு சொல்லி தாம்பூலம் முதலானதுங் கொடுக்கவேண்டும்.

3. சபையோர்க்கு பன்னீர் தெளிக்கும் ஜாலம்.

ஒரு செம்பில் கிணற்று ஜலம் அல்லது குளத்து ஜலம் அல்லது ஆற்றுஜலம் அல்லது குழாஜலம் இவைகளில் எந்த ஜலமேனும் கொண்டு வந்து ஜாலம் ஆடும் சபையில்வைத்து, பன்னீர்செம்பைத் திறந்து கொஞ்சம் ஜலம்விட்டு சபையோர்களின்மேல் தெளித்துக் கேட்டால் வெறும் தண்ணீரென்பார்கள். அப்போது சபையைப்பார்த்து யாரோ கட்டி விட்டார்களென்று சொல்லி விபூதியை யெடுத்து, சல் மலையாளபகவதி கட்டை விலக்கு எதிரியைத் தாக்கு பகையாளியைக் கொல்லு திக்குக் கட்டு திசைக்கட்டு பூமிக்கட்டு ஆகாயக்கட்டு உடலைக்கட்டு இடைவிடாமல் இங்கேயிரு, சல் இந்த நல்லதண்ணியை பன்னீராக்கு என்று விபூதியை யெடுத்து அந்தத் தண்ணீரில்போட்டு கலந்துவிட்டு செம்பில் ஊற்றி

தெளித்துவிட்டால் குபீரென்று வாசனை வீசும். ஆனால் தண்ணீரில் போடப்போகும் விபூதியில் முன்னதாகவே அத்தர்பில்லையைப் பொடி பண்ணி மிச்சமாகக் கலந்திருக்கவேணும்.

4. ரோஜா அத்தர் செய்யும் வித்தை.

ஓர் மட்பாத்திரத்தில் அரிப்பில்லாத ரோஜா இதழ்களைப் பரப்பி அவைகள்மேல் இதழ்கள் மறையும்படியான ஊற்றுஜலத்தை விடவும். பாத்திரத்தை எப்போதும் சூரியகிரணத்தில் வைத்துவைக்கவும். 4-அல்லது 5-நாட்களில் தைலபிந்துகள் தண்ணீர் மட்டத்தின்மீது மிதக்கும் இதுதான் அத்தரென்பது. இத்துளிகளை பஞ்சியில் சேகரித்து சிறிய புட்டியில் அடைத்துவைத்துக்கொள்ளவும். அத்தர் தென்படுகிறவரையில் இதை உபயோகித்த பிறகு புதிய இதழ்களை உபயோகித்துக் கொள்ளவேண்டியது. ஒருதோலா அத்தர் செய்யும்பட்சத்தில் குறைந்தது 60-ரூபாய் லாபங்கிடைக்கும்.

5. கண்களில் மணலைக் கொட்டிக்கொள்ளும் ஜாலம்.

எத்தைச் சொன்னாலும் கேட்கும் கத்தைக்குரி என்கிற வேரைக் கொண்டுவந்து கொஞ்சம் சிறியதுண்டாய் வாயில்போட்டு அடக்கிக் கொண்டு சபையில் நின்று ஆற்றுமணலை அள்ளி இரண்டு கண்களிலும் போட்டுக்கொண்டால் கண் அருகாது. சபையோர்களுக்குக் காட்ட ஆச்சரியப்படுவார்கள். உடனே சல் மலையாளபகவதி என்று குனிந்தால் மணல் கீழேவிழுந்துவிடும். சபையோர்கள் மகா மந்திரமென்று மயங்குவார்கள்.

6. இந்தியா ரப்பரை கரைக்கும் வித்தை.

ரப்பர் ஸ்டாம்பு செய்வதிலும் தண்ணீர் ஒட்டா துணிசெய்வதிலும் ரப்பரென்று வழங்கும் இந்தியா ரப்பர் கரைக்கப்பட்டு உபயோகப்படுத்தப்படுகிறது. ரப்பரின்மீது டெட்ஸ்பிரிட் பிட்ரோலியம் ஸ்பிரிட் இவைகளை ஊற்ற கரைந்துவிடும்.

அச்சப்பிரதிகளை முட்டைவடிவாகவோ அல்லது எப்படியிஷ்டமோ அவ்விதம் அடுக்கிக்கொண்டு அதன்மேல் அதை செவ்வையாய் மூடிக் கொள்ளும்படியான அரக்கை கனமாக தட்டையாய் காய்த்துக்கொண்டு, செவ்வையாக கழுவப்பட்டு தேங்காயெண்ணைத் தடவப்பட்ட அச்செழுத்துப் பட்டரையின்மேல் அழுத்த, எழுத்துகள் அரக்குப்பட்டரையில் பள்ளமாகத்தெரியும். அரக்குப்பட்டரைக்கும்கரைக்கட்டி ரப்பர்குழம்பை ஊற்ற பள்ளங்களில் ரப்பர் பாய்ந்து முத்திரை செவ்வையாய்த்தெரியும். பிறகு இந்த முத்திரையை மரப்பிடிகளிலாவது பித்தளைப்பிடிகளிலாவது அமைத்துக்கொள்ளவும். ஹஸ்தலிகிதம்போல் செய்வதற்கு சயத்தகட்டில் எழுத்துகளைசெதுக்கி அதில் ரப்பரைஊற்றி செய்துக்கொள்ளலாம்.

7. ஒரு பசுவில் இரண்டுவிதம் பால்கறக்கும் ஜாலம்.

பசுவை சபைக்குக் கொண்டுவரா முன்னம் சித்திரமூலமென்ற வேரை பச்சையாகக் கொண்டுவந்து அரைத்து ஒருகொம்பில் பூசிவிட்டு

சபையில் கொண்டுவந்து திறந்து காக்க பூவின்பக்கம் இரத்தமாகக் காக்கும். மற்ற ஒருபக்கம் எப்போதும்போல் வெளுப்பாகவிருக்கும். மறுபடி இரண்டையும் வெளுமையாக்கி வேணுமென்றால் வேர்பூவின கொம்பை ஜலம்விட்டு கழுவிவிட்டு காக்க காதுமுலையும் வெளுமையாகக் காக்கும்; கண்டவர்கள் கண்கட்டுவித்தையென்று ஆச்சரியப்படுவார்கள்.

8. மரத்தை உலுக்காமலும்செத்துப்போகாமலும் செய்யும்வித்தை.

பக்கக்காய்கள் முதலியவை உலுக்கும் செல்லுடிக்கப்பட்டும் செத்துப்போய்விடுகின்றன. காய்க்கின அல்லி விதையின் எண்ணெயுடன் பொடித்தக் கரியைக்கலந்து கம்பங்களுக்குப் பூச சித்தினவலுடம் மண்ணிற்கிடந்தாலும் இரும்புபோல் வலுவாயிருக்கும்.

9. தேங்காயுடைத்து உள்ளே முட்டைகாட்டும் ஜாலம்.

முத்தினதாக ஒரு தேங்காயைக் கொண்டுவந்து மூன்றுகண்ணில் ஒருகண்ணை துவாரஞ்செய்து குடுமியைப்பிய்க்காமல் வைத்துக்கொண்டு ஒரு கோழிமுட்டையை சீமைகாடியில் ஒருநாள் முழுமைக்கும் ஊறவைத்து கையிலெடுத்தால் ஜவ்வைப்போல் நீளும்; அதை உள்ளே விட்டுவிட்டால் எப்போதும்போல் முட்டையாகிவிடும். ஆனால் துவாரஞ்செய்து தேங்காயிலுள்ள ஜலத்தை முன்னதாகவே கொட்டிவிட்டுமுட்டையை விட்டவுடன் நல்ல ஜலம் விடவேண்டியது. துவாரத்தை மெழுக்கால்மூடி சபையோர்க்கு நன்றாய்காட்டி பின்பு சல் மலையாள பகவதி இந்த தேங்காயிற்குள்ளே முட்டை உண்டாகக்கடவதென்று உடைத்து முட்டையைக்காட்ட சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

10. தீபம் இல்லாமல் கர்ப்பூரம் கொளுத்தும் ஜாலம்.

திமிர் பாஷாணத்தை ஒரு சிறிய சீசாவில்போட்டு ஜலம்விட்டு வைத்துக்கொண்டிருக்கவேண்டும். ஜாலமாடும் சபைக்கு வருமுன்னமே அந்த பாஷாணத்தை சிறுபயறளவு வாயில்போட்டு அடக்கிவைத்திருந்து ஒரு கெச்சக்காய் பிரமாணம் கற்பூரத்தை சபையோர்க்கு முன்பாக வைத்து, சல் சாமளாதேவி இந்த கற்பூரத்தைக் கொளுத்திவிடுப் போடியென்று விபூதியையெடுத்து கற்பூரம் மறையும்படியாகப்போட்டு, சு பத்திரக்காளியென்று வாயருகில் கைதுவைகையைக் கொண்டுபோய் பாஷாணத்தைக்கையில் உமிழ்ந்துகொண்டு மறுபடியும்கொஞ்சம் விபூதி யெடுத்து போடுவதுபோல் பாஷாணத்தை கற்பூரத்தின்மேல் வைக்க பாஷாணத்தின் சாரம் வாங்கினவுடன் கற்பூரம் குபீலென்று எரியும். சபையோர் இது அக்கினிதேவன் வசியமென்பார்கள். ஆனால் பாஷாணத்தை தண்ணீரிலேயே போட்டு வைக்கவேண்டும்.

11. கோழிமுட்டை பறக்கும் ஜாலம்.

கோழிமுட்டையைக் கொண்டுவந்து சிறிய துவாரஞ்செய்து அதிலுள்ள பாதி அம்பிலியை ஊற்றிவிட்டு பாதரசம் அரைபலமும் பனித்தண்ணீர் கொஞ்சமும் விட்டு துவாரத்தைக் காகிதத்தால் மூடிவிட்டு

வெய்யிலில்வைக்க சூடு ஏறியே அந்திரமாகப் பறக்கும். கண்டஜனங்கள் இது அந்தரதேவதை வசியமென்று ஆச்சரியப்படுவார்கள்.

12. வயலெட் இங்கிசெய்யும் வித்தை.

நான்கு அவுன்சு சாயக்கட்டையை ஒன்னரை பைண்ட் தண்ணீரில் போட்டு முக்கால்பைண்ட் ஆகிறவரையும் காய்ச்சவும். பிறகு வடிக்கட்டி யெடுத்துக்கொண்டு அதில் முக்கால் அவுன்ஸ் சேர்த்தும் ஒன்னேகால் அவுன்ஸ் படிகாரமும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

13. முறத்தில் நெல்லுபொரி பொரிக்கும் ஜாலம்.

பச்சைநெல்லை கொண்டுபோய் சுண்ணாம்புக் கால்வாயருகில் சுண்ணாம்பு ஜலவிகொட்டி தாளிக்குமிடத்தில் கொஞ்சம் மண்ணைத் தோண்டிக், கொண்டுபோன நெல்லைக் கொட்டிப் பரப்பி மேலே மண்ணைப் போட்டு மூடிவிட்டு,பின்பு அதன்மேல் சுண்ணாம்புஜலவி தாளித்தவுடனே இதை வாரிக்கொண்டுவந்து பத்திரப்படுத்தி ஜாலம் ஆடும் சமயத்தில் இந்த நெல்லில் கொஞ்சமெடுத்து முறத்திலாவது அனிசவுக்கத்திலாவதுபோட்டு சபையோர்களுக்குக்காட்டி, சல்மலையாளபகவதி ஓடிவா ஓடிவா, இந்த நெல்லைப் பொரி பொரியடி யென்றுசொல்லி கொஞ்சம் தண்ணீரை நெல்லின்மேல் தெளித்து கையினால்வருக்க பளபளவென்று பொரியும்; சபையோர்கண்டு அது எட்சணி வித்தையென்று நிச்சயிப்பார்கள்.

14. மணலை அலுவா செய்யும் ஜாலம்.

சீனிகற்கண்டு பலம்-1 பாதம்-பிசினி பலம் ஒன்னரை குங்குமப்பூ விராகனிடை அரிக்கால் இம்மூன்றையும் மணல்போல் தூளாகச்செய்து வைத்துக்கொண்டு, ஜாலமாடும் சபையில் ஒரு பீங்கானில் மணலைப் போட்டு அனைவருக்குங் காட்டி, இந்த மணலை அலுவா செய்கிறேன் பாருங்களென்று துணியை மேலேபோட்டு மூடிவிட்டு சபையோர்களுக்குக் காண்பித்தமணலை கீழே மறைத்துவிட்டு, இந்த அலுவா திணுசை சொல்லுவினால் வைத்திருந்து மகா தந்திரமாகயெடுத்துப் பீங்கானில் போட்டு மறுபடியும் துணியைத்திறந்து காண்பிக்க மணல்போலவே யிருக்கும். உடனே கொஞ்சம் ஜலம்வார்த்து சல் மலையாளபகவதி அலுவா செய்யடியென்று மறுபடியும் துணியைப்போட்டு மூடிவிட்டு சற்றுநேரம் பொறுத்து மேல்மூடிய துணியை வாங்கிப் பார்த்தால் அல்வாபோல் பதனையாக விருக்கும். அதை மேஜைகத்தியா லறுத்து சபையோர்களுக்குக் கொடுக்கலாம். இதை மகா தந்திரமாக செய்ய வேண்டியது. மந்திரமென்றே நம்புவார்கள்.

15. இரகசிய இராயச இங்கிவித்தை.

கடிதத்தில் எழுதும் சங்கதி இரகசியமாக யிருக்கவேணுமாகில் எழுத்துகள் தெரியாமலும் நமக்கு வேண்டியவர்களுக்கு தெரியும்படியாயும் இருக்கவேண்டும். இதற்கு முக்கியமாய் பொடிசெய்த படிகாரத்தை ஜலத்தில்போட்டு யெழுதினால் தெரியாமலிருக்கும், வெய்யிலில்

வைக்க எழுத்துகள் கறுத்து கண்களுக்குப்; புலப்படும் ஆச்சரியமாக விருக்கும்.

16. சுட்டபோளியிலிருந்து சிட்டுக்குருவி பறக்கும் ஜாலம்.

ஒரு சிட்டுக்குருவியைப் பிடித்துவந்து அதன் கண்களில்படாமல் கண்ணைக் கையினால் மூடிக்கொண்டு உயர்ந்த ஒயின்சாராயத்தை கால் துலைவரைக்கும் ஊற்றி நனைந்து கோதுமைமாவில் கனத்தபோளிபோல் செய்து அதனுள் சிட்டுக்குருவியைவைத்து சுற்றிலும் வாயைமூடி தயார் செய்துவைத்துக்கொண்டு அடுப்புமூட்டி கடாயியைவைத்து நல்லெண்ணெய் ஊற்றி எண்ணெய் காய்ந்தவுடன் போளியைக்கட்டு, இதனுள் ளிருக்கும் குருவி சாகாமற் பறக்கும்படி செய்கிறேன் பாருங்களென்று உடனே அந்த போளியை காய்கின்ற எண்ணெயில்போட்டு ஒரு பிரட்டு பிரட்டி சல்லிக்கரண்டியில் சடுக்கென்று யெடுத்துக்கொண்டு உடனே போளியை கையிலெடுத்துப் பிட்டால் புர்ரென்று குருவியானது பறக்கும்; ஆச்சரியப்படுவார்கள்.

17. பலவித பழத்தின்சாரம் காட்டும் வித்தை.

பழங்கள் எப்போதும் அகப்படுவதில்லை. அவைகளின் சாரத்தையும் வாசனையும் இரக்கிக்கொள்வது மிக அருமையான விஷயம். எலுமிச்சம் பழம் இலந்தைப்பழம் விளாம்பழம் முதலியவைகளின் சாரத்தை பின் வருமாறு எடுக்கலாம் தோல் அல்லது ஓட்டையீக்கி ஆல்கஹால் என்னும் திராவகத்தைவிட்டு கரைத்து பிறகு வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

18. பந்தங்கொளுத்தி வாயினுள் வைக்கும் ஜாலம்.

சபைக்கு வரும்முன்னே கால்பலம் கற்பூரத்தை வாயில்போட்டு மென்று வாயெல்லாம் நன்றாய்ப் படும்படியாய்க் குழப்பி துப்பிவிட்டு பந்தங்கொளுத்தி வாயில் போட்டுக்கொண்டால் பார்ப்பவர் ஆச்சரியப் படுவார்கள்; வாய்சுடாது.

19. லவங்கப்பட்டை தைலமுதலியவை யிறக்கும் வித்தை.

லவங்கப்பட்டை அல்லது லவங்கத்தை செவ்வையாய் பொடி செய்து அத்துடன் கொஞ்சம் ஜல சம்பந்தமான ஆல்கஹாலை விட்டு இரண்டுவாரம் கலக்கி வடிகட்டி இஷ்டப்படி வர்ணம்போட்டு வைத்துக் கொள்ளலாம்.

20. தேள்கொட்டினால் விஷமேறுதிருக்கும் ஜாலம்.

ஞாயிற்றுக்கிழமைதினம் சூரியன் உதயமாகுமுன் சென்று கருங் கருனை செடிக்கு தூபங்கொடுத்து சூடங்கொளுத்தி வைத்து நூலில் மஞ்சள் தடவி அச்செடிக்குக் காப்பு கட்டிவிட்டு அன்று சாயந்திரம் சென்று அந்தச்செடியை பிடுங்கி அடிவேரை அறுத்து மோதிரம்போல் சுற்றி விரலில் போட்டுக்கொண்டு தேளைக்கொட்டவிட்டு வேடிக்கைக் காட்டலாம்; விஷமேறாது.

21. வயிற்றைக்கீறி நூல்வரும் ஜாலம்.

ஜாலமாடும் சபைக்குவரும்முன்னமே தானினுடைய ஜவ்வுகொண்டு வந்து சதுரத்திற்குச் சதுரமாய் நாலு அங்குலம் அளவு யிருக்கும்படி யாய் ஒருதுண்டை எடுத்து அதின்மத்தியில் பாதி உண்டைநூலை அந்த ஜவ்வின் நடுவில்வைத்து நூல்படாமல் சுற்றிலும் விளாம்பிசினிபூசி இடதுபக்கமாயாவது வலதுபக்கமாயாவது வயிற்றின் தொப்புளுக்குப் பக்கத்தில் நூலை உள்ளேவைத்து ஒட்டி விட்டால் உடம்போடு ஜவ்வும் ஒன்றாய்க்கலந்துவிடும். பார்ப்பவர் கண்ணுக்குத் தெரியாது கொஞ்சம் நூலையெடுத்து கொளுத்தி அந்தசாம்பலை வாயில்போட்டு விழுங்கிவிட்டு, இப்போது விழுங்கியச் சாம்பலை நூலாக்கி யெடுக்கிறேன் பாரென்று ஒட்டினயிடத்தில் நூல்முனையை கத்தியால்கீறி, சல் மதியைாளபகவதி நால் ஓடிவாவென்று நூல் முனையைப்பிடித்து யிழுத்தால் நூல்வரும். பார்க்கும் சபையோர்களெல்லாம் வயிற்றிலிருந்துதான் நூல்வருகு தென்று ஆச்சரியப்படுவார்கள். நூல்விடும்போது முனையை அடையாளமாகப் பார்த்து வைக்க வேண்டியது.

22. மஹெளஷத திதீபிகை வித்தை.

பாஸ்போரிக் ஆசிட் என்று ஆங்கிலேய பாஷையில் வழங்கும் ஒளஷத திதீபிகை ஏருவம்சம் ஒன்பதாவது அத்தியாயம் எழாவது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. உலர்ந்த பாஸ்பரஸ் ஒருபங்கும் சுதர் திராவகம் 6-பங்கும் கலந்து ஒருபுட்டியில் போட்டு சடையால் (கார்க்) மூடி வெள்ளிரில் 8-மணிநேரம் வைக்கவும். வெளிச்சம்வேணும் சமையத்தில் மூடித்திறக்க வெளிச்சந்தெரியும்; உடனே மூடிவிடவேண் டும். இது ஒருவருஷத்துக்கு வரும்.

23. துணியைக்கொளுத்த வேகாதிருக்கும் ஜாலம்.

ஒருசவுக்கத்தை சாராயத்தில் தோய்த்து சபையில் வைத்துக் கொளுத்தி விட்டால் குபீரென்றுயெரியும். அணைந்தபின் சவுக்கத்தை எடுத்து சபையோர்கள் முன்னே உதறி காண்பிக்க ஆச்சரியப்படுவார் கள்; அக்கினிபகவான் வசிய மென்பார்கள்.

24. நெருப்பு பிடிக்காத் துணிசெய்யும் ஜாலம்.

முட்டையிலிருக்கும் வெள்ளை கருவையும் படிகாரத்தையும் கலந்து குட்டைக்குப்பூசி உப்புக்கலந்த ஜலத்தில் தோய்த்து உலர்த்த நெருப்புப் பிடிக்காது.

25. கோழிமுட்டையை மந்திரித்துவிடும் ஜாலம்.

வெள்ளைகுன்றிமணி செடியைக்கண்டுபிடித்து அதன் வடக்கோடி யிருக்கும் வேரும் வெள்ளை மாடப்புறா பிச்சம் பொன்னரிதாரமும் பாவட்டையிலையும் சமனிடையாய்சேர்த்து அரைத்து முட்டைமீதில் தடவி முன்னதாக வைத்துக்கொண்டிருந்து, ஜாலமாடும் சபையில் முட்டையை எடுத்துக் காண்பித்து இந்த முட்டையை புருஷும்படி செய்

இடுறேன் பாரென்று வாசலில் விட்டால் வூசல் முழுவதும் புரண்டுக் கொண்டேவரும்; பார்ப்பவர் பிரமிப்பார்கள்.

26. தண்ணீர் ஒட்டாத துணிசெய்யும் ஜாலம்.

மெழுகுடன் குங்குலியத்தைக் கலந்து காய்ச்சி அதில் துணியை நனைத்து உலர்த்தியெடுக்க மெழுகு சீலையாகும்.

27. மரக்கிளி பரக்கும் ஜாலம்

மரத்தினுல் கிளிபோல்செய்து வர்ணம் முதலானதும் உன்னதமாகப் பூசி இரக்கைமாத்திரம் மெல்லிய இரும்புத்தகட்டினுலே சித்தரித்து அதற்குக்கீலுகள் வைத்து இரக்கை யாடும்படியான தந்திரத்தோடு தொடுக்கவும். ஒவ்வொருபக்கமும் பாதி இரக்கைக்குமாத்திரம் பலவித வர்ணம் பூசியிருக்கவும். நடிக்கும்போது காந்தமிருக்கிற வீட்டிலென்று இதோ மந்திரத்தினுல் செய்தகிளி அந்தரமாகப் பறக்குமாவென்று சொல்லி, ஆகிலும் ஒரு மந்திரம் போடுகிறேன் பாருங்களென்று சொல்லி விபூதியெடுத்து மேலுங்கீழுமாக விழித்துப்பார்த்து, சல் மலையாளிபகவதி ஓடிவா, சபையில்வந்து சற்று நில்லென்று நான்குதிக்கிலும் விபூதிபோட்டு இந்தக்கிளியை உள்ளங்கையில் வைத்து எந்திருல் மேலுக்குகிளம்பும். கைக்கு எட்டுவரையில் போகும்போது மறுபடியும் எடுத்து முன் போல் எந்தவும் மறுபடியு மப்படியே கிளம்பும். பார்ப்பவர்களெல்லாம் மந்திரஞ்செய்தாவென மயங்குவார்கள்.

28. பனிக்கட்டிசெய்யும் ஜாலம்.

ஒருமெல்லிய கண்ணாடி கோளத்தில் கொஞ்சம் சலத்தை வார்த்து அந்த உருண்டையை சல்பியூரிக் ஈதர் என்னும் திராவகத்தால் நனைத்துக் கொண்டுவர அதனுள் சலம் கட்டி பனிக்கட்டியாகும்.

29. கசகசாவில் மீன் உண்டாகும் ஜாலம்.

கடலோரம் சென்று சூரியன் உதயமாகுமுன் பிடிக்கும்படியான கிளையுடைய மீனைப்பார்த்து வாங்கிக்கொண்டுவந்து அந்தமீனைக்கிழி கிளையெடுத்து, இரவில் பனியில் வைத்து பகலில் சூரியன் கிரணம்படாத நிழலில்வைத்து உலர்த்தி, பதினைந்தாம் நாள்சென்றபிறகு கிளையை புதிர்த்து கசகசாவில் கலந்துவைத்துக் கொண்டிருந்து, சாலமாடுஞ் சபையில் ஒருபோவணியில் ஜலங்கொண்டு வரும்படிசெய்து இந்த கசகசாவை கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இதை மீனுக்கு இடுறேன் பாரென்று சலத்தில்போட உடனே உயிருடன் மீன்உண்டாகும்.

30. அறுந்த ஆட்டுத்தலை கத்தும் ஜாலம்.

கொம்பில்லாத ஆட்டுத்தலையை வாங்கிவந்து பக்குவமாய்மண்டை ஓட்டைக் கிளப்பி மூளையெல்லாம் எடுத்துவிட்டு வெற்றிலை தோட்டத்தி லிருக்கும் தவளையைக் கொண்டுவந்து தலையுள்ளேவைத்து மண்டை யோட்டுக்கு வஜ்ஜிரத்தடவி ஒட்டிவிட்டு காய்ந்தபிறகு கழுவி மஞ்சள் குங்குமமிட்டு வாயில் ஒரு எலுமிச்சம் பழத்தைவைத்து சாம்பிராணி தூபம்

போட்டு அந்தத்தலை நாசியில் புகையேறும்படியாய்க்காட்டினுல் ஆட்டைப் போலவே கத்தும். நாசி துவாரத்திற்குச் சரியாய் தவளையின் முகத்தை வைக்கவும்.

31. இங்கிப்பொடி செய்யுந் ஜாலம்.

மாசிக்காய் 5-அவுன்ச காசிக்கட்டி 1-அவுன்ச அன்னபேதி 2-அவு ன்ச கோந்து ½-அவுன்ச இவைகளைப் பொடிசெய்து வைத்துக்கொள்ள வும். தேவையானபோது கொஞ்சம் எடுத்து புட்டியில்போட்டு சலம்விட் டெழுதலாம்.

32. தீபமேற்றிவைத்த வீடுமுழுதும் பச்சைப்பாம்பு காட்டும் ஜாலம்

தேங்காய் ஒன்று கொண்டுவந்து ஒருகண்ணை துவாரஞ்செய்து வெள்ளிக்கிழமை கிளம் தேடிப்பச்சைப்பாம்பைப் பிடித்துக்கொண்டு வந்து தேங்காயினுள்விட்டு கெட்டியாய்த் துவாரத்தைமூடி பிறகு அடி தீபங்கொடுத்துப் பூமியைத்தோண்டி புதைத்துவிடவேண்டும். ஏழுநாள் சென்றபிறகு அதைத்தோண்டியெடுத்து தேங்காயின் மேல்தோட்டைப் போக்கி மற்றவைகளைக் கல்வத்திலிட்டு அரைத்து வருத்து புறபாண்ட த்திலிட்டு சீசாவில் பதனப்படுத்தி வைத்துக் கொள்ளவேண்டியது. ஜாலம் ஆடும் சமையத்தில் ஒரு திரியில் அந்த தைலத்தை தோய்த்து அகலில் வைத்துக்கொளுத்திப் பார்க்க வீடெங்கும் பச்சைப்பாம்பாக இருக்கும்.

33. கோழிமுட்டை தண்ணீரில் மேயும் ஜாலம்.

ஒரு கோழிமுட்டையைக் கொண்டுவந்து சிறிய துவாரஞ்செய்து அதனுள்ளிருக்கும் அம்பிலி முதலானதும் போக்கிவிட்டு அட்டையை அதனுள்விட்டு, துவாரத்தை தண்ணீர் ஒட்டாத மெல்லிய சீலையில் மூடி விட்டு கோழிமுட்டைத் தண்ணீரில் போட இருகிறுவென்று சுழன்று நாலுபக்கமும் ஓடும்; கண்டவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

34. பூமியில் புதைத்தமுட்டை மாயமாய்ப்போகும் ஜாலம்.

ஒரேகட்டியாக ஒருபலம் படிகாரத்தை திருத்தெடுத்து நெருப்பில் போட அது பொசபொசவென்று பொங்கி பூர்த்தவுடன் அதையெடுத் துப் பேனுகத்தியினுல் பக்குவமாக முட்டையைப்போல் சீராகச் சீவி வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் வேறுமுட்டையைக் கையி லெடுத்து சபையோர் களுக்குக்காட்டி, இந்த முட்டையைப் புதைத்து விடுகிறேன், மறுபடியும் இந்தமுட்டையை யெடுத்துக் கொடுப்பார்களா வென்று பந்தயங்கூறிச் சல் மலையாளபகவதி என்று சொல்லி தந்திரமாக படிகாரமுட்டையையெடுத்து அனைவருக்குங்காண்பித்துப்பூமியில்புதைத்து கொஞ்சம் தண்ணீர் தெளித்து சற்றுநேரங்கழித்து தோண்டிப்பார்க்க முட்டைமாயமாய்ப்போகும்; கண்டோரெல்லாம் ஆச்சரியப்படுவார்கள்.

35. வாத்துமுட்டை குதிக்கும் ஜாலம்.

ஒரு வாத்துமுட்டை நல்லதாக கொண்டுவந்து அதின்மேல் சாணம் தடவி வைத்துக்கொண்டு பிறகு கூரியிற்கு கொண்டுவந்து அந்த இற

இன் அடிப்புறத்தில் வாயை மெழுகால்மூடி தயார்செய்து வைத்துக் கொண்டு ஷை முட்டையை நல்ல தீயுள்ள அடுப்பில்போட்டு நன்றாய் வெந்து சூடெழும்பியவுடன் சுடுக்கென்று முட்டையெடுத்து மேலுள்ள சாணத்தை நீக்கி உடனே ஜலம்விட்டு வைத்திருக்கும் கூனியின் இரகை முட்டையின் உள்ளே சென்றுவிட குளிர்ளமட்டும் குறிக்கும், கண்டவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

36. காகிதத்தில் பலகாரம் சுடும் ஜாலம்.

நல்ல கனத்த கடு தாசியை யெடுத்து ஜொங்கிலீஸ் ஓட்டி தேரின பிரண்டையைக் கொண்டுவந்து மைபோல அரைத்து தொன்னையின் புறத்தில் நான்குபூச நன்றாய்ப்பூசி காயவைத்துக்கொண்டு சாலமாடும் சபையில் மூன்று சிறுகல் அடுப்பின் மேல்வைத்து நல்லெண்ணை விட்டு, எண்ணை காய்ந்தவுடன் அப்பளம் பணியாரம் இன்னும் பலவிதமான பலகாரமுஞ் சுடலாம். ஆனால் கூடியசீக்கிரத்தில் சுட்டுக்காட்ட வேண்டும் பிரண்டையை அரைக்கும்போது கைவிரல்களுக்கு விளக்கெண்ணை தடவிக்கொள்ள வேண்டும்.

37. ஒருமணிநேரத்திற்குள் கேழ்வரகு பயிரிட்டு கதிரறுக்கும் ஜாலம்.

அடையத்திருக்கும் தலைக்கோழிமுட்டைக் கொண்டுவந்து அரிசி புகும்படியான துவாரம்செய்து அதனுள்ளிருக்கும் அம்பிலிமுதலானதும் போக்கிவிட்டு, அதின் நிறையகேழ்வரகை நிரப்பி துவாரத்தை காயிதத்தால்மூடி முன்போல் கோழியின் அடையத்தில்வைத்துவிடவும். அதுகுஞ்சி பொரிக்குந்தருணத்தில் மேற்படிமுட்டையைக் கண்டுபிடித்து யெடுத்து வந்து பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும். ஜாலம் ஆடுஞ்சபையில் எருவு சேர்ந்தமண்ணைக்கொட்டி பாத்திகட்டி ஜலம்விட்டு பிறகு மேற்படி கேழ்வரகு கையிலெடுத்து அனைவருக்குங் காட்டி அந்த பாத்தியில் விதைத்து மேலே துணியைப்போட்டு மூடிவிடவும். ஒருமணி நேரம் பொறுத்துத் திறந்துபார்க்க பயிர்வளர்ந்து கதிர்விட்டிருக்கும்; கண்டவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

38. தீபத்தைப்பார்த்தவுடன் கூத்தாடுஞ் ஜாலம்.

ஞாயிற்றுக்கிழமைதினம் இரட்டைவால் பல்லியை தேடிக்கண்டவுடன் அருணாக்கயிர் முதலானதும் அறுத்துவிட்டு நிர்வாணமாக நின்று கத்தியால் அந்த பல்லியின் வாலைத்துண்டிக்க அதுகீழேவிழுந்து துடிக்கும். அப்போது நீ கனிமனி யென்றுசொல்லிக்கொண்டே உன் இஷ்டம்போல் கூத்தாடி வால்துடிப்பு அடங்கினவுடன் அருணாக்கயர் ஆடைமுதலானதும் உடுத்திக்கொண்டு வாலையெடுத்து பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு ஜாலமாடுஞ்சபையில்மெல்லிய வெள்ளைசீலையில் வாலைவைத்து திரிபோல்செய்து வேப்பெண்ணையில் தோய்த்து அகலிலிட்டு தீபமேற்றிட அதைப்பார்த்தவர்களெல்லாம் தங்கள் மனம்போல் கூத்தாடுவார்கள். தீபத்தை அணைத்துவிட்டால் ஆட்டம்நின்றுவிடும். ஆனால் வாலில் தீபடாமல் ஒரு அங்குலம் உள்ளேவைத்து சுற்றவேண்டும்.

39. தேவர்களை காட்டும் ஜாலம்.

இல்லைப்பால் கொண்டுவந்து அத்துடன் திரிபாலசூரணம் சேர்த்து குழம்பிலவைத்துக்கொண்டு இருட்டாக இருக்கும் ஓர்வீட்டில் முச்சியைக் கொண்டாவது அல்லது நாணலது சிறிய பிரஷினாலாவது மேற்படி பாலைக் கொண்டு அந்த அறையின் சுவற்றில் மும்மூர்த்திகள் போலும் தேவர்கள் போலும் யெழுதிவிட்டு பார்க்க வெளுப்பாகவேயின்றி பிரகாசமோடு தோன்றும். கதவை மூடிக்கொண்டு வெளியில்வந்துவிடவும். பிறகு தனக்கு இஷ்டமானவர்களை அழைத்து இதோ இந்தவீட்டில் தேவர்கள் முதலியவர்களை காண்பிக்கிறேன். பாருங்களென்று அனைவரையும் அழைத்துக் கொண்டுபோய் அறைதிறந்து காண்பிக்க தேவர்களெல்லாம் சூரியபிரகாசம்போல் தோற்றப்படுவார்கள். அப்போதுபார்த்தவர்கள் யாவரும்பிரமித்து மதிமயங்கி நிற்குந்தருணத்தில் கொஞ்சம் கற்பூரத்தை கொளுத்திவைத்து, தேவர்களே தங்கள் தங்கள் இருப்பிடம் போவீர்களென்று சொல்லவேண்டும். வெளிச்சங்கண்டவுடன் எழுதியது தோற்றப்படமாட்டாது. வெளிச்ச மிருக்கும்போதே யனைவரையும் வெளியே போகச்சொல்லி கதவை சாற்றிக்கொள்ளவேண்டும்.

40. சகலமும் வசியமாகும் ஜாலம்.

கஸ்தூரிமஞ்சள் கோரோசனை கிராம்பு பச்சைகற்பூரம் ஜாதிக்காய் இவைகளை வகைக்கு விராகனிடை தூளாக எடுத்து கல்வத்திலிட்டு பொடிசெய்து வெள்ளையாக விருக்கும் மெல்லிய துணியில் அதைபரப்பி திரிபோல்செய்து வைத்துக்கொண்டு அதன்மேல் சருச்சிலைசுற்றி அதின்மேல் தாமரைநூல் சுற்றி குருவை தியானித்து பிறகு பசுவின்நெய்யை தலைமண்டையோட்டில் விட்டு சிவசிவாவென்று மேற்படிதிரியை மண்டையோட்டிலிட்டு விளக்கேற்றி அதில்வரும்மையைவாங்கி அத்துடன்புனுகும் ஜவ்வாதும் சமனிடையாகக்கூட்டி மந்திரித்து சிமிழில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவேண்டும். அதன் பிறகு மோகினி தேவதை வசியமாகும்படி மோகினி பூசையும் வாலைபூசையும் செய்ய மந்திரம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் அக்ருஷனி மோகினி என்று லட்சம் உருவு கொடுத்துவர சித்தியாகும். அதன்பிறகு மேற்படிமையில் கொஞ்சமெடுத்து நெற்றியில் திலர்தம் வைத்துக்கொண்டு வெளியில்வர சகலரும் வசியமாகும். அன்றியும் தங்கத்தினாலும் வெள்ளியாலும் சிமிழ்க்குச்சு செய்து திலர்தம் இட்டுக்கொண்டுபோக தேவதை முதலானதும் ராட்சதர்களும் முனி பூதம் பேய்முதலானதும் ஸ்திரீ புருஷர்களும் வசியமாவதுடன் கேட்டதெல்லாம் தருவார்கள், பகைவிலகும்; இந்த மையினால் கீர்த்தியாகிய ஜாலங்கள் செய்யலாம்.

41. மறைவுமை ஜாலம்.

ஜுங்கோல பிண்டம்வாங்கி அதைசூரணித்து எடுத்து மாதர்கள்வீட்டு தூரமான சீலையில்வைத்து சுருட்டி வைத்துக்கொண்டு பிறகு தலைமண்டையோட்டில் பசுவின்நெய்விட்டு மேற்படிதிரியை அதிலிட்டு தீபமேற்றி எரித்து அதில்வரும் மைவாங்கி சிமிழில் பத்திரப்படுத்திவைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில்போய்நின்று மேற்படி மைக்கொஞ்ச

மெடுத்து நெற்றியில் இட்டுக்கொள்ள ஒருவர்கண்ணுக்கும் தோற்றமல் நிற்பாய். மை துடைத்து விட்டால் தோற்றப்படுவாய். அப்போது சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

42. தேங்காய் மந்திரித்துவிடும் ஜாலம்.

ஒரு தேங்காயைக் கொண்டுவந்து குடுமி முதலானதுகளையும் போக்காமல் ஒரு கண்ணை பின்னைக்காய் புகும்படியான துவாரம்செய்து உள்ளிருப்பதை சுரண்டிவிட்டு வீட்டிலுள்ள சுண்டெலியை அதினுள்ளே விட்டு தேங்காய் பில்லையில் வச்சிரந்தடவி துவாரத்தை மூடிவிட்டு தேங்காய் குடுமியையும் வச்சிரந்தடவி தெரியாமல் ஒட்டிவிட்டு மஞ்சள்பூசி குங்குமப் பொட்டுவைத்து முன்னதாக வைத்துக்கொண்டு பிறகு ஜாலமாடுஞ் சபையோரைப் பார்த்து, ஓ சபையோர்களே யாராகிலும் ஒரு தேங்காய் கொண்டுவந்து கொடுத்தால் அதை மந்திரத்தால் உருளும்படி செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி அவர்கள் கொண்டுவந்து கொடுக்கும் தேங்காயைவாங்கி அதற்கு மஞ்சள்பூசி குங்குமமிட்டு தூபதீபங்கொடுத்து, சல்மலேயாளபகவதி ஓடிவா என்று தந்திரமாக அவர்கள்கொடுத்த தேங்காயை மறைத்துவிட்டு முன்தேங்காயை சபையில்விட அது ஒரு யிடத்தில் நிற்காமல் உருண்டுக்கொண்டே யிருக்கும் சபையோர்கள் மிரளுவார்கள்.

43. நெருப்பில்லாமல் வெண்ணெய் உருக்கும் ஜாலம்.

குழியில் வெந்த கற்சுண்ணாம்பைக் கொண்டுவந்து ஒருவருக்குந்தெரியாமல் ஜாலமாடும் சபையில் ஒருயிடத்தில் கொஞ்சமண்ணைத் தோண்டி இந்தக்கல்லைக்கொட்டி மண்ணை மூடிவைத் திருக்கவேண்டும். ஜாலமாடும் போது ஒருகிண்ணத்தில் கொஞ்சம் வெண்ணெயைப்போட்டு சபையோர்களுக்கு காண்பித்து, இந்த வெண்ணெயை நெருப்பில்லாமல் உருக்குகிறேன் பாரென்றுசொல்லி சுண்ணாம்பு புதைத்தவிடத்தில் கிண்ணத்தை வைத்து சுற்றிலும் ஜலம்விட்டுக்கொண்டுவர வெண்ணெய் கரகரவென்று உருகும். பார்ப்பவர்களெல்லாம் மகா ஆச்சரியமான ஜாலமென்று நினைப்பார்கள்.

44. ஒரு கிணற்றில் ஊற்றிய பசம்பாலை மறுகிணற்றில் எடுக்கும் ஜாலம்.

துல்லியமான மெல்லியசீலையில், பசம்பால் ஆழாக்குகறந்துகொண்டு வந்து அந்த சீலையில் கொஞ்சம் கொஞ்சமாக தோய்த்து உலர்த்தி அந்த ஆழாக்குப் பாலையும் சீலையில் ஏற்றி நன்றாய் உலர்த்தி முன்னதாக வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் பசம்பால் ஆழாக்கு கறந்து கொண்டுவந்து சபையோர்க்குக்காட்டி, இந்தபாலை ஒருகிணற்றில் இறங்கிக் கொண்டுவருகிறேனென்றுசொல்லி அனைவருக்கும் முன்பாக சடக்கென்று ஒருகிணற்றில் ஊற்றிவிட்டு, இதோபார் வேறுகிணற்றில் கொண்டு வருகிறேனென்று மேற்படி சீலையை கோமணமாகக்கட்டிக் கொண்டு கிணற்றிலிறங்கி, இந்தசீலையை ஜலத்தில்நனைத்து சொம்பில் பிழிய பாலெல்லாம் கக்கிவிடும். ஆழாக்குப்பால் அளவாக பிழிந்து

கொண்டு கிணற்றைவிட்டு மேலேயேறிவந்து சபையோருக்குக்காட்ட ஆச்சரியப்படுவார்கள். ஆனால் கிணற்றில் இறங்கும்போது ஒருவரையும் அக்கிணற்றருகில் வராமற்படிக்கு பயமுறுத்த வேண்டும்.

45. சீட்டெழுதி ஜலத்தில்போட சுழலுஞ் ஜாலம்.

ஒரு பனம்வோலை யெடுத்துவந்து அதைவாரி ஒரு அங்குலம் துண்டு துண்டித்து அதில் நசி மசி என்றெழுதி இப்புத்தகத்தில் கூறியிருக்கும் வசியமையில் கொஞ்சம் அத்தசீட்டில்தடவி அத்துடன் காதினிலிருக்கும் குரும்பியையெடுத்து நன்றாய்த் தடவி ஜலத்திற்போட கிருகிருவென்று சுழலும்.

46. விளாம்பழம் உருளும் ஜாலம்.

ஒருபழுத்த விளாம்பழத்தைக் கொண்டுவந்து அதை வாளினால் இரண்டாக அருத்து அதனுள்ளிருப்பதை யெல்லாம் யெடுத்துவிட்டு வீட்டினிலிருக்கும் சுண்டெலியை அதினுள்போட்டு வச்சிரந்தடவி கெட்டியாக ஒட்டி, காய்ந்தவுடன் மஞ்சள்பூசி குங்குமமிட்டு முன்னதாக தயார்செய்து வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் சபையோர்களைப்பார்த்து, யாராகிலும் ஒரு விளாம்பழம் கொண்டுவந்தால் இந்த சபையில் நடக்கவைக்கிறேனென்றுசொல்ல, கொண்டுவந்து கொடுத்தால் அந்த பழத்தை வாங்கி அதற்கு மஞ்சள் குங்கமிட்டு தூபதீபங்கொடுத்து பிறகு தந்திரமாக அந்தபழத்தை கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி, சல் மலையாளபகவதி நடவென்று வாசலில் விட்டுவிட கடகட வென்று உருளும்.

47. எலுமிச்சம்பழமறுக்க இரத்தங்காணுஞ் ஜாலம்.

நல்ல கூருள்ள ஒரு மேஜைகத்தியில் செம்பருத்திப்பூவின் ரசத்தைப் பிழிந்து கத்தியில் தளும்பத்தடவி உலரவைத்து இம்மாதிரியாக ஆறுயேழுவிசை தடவி உலர்த்தி முன்னதாகத் தயார்செய்து வைத்துக்கொண்டு பிறகு, ஜாலமாடும் சபையில் ஒரு எலுமிச்சம்பழத்தைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்தபழத்தை அறுத்து ரத்தங்காட்டுகிறேன் பாருங்களென்றுசொல்லி பழத்தை இடதுகையில்பிடித்து வலதுகையில் மேற்படி கத்தியையெடுத்து கரகரவென்று அருக்க சொரசொரவென்று ரத்தம் ஒழுகும்.

48. எலுமிச்சம்பழம் குதிக்கும் ஜாலம்.

ஒரு எலுமிச்சம் பழத்தைக் கொண்டுவந்து அதை எழுத்தாணியால் குத்தி அதில் ஒண்ணரை விராகனிடை பாதரசத்தை விட்டு மெழுகினால் துவாரத்தை யடைத்து அந்தப்பழத்தை வெய்யிலில்வைக்க சூடேறின மாத்திரத்தில் தரையில் நிற்காது; செண்டுபோல் குதிக்கும் அல்லது பூமியில் உருளும்; பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமாக விருக்கும்.

49. கண்கட்டு மைவித்தை ஜாலம்.

ஒரு ஊர்க்குருவியைப் பிடித்துவந்து பாளத்தை தைத்து கால்களஞ்சு வெண்ணெயும் சேர்த்து குருவியின் வாய்புரமாக உள்ளுக்குச்

செலுத்தி வாயை தைத்துவிட்டு சிறுபானைக்குள்வைத்து ஒருபடி தென்னங்கள் அதிலூற்றி அடுப்பேற்றி ஒருவிதவிரகால் எரித்து எட்டொன்ருய்க் கருக்கி பதம்பார்த்து அஸ்தியையும் ரோமத்தையும் நீக்கி மற்றவைகளையெல்லாம் கல்வத்திலிட்டு பேய்கருப்பன்சார் விட்டு சேர்த்தரைத்து மைபோலானபின்பு மெல்லிய சீலையில் தடவி உலர்த்தி திரியாய்சுற்றி தலைமண்டையோட்டில் ஐங்கோலத் தைலம்விட்டு மேற்படி திரியை கொளுத்தி அதில்வரும் மையைவாங்கி தைலத்தோடுசேர்த்து இழைத்து ஜாலக்காளை பூஜைசெய்து மையைப் பத்திரமாய் சிமிளில் வைத்துக் கொண்டு இஷ்டம்போல் வித்தையாடலாம்.

50. பாம்பு உண்டாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் பச்சை வைக்கோல் கார் ஒன்று யெடுத்து சபையோர்களுக்குக் காட்டி, இந்த வைக்கோலை பாம்பாக்குகிறேன் பாரென்று தந்திரமாகக் கண்கட்டுமையைத் தடவி கீழேபோட பாம்பாகும். பார்ப்போரெல்லாம் ஆச்சரியப்படுவார்கள்.

51. புளியனிலையை குளவியாக்கும் ஜாலம்.

புளியனிலையை ஒருகொத்துக் கொண்டுவந்து சபையோருக்குக் காட்டி இந்த புளியனிலையை குளவியாக்குகிறேன் பாரென்று கண்கட்டுமையைத்தடவி யிலையை உருவி கீழேபோட குளவியாகும்.

52. வேப்பிலையில் தேளாக்கும் ஜாலம்.

கண்கட்டுமையைத் தடவி வேப்பிலையை உருவி கீழேபோட தேளாகும்.

53. செத்தகுருவியை உயிருண்டாக்கும் ஜாலம்.

எந்த ஜாதி குருவியா யிருந்தபோதிலும் செத்துப்போனதைக் கொண்டுவந்து மேற்படி கண்கட்டுமையை அதின் சிரசில்தடவ உயிருண்டாம். கண்டவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

54. பானை ஓட்டை விராகன் ஆக்கும் ஜாலம்.

பானை ஓட்டை வட்டமாகச்செய்து வைத்துக்கொண்டிருந்து சபையோர்க்குக் காட்டி இந்த ஓட்டை விராகனாக்குகிறேன் பாரென்று சொல்லி மேற்படி கண்கட்டுமையை எடுத்து ஓட்டில்தடவி கீழேபோட விராகனாகும். கண்டவர் பிரமிப்பார்கள்.

55. சந்தனம் பூசும் ஜாலம்.

மேற்படி கண்கட்டுமையை கையில் தடவிக்கொண்டு மண்ணைக் கிள்ளி ஒருவர்மேல்பூச கெந்தபொடி வாசனைவீசும்.

56. அம்மியை நடக்கவைக்குஞ் ஜாலம்.

அம்மியைக் கொண்டுவந்து சபையில்வைத்து இந்த அம்மியை நகரவைக்கிறேன் பாரென்றுசொல்லி மேற்படி கண்கட்டுமையை கொஞ்ச

மெடுத்து தந்திரமாக அம்மியில் தடவ அம்மி நகரும். ஆச்சரியப்படுவார்கள்.

57. கேச்சக்காய் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் ஜாலம்.

பத்துப் பதினைந்து கெச்சக்காயை யெடுத்து மேற்படி கண்கட்டுமையைத்தடவி பூமியில்போட ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும்.

58. தென்னைமரத்தைக் குத்த தேங்காய்விழும் ஜாலம்.

தென்னைமரத்தடியில் போய்நின்று மேற்படி கண்கட்டுமையை மரத்தில் தடவிவிட்டு ஜாலக்காளை பூஜைசெய்து, சல் மலையாளபகவதியென்று மரத்தை ஓங்கிக்குத்த தேங்காய் பலபலவென்று விழும்.

59. பாலு சர்க்கரையாகும் ஜாலம்.

தேவையானமட்டும் பசும்பால் கொண்டுவந்து ஒரு பாண்டத்தில் ஊற்றி அடுப்பேற்றி யெரிக்க பால்காயும்போது பெருந்துத்திவேரை துடுப்புபோல் செய்து கிளரிக்கொண்டுவந்து பால் நன்றாய்க் காய்ந்தவுடன் அடுப்பைவிட்டு இறக்கி ஆறவைத்து புட்டியிலூற்றி நாலுநாள் பொறுத்துப்பார்க்க சீனிசர்க்கரைபோல் வெள்ளை ஆற்றுமணல்போலிருக்கும். அதை முன்னதாகத் தயார்செய்து வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் வெள்ளை ஆற்றுமணலை கொஞ்சங் கையிலெடுத்து இந்த மண்ணை சர்க்கரை யாக்குகிறேன் பாரென்று காட்டி தந்திரமாக ஆற்றுமணலை மறைத்துவிட்டு மேற்படி பால்சர்க்கரையை யெடுத்து அனைவர்க்கும்கொடுத்து சாப்பிடச்சொல்ல சபையோர்கள் சாப்பிட்டு ஆச்சரியப்படுவார்கள். அன்றியும் இதைசெய்து வைத்துக்கொண்டு காலை மாலை இருவேளையும் உச்சிக்கரண்டி பிரமாணம் சாப்பிட்டுக்கொண்டுவர தாதுவிர்த்தியாகும்; இந்திரியங் கட்டும்.

60. வசிய மூலிகை ஜாலம்.

பீனாரு சாரணையின் செடியைப் பார்த்து வெள்ளிக்கிழமையில் காப்புக் கட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தீபதூபங் கொடுத்து அதின் வேரைக்கொண்டுவந்து பொன்னினால் குளிசம்செய்து வேரை யதனுள் அடக்கஞ்செய்து வலதுகையில கட்டிக்கொள்ள சகலரும் வசியமாவார்கள். மாதர்களும் மயங்கித்திரிவார்கள்.

61. ஜெகவசியமாகும் ஜாலம்.

வசமத்தை பொன்னாங்கண்ணி செம்முள்ளி கெஞ்சா செங்குவளை பொன்னுவாழை புழுகு பாதரசம் கோரோசனை புல்லாமணக்கு சென்னுபுருவி மூலம் இவைகளை வெவ்வேறாகச் சார்பிழிந்து வகைக்கு விராகனிடையெடுத்து ஒன்றாகச்சேர்த்து ஆழமுள்ள கல்வத்திலிட்டு மைபோலரைக்கும்போது சிற்றண்டமுடைத்துவிட்டு நன்றாக அரைத்து வழித்து பகவதியை தியானித்துப் பூசித்து சிமிளில் அடக்கம்செய்து வைத்துத் திலர்தமிட பருஷர்கள் வசியமாவார்கள். கேட்டதைத் தருவார்கள். சிநேகிதமானவர்கள் பிரியமாட்டார்கள். நம்மைத் தேடிவந்து தலை

ஜாகனில் காத்துக்கொண்டிருப்பார்கள்; மற்றவர்கள் வியக்குமாறு நடப்பார்கள்.

62. குருடாக்கச் செய்யும் ஜாலம்.

நீர்ப்பட்டையும் அரசன்பாலும் கொண்டுவந்து நிலையில்வைத்து திரி போல் சுற்றி, எதிரியினுடைய விளக்கிற்போட, எதிரியினுடைய கண் திருஷ்டி குறையும். இவ்வாறு நாலு வெட்டு நாளும் அந்தியில் மறவாமல் எரித்துக்கொண்டுவந்தால் அவன் குருடாகப்போவான்.

63. பூமியிலிருந்து அக்கினி பிறப்பிக்கும் ஜாலம்.

கெந்தகத்தையும் அப்பிரகத்தையும் ஒன்றுக்கலந்து ஜலம்விட்டு கொஞ்சம் இளவாகவே உருண்டைசெய்து வெய்யில் உலரக்கும்படியான இடத்தில் பூமியில் திட்டிப் பள்ளந்தோண்டி புதைத்துவிட்டு சபையோர்களைப் பார்த்து, இந்த இடத்தில் பூமிக்குள்ளிருந்து அக்கினி வரும்படி செய்கிறேன் பாருங்களென்று சொல்லி புதைத்த இடத்தின்மேல் மனம் போன ஒரு சக்கரம் எழுதி மந்திரம் ஜபிப்பவன்போல் காலாமணிநேரம் ஜாலம் செய்துகொண்டிருக்க அதற்குள் பூமி புகைவெளிப்பட்டு வெடித்து அக்கினி பிரவேசமாகும். கண்டவர்கள் பிரமித்து ஆச்சரியங் கொள்ளுவார்கள்.

64. புட்டியில் தீபங்காட்டும் ஜாலம்.

நல்லியமான வெள்ளைப்புட்டி ஒன்று கொண்டுவந்து அதில் குண்டுமணி அளவு இப்பிரகாரம் புட்டியில் போட்டு ஆலிவாயில் எண்ணெயைக் கொஞ்சம் கலந்து ஆற்றி ஆதியைப் பின் மெதுவாய் புட்டியில் ஊற்றி முன்னதாக வைத்துக்கொண்டு, ஜாலமாடும் சபையில் இந்த புட்டியை மேலும் மேல்வைத்து கார்க்குப் போட்டு மூட குபீல் குபீலென்று பிரகாசிக்கும். கார்க்கைத் திறந்துவிட்டால் இருண்டுபோகும் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் இதை ராத்திரியில் காட்டவேண்டும்.

65. புட்டியில் புஷ்பங் காட்டும் ஜாலம்.

ஒரு நல்லியமான வெள்ளைப்புட்டி கொண்டுவந்து அரைபுட்டி ஜலம் ஊற்றி சிப்பஸ்பம் கொஞ்சம்போட்டு நத்தை ... ... யிலாவது கூடிய தண்ணீரில் தங்கும்படியாய் தொங்கவிட்டு கார்க்கு மூடி காலுகாலன் வைத்திருந்து எடுத்துப்பார்க்க மகாவிநோதமாக இருக்கும். பார்ப்போர்கள் ஆச்சரியப்படுவார்கள்; புஷ்பமென்பது சகர்லெட்டு.

66. மோகினி வசியமாகும் ஜாலம்.

ஜவ்வாதுப்பு, செண்பகப்பூ, முல்லைப்பூ, கொழுந்து வெள்ளை காக்கணம்பூ, செவ்வல்லிப்பூ, சம்பங்கி இந்தப் பூவையெல்லாம் சாரப்பிழிந்து நிலையாக இருத்தெடுத்து ஒன்றாகச்சேர்த்து அதனுடன் செம்புத்தென்னைத் துளசிவைத்துவிட்டு அரைக்கும்போது எதிரியினுடைய மயிரும் கோழிமுட்டையாட்டி புறுகு பச்சைக்கற்பூரம் இவைகளை சேர்த்து நாகமல்லிக்கொடி கேர்த்து மைபோலரைத்து சிமிழில் அடைத்து மயானத்தில் கொண்டுபோய் புதைத்து மோகினியை தியானித்து ஹ்ரீம்

இரீம் கிலீயும் என்று மூன்று நாளும் தவறாமல் லட்சம் உருவெடுத்து மையையெடுத்து வந்து மோகினியை தியானித்து திலகமிட்டுக் கொண்டு வெளியே போக சகலரும் வசியமாகும்; இதனால் தரித்திரியம் இல்லாமல் போகும்; வசியமிதே கைகண்டது.

67. ஜாலக்காளி பூசை ஜாலம்.

மஞ்சள் கிழங்குகொண்டுவந்து பெண்பாவைபோல் ரூபஞ்செய்து கொடிமூலம் மேலேற்றி சக்திபூசைசெய்து பின்பு சாகினி டாகினி ஜாலக்காளிதேவி ஸ்வாஹா வென்று லட்சம் உருவெடுத்து தியானிக்க ஜாலக்காளி சித்தியாவாள். நீ செய்யும் ஜாலம் எங்கும் கீர்த்தியோங்கும். நீ சொன்னபடிக்கெல்லாம் உன்னிடமிருந்து ஆடுவாள்.

68. செத்துப்போன கீரிப்பிள்ளை தோலுக்கு உயிருண்டாக்கும் கைப்பிரட்டு ஜாலம்.

கச்சன் கலங்களிலும் இரண்டு கூடை ஒரே மாதிரியாகச்செய்து ஒரு கூடையில் உள்ளே கள்ள அறைவைத்து பார்ப்பவர்களுக்குத் தோற்றமிருக்கும்படி செய்து, அந்தக்கள்ள அறைக்குள் உயிருள்ள கீரிப்பிள்ளையைப்பிடித்து அடைத்து அந்த கூடையிலுள்ளிருக்கும் அறைக்குகையறிதல் சுருக்குவைத்து திறக்கமூட சுலுவாயிருக்கும்படி முன்னதயாரா செய்து வைத்துக்கொண்டு பிறகு ஜாலமாடும் சபையில் கீரிப்பிள்ளைத் தோலைக் கையில் எடுத்து அங்குள்ள அனைவர்களுக்குங் காட்டி, இந்த தோலுக்கு உயிர் கொடுத்து நடக்கச் செய்கிறேன் பாரென்றுசொல்லி அந்த தோலைப் பூமியில்வைத்து சாதா கூடையை யெடுத்து சபையோர்களுக்கு நன்றாய்க் காட்டி அந்த தோலின் மேல் மூடி, மேற்படி கீரிப்பிள்ளையை அடக்கம் செய்திருக்கும் கூடையை அருகே வைத்திருக்கவேண்டும், சதுரத்திற்கு சதுரம் ஆறுமுழம் நீளமுள்ள துண்டை கீரிப்பிள்ளை தோலிருக்கும் கூடையின்மேல்மூடி ஜனங்களுக்கு தமாஷ் காட்டிக்கொண்டே தந்திரமாக துணியை அகலவிரித்து முழங்கால் மேல் போட்டு கூடையைத் தந்திரமாகப்பிரட்டி கீரிப்பிள்ளையை பக்குவமாக அவிழ்த்துவிட்டு மற்றவைகளை யெல்லாம் துணியில்மறைத்து அப்புறம் வைத்துவிட்டு மாத்திரைக்கோலால் அந்தக்கூடையை மூன்றுதரம் சுற்றி இறக்கி பின்பு, சல் மயோராளபகவதி இந்த கீரிப்பிள்ளைத் தோலுக்கு உயிர் கொடுகொடு என்று மூன்று தரம் சொல்லி கூடையைத்திறந்து காட்ட உயிருடன் கீரிப்பிள்ளை இருக்கும். கண்டவர்கள் ஆச்சரியப்படுவார்கள் ஆனால் மகா தந்திரமாகச் செய்யவேண்டும். கீரிப்பிள்ளையை கூடைக்குள் அடக்கம்செய்து விருப்பது கூடையைகாட்டினால் சாதா கூடைபோலிருக்கவேணும்; கூடையளவு பக்குவமாக முடையவேணும்.

69. செத்துப்போன பாம்புத்தோலுக்கு உயிருண்டாக்கும் ஜாலம்.

கச்சன் கலங்களிலும் இரண்டு பாம்பை அடக்கம் செய்யும்பெட்டி ஒரே மாதிரியாகச் செய்து ஒருபெட்டியில் சுத்த ஜாதிப் பாம்பையேனும் பிடித்து அதின் வாயிலுள்ள விஷப்பல்லைப் பிடுங்கிவிட்டு பெட்டியில் அடக்கஞ்செய்து ஜாலஞனக்குள் முன்னதாகத் தயார்செய்து வைத்

அக்கொண்டு பிறகு ஜாலமாடும் சபையில் பாம்புத்தோலை கையிலெடுத்து அனைவர்களுக்குங் காட்டி, இந்த பாம்புத்தோலுக்கு உயிர்கொடுக்கிறேன் பாரென்றுசொல்லி பாம்புபெட்டியை அனைவர்களுக்குக்காட்டி அதில் பாம்புத்தோலை கையிலெடுத்து அனைவர்களுக்குங்காட்டி அதில் பாம்புத்தோலை போட்டுமூடி அதின்மேல் கருப்பு துணியை மூடி ஜனங்களுக்கு வேறு தமாஷ்களை காட்டிக்கொண்டு தந்திரமாக ஜோல்னா பையை அருகில் இழுத்து ஒருவருக்குந் தெரியாமல் துணியை மூடிக்கொண்டு மகாஜாக்கிரதையாக பாம்புபெட்டியை மாற்றி ஜோல்னாதுணி முதலானதையும் அப்புறம் நீக்கி பாம்புபெட்டியை மாத்திரைக்கோலால் மூன்றுதரம் ஏற்றி யிறக்கி, சல் மலையாளபகவதி பாம்புத்தோல் பாம்பாகவேணும் சல்திசல்தி யென்றுசொல்லி மோடிக்காயை வாயில்வைத்து ஊதி பாம்புபெட்டியை ஒன்பதுசுற்று சுற்றிவந்து பின்பு பாம்புபெட்டியை திறந்துகாட்ட பெட்டியிலிருந்து பாம்புபடம் விரித்தாடக் கண்டவர்கள் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

70. அளந்த அரிசி உபரியாகுஞ் ஜாலம்.

கால்படி அரிசி பிடிக்கும்படியாக கின்னம் ஒன்று செய்து அதுபோலவே இன்னம் ஒன்று செய்யவேண்டும். இரண்டாவதுகின்னத்தில் உள்ளே ஆழம் வைக்காமல் இரண்டுபிடியரிசி மீதியாகும்படியாய் மரம் கனமாகவைத்து செய்து கொண்டு அந்த இரண்டுக்கும் வர்ணம் ஒரே மாதிரியாய்ப்பூசி இருக்கவேணும். அரிசியைக் கொண்டுவரச்சொல்லி ஆழமான கின்னத்தில் தலைவழிக்க அளந்துக்கொண்டு மற்றொரு கின்னத்தை மேலேமூடி சபையோர்க்குக் காட்டிக்கொண்டே தந்திரமாகக் கீழ்மேலாகக் கவிழ்த்துவிட்டு மெதுவாய் மேலிருக்கும் கின்னத்தை யெடுத்தால் அரிசி குபுகுபுவென்றுபொங்கி வந்துவிடும். இது ஆச்சரியமாயிருக்கும். இதுபோலவே உளுந்து பயறு கடலை பட்டாணி நெல்லு முதலானதும் அளந்துகாட்டலாம்.

71. தண்ணீர் பொங்குஞ் ஜாலம்.

குசவனிடம் குடுவை ஒன்றுசெய்து அதன் கழுத்தடியில் பொருத்தி ரூற்போல் புனல் மாதிரியாய்ப் உள்ளுக்குப் பொருத்திவைத்து அந்தப் புனல் அடியில் ஒரு துவாரமும் குடுவைதொப்பை மையத்தில் ஒரு துவாரமும்வைத்து செய்து கொண்டு மேல்புறம் சிகப்புவர்ணம், பூசி கண்ணைப்போல் அலங்காரம்செய்திருக்கிறேன் மாகையால் உடம்பெல்லாம் கண்களைப்போல் கருப்புவர்ணத்தில் எழுதியும் கருப்புவர்ணம் வைக்கவேணும். ஜாலமாடும் சபையில்வந்து துவாரத்தின்மேல் பெரிய விரலை வைத்து மூடி அழுத்திப் பிடித்துக்கொண்டு செம்பில் ஜலம் கொண்டுவரச்சொல்லி இந்தக் குடுவையில் வார்த்து, சல் மலையாள பகவதி என்று மேலேவைத்து, இதோ குடுவையை கவிழ்த்து வைக்கிறேன் தண்ணீர் இருக்குமா போகுமாவென்று சொல்லி கவிழ்த்து வைக்கவும். வைத்தால் பாதிஜலம்கீழேபோய்விடும். அவாரம் மையமானகையால் பாதிஜலம் இருக்கும். மறுபடியும் துவாரத்தின்மேல் விரலைவைத்து மூடி எடுத்து அந்த துவாரத்தில் வாயைவைத்து மூச்சுப்பிடித்து ஊதினால், விரலிலிருந்து

தொண்டிவழியாய் தண்ணீர் மேலுக்குப்பொங்கும். மறுபடியும் தொண்டியை பிடித்துக்கொண்டே கவிழ்த்தாலு ஜலமிருக்காது. அப்படியே தூக்கி ஊதினால் பொங்கிவழியும் இதுபோல் ஜலமிருக்கின்ற வரையிலும் செய்யலாம். பார்ப்பவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

72. புட்டியில் மாம்பழம் காட்டும் புதுமையான ஜாலம்.

ஒரு கருப்பு புட்டியை அடியில் புனல்போல் இருப்பதை கின்னருலி யாலறுத்தெடுத்து நல்ல இனிப்பான மாம்பழங்களை உள்ளேபோட்டு தகரத்தினால் புனலைப்போல் செய்து மிருவாய் சொருகி ஒட்டித்தெரியாமல் தாரைகாய்ச்சி பூசிவைத்துக்கொள்ளவும். புட்டியில்போட்டபழம் எத்தனை எவ்வளவு பெரிதோ சிறுமோ அதுபோல் கையிலெடுத்துக் கொண்டு சபையில் வந்து, இது பாஞ்சாபுதேசத்திலிருந்து குட்டிச்சாத்தான் கொண்டுவர்த்த மாம்பழம் பாருங்களென்று பில்லி பில்லியா யறுத்து அனைவருக்கும் கொடுக்கவும். முன்பழமிருக்கும் புட்டியில்பிடித்த வரையில் நல்லசலம் விட்டு இருக்கவேணும். அப்பா பரமானந்த ஸ்வாமி! தாகமெடுக்கிறது தண்ணீர் கொண்டுவாவென்று கேட்டு அந்த புட்டியை வாங்கி சாப்பிடுவதுபோல் உதட்டில்வைத்து தண்ணீர் கீழ்மேலும் சிந்தும்படியாய் செய்து மேஜைமேல் வைத்து, சல் குட்டிச்சாத்தான் முன்னே அருந்துக்கொடுத்த மாம்பழத்தை இந்தபுட்டியில் வரச்செய்வாயா? எதோ உன்சாமர்த்தியங்காட்டு என்றுசொல்லி மாத்திரைக்கோலை எடுத்து (ஒன் டு திரி) (எக் தோ தீன்) (ஒகடி ரெண்டு மூடு) (ஒன்று இரண்டு மூன்று) என்று புட்டியைச்சுற்றி கன்னுனி ஒரு குல் கட்டையை எடுத்து புட்டியைப் பிடித்துக்கொண்டு கொக்கி அடித்து விட்டால் பழங்கள் குபீலென்று வெளியில் விழும். பார்ப்போர்களுக்கு மகா அதிசயமாகவேயிருக்கும். இம்மாதிரியாக எவ்விதபழவர்க்கங்களையும் புட்டியில் காட்டலாம். ஆனால் ஜாக்கிரதையாகச் செய்யவேண்டும்.

73. கோழிமுட்டையின் மேல் விசித்திரமான யெழுத்துகள் யெழுதும் ஜாலம்.

ஒரு கோழிமுட்டையைக் கொண்டுவந்து உள்ளிருக்கும் அம்பிலியைப் போக்கி, தேன் மெழுகை காய்ச்சி முட்டையின்மேல் முழுதும் பூசிவிட்டு விசித்திரங்கள் எழுதலாம். எழுதிவிட்டு எழுத்துக்குள்ளிருக்கும் மெழுகையெல்லாம் சுத்தமாக யெடுத்துவிட்டு ஒயினில் மூன்றுமணி நேரமாகிலும் நாலுமணி நேரமாகிலும் ஊரவைத்து எடுத்து ஜலத்தில் கழுவி சபையோர்களுக்குக் காட்ட ஆச்சரியப்படுவார்கள். ஆனால் அல்பகாத்தியிலாவது ஊசியிலாவது எழுதவேண்டியது.

74. சபையில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தால் விகாரமாகக் காட்டும் ஜாலம்.

ஒரு போகணியிலாவது இன்னம் எந்த பாண்டத்திலாவது (ஸ்பிரிட்டு) ஒயின் அரைபயிண்டு வாங்கிக்கொண்டு வந்து கொதிக்கவைத்து இரக்கிச் சபையில்வைத்து ஒருபிடி உப்பை அள்ளிப்போட்டால் புகை

யும் ஜொலிப்பும் பெரும்பும் அந்தருணத்தில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தால் அகோரமாகத் தோன்றும், அதை அப்புறம் எடுத்து மறைத்து விட்டால் அந்த அகோர ரூபம் மாறி சாதாரண ரூபமாய்த் தோற்றும்.

75. தண்ணீரின்மேல் விளக்கு எரியும் ஜாலம்.

ஒரு சிறிய கிளாசிலாவது இன்னம் வேறே எந்த பாண்டத்திலாவது ஜலம்விட்டு சபையோர்களுக்கு நன்றாய்க்காட்டி இந்த ஜலத்தில் தீபம் காட்டுகிறேன் பாருங்களென்று சொல்லி (பொட்டாசியம்) என்றதை கொஞ்சம்போட்டால் குப்பென்றதாக தீபம்போல் பிரகாசித்து எரியும். பொட்டாசியம் வாங்கவேணுமென்றால் டாப்பில் கிடைக்கும். மருந்தை வைத்திருக்கும்படியான விதம் திரவிறையல் எண்ணெயில்போட்டு வைத்திருக்கவேண்டும்.

76. புட்டியில் முட்டைவிடும் ஜாலம்.

கோழிமுட்டையைக் கொண்டுவந்து காடியில் மூன்றுநாள் ஊறவைத்து எடுக்க சவ்வைப்போல் மெதுவாயிருக்கும். பிறகு ஒரு நல் லியமான புட்டியில் முட்டையை மலரைப்போல் பிழிந்து புட்டிக்குள் விட்டு கொஞ்சம் நல்லசலம்விட எப்போதும்போல் முட்டையாகிவிடும். ஜாலமாடும் சபையில் வைக்க பார்ப்போர்களெல்லாம் ஆச்சரியப் படுவார்கள்.

77. நல்லதண்ணீரை பன்னீராக்குஞ் ஜாலம்.

ஒரு தாம்பாளத்தை சபையோர்களுக்குக் காட்டி மேசையின்மேல் வைத்து ஒருசொம்பில் நல்லசலம் கொண்டுவரும்படியாகச்செய்து தாம் பாளத்தில் ஊற்றி அனைவருக்கும் காட்டி, இதோயிந்த சலத்தைப் பன் னீராகச் செய்கிறேன் பாரென்றுசொல்லி சற்றுநேரம்பொருத்து அந்த சலத்தை எடுத்து அனைவர்மீதும்தெளிக்கவெறும்சலமென்பார். உடனே சல மலையாளபகவதி என்னை யித்தசபையில் அவமானப்படுத்தாமல் இந்த தண்ணீரை பன்னீராக்கவேண்டும் என்றுசொல்லி ஒருவருக்குந்தெரியா மல் தந்திரமாக (எஸன்ஸ் ஆப்ரோஸ்) என்கிற தைலத்தில் நாலு துளி விட அத்தர் வாசனை கமகமவென்றதாகப் பரிமளிக்கும். அதையெடுத்து சபையோர்கள்மீது தெளிக்க ஆச்சரியப் படுவார்கள் ஆனால் அந்த (எஸன்ஸ் ஆப்ரோஸ்) என்ற வஸ்துவை சிறிய சைப்புக் குழைசெய்து அதில் விட்டுவைத்திருந்து அந்தகுழாயை விரலில் பக்குவமாய் அடக்கி சலத்தில் விடவேண்டியது; மருந்துஷாப்பில் கிடைக்கும்; எஸன்ஸ் ஆப் ரோஸ் என்பது தமிழில் ரோசாவின் சத்து.

78. சம்பங்கி அத்தர் வாசனை காட்டும் ஜாலம்.

ஒரு நல்லியமானபுட்டியை நன்றாய் சலம்விட்டு கழுவி சபையோர் களுக்கு காண்பித்து மேசையின்மேல் வைத்து ஒருசொம்பில் நல்லசலம் கொண்டுவரும்படியாகச்சொல்லி கொஞ்சம் சலத்தை புட்டியில் ஊற்றி சபையோரைப்பார்த்து இந்தபுட்டியிலிருக்கும் நல்லதண்ணீரை சம்பங்கி அத்தர் செய்கிறேன் பாரென்று தந்திரமாக சம்பங்கிசத்தை நாலைந்து

துளிவிட சம்பங்கி அத்தர் வாசனை கமகமவென்று பரிமளிக்கும். ஆச்சரி யப்படுவார்கள்.

79. மல்லிகைப்பூ வாசனைகாட்டும் ஜாலம்.

ஒரு வெள்ளை அகலப் பீங்கானில் நல்ல சலத்தைவிட்டு சபையோர் களுக்குக்காட்டி இந்த சலத்தை மல்லிகைப்பூ அத்தர் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி, அடே குட்டிச்சாத்தான் சீக்கிரமாகச்சென்று அத்தர் ஷாப்பில்போய் நல்ல நல்ல மல்லிகைப்பூ அத்தர்கொண்டுவந்து இந்தத் தண்ணீரில் ஊற்றுவாயென்று மாத்திரைக்கோலால் மூன்று தரம் அந்த பீங்கானைச்சுற்றி சனங்களுக்குத் சிமாஷ்காட்டிக்கொண்டே ஒருவருக்கும் தெரியாமல் மல்லிகைப்பூ அத்தரில் நாலு ஐந்து துளி விட குபீலென்று மல்லிகைப்பூ அத்தர்வாசனை கமகமவென்று பரிமளிக் கும்; ஆச்சரியப்படுவார்கள்.

80. சலத்தை அல்வாசெய்யும் வித்தை.

ஒரு புதிய பாண்டத்தைக் கொண்டுவந்து நன்றாய்ச் சலம்விட்டுக் கழுவி சபையில்வைத்து ஒருசொம்பில் நல்லசலம் கொண்டுவரச்சொல்லி அந்தசலத்தை மேற்படி பாண்டத்திலூற்றி சபையோரைப்பார்த்து, இந்த சலத்தை அல்வாசெய்கிறேன் பாருங்களென்றுசொல்லி மேலே துணி யைப்போட்டுமூடி ஒருவருக்குந் தெரியாமல் தந்திரமாக முன்னதாக நாட்டுச் சர்க்கரைபோட்டு கிளறட்டுக்கொடியை சார்பிழிந்து கொஞ்சம் சார்விட்டு பிறகு, சல மலையாளபகவதி தண்ணீரை அல்வாசெய்யென்று சற்றுநேரம்பொறுத்து துணியைத் திறந்துபார்க்க பந்தனையாகிவிடும். அதை மேசைகத்தியால் சிலேஸ் சிலேசாக அறுத்து சபையோர்களுக் குச் சாப்பிடும்படியாக கொடுக்க ஆச்சரியப்படுவார்கள். இதை சாதா ரணமாய்ச் செய்துதின்றாலும் தாதுவிருத்தியாகும்.

81. நினைத்தமிருகம் முதலானவைகளை உண்டாக்கும் மகாமாயமை.

மேற்சொன்ன இலையைக் கொண்டுவந்துத் தனித்தனியாகச் சார் பிழிந்து ஒவ்வொன்றிலும் உச்சிக்காரண்டி சார்விகிதம் அளவாகயெடு த்து ஆழமுள்ள கல்வத்தில்விட்டு அரைக்கும்போது கள்ளிக்காக்கையின் வெள்ளை அம்பிலியையும் கோழிமுட்டையின் வெள்ளை அம்பிலியையும் விட்டு அரைத்து ஆதம் கால் கஞ்சியும் அதில் சேர்த்து கோரோசனை கால் கஞ்சியும் அத்துடன்கூட்டி மாதர் விட்டுதூரமான சீலையைத் தொளுத்து அந்த சாம்பலுங் கொஞ்சம்சேர்த்து பச்சை இறைச்சித் தோண்டு குடல் எலும்பு முதலானவைகளையும் போக்கி அதையும் சேர்த்து யாவையும் மைபோலரைத்து வழித்து நல்லியமான சீலையில் நன்றாய்த் தடவி உலரவைத்துப் பிறகு தலைமண்டையோட்டில் ஐங்கோ லத்தைலம் வார்த்து மேற்படி திரியை அதில் போட்டு எரித்து தயிலம் வாங்கிசிமிளில் அடக்கஞ்செய்து வைத்துக்கொண்டு அதைக்கொண்டு போய் மயானத்தில் புதைத்து காலை மாலை இருவேளையும் மயானருத்தி ரியைத் தியானிக்கும் மந்திரம் ஓம் ஸ்ரீம் இரீம் கிலியும் அக்குருஷணி

ஓ மயானருத்திரி என் வசமாக ஓடிவருவாயென்று வேளைக்கு லட்சம் உரு செபிக்கவேண்டும். கையில் சாம்பிராணி வத்தி கொளுத்திவைத்துக்கொள்ளவேண்டும். இப்படி இருபத்தொருநாள் செபித்து இருபத்திரண்டாம் நாள் இரவில் தோண்டி மைச்சிமிழை யெடுத்து வேகின்ற சவத்தின் கால்மாட்டில் மைச்சிமிழை வைத்து தூபதீபங்கொடுத்து தேங்காயுடைத்து ஒரு கோழிக்குஞ்சு காவுகொடுத்து அந்தச் சவத்தை ஒன்பது சுத்துவந்து பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவேண்டும். இது ஆரம்பம் கிரணத்தில் செய்தால் கூடியசீக்கிரம் சித்தியாகும். மயானருத்திரி தனக்குச் சித்தியிருந்தால் செபமுடிந்த கடைசிதினம் தன்னுடைய சொரூபத்துடன் சொப்பனத்தில் வந்து பிரசன்னமாகி மறைந்து போவாள். அப்போதுதான் சித்தியாச்சுதென்றறிந்து மையையெடுத்து மனம்போல் ஜாலமாடலாம். அப்படிக்கில்லாவிட்டால் இன்னொருமுறை பூசைசெய்ய வேண்டும். ஆயினும் இது கலியுககாலமானதால் அனைவருக்கும் சித்தியாகுமென்று எண்ணப்படாது. அந்த வழிக்கு வந்தவர்களுக்குத் தடையின்றி சித்தி தானேயாவள். அதை யோசிக்க வேண்டும்.

82. பச்சைப்பாம்பு உண்டாகும் ஜாலம்.

வாருவைக்கோலைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்த வைக்கோலை பச்சைப்பாம்பாகச் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி மயானருத்திரியை மனதில் தியானித்து ஜாலக்காளைப்பூசித்து, சல் மலையாள பகவதி பச்சைப்பாம்பாக வேணுமென்று மகாமாய மையைத் தடவி பூமியில் போட பச்சைப்பாம்பாகும்; பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் அது ரொம்பநாழியிராது. ஒரு நாழிகைக்குள் மறைந்துபோகும். அதை உஷாராக நாம் அறிந்து மறைவதற்குள் சல் ஓடிப்போ பாம்பேயென்று துணியை மேலேபோட்டு மூடவேண்டும். மூடி உடனே திறந்துபார்க்க வாருவைக்கோலாக யிருக்கும்.

83. கோழியுண்டாகும் ஜாலம்.

கோழியிறகு ஒன்றைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக்காட்டி பாருங்கள் சபையோர்களே இந்த கோழியிறகைக் கோழியாக்குகிறேன் பாரென்று சொல்லி மயானருத்திரி மந்திரத்தைத் தியானித்து, ஜாலக்காளைப் பூசித்து மகாமாய மையில் கொஞ்சம் அந்த இறகில் தடவிக் கீழே போட அழகுடைய சாவல்போல் யாவருக்குந்தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள். உடனே கோழியின்மேல் ஒரு துணியைப்போட்டு மூடி கோழியே மாயமாய்ப் போவென்று சொல்லி சற்றுநேரம் பொறுத்துத் திறந்துபார்க்கக் கோழியிறகாயிருக்கும்.

84. அஸ்வமுண்டாகும் ஜாலம்.

ஒரு சிகப்புத் தோம்புத்துணியையெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்த சீலையை அஸ்வமாக்குகிறேன் பாருங்களென்று மகாமாய மையைக் கையிலெடுத்து ஜாலக்காளைத் தியானித்து மையைத்துணியில் தடவி கீழேபோட பார்ப்பவர்களுக்கு அஸ்வம்போல் தோற்றும். எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். உடனே மேற்சொல்லியவாறுசெய்யவும்.

85. ஆடு உண்டாக்கும் ஜாலம்.

ஒரு கருப்பு சீலையைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக் காண்பித்து இந்தக் கருப்புசீலையை ஆட்டுக்கடாவாகச் செய்கிறேன்பாரென்று சொல்லி அந்தச் சீலையை முன்னதாக வைத்து மாத்திரைக்கோலைக் கையிலெடுத்து அந்தச் சீலையைச்சுற்றிக் கோடுகிழித்து மாத்திரைக் கோலால் மூன்றுதரஞ் சுற்றி யேற்றியிறக்கி, மயானருத்திரியை மனதில் தியானித்து சாலக்காளைப்பூசித்து, சல் மலையாளபகவதி இந்த கருப்புச் சீலை ஆட்டுக்கடாவாக வேணுமென்று சொல்ல மகாமாய மையில் தோற்றப்படும். சபையோர்கள் பிரமிப்பார்கள். உடனே மேற்சொல்லியவாறு செய்து மறைத்துவிடவும்.

86. எருமைக்கிடா உண்டாக்கும் ஜாலம்.

கருப்புக் கம்பிளியைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்தக் கம்பிளியை எருமைக்கிடாவாகச் செய்கிறேன் பாருங்களென்று அதைச் சுருட்டி முன்னதாக வைத்து, மயானருத்திரியைத் தியானித்து சாலக்காளைப்பூசித்து, சல் மலையாளபகவதி இந்தக் கம்பிளியை எருமைக் கிடாவாகச் செய்வாய். சீக்கிரம் சீக்கிரம் என்று தந்திரமாக மகாமாய மையைக் கொஞ்சம் கம்பளியின்மீது தெளிக்க உடனே எருமைக்கிடா வைப்போல தோற்றப்படும். கண்கட்டு வித்தையென்று கலங்குவார்கள். உடனே ஒரு துணியை எருமைக்கிடாமீது மூடி சற்றுநேரம் பொறுத்து பார்க்கக் கம்பிளியாயிருக்கும்.

87. யானை உண்டாக்கும் ஜாலம்.

ஒரு சல்லவை மல் குட்டையை யெடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்த மல் குட்டையை யானையாகச் செய்கிறேன் பாரென்று அதைச் சுருட்டி முன்னதாக வைத்து கற்பூரங்கொளுத்தி விநாயகரைப் பூசை செய்து பிறகு மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டுதரம் ஓதி சாலக்காள் மந்திரத்தை நூற்றெட்டுதரம் ஓதி, சல் மலையாள் பகவதி இந்த மல்துண்டை யானையாக நொடிக்குள் செய்யவேணுமென்றுசொல்லித் தந்திரமாக மகாமாயமையில் கொஞ்சமெடுத்து குட்டையில் தடவ பார்ப்பவர்களுக்கு ஆனை யுருபோல் தோற்றும். பார்ப்பவர்கள் பயந்து பிரமிப்பார்கள்.

88. கரடி உண்டாக்கும் ஜாலம்.

கருப்பு ஆட்டு வசித்தோலை சபையில் கொண்டுவந்து வைத்து, இந்தத் தோலைக் கரடியாகச் செய்கிறேன் பாரென்று சொல்லி மயானருத்திரியைத் தியானித்து, சாலக்காளைப்பூசித்து, மகாமாயமையை எடுத்துத் தோலில் தடவ கரடிரூபமாகத் தோற்றும். அனைவரும் பார்த்தவுடனே மேற்சொல்லியவாறு செய்யவும்.

89. புலி உண்டாக்கும் ஜாலம்.

புலித்தோலைக் கொண்டுவந்து சபையோர்களுக்குக் காட்டி இந்தப் புலித்தோலை புலியாக்குகிறேன் பாரென்றுசொல்லி மயானருத்திரியைத்

தியானித்து சாலக்காளைப் பூசித்து மகாமாய மையில் கொஞ்சமெடுத்து புலித்தோலின்மேல் பூச புலியுருவாகத் தோற்றும். கண்டவர்கள் பயந்து ஓடத்தலைப்படுவார்கள். இதுவென்ன மந்திரஜாலமோவென்று மயங்குவார்கள், உடனே துணியால்மூடி மேற்சொல்லியவாறு செய்யவேண்டு

90. புறா உண்டாக்கும் ஜாலம்.

புறாவின் இறகு பத்துப்பதினைந்தெடுத்து ஒன்றாய்ச்சேர்த்துக்கட்டி சபையோர்களுக்குக் காண்பித்து, இந்தப் புறாவின் இறகை புறாவாக்குகிறேன் பாரென்று சொல்லி அந்த இறகை முன்னேவைத்து ஒரு கூடையையெடுத்துஅனைவருக்குங்காட்டி அதைமூடி அதின்மேல் ஒரு துணி மூடி மயானருத்திரியைத் தியானித்து, ஜாலக்காளைப்பூசித்து, சல் மலையானபகவதி! சல்தி புறாவாகச் செய்யென்று மூன்றுதரஞ்சொல்லி தந்திரமாக மகாமாயமையைக் கொஞ்சந்தடவிக் கூடையைத் திறந்து காட்ட புறாதோற்றும். பார்ப்பவர்கள் பலே ஜோக்கான வித்தையென்று ஆச்சரியப்படுவார்கள்.

91. மரப்பொம்மை சண்டைசெய்யுஞ் ஜாலம்.

செம்மரம் அல்லது வேறு எந்த மரத்தினாலாவது ஒரு ஆண் பொம்மையும் ஒரு பெண் பொம்மையுஞ்செய்து அதற்கு நகை ஆடையாபரண முதலானதுந் தரித்து ஜாலமாடுஞ் சபையில் மேசைமேல்வைத்து மயானருத்திரியைத் தியானித்து, ஜாலக்காளைப் பூசித்து, சபையோர்களைப் பார்த்து, இந்தப்பொம்மை இரண்டையுஞ் சண்டை விடுகிறேன் பாருங்களென்று சொல்லி மகாமாய மையையெடுத்து இரண்டு பொம்மைக்குங் கொஞ்சங்கொஞ்சந் தடவ இரண்டும் ஒன்றுடனொன்று தாக்கும்; விழுந்து விழுந்து எழுந்திருக்கும். பார்ப்பவர்கள் மதிமயங்குவார்கள்.

92. செம்பைப் பொன்னாக்கும் ஜாலம்.

ஒரு செம்புத்துண்டை யெடுத்து சபையோர்களுக்குக் காண்பித்து இதைத் தங்கமாக்குகிறேன் பாருமென்று சொல்லி, மயானருத்திரியைத் தியானித்து. ஓ அம்மணி! இந்தச் செம்பை தங்கமாக்கவேண்டுமென்று ஜாலக்காளைப் பூசித்து, மகாமாயமையை அதன்மேல் தடவ, பத்தரை மாற்றுத் தங்கமாக இருக்கும். சபையோர் கையில்கொடுத்து பார்க்கச் சொல்லி உடனே வாங்கி, சல் எப்போதும்போல் செம்பாகிவிடு என்று பூமியில் போட செம்பாகிவிடும். பார்ப்பவர்கள் இது கண்கட்டு வித்தை யென்பார்கள்.

93. பலகரை குதிக்கும் ஜாலம்.

பத்துப்பதினைந்து பலகரையைக் கையிலெடுத்து மயானருத்திரியைத் தியானித்து, ஜாலக்காளைப் பூசித்து, மகாமாயமையைப் பலகரையில் தடவிப்போட பூமியில் நிற்காமல் குதிக்கும். பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள். ஆனால் ஒரு நிமிஷம் இரண்டுநிமிஷந்தான் குதிக்கும். அதன் பின்பு பலகரை பூமியில்தான் கிடக்கும்.

94. ஈயத்தைச் சோக்கவெள்ளியாக்குஞ் ஜாலம்.

வெள்ளீயம் அல்லது காரீயம் கொண்டுவந்து ஒரு கட்டியாகச் சபையோர்களுக்குக் காண்பித்து, ஈயத்தைச் சொக்கவெள்ளியாகச் செய்கிறேன் பாரென்று சொல்லி மயானருத்திரியைத் தியானித்து, அம்மணி! இந்த ஈயம் சொக்கவெள்ளியாக வேண்டுமென்று சாலக்காளைப் பூசித்து மகாமாய மையெடுத்துத் தந்திரமாகக் கொஞ்சம் தடவ பால்போல் சொக்கவெள்ளியாகும்; பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள்.

95. மண் குடம் பொன் குடமாகும் ஜாலம்.

ஒரு மண்குடத்தைச் சாலமாடும் சபையில் கொண்டுவந்து அனைவருக்குங் காட்டி இந்த மண் குடத்தை பொன்குடமாக்குகிறேன் பாருங்களென்று சொல்லி மய்யானருத்திரியைத் தியானித்து, அம்மணி! இந்தக் குடத்தைப் பொன்னாக்க வேண்டுமென்று ஜாலக்காளைப் பூசித்து மகாமாய மைமையைத்தடவ மஞ்சள் பிளந்தாற்போல் தோற்றப்படும். ஆச்சரியப் படுவார்கள்.

96. ஆற்றுமணலை அரிசியாக்குஞ் ஜாலம்.

ஒரு முறத்தில் ஆற்றுமணலைக் கொண்டுவந்து ஜாலமாடும் சபையில் வைத்து, சபையோரைப்பார்த்து, இந்த ஆற்றுமணலை அரிசியாகச் செய்கிறேன் பாரென்றுசொல்லி மயானருத்திரியைத் தியானித்து, அம்மணி! இந்த மணல் அரிசியாக வேண்டுமென்று ஜாலக்காளைப் பூசித்து மகாமாயமையைக் கொஞ்சமெடுத்துத் தந்திரமாக மணலின்பேரில் தெளிக்க அரிசியைப்போல் தோற்றும்; யாவரும் ஆச்சரியப்படுவார்கள்.

97. எலுமிச்சம்பழம் நடக்கும் ஜாலம்.

பத்துப்பதினைந்து எலுமிச்சம்பழத்தை சபையில் வைத்து இந்தப் பழங்களை நடக்கும்படி செய்கிறேன் பாரென்று மயானருத்திரியைத் தியானித்து அம்மணி! இந்தப்பழங்களை நடக்கச்செய்வாயென்று ஜாலக்காளைப் பூசித்து மகாமாய மையையெடுத்துத் தந்திரமாக ஒவ்வொரு பழத்திலும் படும்படியாகத் தடவிக் கீழேபோட அப்பழங்கள் பூமியில் நிற்காமல் மூலைக்குமூலை சடசடவென்று உருளும்; பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள்.

ஆனால் இந்த மையினாலும் மயானருத்திரி ஏவலினாலும் ஜாலக்காளி சித்தியாலும் இப்படி அநேக வித்தைகள் ஆடலாம். ஆடினாலும் ஒவ்வொரு வித்தையாடும்போது மயானருத்திரியைத் தியானிக்கையில் நாம் எவ்விதவேடிக்கைக் காட்ட உத்தேசித்தோமோ அவ்விதஞ் செய்ய வேண்டுமென்று அப்போதைக்கப்போது அம்மனை நடத்தவேண்டுமென்று பிரார்த்தித்து, பின்பு மையைத்தடவ மனம்போல் சித்தியாகும். அதாவது, அம்மணி! பாம்பாகவேண்டும், கோழியாகவேண்டும் குதிரையாகவேண்டும் புலியாகவேண்டும் என்று நாம் எவ்விதம் சொல்லி மையைத் தடவுகின்றோமோ அவ்விதமேயாகும். அந்தந்த ரூபம்போல் தோற்றமாகி உடனே மறைந்துவிடுமன்றி அதிகநேரம் நிற்கமாட்டாது

98. பானையின்மீது தேங்காயைவைத்து தடியாலடித்துப் பானை உடையாமல் தேங்காயை உடைக்கும் ஜாலம்.

கீழ்காய்நெல்லி செடியைத் தேடிக் கண்டுபிடித்து ஆதிவாரம் காலையில் சூரியன் உதயமாகுமுன்னமே அச்செடியருகிற்சென்று அச்செடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி தூபதீபங்காட்டி ஒரு ஓணானைப் பலிகொடுத்து விட்டு, வீட்டிற்கு வந்துவிடவேண்டும். அன்றுசாயங்காலம் சென்று அந்தச்செடியை பிடுங்கிவந்து அந்தவேரை நாலு ஐந்தாக சேர்த்து முறுக்கி சிம்மாடுபோல் சுற்றிக்கொண்டு ஒரு தோண்டியைப் பூமியின்மேல் கவிழ்த்து இந்தவேர் சிம்மாட்டை அதன்மேல் வைத்து அதன்மேல் தேங்காயை வைத்துத் தந்திரமாக அடிக்க தேங்காய் உடையும் தோண்டி உடையாது; பார்த்தவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

99. குளத்தில்முழுகி கடுதாசி எழுதிவரும் ஜாலம்.

முன்னதாக ஒருகாயிதத்தில் எலுமிச்சம் பழஞ்சாற்றில் படிகாரத்தைப் பொடிசெய்து போட்டு நன்றாய்க்குழைத்து மேற்படி காயிதத்தில் தன்னுடைய மனம்போல் யெழுதிவிட்டு வெய்யிலில் காயவைத்து நன்றாய் உலர்ந்தபின் எடுத்துப்பார்த்தால் எழுத்து ஒன்றும் தெரியாமல் இருக்கும். அந்தககாயிதத்தை சபையோர்களுக்குக்காட்டி, இந்தக் காயிதத்தைக் குளத்தில் முழுகி குளத்திற்குள் இருந்து கடிதம் எழுதிவருகிறேன் பாரென்றுசொல்லி ஆடையைக் களைந்து குளக்கரையின்மேல் வைத்துவிட்டு, காயிதத்தைக் கையில்பிடித்துக்கொண்டு குளத்தில்முழுகி கால்மணிநேரம் மூச்சுப்பிடித்து தண்ணீரைவிட்டு மேலேகிளம்பி கரையேறி வந்து காயிதத்தைப் பார்க்க குப்பென்று எழுத்துக்கள் தெரியும். அதை வாசித்துக்காட்ட சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் காயிதத்தில் முன்னுடியாக எழுதிவைத்துக்கொண் டிருக்கவேண்டும்.

100. ஒருவர்கழுத்தில் கத்திகுத்தும் ஜாலம்.

ஒரு கூறுள்ளக் கத்தியை மையமாய் இரண்டு துண்டுசெய்து பின் கழுத்தில் பதியும்படியாக தகடுசெய்து அந்தக் கத்தியில் பற்றவைத்து ஜாலமாடுமிடங்களில் முன்னுதாய் சபையோருக்கு ஒரு கத்தியைக் காண்பித்து குத்துவேன் என்று ஒரு சிறுவனைப் படுக்கவைத்து துணிமேலே போட்டு மூடி தந்திரமாக அந்தகத்தியை மறைத்து வில்கத்தியை மாட்டி விடவேண்டும். ஆட்டுரத்தத்தைத் துணியில் தோய்த்து உலரவைத்திருந்து ஜாலமாடும் இடத்தில் இந்தத் துணியை கொண்டுவந்து ஜலத்தில் நனைத்துக் கழுத்தில் பிழிய இரத்தமாகவே யிருக்கும். பார்ப்பவர்கள் அலறி ஆச்சரியப்படுவார்கள்.

101. ஒரு ஸ்திரீயை சிக்கத்திற்கட்டி பெட்டியிற்போடும் தொம்பர ஜாலம்.

மயிரினால் திரித்தக் கயிறினாலாவது அல்லது நாரினால் கயிற்றினாலாவது வலைபோல் சிக்கமொன்றுபின்னி அடியில் சுருக்குவைத்து அந்த

சுருக்கில் கயிறுகோர்த்து சுருக்கி முடிபோட்டு வைத்திருக்கவேண்டும். அந்த சிக்கவலையை அனைவருக்கும்காட்டி, இந்தச் சிக்கத்தில் இந்த ஸ்திரீயைக்கட்டி இந்த மூங்கிற்பெட்டியில் போடுகிறேன் பாரென்றுசொல்லி அந்தச் சிக்கத்தை மேற்புறமாக விரித்துக் கீழேபோட்டு அந்த ஸ்திரீயை அழைத்து அந்த சிக்கத்திற் குந்தவைத்து அவள்கையின் பெரியவிரல் இரண்டையும் ஒன்றாகச்சேர்த்துக் கழுத்துடன் பிடித்துக்கட்டி, சிக்கத்தில் குந்தவைத்து நன்றாய்த் தலைமுதல் தேகமெல்லாம்வளைத்து சிக்கத்தை இருக்கிக்கட்டி கெட்டிமுடிகளாக பத்துப் பதினைந்துபோட்டு மூன்று அடி நீளமும் இரண்டடி உயரமுமாக வாட்டசாட்டமாய் செய்து வாய்சின்னதாக வைத்திருக்கும் மூங்கிற்பெட்டியில் சிக்கத்திற் கட்டியிருக்கும் ஸ்திரியை மெதுவாகத்தூக்கி ஒன்றேகாலடி அகலமுள்ள பெட்டியின் வாயில் மெள்ளமெள்ள உள்ளே போகும்படிசெய்து பெட்டியின் மேல்மூடியை ஒருவரை பிடிக்கச்செய்து, துணியைமேலேபோட்டு மூடி மறைவுசெய்துவிடவும். பெட்டியில் இருப்பவளுக்கு இரகசியமாய்ச் சொல்லிவைக்கவேண்டியதென்னவெனில் விரலைமடக்கி யிழுத்துக்கொண்டு மேற்படி சிக்கத்தின் அடி சுருக்கை முடியை அவிழ்த்து யிழுத்தால் சிக்கம் அலாக்காய்விடும்; அதைக் கழற்றி மறுபடியும் சுருக்கைக்கோர்த்துக் கத்தையாக வெளியில் போட்டுவிடுயென்று சொல்லிவைக்க வேண்டும். உள்ளிருப்பவர்கள் அப்படியே அவிழ்த்துப்போட்டவுடன் அந்த சிக்கத்தை எடுத்து சபையோர்களுக்குக் காட்ட கட்டினபிரகாரம் சிக்கமிருக்க ஆளைக்காணோமென்று ஆச்சரியப்படுவார்கள். உள்ளிருப்பவள் பெட்டியில் ஒருபக்கமாய் அசையாமல் பதுங்கிக்கொண்டிருக்கவேண்டும். கத்தியை வெளியிருப்பவன் எடுத்துக் குத்தும்போது பெட்டியில் சைகையோடும் பிறனவேண்டும். குறுக்கில் குத்தும்போது சப்பாத்துமுள் பழத்தைக் கத்தியில் உள்ளிருந்தபடியாகப்பூச ரத்தம் கத்திவழியாக சரசரவென்று வெளியேவரும். பார்ப்பவர்கள் ஐயையோபெட்டிக்குள்ளிருந்தவளைக் குத்திவிட்டானென்று ஐய்யோ முறையோவென்று கூவுவார்கள். அப்போது பெட்டியின் மேல்மூடியை மூடி அதின்மேல் துணியைமூடி மூன்றுகுறள் கூப்பிட்டு, மந்திரம் செய்பவன்போல் பெட்டியை மூன்று சுற்று வந்து ஒரு சிறியக்கல்லையெடுத்து பெட்டியின்மேல்போட அந்த சைகைகண்டு பெட்டிக்குள்ளிருப்பவள் ஒரு ஓசையாக சப்தம்கொடுக்க, உடனே துணியையும் பெட்டியின் மேல்மூடியையும் யெடுத்துவிட பெட்டிக்குள் இருப்பவள் வெளியேவர கண்டவர்கள் யாவரும் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள். ஆண்பெண் யாராயிருந்தாலும் கட்டிப் போடலாம். ஸ்திரீயேவேண்டுமென்று அவசியமில்லை. ஆனால், சிக்கம் பின்னுவதும் பெட்டிசெய்வதும் வேலைத்திரமாக யிருக்கவேண்டும்.

102. குடத்தின்மேல் தோண்டியைவைத்து அந்திரமாக ஆக்கும் ஜாலம்.

ஒரு மண்குடத்தில் நிறைய தண்ணீர் நிரப்பி ஒரு சிறிய தோண்டியிலும் தண்ணீர் நிறையச்செய்து சிறிய தோண்டியைக் குடத்தின்மேல் வைத்து அதின் வாய்ப்புறம் சுற்றிலும் பசுஞ்சாணத்தை அடர்த்தியாகப் பூசிக் காற்று நுழையாமற் செய்து மேலிருக்கும் சிறிய குடத்தின் கழு

தில் உக்கம்போல நல்ல உறுதியுள்ள கயிற்றினால் கட்டி மேலேதூக்கிக் கட்டிவிட குடம் அந்தரமாக நிற்கும் பார்ப்பவர்கள் ஆச்சரியப் படுவார்கள்.

103. உரலை அந்தரமாகத் தொங்கவிடும் ஜாலம்.

ஒரு உரலைக் கொண்டுவந்து அதின்நிறைய ஜலம்விட்டு அந்த உரலின் வாய்க்குப் பதிந்தாற்போலிருக்கும் ஒருசொம்பில் நிறைய ஜலம் விட்டு அந்த உரலின்மேல்வைத்து உரலின்வாய் புறத்திற்கும் சொம்பிற்கும் பிடிப்பாகச் சுற்றிலும் களிமண்பூசி அதின்மேல் சீலைசுற்றி மறுபடியும் அதின்மேல் களிமண்ணைபூசி காற்றுபுக சந்தில்லாமல் பசும் சாணத்தைப்பூசி உரலைத் தூக்கினால் தாங்கும்படியான கயிற்றை யெடுத்து சொம்பின் வாய்ப்புறத்தில் உக்கம்போல் போட்டு தூக்கி உயரத்தில் கட்டிவிட அந்தரமாகநிற்கும்; கண்டவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

104. குடத்தில் தண்ணீரை நிரப்பி பட்டாவைக்குத்தி தூக்கும் ஜாலம்

ஒரு மண்குடத்தில் ஜலத்தை நிரப்பி மேல்மூடும் ஜானதியில் குத்திபுகும்படியான துவாரஞ்செய்து, ஜானகி துவாரத்திற்குச் சரியாய் எலுமிச்சம்பழம்வைத்து கத்தியில் கம்பியைக்கோர்த்து குடத்தினுள் தட்டில் தாங்கும்படியாய் மேலே தூக்கிக் கட்டிவிடவேண்டும். கத்தி அடியில் துவாரமாவது வளையமாவது வைத்திருக்கவேண்டும்.

105. ஒருவன் தலையின்மீது அடுப்புவைத்து எண்ணெய்க் காய்ச்சும் ஜாலம்.

வெற்றிலை ஆனைவத்தை சிமைசுண்ணாம்பு இந்த மூன்றுஞ்சேர்த்து பாக்கு உரல்போல்செய்து மேல்பக்கம் மூன்று வாய்வைக்கவும். ஆனால் இந்த அடுப்பை முன்னதாகச் செய்துவைத்துக்கொண்டு பின்பு ஜாலமாடுஞ்சபையில் ஒருவனைக் குந்தவைத்து அவன் தலையின்மீது இந்த அடுப்பைவைத்துக் காற்றுபோகாமல் துணியினால் தலைமுதல் தேகமெல்லாம் மூடிவிட்டு ஒரு கம்பகியில் வளையஞ்செய்து துணிசுற்றி கொளுத்தி அடுப்பினுள்ளே போட்டு வத்திலை சுற்றிலும் கொளுத்திவைத்து தகரத்தால் தட்டுசெய்து அதில் எண்ணெய் வைத்திவைத்துக் காய்ச்சப்பிறகு கொஞ்சம் ஜலத்தெளித்தால் குபீலென்றதாக வெரியும். கண்டவர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் அடுப்பு உயரம் அரையடி வைக்கவேண்டும். வளையஞ்செய்து அடுப்பில்போட்டால் இரண்டு அங்குலம் உள்ளே இரக்கவேண்டியது. கொளுத்தும்போது சுத்தாறை சொற்றை யில்லையாக அதுத்து அடுப்பின் கீழ்ப்புறம் அடியில் வைத்தாலும் வைக்கலாம்.

106, பூனையை எலிவெல்லும் ஜாலம்.

ஒரு எலியைப் பிடித்துவந்து அதின் தேகமாதியத்திலும் எருக்கம் பாலும் குப்பைமேனிச்சாறும் தடவி பூனையெதிரில் விட்டுவிட்டால்

பூனைவந்து எலியை முகர்ந்து பார்த்தவுடன் அதைக் கடிக்காமல் தலைவெரி கொண்டதுபோல் சுத்திக்கொண்டே யிருக்கும். கண்டவர்கள் என்னமோ வசியம்செய்து வைத்தானென ஆச்சரியப்படுவார்கள்.

107 எலுமிச்சம்பழத்தை தூக்கிப்போட அந்தரமாகநிற்குஞ் ஜாலம்.

கர்த்தபம் புணரும்போது அதனுடைய வால்மயிரை வெவ்வேறாகப் பிடுங்கிக்கொண்டுவந்து மோதிரம்போல் வெவ்வேறாகச்சுற்றி அதன் ஐங்காயத்தைப்பூசி அதன்மேல் தங்கத்தைச்சுற்றி மோதிரம்போல் விரலுக்குச் சரியாய்ச்செய்து வலது கைவிரலில் பெண்மயிர் மோதிரமும், இடது கைவிரலில் ஆண்மயிர் மோதிரமும் போட்டுக்கொண்டு ஜாலமாடும் சபையில்வந்து ஒரு எலுமிச்சம் பழத்தைக் கையிலெடுத்து அந்தப் பழத்தைத் தூக்கிப்போட்டு, அந்தரமாக நிற்கும்படிச் செய்கிறேன் பாரென்று சொல்லி கனியையெடுத்து ஆகாயத்தில் விட்டெறிந்து இடதுகையைக் கீழேதாழ்த்தி மூடிக்கொண்டிருக்க, கனி அந்தரமாக நிற்கும்; கீழே விழாது. இடதுகையை விரித்தி வலது கையையேந்த கனி கையில்வந்து விழும். பார்ப்போர்கள் ஆச்சரியப்படுவார்கள். இது அந்தரதேவதை வசியமென்பார்.

108. நினைத்த ரூபமாகும் மூலிகை ஜாலம்.

கையாந்தகரைச் செடியைக் கண்டுபிடித்து செவ்வாய்க்கிழமை காலையில்சென்று மஞ்சள்நூல் காப்புக்கட்டி தீபதூபங்கொடுத்து அதின் வேரைப் பிடுங்கி வந்து காதில் வைத்து எவ்வண்ணரூபமாக மனதில் நினைக்கின்றையோ அவ்வண்ணரூபமாகுவாய். அது எவ்வாறெனில் புலியாக வேண்டுமென்றால் புலியாவாய் கரடியாக வேண்டுமென்றால் கரடியாவாய் குரங்காகவேண்டுமென்றால் குரங்காவாய் எருமையாக வேண்டுமென்றால் எருமையாவாய் ஆனையாக வேண்டுமென்றால் ஆனையாவாய் நாயாக வேண்டுமென்றால் நாயாவாய் பூனையாக வேண்டுமென்றால் பூனையாவாய், கோழியாக வேண்டுமென்றால் கோழியாவாய், குதிரையாக வேண்டுமென்றால் குதிரையாவாய், கழுதையாக வேண்டுமென்றால் கழுதையாவாய், பன்றியாக வேண்டுமென்றால் பன்றியாவாய், மானாக வேண்டுமென்றால் மானாவாய், ஆடாகவேண்டுமென்றால் ஆடாவாய், மரமாவாய், கல்லாவாய், ஆணுருவமாக வேண்டுமென்றால் ஆணுருவாவாய் பெண்ணாக வேண்டுமென்றால் பெண்ணாவாய், ராசனாக வேண்டுமென்றால் ராசனாவாய், குருவாக வேண்டுமென்றால் குருவாவாய், சித்தராவாய், முத்தராவாய், தபசியாக வேண்டுமென்றால் தபசியாவாய், இனராவாய், குளமாவாய், பாம்பாவாய் பலவிதப் பட்சிசாதிகளாவாய் இன்னம் எவ்விதம் நினைக்கின்றையோ அவ்விதமெல்லாம் ஆவாய். ஆனால் யாவும் மூலிகையின் மகிமையால் தோற்றப்படும். பார்ப்பவர்களுக்கும் ஆச்சரியமாகயிருக்கும். கண்டுவிட்டு கண்டுபோயும் வித்தை கற்றவனென்று யாவரும் புகழ்ந்து கொண்டாடுவார்கள்.

109. தேவர்களெல்லாம் தோற்றமாகும் ஜாலம்.

சிறுபூளையென்ற செடியைக் கண்டுபிடித்து ஞாயிற்றுக்கிழமை காலையிற் செடியருகிற் சென்று, அச்செடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டிப்

பொங்கலிட்டு, தூபதீபங்காட்டிப் பலிகொடுத்து அந்த வேரைப்பிடுங்கி வந்து உலர்த்திப் பொடியாக்கி மாதர்கள் வீட்டுக்குத்தூரமான சீலையில் வேரை வைத்துத் திரிபோல் சுற்றி தலைமண்டையோட்டில் ஐங்கோலத் தைலத்தை வார்த்து அதிலிந்தத் திரியைப்போட்டுப் பசுநெய் கூட விட்டு விளக்கேற்றி, கோவிலுக்குள்ளாகவாவது தனியாகவிருக்கும் மாளிகைக்குள்ளாகவாவது அல்லது தானிருக்கும் வீட்டிலாவதுவைத்து இஷ்டமானபேர்கள் யாவரையு மழைத்துக்கொண்டுபோய் இந்த விளக்கைப் பாருங்களென்று சொல்லி வாயை மூடுவதற்குள்ளாக தேவர்கள் யாவரும், அவர்கள் கண்ணிற்குத் தோற்றப்படுவார்கள். அப்போது பார்த்த மனிதர்கள் யாவரும் மயங்கித் திகைப்பார்கள். விளக்கை அணைத்துவிட்டால் யாவும் மறைந்துபோகும்.

110. கல் தானாய் எகிறிவிழும் ஜாலம்.

குன்று குடைதாங்கியென்ற செடியைக் கண்டுபிடித்து செவ்வாய்க்கிழமை காலையில் சென்று அச்செடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து வேரைப் பிடுங்கிவந்து அதைப் பிரிமணைப்போல் சுற்றி முன்னதாக வைத்துக்கொண்டிருந்து ஜாலமாடுஞ் சபைக்கு வந்து ஒரு ஆள் பாரமுள்ள கருங்கல்லை முன்னேவைத்து சபையோரைப்பார்த்து, இந்தக்கல்லை அலாக்காய்க்கிளம்பி அப்புறம்போய் விழும்படிச் செய்கிறேன் பாரென்று சொல்லித் தந்திரமாக மேற்படி வேர் சிம்மாட்டைத் தாழ ஒருவருக்குந் தெரியாமல் வைத்து, அதின் மேல் கல்லைத்தூக்கி வைக்க கல்லானது பூமியில் நில்லாமல் கிளம்பி அப்புறம்போய் விழுந்துவிடும். பார்த்தோர்கள் பிரமித்து இது குட்டிச் சாத்தான் ஏவலென்று திகைப்பார்கள்.

111. தலைமேல் பாரஞ்சுமக்கும் ஜாலம்.

மேற்சொன்ன குன்றுகுடை தாங்கிச்செடிக்கு சூரியகிராணத்திலேனும் சந்திரகிராணத்திலேனும் அச்செடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி தீவளர்த்திப்பொங்கலிட்டுப்பலிகொடுத்து தூபதீபங்கொடுத்து வேரைப் பிடுங்கி வந்து அதைக் குளிசமாடி முன்னதாக வைத்துக்கொண்டு ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து நாலுபேர் தூக்கும்படியான இந்தப் பாரங்கல்லை என் சிரசின்மேல் தூக்கிவையுங்கள் யான் சுமக்கிறேன் என்று சொல்லி ஒருவருக்குந் தெரியாமல் இந்தக் குளிசத்தைச் சிரசில் வைத்துக்கொண்டு தூக்கிவைக்கச்சொல்ல பாரம் தோற்றாது. ஒருமணி நேரம் வைத்திருக்கலாம். பார்ப்பவர்கள் மனங்கலங்கி பிரமிப்பார்கள்.

112. பாராங்கல்லை உதைக்கக் கல் பின்னுக்கு நகரும் ஜாலம்.

கோபுரந்தாங்கி என்ற செடியைக்கண்டு பிடித்து ஞாயிற்றுக்கிழமை காலையிற்சென்று அச்செடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டுப் படிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிவந்து குளிசமாடி வைத்துக்கொண்டிருந்து ஜாலமாடும் சபையில் ஒரு பெரிய பாராங்கல்லை கொண்டுவரும்படிச்செய்து சபையோரைப்பார்த்து இந்தப் பாராங்கல்லைக் காலினாலுதைத்து நாலடிதூரம் போகும்படிச் செய்கிறேன் பாருங்கள் என்றுசொல்லி, மேற்படி குளிசத்தை வலதுகாலில் கட்டிக்கொண்டு கல்லை எட்டியுதைக்க செங்குத்தாய்க் கிளம்பி நாலடிதூரம் போய்விழும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவதுடன் இது ஆஞ்சநேயருடைய வசியமென்பார்கள்.

113. பாம்பைப் புத்திலிருந்து அழைக்கவும் மறுபடியும் போகவும் செய்யும் ஜாலம்.

மயானத்தில் சவம் எரியும்போது அதனருகிற்சென்று, அதன் வாயினுள் இரும்பாணியைச்சொருகி, மார்பில் வெள்ளியாணிக்கடாவி, தொப்புளில் செம்பாணியைச் சொருகிவிட்டு வந்துவிடவேண்டும். மறுநாள் காலையில் எழுந்துபோய் அவைகளை எடுத்துக்கொண்டு வரவேண்டும். ஆனால் காடாற்றுமுன்னே யெடுத்துக்கொள்ளவேண்டும். அதைப் பிரம்பில் கைபிடிக்குமிடத்தில் வெள்ளிக்கட்டுப்போட்டுப் பூமியில்மூன்றும்பக்கம் இரும்பைச் சொருகி, செம்பைப் பிரம்புக்கு நடுக்கட்டாகக் கட்டி பிறகு அதின்மேல் ஐங்கோலக் கருவூரி பூசையில் வைத்து, ஸ்ரீம் ரீம் கிலியும் என்று நாளொன்றுக்கு லட்சம் உருவு ஓதி ஜாலக்காளைப் பூசை செய்து சித்தியானவுடன் பிரம்பை யெடுத்துப் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். வித்தைகாட்ட இஷ்டமுள்ளபோது இஷ்டமான பேர்களைப் பாம்பிருக்கும் புத்தருகில் அழைத்துக்கொண்டேகி அவர்களைப்பார்த்து, இந்தப் புத்திலிருக்கும் பாம்புகளை வெளிவரும்படிச் செய்கிறேன் பாருங்கள் என்றுசொல்லி, பிரம்பை வலக்கையிற்பிடித்து புத்தின்மேல் மூன்று தட்டுதட்ட புத்திலிருக்கும் பாம்புகளெல்லாம் வெளியே புறப்பட்டுவந்து விளையாடும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். உடனே அந்தப் பிரம்பைத் திருப்பி புற்றின்மேல் மூன்று தட்டுதட்ட பாம்புகளெல்லாம் புற்றினுள்ளே புகுந்துவிடும். அப்படிக்குக் காட்டினாலுங் காட்டலாம், அல்லது பாம்பைப் பெட்டியிலடக்கஞ்செய்து ஜாலமாடுஞ்சபையில் வைத்து முன்போல் பிரம்பினால் மூன்றுதட்டு தட்ட பாம்புகள் பெட்டியை விட்டு வெளியேவந்து படமெடுத்தாடும். பிரம்பைத் திருப்பித்தட்ட பாம்புகளெல்லாம் பெட்டிக்குள்போய் பேசாமலடங்கும். ஆனால் 24-நாள் உரு கொடுக்கவேண்டும்.

114. பாராங்கல்லைத் தானாய் நடக்கச்செய்யும் ஜாலிம்.

கருங்காலிச் செடியைக் கண்டுபிடித்து வியாழக்கிழமைதினம் காலையிற்சென்று ஹோமம் வளர்த்தி மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி அந்தச் செடியை மூன்றுதரம் வலஞ்செய்து அதன் வடக்கு போகும் வேரைப் பிடுங்கிவந்து பொடிசெய்து சீலையில் வைத்துத் திரிபோல் சுற்றி, நாய் தலைமண்டையோட்டில் வேப்பெண்ணெய் விளக்கெண்ணெய் நல்லெண்ணெய் இவை மூன்றும்விட்டு மேற்படி திரிக்கு ஐங்காய மைதடவி நாய் மண்டையோட்டிற் போட்டு விளக்கேற்றி தைலம் வாங்கி அத்துடன் புனுகும் சவ்வாதும் கலந்து ஜாலக்காளைப் பூசைசெய்து சிமிழில் வைத்துக்கொண்டு ஜாலமாடுஞ் சபையில் ஒரு பெரிய பாராங்கல்லைக் கொண்டுவரும்படிச் செய்து சபையோரைப் பார்த்து, இந்தக்கல்லை நடக்கச்செய்கிறேன் பாரென்று தை-

மையையெடுத்து அந்தக் கல்லின்மேல் ஒருவருக்குந் தெரியாமல் தடவ, உடனே பாரையானது கடகடவென்று பிளரும். சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

115. ஒரு மனிதன் பத்து மனிதனாகத் தோற்றும் ஜாலம்.

சித்திரரேகை என்னும் மரத்தைக்கண்டு அம்மரத்தைக் காலை மாலை நாற்பதுநாள் போய் சுற்றிக்கொண்டு வந்து நாற்பத்தோராம் நாள் அம்மரத்திற்கு மஞ்சள் பூசி குங்குமமிட்டுப் பொங்கலிட்டுப் பால் பழம் சர்க்கரை அவல்கடலை முதலான தும்படைத்து, தேங்காயுடைத்து, தூபதீபங்கொடுத்து அம்மரத்தின் வடக்கு வேரைத் தோண்டிக்கொண்டு வந்து பொன் குளிசமாடி பின்பு ஜாலக்காளைப் பூசித்து அதைக் கையில் கட்டிக்கொண்டு ஜாலமாடும் சபையில் ஒருவனை நிறுத்தி, குளிசங்கட்டிக் கையில் விபூதியையெடுத்து தேவர்களையும் ஜாலக்காளையும் தியானித்து, அவன் மேலே போட, அவன் பார்ப்பவர்களுக்குப் பத்து மனிதர்களைப் போல் தோற்றப்படுவான். சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள். இடது கையில் கொஞ்சம் விபூதியையெடுத்து முன்போல் தேவர்களையும் ஜாலக்காளையும் தியானித்து அவன்மேல் போட ஒரு மனிதனாகத் தோறறப்படுவான். (சித்திரரேகை யென்பது அரசு.)

116. ஒருவனை உட்காரவும் எழுந்திருக்கவும் செய்யும் ஜாலம்.

நின்றால் சிணுங்கி செடியைக் கண்டுபிடித்து, செவ்வாய்க்கிழமை காலையில் செடியருகில் சென்று மஞ்சள்நூல் காப்புகட்டி எக்கியம் வளர்த்திப் பொங்கலிட்டுப் பலிகொடுத்து தூபதீபங்காட்டி, இவ்விதமாக ஒன்பதுநாள் செய்து ஒன்பதாம் நாள் சாயரட்சை அதன்வேரைப் பிடுங்கிக்கொண்டுவந்து பஞ்சலோகத்தினால் ஒரு போல்வளையத்தில் அடக்கஞ்செய்து பூஜையில் வைத்து சுப்பிரமணியரைத் தியானித்து, அதற்கு மந்திரம் ஓம் சரஹணபவா ஐயும் கிலியும் சவ்வும் என்று நாளொன்றுக்கு ஆயிரத்தெட்டு உருகொடுத்து வரவேண்டும். இப்படி இருபத்தோர்நாள் கொடுத்து இருபத்திரண்டாம் நாள் பூசைபோட்டு வளையத்தையெடுத்து வலக்கையில் மாட்டிக்கொள்ளவேண்டும். ஜாலமாடும் சபையில் ஒருவனை நிற்க வைத்து சபையோரைப் பாரென்று சொல்லி, இந்த மனிதனை உட்காரவும் எழுந்திருக்கவும் செய்கிறேன் பாரென்று சொல்லி, வலக்கையிலுள்ள கடகத்தை புஜத்திலிருந்து மணிக்கட்டண்டை இறக்கி நின்றுகொண்டிருக்கும் மனிதன் சிரசில் கையை வைத்து பாதம் வரைக்கும் இறக்கிக்கொண்டு வர உட்கார்ந்துகொள்ளுவான், எழுந்திருக்கச்சொன்னால் எழுந்திருக்கமாட்டான். பத்துபேர் பிடித்துத் தூக்கினாலும் உட்கார்ந்தவண்ணமாகத்தான் கிளம்புவான். கடகத்தைப் புஜத்துவரைக்கும் தூக்கி அவன் பாதத்திலிருந்து சிரசுவரைக்கும் ஏற்றிட சடக்கென்று எழுந்திருப்பான். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் கடகம் தெரியாமல் சொக்காய்ப் போட்டுக்கொள்ள வேண்டும்.

117. கிணற்றிலிறங்கி சோறாக்குஞ் ஜாலம்.

கால்படி அரிசியை அளந்தெடுத்து மூன்றுப் புறையாகத் துணியைச் செய்து அதில் அரிசியைப்போட்டு மூட்டைகட்டி எடுத்துக்கொண்டு

போய் சுண்ணாம்பு கால்வாயின் கீழேவைத்து விடவேண்டும். கால்வாய் வெந்த பிறகு அரிசிமூட்டையை யெடுத்துக்கொண்டு வந்து பத்திரப்படுத்தி, ஜாலமாடும் சபையில் ஒரு குடுவையை வைத்து அதில் பாதி குடுவை அரிசி போட்டு சபையோரைப்பார்த்து, இந்தக் குடுவையில் போட்ட அரிசியைக் கிணற்றிலிறங்கிச் சமையல்செய்து வருகிறேன் பாருங்களென்று சொல்லி, அனைவருக்கும் முன்பாகவே கிணற்றிலிறங்கி அரிசிக்குத்தகுந்த தண்ணீர்விட்டு குடுவையை மூழ்த்தினால் அரிசியெல்லாம் வெந்துபோய்விடும். கிணற்றிற்குள் சற்றுநேரமிருந்து வெளியேயேறிவருங் காலத்தில் உடம்பெல்லாம் நனைந்துகொண்டு வந்தால் சபையோர்கள் பார்த்துத் தண்ணீருக்குள் சமைத்து வந்தானென்று ஆச்சரியப்படுவார்கள். ஆனால் சாதத்தை மறு ஏனத்தில் கொட்டி யாவருக்குங் காட்டலாம்.

118. நெருப்பில்லாமல் சாதஞ் சமைக்கும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒரு சிறிய குடுவை கொண்டு வரும்படிச் சொல்லி, அந்தக் குடுவையில் கொஞ்சம் அரிசிபோட்டு முன்னேவைத்து சபையோர்களைப் பார்த்து, இந்தக் குடுவையில் போட்ட அரிசியை நெருப்பில்லாமல் சமைக்கிறேன் பாருங்களென்று சொல்லித் தந்திரமாகத் தண்ணீர்விடுவதுபோல் சதுரக்கள்ளிப்பாலை விட்டுச் சற்றுநேரம் பொறுத்துப்பார்க்க சாதம் வெந்திருக்கும். அதை அனைவருக்குங் காட்ட ஆச்சரியப்படுவார்கள். ஆனால் ஜாலமாடும் சபைக்கு வருமுன்னே சதுரக்கள்ளிப்பாலைக் கறந்துகொண்டு தயாராய் வைத்திருக்கவேண்டும்.

119. வேறுமுறைப் பச்சைப்பாம்பு காட்டும் ஜாலம்.

பச்சைப்பாம்பைக் கொண்டுவந்து அதைக்கொன்று, கெச்சக்காயும் பருத்திக்கொட்டையும் பாம்பின் வயிற்றில் கொள்ளுமட்டும் செலுத்தி மண்ணுக்குள் புதைத்து, அதன்மேல் ஜலம்விட்டு நான்குநாள் பொறுத்து தோண்டியெடுத்து விதையை யெடுத்து அப்படியே மூன்றுதரம்போட்டு எடுத்துக்கொண்டு, கெச்சக்காயின் மேல் தோல் போக்கி இரண்டு விதத்தின் வெண்ணெயை மூன்றுதரமாக வடித்துக்கொண்டு, மூன்றுதரம் வடித்து,பஞ்சைத் திரிசெய்து அத்திரியைத் தீபமேற்றி அகலிலிட்டு ஜலதோலத்தையும் பூசி மேற்படி எண்ணெயை அதில் விட்டு தீபமேற்றி இராக்காலத்திற் பார்க்க எங்கும் பச்சைப்பாம்பாகத் தோன்றும். அப்பாம்பை எண்ணக்கிட முடியாது. வெகுபேர்கள் பிரளுவார்கள். வத்தியை அமைத்துவிட பாம்புகள் மறைந்துபோகும்.

120. வைப்பு ஏவல் சூனியம் முதலானதுடன் கள்ளனைப் பிடிக்கும் மை.

மெல்வாலசயின் விரையை 10-பலம் நிறுத்தெடுத்து வெப்பனெண்ணெய்க்கும் அதன் கொளையும் மூப்பூவும் வகைக்கு வீராகனிடை ஒன்று சேர்த்து கல்வத்திலிட்டு அரைத்து பின்பு தாட்டி உலரப்போட்டு, உலர்ந்தபின்பு அதையெடுத்துத் தைலம் வாங்கி அதனுடன் புனுகுசட்டிக் குருவியின் முட்டையைக் கொண்டுவந்து அதை உடைத்து கிறுமணத்தென்னை

யில் ஊற்றி மேற்படி தைலத்தையும் ஒன்றாகச்சேர்த்து எரித்துக் காய்ச்சி தைலம் வாங்கி சிமிழில் பதனமாக வைத்துக்கொண்டிருக்க வேண்டும். தனக்காவது இன்னுமெவர்களுக்காவது ஆபத்துக்காலங்களில் கொஞ்சம் மையையெடுத்து வெற்றிலையில் வைத்துத் தானாவது இன்னும் வேறே யாரையாகிலும் பார்க்கச் சொல்ல, வைப்பு ஏவல் சூனியம் வைத்தவர் இன்னாரென்றும், இருப்பிடம் நிறம் குறி சொந்தக்காரர் அயலாரென்றும் தெரியவரும். களவுசெய்தவர் இன்னாரென்றும் சொத்து அழித்துப்போச் சென்றும் அறியவில்லையென்றும் தோற்றப்படும்.

121. வாத்திய ஜாலம்.

வன்னிய ரென்றும் பள்ளிகளென்றும் சொல்லுமவர்கள் கையினில் இரும்பினால் வளையம் போட்டுக்கொண் டிருப்பார்கள். அவர்கள் மரணமானால் அந்த வளையத்துடன் மயானத்திற்குக் கொண்டுவந்து தகனம் பண்ணுவார்கள். அதைப் பார்த்துக்கொண்டிருந்து, அவர்கள் மறுநாள்சென்று சுடாததற்குமுன்னமே சென்று அந்த இரும்பு வளையத்தை ஒடித்துக்கொண்டு வந்து அதை கருமானிடத்திற் கொடுத்தும் பாக்குவெட்டி செய்து பதனமாக வைத்துக்கொள்ளவும். இதன் உதவியால் அடியிற்கண்ட வாத்தியங்களை வாசிக்கச் செய்யலாம்.

122. பேரிகை வாத்திய ஜாலம்.

சங்கம் செடியைக் கண்டுபிடித்து சூரியக் கிராணமேனும் சந்திரக் கிராணமேனும் பிடிக்கும்போது மேற்படி செடியருகிற்சென்று மஞ்சள் நூல் காப்புகட்டு பொங்கலிட்டு பலிகொடுத்து, தூபதீபங்காட்டிப்பூசைப் போட்டு, அச்செடியின் வடக்குபோகும் வேரைப்பிடுங்கிக் கொண்டுவந்து பத்திரமாகவைத்திருந்து, சாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து, இப்போது பேரிகை வாத்தியம் முழங்கச் செய்கிறேன் பாரென்று சொல்லி மேற்படி சங்கன்வேரைக் கையிற்பிடித்து, செய்துவைத்திருக்கும் பாக்குவெட்டியால் அந்தவேரில் கொஞ்சம்வெட்ட, பேரிகை வாத்தியம் முழங்கும் ஆச்சரியப்படுவார்கள்.

123. நகபத்து வாத்திய ஜாலம்.

குடான்செடியைக் கண்டுபிடித்து ஆதிவாரம் காலையில் செடியருகிற் சென்று மஞ்சள்நூல் காப்புகட்டி, பலிபூசைபோட்டு, தூபதீபங்காட்டி, அச்செடியின் கிழக்குபோகிற வேரைப்பிடுங்கிவந்து பத்திரமாக வைத்திருந்து ஜாலமாடுமிடத்தில் சபையோரைப் பார்த்து, இப்போது நகபத்துவாத்தியம் முழங்கச்செய்கிறேன் பாரென்றுசொல்லி தந்திரமாக இந்தவேரை சங்கன்வேருடன் சேர்த்துப்பிடித்து மேற்படி பாக்குவெட்டியால் ஒருதுண்டுவெட்ட நகபத்து வாத்தியம் முழங்கச் சபையோர்கள் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள் (குடான் என்பது செம்முள்ளி.)

124. நகாறு வாத்திய ஜாலம்.

கிரீடம் என்னும் செடிக்கு வியாழக்கிழமைதினம் காலையிற்சென்று எருக்கன்நூலால் காப்புகட்டி அச்செடியை ஒன்பது சுற்றுவிந்து தூப

தீபங்காட்டி, அச்செடியின் மேற்குப்போகும் வேரைப்பிடுங்கிவந்து பத்திரமாக வைத்திருந்து, சாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து இப்போது நீங்கள் யாவரும் சந்தோஷிக்கும்படியாய் நகாறுவாத்தியம் முழங்கச்செய்கிறேன் பாரென்று தந்திரமாக இந்தவேரைச் சங்கன் வேருடன் சேர்த்து இடதுகையில் பிடித்து அவ்வேரைவெட்ட, நகாறு வாத்தியம் முழங்கும். ஆச்சரியப்படுவார்கள் (கிரீடம் என்பது வேலிப் பருத்தி.)

125. தம்பட்ட வாத்திய ஜாலம்.

கிரீட்டி என்னும் செடியைக் கண்டுபிடித்து சூரியகிராணத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி, பலிபூசைப் போட்டுத் தூபதீபங்காட்டி வேரைப் பிடுங்கிவந்து பத்திரமாக வைத்திருந்து, ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து, இப்போது தம்பட்டவாத்தியம் முழங்கச் செய்கிறேன் என்று முந்திய முறையைச் செய்ய அனைவரும் ஆச்சரியப்படும்படியாய் தம்பட்டவாத்தியம் முழங்கும். அனைவரும் சந்தோஷப்படுவார்கள் (கிரீட்டி என்பது பிரண்டை.)

126. துத்தி வாத்திய ஜாலம்.

புல்லுருவிச்செடிக்கு பூரணபருவத்தில் இரவு பன்னிரண்டு மணிக்குச் செடியருகிற் சென்று, மஞ்சள்நூல் காப்புகட்டி, பூசைபோட்டுப் பலி கொடுத்து, அதின் வடக்குபோகும் வேரைப்பிடுங்கிவந்து பத்திரமாக வைத்திருந்து ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து, இப்போது யாவரும் பிரமிக்கும்படியாக துத்திவாத்தியம் முழங்கச் செய்கிறேன் பாரென்றுசொல்லி இந்தவேரை சங்கன்வேருடன் சேர்த்து மேற்படி பாக்குவெட்டியால் வெட்ட துத்திவாத்தியம் முழங்கும். யாவரும் ஆச்சரியப்படுவார்கள்.

127. தவண்டை வாத்திய ஜாலம்.

அகுலியென்னும் செடிக்கு அமாவாசைதினம் காலையில் மஞ்சள் நூல் காப்புகட்டி, தூபதீபங் கொடுத்து, அச்செடியின் தெற்குபோகும் வேரைப் பிடுங்கிவந்து பத்திரமாக வைத்திருந்து ஜாலமாடுமிடத்தில் அங்குள்ளப்பேர்களைப் பார்த்து, தவண்டை வாத்தியம் வாசிக்கும்படிச் செய்கிறேன் பாரென்று சொல்லி, இந்த வேரைச் சங்கன் வேருடன் சேர்த்து மேற்படிப் பாக்குவெட்டியால் வெட்ட தவண்டை வாத்தியம் வாசிக்கும். அதைக்கேட்டு சபையோர்கள் ஆனந்திப்பார்கள் (அகுலி என்பது கருவிலி.)

128. தவில்வாத்திய ஜாலம்.

இரும்புக்கொல்லிச் செடியைக் கண்டுபிடித்து, சந்திரகிராணத்தில் அச்செடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி பலிபூசைப்போட்டு அச்செடியின் வடக்குபோகும் வேரைப்பிடுங்கிவந்து பத்திரமாக வைத்திருந்து, ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து, இப்போது தஞ்சாவூர் தவில் வாத்தியம் முழங்கும்படிச் செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி இந்த வேரைச் சங்கன்வேருடன் சேர்த்து மேற்படி பாக்குவெட்டியால் வெட்

டத் தவில்வாத்தியம் தமாஷாய் முழங்கும். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள் (இருப்புக்கொல்லி என்பது சிவனார்வேம்பு.)

129. மல்லாரிவாத்திய ஜாலம்.

குண்டலியென்னும் செடிக்கு செவ்வாய்க்கிழமை காலையிற்சென்று சூரியன் உதயமாகுமுன் மஞ்சள்நூல் காப்புகட்டி, பலிபூசைபோட்டு, வேரைப்பிடுங்கிவந்து பத்திரமாக வைத்திருந்து, ஜாலமாடுமிடத்தில் அங்குள்ள சபையோர்களைப் பார்த்து, இப்போது அனைவரும் சந்தோஷப் படும்படியாக மல்லாரி வாத்தியம் முழங்கும்படிச் செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி, இந்த வேரைச் சங்கன்வேருடன் சேர்த்துப் பாக்குவெட்டியால் வெட்ட மல்லாரிவாத்தியம் முழங்கும்; காதில்கேட்டு மனமகிழ்ச்சிக்கொள்வார்கள் (குண்டலி என்பது சீந்தில்.)

130. தாரை ஊதும் ஜாலம்.

முல்லைசெடிக்கு சூரியகிராணத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பலி கொடுத்துப் பூசைபோட்டு அச்செடியின் கிழக்குவேரைக் கொண்டுவந்து பத்திரப்படுத்தி வைத்திருந்து, ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து, எங்கேனுங் கேட்டிராத தாரைவாத்தியம் ஊதும்படி செய்கிறேன் பாரென்றுசொல்லி இந்தவேரைச் சங்கன்வேருடன் சேர்த்து மேற்படிப் பாக்குவெட்டியால் வெட்ட தாரைவாத்தியம் வாசிக்கும்; கேட்டு ஆனந்திப்பார்கள்.

131. பம்பைவாத்திய ஜாலம்.

சிறுநிம்பம் செடிக்கு சந்திரகிராணத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பலிகொடுத்துப் பூசைபோட்டு, வேரைப்பிடுங்கிவந்து பத்திரப்படுத்தி வைத்திருந்து ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து, இப்போது விநோதமாகப் பம்பைவாத்தியம் முழங்கும்படிச் செய்கிறேன் பாரென்று சொல்லி, இந்த வேரைச் சங்கன்வேருடன் சேர்த்து மேற்படி பாக்கு வெட்டியால் வெட்ட பம்பைவாத்தியம் முழங்கும்; கேட்டு ஆனந்த சந்தோஷப்படுவார்கள் (சிறுநிம்பம் என்பது மலைவேம்பு.)

132. பூரியூதும் ஜாலம்.

சிறுகுறிஞ்சா செடியைக் கண்டுபிடித்து, அமாவாசை தினம் காலையிற்சென்று மஞ்சள் நூல்காப்புகட்டிப் பூசைபோட்டு வேரைப்பிடுங்கி வந்து பத்திரமாகவைத்திருந்து ஜாலமாடுமிடத்தில் அங்குள்ளபேர்களைப் பார்த்து, பூரி யூதும்படி செய்கிறேன் பாரென்றுசொல்லி இந்தவேரைச் சங்கன்வேருடன் சேர்த்து மேற்படி பாக்குவெட்டியால் வெட்ட பூரி வாத்தியம் முழங்கும்; புதுமையாக விருக்குதென்று சபையோர்கள் புகழ்வார்கள்.

133. சூரியவாத்திய ஜாலம்.

சந்திவாருணிச் செடியைக் கண்டுபிடித்து சந்திரகிராணத்தில் அச்செடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டு பலிகொடுத்து ஞான

தீபங்காட்டி அதின் வடக்குபோகும் வேரைப் பிடுங்கிவந்து பத்திரமாக வைத்திருந்து, ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து இப்போது யாவரும் புகழும்படியாக சூரியவாத்தியம் வாசிக்கும்படிச் செய்கிறேன் பாரென்றுசொல்லி இந்தவேரைச் சங்கன்வேருடன் சேர்த்து மேற்படி பாக்குவெட்டியால் வெட்ட சூரியவாத்தியம் வாசிக்கும்; சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள் (சந்திவாருணி என்பது பேய்த்துமட்டி.)

134. சந்திரவாத்திய ஜாலம்.

சமரதமென்னும் செடியைக் கண்டுபித்து, சூரியகிராணத்தில் அச்செடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டுப் பலிகொடுத்துப் பூசைபோட்டு, அதின் தெற்குபோகும் வேரைப் பிடுங்கிவந்து பத்திரப்படுத்தி வைத்திருந்து, ஜாலமாடும்சபையில் அங்குள்ளவர்களைப் பார்த்து, முந்தி சூரியவாத்தியம் வாசிக்கும்படி செய்தேன் இப்போது சந்திரவாத்தியம் வாசிக்கும்படி செய்கிறேன் பாரென்றுசொல்லி இந்தவேரைச் சங்கன்வேருடன் சேர்த்து மேற்படிப் பாக்குவெட்டியால் வெட்ட சகலரும் மகிழும்படியாக சந்திர வாத்தியம் வாசிக்கும் (சமரதம் என்பது மணத்தக்காளி.)

135. உடுக்கை வாத்திய ஜாலம்.

கரிக்கோலம் என்னும் செடியைக் கண்டுபிடித்து அமாவாசை தினம் அச்செடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டிப் பலிபூசைபோட்டு அதின்வேரைப் பிடுங்கிவந்து பத்திரப்படுத்தி வைத்திருந்து, ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து இப்போது உடுக்கைவாத்தியம் முழங்கும்படிச்செய்கிறேன் பாரேன்றுசொல்லி இந்தவேரைச் சங்கன்வேருடன் சேர்த்து மேற்படி பாக்குவெட்டியால் வெட்ட உடுக்கைவாத்தியம் முழங்கும்; உலகோர் ஆச்சரியப்படுவார்கள் (கரிக்கோலம் என்பது அழிஞ்சில்.)

136. மேற்கூறிய சகலவாத்தியமும் ஒன்றாய் முழங்கும் ஜாலம்.

ஆதியாகச்சொன்ன சங்கன்வேருடன் மற்றவேர்களையும் ஒருங்கு சேர்த்து பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு, ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப்பார்த்து,இப்போது தனித்தனியாக வாத்தியங்களைக்கேட்டு ஆனந்தமடைந்தீர்கள்; சகலவாத்தியமும் யேககாலத்தில் வாசிக்கும்படியாகச் செய்கிறேன் பாரென்று சொல்லி, வேர்கள் யாவையும் ஒன்றாக வைத்து மேற்படி பாக்குவெட்டியால் துண்டுதுண்டாக வரிசையாய் வெட்டிக்கொண்டேவர வாத்தியங்களெல்லாம் ஏகோபித்து ஏககாலத்தில் முழங்கும்; சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

137. சீதத்தை வேகாமற்படிக்குச்செய்யும் ஜாலம்.

அத்திமரத்தில் சிறுதுண்டு வெட்டிவந்து அதை நன்றாய் எரிய வைத்து அதைக் கழுதை மூத்திரத்தில் அவித்து எடுத்துக்கொண்டு, ஞாயிற்றுக்கிழமை மீனலக்கினம் பார்த்து ஈத்தைச்சூரிச்செடிக்கு மஞ்சள்நூலினால் காப்புகட்டி வந்துவிடவேண்டும். மறு ஞாயிற்றுக்கிழமையில் துலாலக்கினம் பார்த்து நிர்வாணமாயிருந்து செடிக்குக் காயம்பட

மல் உச்சிவேர் அறுமல் பிடுங்கிவந்து மேற்படி அத்திமரம் சுட்டகரி. அடுப்பிலும் இந்தவேரைப் பாண்டத்துள்ளேயும் போட்டால் எவ்வளவு தீபோட்டு எரிக்கினும் சாதம் வேகாது. மறுபடியும் அடுப்பை பசுஞ்சாணியில் மெழுகி சுத்திசெய்தாலொழிய வேகாது.

138. சுண்ணாம்பு வேகாதிருக்கும் ஜாலம்.

எட்டிமரத்தில் சிறுதுண்டு வெட்டிக்கொண்டுவந்து அதை நன்றாக எரித்து எருமை மூத்திரத்தில் அவித்து, அந்தக்கரியை யெடுத்து பத்திரப்படுத்தி, பின்பு செவ்வாய்க்கிழமை கேட்டை நட்சத்திரமும் கூடலக்கினமும் பார்த்து எத்தைச்சொன்னாலுங் கேட்கும் நத்தைச்சூரிசெடிக்கு மஞ்சள்நூலினால் காப்புகட்டிப் பொங்கலிட்டுத் தூபதீபங்காட்டி அதின் வடக்குபோகும் வேரைப்பிடுங்கிக் கொண்டுவந்து பத்திரப்படுத்திவைத்திருந்து மேற்படி கரியைச் சுண்ணாம்புக் காலவாயினுள்ளே போட்டு வேரை ஈசானிய மூலைபக்கம் சொருகிவிட சுண்ணாம்புக் கல்லாயினும் கிளிஞ்சலாயினும் யெவ்வளவு கரி, கட்டை போட்டாலும் வேகாது. அந்த வேரை யெடுத்துவிட்டு பசுங்கோமியந் தெளிக்க எப்போதும் போல் வேகும்.

139. ஜலத்தின்மேல் விளக்கெரியும் ஜாலம்.

அத்திமரத்தினுடைய பாலைத் துல்லிதமான சல்லாக்கந்தையில் தவட்டித் திரியாகத்திரித்து, கொஞ்சம் ஆழமானக் கலசத்தில் கால்பங்கு ஜலத்தைவிட்டு ஜலத்துக்குமேல் ஒருயிழை யுயரமான சிறு கல் வைத்து அதன்மேல் திரியை நனையாத பக்குவமாய்வைத்துக் கொளுத்திக்காட்டினால் யாவரும் நம்புவார்கள். தடையுள்ள கலசமாகவேசெய்து வைத்துக்கொண்டால் முன்னே வத்தியைப்போட்டு எல்லாருக்கும் நடுவில்நின்று ஜலத்தைவிடலாம்; வத்திநனையாமல் விடவேண்டும்.

140. தீபங்காட்டும் ஜாலம்.

குங்கிலியத்தையும் கர்ப்பூரத்தையும் பொடியாகச்செய்து நசுக்கி ஒருகந்தையில் பரப்பி திரியாகத்திரித்து விளக்கெண்ணெயில் தோய்த்து வைத்துக்கொண்டு, முன்போல் தடையுள்ள கலசத்தில் வத்திபோட்டு தடைக்கு ஒருயிழை குறைவாகவே ஜலத்தைவிட்டுக் கொளுத்தி சபையில்வைத்தால் இரண்டுநாழிகையெரியும். நிஜமாகவே நம்புவார்கள்; சிலர் தேவதை வசியமென்று நினைப்பார்கள்.

141. ஜலம்விட்டு விளக்கெரியச்செய்யும் ஜாலம்.

ஜாலமாடும் சபைக்கு வருமுன்னமே திருகுகள்ளிப்பாலைக் கரண்டியளவெடுத்து, கற்பூரமும் அதேயளவெடுத்து இரண்டையும் சேர்த்து அரைத்து துல்லியமான சீலையில்தடவி உலர்த்தி வத்தியாய்த் திரித்து தயார்செய்து வைத்திருந்து, ஜாலமாடும் சபையில் தடையிருக்கும் கலசத்தில் மேற்படி வத்தியைப் போட்டு யாவரும் பார்க்க கலசத்தில் ஜலத்தை வார்த்து விளக்கேற்றிக் காட்டினால் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

142. சூளை வேகாதிருக்கும் ஜாலம்.

ஆச்சாமரத்தில் சிறு துண்டு வெட்டிக்கொண்டு வந்து எரித்து கழுதை மூத்திரம், எருமை மூத்திரம், நாய் மூத்திரம் இம்மூன்றும் விட்டு அவித்து, அந்தக் கரியையெடுத்து பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு, பின்பு அமாவாசை மூலநட்சத்திரம் விருச்சிக லக்கினம் இவைகூடிய தினத்தில் நத்தைச்சூரி செடிக்கு மஞ்சள்நூலினால் காப்புகட்டிவிட்டு வந்துவிடவேண்டும். பூரண பருவத்திற்சென்று பொங்கலிட்டு பலி கொடுத்து தூபதீபங்காட்டி அதின்வேரைப் பிடுங்கிவந்து வைத்துக் கொண்டு, எந்த சூளையாவது போடும்போது மேற்படி சுட்டகரியை சூளை போடுமுன் உள்ளே போட்டுவிட்டு, இந்தவேரைக் காற்று எந்தப்பக்கம் அடிக்கின்றதோ அந்த வாட்டம்பார்த்து வேரைச்சொருகிவிட எவ்வளவு வரட்டி கட்டை போட்டாலும் அச்சூளை வேகாது. அந்தவேரையெடுத்து விட்டு சந்தனக்கட்டையும் மஞ்சள்கொம்பும் சூளையில்போட வேகும். ஆனால் சூளை அடுக்கும்போதே கரியைப் போட்டுவிடவேண்டும்.

143. புதையல் எடுக்கும் அஞ்சனம்.

ஆடாதொடைச் செடியைக் கண்டுபிடித்து ஆதிவாரத்தில் மஞ்சள் நூலால் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பூசைபோட்டு, அதினுடைய கிழங்கை விராகன் ஒன்று நிறுத்தி கல்வத்திற்போட்டு, அதினுடைய பழமும் அதே நிறையாகச் சேர்த்துக் கோரோசனை அரைவிராகனிடை கூட்டி, சாரைநெய்விட்டு அரைத்து வெட்டுண்ட மனிதன் தலைமண்டை யோட்டைத் தேடிக்கொண்டுவந்து, அரைத்தமையைச் சீலையில்தடவி உலர்த்தி திரிசெய்து மண்டையோட்டில்போட்டு முத்தெண்ணெய்விட்டு விளக்கேற்றித் தைலம்வாங்கி சிமிழில் வைத்துக்கொண்டு, ஒருபிள்ளைபிரமாணம் மையையெடுத்து வெற்றிலையில் வைத்து, கண்ணைச் சிமிட்டாமல் உற்றுப் பார்க்கப்பார்க்கப் பாதாளமெல்லாம் பட்டணமாக தோன்றும்; நதிகளெல்லாம் தெரியும்; பூமியிலுள்ள எவ்வகைப்புதையலும் கண்ணிற்கு நேராகத்தோற்றும். உடனேயதற்குச் செய்யவேண்டிய சாந்திசெய்து பூமியைக்கிண்டி யெடுத்துக்கொள்ளலாம். ஆனால் மைகூட்டி அரைத்து சிமிழில் அடக்கஞ்செய்தவுடன் குருவை தியானித்துக் கணபதி பூசை செய்து, அஞ்சனாதேவியையும் அனுமாரையும் தோத்திரம்செய்து பின்பு மையையெடுத்து ஆட சித்தியாகும்.

144. நினைத்தகுறி சொல்லும் ஜாலம்.

பச்சைப்புழுகு கோஷ்டம் பச்சைப்பூரம் சந்தனம் இவைகளைச் சம நிடையாகச்சேர்த்துக் கல்வத்திலிட்டு ஜலம்விட்டு மைபோல் அரைத்துச் செப்புத்தகட்டில் பூசி, அதின்மேல் திரிகோண சக்கரமிட்டு, அதினுள் ஸ்ரீங்காரத்தை அடைத்து ஓம் நமோ பகவதே ஓம் உக்கிரமாகாளி சாமுண்டியாயி வயிரவி சாம்பவி யோங்காரக்கு கிலிலி மகாசக்தி நமோ நமோகவென்று மூன்றுகாலமும் தவராமல் ஆயிரத்தெட்டு உருகொடுத்து வர சித்தியாகும்.

145. பூசை செய்யும் விதி.

மூன்றுகாலமும் தலைமுழுகவேண்டும். ஒருபொழுதுபோலிருந்து ஒருவேளை அமுதுகொள்ளவேண்டும். அதில்முன்னெடுக்கும் கவளத்தை காகத்திற்கு வைக்கவேண்டும். வேஷ்டிப்போட்டுப்படுக்கவேண்டும். இவ்வாராகயிருந்து சத்தியைவைத்துப் பூசைசெய்ய ஒருமண்டலத்தில் சித்தியாகும். சித்தியானவுடன் செய்யும்தொழில் யின்னதென்றும் சொல்லலாம் ஒருவர்நினைத்து வந்து கேட்பதையும் சொல்லலாம். ஓடிப்போன வரையும் பிடித்துக் கொடுக்கலாம். ஆனால் புகை சாப்பிடக்கூடாது. வெற்றிலைப்பாக்குத் தின்னலாம். குறிசொல்லும்போது இடதுகையைக் கன்னத்தில் வைத்துக்கொண்டு வலதுகையை நீட்டிக் குறிசொல்ல வேண்டும்.

146. சொக்குத்தூள் ஜாலம்.

சொக்குப்பாக்கு, அப்பைக்கிழங்கு, நிலப்பனங்கிழங்கு, தாளிவேர், பேய்த்திவேர், பேயாலவேர், குப்பைமேனிவேர், வேளைவேர், கழற்சிவேர், ஊமத்தின் வித்து, தலைமஞ்சங்கொடி, மாதர் வீட்டுக்குத் தூரமானச்சீலை, மயானத்தின் சாம்பல், மண்டையோடு, ஊமை மண்டைப்பொடி, இவையெல்லாம் சமனிடையாகக் கூட்டிப் பொடிசெய்து வைத்துக்கொண்டுபேயாலன் பாலும்கூட சேர்த்துப் பொடிசெய்யவேண்டும். இப்படிச் செய்துவைத்துக்கொண்டு கொஞ்சம் பொடியையெடுத்து சபையில் தூற்றிவிட்டால் சகலபேரும் பொறிகலங்கி மதிமயங்கிக் கிடப்பார்கள். அவர்களை மடியைப்பிடித்திழுத்துப் புரட்டிப்புரட்டி, அவர்கள் வசமுள்ளப் பொருளைப் பறித்துக்கொண்டாலும் தெரியாது; தடியெடுத் தடித்தாலுந் தெரியாது. உடனே நல்லசலம் கொண்டுவரச் சொல்லி, அந்த சலத்தை அவர்கள்மீது தெளிக்க மயக்கம் தெளிந்து நினைவு பிறக்கும், அறிவுண்டாகும். ஆனால் சலம் தெளித்த சற்றுநேரம் வரைக்கும் திகைப்பூண்டு மிதித்தாப்போலிருக்கும். உடனே தெளிந்துவிடும்.

147. பேயாட்டும் ஜாலம்.

காட்டுப் பசுவின் எருவைக்கொண்டுவந்து கொளுத்திச் சாம்பலாக்கிச் சீலையில் வடிகட்டித் திருநீறுபோல் செய்துவைத்துக்கொண்டு, அப்பைக்கிழங்கு, தாளிவேர் பேய்த்திவேர், பேயாலவேர் ஊமத்தம் வித்து இவைகள் வகைக்கு விராகனிடை யெடுத்துப் பொடித்துச் சீலையில் வடிகட்டி மேற்படி விபூதியுடன் கலந்துவைத்துக்கொள்ள வேண்டும். ஜாலமாடுமிடத்தில் ஒரு மனிதனை உட்காரவைத்து சபையோரைப் பார்த்து, இந்த மனிதனைப் பேய்ப்பிடித்தவன்போல் ஆடும்படிச் செய்கிறேன் பாரென்று சொல்லி, மேற்படி திருநீற்றைக் கொஞ்சம் கையிலெடுத்து மந்திரம் சொல்பவன்போல் வாயில் வந்தபடி எதையோ சொல்லி அவன்சிரசில்போட உடனே தலையைச்சுற்றியாடுவான். வாயில் வந்தபடிக்கெல்லாம் பிதற்றுவான். சபையோர்கள் பிரமைகொண்டு திகைத்து நிற்பார்கள். அதன்றியும் சாதாரணமாய்ப் பேய்பிடித்த ஸ்திரீ புருஷர்களா யிருந்தபோதிலும் ஆடாமல் வாய்திறவாமலிருந்தால் அவர்களை உட்காரவைத்து மேற்படி திருநீறைப்போட ஓங்காரமுமிட்டு ஆடு

உடனே ஊரும் பேரும் சொல்லிவிடும். அப்போதே முடியறுத்துவிட்டால் அத்துடன் பேய் ஒழிந்துவிடும். ஆடும் பேயை ஆடாமல் உடனே நிறுத்தவேணுமென்றால் ஜலத்தைத் தெளிக்க மயக்கம் தெளிந்து நின்றுவிடும்.

148. ஆடாத முனிகளை வேறுவிதம் ஆட்டும் ஜாலம்.

எவ்விதமான முனிகள் பேய்கள் பிசாசுகள் பிடித்து வாய்திறவாமலும் ஆடாமலுமிருந்தபோதிலும், அதற்குச் சிறிய பயறளவு அபினியை எடுத்து வெற்றிலையில் வைத்து மடித்து உள்ளுக்குச் செலுத்திவிட உடனே சரசரவென்று ஆடி ஊரும் பேரும், தான் ஒண்டியிருந்துபிடித்த விடமும் பரபரவென்று சொல்லிவிடும். அப்போது முடியை அறுத்து விட்டு முழுக்கில் வைக்க, அத்துடன் யாவும் ஒழிந்துவிடும்.

149. வேறுவிதமுறை பால் உதிரமாகும் ஜாலம்.

தம்பலப் பூச்சியைக் கொண்டுவந்து புல்லில் கலந்துப் பசுவுக்குக் கொடுத்தால் அதைத் தின்றவுடன் பாலைக்கரந்தால் இரத்தநிறமாகவிருக்கும். யாவரும் ஆச்சரியப்படுவார்கள். அப்போது நீ சபையோரைப்பார்த்து இரத்தநிறமாக கரக்கும் பாலை வெள்ளைநிறமாகக் கரக்கும்படிச் செய்கிறேன் பாரென்று சொல்லி, ஒரு தொட்டியில் நல்லசலம் விட்டு சக்குத்தூள் பண்ணிப்போட்டுக் கலக்கிப் பசுவைக் குடிப்பாட்டினபிறகு கரந்தால் பால் எப்போதும்போல் வெள்ளையாயிருக்கும்; சந்தோஷப்படுவார்கள்.

150. நெருப்பில்லாமல் கற்பூரம் கொளுத்தும் ஜாலம்.

கற்பூரக்கட்டியைச் சபையோர்களுக்கு முன்னே வைத்து, அவர்களுக்குத் தெரியாமல் தந்திரமாக சிறுபயறளவு திமிர்பாஷாணத்தைக் கற்பூரக் கட்டிமீது வைத்துக் கையிலேந்தி சபையோர்களுக்கு நன்றாய்க் காட்டி குருவிற்குத் தூபமென்றுசொல்லி வாயினூதினால் குபீலென்று எரியும். சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

151. வேறுவிதம் முறத்தில் பொரிபொரிக்கும் ஜாலம்.

ஒரு ஜாண் நீளத்தில் அதற்குத்தகுந்த அகலத்தில் ஒரு முச்சல் செய்து அடியில் கள்ள அறையோடே முடையவேண்டியது அந்தக் கள்ள அறையில் பிடித்தமட்டும் பொரியைப்போட்டு வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் வந்து உட்கார்ந்து, ஒரு சவுக்கத்தைக் கழுத்தில் கட்டி, இரண்டு முந்தானியையும் இரண்டு கால் பெருவிரலிலும் சுத்திப் பிடித்து மேமுச்சலில் கொஞ்சம் நெல்லைப்போட்டுக்கொஞ்சம் தண்ணீர் தெளித்துப் பெரி பொரிப்பதுபோல் கலகலவென்று குலுக்கிக்கொண்டேயிருந்தால் அடியிலிருக்கும் பொரியெல்லாம் கீழுமேலுமாய் துள்ளி மேலுக்கு வந்துவிடும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

152. துணியில் சோளம் பொரிக்கும் ஜாலம்.

சோளத்தை மூன்றுகமடித்த துணியில் மூட்டைகட்டிச் சன்னம்பு தாளிக்குமிடத்தில் கொஞ்சம் பள்ளந்தோண்டி இந்தச் சோளமூட்

டையை வைத்து மேலே மூடிவிடவேண்டும். சுண்ணாம்புத் தாளித்த பிறகு அதைத் தோண்டி யெடுத்துக்கொண்டு ஜாலமாடுமிடத்தில் துணியைச் சவுக்கமாகப் பிடிக்கச்சொல்லி, நடுவில் சோளத்தைப் போட்டுக் கொஞ்சம் ஜலத்தைத் தெளித்தால் முத்தைப்போல் பொரியும். சபையோர் ஆச்சரியப்படுவார்கள்.

153. வேறுவிதம் குடத்தின்மேல் தேங்காயுடைக்கும் ஜாலம்.

குப்பைமேனி செடியைக் கண்டு பிடித்து ஞாயிற்றுக்கிழமை பார்த்து மஞ்சள் நூலினால் காப்புகட்டி, தூபதீபங்காட்டி, அச்செடியின்வேர் அறுமல் பிடுங்கி வந்து, புதுக்குடத்தினுள்ளே வைத்து கவிழ்த்துவிட்டுத் தேங்காயைக் குடத்தின்மேல் வைத்து, துணிவாக மோதித் தடியால் நேராக அடிக்க, துறைவிட்டாற்போற் சிதறிப்போகும். பார்த்திருந்த பேர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் தன் பேருக்கு உள்ள பட்சி அரசாயிருக்கும்போது செடிக்குக் காப்புகட்டவேண்டும். பட்சி பார்க்கத் தெரியாவிட்டால் தேர்ந்த ஜோசியரிடத்திலாவது கேட்டுக்கொள்ள வேண்டும்.

154. துணியைவீசி ஆகாயத்திற்போட குடைபோல்வரும் ஜாலம்.

தருவீழியென்னும் செடிக்கு காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலி கொடுத்துத் தூபதீபங்காட்டி, திக்குபந்தனம் செய்து, பின்பு அதை வெட்டி அதனுடைய கிழங்கை வாங்கி, அந்தக்கிழங்கில் விராகனிடை ஒன்று நிறுத்தெடுத்து ஒரு சவுக்கமான துணியில் கட்டி, குருவைத் தியானித்து விநாயகரைப் பூசித்து ஜாலக்காளை மனதில் நினைத்து அந்தர தேவதையைத் துதித்து சீலையைக் கையிலெடுத்து ஆகாயமார்க்கமாக விட்டெறிய, அது கீழே இறங்கும்போது குடைபோல் இறங்கும். சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள். சிலர் பிரமித்து அந்தரதேவதை வசியமென்பார்கள்.

155. நெருப்பிலாடும் வித்தை.

பச்சைத்தவளைக் கொண்டுவந்து அதைவைத்து ஒரு பாண்டத்திற் போட்டு ஜலம் விட்டு அடுப்பேற்றி யெரித்து அதில் வரும் நெய்யை யெடுத்து வேறொரு பாண்டத்தில் வைத்துக்கொண்டு அடியிற் காட்டியுள்ள வண்ணம் நெருப்பில் பலவிதமாய் ஆடலாம். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

156 மண்வெட்டியைக் காய்ச்சிக் கையாலெடுக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் கருமான் உலைபோற்செய்து அதற்கு இரண்டு துருத்திவைத்து சிமைக்கரியேனும் காட்டுக்கரியேனும் போட்டு நெருப்பிட்டு துருத்தியால் ஊத நெருப்பு கனகனவென்று யெரியும். அப்போது மண்வெட்டியை உலக்கூடத்தில் வைத்துப் பழுக்கக்காய்ச்சிக்கொறடால் தூக்கிக்கல்லின்மேல்வைத்து சபையோர்களைப்பார்த்து, இதோபழுக்கக் காய்ந்திருக்கும் மண்வெட்டியைக் கையால் தூக்குகிறேன் பாரென்று சொல்லி மேற்படி பச்சைத்தவளை நெய்யைக் கையில் தளும்பப் பூசிக்

கொண்டு மண்வெட்டியைத் தூக்க ஆச்சரியப்படுவார்கள்; சிலர் அக்கினி பகவான் வசியமென்பார்கள்.

157. நெருப்பில் காய்ச்சிய இரும்புகுண்டை பல்லால் கடித்தெடுக்கும் ஜாலம்.

விளாங்காய் பருமனுள்ள ஒரு இரும்புகுண்டை கருமான்உலையிலிட்டு சிவக்கக்காய்ச்சிக் கொறடினால் தூக்கி ஒரு கல்லின்மேல்வைத்து சபையோரைப்பார்த்து, இந்தக் குண்டைப் பல்லினால்கடித்து தூக்குகிறேன் பாரென்றுசொல்லி ஷை தவளைநெய்யை வாய்நிறைய ஊற்றிக்கொண்டு குண்டை பல்லினால் கடித்துத் தூக்கலாம் வாய்சுடாது. பார்ப்போரெல்லாம் பிரமித்துநிற்பார்கள். சிலர் அக்கினியைக் கட்டிவிட்டானென்பார்கள்; சிலர் கண்கட்டுவித்தை யென்பார்கள். சிலர் மகா மந்திரவாதி யென்று மயங்குவார்கள்; நெய்யைக் குழப்பி உமிழ்ந்துவிடவேண்டும்.

158. இரும்புக்கம்பியைக் காய்ச்சி வைக்கோல் மேல்போட வைக்கோல் வேகாதிருக்கும் ஜாலம்.

ஒரு அடி நீளமுள்ள ஒரு இரும்புக்கம்பியை சிவக்கக் காய்ச்சிக் கொறடால் தூக்கி சபையோர்களைப் பார்த்து, இந்தக் கம்பியின்மேல் வைக்கோற்பிரிசுற்றி வைக்கோல் வேகாதிருக்கும்படிக்குச் செய்கிறேன் பாரென்று சொல்லி வைக்கோற்பிரியை முன்னதாக தவளைநெய்யில் தோய்த்து வைத்திருந்து அதை யெடுத்துச்சுற்ற வைக்கோல் கொஞ்சமேனும் வேகாது. ஆச்சரியப்படுவார்கள் உடனே அந்த வைக்கோலை யெடுத்துவிட்டு சாதாவைக்கோலின்மேல் கம்பியைப்போட குபீலென்று யெறியும்; பிரமிப்பார்கள்.

159. சங்கிலியைக்காய்ச்சிக் கையாலெடுத்து உருவும் ஜாலம்.

இரும்பு சங்கிலியைக் கருமான் உலையில்போட்டுப் பழுக்கக்காய்ச்சி கொறடாலெடுத்து ஒரு இரும்பு தகட்டில்வைத்துச் சபையோர்களைப் பார்த்து, இந்த சங்கிலியைக் கையாலெடுத்து உருவுகின்றேன் பாரென்று ஷை தவளைநெய்யை கையில் தளும்பத் தடவிக்கொண்டு சங்கிலியை யெடுத்து உருவ ஆச்சரியப்படுவார்கள்.

160. நெருப்பின்மேல் நடக்கும் வாலம்.

ஜாலமாடுமிடத்தில் தேவையானமட்டும் ஆட்டைகளைப் போட்டுக் கொளுத்தி யெரிந்து நீயமர்ந்தபின் நெருப்பைப்பரப்பி சபையோரைப் பார்த்து, இந்த நெருப்பை மிதிக்கிறேன் பாரென்றுசொல்லி மேற்படி தவளைநெய்யைக் காலின் பாதங்களில் தளும்பப் பூசிக்கொண்டு நெருப்பில் குதிக்கக் கால்சுடாது. கண்ணால் பார்ப்பேர்கள் மிரண்டு பிரமித்து நிற்பார்கள்.

161. ஆகாயத்தில்விட்டெறிந்த மர அன்னம் பறந்துபோகும் ஜாலம்

மரத்தினால் அன்னம்போல் ஒன்றுசெய்து அதற்கு வர்ணமுதலான துங்கொடுத்துத் தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். பின்பு சத்

தைச்சூரி செடியைக் கண்டுபிடித்து சூரியகிராணத்தில் மீனலக்கினமும் அவிட்டநட்சத்திரமும் கூடியதினத்தில் அச்செடிக்கு மஞ்சள்நூலினால் காப்புகட்டி வந்துவிடவும். பிறகு கன்னியாலக்கினத்திற் சென்று அச்செடிக்குக் காயம்படாமலும் வேர் அறாமலும் பிடுங்கிக்கொண்டு வந்து வேரைப்பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு, ஜாலமாடுமிடத்தில் டைமர அன்னத்தைச் சபையோர்களுக்குக்காட்டி, இதை ஆகாயத்தி லெறிந்து பறந்து இறங்கிவரும்படியாகச் செய்கிறேன் பாரென்றுசொல்லி அன்னத்தைக் கையிலெடுத்துத் தந்திரமாக டைவேரை மோதிரம்போல் அன்னத்தின் காலில்சுற்றி "ஆகாயத்தில் விட்டெறிய அது உயரப்போய்த் திரும்பி கீழேவரும்போதுப் பார்க்கையில் உயிருள்ள அன்னம்பறந்து வருவதுபோலிருக்கும். பார்ப்பவர்களெல்லாம் பிரமித்து ஆனந்திப்பார்கள். கீழேவிழும்போது மர அன்னமாகத்தானிருக்கும்.

162. ஜலத்தின்மேல் நடக்கும் ஜாலம்.

ஜலத்திரட்டுக் கூட்டுமூலியைக் கொண்டுவந்து வெய்யிலில்போட்டு உலர்த்தித் தூளாய்ச்செய்து இங்கோலத் தைலம்விட்டு மைபோல் அரைத்துப்பரணியில் வைத்துக்கொண்டு, அந்தமையை பாதக்குறட்டில் கீழ்ப்புறந்தடவி காலிற்போட்டுக்கொண்டு ஜலத்தின்மேல் பயமில்லாமல் நடக்கலாம். அப்படிக்கல்லாமல். இந்த மையை வாகனங்களுக்குப் பூசி அதின்மேல் ஏறிக்கொண்டு ஜலத்தின்மேல் போகலாம். ஆனால் கிணறு குளந்தவிர ஆற்றில் போகக்கூடாது.

163. வேறுவித தண்ணீர்மேல் மிதக்கும் ஜாலம்.

குடோசரியென்கிற மூலிகைவேரும் பசைத்தவளை நிணமும் ஆக இரண்டும் போதுமானமட்டும் சேர்த்தரைத்து ஒரு ஆள் படுக்கின்ற தடுக்கில் ஒருபுறம் தளும்பப்பூசி உலர்த்தி குளத்தில் அல்லது கிணத்தில் போட்டு, தான் விபூதி ருத்திராட்சம் முதலானதும் பலமாகப்பூசி கையில் ஜெபமாலை யெடுத்துக்கொண்டு அந்தத்தடுக்கின்மேல் மல்லாக்கப் படுத்துக்கொண்டு ஈஸ்வரனை நோக்கி யோகம் செய்பவன்போ லிருக்கவும். ஆனால் முதுகால் நெட்டிக்கொண்டே யிருந்தால் இக்கரையும் அக்கரையும் போய்க்கொண்டும் வந்துக்கொண்டுமிருக்கும்; தடுக்குத் தண்ணீரில் மூழ்காது. கண்டவர் பிரமிப்பார்கள்; கடவுளைப்போல் வந்தனை வழிபாடுகளும் செய்வார்கள்.

164. ஆகாயத்தில் விட்டபுறாவை புட்டியில் இறக்கும் ஜாலம்.

ஒரு கருப்பு புட்டியைக் கொண்டுவந்து அடியில் அறுத்து இரண்டு வெள்ளைப்புறாகொண்டுவந்து ஒன்றை உள்ளேவிட்டு, தகரத்தினால் புனல்போல்செய்து அடியில் சொருகி தாருபூசியிருக்கவும். ஜாலமாடும் சபையில் வந்து மற்றொரு வெள்ளைப்புறாவைச் சபையில்காட்டி வாசலில் வந்து ஆகாயத்தில் விட்டுவிடவும். பின்பு இந்தப் புட்டியைமேஜையின்மேல் வைத்து குட்டிச்சாத்தானாகிய பொம்மையை அருகில்வைத்து மாத்திரக்கோலைக் கையிற்பிடித்து பொம்மையைப் பார்த்து! ஓ குட்டிச்சாத்தான், இப்போது நான்விட்ட புறா இந்தப் புட்டியில் வருமா வராதல்லவா (சல்)

நீ எனக்கு அடிமையாயிருப்பது மெய்யானால் சீக்கிரம் இந்தப் புட்டியில் வரும்படியாய்ச்சொல் பார்ப்போமென்று சற்றுநேரம் மந்திரம் செய்பவன்போல் கண்ணைமூடிக்கொண்டிருந்து, இந்தபுட்டியை எடுத்துக் கீழே பளீலென்றுத் தட்டினால் புறாபறந்துபோகும். பார்ப்பவர்களெல்லாம் பிரமித்து இது இந்திரஜாலமா யிருக்குதென்பார்கள்.

165. வேறுவிதம் களவுபிடிக்கும் ஜாலம்.

ஒரு வீட்டில் திருடுபோகுமாகில் ஒரு அறையைக் காலிசெய்து, மெழுகி கோலமிட்டு, பசுஞ்சாணத்தால் பிள்ளையார் பிடித்துவைத்து, கற்பூரம் சாம்பிராணி வெற்றிலைப்பாக்கு பழம் அவல்கடலை எலுமிச்சம் பழம் விபூதிகட்டி இவை முதலானதும் கொண்டுவரும்படியாகச்செய்து, அந்த அறைக்குள்சென்று கதவை மூடிக்கொண்டு தன்மனம்போல் ஒரு சக்கரமெழுதி, பழமுதலானதையும்வைத்து கற்பூரம்கொளுத்தி, பின்பு நீ செய்யவேண்டிய தந்திரமாவது ஒரு அடி நீளமுள்ள ஒரு இரும்பாணி சம்பாதித்து அதின்மேல் நல்லவாசனையுள்ளப் பெருங்காயத்தைத் தளும்பப்பூசிச் சக்கரத்தின்மத்தியில் நட்டுவைத்து விடவேண்டும். ஆனால் ஆணியும் பெருங்காயமும் முன்னதாகவே தயார்செய்து வைத்திருக்கவேண்டும். அறைக்குள் வேலை முடிந்தவுடன் கதவைத் திறந்துகொண்டு வெளியில்வந்து, அவ்வீட்டி லிருப்பவர்கள் அனைவரையுமழைத்து இதோ இந்த அறைக்குள் நாட்டியிருக்கும் இரும்பாணியை ஐந்துவிரலினாலும் கெட்டியாக அழுத்திப்பிடித்துவிட்டு வரவேண்டும் என்று சொல்லவேண்டியது. ஆனால் களவுசெய்தவர்கள் கையை ஆணி கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுமென்று பயமுறுத்தி, பின்பு ஒவ்வொருவர் கையையும் முகர்ந்து பார்க்க பெருங்காயம் வாசனையடித்தால் அவர்கள் களவு செய்திருக்க மாட்டாரென்று நம்பவேண்டும். களவுசெய்தவர் பயந்து ஆணியைத் தொடமாட்டார் அவர் கையில் பெருங்காயவாசனையு மிராது; கண்டு கொள்ளவும்.

166. களவு காணும் ஜாலம்.

ஒருவீட்டில் களவுபோகுமாகில் வாசலில் மெழுகி கோலம்போட்டு, பசுஞ்சாணத்தினால் பிள்ளையார்வைத்து அதன்சிரசில் அருகன்புல்சொருகி, பின்பு அந்தவீட்டில் இருப்பவர்கள் பேரையெல்லாங் கேட்டு பனம் ஓலை நறுக்குகளில் வெவ்வேறாக எழுதிக்கொண்டு இரகசியமாய்ச் சந்தேகமிருக்கும் ஆளைத் தீர்விசாரித்து, ஒருசட்டியில் சாம்பலைவாரி வாசலில் வைத்து சந்தேகப் பேர்வழிச்சீட்டைத் தந்திரமாய்ச் சாம்பலில் சொருகி, பின்பு நெருப்பைவாரி அச்சட்டியில்போட்டு வீட்டிலிருந்த மற்றவர்களின் சீட்டுகளை எண்ணி அந்தநெருப்புச் சட்டியில் போட்டுவிட்டு, மந்திரம் செய்வதுபோல் விபூதி எடுத்து ஒருநாழிகைவரையில் ஓதி அக்கினியில் கொஞ்சம்போட்டு அனைவருக்கும் விபூதிகொடுத்தபிறகு, இப்போது சீட்டையெல்லாம் நெருப்பில் போட்டுவிட்டேன் களவுசெய்யாதவர் சீட்டெல்லாம் சாம்பலாகப் போய்விடும், களவுசெய்தவர் சீட்டு வேகாமற்படிக்குப் பச்சென்றுயிருக்கும், இதுதான் திருஷ்டாந்தமென்று சொல்லி, ஒரு குடத்தில்தண்ணீர் கொண்டுவரும்படிச் சொல்லி அத்தண்ணீரில் சாம்பலுடன்போட்டு கரைத்தால் ரகசியமாகச் சொருகின சீட்டு மிதந்துவிடும்.

167. எட்சணி வசியமை.

பச்சை ஓணான் பிடித்துவந்து அதினுடைய பிச்சை எடுத்துக் கொண்டு, அத்துடன் திசைமயக்கிப் பொடியும், மதிமயங்கித்தூளும் சமனாகச்சேர்த்துக் கல்வத்திலிட்டு ஐங்கோலத் தைலம்விட்டு மைபோல் அரைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு, மோகினியையும் ஜாலக்காரனையும் தியானிக்கவேண்டியது. அதற்கு மந்திரம் ஸ்ரீம் இரீம் கிலியும் மாயா மோகினி நமா என்று இருபத்தோர் நாளைக்கு மூன்று காலமும் தவறாமல் லட்சம் உரு கொடுத்துவர சித்தியாகும்.

168. பெண்ணுருவாகுஞ் ஜாலம்.

ஜாலமாடுஞ் சபையில் வந்துநின்று ஜாலமாடிக்கொண்டேயிருந்து, ஷை ஜாலக்காள் வசியமையில் கொஞ்சமெடுத்து நெற்றியில் திலர்தமிட்டுக்கொள்ள உடனே பார்க்குஞ் சபையோர்முதல் யாவர்களும் அதிக ரூபவதியான பெண்ணைப்போல் தோற்றும். அவர்களுங் கண்டு வாய் வரண்டு மதிமயங்கி மோகித்து நிற்பார். சிலர் ரம்பை ஊர்வசி மேனகை திலோர்த்தமையோ அல்லது தெய்வப்பெண்ணோ என்று திகைப்பார்கள். உடனே நெற்றியிலிட்ட மையைத் துடைத்துவிடப் பெண்ரூபமாறி ஆண் ரூபமாகிவிடும். சபையோர்கள் பார்த்துப்பிரமித்துப்பெண்ணின் அழகை ஒருவரோடொருவர் சொல்லி வர்ணித்துக்கொண்டே யிருப்பார்கள்.

169. எட்சணி வசியமாக வேறுவித ஜெபம்.

நேமநிஷ்டையோடிருந்து ஸ்ரீம் இரீம் கிலியும் அவ்வுமவ்வும் சவ்வும் நமசிவய ஓம் என்று மூன்று காலமும் ஒருமண்டலம் வேளையொன்றுக்கு லட்சம் உருகொடுத்து எட்சணியைத் தியானித்து, பரிமளவஸ்துக்கள் ஜாதிக்காய் கிராம்பு ஜாபத்திரி வால்மிளகு பாக்கு வெத்திலை சர்க்கரை கற்கண்டு கனிவர்க்கங்கள் பலகாரவகைகள் இவையெல்லாம் நான் நினைக்கும்போது கொண்டுவந்து தரவேணுமென்று கேட்டுக்கொள்ள வேண்டும். நாற்பதுநாளும் உருகொடுத்து சித்தியானவுடன் தெப்பக் கால் மூலியென்னும்செடிக்கு வெள்ளிக்கம்பியினால் காப்புக்கட்டி அந்தச் செடியருகில் அந்திசந்தி எட்டுநாளும் தவறாமல்சென்று ஷை எட்சணி மந்திரத்தை லட்சம் ஓதி கடைசிதினத்தில் பூசைப் பலமாகப்போட்டு குளிசத்தைத் எடுத்துப் பட்டுக்கயிறு கோர்த்து வலதுகையில் கட்டிக் கொண்டு மேற்சொன்ன வகைகள் ஒவ்வொன்றையும் அழைப்பிக்க சித்தியாகவரும்.

170. சந்தனம். பன்னீர், புஷ்பம், ஜாதிக்காய், ஜாபத்திரி, வால்மிளகு, பாக்கு, வெற்றிலை, சர்க்கரை, கற்கண்டு, கனிவர்க்கங்கள், பலகாரம் முதலானவைகளை அழைப்பிக்கும் ஜாலம்.

வெங்கலத்தினால் ஒன்பது சிறுகிண்ணங்கள் செய்து அந்த அளவாகவே தேங்காய் கொட்டாங்கச்சியும் சம்பாதித்து வைத்துக்கொண்டு, மாத்திரைக்கோலொன்று தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும்.

ஜாலமாடுமிடத்தில் ஐந்து பெரிய தாம்பாளம் கொண்டுவரும்படிச் சொல்லி சபையோர்களைப் பார்த்து, ஓ சபையோர்களே! உங்கள் அனைவருக்கும் மரியாதை செய்யும்படியாக சிலவகைகளை அழைப்பிக்கிறேன் பாருங்களென்றுசொல்லி ஷை ஒன்பது கிண்ணத்தையும் ஒன்பது தேங்காயின் கொட்டாங்கச்சியையும் சபையோர்களுக்குக் காட்டி, பூமியின்மேல் கவிழ்த்துவிடவேண்டும். ஒரு கிண்ணத்தையும் ஒரு கொட்டாங்கச்சியையும் கையிலெடுத்து இரண்டு வாயையும் ஒன்றாகமூடி கிண்ணமும் கையும் மறையும்படியாக மேலே ஒரு சிலை சவுக்கத்தைமூடி, எட்சணியைத் தியானித்து, அம்மணி! நல்ல வாசனையுள்ள அறைத்த சந்தனம் இந்தக் கிண்ணத்தில் வரவேண்டுமென்று மனதில் நினைத்து மந்திரத்தைத் தியானிக்க உடனே சந்தனம் கிண்ணம் நிறைய உண்டாகும். உடனே மேல்மூடிய துணியை எடுத்துவிட்டு சந்தனத்தைத் தட்டில்வைக்க சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் மேற்சொன்ன தினுசுகள் ஒவ்வொன்றையும் இவ்வாறாகவே ஒவ்வொரு கிண்ணத்தையெடுத்து எட்சணி மந்திரத்தைத் தியானித்து அழைக்கவேண்டும். தடையில்லாமல் சகலமும் வரும். சபை யோர்களும் பிரமிப்பார்கள்.

171. மாஞ்செடி முளைக்கும் ஜாலம்

எறழிஞ்சி விதையைக் கொண்டுவந்து அதைப் பூந்தயிலமாகச் செய்து மாங்கனியைக் கொண்டுவந்து ஒருசொம்பில் அதின் சாறைப் பிழிந்துக்கொண்டு தோலை நீக்கிவிட்டு அந்தப் பழச்சாற்றுடன் ஐங்கோலக் கருவையுங்கூட்டி ஷை பூந்தைலத்துடன் சேர்த்து அந்த மாங்கொட்டையைப் புதைத்து மேலே மண்ணைமூடிவிட்டு ஜலம்வார்த்து கூடையை மேலே மூடிவிடவேண்டும். இவ்வாறாக நாலுதரந் திறந்து தண்ணீர் வார்க்கவேண்டும் இவ்வகைச்செய்ய மூன்றேமுக்கால் நாழிகைக்குள் இலைவிட்டுக் கொழுந்தாகி முதிர்ந்த இலையாகி பூவாகி பிஞ்சாகி காயாகி கனியாகி மரந்தழைத்திருக்கும். பார்ப்போர்கள் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள் கனியை அறுத்து சபையோர்களுககும் காட்டலாம் ஆனால் மூன்றேமுக்கால் நாழிகையில் மறைந்துபோகும். பிழம் அளிந்த பழமாகயிருக்கவேணும்.

172. தீபத்தைப்பார்த்தால் வீடெல்லாம் நல்லபாம்பாக தோற்றும் ஜாலம்.

நல்லபாம்பின் கொழுப்பை வாங்கிக்கொண்டு வந்து துல்லிதமான வஸ்திரத்தில் தடவி நிழலில் உலர்த்தித் திரியாகச்செய்து வைத்துக் கொள்ளவும். இரவில் ஒரு கலசத்தில் இந்தத் திரியைப்போட்டு முத்தெண்ணெய்விட்டுக் கொளுத்திவிட்டு தீபத்தைப்பார்க்க வீடெல்லாம் நல்ல பாம்பாகத்தோற்றும். பார்ப்பவர்களெல்லாம் மிரண்டு ஓடுவார்கள். அந்தத் திரியை யெடுத்துவிட்டு வேறே திரியைப்போட பாம்பெல்லாம் மறைந்துவிடும்.

173. பாம்பு உண்டாகும் ஜாலம்.

பேரோஸ் சர்ப்பிண்டு என்னும் மருந்தைக் கொண்டுவந்து சபை முன் கொளுத்தினால் சர்ப்பம்போல் படம்விரித்து ஆடும். பார்க்கும் சபை

யோர்கள் சர்ப்பமென்றே நம்புவார்கள். இந்த மருந்து சைனாபஜார் கடைகளில் அகப்படும்.

174. துடப்பம் சுழலும் ஜாலம்.

ஒரு தென்னை துடப்பத்தையெடுத்து ஒருவருக்குந் தெரியாமல் தந்திரமாக முருக்கி, அதின் முனையில் கொஞ்சம் பிளந்து சிறிய துண்டு துடப்பத்தை அதில் சொருகிப் பூமியில் மணலைக்குவித்து அதில் சொருகி அல்லது ஒருவர்கையில் கொடுத்து சபையோர்களைப் பார்த்து, இந்தத் துடப்பத்தைக் கிருகிருவென்று சுழலும்படிச் செய்கிறேன் பாரென்று ஒரு சொம்பில் ஜலங் கொண்டுவரச்சொல்லி, சுல் மலையாள பகவதி இந்தத் துடப்பத்தைக் கிருகிருவென்றுச் சுழலச்செய்வாயென்று கொஞ்சம் ஜலத்தைக் கையிலள்ளி துடப்பத்தின்மேல்விட கிருகிருவென்று சுழலும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். கையில் பிடித்திருப்பவனும் மிரளுவான்.

175. துடப்பம் தண்ணீரில் நிற்கும் ஜாலம்.

ஒரு துடப்பத்தை யெடுத்து ஒருவருக்குந் தெரியாமல் தந்திரமாக அதன் அடியில்-கனத்த அப்பளுத்தியாவது ஊசியாவது குத்தி ஒருவர் கண்ணுக்குந் தெரியாமல்செய்து, இரண்டடி உயரமுள்ள மரத்தொட்டியிலாவது பித்தளை ஜோடுதவலையிலாவது நிறைய ஜலம் வார்த்து அதில் துடப்பத்தைப் போட நிற்கும்; ஆச்சரியப்படுவார்கள்.

176. சாணியுருண்டைத் தண்ணீரில் மிதக்கும் ஜாலம்.

பருமனாகவுள்ள தக்கையையெடுத்து அதைப் பந்துபோல் சீவி அதன்மீது சாணத்தை நன்றாகப் பூசிவைத்துக்கொண்டிருந்து வேறொரு சாணி உருண்டையை அனைவருக்குங்காட்டி அதைத் தந்திரமாக மறைத்துப்போட்டு கை உருண்டையைத் தண்ணீரில்போட மிதக்கும். ஆச்சரியப்படுவார்கள்.

177. தீபமேற்றிப் பார்த்தால் வீடெல்லாம் தவளையாகக் காணும் ஜாலம்.

தவளையைப் பார்த்து ஆதிவாரத்தில் கொண்டுவந்து அதன் கொழுப்பையெடுத்து, ஒரு மெல்லியமான சலவை மல்லில் தடவி நிழலில் உலர்த்திக் காய்ந்தபிறகு அந்த வஸ்திரத்தைத் திரிசெய்து வைத்திருந்து, இரவில் அந்த வத்தியைப் போட்டுத் தீபமேற்றித் தீபத்தைப் பார்க்க வீட்டில் நிற்கும் மனிதர்கள்மேலெல்லாம் தவளையாகத் தோன்றும்; பார்ப்போர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

178. வேறுவிதம் சாதம் வேகாதிருக்கும் ஜாலம்.

சிலவேம்புவேர் கொண்டுவந்து சிறியதுண்டாய்ச்செய்து அரிசி அரிக்கும்போதே உலைப்பானையிலாவது அரிசியிலாவது போட்டுவிட்

டால் சாதம் வேகாது. வேரை யெடுத்துவிட்டு மறுவுலை வார்த்து வைத்து அரிசியை நன்றாய்க் கழுவிப்போட சாதம் வேகும்.

179. இரும்புக்குண்டை ஆகாயத்திலெறிய அந்தரமாக நிற்கும் ஜாலம்.

நத்தைச்சூரி செடியைக் கண்டுபிடித்து சுவாதி நட்சத்திரம் கும்பலக்கினம் ஆதிவாரங்கூடிய சுபதினத்தில் அச்செடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி விட்டு வந்துவிடவேண்டும். மறு ஆதிவாரத்தில் சிம்மலக்கினத்திற் சென்று பொங்கலிட்டுப் பலிகொடுத்துப் பூசைபோட்டு, செடிக்குக் காயம்படாமலும் வேர் அருமலும் தோண்டி யெடுத்துக்கொண்டு வந்து, பொன் தகட்டினால் கடையம்செய்து அதில் அவ்வேரைப்போட்டு விநாயகரைப்பூசித்து வலதுகையில் மாட்டிக்கொள்ளவும். ஜாலமாடுமிடத்தில் வந்து இரும்புக்குண்டைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்தக்குண்டை ஆகாயமார்க்கமாக விட்டெறிந்து அந்தரமாக நிற்கச் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி, குண்டையெடுத்து ஆகாயமார்க்கமாக விட்டெறிந்து வலதுகையிலுள்ள கடகத்தைக்கழற்றி இடது கையில் பிடித்துப் பூமியில் தாழ்த்த குண்டு அந்தரமாக நிற்கும். சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள். உடனே அந்தக்கடகத்தை வலது கையில்பிடித்து குண்டுக்கு நேராகத் தூக்கிக்காட்ட கீழேவிழுந்துவிடும்.

180. சிரசில்லா மனிதர்களாகத் தோற்றும் ஜாலம்.

வெட்டுண்ட மனிதனுடைய தலையைப் புதைத்திருக்குமிடத்தைத் தேடிக் கண்டுபிடித்து, அதைத்தோண்டி எடுத்துக்கொண்டுவந்து, அதன் எலும்பைத் தீவட்டியில் வைத்துச் சுற்றி விளக்கெண்ணெய் வார்த்து தீவட்டியைக் கொளுத்திப் பிடிக்க, சபையிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் பார்க்கத் தலையில்லா முண்டமாகத் தோற்றும். சபையோர்கள் பயந்து மிரண்டு மூலைக்குமூலை ஓடுவார்கள். சிலர் தலைகளைத் தடவிப் பார்த்துக்கொண்டே திகைத்து நிற்பார்கள்.

181. இந்திரஜால மை.

பூனை ஒன்று, கீரிப்பிள்ளை ஒன்று, இரட்டைவால் அரணை ஒன்று, திகைப்பூடு பூச்சிபத்து, பேய்ப்பீர்க்கன் விரை பலம் இரண்டு, புல்லாமணக்கு விரை பலம் இரண்டு, இவைகளையெல்லாம் நறுக்கிப் பேய்க் கரும்பன் சாற்றில் போட்டு ஒரு ஜாமம் பொறுத்து யெடுத்து பூமியின் மீது உலரப்போட்டுப் பின்பு ஆதளையின்பாலில் ஒருசாமம் ஊறவைத்து இவைகளையெல்லாம் ஒரு பாண்டத்திற்போட்டுப் பூந்தயிலமாகக் காய்ச்சி வாங்கி ஐங்கோலக்கருவுங் கூடச் சேர்த்துக் கல்வத்திலிட்டு அரைத்து வருகையில், ரசமும் வெண்ணெயும் வகைக்குக் கால் கழஞ்சு சேர்த்து மைபோல் அரைத்தெடுத்துச் சிமிழில்பத்திரமாக வைத்துக்கொள்ளவும். பின்பு ஜாலக்காளையும் நீலகண்டியையும் பூசைசெய்து ஸ்ரீம் கிரீம் கிலியும் சவ்வும் ஓயும் அவ்வும் மவ்வும் யவ்வும் கூட நீலகண்டி அம்மா என்று இருபத்தொருநாள் மூன்றுவேளையும் தவறாமல் வேளை ஒன்றுக்கு லட்சம் உரு செபிக்க மைக்கு உயிருண்டாகும். பின்பு நினைத்த ஜாலங்களைத் தீரமாக ஆடலாம்.

182. நூலேணி ஜாலம்.

திரித்த நூற்கயிற்றையெடுத்து மெத்தைமீதேனும் மரங்கள்மீதேனும் இன்னும் எதன்பேரிலேனும் வைத்து ஷை கயிற்றில் இந்த மையைத் தடவிப்போட நூலேணியைப்போலப் படிப்படியாக நிற்கும். பார்ப்பவர்கள் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

183. படைகள் உண்டாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து, இப்போது முப்பத்திரண்டு ஆயுதங்களுடனே படைகளை வரவழைக்கின்றேன் பாருங்களென்று சொல்லி, நீலகண்டியைத் தியானித்து, ஜாலக்காலைப் பூசித்து ஷை மையைக் கொஞ்சம் கையிலெடுத்து பூமியிலுள்ள மண்ணை அள்ளி நாலுதிசையிலும் போட உடனே நாலுதிசையிலும் இருந்து முப்பத்திரண்டு ஆயுதங்களுடன் திரளாகப் படைகள் திரண்டுவரும். அதைக் கண்டோர்களெல்லாம் கலங்கி மிரண்டு கதிகெட்டுத் தடுமாறி ஓடுவார்கள்.

184. வாழைத்தண்டை வெட்ட மனிதர் தலைபோல் உருளும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் நாலடி நீளமுள்ள ஒரு வாழைத்தண்டைக் கொண்டுவரும்படிச் சொல்லி, அந்தத் தண்டைக் கையில்பிடித்து சபையோரைப்பார்த்து, இந்த வாழைத்தண்டை வெட்டி மனிதனுடைய தலையாக விழச்செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி, நீலகண்டியம்மனைத் தியானித்து, அம்மனி! இந்த வாழைத்தண்டை வெட்டி மனிதனுடைய தலையைப்போல் தோற்றவேண்டுமென்று தியானமோதி, தந்திரமாக ஷை மையையெடுத்து வாழைத்தண்டு முழுதும்பூசி இடதுகையில் தண்டைப் பிடித்து வலதுகையில் கத்திகொண்டு தண்டைவெட்ட, துண்டுக்கு ஒரு தலையாக உருளும். பார்த்தவர்களெல்லா மாச்சரியப்படுவார்கள். ஆனால் தலைகளை எல்லாம் உடனே எடுத்து மறைந்துபோவென்று சொல்லிவிடவேண்டும்.

185. கலியாணப் பூசினிக்காயை வெட்ட யானைத்தலையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு கலியாணப் பூசினிக்காயைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்தப் பூசினிக்காயை வெட்டுகின்றேன் யானைத்தலை யாவதைப் பாருங்களென்றுசொல்லி நீலகண்டியைத் தியானித்து, அம்மணி! இந்தப் பூசினிக்காயை வெட்டுகின்றேன், ஆனைத்தலையாகத் தோற்றச் செய்யவேண்டுமென்று சொல்லித் தந்திரமாக மேற்படி மையை பூசினிக்காயின் மீதில் தடவி கத்தியால் ஓங்கிவெட்ட உடனே யானைத்தலைபோல் தோற்றும். சபையோர்கள் மனமிரண்டு மதிமயங்கி பிரமித்து மகா மந்திரவாதியென்று கொண்டாடுவார்கள். ஆனால் அத்தலையை உடனே மறைந்துபோவென்று சொல்லவும்.

186. பூசினிக்காயை வெட்ட குதிரைத்தலையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு பூசினிக்காயைக் கையிலெடுத்துச் சபையோர்களுக்குக் காட்டி, இந்தப் பூசினிக்காயை வெட்டிக் குதிரைத்தலையாகும்படிச் செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி, நீலகண்டியைத் தியானித்து, அம்மணி! இந்தப் பூசினிக்காயை வெட்டுகிறேன், குதிரைத்தலைபோல் தோற்றச்செய்வா யென்றுசொல்லி, தந்திரமாக ஷை மையைப் பூசினிக்காயின்மேல் தடவி, காயை நிலத்தில்வைத்துக் கத்தியால் ஓங்கி வெட்ட குதிரைத்தலைபோல் தோன்றும். உடனே தலையை மறைத்துச் சல்போவென்று சொல்லவும்.

187. கெச்சக்காயை வெட்ட ஆட்டுத்தலையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் கெச்சக்காயைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி, இந்தக் கெச்சக்காயை வெட்டுகிறேன், ஆட்டுத்தலையாவதைப் பாருங்களென்று சொல்லி,நீலகண்டியைத் தியானித்து, அம்மணி! ஆட்டுத்தலை யாகவேணுமென்று சொல்லி மேற்படி மையைத் தடவி வெட்ட ஆட்டுத்தலைபோல் தோற்றும். ஆனால், எத்தனை கெச்சக்காயை வெட்டுகின்றேமோ அத்தனைத் தலையாகத் தோன்றும். ஆச்சரியப்படுவார்கள். உடனே தலையைமறைத்து சல்போவென்று சொல்லவும்.

188. பச்சை வைக்கோற் காரையை வெட்ட நல்லப்பாம்பு தலையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் பச்சை வைக்கோற்காரைக் கொண்டுவரும்படி சொல்லி, அதை வாங்கிச் சபையோர்களுக்குக் காண்பித்து, இந்த வைக்கோற்காரை வெட்டிப் பாம்புத்தலை யாகும்படி செய்கிறேன் பாரென்று சொல்லி மேற்படி மையைத் தந்திரமாக அதிற் றடவி ஒரு மணைமேல் வைத்து கத்தியால் துண்டுதுண்டாக வெட்டிக்கொண்டேவர எத்தனைத் துண்டாகிறதோ அத்தனைப் பாம்புத்தலையாகத் தோற்றும். படத்தை விரித்துக்கொண்டிருக்கும். பார்ப்போர்கள் பயங்கொள்வார்கள். உடனே தலைகளை மறைத்துவிடவேண்டும்.

189. பனங்காயை வெட்டப் பன்றித்தலையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் பனங்காயொன்றைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்தப் பனங்காயை வெட்டிப் பன்றியாகச் செய்கிறேன் பாரென்றுசொல்லி, நீலகண்டியைத் தியானித்து, அம்மணி! இந்தப் பனங்காயை வெட்டுகிறேன், பன்றித் தலையாகத் தோன்றச்செய்வாயென்று சொல்லி மேற்படி மையையெடுத்துத் தந்திரமாக பனங்காயிற் பூசி, காயை பூமியின்மேல்வைத்து கத்தியால் நோக்கிவெட்ட, உடனே பன்றித் தலையாகும். பார்ப்பவர்கள் ஆச்சரியப் படுவார்கள், உடனே தலையை மறைத்து சல் ஓடிப்போவென்று சொல்லவும்.

190. பேய் பீர்க்கங்காயை வெட்ட புலித்தலையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு பேய்ப் பீர்க்கங்காயைக் கையிலெடுத்துச் சபையோர்களுக்குக் காட்டி இந்தப் பீர்க்கங்காயை வெட்டிப்புலித்தலை

யாகச் செய்கிறேன் பாரென்றுசொல்லி, நீலகண்டியைத் தியானித்து, அம்மணீ! இந்தப் பேய்ப்பீர்க்கங்காயை வெட்டுகிறேன் புலித்தலையாகத் தோற்றச்செய்ய வேண்டுமென்று சொல்லி மேற்படி மையைத் தந்திரமாகக் காயில் தடவிப் பூமியின்மேல் வைத்து, கத்திக்கொண்டு மோதி வெட்ட உடனே புலித்தலையாகத் தோற்றும். பார்ப்பவர்கள் பயந்து பதறிப் போடுவார்கள். ஆனால் உடனே தலையைமறைத்து சல் காட்டிற்கு ஓடிப் போவென்று சொல்லவும்.

191. சுரைக்காயை வெட்டப் பசுத்தலையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில ஒரு சுரைக்காயைக் கொண்டுவரும்படியாகச் சொல்லி அதை வாங்கிச் சபையோர்களுக்குக் காட்டி அந்தக் காயை வெட்டிப் பசுத்தலையாகும்படிச் செய்கிறேன் பாரென்றுசொல்லி, நீலகண்டியைத் தியானித்து, அம்மணீ! இந்தச் சுரைக்காயை வெட்டுகிறேன் பசுத்தலையாகத் தோற்றச்செய்ய வேண்டுமென்று சொல்லி ஷை மையையெடுத்துத் தந்திரமாக ஷை காயிற்றடவி பூமியின்மேல்வைத்து கத்தியைக்கொண்டு ஓங்கி வெட்ட, உடனே பசுத்தலையாகத் தோற்றும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் தலையை உடனேமறைத்து, சல், பசுக்கூட்டத்திற்போய்ச் சேரென்று சொல்லவும்.

192. தும்மட்டிக்காயை வெட்ட எருமைத்தலையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு ஆற்றுத் தும்மட்டிக்காயைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி, இந்த ஆற்றுத் தும்மட்டிக்காயை வெட்டி எருமைத் தலையாகச் செய்கிறேன் பாரென்று சொல்லி, நீலகண்டியைத் தியானித்து, அம்மணீ! இந்தத் தும்மட்டிக்காயை வெட்டுகிறேன், எருமைத்தலையுருவாகச் செய்யவேண்டுமென்று சொல்லி மேற்படி மையைத் தந்திரமாகக்காயிற்றடவிப் பூமியில்வைத்துக் கத்தியால்நோக்கி வெட்ட, உடனே எருமைத்தலை யுருவாகத் தோற்றும். சபையோர்கள் ஆச்சரியப் படுவார்கள். ஆனால் தலையை உடனே மறைத்து, சல், ஓடிப்போவென்று சொல்லி, சற்றுநேரம் பொறுத்து மூடிய தலையைத் திறந்துபார்க்க மாயமாகப்போகும். ஆற்றுத்தும்மட்டிக்காய் இரண்டு துண்டாகக் கிடைக்கும்.

193. வாய்வு ஸ்தம்பன ஜாலம்.

எழுசிபிடிக்கும்காந்தமாக எட்டுப்பலம் கொண்டுவந்து, கொஞ்சம் மறைவாக இருக்கும்படியான வீட்டிற்குள் வலிச்சல்மேல் மையம்பார்த்து ஒரு செஜ்ஜிகளம் சவுக்கமாக நாலுமூலையும் இரண்டுபலம் காந்தமெடுத்து நிற்கும்படியாக வலுவாகப் பொருந்தவைத்து, அதற்கு நேர் கீழாக இரும்புப்பலகை சன்னமாகவும் ஒரு ஆள் உட்காரத்தக்கதாகவும் போட்டுவிட்டு விடாமல் உடனே உட்கார்ந்துக்கொள்ளவும், ஆனால் உட்காருகிறவன் விபூதி ருத்திராட்சம் காஷாயம் பூண்டு யோகியைப்போல் இருக்கவேண்டும். அவன் கையைக்கெட்டியாக மூடிக்கொண்டு தம் பிடிக்கிறவன் போல் பூடகமாயிருந்தால்தான் பார்க்கிறவர்கள் வாயுஸ்தம்பனம் செய்கிறனென்பார்கள். மிகவும் மகிமையாக எண்ணுவார்கள். ஆனால் காந்தம் யாருக்கும் தெரியாமல் வைத்திருக்கவேண்டும்.

194. நினைத்தயிடத்திற்குப்போகும் சுயஜாலம்.

ஆலமரத்தின்கீழ் ஆலங்கன்று அகப்பட்டால் அதற்கு ஞாயிற்றுக் கிழமையதினம் மஞ்சள்நூல் காப்புகட்டிவிட்டு வந்துவிடவேண்டும். அடுத்த வெள்ளிக்கிழமையதினம் சென்று, ஒரு சிறிய குடுவையில் பொங்கலிட்டுப் பலிகொடுத்துத் தூபதீபங்கொடுத்து, வேர் அறுமல் பிடுங்கிவந்து தீட்டுப்படாமல் ஒரு இடத்தில் வைத்திருந்து, அடுத்த செவ்வாய்க்கிழமையில் தலைமுழுகி, வாசலெல்லாம்மெழுகி, பிள்ளையார்பிடித்து வைத்து அதன் சிரசில் அருகன் புல்குட்டித் தாம்பூலம் வெல்லம் பழம் வைத்து இந்தச் செடியும் வேரையும் எதிரில் வைத்துத் தூபதீபங் கொடுத்துத் தேங்காயுடைத்து வேரையெடுத்துப் பத்திரமாகத் தீட்டுப் படாமல் வைத்திருக்கவும். தினகாலம் ஸ்நானம்செய்து ஞாபகமாகப் பார்த்துக்கொண்டேயிருந்து நட்சத்திரம் விழும்போது வேரை எடுத்துக் கீழேபோட்டு வலதுகாலால் மிதித்துக்கொள்ளவும். செருப்புக்குள்ளே வைத்து தீட்டில்லாதிடத்திருக்கவும். ஊர்ப்பிரயாணம் போகும்போது போட்டு நடந்தால் பதின்காதமானாலும் அலுப்பில்லாமல் நடக்கலாம். எப்போதும் பத்திரமாய்க் காப்பாற்றவேண்டும். மந்திரமில்லை; தந்திரந்தான். செய்துபார்த்தால் தெரியும்; மனந்திருப்தியாகும்.

195. ஒருமணிக்குள் ஒருகாதம் நடக்கும் உற்சாக ஜாலம்.

நத்தைச்சூரி செடியைக் கண்டுபிடித்து செவ்வாய்க்கிழமையில் மஞ்சள்நூல் காப்பு கட்டித் தூபதீபங்கொடுத்துவிட்டு வந்துவிடவேண்டும். அடுத்த ஆதிவாரத்திற்சென்று பொங்கலிட்டு பலிகொடுத்துத் தூபதீபங் கொடுத்து, அச்செடிக்குக் காயம்படாமலும் வேர் அறுமலும் பிடுங்கிக் கொண்டு வந்து, சுத்தமான இடத்தில் வைத்திருந்து, அடுத்த வெள்ளிக் கிழமைதினம் ஸ்நானம் செய்து வாசலைமெழுகி பிள்ளையார் பிடித்து வைத்து, அதன் சிரசில் அருகன்புல் சூடி, வெற்றிலைப்பாக்கு வெல்லம் பழம் முதலானதும் படைத்துத் தேங்காயுடைத்துத் தூபதீபங்கொடுத்து சூடங்கொளுத்தி செடியையும் பிள்ளையார்முன் வைத்து மேற்சொன்னபடி ஒன்பது வெள்ளிக்கிழமை தூபங்கொடுத்து வேரையெடுத்துப் பத்திரமாக வைத்திருந்து, சந்திரகிராணத்தில் நட்சத்திரம் கீழே விழும்போது உஷாராய்ப் பார்த்துக்கொண்டேயிருந்து, இந்த வேரைக் காலில் போட்டுக்கொள்ளும்படியான போல்காப்பு செய்து அதில் வேரை அடைத்துப் பத்திரமாய் வைத்துக்கொள்ளவும். நடந்து பரீட்சிக்க வேண்டில் ஷை காப்பை இடது காலில் போட்டுக்கொண்டு செருப்பு மாட்டிக்கொண்டாவது சாதாரணமாகவாவது ஒருமணி நேரத்திற்குள் ஒருகாதம் நடக்கலாம். போகிற விசையும் கால்நோயும் இளைப்பாயாசமும் தெரியாது. ஆனால் பயமில்லாமல் பந்தயங்கட்டியும் நடக்கலாம்.

196. கோழிமுட்டையை ஜலத்திற்போட வெடிகிளம்பும் ஜாலம்.

ஒரு கோழிமுட்டையைக் கொண்டுவந்து, அதனுள்ளிருக்கும் வெள்ளை அம்பிலியாவையும் எடுத்துவிட்டு, அதில் நிறைய தாளிக்காத கற்சுண்ணாம்பு கெந்தகம் இவைகளை வெவ்வாராக சமமாய் நிறுத்து அரைத்து ஒருமிக்கச் சேர்த்து, முட்டைக்குள் செலுத்தி மெழுகால்

அதன் சிறிய வாயைமூடி தவலையிலாவது மண் குடத்திலாவது நிறைய ஜலம்விட்டு அதில் இந்த மூட்டையைப் போட்டுவைக்க வெடி சப்தம் கிளம்பும்; ஆச்சரியப்படுவார்கள். ஆனால் குளமுதலிய தண்ணீருள்ள இடத்திற் போடலாம்.

197. சகல விஷமும் நீக்க ஜாலம்.

எட்டிமரத்தில் விளாங்காய்ப் புகும்படியான துவாரம்செய்து அவ்வளவு பழம் புளியைக் கொட்டை கோது முதலானதையும் போக்கி மனம்போல் உள்ளேவைத்து அந்த எட்டிமரத்திலேயே அப்படித்து நாற்பதுநாள் சென்று எடுத்து எட்டிமரத்தினால் சிமிள்செய்து அதில் போட்டு வைத்துக்கொள்ளவும். தேள், நண்டுதுறக்காய், பூனை, எலி, பெருச்சாளி, வண்டு, ஓணான் பச்சோந்தி முதலானதுடன் இன்னம் எது வாகிலும், சாரை சற்பம் தவிர மற்ற எல்லா விஷத்திற்கும் மிளகுப் பிரமாணமெடுத்து வெற்றிலையில் மடித்துச்சொல்லாமற் கொடுக்கவும், பத்தியம் பச்சரிசியும் முருங்கையிலையும் போட்டுக் கஞ்சிகாய்ச்சிக் கொடுக்கவும்; உப்பு ஆகாது. கடும்பத்தியம் காலைமாலை இரண்டுவேளையும் மூன்று நாளைக்கு இருக்கவேண்டும்; விஷம் அற்றுப்போகும்.

198. பாம்புகடித்த பேருக்கு விஷமிறக்குஞ் ஜாலம்.

பாம்புகடித்தவருக்கு உடனே சன்னமாகியப் பானை ஓட்டால் அவர்கள் உச்சியில் மூன்றுகீறல்கீறி அதிலே தக்காளிச் சாரிபிழிந்து உள்ளங்கையினால் அறைந்துத் தேய்க்கத் தேய்க்க விஷங்கக்கி எழுந்திருப்பார்கள். ஜாதை காய்ச்சிக்கொடுக்கவும். இந்த மூலிகை இருளருக்கும் ஜோனகருக்கும் உயிருக்கு உயிரான மூலிகை. இன்னம் சிறுசெல்வி குப்பமேனியிலும் விஷம் நீங்கும். அவசியமாய் சிறியாணங்கை செடிமூலமும் உலர்த்திப் பொடிபண்ணி வைத்துக்கொண்டால் மூன்றுவிராகனிடை பிரமாணம் எடுத்து ஒரு வெற்றிலையில் வைத்துக் கொடுத்தாலும் சீக்கிரம் விஷமிறங்கும். இது கைமுறைதான்.

199. உலர்ந்துபோன இருலை ஜலத்தில் ஓடவிடும் ஜாலம்.

உலர்ந்த இறாவைக் கொண்டுவந்து பின்பு கிளுவையிலையைப் பறித்துவந்து உரலில்போட்டு இடித்துச் சாரிபிழிந்து கொஞ்சம் இருலை அதில் அள்ளிப்போட்டுப் பிசைந்துக் கிணறு அல்லது தாரலில் தாவிவிட்டு நின்றுபார்த்தால் உயிரோடிருக்கும்போது எப்படி வளைந்து வளைந்து ஓடுமோ அப்படிபோல் குருக்கு நெடுக்குமாய் ஓடும். சிலது கிரு கிருவென்று சுழலும் பார்த்தவர் பிரமிப்பார்கள்.

200. கேச்சக்காய் சோன்னபடி கேட்குஞ் ஜாலம்.

ஏறழிஞ்சி இறங்கழிஞ்சி என்னும் விதையைக் கொண்டுவந்து வெவ்வேறாகப் பொடித்து, துல்லிதமானச் சீலையில்வைத்து வெவ்வேறாகத் திரிசெய்து வைத்துக்கொள்ளவும். தலைமண்டை ஓட்டில் புங்கம் எண்ணெய்விட்டு மேற்படி திரி இரண்டிற்கும் ஐங்கோலத் தயிலம்பூசி ஒவ்வொரு திரியாகப் போட்டுக் கொளுத்தித் தயிலம்வாங்கி சிமிளில் வெவ்

வேறாக வைத்துக்கொள்ளவேண்டும். ஜாலமாடுமிடத்தில் ஆறடிக்கம்பம் நட்டுவிட்டு இரண்டு கெச்சக்காய் கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்தக்கெச்சக்காயை இந்தக் கம்பத்தின்மேல் ஒன்றுயிறங்கவும் ஒன்று ஏறவும் செய்கிறேன் பாரென்றுசொல்லி மேற்படி மையைத் தந்திரமாக ஒவ்வொரு காய்க்குத் தடவிவிடவேண்டும், ஆனால் ஏறழிஞ்சி தயிலம் தடவினக்காயும் இறங்கழிஞ்சித் தயிலம் தடவினக்காயும் அடையாளமிருக்கவேண்டும். இறங்கழிஞ்சிமை தடவினக் காயைக் கம்பத்தின் உச்சியில் வைத்து, ஏறழிஞ்சிதடவின காயை அடியில்வைத்து ஜாலக்கரனைப் பூசித்து, சல் ஏறென்று சொன்னால் மலே ஏறுங்குங்காய் கடகடவென்று ஏறிப்போய்க் கம்பத்தின்மேல் உட்காரும் சல் இறங்கென்று சொன்னால் கம்பத்தின் உச்சியிலுள்ளகாய் கடகடவென்று கீழேயிறங்கும்; பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். அவை எப்படி ஏறி இறங்குமென்றால் கம்பத்தைச் சுற்றிக்கொண்டே ஏறும் இறங்கும். அதுதான் ஆச்சரியம்; ஆனால் தலைமண்டை ஓடு இரண்டு இருக்கவேண்டும்.

201. மண்ணைக் கிள்ளிப்போட மலைகளாகத் தோற்றும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்துக் கொஞ்சம் மண்ணை அள்ளி அனைவருக்குங் காட்டி இந்த மண்ணை நாலுதிசையிலும் போடுகிறேன் பர்வதங்களாகத் தோற்றும் பாருங்களென்றுசொல்லி, நீலகண்டியைத் தியானித்து ஜாலக்காரனைப் பூசித்து, கையிலுள்ள மணலை நாலு திசையிலும் விட்டெறியவேண்டும். ஆனால் மண்ணைக் கையிலெடுக்கும் முன்னதாகவே இந்திர ஜாலமையைத் தந்திரமாகக் கையிற் பூசிக்கொள்ளவேண்டும். மணலை எறிந்தவுடன் நாலுதிசைகளிலும் மலையாகத் தோற்றும். அஷ்டகுலப் பர்வதங்கள், மகம்மேறு, கைலை, அகஸ்தியர் வாழும் பொதிகைமலை, இவைகளைப்போல் தோற்றும். அம்மலைகளில் தேவர்சித்தர்முத்தர்முனிவர் முதலானவர் வாழ்வதும்தோற்றும். விருட்சங்கள் நந்தவனங்கள் ஆசிரமங்களும் தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள்.

202. மண்ணை அள்ளி நான்குதிசையிலும்போட சப்தசமுத்திரமும் தோற்றும் ஜாலம்.

ஜாலமாடும் சபையிலன்று நீலகண்டியைத் தியானித்து ஜாலக்காரனைப் பூசித்து, மேற்படி இந்திர ஜாலமையைத் தந்திரமாகக் கையிற் பூசிக்கொண்டு பூமியிலுள்ள மண்ணை அள்ளி நான்கு திசையிலும் போட உடனே ஏழுசமுத்திரமும் தோற்றும். ஸ்ரீவாந்திநங்களும் திருமாலும் லட்சுமியும் தோற்றுவார்கள். அன்றியும் கப்பல், படகு, தோணி, நீரில் வாழும் பலவகையான மச்சங்களும் தோற்றும். அதை ஜெகத்தோர்கள் பார்த்து ஆச்சரியப்படுவதுடன் தேவனென்றும் சித்தனென்றும் கொண்டாடுவார்கள்.

203. நூல்கயிற்றைத் துண்டுதுண்டாக வெட்டி விழுங்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் கைபெரியவிரல் பருமனுள்ள நான்குமுழம் நூல்கயிற்றை எடுத்துச் சபையோர்களுக்குக் காட்டி இதைத் துண்டு துண்டாக வெட்டி விழுங்கிவிடுகிறேன் பாரென்றுசொல்லி கூருள்ளகத்

திலை வலதுகையிற் பிடித்து, நால்வயிற்றை ஒரு மரத்துண்டின்மேல் வைத்துத் துண்டு துண்டாகவெட்டிக் கும்பலாகவைத்து, நீலகண்டியைத் தியானித்து ஜாலக்காளைப் பூசித்து மேற்படி இந்திர ஜாலமையைத் தந்திரமாகக் கையிற்பூசிக்கொண்டு, ஒவ்வொருதுண்டாயெடுத்து வாயிற் போடுவதுபோல் பின்னுக்கு யிழுத்துக் கீழே போட்டுக்கொண்டே யிருக்கப் பார்ப்பவர்களுக்கு உள்ளுக்கு விழுங்குவதுபோல் இருக்கும்; ஆச்சரியப்படுவார்கள்.

204. புதிய பட்டணம் உண்டாக்கும் புதுமையான ஜாலம்.

தனக்கு இஷ்டமான பேர்களை இரவில் அழைத்துக்கொண்டு ஒரு வெட்டவெளியான மைதானத்திற்சென்று, கூட அழைத்துப்போனவர்களைப் பார்த்து, இந்த வெட்டவெளியான மைதானத்தை ஒரு பட்டணமாகச் செய்கிறேன் பாரென்று சொல்லி, நீலகண்டியைத் தியானித்து ஜாலக்காளைப் பூசித்து மேற்படி இந்திரஜாலமையைத் தந்திரமாகக் கையிற் பூசிக்கொண்டு மண்ணை அள்ளி, பட்டணமுண்டாக வேண்டுமென்று நாலுதிசையிலும்போட பட்டணமுண்டாகும். அப்பட்டணத்தில் தெருக்கள், கடைவீதி, ஜனக்கூட்டம், நீண்டகோபுரம், கோயில், திருக்குளம், வேதியர் வீதி, இராஜன் வாழும் அரண்மனை, சதுரங்கசேனை, பலவித தானியம் விளையும் நிலம், தோப்பு முதலானதும் தோற்றும். பார்ப்பவர்கள் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள். ஆனால் மூன்றேமுக்கால் நாழிகை வரைக்குந்தோற்றும், அதையறிந்து அதற்குள் சல் பட்டணமே மறைந்து போகக்கடவாயென்று சொல்லவேண்டும்.

205. மடியில்கட்டிய தேங்காயை உடைக்கும் ஜாலம்.

தேங்காயைச் சவுக்கத்தில் சுற்றி மடியில் கட்டிவிட்டு, இரண்டு கைகளையும் பின்புறமாய் மடித்து இரண்டு பெருவிரலையும் ஒன்றின்மேல் ஒன்றுவைத்துக் கட்டிவிடச்சொல்லி, ஒரு வீட்டிற்குள்சென்று கதவைச் சாற்றித் தாள்போடச் சொல்லினபிறகு, நீ உட்கார்ந்து பின்னாலிருக்கும் கைகளைப் புட்டத்தின் கீழாகக் கொடுத்து மெதுவாய்க் காலைமடித்து உள்ளேவிட்டு வாங்கினால் கட்டுப்பிரகாரமே கை முன்புறம் வந்துவிடும். தேங்காயையுடைத்துக் கட்டிக்கொண்டு முன்போல் காலின்கீழாகக் கையைக்கொடுத்து பின்னுக்கு வாங்கிக்கொண்டு கதவைத்தட்டித் திறக்கச்சொல்லி வெளியில் வந்தால் தேங்காயைப் பார்த்து ஆச்சரியப்பட்டு மந்திரஞ் செய்தானென்றே நம்புவார்கள். ஆனால் உள்ளேயிருக்கும் போது, மலையாளதேவி வாடி, சாமுண்டி ஓடிவா, என்று சொல்லிக் கொண்டே மேற்படி தேங்காயையுடைத்து வரவேண்டும்.

206. குளத்தில் முழுகி விபூதியிட்டுக்கொண்டுவரும் ஜாலம்.

கொடிக்கள்ளிப்பாலை விபூதிபோல் குழைத்து சிவயோகிபோல் தேகம் முழுவதும் கட்டுக்கட்டாகயிட்டு வெயிலில் நின்றால் உலர்ந்து பிறகு ஒன்றும் தெரியாது. அனைவருக்குங் காட்டிப் பிறகு ஒரு குடம் ஜலத்தைச் சிரசில் ஊற்றினால் உடனே பளிச்சென்று யோகியைப்போ லிருக்கும். பார்ப்பவர்களெல்லாரும் ஆச்சரியமாய்ப் பிரமிப்பார்கள். அன்றியும் குளத்தில் முழுகி வெளியில் வரலாம்.

207. குளத்தில் முழுகி விபூதியிடும் வேறுவித ஜாலம்.

காட்டாமணிப்பாலைக் காந்து விபூதியைப்போல் குழைத்து முன் போல் தேகமுழுது மிட்டுக்கொண்டு வெயிலில் காய்ந்தபிறகு பார்த்தால் ஒருவருக்கும் தெரியாமலிருக்கும். குளத்திலாவது கிணற்றிலாவது தூரவிலாவது முழுகி வெளியில்வந்தால் சிவயோகிபோலிருக்கும். பார்ப்பவர்கள் மதியயங்கி ஆச்சரியப்படுவார்கள்.

208. தீயில் குதிக்கும் ஜாலம்.

சங்கன்செடி புதரில் பூத்திருக்கும் காளைக்கொண்டுவந்து புதுப் பாண்டத்திற்போட்டு வெயிலில் வைத்தால் தயிலம்போல் உருகிவிடும். அதை யெடுத்து ஒரு யேனத்தில் பத்திரமாக வைத்துக்கொள்ளவும். ஜாலமாடுமிடத்தில் கட்டைகளைப் போட்டுக் கொளுத்தி அது திகுதிகு வென்று எரியும்போது சபையோர்களைப் பார்த்து, இந்தத்தீயில் குதிக்கின்றேன் பாரென்றுசொல்லி, ஆடையாபரணங்களைக் களைந்துவிட்டு எவ்வளவு தீயாயிருந்தபோதிலுங் குதிக்கலாம். ஆனால் மேற்படி தயிலத்தைத் தேகமாதியந்தமும் பாதத்திலும் முன்னதாகவே பூசிக்கொண்டிருக்கவேண்டும். பார்ப்பவர்கள் அக்கினியைக் கட்டிவிட்டானென்று ஆச்சரியப்படுவார்கள்.

209. மோடிவித்தை காட்டும் ஜாலம்,

ஜாலமாடும் சபைக்கு வருமுன்னே படிகாரத்தைச் சதுரமான கல்லின் மத்தியிலேவைத்து அனல்காட்டி, ரூபா, சவரன் அல்லது செம்பு காசியை அந்தப் படிகாரம் உருகும்போது நன்றாய் அழுத்தி ஒட்டிவைத்துக் கொள்ளவேண்டும். ஆனால் சுற்றிலுமிருக்கும் படிகாரத்தைப் பேனாகத்தியினால் சுத்தமாகச்சுரண்டி எடுத்துவிடவேண்டும். அதைக்கொண்டு வந்து மேஜையின்மேல்வைத்து சபையோர்களைப் பார்த்து, இந்தக் கல்லின்மேல் வைத்திருப்பதை யாராகிலும் எடுத்துவிட்டால் அவர்களுக்குப் பத்துரூபா கொடுக்கிறேனென்று சொல்லவும். அதை வந்து எடுத்துப்பார்த்து எடுக்கமுடியாமல் திகைப்பார்கள். அப்போது அவர்களைப் பார்த்து, நான் எடுக்கிறேன் பாருங்களென்று தந்திரமாக ஜலத்தில் கையைத் தோய்த்து எடுக்க கையோடு வந்துவிடும். கண்டோர்களெல்லாம் கலகலத்து ஆச்சரியப்படுவார்கள்.

210. கைகெடியாரம் சொன்னபடிக் கேட்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் நன்றாக டயம்போகும்படியான ஒரு கைகெடியாரத்தைக் கையிலெடுத்து, சபையோர்களுக்குக்காட்டி இதோ நன்றாக ஓடும் கெடியாரத்தை ஓடவொட்டாமல் செய்கிறேன் பாரென்றுசொல்லி காந்தத்தையாவது, காந்தக் கல்லையாவது, தந்திரமாகக் கையில் வைத்திருந்து கெடியாரத்தின் பின்புறத்தில் அணைத்துக் காட்டிப் போகுதா வென்று கேட்டால் போகவில்லையென்று சொல்வார்கள். உடனே காந்தத்தை யெடுத்துவிட்டுக் கேட்டால் டயம் போகுதென்று சொல்வார்கள். இது மகா மந்திரமென்று ஆச்சரியப்படுவார்கள்,

211. நெருப்பைக் கையில்வாரும் ஜாலம்.

ஜாலமாடும் சபைக்கு வருமுன்னே உத்தாமணிச் செடியின் வேரும் அதின் கொழுந்தையும் அம்மியில் வைத்து மைபோல் அரைத்துக் கையில் பூசிக்கொண்டு, சபையில்வந்து, கட்டையைக்கொளுத்தி, நெருப் பாக்கிய கட்டை நெருப்பைக் கொண்டுவரும்படி சொல்லி இரண்டு கையிலும் சேர்த்து வாரலாம். கைசுடாது; கண்டவர்கள் ஆச்சரியப் பட்டு காளியுடைய வசியமென்று கலங்குவார்கள்.

212. செக்கில் எண்ணெய் வாராமல் செய்யும் ஜாலம்.

நாயுருவிவேரைத் தூளாகச்செய்து செக்கு ஆடுகிறபோது அதில் போட்டுவிட்டால் எந்நேரம் ஆடினபோதிலும் எண்ணெய் வராது. அவையாவையு மெடுத்துவிட்டுச் செக்கைச் சுத்தப்படுத்தி வேறே என் னாவது இன்னம் எதாவது போட்டு ஆடினால் எப்போதும்போல் என் ணெய் வரும்.

213. சொம்பில் நிறைய ஜலத்தை ஊற்றி மெல்லிய சீலையை வாய்ப்புரத்தில் கட்டி கவிழ்த்தால் ஜலம் போகாதிருக்கும் ஜாலம்.

ஒரு சிறிய சொம்பிலாகிலும் அல்லது பெரிய சொம்பிலாகிலும் ஜலத்தை நிறையவிட்டு மெல்லிய துணியை வாய்ப்புரத்திலகட்டி, வலது உள்ளங்கையை அதின்மேல்வைத்துக் கெட்டியாக அழுத்தி மூடி சல் லடையாளப்கவதி தண்ணீரை நிறுத்தடி என்றுசொல்லித் தந்திரமாகக் கவிழ்க்க ஜலம் அப்படியே நின்றுவிடும்; ஆச்சரியப்படுவார்கள்.

214. ஒருவர்மேல் விஷமேற்றும் உன்னத ஜாலம்.

முருங்கமரத்தின் மீதிலிருக்கும் கம்பளிப்பூச்சி மயிரும், தம்மவி விரையும், வீட்டில் சமைக்கும் சட்டியின் அடியிலிருக்கும் கரியும், நல் லெண்ணெயும் சேர்த்து ஒன்றாய் மைபோல் அரைத்து வைத்துக் கொள்ளவும். ஜாலமாடுமிடத்தில் ஒருவனை அழைத்து, அவன்கையில் ஒரு கல்லைக்கொடுத்து டை மையைத் தந்திரமாக அவன்கையில் பூசிவிட் டால் அவன் உடனே பதைபதைத்துத் துடிதுடித்து விரைச்சலிடுவான், பார்ப்போர்கள் கல்லிலிருந்து விஷம் ஏறுகிறதென்று நம்புவார்கள். ஆனல் அவனை உடனே நல்ல ஜலத்தில் குளிந்துவிட்டு வரச்சொல்ல விஷம் இறங்கிவிடும்.

215. மணலைத் தின்னும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு சிறிய கூடைநிறைய ஆற்று மணலைக் கொண்டுவரும்படிச் சொல்லி சபையோர்களைப் பார்த்து, இந்தக் கூடை மணலையும் மென்று தின்றுவிடுகிறேன் பாரென்றுசொல்லி, நீலகண்டி யைத் தியானித்து, ஜாலக்காளைப்பூசித்து டை இந்திர ஜாலமையைத் தந்திரமாகக் கையிற் பூசிக்கொண்டு மணலைக் கையில்வாரி வாயில் போடுபவன்போல் பின்புறமாகக் கீழே போட்டுவிடவும். பார்ப்பவர்கள்

மணலை மென்றுத் தின்கிறானென்று நம்பி ஆச்சரியப்பட்டு அசந்து நிற்பார்கள்.

216. பட்டாக்கத்தியை விழுங்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் நல்ல பளபளப்பாயும் நன்றாய்க் கூராகச் சாணை பிடித்ததுமாக யிருக்கும் ஒரு பட்டாக்கத்தியை விழுங்கிவிடுகிறேன் பாரென்றுசொல்லி, நீலகண்டியைத் தியானித்து, ஜாலக்காளைப்பூசித்து டை இந்திரஜாலமையைத் தந்திரமாகக் கையிற் பூசிக்கொண்டு பட்டாக் கத்தியை யெடுத்து விழுங்குபவன்போல் வாயின்மேல் கையைவைத்து, கத்தியைப் பின்புரமாகப் போட்டுவிட்டால் பார்ப்பவர்கள் பட்டாக்கத் தியை விழுங்கிவிட்டானென்று பதரி ஆச்சரியப்படுவார்கள்.

217. கட்டப்பாறையை விழுங்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் நாலடி நீளமுள்ள ஒரு கட்டப்பாறையைக் கையில் எடுத்துச் சபையோர்களுக்குக் காட்டி, இந்தக் கட்டப் பாறையை விழுங்கிவிடுகிறேன் பாருங்களென்று சொல்லி, நீலகண்டி யைத் தியானித்து, ஜாலக்காளைப் பூசித்து டை இந்திர ஜாலமையைத் தந்திரமாகக் கையிற் பூசிக்கொண்டு கட்டப்பாறையை வாய்க்குச் சரி யாகவைத்து, கையையும் வாய்மேல்வைத்து, கட்டப்பாறையைப் பின் னுக்கு வாங்கிக் கீழே போடப் பார்ப்பவர்கள் கட்டப்பாறையை விழுங்கிவிட்டானென்று ஆச்சரியப்படுவார்கள். ஆனல் மையை உடனே துடைத்துவிட்டு, கக்குவதுபோல் கக்கி கட்டப்பாறையை முன்னே யெடுத்துப்போட பார்ப்பவர்கள் விழுங்கின கட்டப்பாறையைக் கக்கி விட்டானென்று பிரமித்து நிற்பார்கள்.

218. இரும்புகுண்டை விழுங்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் விளாங்காய்ப் பருமனுள்ள ஒரு இரும்பு குண்டை யெடுத்துச் சபையோர்களுக்குக் காட்டி, இந்தக் குண்டை விழுங்கிவிடுகிறேன் பாருங்களென்று சொல்லி, நீலகண்டியைத் தியா னித்து, ஜாலக்காளைப் பூசித்து மேற்படி மையைத் தந்திரமாகக் கையிற் பூசிக்கொண்டு குண்டையெடுத்து வாய்மேல் கையைவைத்துப் பின்புர மாகப் போட்டுவிடவேண்டும். பார்ப்பவர்களுக்குக் குண்டை விழுங்கி விட்டாற்போலிருக்கும். உடனே மையைத் துடைத்துவிட்டு குண்டை யெடுத்து முன்னேபோட விழுங்கின குண்டைக் கக்கிவிட்டானென்று ஆச்சரியப்பட்டு ஆனந்திப்பார்கள்.

219. சீலைத் திரைய வித்தை.

கழுதைப் புணரும்போது பார்த்திருந்து அதினுடைய வால்மயி ரைப் பிடுங்கிவந்து வைத்துக்கொண்டு கண்விடாத புற்றின்மேல் படர்ந்திருக்கும் செடியின் கொடியைப்பார்த்து, அந்தச்செடிக்குக் கிரா ணத்தில் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துத் தூபம்காட்டிக் கொடியைப் பிடுங்கிவந்து, அக்கொடியுடன் ரோமத்தையும் சேர்த்து கயிறுபோல் சுற்றி அதன்மேல் தங்கக்கம்பி வெள்ளிக்கம்பி சுற்றிவிட

வும். ஆனால் சற்றுமுன்னே கருவை யதின்மேல் பூசவேண்டும். ஜாலக் காளைப் பூசைசெய்து வளையத்தைப் பத்திரமாக வைத்துக்கொள்ளவும் அதை வலதுகையில் மாட்டி மேலுக்கு யேற்றச் சிலைத்திறையும், கீழுக்கு யிறக்க எப்போதும்போல் அமர்ந்துவிடும் ஆச்சரியப்படுவார்கள்.

220. எட்டி முளைவித்தை.

கெச்சக்காய், சீலை, சுடலையில் வேகும் சவத்தினிடத் தயிலம், ஐங் கோலத்தயிலம் இவைகளைக் கருக்கிக்கொண்டு அம்மியில்வைத்து மை போல் அரைத்தெடுத்து சிமிளில் வைத்துக்கொள்ளவும். பிறகு ஓம்-நம-யங்-வங்-சிங் சுவாகாவென்னும் மந்திரம் ஓதி மையைப் பூசையில்வைத்து மூன்றுகாலமும் காலமொன்றுக்கு லட்சம் உரு கொடுத்துவர சித்தி யாகும். பிறகு எட்டிக்கொம்பில் எட்டுமுளைகள் சீவி அதன்மேல் மேற் படி மையைத் தடவி மேற்சொன்ன மந்திரம் ஆயிரத்தெட்டோதி, பெருத்தப் பூசையாகப்போட்டு, பலி முதலானதுங்கொடுத்து முளைகளை யெடுத்துப் பத்திரமாக வைத்துக்கொள்ளவும்.

மேற்படி முளைகளில் ஒன்றைக் கொண்டுபோய் வர்த்தகஞ்செய்யும் கடைமுன்னேகிடாவக் கடைவிற்காது. செக்காடுமிடத்திற் கிடாவ என்னேரம் ஆடினாலும் எண்ணெய் வராது. சூளைமுன்கிடாவ சூளை வேகாது. கருமான் உலைமுன்கிடாவ இரும்புக் காயாது. சுண்ணாம்புச் சூளைமுன்கிடாவ சுண்ணாம்புக்கல் வேகாது கல்சூளை முன்கிடாவ கல் வேகாது. வண்ணான் அடுப்பின்முன் கிடாவ வெள்ளாவிவேகாது. நெற் களத்திலும் உப்புக்களத்திலுங் கிடாவ இராசிக்குறையும். மீனுள்ள குளம் கிணறு துறவு ஆறு மடுவு இதுகளில் கிடாவ வலையில் மீன் அகப் படாது. கொட்டணம் போடுமிடத்திற் கிடாவ நெல் மசியாது. முளை யைப் பிடுங்கிவிட மேற்சொன்னவைகளெல்லாம் , எப்போதும்போல் நடக்கும்.

221. வீட்டிற்போட்டுக் கதவைச் சாற்றிவிட வெளிவரும் ஜாலம்.

இரண்டு கால் பெருவிரல்களையும் இரண்டு கைப் பெருவிரல்களை யும் கட்டி மல்லாந்து படுத்துத் தன்மனதைப் பூரணத்தில் நிறுத்தி நாட் டத்திலிருக்க மனஞ்சொக்கி மவுனத்திலான்றிச் சுழுத்தியி லடங்கிவிடும். பின்பு தெளிந்தவுடன் இவ்விரண்டு கட்டுகளையும் அவிழ்த்துவிட்டு மறு வேலைப் பார்க்கவும். இப்படி சதா நடத்திவரப் பன்னிரண்டு வருஷத் திற்குள் சித்தியாகிவிடும். அதன்பின் எந்த வீட்டிலாகிலும் கருங்கல் கட்டடத்திற்குள்ளாகிலும் விட்டு பந்தோபஸ்து செய்தாலும் அவன் வெளிவரச் சுவர்கள் இடங்கொடுக்கும். அது ஒருவருக்குந் தெரியாது. இதைப் பரகாயப் பிரவேச மென்பார்கள். இப்படிச் செய்வோரைச் சித்தப் புருஷரென்றே சொல்வார்கள்.

222. ஓட்டமோடும் வித்தை.

விழுதியிலையை வாயில் போட்டுக் கொஞ்சம் தின்று கொஞ்சம் வாயிற்றாடையில் அடக்கி வைத்துக்கொண்டு, எந்தமட்டில் ஓடினாலும்

நடனமாம். இனைப்புகளைப்புகுன்றுமிராது. நிற்கவேண்டுமானால் ருமாரத் தெப்பிடித்து நிற்கவேண்டியது. ஒருகாலத்திற்குமேலும் நடனமாம்.

223. பாலைத் தயிராக்கும் வித்தை.

ஒருபடிப் பாலில் வாழைக்கிழங்கை ஈர்க்குத்தி இறுக்கி மந்திர ஜபஞ் செய்து அதில் அவரை ஆறுமாக்குப் போட்டுக் கலக்கத் தயிராகும். இன்னும் நாணற்புல்லை போட்டாலும் தயிராகும்.

224. பேயோட்டும் வித்தை.

பேயாடுவோரையாவது அல்லது மருளுள்ள எந்த மனிதரையாவது தலைமுழுகி வரச்சொல்லி, அவ்வீரத்தலையோடு உச்சியில் மருளுமத்தன் காய்த்தூளை ஆர்க்கப் பொடித்து அதிற் கொஞ்சம்போட்டு அறக்கித் தேய்த்துவிட ஆடுவது நின்றுவிடும். பின்பு செய்வதைச் செய்யவும்.

225. நெருப்பு வித்தை ஜாலம்

மணத்தக்காளிச்சாறு, தக்காளிச்சாறு, வசலைச்சாறு இம்மூன்றும் ஒன்றாய்க்கலந்து கைகளில் பூசி நெருப்பை யெடுக்கவும். அல்லது கால் களிற்பூசி நெருப்பை மிதிக்கவும் கைகால்கள் சுடாது; கொப்பளிக்காது. என்னேரம் விளையாடினாலும் விளையாடலாம்.

226. மீன்படும் வித்தை.

திருகுகள்ளியை முழுமுழுத் துண்டுகளாகத் தரித்து, ஏரி குளம் மடுக்களில் நான்கு பக்கத்திலும் அடர்த்தியாகப் போட்டு வைத்திருக்கச் சற்றுநேரத்திற்குள் அதிலிருக்கும் மீன்களெல்லாம் மிதந்துபோய்விடும். அதுகளில் ஒன்றேனும் தப்பிப் பிழைக்காது.

227. வெகுவிதம் சோறுவேகாத வித்தை.

வெண் சார்ந்திவேர், செஞ்சாவிதை, ஐங்கோலம் இவை மூன்றையும் சேர்த்து உலையிற்போட்டு அரிசிபோட சோறுவேகாது; இதற்கு மாற்று மில்லை.

228. மகா விநோத மோடி வித்தை.

சிதம்பரச் சக்கரத்தைக் கீறி, அட்சரமும் பீஜமு முதலானவும் அதில் அடைத்துப் பூசையில்வைத்து அருளாகும்படி ஓம் ஸ்ரீம் கிலியும் அவ்வும் மவ்வும் சிவ்வும் நமசிவாய சுவாகாவென்று மந்திரமோதி மூன்று கால மும் நாளொன்றுக்கு லட்சவுரு கொடுக்கவும், இப்படிக்குத் தவறாமல் நாற்பத்தொருநாள் ஓதி, சக்கரத்தை யெடுத்து வைத்துக்கொள்ளவும். மோடிவித்தை செய்யவேண்டில் கோவில் முன்பாகிலும் குளத்தின்முன் பாகிலும் அம்பலமகையிருக்கும் தெருவிலேனும் ஆடவேண்டும். ஆடுவதற் குக் குருவினுடைய பாதத்தை முன்வணங்கிப் பின் பெரியோர்களின் பதம்வணங்கி, சித்தர் முத்தர் முனிவர் முதலானவரைத் துதித்து நிற்க, ராட்சதர் வவல் வைப்பு எதிரில் மிருகம் முதலான ஜாதிகள்

சொடிய விஷக்கள் இவை முதலானதும் எதிர்வில்லாது; ஏவல் செய்யும்படியான சித்தியாகும். சித்தியானவுடன் வாளும் செக்குலக்கையும் காட்டி, உலக்கை முன்பு தேங்காய் ஒன்றுவைத்து, அதன் முன்பு பாதரட்சை வைத்து, அதற்கு முன்பு குறடாவைத்து; அதற்குமுன்பு வாழைமரத்தை நாட்டிப் பந்தற்போட்டுப் பூமாலைசூட்டி, மாவிலை தோரணங் கட்டிப் பெருத்தப் பூசைபோட்டுப் பலிகொடுத்து, எட்டிமுளை மைபூசி அஷ்டசித்திரியில் அடைத்து, கோடியேழுகிரி காளியுடதியானம் ஓதி மூடியந்திரையை எடுக்கச்சொல்லிப் பின் மோடி யெடுக்கும்படிசெய்யவும்.

எதிரியானவன் மோடியெடுக்க வரும்போது; கக்கு கக்கு காளி தூர்க்கி அரி உம் ஐம் என்றுசொல்லிக் கண்கட்டுமையைக் கையிற்றடவி, வெற்றிலையை முறுக்கிப்போட்டு அள்ளி யெதிரியின்மேல் போட, அது தேளாகிக் கொட்டும். அவன் பதைபதைத்து மயங்குவான். அப்போது நீ ரங்ரங் சூலி என்று சொல்ல அவனுடைய தேகமாதியந்தமும் வெறித்து ஓடி விழுந்து அழுவான். மறுபடியுமவன் வருவானாகில் அப்போது நீ வறி வறி மறி சண்டாளி அம் அம் என்று சொல்லி விபூதியைக் கையிலெடுத்துத் தியானமோதி எதிரிமேல் போட உருண்டு விழுகுவான். பின்பு ஓம் படு சுவாகா என்று விபூதியை அள்ளி எதிரிமேல்போட அவன் கீழேவிழுந்து கோபிப்பான். அம் அம் நீம் ஓம் என்றுசொல்லி வேப்பிலையும் மண்ணும் விபூதியுமெடுத்துத் தியானித்து அவன்மேல் போட்டவுடன் பூமியில் விழுந்துக் கையுங் காலும் உதைத்துக்கொள்வான்; வாயில் உதிரங் கக்குவான். அப்போது குறடாவும் தேங்காயும் உலக்கையும் இதுகளெல்லாம் கூட்டமாக யெழுந்து அவனை அடிக்கும்; வாளானது எழும்பி வெட்டும். ஆனால் காளியைத் தியானஞ்செய்ய மேற்சொன்ன ஆயுதங்களெல்லாம் எழுந்து அடிக்கும்; உன்னை எதிரி வெல்லமாட்டான்; நீ வைத்த மோடியு மெடுக்கமாட்டான்.

229. மஞ்சளைத் தண்ணீரில்கரைத்து மறுபடியும் எடுக்கும் ஜாலம்.

நீர்முள்ளி விரையைக் கொண்டுவந்து பொடித்து வஸ்திரகாயஞ் செய்து விபூதியில் கலந்து வைத்துக்கொள்ளவும். பின்பு ஜாலமாடுமிடத்தில் ஒரு போகணியில் தண்ணீர் வார்த்து முன்னே வைத்து, அரைத்த மஞ்சளுருண்டையை நீரில் கலக்கி மறுபடியும் எடுக்கிறேன் பாருங்களென்றுசொல்லி, சல் மலையாள பகவதி ஓடிவா ஓடிவா, கரைந்த மஞ்சளைக் கொண்டுவா என்று சொல்லிக்கொண்டே மேற்படி விபூதியைப்போட்டுக் கலக்கி வடித்தால் உருண்டையாய் வந்துவிடும். பார்த்தபேர்களெல்லாம் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

230. தண்ணீரில் மணலைக் கலக்கி உதிரிமண் எடுக்கும் ஜாலம்.

வெள்ளாம்பிசினியைக் கொண்டுவந்து தண்ணீரில் கரைத்து, ஆற்றுமணலில் பிசிறி உலரவைத்து உதிரியாக்கி வைத்துக்கொள்ளவும். ஜாலமாடுமிடத்தில் ஒரு போகணியில் தண்ணீர் கொண்டுவரும்படியாகச் செய்து மேற்படி மண்ணை சபையோர்களுக்குக் காட்டி, இந்த மண்ணை இந்த ஜலத்திற் போட்டுக் கலக்கி மறுபடியும் உதிரிமண்ணாகவே யெடுக்

கிறேன் பாரென்றுசொல்லி, அந்த மணலைத் தண்ணீரில் போட்டுக் கை போட்டு வாரினால் காய்ந்த மணலாகவே யிருக்கும். அதை எடுத்து அனைவருக்குங் காட்ட ஆச்சரியப்படுவார்கள்.

231. தண்ணீரில் பாணவேடிக்கை காட்டும் ஜாலம்.

ஒரு கோப்பையில் தண்ணீர்வார்த்து அனைவருக்குங் காட்டி, பாஸ்பரையிட்டு ஆப்லயின் என்று சொல்லும்படியான மருந்தைக் கொஞ்சம் தண்ணீரில் போட்டால் பொதைபாணம்போல் கிளம்பும். இது சில கனவான்கள் கைமுறையாகச்செய்த ஜாலம்; ஆனால் இது மருந்து ஷாப்பில் கிடைக்கும்.

232. ஒருவர்மீது விஷத்தையேற்றும் விநோத ஜாலம்.

பூனைக்காஞ்சி யிலையின்மேலிருக்கும் சொணையும், அதன் காயின் மேலிருக்கும் சொணையும், பூனைபுடுக்குக்காயின்மேலிருக்கும் சொணையும், வெண்டைக்காய் மேலிருக்கும் சொணையும் ஆகிய இந்த நான்கு தினுசும் சேர்த்து ஒருடப்பியில் வைத்துக்கொண்டு, யாதாமொருவர்மேல் விஷம் ஏற்றும்போது தந்திரமாக விரலில் அந்த சொணையைத் தொட்டுக் கொண்டு மண்ணைக்கிள்ளிப் பூசினால் விஷம்போல் ஏறும்.

233. காயிதத்தின்மீது விசித்திரம் எழுதி இரவு இருட்டில் காட்டும் ஜாலம்.

திமிரிபாஷாணத்தை ஸ்டீலில் குத்திக்கொண்டு வெள்ளைகடிதாசியின்மேல் தன்மனதிற் கிசைந்ததை யெழுதி, இரவில் இருட்டில் காட்டினால் பிரகாசமாக எழுத்துக்கள் தோன்றும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் அந்தப் பாஷாணத்தைத் தண்ணீரிற் போட்டு வைக்கவேண்டும்.

234. ஆற்றுமணலை அரிசிபோல் மெல்லும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திற்கு வருமுன்னமே குண்டுமணி இலையைமென்றுத் தாடையில் அடக்கிக்கொள்ளவும். ஒரு முச்சலில் ஆற்றுமணலைக் கொண்டுவந்து சபையோர்களைப்பார்த்து, இந்த முச்சலிலிருக்கும் ஆற்றுமணலையெல்லாம் மெல்லுகிறேன் பாரென்றுசொல்லி மணலையெடுத்து வாயில்போட்டு மெல்ல ஆச்சரியப்படுவார்கள். எவ்வளவானாலும் சலிப்பில்லாமல் மெல்லலாம்.

235. இரும்பு சங்கிலியைப் பழுக்கக்காய்ச்சி கையாலுருவும் ஜாலம்.

ஜாலமாடும் சபைக்கு வருமுன்னமே கத்தாழை மடல் கொண்டுவந்து, அதன் சோற்றையெடுத்துப் பில்லை பில்லையாக அறுத்து விளக்கெண்ணெயில் போட்டு வைத்துக்கொள்ளவும். சபையில் சங்கிலியை நன்றாய்க் காயவைத்துக் கம்பிமாட்டி யிடதுகையில் தூக்கிச் சபையோரைப்பார்த்து, இந்த சங்கிலியை உருவுகிறேன் பாரென்றுசொல்லி, இடதுகையைத்தூக்கி வலதுகையில் கத்தாழைமடலோடு யெண்ணையை

வாரி உருவினால் சங்கிலி குப்பென்றெரியும்; கை சுடாது. ஆனால் தந்திரமாக உருகவேண்டும்.

236. ஜலத்தைக்கட்டும் ஜாலம்.

குயவனிடத்திற் சென்று ஒரு பச்சைத்தோண்டியை வாங்கிக்கொண்டு வந்து, அத்தோண்டியின் உள்ளுக்கெல்லாம் மருவிலிம்பழத்தைப் பிசைந்து மூன்றுதரம்பூசிக் காய்ந்தபிறகு தண்ணீரை நிறைய விட்டு உக்கம்போட்டு மேலே தூக்கிக் கட்டினபிறகு, ஓட்டையெல்லாந் தட்டிவிட்டால் ஜலம் அந்தரமாக நிற்கும் பார்ப்போர் ஆச்சரியப்படுவார்கள்.

237. ஜலத்தை அல்வாசெய்யும் அற்புத ஜாலம்.

ஜாலமாடும் சபைக்கு வருமுன்னே கட்டுக்கொடியென்ற மூலிகையைக் கொண்டுவந்து தூண்டு துண்டாக துண்டித்து வைத்துக் கொள்ளவும். சபைக்கு வந்தவுடன் ஒரு குடத்தில் நல்லஜலம் கொண்டுவரும்படிச் சொல்லி, சபையோர்களுக்குக் காட்டி, இந்த ஜலத்தை அல்வா செய்கிறேன் பாரென்றுசொல்லி, மேற்படி மூலிகையைத் தந்திரமாக அதிற் போட்டுக் கொஞ்சம் சர்க்கரையுங்கூடப் போட்டுக்கலக்கி மூடிவைத்து, சல் மலையாளபகவதி! இந்தத் தண்ணீரை அல்வா செய்யடி என்று சொல். சற்றுநேரம்பொருத்துத் திறந்துபார்க்க அல்வாப்போல் பக்குவமாகக் கட்டிவிடும். பார்ப்போர்கள் ஆச்சரியப்படுவார்கள். அதைக் கத்தியினால் அறுத்து அனைவருக்குங் கொடுக்கலாம். இதைச் சாதாரணமாய்ச் செய்து தின்றாலும் தாதுவிர்த்தியாகும். அன்றியும் சிறு கட்டுக்கொடி இலைச்சாறையும் கசக்கிப் பிழியலாம்.

238. சில்லிக்குடத்தில் தண்ணீர் நிற்கும் ஜாலம்.

ஒரு குடத்தை எழுத்தாணியால் சில்லிகள் செய்து, துத்தியிலையையும் கருவிலியிலையையும் அதின் பழத்தையுஞ்சேர்த்து ஒன்றும் இரண்டுமாக அரைத்துக் குடத்திலுள்ளே பூசி, சற்றுநேரம் பொருத்துக் குடத்தில் ஜலம்வார்த்துத் தூக்கினால் ஒரு தாரையுஞ் சிந்தாது. ஆச்சரியப்படுவார்கள்.

239. நெருப்பில்லாமல் வஸ்திரங்கொளுத்தும் ஜாலம்.

திமிர் பாஷாணமென்பதைப் பயறளவு எடுத்துக்கொண்டு கையை எல்லாருக்குங் காட்டிவிட்டுப் பஞ்சியாவது வஸ்திரமாவது தேங்காய் நாருவது எடுத்துப் பந்துபோல் சுருட்டிக் காற்றுவாட்டமாக நின்று, மேற்படி பாஷாணத்தை அதில் நுழைத்து ஊதினால் குபீலென்றெரியும் ஆச்சரியப்படுவார்கள்.

240. வாயில் நெருப்புக் கக்கும் ஜாலம்.

ஒரு சிறுபயறளவு திமிர் பாஷாணத்தை உதட்டில் வைத்துக்கொண்டு பஞ்சைப்பந்துபோல் சுருட்டி வாயில் கவ்விக்கொண்டு காற்று

வீசும் வாடையாக நின்று ஊதினால் குபீலென்று பற்றியெரியும். அனைவருக்கும் அது ஆச்சரியமாக யிருக்கும்.

241. கோழிமுட்டைப் பறக்கும் ஜாலம்.

ஒரு கோழிமுட்டை வாங்கி அதில் சிறிய துவாரஞ்செய்து பாதி அம்பிலியை ஊற்றிவிட்டு அதற்குப் பதில் சீமைகாடியை ஊற்றி, ஊசிகாந்தம் கொஞ்சம் சேர்த்து, அதின் துளையைக் காயிதத்தால் ஒட்டி வெயிலில் வைத்தால் சூடேறின பிறகு கிழேநிற்காது. ஆச்சரியப்படுவார்கள்.

242. சாம்பிராணி புகைபோடச் சகலரும் ஆடும் ஜாலம்.

கெச்சைக்காயுடன் ஐங்கோலம் சேர்த்து, சாம்பிராணித் தைலம் அதனுடன் கூட்டிப் பூசையில்வைத்து, ந-ம-சி-வ-ய-ஓம் கிலியும் சவ்வும் ஐயும் சர்வபாசா சர்க்குரு விஷ்ணு என்று மந்திரம் ஜபித்து மூன்று வேளையும் லட்சம் உருவுகொடுத்து வரவேண்டியது. ஆனால் இருபத்தோர்நாள் கொடுக்கவேண்டும். பின்பு அதையெடுத்து வைத்துக்கொண்டு, ஜாலமாடும் சபையில் சாம்பிராணி தூபம்போடுவதுபோல் போட, இந்தப் புகைபட்டப்பேர்களெல்லாம் வெறிகொண்டவர்போல் ஆடுவார்கள்; ஆச்சரியமாகயிருக்கும்.

243. ஒருமனிதனைத் தொட்டால் தொட்ட விடமெல்லாம் பத்தல் பத்தலாகப் பிளக்கும் ஜாலம்.

குறளி வசியமாகும்படியாகத் தியானம் செய்யும் விதம் எவ்விதமெனில், ஓம் அவ்வும் உவ்வும் மவ்வும் ஸ்ரீம் இரீம் கிலியும் வயநமசி குறளி வாவா, நீ நான் சொன்னதெல்லாம் செய்யவாயென்று இந்திரஜால மையையெடுத்துப பூசையில்வைத்து இருபத்தோருநாளும் இரண்டு வேளையுந்தவறுமல் லட்ச உருவு ஓதி, பலிபூசை நடத்தி, மையையெடுத்து வைத்துக்கொள்ளவும். பின்பு அந்தமையைக்கொஞ்சம் விரலில்தொட்டு குறளியைத்தியானித்து ஒருவர்மேல் தடவிய விடமெல்லாம் பத்தல் பத்தலாசப் பிளந்தாற்போல் தோற்றும். அனைவரும் பிரமிப்பார்கள். ஆனால் மூன்றேமுக்கால் நாழிகைக்குள் மறைந்துபோகும்.

244. வயிற்றைக்கீரிக் குடலையெடுத்துக்காட்டும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு சூரிகத்தியைக் கையிலெடுத்துச் சபையோரைப் பார்த்து, இதோ என்வயிற்றைக் கீரிக் குடலையெடுத்துக் காட்டுகிறேன்பாரென்று சொல்லி, குறளியைத்தியானித்து, அம்மணி! இப்போது பார்ப்பவர்களுக்கு வயிற்றைக் கீறினப்போலும் குடல்வெளியே வந்தாற்போலும் தோற்றும்படிச் செய்வாயென்று சொல்லி, மேற்படி இந்திரஜாலமை விரலில்தொட்டுத் தந்திரமாக கத்தியோடு வயிற்றில் கோடாகத்தடவிக்கொள்ள, அப்போது பார்ப்பவர்களுக்கு வயிறு கிழிந்தாற்போலும் குடல் வெளியில் வந்தாற்போலும் தோற்றும் ஆச்சரியப்

படுவார்கள். சிலர் இதைப்பார்த்துப் பிரமித்துக் கண்ணை மூடிக்கொள்வார்கள். சிலர் பார்க்கப்பொறாதென்று அப்பால் ஓடிப்போவார்கள்.

245. மல்லிகைமொக்கு அழைப்பிக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு பூக்கூடையை யெடுத்து சபையோர்களுக்குக் காட்டி, இந்தப் பூக்கூடை நிறைய மல்லிகைமொக்கு அழைப்பிக்கிறேன் பாருங்களென்று சொல்லி குறளியைத் தியானித்து, அம்மணி! இந்தப் பூக்கூடைநிறைய மல்லிகை மொக்கு வரவேண்டுமென்று சொல்லி அந்தப் பூக்கூடையின்மீது துணியைப்போட்டு மூடி, இந்திரஜாலமையைத் தொட்டுத் தந்திரமாக பூக்கூடையில் தடவிவிட்டு சற்றுநேரம் பொறுத்துத் துணியைத் திறந்து காட்ட, பூக்கூடை நிறைய பூவிருக்கும். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள், உடனே துணியைப்போட்டு மறைத்து விட வேண்டும்.

246. ஒன்பது வகை கனிவர்க்கங்கள் அழைப்பிக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் எவ்வகைக் கூடையாயினும் ஒன்பது கூடையெடுத்து அனைவருக்கும் காட்டி, ஒவ்வொரு கூடையில் ஒவ்வொரு கனிவர்க்கங்கள் அழைப்பிக்கிறேன் பாரென்று சொல்லிக் குறளியைத் தியானித்து, அம்மணி! மாங்கனித் தேங்கனி பலாக்கனி வாழைக்கனி அத்திக்கனி மாதுளங்கனி கிச்சிலிக்கனி அன்னாசிக்கனி கொய்யாக்கனி இந்த ஒன்பது கூடையில் கொண்டுவரவேண்டுமென்று சொல்லிக் கூடைகள்மீது துணிபோட்டு மூடி, இந்திர ஜாலமையைத் தந்திரமாக விரலில் போட்டு ஒன்பது கூடைக்குத் தடவி, குறளிமந்திரம் ஆயிரத்தெட்டோதி பிறகு துணியைத் திறந்துகாட்ட மேற்கூறிய கனிகளெல்லாம் புஷ்கலமாகக் கூடைநிறையவிருக்கும். பார்ப்போரனைவரும் ஆச்சரியப்படுவார்கள். உடனே துணியைப்போட்டு மறைத்துவிட மாயமாக மறைந்து போய்விடும்.

247. மனிதனுடையகாது யானைக்காதைப்போலாடும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில்வந்துநின்று சபையோர்களைப்பார்த்து, இதோ உனது இரண்டுகாதையும் யானைக்காதைப் போலாகச்செய்து ஆடும்படி செய்கிறேன் பாரென்று சொல்லி, குறளிமந்திரத்தை ஆயிரத்தெட்டோதித் தியானித்து, இந்திர ஜாலமையை விரலில்தொட்டுத் தந்திரமாகஇரண்டுகாதிலும் தடவிக்கொள்ள யானைக்காதைப்போலாகி ஆடும்; ஆச்சரியப்படுவார்கள். உடனே துணிபோட்டு மூடித்திறக்க எப்போதும் போலாகிவிடும்.

248. மீன் பிடிக்கும் வித்தை.

இருகுகள்ளித் தண்டைத் துண்டுதுண்டாக வெட்டி, குளங்கிணறு தாவுமடுவுமுதலானயிடங்களில் நெருங்கப்போட்டு, சற்றுநேரங்கழித்து கின்லிம் சரி அல்லது பேன் கொட்டையை வறுத்து, அதற்குச் சரியிடையாய்ப் பச்சையாக வரித்த இராவைவைத்து அரைத்து, மேற்படி யிடங்களில் தூவினாலும் வேண்டியவரையில் மீனைப் பிடித்துக்கொள்ளலாம்.

249. கையில் பந்தமேற்றும் ஜாலம்.

கற்றாழை மடல்சோற்றைப் பில்லைபில்லையாக அறுத்து உள்ளங்கையில் வைத்து மேலே சல்லாத்துணியைமூடி எண்ணெய்ப்பந்தம் கொளுத்திவைத்து எற்றினால் பந்தம் பிரகாசமாக யெரியும்; கைசுடாது; சல்லாத்துணியும் வேகாது; அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

250. ஒருகுடம் நீரைக்குடிக்கும் ஜாலம்.

சிறுபூளை யென்றவேரும் குப்பைமேனிவேரும் வாயில்போட்டு மென்று அடக்கிக்கொண்டால் ஒருகுடம் தண்ணீரையும் குடிக்கலாம். அந்தக் குடத்தையும் தின்றுவிட வேண்டுமென்றாலுந் தின்றுவிடலாம்.

251. வேறுமுறை சங்கிலியுருவும் ஜாலம்.

பசளைதவனை செய்யும் வெங்காயச்சாறும் கத்தாழைச்சாறும் வெந்தியமும் உப்பும் விளக்கெண்ணெயில் கரைத்து வைத்துக்கொள்ளவும். பிறகு நெருப்பில் காய்ந்த சங்கிலியைக் கம்பிமாட்டி இடதுகையில்தூக்கி வலதுகையில் மேற்படி யெண்ணெயை வாரி உருவினால் குப்பென்று எரியும்; வலதுகைவேகாது.

252. முள்ளின் மேல் நடக்கும் ஜாலம்.

தரிலைத் தாமரையின் வேரும், செம்பு நெருஞ்சிவேரும் கொண்டுவந்து அதைத் தலைமாற்றிச் செம்புக்குழாயிற்போட்டுக் குளிசமாடி வாயில்போட்டுக்கொண்டு, எவ்வித முள்ளின் பேரிலாகிலும் ஐயமின்றி நடக்கலாம். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

253. கோழிச்சண்டை ஜாலம்.

எத்தைச் செய்தாலுங் கேட்குமென்கிற ரத்தைச்சூரிவேருடன் சமூலமுங் கொண்டுவந்து நீரில்போட்டு ஒருமாதம் சென்று யெடுத்து சண்டைசாவலுக்குக் கொடுத்துக் கத்திகட்டிவிட்டாலுந் தோற்காது. எதிரிசாவலுடைய கத்திபட்டாலும் அறுபடாது. ஆனால் ரத்தைச்சூரியைத் தனியாயாவது ஆகாரங்களோடாவது உள்ளுக்குச் செலுத்தவும்.

254. ஆடுகளைக் கைத்தட்டி அழைக்க பின்னால் வரும் ஜாலம்.

கோவைச்செடியின் வடக்கே போகும்வேர் கொஞ்சமும், அதன் இலைகொஞ்சமும் கொண்டுவந்து, சிறுநீர்விட்டு நன்றாய் அரைத்து, இரண்டு கைகளிலும் முன்னும் பின்னும் தடவிக்கொண்டு ஆடிருக்கும் இடத்திற்போய்க் கைதட்டினால் ஆடெல்லாம் பின்னால் தொடர்ந்து வரும்.

255. படுத்தஆடு எழுந்திராத ஜாலம்.

தேவாங்கைக் கொண்டுவந்து உயிரைபோக்கித் தோலையுரித்து ஆடிருக்குமிடத்தில் கொண்டுபோய்ப் புதைத்தால் படுத்திருக்கும் ஆடு

கள் எழுந்திராது. அந்தத் தோலைத் தோண்டியெடுத்தால்தான் எழுந்திருக்கும்.

256. மிதியடி ஜாலம்.

விளாம்பிசினியைத் தூளாய்ச்செய்து விபூதியில் மிச்சமாய்ப் போட்டுக் கலந்துவைத்துக்கொண்டு குமிழில்லாத வெரும் பலகையாயுள்ள மிதியடியைக் கழுவிவைத்து, இரண்டு காலும் அலம்பி, இந்த விபூதியைப் பலகைமேல் தூவி ஏறி நடக்கலாம். இது சிலர் செய்தே யிருப்பார்கள்.

257. பசியில்லாதிருக்கும் ஜாலம்.

நாயுருவி விரையைக்கொண்டுவந்து அரைத்துப் பசும்பாலைவிட்டுக் கூழாக்கிச் சாப்பிட அன்ன ஆகாரமில்லாமல் இருக்கலாம். ஆனாலிது சிவயோகிகளுக்குத் தகும். மற்றவர்களுக்குத் தேகம் க்ஷீணமாம்.

258. இரும்பை ஒடிக்கும் ஜாலம்.

ஒரு சிறிய இரும்பு கம்பியை வாழைமரத்தடியில் நடுவாகச்சொருகி வைத்து மூன்றுநாள் சென்று யெடுத்துவந்து ஒடித்தால் பளபளவென்று ஒடிந்துவிடும்.

259. சுண்ணாம்பு தின்னும் ஜாலம்.

சங்கம் விரையைக் கொஞ்சம் வாயில்போட்டு கசகசவென்று மென்று, பின்பு சுண்ணாம்பைத் தின்னலாம். உள்ளுக்கு விழுங்கக் கூடாது. அதிகமாய் மென்றுவிட்டால் மாற்றுண்டு. அதாவது வாய் வெந்தால் உடனே மஞ்சளை வாயிலிட்டுக் கசகசவென்று மென்றால் காரந்தொலையும். தேங்காய் பில்லைதின்பதும் உண்டு.

260. வாட்டிலோட்டைக் கடிக்கும் ஜாலம்.

வேலே வேறை வாயிலிட்டுமென்று அடக்கி வாட்டிலோடு பீங்கானோடு இவைகளில் யேதேனும் ஒன்றைப் போட்டுக்கடிக்கலாம். அரிசி போல் மாவாகிவிடும்; வாயை அறுக்காது.

261. வேறுமுறை வாட்டிலோடு மெல்லும் ஜாலம்.

காரமென்பது அக்ராகாரத்தை ஒரு சிறிய துண்டு வாயில்போட்டு நன்றாய்க் கசகசவென்று மென்று தாடையில் அடக்கிக்கொண்டு வாட்டிலோட்டைமென்றால் அரிசிபோல் மசிந்து நீராகிவிடும். வாயை அறுக்காது. ஆனால் உள்ளுக்கு விழுங்கக்கூடாது. ஜாக்கிரதையாய் மெல்லவேண்டும்.

262. தண்ணீர் நிற்கும் ஜாலம்.

மயிரோசனையும், கார்கறைந்தவேரும், கோரைக்கிழங்கும், அரசன் மரத்து வேரும் சமஎடையாக யெடுத்து அரைத்து குடத்திற்குள் பூசி, ஜலத்தைமொண்டு சபையில்வந்து கீழ்மேலாய்க் கவிழ்த்துக்காட்டினால் துளி ஜலங்கூடக் கீழேவிழாது; அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

263. ஆடு மேயாத ஜாலம்.

மூஞ்சூறைப் பிடித்துவந்து ஓடுகிற தண்ணீரில் விட்டால் எதிர் நோக்கி யோடும். அப்போது கத்தியினால் ஒரே வெட்டாக வெட்டித் தலைப்புறத்தை மாத்திரம் எடுத்துவந்து ஆடிருக்குமிடத்தில் புதைத்து விட்டால் மறுபடியும் எழுந்து தழைமேயப் போகாது. புதைத்ததை யெடுத்தால் மாத்திரம் மேயப்போகும்.

264. விளக்குப் பார்க்கும் ஒருவித ஜாலம்.

மயிலிறகு நீட்டமாயுள்ளதை ஒன்று கொண்டுவந்து, அதின்கீழ் துவாரமாக ஒருகளஞ்சியம் விட்டுக் களிமண்ணால் மூடிப்பிறகு தெரியாமல் சல்வாகக்கதையால் முழுதிலும்சுற்றி விளக்கெண்ணெயில் தோய்த்து ஒரு பக்கமாகக் கொளுத்திப் பார்க்க ஏதேதோ புதுமைகளெல்லாந் தோன்றும்; ஆச்சரியமாக விருக்கும்.

265. வாயினில் அக்கினி உண்டாகும் ஜாலம்.

தம்பலமெனும் பூச்சியை நிழலில் காயவைத்து அதற்குச் சமமாய் வெள்ளைக்கல்லைப் பொடி செய்து இரண்டும் ஒரிடையாகக் கலந்து கொண்டு தாடையில் இருகடிகை பிரமாணம் தந்திரமாக அடக்கி வைத்துக்கொண்டு சபையில்வந்து நின்று, வேடிக்கைப்பார்ப்போர்களைப் பார்த்து, இதோவாயில் நெருப்புகக்குகிறேன் பாருங்களென்று வாயைத் திறந்தக்க நெருப்பு குபீல் குபீலென்றுவரும்; பார்ப்பவர் ஆச்சரியப்படுவார்கள்.

266. வழக்கு வெல்லும் வித்தை.

செருஞ்சியின் வேர், மயில் ரோசனை இரண்டையும் சேகரித்து வாசலில் வைத்துக் கணேசனைப் பூசைசெய்து, குலதெய்வத்தையும் நினைத்து அதை எடுத்து வாயிலடக்கிக்கொண்டு எதிரியின்முகம் நோக்கியிருக்க அவன்மொழி பிதறுவான்.

267. வலையில் மீன்படாத் ஜாலம்.

செருப்படைச்சாறு அதோடுகூட பெருங்காயம் கரைந்து, செம்படவர் காயவைத்திருக்கும் வலைகளின்மீது விசிறிஊற்றிவிட்டால் அந்த வலையில் மீன்படாது. மறுபடியும் உமிமண்போட்டு ஊறவைத்து வேககாய்ச்சி கொடுத்துத் தோய்த்துக் காயவைத்தால்தான் மீன்கள்படும். இந்த வேலைசெய்தால் பிழைப்புக்கு இடையூறாகையால் தோஷமென்பார்கள்.

268. வேறுமுறை வாட்டிலோடு மெல்லும் ஜாலம்.

கோபுரந்தாங்கி யென்ற செடியின் வேரைக்கொண்டுவந்து, அதில் சிறிய துண்டாய் வாயில்போட்டுக் கசகசவென்றுமென்று தாடையில் அடக்கிக்கொண்டு வாட்டிலோட்டைப் போட்டுக்கடித்தால் அரிசிபோல் மென்றுவிடலாம்; வாயை அறுக்காது.

269. கையில் வெற்றிலைச் சுண்ணும்பு சிவக்கும் ஜாலம்.

கருவேலன் கொழுந்தைக் கொண்டுவந்து கையில் வைத்துக் கசக்கிச் சார் கையில் தாங்கும்படியாக ஊறவைத்து, உலர்ந்தபின் கைதட்டி சபையோருக்கு நன்றாகக் காண்பித்துவிட்டு சுண்ணும்பும் வெற்றிலையுங் கொண்டு வரும்படியாகச் சொல்லி கசக்கினுல் குப்பென்றதாகக் கை சிவக்கும்; ஆச்சரியப்படுவார்கள்.

270. கிணற்றில் தோண்டி போட்டால் தண்ணீர் மொள்ளாதிருக்குஞ் ஜாலம்.

புதுதோண்டியைக் கொண்டுவந்து அதின் கீழ்ப்புறத்தில் பச்சோந்தியை அரைத்துத் தடவிவிட்டு, தாம்பு கயற்றைக் கட்டிக் கிணற்றிற் போட்டால் தண்ணீர் மொள்ளாது. பார்ப்போர்கள் என்னமோ அதிசயமென்று இருப்பார்கள் (பச்சோந்தி யென்பது பச்சைஓணன்.)

271. ஒருவரை தும்பலுங் குசுவும் விடும்படி செய்யுஞ் ஜாலம்.

சுண்டைக்காய் வேர், ஆனைத்திப்பிலி இவை இரண்டையும் சமமாகச் சேர்த்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு சபையில் ஊதிவிட்டால் அந்த நெடி நாசியில் ஏறினவர்களெல்லாம் குசுவிடுவார்கள் தும்பல் தும்புவார்கள்.

272. பேன் மாரண வித்தை.

கெந்தகமும் ரசமும் விராகன் ஒன்றாக நிறுத்தெடுத்து, இவையிரண்டையும் ஒன்றாகச்சேர்த்து அரைத்து நூலில்பூசி உலரவைத்துக் காய்ந்த பிறகு ஸ்திரீகளாவது புருஷர்களாவது பேன் மிச்சமாகப் பிடித்திருந்தால் இந்தக் கயிற்றைக் கட்டினுல் அத்துடன் பேன்களெல்லாம் மரணமாகிவிடும்.

273. எலுமிச்சம்பழத்தைத் துணியில் கட்டி துணியறுமல் வெட்டும் ஜாலம்.

ஒரு எலுமிச்சம்பழத்தைக் கொண்டுவந்து நான்குமூலை சதுக்கமுள்ள கைகுட்டையில் நடுவேவைத்து, தந்திரியாய்ப் பக்குவமாய்க் கட்டிப் பூமியின்மேல் மண்குவித்து, மேற்படி கட்டினப் பழத்தை வைத்து மந்திரம் செய்பவர்போல் ஓங்காளி ஆங்காளி ரீங்காளி மாகாளியென்று சொல்லிக் கனத்தக் கத்திகொண்டு வெட்டினுல் பழம் இரண்டு துண்டாகிவிடும்; துணியறுது. மகாதந்திரமாக வெட்டவேண்டியது; ஆனல் மண் அடியிலிருக்கவேணும்.

274. தண்ணீரில் கரைந்த சாம்பலை மறுபடியும் எடுக்கும் ஜாலம்.

சாம்பலைக் கொஞ்சம் தண்ணீரில் கரைத்துவிட்டு இந்த கரைத்த சாம்பலை யெடுக்கிறேனென்று சொல்லிக் கொஞ்சம் நெருஞ்சி விதையை

விபூதிபோல் தூளாய்ச்செய்து கொஞ்சம் போட்டுக்கலக்கி வழித்தால் வந்துவிடும். மறுபடியும் கரைத்துவிட்டாலும் கரைந்துவிடும். பார்ப்போர்கள் மகா அற்புதமான வித்தை செய்தாரென்று ஆச்சரியப்படுவார்கள்.

275. வேறுமுறை நெருப்புமிதிக்கும் ஜாலம்.

தாளிச்செடியின் சமூலம், கொத்தான் சமூலம், மருக்காரை உப்பு இவைகளைச்சமனிடையாக எடுத்துப் பசம்பால்விட்டு அரைத்து உள்ளங்காலிரண்டிலும் பூசிக்கொண்டு, கட்டையைப் போட்டுக்கொளுத்தித் தீ அடங்கினபின்பு நெருப்பை அகலப்பரப்பிப் பயமில்லாமல் மிதிக்கலாம். பார்ப்பவர்கள் அக்கினி பந்தனம் செய்தாரென்று ஆச்சரியப்படுவார்கள்.

276. தீபமேற்றிப் பார்த்தால் வீடெங்கும் மஞ்சள் நிறமாகத் தெரியும் ஜாலம்.

சாராயத்தைக் கொதிக்கவைத்து, கைபொருக்கும்படி கால் சூடாக ஆறவைத்து உப்புபவுடர் கொஞ்சம் போட்டுக் கொளுத்தினுல் வீடெங்கும் மஞ்சள் நிறமாகத் தோன்றும். ஆனல் அக்காலத்தில் ஒருவரை ஒருவர் பார்த்தால் வேறு ரூபமாகத் தோற்றும்.

277. வேறுமுறை வெள்ளாய் வேகாதிருக்கும் ஜாலம்.

ஆவாரன் விரகைவெட்டிக் கொளுத்தி எருமை மூத்திரத்தால் அவித்து, அந்தக்கரியை வெள்ளாய் அடுப்பில் போட்டுவிட்டால் எவ்வளவு கட்டைபோட்டுக் கொளுத்தினும் வெள்ளாய்வேகாது. அதை அவித்து அதனுள்ளிருக்கும் சாம்பலெல்லாம் எடுத்துவிட்டு மறுபடியும் கொளுத்தினுல் வேகும்.

278. நாய்கடிக்காமல் யிருக்கும் ஜாலம்.

நாயுருவிவேரையும் எருக்கன்வேரையும் அதின் இலையும், இம்மூன்றையும் கசக்கிக் கடிக்கவரும் நாய்முகத்தில் எறிந்தாலதை அது முகர்ந்தவுடனே மயக்கங்கொண்டு திகைத்து நிற்கும். கண்டவர்கள் எவனே வாய்கட்டி விட்டானென்று பலவாறாகச்சொல்லிப் பரிதாபப்படுவார்கள்.

279. குளத்தில் மூழ்கி நாமமிடும் ஜாலம்.

கொடிக்கள்ளிப் பாலைக்கொண்டுவந்து, தேகம் ஆதி அந்தமும் நாமமிட்டுக்கொண்டு திருசூரணத்திற்குப் பதில் பிரமதண்டிப்பாலை இட்டுக்கொண்டால் காய்ந்தபிறகு ஒருவருக்குந் தெரியாமலிருக்கும். சபையோரைப் பார்த்து, கிணற்றிலாவது குளத்திலாவது மூழ்கி நாமமிட்டுக் கொண்டு வருகிறேன் பாரென்றுசொல்லி ஆடைமுதலானதுங் களைந்துவிட்டுச் சோதனைகாட்டி அனைவருக்கு முன்பாக கிணற்றிலாவது குளத்திலாவது மூழ்கிக் கொஞ்சநேரம் பொருத்து வெளியேவந்தால் தேக முழுமையும் நாமமாகப் பிரகாசிக்கும். அன்றியும் சபையில் ஒரு

கொம்பு ஜலம் ஊற்றிக்கொண்டாலும் கொள்ளலாம்; ஆச்சரியப்படு வார்கள்.

280. நூலைக்கொளுத்திச் சேதமில்லாமல் எடுக்கும் ஜாலம்.

கருநிறத்தண்ணீரில் உப்புக்கரைத்து உண்டை நூலில் பூசி உலர வைத்து காய்ந்தபிறகு அதின்மேல் விளக்கெண்ணெய்ப் பூசிக்கொளுத்தி ஞல் எரிந்தநூல் சேதமாகாது. அவிந்தபிறகு நூலையெடுத்து அனைவருக் குங் காட்டலாம். ஆச்சரியப்படுவார்கள்.

281. நல்லபாம்பைக் கட்டும் ஜாலம்.

சாதாரணமாக ஜோகிகளாவது இன்னம் எவர்களாவது நல்ல பாம்பை ஆட்டிக்கொண்டிருக்கையில், வெள்ளைப்பூண்டை அரைத்து வெளாங்காய்ப்பிரமாணம் பாம்பின்முன்போட, உடனே படம் விரித் தாடிக்கொண்டிருந்த பாம்பு மயக்கங்கொண்டு பூமியோடு பூமியாகப் படுத்துக்கொள்ளும். பார்ப்பவர்கள் யாரோகட்டி விட்டாரென்று பிர மிப்பார்.

282. அக்கினிசட்டி யேந்தும் ஜாலம்.

ஒரு புதிய சட்டியைக் கொண்டுவந்து, அந்தச்சட்டியில் நெருப்பைக் கொட்டிக் கட்டைப்போட்டுக் கொளுத்தி, சட்டியில் சாம்பல் நிறைகிற வரையிலுங் கொளுத்தி இரண்டொருநாள் சென்றபின்பு ஆறவைத்து அதி லிருக்கும் சாம்பலை அந்தச் சட்டியில் முக்கால்சட்டி யிருக்கும்படி அழுத்தி வைத்துக்கொள்ளவும். அக்கினி சட்டிதூக்கிக்கொண்டு வெளியே புறப்படவேண்டுமானால் அந்தச்சட்டியிலுள்ள சாம்பலின் மேல்கொஞ்சம் கட்டைபோட்டுக்கொளுத்தி அச்சமில்லாமல் வெளியில் தூக்கிக் கொண்டு வரலாம், பார்ப்பவர்கள் அக்கினிக் கட்டுக்கட்டினனென்று ஆச்சரியப்படுவார்கள்.

283. துட்டு நடக்கும் ஜாலம்

மனிதர் மயிரில் ஒன்றரை முழம் நீளமுள்ள ஒருமயிரையெடுத்து, அதின் முனையில் கொஞ்சம் மெழுகு ஒட்டவைத்திருந்து; ஜாலமாடும் போது ஒருவரிடத்தில் தம்பிடியாகிலும் காலணாவாகிலும் வாங்கி மந்தி ரம் செய்பவர்போல் மேற்படி மயிர் மெழுகில் இந்தத்துட்டை ஒட்டி எதிரில்வைத்து, இன்னொரு முனையைக் கால் பெருவிரலில் கட்டியிருந்து இந்தத்துட்டை நடக்கவைக்கிறேன் பாரென்று சொல்லிக் கொஞ்சம் விபூதியைப்போட்டு, சல் மலையாளபகவதி காளிவாவா, இந்தத்துட்டை நடக்கச்செய்யென்று தந்திரமாகக் காலை சட்டென்று தட்டினால் துட்டு துள்ளி வந்து விழும். கண்டவர்களெல்லாம் வசியமென்று ஆச்சரியப் படுவார்கள். மாயப்பிரட்டல் செய்யவேண்டியது.

284. மர அன்னம் தண்ணீரில் மேயுஞ்ஜாலம்

மரத்தினால் அன்னமொன்று செய்து, அதின் நெற்றியில் இரும்பு ஆணி அடித்து வைத்திருந்து, ஒரு மூங்கிற்கொம்பின் முனையில் காந்தத் தத்தைப் பதியவைத்திருந்து, ஜாலமாடும்போது அச்சபையில் ஒருமரத் தொட்டியில் ஜலம்விட்டு, மேற்படி அன்னத்தை அதில்விட்டு மேற்படி மூங்கிற்கோலைக் கையிலெடுத்து காந்தம் இருக்கும்பக்கத்தை அன்னத் தின் முகத்துக்கு நேரேகாட்ட மனம்போல் வரும். பார்ப்பவர்கள் மந் திரமென்றே நம்புவார்கள். ஆனால் லேசானமரத்தில் அன்னப்பக்ஷி செய்யவேண்டும்.

285. ஜலத்தில் இரண்டுவித நிறம் உண்டாக்கும் ஜாலம்.

சபையில் ஒரு போகணியில் ஜலங்கொண்டு வரும்படிசெய்து, இந்த ஜலத்தை இரண்டுவித நிறமாக்குகின்றேன் பாரென்றுசொல்லி, ஒருவருக் குந் தெரியாமல் லிட்மஸ் என்னும் மருந்தைக் கொஞ்சம்போட ருப் பென்று நீல வர்ணமாகும். அனைவருக்குங் காட்டிப் பார்த்தபின்பு இந்த நீலநிறத்தைச் சிவப்புநிறமாகச் செய்கிறேன் பாரென்றுசொல்லிக் கொஞ் சம் கெந்தகத் திராவகத்தைத் தெரியாமல் அதில்விட சிவப்பு நிறமாகி விடும். கண்டவர்கள் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

286. பீநாற்றங் காட்டும் ஜாலம்.

பீநாறிப் பட்டையைக் கொண்டுவந்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து அதை ஜலம்விட்டுக் கட்டியாகப் பிசைந்து கடலைப்பருப்புப் பிர மாணம் உருண்டையாகச்செய்து வைத்துக்கொள்ளலாம். ஜாலமாடு மிடத்தில் தமாஷ்காட்டவேண்டில் ஒருவருக்குந் தெரியாமல் ஒரு உண்டையைக் கீழே போட்டுவிட்டு, அடையாளமாக பார்த்துக்கொண் டேயிருந்து, ஒரு சிறுவனை அழைத்து மேற்படி உருண்டையுடன் மண்ணை யுஞ் சேர்த்து வாரிஜலம்விட்டுக் கையினிற் பூசினால் பீநாற்றம்நாறும். பார்ப்போர்கள் குட்டிச்சாத்தான் ஏவலென்று திகைப்பார்கள்.

287. காய்ந்த கருவாடு தண்ணீரில் மேயுஞ் ஜாலம்.

வயிற்றைப் பிளக்காத உலர்ந்த கருவாட்டை நாலு ஐந்துகொண்டு வந்து, புளிதொடக்கி யிலையும் கிணறுவையிலையும் சமமாகச்சேர்த்து சார் பிழிந்து, அந்தச் சாற்றில் கருவாட்டை ஊறவைத்துக் கொஞ்சநேரம் பொருத்தெடுத்து. கிணர் குளம் இவைகளில்போட உயிருள்ள மீன் போல் வலைய வளைய ஓடும். பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமாகவிருக்கும்.

288. ஐங்கோலத் தயில வித்தை.

சகல விநோத ஜாலங்களுமாட ஐங்கோலத்தைலங் கூட்டும்வகை எப்படியெனில், கன்னியாஸ்திரியானவள் மரணமானவுடன் கொண்டு போய்ப் புதைக்குமிடத்தை அடையாளமாகப் பார்த்து, இரண்டு மண்ட லஞ் சென்றபின் இராக்கால நடுச்சாம வேளையிற்சென்று சுடலையிலுள்ள சமாதியைவெட்டி அவளுடைய எலும்புகள் யாவையும் யெடுத்துக் கொண்டுவந்து அதைப் பொடியாகச்செய்து, அத்துடன் வழலையுப்பு வெங்கோல்வுப்பு அழிஞ்சிமரக்கொட்டை பேய்ப்பீர்க்கன்விரை புங்கங் கொட்டை நாக்குப்பூச்சி இவைகளை வகைக்குப்பலம் பன்னிரெண்டாக நிறுத்தெடுத்து உலர்த்தி, ஒரு பாண்டத்தில் ஐந்துபடி சுத்த ஜலம்விட்டு

அதிலிந்தச் சரக்கையெல்லாம் ஊரப்போட்டு நாலு ஜாமஞ்சென்றபின் அவைகளை யெல்லாமெடுத்து ரவியில் உலரச்செய்து, உலர்ந்தபின் கல்லுரலில் போட்டு நன்றாகயிடித்து வேறொரு பாண்டத்தில் இவையெல்லாம்போட்டு அதின்மேல் ஒரு சட்டிமூடி, வாய்ப்புறத்திற்கு சீலைமண் செய்து பூமியில் நாலுமுழங் குழிதோண்டி சமாதியின் எருவைக் கொண்டுவந்து அக்குழியில் இரண்டுமுழம் அடையும்பாகப் போட்டு, இரண்டுஜாண் அதிற் பள்ளமாக்கி ஒரு சிறிய கலசத்தை அதில்வைத்து மேல்மூடி சாளிகைக்கு நடுவில் துவாரஞ்செய்து கலசத்தின்மீது வைத்து, அதின்மேல் மேற்படி பாண்டத்தை மையமாகவைத்து குதிரையெருவு மாட்டெருவு ஆட்டெருவு மலைப்புழுக்கை சுடுகாட்டுச்சாம்பல் கரி இவைகளைக் கலந்து அக்குழியை மூடிவிட்டு. அத்திவிரகினால் அக்குழி மேல் மூன்றுஜாமம் ஒரே தீயாக யெரிக்கவேண்டும். ஆனால் காலாக்கினிபோல் எரித்து நன்றாய் நெருப்பெல்லாம் பூத்துச் சாம்பலாகி ஆறினபின் குழியைத்தோண்டிப் பாண்டத்தை யெடுத்து அப்பால் வைத்துவிட்டு, அடியில் வைத்தக் கலசத்தை எடுத்து அதிலுள்ளத் தைலத்தையெடுத்து பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும். இதுதான் ஐங்கோலத் தயிலமென்பது.

289. இத்தயிலத்தை மறுதயிலமாக்கும் வித்தை.

ஐங்கோலத் தயிலத்தில் இரண்டுசேர் வாங்கிப் பீங்கானில்விட்டு வழலைச்சுன்னம் அரைபலம்போட்டு, காலாக்கினி தயிலத்தில் ஒருபலஞ் சேர்த்து வைத்துக்கொள்ளவும், பூரம், பச்சைக்கெளுத்தி, பச்சைஜாதிக்காய் ஏலம் லவுங்கப்பூ மிளகு கிராம்பு சுக்கு கோரோசனை திப்பிலி இவைகள் வகைக்கு அரைவிராகனெடை நிறுத்து யெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து அத்தூளை ஐங்கோலத் தயிலத்துடன் சேர்த்து மேற்படி பீங்கானுக்கு மேல்மூடிபோட்டு பூமியிற் பள்ளந்தோண்டிப் புதைத்து ஒருமண்டலம் பொருத்தெடுத்து வைத்துக்கொள்ளவும். மேற்படி தயிலத்தை வேளையொன்றுக்கு ஒரு விராகனெடை வீதம் ஒருமண்டலம் உட்கொள்ள எமனை வெல்லும்படியான வயதுண்டாகும், பாலைப்பருவம் பதினாறுமாகி மன்மதனைப்போல் வடிவுதோன்றும்.

290. அஷ்டமாசித்து விளையாடத் தயிலம்.

கழுவிலேறி இறந்தவரைக்கொண்டுபோய் புதைக்கு மிடத்தைப் பார்த்திருந்து, அதற்குச் சுற்றிலும் சுவர்யெழுப்பிப் பந்தோபஸ்தாகச் செய்யவேண்டும். ஆனால் மனிதர்கள் நடமாட்டமில்லாத யிடத்திற் புதைக்கவேண்டும். பிறகு ஒருமண்டலம் பொருத்து அதைத் தோண்டி யெடுத்து, நாற்றம் போகும்படியாகச் சுத்திசெய்து ரவியில் சருகுபோல் உலர்த்தி அதையெடுத்துப் பத்திரமாகவைத்துக் கொள்ளவும். கருங் காக்கையின் பிச்சு சூலமும், மயில் கருங்கோழி செம்பருந்து இந்த பட்சிகளையுங் கொண்டுவந்து அவற்றின் ரோமங்களைப் போக்கி மனிதர் சஞ்சாரமில்லாத யிடத்திற் கொண்டுபோய்ச் சருகுபோல் உலர்த்திப் பத்திரமாக வைத்துக் கொள்ளவும். தேவாங்கின்பிச்சு, கருநாயின்பிச்சு, கரும்பூனையின் பிச்சு, அழுங்கியின் பிச்சு குரங்கின் பிச்சு, இந்த ஐந்து

பிச்சையுமெடுத்து முன்போல் உலர்த்தி பத்திரமாக வைத்துக்கொள்ளவும். பின்பு மேற்சொன்ன வகையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து கல்லுரலில்போட்டு சதைத்து ஒரு பாண்டத்திற்போட்டு, அதன்மேல் ஒரு சட்டியைக் கவிழ்த்துச் சீலைமண்செய்து இரண்டுமுழங் குழிவெட்டி அக்குழி மத்தியில் இரண்டுஜாண் குழிவெட்டி அந்நடுச்சிறுகுழியில் சிறிய கலசம் ஒன்றுவைத்து சானகையால் நடுவே துவாரஞ்செய்து கலசத்தின்மேல் வைத்து, அதின்மேல் மேற்படி பாண்டத்தை வைத்துப்பின்பு சமாதியெருவு ஆட்டெருவு மாட்டெருவு சுடுகாட்டுச்சாம்பல் இவைகளைக் கொட்டி குழியைமூடி ஒருமண்டலம் குமுங்கவைக்கவும்.

சரியாய் நாற்பதுநாளுஞ் சென்றபின்பு அக்குழியின்மீது ஒரு மரத்தின் விரகினால் மூன்றுசாமமெரிக்கத் தயிலமானது இறங்கும். கொளுத்திய தீ ஆறியபின்பு அக்குழியைத்தோண்டி மேல்வைத்த பாண்டத்தை யெடுத்து அப்புறம் வைத்து, அடியில்வைத்த கலசத்தை எடுத்துப் பார்க்க அஷ்டமாசித்தித் தயிலம் அதில் இறங்கி இருக்கும். அதை யெடுத்து அத்துடன் வழலைச்சுன்னம் அரைபலம்போட்டு அதை மத்தித்தால் நாகப்பழம் வர்ணம்போல் காணும். அதைவைத்து வைரவருடைய பூசைசெய்து வாலை பூசையுஞ்செய்து, பின்பு மையைச் சீசாவிலிட்டுப் பத்திரமாக வைத்துக்கொண்டு பலவிதமான சித்துகளையும் விளையாடலாம்.

291. தாமரைத்தடாக முண்டாக்குஞ் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு கூழாங்கல்லைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக்காட்டி, இதை மந்திரித்து ஈசான்னியமூலையில் போடுகிறேன்; நீங்களனைவரும் ஸ்நானபானஞ்செய்யத் தாமரைத் தடாகம் உண்டாக்குகின்றேனென்று சொல்லி, வைரவரைத் தியானித்துத் தடாகமுண்டாகவேணுமென்று மனதில் எண்ணி ஒருவருக்குந் தெரியாமல் ஐங்கோலமையை விரலில் தொட்டுக் கூழாங்கல்லிற் றடவி ஈசான்னிய மூலைப் பக்கம் வீசியெறிய உடனே தாமரைக் தடாகமுண்டாகும். அதில் இலைகளும் புஷ்பங்களும் தழைத்து நிறைந்திருக்கும். பார்ப்போர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் அத்தடாகம் மூன்றேமுக்கால் நாழிகைக்குள் மாயமாக மறைந்துவிடும்; அந்த மூன்றேமுக்கால் நாழிகையும் வைரவர் மந்திரத்தைத் தியானித்துக்கொண்டே யிருக்கவேண்டும்.

292. தேவாலயமும் திருக்குளமும் உண்டாகும் ஜாலம்.

தனக்கு இஷ்டமானபேர்களை அழைத்துக்கொண்டு ஒரு மைதானத்திற்சென்று, இந்த மைதானத்தில் தேவாலயமுந் திருக்குளமு முண்டாகச்செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி, வைரவரைத் தியானித்து, தேவாலயமும் திருக்குளமுமுண்டாகவேண்டுமென்று மனதில் எண்ணி, ஐங்கோல மையைத் தந்திரமாக ஒரு கெச்சக்காயிற்றடவி வீசி முன்னே யெறிய, உடனே தேவாலயமும் திருக்குளமுமுண்டாகும். அங்கே நால்வகைச் சாதியோரும் தடாகத்தில் ஸ்நானபானஞ்செய்து ஆலய தரிசனஞ் செல்வதாகத் தோற்றும். பார்ப்போர்கள் பிரமித்து மதி மயங்கி ஆச்சரியப்படுவார்கள்.

293. நந்தவன முண்டாகும் ஜாலம்.

ஒரு மைதானமானயிடத்தில் சென்று தன்னுடன்கூட யிருப்போர்களைப்பார்த்து, நீங்கள் கண்ணைமூடித் திறப்பதற்குள்ளாக இங்கு நந்தவனம் உண்டாக்குகின்றேன் பாருங்களென்று சொல்லி, வைரவரைத் தியானித்து, நந்தவன முண்டாக வேண்டுமென்று மனதில் எண்ணி, ஐங்கோலக்கருவைக் கொஞ்சம் விரலில் தொட்டு மண்ணைவாரி தனக்கு எந்தத் திக்கு இஷ்டமோ அந்தத் திக்கில் எறிய உடனே நந்தவனமும் பூந்தோட்டமுமாகத் தோற்றும். பார்த்தவர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் மண்ணை இறைக்கும்போது அங்குள்ளவர்கள் அனைவர்களையும் கண்களை மூடிக்கொள்ளச் சொல்லவேண்டும்.

294. அந்தரத்தில் தேவர்களைக் காட்டும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் சென்று சபையோர்களைப்பார்த்து, நீங்கள் கண்ணை மூடித்திறப்பதற் குள்ளாக அந்தரத்தில் முப்பத்து முக்கோடி தேவர்களையும் வந்து நிற்கும்படிச்செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி வைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருசெபித்து, தேவர்கள் யாவரையும் அந்தரமார்க்கமாகத் தோன்றச் செய்ய வேண்டுமென்று மனதில் யெண்ணி, ஒரு பலகரை மை யெடுத்து, அதில் ஐங்கோலமையைக் கொஞ்சந்தடவி ஆகாயமார்க்கமாக விட்டெறிந்து சபையோர்களைக் கண்ணைமூடித் திறந்து ஆகாயத்தைப் பார்க்கச்சொல்ல அவரவர்கள் வாகனங்களுடன் தேவர்கள் ஆகாயத்திற் றோன்றுவார்கள். அனைவரும் பார்த்து அந்தத் தேவர்களைத் துதித்து ஆச்சரியப்படுவார்கள்.

295. இருஷிக்கூட்டங்களைக் காட்டும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து, இப்போது தவம் செய்துகொண்டிருக்கும் இருஷிக் கூட்டங்களை அழைப்பிக்கிறேன் பாரென்று சொல்லி, வயிரவர் மந்திரத்தைத் தியானித்து இருஷிக் கூட்டங்கள்தோற்றவேண்டுமென்று மனதில் எண்ணி, ஐங்கோலமையை ஐந்துவிரலிலும் தொட்டுக்கொண்டு, புளியன் இலையை யுருவி நாலு திக்கிலும்போட, உடனே அவரவர்கள் சிஷ்யர்களொடு நாலுதிக்கும் திரளாகத்திரண்டு வருவார்கள். அதுகண்டு அனைவரும் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

296. புளியமரமுண்டாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு புளியன் கொட்டையைக் கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி, இந்தக்கொட்டையைப் பூமியில்நட்டு இப்போதே மரமாக்கிப் பூ பூத்துக் காய் காய்த்துப் பழம் பழுக்கும்படி செய்கிறேன் பாருங்களென்று சொல்லி, வைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, புளியமரமாக வேண்டுமென்று மனதில் நினைத்து ஐங்கோலமையைப் புளியங்கொட்டையில் தடவிப் பூமியில் கொஞ்சம் பள்ளந் தோண்டிக் கொட்டையைப் புதைத்து மண்ணைமூடிப் பார்ப்பவர்கள் நம்பும்படியாகக் கொஞ்சம் ஜலம்விட்டுக் கூடை போட்டுமூடிவிடவும்.

வைரவர் மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே ஏழுதரம் திறந்து ஏழுதரமும் ஜலத்தைவிட்டு மூடிப்பின்பு அனைவரையுங் கண்ணைமூடிக்கொள்ளச் சொல்லி, சட்டென்று கூடையைதிறக்க புளியமரம் ஓங்கித்தோற்றும். அதில் பூ பிஞ்சு காய் பழம் நிறைந்து காணும். பார்ப்போர்கள் மதி மயங்கி பிரமித்து நின்று ஆச்சரியப்படுவார்கள்.

297. தென்னந்தோப்பு உண்டாகும் ஜாலம்.

ஒரு வெட்டவெளியான மைதானத்திற் சென்று தன்னுடன் வந்தவர்களைப் பார்த்து, இந்த மைதானத்தில் ஒருக்ஷண நேரத்திற்குள் தென்னந்தோப்பு உண்டாகச் செய்கிறேன் பாரென்று சொல்லி, வைரவரைத் தியானித்து, தென்னந்தோப்புண்டாக வேண்டுமென்று மனதில் எண்ணி, மேல் தோல் போகாத ஒரு தேங்காய்நெற்றை யெடுத்து, ஐங்கோலமையை அதற்குப்பூசி, அந்த மைதானத்தில் ஒருபுறம் புதைத்து விட்டு நீ வைரவர் மந்திரத்தை ஜெபித்துக்கொண்டு, கூடயிருப்போர்களைக் கண்ணைமூடித்திறந்து பார்க்கச்சொல்ல பெருந்தோப்பாகத் தோற்றும். மரங்களில் காய்களும் காய்த்துத் தொங்கும்; ஆச்சரியப்படுவார்கள்.

298. பனந்தோப்பு உண்டாகும் ஜாலம்.

மேற்கூறிய வண்ணம் மைதானத்திற் சென்று ஒரு பனங்கொட்டையைக் கையிலெடுத்துத் தன்னுடன் யெத்தனைபேர் வந்தவர்களோ அத்தனைப் பேருக்குங் காட்டி, இந்த ஒரு கொட்டையை நட்டுப் தோப்பாக்குகிறேன் பாருங்களென்றுசொல்லி வைரவர்மந்திரத்தை மறவாமல் ஜெபித்துக்கொண்டே பனந்தோப்பாக வேண்டுமென்றுமனதிலெண்ணி ஐங்கோலமையை யெடுத்துப் பனங்கொட்டையிற்பூசி, அந்த மைதானத்தில் ஒரு பக்கமாகப் புதைத்துவிட்டுக் கூடவந்தவர்களைக் கண்ணைமூடித் திறந்துபார்க்கச்சொல்ல, நாற்காணி விஸ்தாரத்திற்குப் பனந்தோப்பாகத் தோற்றும். ஆண்மரமும் பெண்மரமுமாகக் கலந்து, காய்களுங் காய்த்துத் தொங்கும். கண்டவர்கள் கண் மயங்கி ஆச்சரியப்படுவார்கள்.

299. வாழைத்தோப்பு உண்டாகுஞ் ஜாலம்.

காலியாக இருக்கின்ற ஒரு தோட்டத்திற்குள் சென்று ஒருவாழைக் கன்றைக் கையிலெடுத்துத் தன்னுடன்கூட வந்திருப்பவர்கள் யாவருக்குங்காட்டி இந்த வாழைக்கன்றை நட்டு வாழைத்தோப்புகள் உண்டாக்குகிறேனென்று சொல்லி, வைரவர் மந்திரத்தை இடைவிடாமல் ஜெபித்துக்கொண்டு வாழைத்தோப்புண்டாக வேண்டுமென்று மனதிலெண்ணி ஐங்கோலமையை யெடுத்து வாழைக் கன்றுக்குப்பூசி அத்தோட்டத்தின் நடுமத்தியில் நட்டுவிட்டு அங்குள்ளவர்களைக் கண்ணை மூடித் திறந்துபார்க்கச்சொல்ல, தோட்டம் நிறைய வாழைத்தோப்பாகத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

300. கமுகமரத் தோப்புண்டாகும் ஜாலம்.

மேல்தோல் நீங்காத ஒரு கொட்டைப் பாக்கைக்கையில் யெடுத்து அனைவருக்குங்காட்டி, இந்தக் கொட்டைப்பாக்கை நட்டுப் பாக்குமரத்

தோப்புண்டாக்குகிறேன் பாரென்று சொல்லி, வைரவர் மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே கமுகமரத்தோப்பாக வேண்டுமென்று மனதில் எண்ணி ஐங்கோலமையை* அந்தப்பாக்குக்குப்பூசி ஒரு மைதானத்திற் கொண்டுபோய்ப் பூமியிற் புதைத்துவிட்டு, கூடவந்தவர்களைக் கண்ணை மூடித்திறந்து பார்க்கச்சொல்ல, எங்கும் தோப்பாகத் தோற்றும். பார்ப்போர்கள் மதிமயங்குவார்கள். ஆனால் மந்திரத்தை மறவாமல் ஜெபித்துக்கொண்டே யிருக்கவேண்டும். மந்திரத்தைச் சொல்வது நிறுத்தினால் உடனே மாயமாகப் போய்விடும்.

301. பலவிதமான விருட்சங்களும் நிறைந்த தோப்புண்டாகும் ஜாலம்.

தனக்கு இஷ்டமான மரத்தின் விதைகளை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்து வைத்துக்கொள்ளவும். பிறகு ஒருமைதானத்திற்குச் சென்று தன்னுடன் வந்திருப்பவர்களுக்கு மேற்படி விதைகள்யாவையுங் காட்டி, இதை இந்தமைதானத்திற் புதைத்து விடுகிறேன்; பலவித விருட்சங்களும் உண்டாவதைப் பாருங்களென்று சொல்லி, வைரவர் மந்திரத்தைத் தியானித்து, பலவிதவிருக்ஷங்களுள்ள தோப்பாக வேண்டுமென்று மனதிலெண்ணி, ஐங்கோலமையை அந்த விதைகளுக்கெல்லாம் பும்படியாகப்பூசி; நாலுதிக்கிலும் பள்ளந்தோண்டிப்புதைத்து விட்டு, அங்குள்ளவர்களைக் கண்ணை மூடித்திறந்து பார்க்கச்சொல்ல, பலவித விருட்சமுள்ள தோப்புகளாகத்தோற்றும். அந்தந்த விருட்சங்களில் கனிவர்க்கங்களில் நிறையக்காய்த்திருக்கும். பார்ப்போர்கள் இது கண்கட்டு வித்தையென்றும், கருவின் வேலையென்றும், காளியின் வசியமென்றும், கருப்பண்ணன் வசியமென்றும் பலவாறாகப் பேசிப் பாராட்டி வித்து ஆச்சரிப்ப்படுவார்கள்.

302. வேலமுள்ளின்மேல் படுக்கும் ஜாலம்.

நர்தைச்சூரிச் செடியைக் கண்டுபிடித்து, ஆதிவாரத்தில் மஞ்சள் நூலால் காப்புகட்டி, வைரவர் மந்திரம் ஆயிரத்தெட்டு உருவிட்டு வந்துவிடவும். மறு ஆதிவாரம்சென்று சிறியகுடுவையில் பொங்கலிட்டுத் பலிகொடுத்துத் தூபதீபங்காட்டி வைரவர் மந்திரத்தை முன்போல் ஆயிரத்தெட்டு ஜெபித்து, செடிக்குக் காயம்படாமலும் வேர் அறுமலும் பிடுங்கிக்கொண்டுவந்து, அந்தச் செடியைப் பூசையில் வைத்து இருபத்தொருநாள் தவறாமல் வேளை ஒன்றுக்கு ஆயிரத்தெட்டு உருகொடுத்து வந்து, இருபத்திரண்டாம்நாள் வேரையெடுத்து அதின்மேல் ஐங்கோலக் கருவைப்பூசிச் செம்பினாலாவது வெள்ளியினாலாவது கடையம்செய்து, அதனுள் இந்த வேரைச்செலுத்தி வாய்ப்புறத்தை மூடிப்பிடித்து வைத்துக்கொள்ளவும். சாதாரணமாக வேலன்முள்ளைக் கிளைகிளையாக வெட்டிப் போடச்சொல்லி, தந்திரமாக ஒருவருக்கும் தெரியாமல் கடயத்தை முள்ளின்மேல் போட்டுக் கூச்சமில்லாமல் படுத்துக் கொள்ளலாம். தேகத்தில் முள்ளுதைக்காது. பார்ப்போர்கள் இது யட்சணி வசியமென்று ஏமாந்து திகைப்பார்கள்.

303. சப்பாத்து முள்ளின்மேல் படுக்கும் ஜாலம்.

தாயைக்கொன்றான் செடிக்குக் கிராணத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி அதின்வடக்குப்போகும் வேரைப்பிடுங்கிவந்து, ஐங்கோலக் கருவை அவ்வேரின் மேல்பூசி, வாசலைமெழுகிப் பிள்ளையார்பிடித்துவைத்து அதின்சிரசில் அருகன்புல் குட்டிப் பழம் வெல்லம் வெற்றிலைப்பாக்கு முதலானதும்வைத்து, மேற்படிவேரைப் பூசையில்வைத்து, வைரவர் மந்திரம் லட்சம் உருகொடுத்து வேரையெடுத்துக் குளிசமாடி வைத்துக்கொள்ளவும். ஜாலமாடுமிடத்தில் நாகதாளி முள்ளைக்கொண்டு வந்து போடும்படிச்செய்து,* அந்தமுள்ளின்மேல் தந்திரமாகக் குளிசத்தைப் போட்டுப் பயமில்லாமல் படுத்துக்கொள்ளலாம். தேகத்தில் முள் தைக்காது; அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

304. வேறுமுறை எலுமிச்சம்பழம் குதிக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் பத்துப் பதினைந்து எலுமிச்சம் பழங்களைக் கையிலெடுத்து அனைவருக்குங் காட்டி, இந்தப் பழங்களைப் பூமியில் போட்டவுடன் ஒன்றோடொன்று தாக்கிக் குதிக்கும்படிச் செய்கிறேனென்று சொல்லி, வைரவரைத் தியானம்செய்து, இந்த எலுமிச்சம்பழங்கள் ஒன்றோடொன்று தாக்கிக் குதிக்கவேண்டுமென்று மனதிலெண்ணித் தந்திரமாக ஐங்கோலக்கருவைப் படும்படியாகப் பூசி, பூமியின் மேற் போட பூமியில் நில்லாமல் குதிக்கும்; அனைவரும் பிரமித்து, இது மலையாளபகவதி வேலையென்று மயங்குவார்கள்.

305. வேறுமுறை தேங்காய் நடக்கும் ஜாலம்.

தேங்காயைக் கொண்டுவந்து சபையோர்களுக்குக் காட்டி, இந்தத் தேங்காயை நடக்கச் செய்கிறேனென்று சொல்லி, வைரவர் மந்திரத்தைத் தியானித்துத் தேங்காய் நடக்கவேண்டுமென்று மனதிலெண்ணி, அந்தத் தேங்காய்க்கு மஞ்சள்பூசி குங்குமமிட்டுத் தந்திரமாக ஐங்கோலமையை விரலில்தொட்டுத் தடவி, தேங்காயைப் பூமியின்மேல் விட, அது ஒருவிடத்திலும் நில்லாமல் கடகடவென்று புரண்டுகொண்டேயிருக்கும். பார்ப்போர்கள் கடவியசியமென்று கலங்குவார்கள். உடனே தேங்காயை மறைத்துவிடவும்.

306. தேங்காய் வெடிக்கும் ஜாலம்.

நீர்முள்ளி விரையைக் கொண்டுவந்து பொடித்து வஸ்திரகாயம் செய்து விபூதியுடன் கலந்து வைத்துக்கொள்ளவும். ஜாலமாடுமிடத்தில் ஒரு தேங்காயையெடுத்து அனைவருக்குங் காட்டிச் சூறைவிட்டாப்போல் வெடிக்கும்படிச் செய்கிறேன் பாரென்றுசொல்லி, வைரவரைத் தியானித்துத் தேங்காய் வெடிக்கவேணுமென்று மனதிலெண்ணி, ஐங்கோலக் கருவைத்தொட்டு, தேங்காய்க்குத் தடவி மந்திரம் செய்பவர்போல் அவ்விபூதியைத் தேங்காயின்மேல் பூசி சபையில் வைத்தவுடன் சூறைவிட்டதுபோல் வெடிக்கும். பார்ப்போர்கள் இது பத்திரகாளி வசியமென்று பதறுவார்கள்.

307. ஆகாயத்தில் எறிந்த முட்டை அந்தரமாக நிற்கும் ஜாலம்.

ஒரு கோழிமுட்டையைக் கையிலெடுத்துச் சபையோர்களுக்குக் காட்டி இதை ஆகாயத்தில் எறிகிறேன்; அந்தரமாகநிற்கும்; வேடிக்கைப் பாருங்களென்று சொல்லி, வைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, அந்தரமாக நிற்கவேண்டுமென்று மனதில் எண்ணி, ஐங்கோலக் கருவை விரலில் தொட்டு முட்டைக்குத்தடவி ஆகாயமார்க்கமாக விட்டெறிய, அது அந்தரமாக நிற்கும். அனைவரும் ஆச்சரியப்பட்டு இது அந்தரதேவதை வசியமென்பார்கள்.

308. வேறுமுறை பாரந்தூக்கும் ஜாலம்.

கீழ்காய்நெல்லிச் செடிக்கு மங்களவாரம் சூரியன் உதயமாகு முன்னே மஞ்சள்நூல் காப்புகட்டி, பொங்கலிட்டுப் பலிகொடுத்துப் பலிப்பூசைப் போட்டு வேரைப் பிடுங்கிக்கொண்டு வந்து, அந்த வேரை சிம்மாட்டில் சுற்றி அதன்மேல் ஐங்கோலத் தைலத்தைப்பூசி வைரவரைத் தியானித்து, அந்தவேர்சிம்மாட்டைச் சிரசின்மேல் வைத்து எவ்வளவுபாரந்தூக்கினாலும் பளுவுதெரியாது. பார்ப்போர்கள் இது குட்டிச்சாத்தான் வேலையென்றுகூடிப் பேசிக்கொள்வார்கள். ஆனால் சிம்மாட்டை ஒருவருக்குந் தெரியாமல் தந்திரமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

309. கருங்கல்லைக் கையால்குத்தி உடைக்கும் ஜாலம்.

எவ்வளவுபெரிய பாறையாயிருந்தபோதிலும் கொண்டுவந்து சபையில் வைக்கச்சொல்லி, அங்குள்ள அனைவரையும் பார்த்து, இந்தக் கருங்கல் பாறையைக் கையினால் ஒருகுத்துக்குத்தி இரண்டாகப் பிளக்கச் செய்கிறேன் பாரென்றுசொல்லி, வைரவர் மந்திரத்தைச் செபித்துக் கொண்டே, பார்ப்பவர்களுக்கு இக்கல் இரண்டு பிளவாகத் தோற்றவேண்டுமென்று மனதில் எண்ணிக் கண் கட்டுமையைக் கொஞ்சம் விரலில்தொட்டுப் பாறையிற்றடவி, பின்பு ஐங்கோலக்கருவைப்பூசி, கையை ஓங்கிக் குத்துவதுபோல் குத்தினால் இரண்டாக உடைந்தாற்போல் அனைவருக்கும் தோற்றும். அது அனுமார் வசியமென்று ஆச்சரியப்படுவார்கள்.

310. நினைத்தவிடத்தில் மாறிமாறி நிற்கும் ஜாலம்.

அருணாதி யென்னுஞ் செடிக்கு ஆதிவாரங் காலையிற் சென்று மஞ்சள் நூல் காப்புகட்டிப் பலிகொடுத்துப் பூசைகள் போட்டு, அதனுடைய வேரைப்பிடுங்கிக் கொண்டுவந்து அதன் மேல் ஐங்கோலகருவைப்பூசி. வைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, செம்புத்தட்டில் குளிசம்செய்து அதிலிந்த வேரை அடக்கி வாய்புறத்தைமூடிப் பிகிந்து வலது கையில் கட்டிக்கொள்ளவும். ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து, இதோ உங்கள் எதிரில் நிற்கும் யான் மாயமாக உங்கள்பக்கத்தில் வந்து உட்காருகின்றேன் பாருங்களென்று சொல்லித் தந்திரமாகக் கொஞ்சம் மறப்புமையை எடுத்துத் திலர்த மிட்டுகொண்டால் ஆள் மறைந்துவிடுவாய் உடனேபோய் அவர்பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு

நீ பேசாமலிருக்க அப்போது சபையோர்கள் எதிரில் நின்றமனிதனைக் காணோமென்று திகைத்து சுற்றுமுற்றும் பார்ப்பார்கள். அது அறிந்து நீ மையைத் துடைத்துவிட அவர்கள் பக்கத்தில் தோற்றுவாய்; பார்த்து ஆச்சரியப் படுவார்கள். இப்படி எத்தனை நேரமாகிலும் மையை இட்டுக் கொண்டு ஏமாற்றுக்காட்டலாம். ஆனால் மையை யிடுவதும் கலைப்பதும் ஒருவர்க்குந் தெரியக்கூடாது அருணாதியென்பது குலிசப்பாலை என்னும் மூலிகை.)

311. வேறுமுறை தீயில் குதிக்கும் ஜாலம்.

கண்சங்க மென்னும் செடியைக் கண்டு பிடித்துக் கிராணத்தில் மஞ்சள் நூல் காப்பு கட்டி விட்டு வந்து விடவும். கன்னியா லக்கினத்திற் சென்று பொங்கலிட்டுப் பலி கொடுத்துத் தூபதீபங் காட்டி அதின் வடக்குப் போகும் வேரைப் பிடுங்கிக் கொண்டுவந்து, அதின் மேல் ஐங்கோலக் கருவைப்பூசி பூசையில் வைத்து, வைரவர் மந்திரத்தை இருபத்தொருநாள் தவராமல் காலை மாலை இரு வேளையும் வேளை யொன்றுக்கு லட்சம் உருகொடுத்து வந்து, இருபத்திரண்டாம்நாள் பெருத்த பூசை போட்டு, வேரையெடுத்துக் குளிசமாடி வலதுகையில் கட்டிக்கொண்டு ஜாலமாடுமிடத்தில் கட்டைகளைப்போட்டுக் கொளுத்தச்சொல்லி, அது காலாக்கினிபோல் பற்றியெறியும் போது அதை நீ சுற்றிசுற்றி வரவேண்டும். பார்ப்போர்களுக்கு எரிகின்ற தீ நடுவில் குதித்து வருவது போற்றோன்றும். அப்போது அங்குள்ளவர்கள் பிரமித்து அக்கினியைக் கட்டி விட்டானென்று ஆச்சரியப்படுவார்கள்.

312. குளவிகள் உண்டாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் புளியவிலையைக் கிளையோடு ஒடித்துக் கையிற் பிடித்து சபையோர்களைப் பார்த்து, இத்தப்புளியன் யிலையை உருவிப் போடுகிறேன் அவை குளவியாகப் பறக்கும், வேடிக்கைப் பாருங்களென்றுசொல்லி வைரவர் மந்திரத்தைத் தியானித்து, குளவிகள் ஆகவேண்டுமென்று மனதிலெண்ணி, ஐங்கோலக்கருவை விரலில் தொட்டுக்கொண்டு புளியன்யிலையை உருவிப்பூமியில் போட உடனே குளவிக் கூட்டங்கள் உண்டாகும். பார்ப்போர்கள் இது கண்கட்டு வித்தையென்று கண்டபடிப் பேசிக்கொள்வார்கள்.

313. வேறுமுறை தேள் உண்டாகும் திவ்விய ஜாலம்.

வேப்பிலைக்கொத்தைக் கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி, தேள் உண்டாக்குகின்றேன் பாருங்களென்று சொல்லி வைரவர் மந்திரத்தைத் தியானித்துத் தேளாகவேண்டுமென்று மனதில் நினைத்து, ஐங்கோலக் கருவை விரலில் தொட்டுக் கொண்டு வேப்பிலையை உருவிக் கீழேபோட புத்திலிருந்து ஈசல்புறப்பட்டாற்போல் தேள் கூட்டம் புறப்பட்டு ஓடும்; அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

314. வேறுமுறை பாம்பு உண்டாகும் ஜாலம்.

தென்னம் ஓலையொன்றைக் கையில் எடுத்து சபையோர்களுக்கு காட்டி, இந்த ஓலையைப் பாம்பாக்குகிறேன் பாரென்றுசொல்லி வைரவர்

மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஓதி, பாம்பாக வேண்டுமென்று மனதில் நினைத்து, ஐங்கோலக் கருவைத் தொட்டுத் தந்திரமாக நிலைநிற்றடவிப் பூமியின்மேல் போட்டவுடன் நல்லபாம்பைப்போல் படம் விரித்தாடும்; பார்ப்போர்கள் பிரமித்து விழிப்பார்கள்.

315. பாம்புக்கு சீட்டெழுதி அழைப்பிக்கும் அற்புத ஜாலம்.

ஒரு பனம் ஓலைத் துண்டையெடுத்து அதில் எழுத்தாணியினால், ஓ! பாம்புக் கூட்டங்களே! இந்த சீட்டைப்பார்த்தவுடன் உங்கள் கூட்டமெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து ஓடிவரவேண்டுமென்று எழுதி, அந்தச் சீட்டை அனைவருக்குங்காட்டிப் படிக்கச்சொல்லி, பின்பு அச்சீட்டை வாங்கி வைரவர் மந்திரத்தைத் தியானித்துக் கொண்டே ஐங்கோலக் கரு ஒரு மூலையிலும் மகாமாயமை ஒரு மூலையிலும் மறப்புமை ஒரு மூலையிலும் கட்டுமை ஒரு மூலையிலும் தடவி மந்திரத்தை ஜெபித்துக்கொண்டு அச்சீட்டோடு மண்ணைவாரி நான்குதிக்கிலும் இறைக்க, பலவிதமானப் பாம்புகூட்டங்கள் நான்குதிக்கிலுமிருந்து திரளாகத்திரண்டு சின்னதும் பெரியதுமாக வருதல்போலத் தோன்றும். அப்போது அங்குள்ள பாம்புக் கூட்டங்களைப் பார்த்துப் பதறிச் சிலர் ஓடுவார்கள். சிலர் இது மலையான பகவதி வித்தையென்று மதிமயங்கி ஓடுவார்கள்.

316. மரப்பொம்மை நடக்கும் ஜாலம்.

எந்த மரத்திலாவது பொம்மை செய்து அதற்கு வர்ணமுதலானதும் பூசி நகைகள் பூட்டி, ஆடையுடுத்தி, ஆண் பெண்ணாக இரண்டு செய்து வைத்துக்கொள்ளவும், பின்பு புலிதொடக்கி என்னும் செடிக்குப்பூரண அமாவாசையில் சென்று மஞ்சள்நூல் காப்புகட்டி, ஒன்பதுநாளும் தவறாமல் வைரவர் மந்திரத்தை ஓதி, பத்தாம்நாள் பொங்கலிட்டு, பலி கொடுத்துப் தூபதீபங்காட்டி அதின்வேரை அறாமல் பிடுங்கிக்கொண்டு வந்து, அந்தவேரைப் பொம்மைகளுக்கு அளவாக வளையமாகச்சுற்றி, அதின்மேல் வெள்ளிக்கம்பி பொன்கம்பிசுற்றி, பூசையில் வைத்து, வைரவர் மந்திரத்தை லட்சம் உருகொடுத்து மரப்பொம்மை நடக்க வேண்டுமென்று மனதிலெண்ணித் தந்திரமாக அந்த வளையத்தைப் பொம்மைகாலில்மாட்டி மேஜையின்மேல் நிற்கவைக்க, பார்ப்போர்களுக்கு அந்த மேஜையைச் சுற்றிச் சுற்றி நடப்பதுபோல் வேடிக்கையாகத் தோற்றும். அனைவரும் இது என்ன வியமோ என்று ஏக்கம் பிடித்துப்பிரமிப்பார்கள். வளையத்தை கழற்றிவிட நடப்பது நின்றுவிடும்.

317. மரத்தைக் குத்தினால்பழங்களுதிரும் ஜாலம்.

இறம்பூறிஞ்சி விதையைக் கொண்டுவந்து கல்வத்திலிட்டு முத்தெண்ணெய் விட்டு மைபோல் அரைத்து ஒரு தூய்மையான சீலையில் தடவி உலர்த்தித் திரிசெய்து வைத்துக் கொள்ளவும், தலைமண்டையோட்டில் முத்தெண்ணெய், நல்லெண்ணெய், நெய் இம்மூன்றும் அதில் விட்டு மேற்படித் திரியைப் போட்டுக்கொளுத்தித் தயிலம்வாங்கி, அத்தைலத்துடன் ஐங்கோலத்தைலம் கொஞ்சம் விட்டுக் கலந்து சிமிளில் வைத்துக்கொண்டு, எந்த மரத்தடியிலாவது நின்றுகொண்டு வைரவர்

மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே இந்த மையைத் தொட்டுமரத்திற்றடவி மரத்தைக் கையினாற்குத்த அம்மரத்திலுள்ளப் பழங் காய் முதலானதும் பலபலவென்று பூமியின்மேல் விழுந்து விடும்; அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

318. ஆகாய மோடி வித்தை.

ஆகாய மோடிவித்தை ஆடவேண்டுமெனில் தன்னுடன் சேர்ந்தவர்களை அழைத்துக்கொண்டு, மேற்சொல்லி வரும்படியான சாமான்களையும் சேகரித்து எடுத்துக்கொண்டு, தகத்தாக ஓங்கும் கடைபஜார் தன்னிற் சென்று பந்தல்போட்டு, அங்ஙனம் மேடையொன்று யேற்படுத்தி, மனதை ஓர் நிலையாக நிறுத்தி மான்தோல் ஆசனம்போட்டு உட்கார்ந்து உனக்கெதிரில் பசுஞ்சாணத்தில் மெழுகி மஞ்சளை அரைத்துப் பிள்ளையார் பிடித்து வைத்து அருகம்புல் சூட்டிச் சாம்பிராணி வத்திக் கொளுத்திவைத்துக் கணபதியைச்சுற்றி கனிவகை முதலான வஸ்துக்களும் வைத்துத் தாம்பூலமும் கூடவைத்துத் தேங்காய் உடைத்து சித்தியாகும்படியாககாளபைரவர் மந்திரத்தைத் தியானம்செய்து மூலமந்திரத்தை நூற்றெட்டு உருகொடுத்து, அண்டாண்டமும் பதினாறு திக்கும் பந்தனமென்று சொல்லி, ஒரு தட்டில் சேவுநரிசியை வைத்து, ஒரு தட்டில் புளியன்இலையைவைத்து சேவுநரிசி வைத்திருக்குந் தட்டில் தேங்காய் ஒன்றுவைத்து, பிள்ளையார்க்கு எதிரில் அறுகோண சக்கர மெழுகி, அந்தச் சக்கரத்தின் நடுவில் எலு எலுமிச்சம் பழம்வைத்து, அதற்குநடுவில் விராகன் ஒன்றுவைத்து, அதற்கெதிரில் கத்தியொன்று நட்டு, அதற்கெதிரில் உலக்கை ஒன்று நட்டுவிடவேண்டும்.

மேற்சொன்னபடி செய்து அதற்கப்பால் நான்குமார் தூரத்தில் முன்போல் அறுகோணமிட்டு, அந்த அறுகோண சக்கரத்தின் நடுவில் ஒரு சிறு பையனிடத்தில் சேவுநரிசிகொடுத்து உட்காரவைத்து, அஷ்டமாத் தைலத்தை விரலில்தொட்டு அங்குள்ளவைகளுக் கெல்லாந் தடவி, நீ எதிரியை மோடியெடுக்கும்படியாக அழைப்பாயாகில் எட்டுதிக்கும் பந்தனம்செய்து காளபைரவர் வந்து உனக்குத் துணையாக விருப்பார். அன்றியும் நீ தியானிக்கவேண்டியது என்னவெனில், அம்மணி இந்த ஊர்கார்க்கும் மகமாயி என்பவளே வாவா ஓம் ஸ்ரீயும் சங்வும் வாவா, அஷ்டவீரசக்தி வாவா, அங்வும் எங்வும் அஷ்டதிக்கும் உன்பந்தனம் அம்மணி, வாலையும் வாராகியும் வந்து எனக்கருள் புரிந்து என்முன்வரும் எதிரியை என் வசமாக்குவாய், புவனகிரியும் பூமாதேவியும் புகழாகவிருந்து போனவன் வாயில் மண்ணைத் தெள்ளிப் போடுவாயென்று சொல்ல, நீ நினைத்தபடி ஆகாசமோடியானது ஆகும்.

அன்றியும் ஓம் கங் உத் லிவியும் குட்டிச்சாதி நீயென் எதிரிவாயில் மண்ணைப்போடு என்றுசொல்லி நீ உட்கார்ந்துகொண்டிருக்கவேண்டும். அப்போது எதிரியானவன் மகா வலிமைகளைப்பேசித் துள்ளித் துடிதுடித்து இந்த மோடியை இதோ க்ஷணத்தில் எடுத்துவிடுகிறேனென்று மோடிக்குழல் ஊதிவருவான். இந்த மந்திரம் உச்சாடனம் இவையெல்லாம் தெருமண்சமானமென்றுவரும் எதிரியின்மேல் சிறுபையனை சேவுநரி

சியை யெடுத்து வீச அவன்மேல்போட அவன் தேகமெல்லாம் அக்கினிபோல் எரியும், தேளும் நண்டுவாக்களியுந்தோன்றிக் கொட்டும். மறுபடியும் சேஷரிசியை எடுத்து ஓம் என்று அவன் மேல்போட ஒருகாததூரங்கொண்டுபோய் விட்டுவிடும்.

அப்படி ஒரு காததூரம்போனவன் மறுபடியும் மகா கோபத்துடன் படபடவென்று மோடிக்குழல் ஊதிக்கொண்டு வருவான். வந்து அறுகோணசக்கரத்தின் அருகில் வந்து நிற்பான். அப்போது மறுபடி சேஷரிசியை அவன்மேல்போட, அவன் ஊதிவந்த மகுடக்குழல் தூள் தூளாகப்போகும். போனவுடன் அவன்பாதம் பூமியில் பதியாமல் தேள் கொட்டின விஷம்போலேறிட திகைத்து அழுதோடுவான்.

அவன் ஓடின உடனே இன்னொருவன் உச்சாடனம் முதலானதும் செய்துகொண்டு, இந்த மோடியை நான் எடுக்கிறேனென்றும் மகுடக்குழை ஊதி இடபாகமாக அவன் வருவானாகில் அதுகண்டு சேஷரிசியை எடுத்து அவன்மேல்போட, அவனைக் குட்டிச்சாத்தான் கெட்டித்தள்ளிக் கொண்டுபோய் இரண்டுகாத தூரத்திற் கப்பால் விட்டுவிடும். அவன் மறுபடியும் திரும்பி மகுடக்குழல் ஊதிக்கொண்டு அறுகோணத்தைத் தாண்டிவந்து சொல்லுவான், இந்த மோடிவைத்த தலைவனையும் மோடியையும் இதோ க்ஷணத்திற் கொண்டுபோகிறேனென்று உச்சாடன மந்திரத்தை உச்சரித்து மோடிக்குழை ஊதிவருவான்.

அது நீ கண்டு அஷ்டசித்தி மையை விரலில் தோட்டு அவன்முகத்தில் தெளிக்கும்படியாகச் செய்து, கடுகளவாகிலும் அவன் முகத்தில் பட்ட உடனே வேதாளம் அவனைக்கொண்டுபோய் வனந்திரத்திற் போட்டுவிடும். மறுபடியும் இவன் குழை ஊதிக்கொண்டு உலக்கையருகில் வருவான், அப்போது உலக்கையானது கிளம்பி மாறிமாறி அடிப்பதுடன் சாரைப்பாம்பும் பிடுங்கும், செய்யான், கருந்தேள், செந்தேள், செங்குளவி இவைகளெல்லாமும் கொட்ட மரணமாகிவிடுவான்.

அவன் மரணமானவுடனே இன்னொருவன் எழுந்து, இந்தமோடியை க்ஷணப்போதில் எடுத்துப்போடுகிறேன் பாரென்று மகிடக்குழையும் உச்சாடனமும் செய்து, பேதனத்தோடு திக்குக்கட்டு கட்டிக்கொண்டு வருவான். அது நீ கண்டு அஷ்டதிக்கு தைலத்தில் கைவிரலில் தொட்டுக் கொண்டு சேஷரிசியை எடுத்து யெதிரிமேல் விட்டெறிய வேதாளம் ஓடிவந்து அவனைத்தூக்கிக் கொண்டுபோய் கால்காததூரத்தில் போட்டுவிடும். குழையானது உடைந்து பொடிபொடியாகப் போய்விடும். அப்படிப்போயினும் மறுபடியும் அவன் குழலை ஊதிக்கொண்டு உலக்கையைத் தாண்டிவருவான். அதுகண்டு அஷ்டசித்தி தைலத்தை விரலில்தொட்டு அவன்மீதிலெறிந்து அத்துடன்சேஷரிசிபோட உடனே கத்தியானது கிளம்பிஅருக்கடையாக வெட்டும். சபையோர்களெல்லாம் அதிசயமாகப் பார்ப்பார்கள். தேவனோ தேசிகனோ குகனோவென்று கூறி ஜனங்களெல்லாம் கும்பிடுவார்கள்.

அவர்கள்போகப் பின்னும் சிலபேர்கள் மோடிக்குழை யூதிவந்து இந்த மோடியை வேரோடே பிடுங்கிப்போடுகிறோம் பாரென்று வித்வே

சணமும் உச்சாடனமும் செய்து மகிடிகுழையூதி வருவோரைப் பார்த்தவுடன் அஷ்டசித்திமையை விரலில்தொட்டு, சேஷரிசியை ஒருபிடியள்ளி அவர்கள் மேல்யெறிய, கரிவண்டு செய்யானும் குளவியு மாகத்தோன்றி அவர்களைப்பிடுங்கும். அத்துடன் தேகமெல்லாம் அக்கினிபோல் எரியும் ஆடையானது பற்றியெரிந்துபோகும். ஊதி வந்த மகிடக்குழை உடைந்துபோகும். வாயிலும், மூக்கிலும், காதிலும், உதிரம் பெருகும். குட்டிச்சாத்தான் தூக்கிக்கொண்டுபோய் ஆறுகாதத்திற் கப்பால் போட்டுவிட்டு வருவான். ஆகாயமோடியை யாரும் வெல்லார்கள், குரு மகிமை யிதுவாகும்.

அப்படிக்கிருந்தும் சிலர் கத்தி நட்டிருப்பதையுந் தாண்டி நீ உட்கார்ந்துகொண்டிருக்கு மிடத்திற்குப் பின்வந்து, மந்திர உச்சாடனங்கள் செய்து எலுமிச்சம் பழத்தை யெடுக்க வருவார். அப்போது நீ அஷ்டமாரணத் தைலத்தைத் தொட்டு ஓம் ஐயும் பகிரத்தென்று பழத்தைத்தொட ஆகாயமார்க்கம் யெழும்பிவிடும், அப்போது மகிடக்குழை யூதி[illegible]ந்த மந்திரக்காரரில் சிலர் பழத்தைத் தடுக்கும்படி உடனே அணைவரும் பார்க்க ஆகாயமெழும்புவார்கள், அப்போது பழமானது மேகத்தில் மறையும், அப்போது மந்திரக்காரர்கள் மதிமயங்கித் திகைத்து நிற்பார்கள்.

அதுகண்டு அஷ்டமாசித்தி தைலத்தை விரலில்தொட்டு கத்திக்குத் தடவி உச்சாடனம் செய்தனுப்ப, அந்தக்கத்தியானது ஆகாயமார்க்கமாகயெழும்பி அருக்கடையாக மந்திரக்காரர்களை யெல்லாம் வெட்டும். அப்போது அவர்கள் சிரசு சரங்கோத்தாற்போல் பூமியின்மேல் விழும். வேடிக்கைப்பார்க்கும் ஜெனங்களெல்லாம் வெகுண்டுமெச்சி மகிழ்வார்கள். மகிடக்குழையூதும் மந்திரக்காரர்களெல்லாம் மனதுவாடி, இவன் நமக்கு நமனென்றுயெண்ணி ஏங்கி அழுவார்கள்.

இப்படி அநேகர் அழ, சிற்சிலர் அசாத்தியமாகப் பேசிக்கொண்டு மகிடக்குழைஊதி, கால்விருது வெண்டையமுமிட்டுப் பற்பலவிருதுகள் பூண்டு பட்சியிறகு கொக்கு, காடை இவைகளின் இறகைசூடி தனித்தனியாக மகிடிகள் ஊதி ஸ்தம்பனம் உச்சாடனம்செய்து சபையில் வந்துநின்று, இந்த மோடிவைத்தை எதிரியைக்கட்டி இக்கணமே யெடுக்கிறோமென்றுசொல்லி வருவார்கள்; வந்தவுடன் நீ ஆகாயம்போன பழத்தை அழைப்பிக்கும்படி ஓம்-கிலீயும்-கிராம்-கிறியும்-கிலியும் எக்கண தேவ கொண்டுவாவென்றழைக்க, எழுபழமும் இருப்பிடம் வந்துசேரும். சேர்ந்தவுடன் மேற்சொன்ன மந்திரத்தை நூறுதரம் செபித்து அஷ்டசித்திமையை விரலில்தொட்டு, புளியன் இலையை உருவிமகிடி யூதிவந்த மந்திரக்காரர்மேல்போட அது கருந்தேள் செய்யானுகத்தோன்றி அவர்களைப்பிடுங்கும். அதுவுமன்றி செங்குளவி கருங்குளவி கொட்டும். செந்நாய் கருநாய்ப் பிடுங்கும்; வாயால் உதிரங்கக்குவார்கள். மகிடியது உடைந்துப் பொடிபொடி யாகப்போகும். அத்துடன் அவர் அசைந்து போய்விடுவார்கள்.

அவர்கள்போக இன்னும் சிலர் மந்திர உச்சாடனம்செய்துகொண்டு மோடிவில்வைத்திருக்கும் வீரகனையெடுக்க வருவார்கள். அது அறிந்து

நீ இறீம் ஓம் ஶ்ரீயும் அங்கிரியும் சக்கம்மா விராகனை ஆகாயங்கொண்டு போவாய் தாயேயென்று அஷ்டசித்தி தைலத்தைவிரலில்தொட்டு விராகனைத்தொட அது ஆகாயம் யெழும்பி மேகத்திற்போய் மறையும். அதுகண்டு மந்திரக்காரர் அந்நூடன் மகிடியூதி ஆகாயம்யெழும்புவார்கள். அதையறிந்து நீ அஷ்டமாசித்தி தைலத்தைத்தொட்டு வேதாளமந்திரத்தை ஜெபிக்கவும், அதாவது, ஓம் கிலீயும் வங்யம் கிலியும் வேதாளமே யென்பங்கில் வாவாயென்றி உரு நூறுஜெபித்து தைலத்தைக் கத்திற்றடவி பிரயோகஞ்செய்ய இந்தக்கத்தியானது ஆகாய மார்க்கமாக எழும்பி அநேகம் பேர்களை அருக்கடையாகவெட்டும். அதில் மாண்டுபோவார் மந்திரக்காரரும் மோடிக்காரரும். இப்படியாக நாற்றிசையிலுள்ளவரும் மோடியை வந்து பார்த்து, மகிடியூதும் மந்திரக்காரர்கள் உன்னைவந்து வணங்கி, நாங்கள் கடைத்தேரும்படி கிருபைசெய்ய வேண்டும் என்றும் கருணுள்ள தேவனே யென்றும் எங்கள் பெண்பிள்ளைகள் பிழைக்கும்படியாகப் போகவிடை தருவீரென்றும் இந்தமோடியெடுக்க எங்களால் முடியாது எங்கள்மீது இரக்கம்வைத்து நீ காப்பாற்றவேண்டுமென்று காலில்விழுந்தும் அவர்கள் பூண்டுவந்த விருதெல்லாங் கழட்டிவந்து வைப்பாராகில் அப்போது மரணமடைந்தவர்களை எழுப்பித் தருகிறேனென்றுசொல்லி சிவமூர்த்தியை ந-ம-யசி-ஓம்-மறியிம்-மய்யும்-மருஞவாய்-ஶ்ரீவும்-சவ்வும் என்னும் தியானத்துடன் இருநூறு ஜெபித்து செத்தப்பிணம் யெழுந்திருக்கவேண்டும் சிவாயநமா வென்று ஐங்கோலத்தைதொட்டு, வெகுஜனம்பார்க்கத் தெளிக்க சஞ்சீவியான ஐங்கோலமை பட்டவுடன் செத்தப் பிணமெல்லாம் யெழுந்திருக்கும். எழுந்தவுடன் உன்காலில் விழுந்துப்பணிவார். அப்போது நீ அவர்களை வாழ்த்தி, அவர்கள் விருதுகள் யாவையுங்கொடுத்து அவரவர்கள் இருப்பிடம் அனுப்பிவைக்க அனைவரும் உன்னை வாழ்த்திக் கொண்டாடுவார்கள்.

319. நரியாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் நரியெலும்பைக் கையிலெடுத்து அனைவருக்கும் காட்டி, இந்த எலும்புக்கு ஒரு மந்திரம்போட்டு நரியாகும்படி செய்கிறேன் பாரென்று அஷ்டமாசித்திமையையும் ஐங்கோலக்கருவையுந் தடவி கூடையின்மேல்போட நரியுருவாயோடும். பார்ப்போர்கள் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள். ஆனால் அந்த நரியைப்பிடித்து உடனே மறைத்துவிடவேண்டும்.

320. நாயாகும் ஜாலம்.

நாயெலும்பைக் கைகிலெடுத்து சபையோர்க்குக்காட்டி, இந்நாயெலும்பை நாய்குட்டியாகச் செய்கிறேன் பாரென்று, அஷ்டசித்திமையும் ஐங்கோலக்கருவையும் பூசி பூமியில் வைத்து ஒரு கூடையைப் போட்டுமூடி, மந்திரம் செய்பவன் போல் சற்றுநேரமிருந்து, சல் மலையாளபகவதி நாய்க்குட்டியாகச் செய்யடியென்று மூன்றுதரம்சொல்லி கூடையைதிரக்க நாய்க்குட்டி குலைத்துக்கொண்டு சபையிலோடும். பார்த்து ஆச்சரியப்படுவார்கள்; உடனே முன்போல் மறைத்துவிடவும்.

28 MAY 1930

321. பூனையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் பூனையின் அஸ்தியை எடுத்து அனைவருக்குங் காட்டி இந்த அஸ்தியைப் பூனையாக்குகிறேனென்று அஷ்டமாசித்திமையும் ஐங்கோலக் கருவையும் அஸ்தியிற்பூசி தாழவைத்து ஒரு கூடையை மேலே மூடிவிட்டுப் பின்பு மூன்றுசிரியக்கல்லைக் கையிலெடுத்து இருபதடி தொலைவாகப்போய் நின்றுகொண்டு அந்த மூன்றுகல்லையும், மந்திரமோதிப்போடுவதுபோல் ஒவ்வொன்றாகக் கூடையின்மேல்விட்டெறிந்து கூடையருகில் வந்து,பகவதி! காளி!பூனைக்குட்டியாகச் செய்யடியென்று மூன்றுதரம் சொல்லிக் கூடையைத்திறந்து காட்ட பூனைகுட்டியாகத் தோற்றப்படும். பார்ப்போர் இது காளிவசியமென்று களிப்படைவார்கள்.

322. முசலாகும் ஜாலம்.

முசல் அஸ்தியி லொன்றைக் கையிலெடுத்து அனைவர்களுக்குங் காட்டி, இந்த அஸ்தியை முசலாக்குகிறேனென்று அஷ்டமாசித்திமையும் ஐங்கோலக் கருவையும் அந்த எலும்பிற்குப்பூசிப் பூமியில் வைத்து, முன்போல் கூடைபோட்டுமூடி, அடா குட்டிச்சாத்தான்! இந்தக் கூடையிலிருக்கிற எலும்பைக் கொண்டுபோய்க் காட்டி லெறிந்து விட்டு, காட்டிலிருக்கும் ஒரு முசல்குட்டி பிடித்துவந்து இந்தக் கூடைக்குள் வையடாவென்று சற்றுநேரம் பொருத்துக் கூடையைத் திறந்து காட்ட முசல் துள்ளியோடும். சபையோர்களும் நம்பி ஆச்சரியப் படுவார்கள்.

323. முள்ளம்பன்றியாகும் ஜாலம்.

முள்ளம்பன்றியின் முள்ளாகிலும் அஸ்தியாகிலும் எடுத்துச் சபையோர்களுக்குக் காட்டி அந்த அஸ்தியை முள்ளம்பன்றியாகச் செய்கிறேனென்று அஷ்டமாசித்திமையைத் தொட்டுத் தடவி ஐங்கோலக் கருவைப்பூசிப் பூமியின்மேல் வைத்துப் பெரியக்கூடையைப் போட்டுமூடி, சபையோர்களெல்லாம் பிரமிக்கும்படியாகக் குட்டிச்சாத்தான்! நீ சீக்கிரமாகச்சென்று இந்த அஸ்தியைக் கொண்டுபோய் அடவியில் எறிந்துவிட்டு அடவியிலிருக்கும் முள்ளம்பன்றி ஒன்றைப் பிடித்துக்கொண்டுவந்து இந்தக் கூடைக்குள் வையாவென்று அந்தப் பொய்மையை அப்பா லெறிந்துவிட்டுச் சற்றுநேரம் பொருத்து கூடையைத் திறந்து காட்ட முள்ளம்பன்றியைப்போல் தோற்றமாகி முள்ளுகளைச் சிலுப்பிக்கொண்டு நிற்கும். கண்டோர்கள் கண்மயங்கிப் பிரமிப்பார்கள். ஆனால் முன்போல் பன்றியை மறைத்துவிடவும்.

324. மானுகும் ஜாலம்.

பின்னமில்லாமல் உரித்த மான்தோலை எடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்தத் தோலுக்கு உயிர் கொடுக்கிறேன் பாரென்று அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டுத் தோலின்மேல்தெளித்து, ஐங்கோலக் கருவையும்பூசி தோலின்கழுத்தில் ஒருகயிறுகட்டிதோலின்மேல்வெள்ளைதுப்பட்டியைப் போட்டு மூடி, மயானருத்திரி! மான்தோலுக்கு உயிர்

கொட்டியென்று மூன்றுதரம் சொல்லித் துணியையெடுக்க மானுருவா கிக் குதிக்கும். அதைக்கண்டவர்கள் யாவரும் மயானருத்திரி வசிய மென்று மயங்குவார்கள். உடனே மறைத்துவிடவும்.

325. மாடாகும் ஜாலம்.

பசுவின் தோலையாயினும் எருதின் தோலையாயினும் எடுத்து அனை வருக்குங்காட்டி, இதோ ஒருமந்திரம்சொல்லி க்ஷணநேரத்திற்குள் உயிர் உண்டாகச்செய்கிறேன் பாரென்று வாலையைத் தியானித்து, அஷ்டமா சித்திமையை விரலில்தொட்டுத் தோலின்மேல் தெளித்து ஐங்கோலக் கருவையும்பூசி பூமியில்வைத்து பெரிய துப்பட்டியைப் போட்டுமூடித் தூக்கி, சாமுண்டி! சாமளாதேவி! இந்தத் தோலுக்கு உயிர்கொடுப்பா யென்று மூன்றுதரம்சொல்லி மேல்மூடிய துணியைவாங்க மாடுருவாகத் தோற்றும். பார்ப்போர்கள் இது சாமளாதேவி வசியமென்று ஆச்சரி யப்படுவார்கள்.

326. எருமைமாடு ஆகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் எருமைத் தோலாயினும் எருமைக்கடா தோ லாயினும் எடுத்து அனைவர்க்குங்காட்டி, இந்தத்தோலுக்கு உயிர்கொடுக் கிறேன் பாரென்று வைரவரைத் தியானித்து அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டுத் தோலின்மேல் தெளித்து ஐங்கோலக் கருவையும் பூசிப் பூமியில்வைத்து, ஒரு கருப்புக் கம்பளியை யதின்மேல்மூடி, ஓ சங் கிலிக்கருப்பா! சிக்கிரம் இந்தத் தோலுக்கு உயிர் கொடுப்பாயென்று சொல்லி, சற்றுநேரம்பொருத்து மூடியகம்பளியைத் திரக்க, தோல் எரு மாடுருவாகத் தோற்றும். சபையோர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

327. ஆடாகும் ஜாலம்.

ஆட்டுத்தோலைக் கையிலெடுத்து அனைவருக்குங் காட்டி, இதோ இந்தத்தோலை, கண்மூடிக் கண்திறக்குமுன் ஆடாகும்படி செய்கிறேன் பாருங்களென்று வாலையை தியானித்து, பைரவர் மந்திரத்தை நூற் றெட்டு ஜெபித்து அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டுத் தோலின் மேல் தெளித்து ஐங்கோலமையும்பூசிப் பூமியின்மேல் வைத்து, துப்பட் டியை மேலேபோட்டு மூடிச் சற்றுநேரம் பொறுத்து திறந்துக்காட்ட ஆடுருவாகத் தோற்றமாகி எழுந்து நிற்கும். சபையோர்கள் ஆச்சரியப் படுவார்கள்.

328. ஆனையாகும் ஜாலம்.

ஒரு வெட்டவெளியின் மைதானத்திற் சென்று யானையின் அஸ் தியை ஒன்று கையில்பிடித்து அனைவருக்குங் காட்டி, இந்த யானையின் அஸ்தியை விட்டெறிந்து யானையாக ஓடிவரும்படி செய்கிறேனென்று பைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து வாலையைத் தியானித்து ஒருவருக்குந் தெரியாமல் அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டு, ஆனை அஸ்திக்குத் தடவி, ஐங்கோலக்கருவிற் கொஞ்சம்பூசி அனைவரும்பார்க்க அதை தூங்கி விட்டெறிய உடனே யானையுருவாகத் தோற்றமாகி எதிரில்

வீரிட்டு ஓடிவரும். அப்போது வேடிக்கைப் பார்ப்போர்களெல்லாம் ஓடு வார்கள். உடனே மறைத்துவிடவும்.

329. புலியாகும் ஜாலம்.

புலியடங்கும்படியாகப் போன் ஒன்றுசெய்து, அந்த போனை ஜால மாடுமிடத்திற் கொண்டுவந்து நிறுத்திப் பழுதில்லாமல் உரித்த புலித் தோலொன்றைக் கையிலெடுத்து, சபையிலுள்ள யாவர்க்குங் காட்டி, இந்தத்தோலைப் போனுக்குள் போடுகிறேன் புலியாகுது பாரென்று பைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி அஷ்டமாசித்திமையை விர லில்தொட்டுத் தோலின்மேல் தடவி ஐங்கோலக்கருவும் பூசிப் போனுக் குள்போட்டு மேலே போன்மறையும்படியாகத் துணியைப் போட்டுமூடி சல்மலையானபகவதி! புலித்தோலைப் புலியாகச் செய்வாயென்று மூன்று தரம்சொல்லித் துணியையெடுக்க புலிவுருவமாகத் தோற்றமாகி கர்சிக் கும். கண்டவர்கள் மனங்கலங்கி ஆச்சரியப்படுவார்கள்.

330. கரடியாகும் ஜாலம்.

ஜாலமாடு மிடத்திலாவது இன்னம் எந்த விடத்திலாவது ஒரு கொம்பை நட்டு, பின்பு கரடித்தோலை எடுத்து வேடிக்கைப் பார்ப்போர் கள் அனைவருக்குங்காட்டி அதன் கழுத்தில் கயிறுகட்டி நட்டிருக்கும் கொம்பிற்கட்டிவிட்டு, இந்தத் தோலுக்கு உயிர்கொடுத்துக் கரடியாக்கு கிறேனென்று பைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அஷ்டமா சித்திமையை விரலில்தொட்டுத் தோலின்மேல் தெளித்து ஐங்கோலக் கருவைப்பூசி, தோலின்மேல் துப்பட்டிபோட்டு மூடிவிட்டு, அம்மணி! காளிகாதேவி! கட்டினகரடி தோலுக்குயிர் கொடுப்பாயென்று மூன்று தரஞ்சொல்லி துணியைவாங்க கரடியுருவாக கர்சிக்கும், பார்ப்போர்கள் பிரமித்து இதுகாளியுடைய வசியமென்று நம்புவார்கள்.

331. மந்தியாகும் ஜாலம்.

குரங்கின் தோலையெடுத்து அனைவருக்குங்காட்டி இந்தத்தோலுக்கு உயிர் கொடுக்கிறேன் பாரென்று வாலைமந்திரத்தை நூற்றெட்டுதரம் ஓதி, பைரவரைத் தியானித்து அஷ்டமாசித்தி மையை விரலில் தொட் டுத் தோலின்மேல் தெளித்து ஐங்கோலக்கருவையும் பூசி பெரிய கூடையை போட்டுக் கவிழ்த்துவிட்டு, அம்மணி! வாலை பரமேஸ்வரி! குரங்குதோலுக்கு சுடியசிக்கிரத்தில் உயிர் கொடுப்பாயென்று மூன்று தரஞ்சொல்லி, கூடையைத் திரந்துகாட்ட குரங்குருவாகிக்குதித்தோடிக் குதிக்கும். அதனைப் பார்ப்போர்கள் யாவரும் பிரமித்து நிற்பார்கள்.

332. கீரிப்பிள்ளையாகும் ஜாலம்.

கீரிப்பிள்ளைதோலை பழுதில்லாமல் உரித்து வைத்திருந்து, ஜால மாடுமிடத்தில் அந்தத்தோலை அனைவருக்குங்காட்டி அந்தத் தோலுக்கு உயிர் கொடுத்து க்ஷணநேரத்திற்குள் எழுப்புகிறேன் பாரென்று வாலை மந்திரத்தை நூற்றெட்டுதரம் ஓதி பைரவரைத்தியானித்து, அஷ்டமா சித்தி மையையும் ஐங்கோலக்கருவையும் தோலின்மேல் தெளித்துத் தாழ்வைத்துக் கூடையைப்போட்டுமூடி, அடா குட்டிச்சாத்தான்! சீக்கி

ரம் சீக்கிரம் ஜல்தி ஜல்தி சீரித்தோலுக்கு உயிர்கொடடா, என்று மூன்றுதரஞ் சொல்லிக் கூடையைத்திறக்க உயிருள்ளக் கீரிப்பிள்ளையாகத் தோற்றும். பார்ப்போர்கள் பிரமித்து இது குட்டிச்சாத்தான் வேலையென்று ஆச்சரியப்படுவார்கள்.

333. அஸ்வமாகும் ஜாலம்.

குதிரையின் முதுகெலும்பை எடுத்து அனைவருக்குங்காட்டி, இந்த எலும்பை விட்டெறிகிறேன் அஸ்வமாகவோடிவரும் அற்புதத்தைப் பாருங்களென்று பைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, அஷ்டமாசித்தி மையை விரலில்தொட்டு எலும்பிற்குத் தடவி, ஐங்கோலக் கருவையும் பூசி அனைவரும்பார்க்க விட்டெறிய அஸ்வமாக ஓடிவரும். அங்குள்ள பேர்கள்யாவரும் ஆச்சர்யப்படுவார்கள்.

334. கழுதையாகும் ஜாலம்.

ஆண்கழுதை வாலாயினும் பெண்கழுதை வாலாயினும் எடுத்து, ஜாலமாடுமிடத்தில் அனைவருக்குங்காட்டி, இந்தவாலுக்கு உயிர்கொடுத்துக் கழுதையாக்குகிறேனென்று பைரவர் மந்திரத்தை முன்போல் ஓதி, அஷ்டமாசித்தியையும் ஐங்கோலக் கருவையுந்தடவி வடக்குதிக்காக விட்டெறிய, கழுதையுயிர்கொண்டோடிவரும். பார்ப்போர்க்கெல்லாம் இது பைரவருடைய வசியமென்று நம்பி ஆச்சரியப்படுவார்கள்.

335. எலியாகும் ஜாலம்.

எலித்தோலைப் பழுதில்லாமல் உரித்து மேற்கூறியபடி ஒன்றுங் குறைவில்லாமற் செய்து, அத்தத்தோலை எலிபோனில் போட்டு, அதின் மேலொரு துணியைப்போட்டு மூடிச் சற்றுநேரம்பொருத்துத் துணியை யெடுக்க, போனுக்குள் எலியுலாவும். ஆச்சரியப்படுவார்கள்.

336. பெருச்சாளியாகும் ஜாலம்.

பெருச்சாளித் தோலைப் பழுதில்லாமல் உரித்து, மேற்சொன்னபடி ஒன்றுந்தவறாமல் முடித்துத் தோலைக் கீழேவைத்து ஒரு கூடையைப் போட்டுமூடிச் சற்றுநேரம் பொருத்துத் திறந்துகாட்ட உயிருள்ள பெருச்சாளியாகத்தோற்றும். அனைவரும் சந்தோஷப்படுவார்கள்.

337. அணிப்பிள்ளையாகும் ஜாலம்.

அணிப்பிள்ளைத் தோலைப்பழுதில்லாமல் உரித்து, மேற்சொல்லியபடி யாவையுமதற்குச்செய்து பூமியில்வைத்துக் கூடையைப்போட்டு மூடி, சற்றுநேரம் பொருத்துத் திறந்துகாட்ட உயிருள்ள அணிப்பிள்ளையாகவிருக்கும். யாவரும் பார்த்து அதிக சந்தோஷப்படுவார்கள்.

338. எறும்பாகும் ஜாலம்.

ஐக்கோலக்கருவைக் கொஞ்சந் தொட்டு கையிற் பூசிக்கொண்டு அஷ்டமாசித்து மையை விரலில் தொட்டுமண்ணை அள்ளி எறும்பாக

வேணுமென்று போட, எறும்பு புத்தீசல் புறப்படும். சபையோர்கள் மதிமயங்கி மனங்களிப்பார்கள்.

339. கோழியாகும் ஜாலம்.

கோழிமுட்டையில் ஒன்றையெடுத்து சபையோர்களுக்குக்காட்டி, இந்த முட்டைக்கு உயிர்கொடுத்துக் கோழியாக்குகிறேன் பாரென்று வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பைரவரைத் தியானித்து, அஷ்டமாசித்து மையை விரலில்தொட்டு முட்டையின்மேல் தடவி, பிறகு ஐங்கோலக்கருவைத் தொட்டுப்பூசி பூமியின்மேல் வைத்துக் கூடையைப்போட்டுமூடி ஓம் பகவதி! காளி! கோழிமுட்டைக்கு உயிர் கொடுத்துக் கோழியாகச் செய்வாய் அம்மணி! என்று மூன்றுதரஞ் சொல்லிக் கூடையைத்திறந்துகாட்ட உயிருள்ள கோழியைப்போல் தோற்றமாகி, கொக்கரகோ வென்று கூவும், அங்குள்ள அனைவர்களும் ஆச்சரியப்படுவார்கள், ஆனால் சாவல் பெட்டை எதாக வேண்டுமென்று நினைத்து மையைத்தடவுகின்றையோ அதுபோலாகும்.

340. வான்கோழியின் ஜாலம்.

வான்கோழியின் முட்டைக்கு மேற்கூறியவாறுசெய்து, பெரிய கூடைபோட்டுக் கவிழ்த்துவிட்டு, சல்மலையாள பகவதி! உயிர்கொடு யென்று மாத்திரைக்கோலால் கூடையை மூன்றுதரந்தட்டி, திறந்து பார்க்க உயிருள்ளவான்கோழிபோல் தோற்றும். பாப்பவர்கள்கண்டு களிப்படைவார்கள்.

341. கோக்காகும் ஜாலம்.

கொக்கெலும்பை எடுத்து மேற்சொல்லியபடி செய்து, பூமியில் வைத்து கூடையைப்போட்டு மூடி, மாத்திரைக்கோலால் மூன்றுதரந் தட்டித் திறந்துபார்க்க உயிருள்ள கொக்குபோல் தோற்றும்; ஆச்சரியப் படுவார்கள்.

342. வாத்தாகும் ஜாலம்.

ஒரு வாத்துமுட்டையை எடுத்து மேற்சொல்லியபடி செய்து பூமியின்மேல் கூடையைப்போட்டு மூடி, வைரவர்மந்திரத்தை 108-தரஞ் செபித்து மாத்திரைக்கோலால் கூடையை மூன்றுதரந் தட்டிப் பிறகு திறந்து பார்க்க உயிருள்ளவாத்துப்போல் தோற்றும். ஆச்சரியப்படுவார்கள்.

343. காடையாகும் ஜாலம்.

காடைமுட்டை ஒன்றையெடுத்து மேற்சொல்லியபடி செய்து பூமியில் வைத்துக் கூடைமூடி, சல் மலையாளபகவதி! காடைமுட்டையைக் காடையாக்குவாயென்று மூன்றுதரஞ்சொல்லி மூன்றுதரம் மாத்திரைக் கோலால் கூடைத் தட்டித் திறந்துபார்க்க காடையுயிருடன் உலாவும் ஆச்சரியப்படுவார்கள்.

344. கௌதாரியாகும் ஜாலம்.

கௌதாரிமுட்டை ஒன்றையெடுத்து மேற்சொல்லியவாறு செய்து பூமியின்மேல்வைத்துத் தட்டைமூடி வைரவரைத்தியானித்து மாத்திரைக்கோலால் மூன்றுதரம் தட்டி கூடையைத்திறக்க உயிருள்ள கவுதாரி உலாவும்; பாப்போர்கள் பிரமிப்பார்கள்.

345. மைனாவாகும் ஜாலம்.

மைனாவின் முட்டையொன்றை எடுத்து மேற்சொல்லியவாறு செய்து பூமியின்மேல்வைத்துக் கூடையைப் போட்டுமூடி அம்மணி! மயானருத்திரி! மைனா முட்டையை மைனாவாகச்செய் என்றுமூன்றுதரம் தட்டை மாத்திரைக்கோலால் தட்டி, தட்டைத் திறந்துகாட்ட உயிருள்ள மைனாஉலாவும்; பார்த்துத்திகைப்பார்கள்.

346. கிளிப்பிள்ளையாகும் ஜாலம்.

கிளிமுட்டை யொன்றையெடுத்து மேற்சொல்லியவாறு செய்து பூமியின் மேல்வைத்துத் துணியைப்போட்டுமறைத்து, வாலையைத்தியானித்து, துணியைத் திறந்துகாட்ட கிளிப்பிள்ளையானது கொஞ்சும்; அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

எவ்விதப்பட்சி ஜாதிகளையும் மேற்சொல்லியவாறு செய்து காட்டலாம் ஆனால் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தேவதைகளைத் தியானிக்க வேண்டும்.

மேற்சொலியமையின் மகிமையாதெனில், எந்தவித்தை செய்தபோதிலும் பார்ப்போர்கண்களுக்கு அவ்வவ்வுருவம்போல் தோற்றுமேயன்றி நிஜமானதாக ஒன்றுமேயாகாது. தோற்றுவதும் மாயமாய் மறைந்துவிடும். பெரியோர்கள் கூறியவண்ணம் கருவில்லாதவித்தையில்லை குருவில்லாத சிஷியரில்லை. ஆதலால் கருவை முடித்துக்கொண்டால் சகல சித்தும் விளையாடலாம்.

347. நெற் பயிருண்டாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் நாலடி சதுரத்திற்குச் சதுரம் மண்வெட்டியால் கொத்தி, சுற்றிலும் வரப்புபோட்டு, பிறகு ஆழாக்குப் பச்சைநெல்லை எடுத்து அனைவர்க்குங் காட்டி, இந்த நெல்விதைத்து இந்தக்ஷணமே பயிராகி கதிர்விடும்படியாகச் செய்கிறேனென்று வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி, வைரவரைதியானித்து, அஷ்டமாசித்திமையைக் கையில்தொட்டு நெல்லின்மேல் தெளித்து ஐங்கோய கருவையுந் தெளித்து, அந்த நெல்லை மேற்படி பாத்திரத்தில் விரைத்து ஜலம்விட்ட தன்மேல் அகல துப்படியைப்போட்டு மூடிவிடவும். இப்படி ஏழுதரம் திறந்து திறந்து ஏழுதரம் ஜலம்விட்டு, சல் மலையாளபகவதி என்று துப்பட்டியைத் திறக்க பயிருண்டாகி கதிர்விட்டிருப்பதுபோல யாவருக்கும் தோற்றப்படும்; பிரமித்து ஆச்சரியப்படுவார்கள். ஆனால் முதல் திறக்கும்போது முளைவிட்டிருக்கும் இரண்டாவது திறக்கும்போது

இரண்டிலை வெடித்திருக்கும், மூன்றாவது திறக்கும்போது நாலைந்து இலை விட்டிருக்கும். நாலாவது திறக்கும்போது இரண்டு விரக்கடை உயரந் தோற்றும், ஐந்தாவது திறந்து பார்க்கையில் ஜாண் உயரமாகத் தோற்றும், ஆறாவது திறந்துபார்க்கையில் குருத்தோடியிருக்கும் ஏழாவது திறந்து பார்க்கையில் கதிர்விட்டிருக்கும்; கண்டோர்கள் யாவரும் பூரித்துக் களிப்படைவார்கள்.

348. கேழ்வரகு பயிருண்டாகும் ஜாலம்.

கேழ்வரகை எடுத்து அனைவருக்குங்காட்டி மேற்சொன்னபடியாக செய்து பாத்தியில் விரைத்து ஜலம்விட்டுத் துப்பட்டியால் மூடித்திறக்க கேழ்வரகுப் பயிராகி கதிர்விட்டிருக்கும்; ஆச்சரியப்படுவார்கள்.

349. வரகு பயிருண்டாகும் ஜாலம்.

ஆடைபோக்கரவரகை எடுத்து அனைவருக்குங்காட்டி அதற்கு மேற்சொன்னபடியாகச்செய்து, விதைத்து துப்பட்டியை மூடித்திறந்து காட்ட வரகுபயிராகி கதிர்விட்டிருக்கும்.

350. கம்பு பயிருண்டாகும் ஜாலம்.

கம்பை எடுத்து அனைவருக்குங்காட்டி மேற்சொன்னபடி அதற்குச் செய்து விரைத்து ஜலம்விட்டு அந்தப் பாத்திக்கு நாலுபக்கங்களிலும் கெம்புகட்டு, சுற்றிலும் துணியினால் மறைப்புகட்டி சற்றுநேரம் பொறுத்து திரையைவாங்க, கம்புபயிராகிக் கதிர்விட்டிருக்கும்; கண்டவர்கள் பிர[illegible]வியமென்று வாய்மூடிக்கொள்வார்கள்.

351. சோளப்பயிர் உண்டாகும் ஜாலம்.

சோளத்தை யெடுத்து அனைவருக்குங்காட்டி மேற்சொன்னபடி அதற்குச்செய்து விதைத்து முன்போல் சுற்றிலும் திரைமறைவாகக்கட்டிச் சற்றுநேரம் பொறுத்து, சல் மலையாளபகவதி! சோளப்பயிர் உண்டாக்கடி! என்று திரையை வாங்க சோளப்பயிராகி கதிர்விட்டிருக்கும். அனைவரும் கண்குளிரப்பார்த்துக் களிப்படைவார்கள்.

352. நவதானியங்களின் பயிர் முதலானதும் உண்டாகும் ஜாலம்.

கடலை, மொச்சை, உளுந்து, துவரை, கொள்ளு, பச்சைப்பயறு, காராமணி, பட்டாணி, இன்னமுள்ள பயிர்வகைகள் யாவும் உண்டாக்கும் வித்தையாடவேண்டில், அத்தந்தப் பயிர்களை யெடுத்து மேற்படி தவறாமல்செய்து கட்டவேண்டியதை கட்டும் விதைக்கவேண்டியதை விதைத்துவிட உடனே செடியாகிக் காய்கள் காய்த்துத் தொங்கும்படியாக சபையோர்களுக்குக் காட்டவும்; ஆச்சரியப்படுவார்கள்.

353. ஆகாயத்தில் கத்திசுழலும் ஜாலம்.

பட்டாக்கத்தி ஒன்று அல்லது இரண்டு எடுத்து ஜாலமாடுமிடத்தில் அனைவர்களுக்குங்காட்டி இந்தக் கத்தியை ஆகாயமார்க்கமாக விட்

டெறிந்து அந்தரமாகச் சுழலும்படி செய்கிறேனென்று வாலை மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பைரவர் மந்திரத்தை நூற்றியெட்டுதரம் சொல்லி, ஆகாயவாணியைத் தியானித்து அஷ்டமாசித்து மையை விரலில்தொட்டு கத்திக்கும் தடவி ஆகாயமார்க்கமாக விட்டெறிய, அது அந்தரமாக நின்று சக்கரவென்று சுழலும். பார்ப்போர்கள் அந்தர தேவதை வசியமென்று சிந்தைமயங்கி ஆச்சரியப்படுவார்கள். ஆனால் நீ சற்றுநேரத்துக்கெல்லாம் சல் கத்தியே ஆடினதுபோதும் கீழேயிறங்கிவா யென்றழைக்க கத்திபூமியின்மேல் விழுந்துவிடும்.

354. ஆகாயத்தில் பாதுகைடி சுழலும ஜாலம்.

ஒரு பாதுகையையெடுத்துச் சபையோர்களுக்குக்காட்டி மேற்சொன்னபடி தியானித்து மையைத்தடவி ஆகாயமார்க்கமாக விட்டெறிய அது அந்தரமார்க்கத்தில் நின்று, மனிதர் எடுத்துச் சுழற்றுவதுபோல் சுழலும்; ஆச்சரியப்படுவார்கள். ஆனால் முன்போல் அழைத்துக்கொள்ளவேண்டும்.

355. பந்து அந்தரமாகக் குதிக்கும் ஜாலம்.

தனக்கு எத்தனை பந்துகள் இஷ்டமோ அத்தனைப் பந்துகளெடுத்து ருத்ராதேவி மந்திரத்தைத் தியானித்து அஷ்டமாசித்து மையைத்தொட்டு ஒவ்வொரு பந்திற்குந்தடவி பூமியின்மேல்போட ஒன்றும் கீழே நிற்காது. ஆகாயமார்க்கமாகக் கிளம்பும் ஆச்சரியப்படுவார்கள்.

356. தேவகன்னிகைகளைக் காட்டும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் நான்கு எலுமிச்சம்பழமெடுத்து சபையோர்களுக்குக்காட்டி, இந்த நான்குபழத்தை நான்கு திக்கிலெறிந்து நான்கு தேவகன்னிகைகளை அழைப்பிக்கிறேனென்று வாலை மந்திரத்தை ஆயிரத்தெட்டு சபித்து அஷ்டமாசித்து மையைத்தொட்டு நான்குபழத்துக்குந்தடவி நான்குபக்கமும் விட்டெறிய நான்கு தேவகன்னியர்கள் தோற்றமாவார்கள். அனைவரும்பார்த்து அதிசயமிதுவென்று அகமகிழ்வார்கள்.

357. இரவில் வேதாளத்தைக் காட்டும் ஜாலம்.

நான்கு ஊமத்தங்காயை யெடுத்து அனைவருக்குங்காட்டி இந்தக்காயை நான்குபக்கமும் எறிகிறேன் நான்கு வேதாளாம் வரும் வேடிக்கையைப் பாருங்களென்று ஆஞ்சநேயரைப்பூசித்து அஷ்டமாசித்து மையை விரலில் தொட்டு நான்கு காய்க்குந்தடவி நான்குபக்கமும் விட்டெறிய உடனே ஓவென்ற சத்தத்துடன் நான்குபக்கமுமிருந்து வேதாளம் இறைந்துகொண்டுவரும் பார்த்தோர்கள் பயந்தோடுவார்கள். ஆனால் இந்த வேடிக்கையை வெட்ட வெளியான மைதானத்திற்காட்டவேணும்.

358. இரவில் பூதத்தைக்காட்டும் ஜாலம்.

ஒருமைதானத்திற்சென்று நான்கு வெட்டிக்கொட்டையைக் கையிலெடுத்து அங்குள்ள அனைவர்களுக்குங்காட்டி இந்தக் கொட்டையை

மந்திரஞ்சொல்லி நான்குபக்கமும் எறிகிறேன் நான்கு பூதங்களாகத் தோற்றும் பாருங்களென்று ஆஞ்சநேயர் மந்திரத்தை நூற்றியெட்டுதரம் ஜெபித்து, பைரவரைத் தியானித்து, அஷ்டமாசித்து மையை விரலில் தொட்டு நான்கு கொட்டைக்குந் தடவி, பூதமாக தோற்றவேண்டுமென்று நான்குபக்கத்தும் விட்டெறிய நான்குபக்கம் நான்கு பூதமாகத் தோற்றும்; பார்ப்போர்கள் மிரண்டு ஆச்சரியப்படுவார்கள்.

359. பாராங்கல் பறக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு பெரிய பாராங்கல்லைக் கொண்டுவரும்படி சொல்லிச் சபையோர்களைப் பார்த்து, இந்தப் பாராங்கல்லை அந்தரமாக நிற்கச் செய்கிறேனென்று ஆஞ்சநேயர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து வாலையைத் தியானித்து, அஷ்டமாசித்து மையை விரலில் தொட்டுப் பாறையின்மேல் தடவி, சல் பாறையே அந்தரமாக நில்லென்று மூன்றுதரம் சொல்ல, பூமியில் பாறை நின்று எழும்பி அந்தரமாகநிற்கும்; ஆச்சரியப்படுவார்கள். சிலர் அனுமார் வசியமென்பார்கள். நீ சற்றுநேரத்திற்கெல்லாம் பாறையே கீழிறங்கி விடென்று சொல்லவேண்டும்.

360. இரவில் பத்திரகாளியைக் காட்டும் ஜாலம்.

வெட்டவெளியான மைதானத்திற்சென்று ஒரு எலுமிச்சம்பழத்தையெடுத்து அனைவருக்குங் காட்டி, இந்தப் பழத்தை ஆகாயத்தில் எறிந்து பத்திரகாளியை அழைப்பிக்கிறேனென்று பத்திரகாளியைத் தியானித்து, பைரவர் மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து அஷ்டமாசித்துமையை விரலில் தொட்டுப் பழத்தின்மேல் தடவி ஆகாயமார்க்கமாக விட்டெறிய, உடனே பத்திரக்காளி செம்மைகளூபமாய்த் தோற்றப்படுவாள்; பார்த்துப் பணிந்து ஆச்சரியப்படுவார்கள்.

361. இரவில் மும்மூர்த்திகளைக் காட்டும் ஜாலம்.

முன்போல் ஒரு வெட்டவெளியான மைதானத்திற்சென்று மூன்று எலுமிச்சம் பழத்தை யெடுத்து அங்குவந்தவர்களுக்குக் காட்டி, இந்த மூன்று பழத்தையும் ஆகாயம் விட்டெறிந்து, மும்மூர்த்திகளையும் பாருங்களென்று, பைரவர் மந்திரத்தை நூற்றியெட்டோதி வாலையைப் பூசித்து அஷ்டமாசித்துமையை விரலில்தொட்டு மூன்று பழத்திற்குந் தடவி ஆகாயமார்க்கமாக விட்டெறிய உடனே ஈஸ்வரன் பார்வதிசமேதராய் இடபமேறியும், விஷ்ணுலட்சுமியுடன் கெருடவாகன மேறியும், பிரமதேவன் சரஸ்வதியுடன் அன்னவாகன மேறியும் அந்தரமார்க்கமாகத் தோற்றப்படுவார்கள். யாவரும் பார்த்து, தேவர்களைத் தோத்தரித்துக் கொண்டாடிக் கூத்தாடி மகிழ்வார்கள்.

362. இரவில் விசித்திரமான சபாமண்டபம் காட்டும் ஜாலம்.

இரவில் வெட்டவெளியான மைதானத்திற் சென்று சதுரமாகக் கோடுகிழித்து, அங்குள்ளவர்களைப் பார்த்து, இந்த மைதானத்தில் விசித்

திரசபாமண்டபம் பாருங்களென்று நான்கு தேச்சக்காயெடுத்து, தந்திரமாக அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டு நான்குகாய்களுக்குந் தடவி கோட்டின் நான்குமூலையிலும் வைத்து வாலைமந்திரத்தை 108-ஜெபித்து பைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி ஒரு எலுமிச்சம் பழத்தையெடுத்து நான்கு பத்தையாக அறுத்து நான்குதிக்கிலும் வீசியெறிய விசித்திரமண்டபம் தோற்றும். சகலரும்பார்த்து இது சாமுண்டி வசியமென்று ஆச்சரியப்படுவார்கள். ஆனால் தோற்றமாகி உடனே மறைந்துவிடும்.

363. அந்தரத்தில் இந்திரன் சபையைக் காட்டும் ஜாலம்.

இரவில் நந்தவனத்தினிடமாகச் சென்று அங்குள்ளவர்களைப் பார்த்து, தெய்வலோகத்தில் வாழும்படியான இந்திரனுடைய சபையை ஆகாயமார்க்கத்திற் காட்டுகிறேன் பாரென்று வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி, பைரவர் மந்திரம் 108-ஜெபித்து ஆகாயவாணியை நினைத்து தேவேந்திரன் சபை தோற்றவேண்டுமென்று மனதில் எண்ணி, ஒன்பது எலுமிச்சம்பழத்தை எடுத்து அந்த ஒன்பது பழத்திற்கும் அஷ்டமாசித்துமையைத் தந்திரமாகத் தடவி, எட்டு திக்கிலும் எட்டுப் பழத்தை விட்டெறிய உடனே முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் கின்னரர் கிம்புருடர் அஷ்டதிக்குபாலகர் காந்தர்வர் முதலானபேர்களும் புடைசூழ இந்திரன் கொலுவீற்றிருக்க, அரம்பை மேனகை ஊர்வசி திலோத்தமை முதலான நடனமாதர்கள் நடனம்புரிய மகா உன்னதமாகத் தோற்றும். பார்ப்போரெல்லாம் பிரமித்து இதுவென்ன வசியமோ? என்ன மந்திர மகிமையோவென்று மதிமயங்கி மிரண்டு ஆகாயத்தையே பார்ப்பார்கள்.

364. விஜயமோடி வித்தை.

காட்டிற்குள்ளாயினும் அல்லது இன்னு மெந்தவிடங்களிலாயினும் பச்சைப்பந்தல் போட்டு மேடையேற்படுத்தி, அந்த மேடையைப் பசுஞ்சாணத்தினால் மெழுகி மஞ்சளை அரைத்துப் பிள்ளையார் பிடித்துவைத்து அருகன்புல்சூடி, பந்தலில் வாழைமரங் கட்டி, சுற்றிலும் மாவிலைத் தோரணமுங் கட்டி பிள்ளையார்க்கு முன் ஒருதட்டில் மூன்று எலுமிச்சம் பழமும் ஒரு விராகனும்வைத்து அதற்கெதிரில் குருக்கே ஒருகோடுகீறி கோட்டிற்கு நடுவில் பட்டாகத்தியொன்று நாட்டி, அதற்கு நாலடி தூரத்திற்கப்பால் ஒருகோடுகீறி அதற்குநடுவில் ஒரு ஈட்டியைநாட்டி, அதற்கு யெட்டடிதூரத்தில் ஒருகோடுகீறி அதற்குநடுவில் கட்டாரியை நாட்டி, அதற்குப் பன்னிரண்டடி தூரத்தில் உலக்கை ஒன்றுநாட்டி, அதற்குப் பதினாறடி தூரத்தில் தாம்புக்கயிறைவைத்து, அதற்கு இருபதடி தூரத்தில் பாதரட்சையைவைத்து, அதற்கு இருபத்துநாலடி தூரத்தில் முறம் ஒன்றுவைத்து, அதற்குமுன் குட்டிச்சாத்தான் பொம்மையை நிற்கவைக்கவும். பிறகு ஒரு முறத்தில் பச்சரிசிபோட்டு மஞ்சள் தண்ணீர் தெளித்துப் பிசரிவைத்துக்கொள்ளவும்.

இவ்விதமோடியை யெடுக்கும்படியாக விருதுபூண்ட மகாமந்திரக்காரர்கள் மகிடக்குழையூதி எடுக்கவருவாராகில் அப்போது குட்டிச்

சாத்தான் பொம்மைக்குப் பின்னால் ஒருசிறுவனை உட்காரவைத்து அஷ்டமாசித்திமையை சேஷரிசியில் தெளித்து அந்த முறத்தைச் சிறுவனிடத்திற் கொடுத்து எதிரியின்மேல் கொஞ்சமெடுத்துப் போடச்சொல்ல அந்த அரிசி அவன்மேல் பட்டவுடனே தேகமெல்லாம் திகுதிகுவென்று எரிச்சலுண்டாகி அவனைப் பின்னுக்கு கெட்டிக்கொண்டுபோய் விடும். அதைக் கட்டிக்கொண்டு மறுபடியும் வருவானாகில், அஷ்டமாசித்திமையை விரலில் தொட்டுக்கொண்டு வேப்பிலையையுருவி அவன் மேல்போட, செந்தேள் கருந்தேளாகப்போய் அவன் தேகமெங்கும் கொட்டும். அதையுந் தடுத்து வருவானாகில் மேற்படி மையைத் தொட்டு புளியனிலையை உருவிப்போட செங்குளவி செய்யான் பூரான் இவைகள் பிடுங்கும், அதையும் கட்டிக்கொண்டு வருவானாகில் தட்டப்பக்கட்டைக்கு மையைத் தடவிவிட அதுகிளம்பி எதிரியைஜாடும். அதையுங் கட்டிக்கொண்டுவருவானாகில் மையை முறத்துக்குத் தடவிவிட முதுமெழுந்துபோய் ஜாடும். அதையுந்தாண்டி வருவானாகில் மையை பாதரட்சையிற் தடவிவிட அது சர்ப்பவென்று சுழன்றுபோய் மாறிமாறி அடிக்கும். மையைக் கட்டாரியில் தடவிவிட பாய்ந்து குத்தும், அதையுங் கட்டிக்கொண்டு வருவானானால் ஈட்டியின்மேல் மேற்படிமையை தடவிவிட அதுகிளம்பி அவனைப் பாய்ந்து குத்தும், அதையுங் கட்டிக்கொண்டு வருவானாகில் மேற்படிமையைப் பட்டாகத்தியிற்றடவிவிட அது அவன் தேகத்தை சக்கைசக்கையாக வெட்டிப்பிளக்கும். அதையுங் கட்டிக்கொண்டு வருவானாகில் சேஷரிசியை அவன்மேல் எடுத்துப்போட பீஜமானது [illegible]த்தையைப்போல் பெருத்து தேகமெல்லாம் அக்கினி சுவாலையாகப் பற்றியெரியும், அதையுங்கட்டிக்கொண்டு வருவானாகில் சேஷரிசியை எடுத்துப்போட வா[illegible]லும் காதிலும் இரத்தங்கொப்பளித்து வரும். மரணத்திற்குச் சரியான மூர்ச்சையடைவான். அதன் பின்பு சார்ந்தவர்கள்யாவரும் உன்காலில்வந்து விழுந்து உயிர்பிச்சைத் தரவேண்டுமென்று கெஞ்சி அழுவார்கள். அப்போது நீ அவர்கள் பூண்டுவந்த விருதுமுடி யாவற்றையும் கழற்றிவைக்கச்சொல்லி ஐங்கோல மையை யெடுத்து மூர்ச்சையாகக்கிடப்பவன் மேல் தடவ உடனே இவனெழுந்து உன்னைவணங்கி இந்த மோடியையெடுக்க எங்களாலும் இன்னும் எவர்களாலும் முடியாதென்று பயந்தோடுவான். வேடிக்கைப் பார்க்க வந்தவர்களெல்லாம் உன்னைக் கொண்டாடிப் புகழ்வார்கள்.

365. எவ்வித மோடிவைக்கினும் எடுக்கும் வித்தை.

எவ்விதக்கருவை ஸ்தாபித்து மந்திர உச்சாடனங்கள் செய்தவனிருந்தபோதிலும் கொஞ்சமும் அச்சமில்லாமல் தீரமாய் எடுப்பேனென்று அனைவருக்குஞ்சொல்லி, அனுஷ்டான நியானஞ்செய்து மயான ருத்திர மந்திரத்தை ஆயிரத்தெட்டுசொல்லி மகாமாயமையும் ஐங்கோலக் கருவையும் மோடி பந்தலின்மேல் தெளித்து மறப்புமையைப் பொட்டுக்கொண்டு சரேலென்றுபோய் கண்மூடி கண்திறக்குமுன் எடுத்துக்கொண்டு தன்னுடைய ஸ்தானத்திற்கு வந்துவிடலாம். மோடிவைத்தவனும் வேடிக்கைப்பார்ப்பவர்களும் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள். ஆனால் மோடியெடுத்துக்கொண்டு ஸ்தா[illegible]னம் வந்தவுடனே நெற்றியிலுள்ள பொட்டைக் கலைத்துவிடவேண்டும்.

366. ஒருமனிதன் பனைமரத்தை வேரோடுபிடுங்கும் ஜாலம்.

ஒரு பனைமரத்தருகிற்போய் நின்று கூடவந்தவர்களைப் பார்த்து, இந்த மரத்தை நானொருவனே வேரோடுபிடுங்கிப் போடுகிறேனென்று ஆஞ்சநேயரைத் தியானித்து, அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டு மரத்திற்றடவி பிறகு கண்கட்டுமையைக் கொஞ்சமெடுத்துக் கையிற் பூசிக்கொண்டால் மரத்தைப் பிடுங்குவதுபோல் கண்ணுக்குத்தோற்றும். ஆச்சரியப்பட்டு ஆஞ்சநேயர் வசியமென்று நம்புவார்கள். மூன்றே முக்கால் நாழிகையானவுடன் மரம் எப்போதும்போல் நிற்கும். அதற்குள் நீ சபையோர்களைப்பார்த்து இந்தமரத்தை முன்போல் நட்டுவிடுகிறேனென்று மையைத் துடைத்துவிடவேண்டும்.

367. பூமியில் புதைத்தமுட்டை பூமிவெடித்து ஆகாயமார்க்கமாக கிளம்பும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் கருங்கோழி முட்டையொன்று கையிலெடுத்து அனைவருக்குங் காட்டி, இந்த முட்டையைப் பூமியில் புதைத்து விடுகிறேன். பூமியானது வெடித்து முட்டை ஆகாயமார்க்கமாய் போகும் அற்புத வேடிக்கையைப் பாருங்களென்று வாலைமந்திரத்தை நூற்றியெட்டு தரம் செபித்து, ஜாலக்காரனைப் பூசித்து, இந்த முட்டை பூமி வெடித்து ஆகாயமார்க்கம்போகவேண்டுமென்று மனதிலெண்ணி அஷ்டமாசித்து மையை விரலில்தொட்டு முட்டையின்மேல் தடவி ஒருஜாண் பள்ளந் தோண்டி முட்டையை அதற்குள்வைத்துக் குழியைமறைத்து விட்டு, குட்டிச்சாத்தான் பூமியில் புதைந்தமுட்டை வெளிவரவேண்டும் என்று சொல்ல பூமிவெடித்து முட்டை ஜிவ்வென்றுஆகாயம் கிளம்பிப்போகும். பார்ப்போர்கள் ஆச்சரியப்பட்டு மகாமந்திரவாதியென்று பிரமிப்பார்கள்.

368. வீடு பற்றி யெரியும் ஜாலம்.

கூரைவீட்டையாகிலும் கல் வீட்டையாகிலும் அங்குள்ளவர்களுக்குக் காட்டி இந்த வீட்டைப் பற்றியெரியும்படி செய்கிறேனென்று ஒரு சிறிய கூழாங்கல்லை எடுத்து அதன்மேல் அஷ்டமாசித்து மையைத்தடவி பைரவர் மந்திரத்தை நூற்றியெட்டுசொல்லி அந்தக்கல்லை அவ்வீட்டின் மேல் தாக்கும்படி விட்டெறிய கல்போய் தாக்கினவுடனே குபீலென்று பற்றியெரிவதுபோல் தோற்றப்படும். பார்ப்பவர்கள் குய்யோ முறையோ வென்று கூச்சலிட்டுத் திகைத்து நிற்பார்கள். உடனே அவர்களுக்கு முன்னே இன்னொருகல்லை எடுத்து வீட்டின்மேல் விட்டெறிய வீடு எப்போதும்போல் தோற்றும். இது கண்கட்டு வித்தையென்பார்கள்.

369. வைக்கோற்போர் பற்றியெரியும் ஜாலம்.

வைக்கோற்போரை அனைவருக்குங்காட்டி இந்த வைக்கோற் போரைப் பற்றியெரியும்படி செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி மேற்கூறியபடிசெய்து கல்லைவிட்டெறிய குபீலென்று பற்றியெரியும்; ஆச்சரியப்பட்டு அக்கினிவசிய மென்பார்கள்.

370. தண்ணீருள்ள தடாகத்தைத் தண்ணீரில்லாமல் செய்யும் ஜாலம்.

தடாகத்தின் அருகிற்சென்று அங்குள்ளவர்களைப் பார்த்து இந்தத் தடாகத்திலுள்ள நீரையெல்லாம் வற்றிப்போகும்படிச் செய்கிறேனென்று வாலையைத் தியானித்து, வைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து அஷ்டமாசித்துமையை விரலில் தொட்டு, தடாகஜலத்தில் தெரிக்கும்படியாக தெளித்து; கண்கட்டுமையைக் கொஞ்சமெடுத்து கையிற் பூசிக்கொண்டு ஜலத்தைத்தொட ஜலம் காணப்படாது. பார்ப்போர்களெல்லாம் கெங்காபவானியை வசியஞ்செய்தானென்று கலங்கி உன்னைப் பார்த்து மறுபடியும் சலத்தை உண்டாகச் செய்வாயென்று வணங்கிக் கேட்பாராகில், உடனே நீ கண்கட்டுமையைத் துடைத்துவிட்டு ஐங்கோலமையைக் கொஞ்சந் தொட்டு ஜலத்தில் தெளிக்க, தடாகமானது முன்போல் தண்ணீருடன் தோற்றும்.

371. தண்ணீரில்லாத தடாகத்தில் தண்ணீர் உண்டாக்கும் ஜாலம்.

தண்ணீரில்லாமல் உலர்ந்திருக்கும் ஒரு தடாகத்தினருகிற்சென்று அங்குள்ள பேர்களைப் பார்த்து, நீரில்லாமல் உலர்ந்துகிடக்கும் இந்த தடாகத்தில் நிறைய தண்ணீர் உண்டாகச் செய்கிறேனென்று வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து கங்காபவானியைத் தியானித்து ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு ஒரு எலுமிச்சம்பழத்தின்மேற் றடவி தடாகத்தில் விட்டெறிந்து, கண்கட்டுமையைக் கையிற் பூசிக்கொண்டு அந்த குளத்தின்மேல் கையை வைத்துக்கொண்டு இருக்க, பார்ப்போர்களுக்கெல்லாம் தடாகம் நிறைய தண்ணீரிருப்பதுபோல் தோற்றும். யாவரும் ஆச்சரியப்பட்டு கங்காபவானி வசியமென்பார்கள் சற்றுநேரம் பொருத்து கையில்பூசிய கண்கட்டுமையைக் கழுவிவிட தடாகம் எப்போதும்போல் நீரில்லாமற்றோற்றும்.

372. ஒரு ஜாதிமரத்தில் பலவித பழங்கள் பழுக்கும் ஜாலம்.

மாமரம், விளாமரம், இச்சிலிமரம், எலுமிச்சமரம், கொய்யாமரம், மாதளமரம் இந்த மரங்களில் ஏதேனுமொன்றின் அருகிற்சென்று அங்குள்ளவர்களைப் பார்த்து, அந்த மரத்தின் பெயரைச்சொல்லி இந்தமரத்தில் பழுக்கும் பழம்போலாக இன்னும் கொய்யாப்பழம், மாம்பழம், விளாம்பழம், இச்சிலிப்பழம், எலுமிச்சம்பழம், மாதுளம்பழம், அத்திப் பழம், பலாப்பழம் இவை முதலானதும் இந்த ஒரு மரத்திலேயே காய்த்துப் பழுத்துத் தொங்கும்படிச் செய்கிறேன் பாருங்கள் [illegible] அஷ்டமாசித்தி மையையும் ஐங்கோலக் கருவையும் விரலில் தொட்டுக் கொண்டு வாலைமந்திரத்தை நூற்றியெட்டு ஓதி இந்த மரத்தில் [illegible] சொன்னபடி பலவிதக் கனிகள் பழுத்துத் தொங்கவேண்டுமென்று மனதில் நினைத்து, ஐங்கோலக் கருவையும் மரத்திற் றடவி, பிறகு கண்கட்டுமையைக் கொஞ்சம் விரலில் பூசி மரத்தின்மேல் [illegible]லைவைத்துக் கொண்டிருக்க பார்ப்பவர்களுக்கு மேற்கூறிய கனிவர்க்கங்களெல்லாம் பழுத்துத் தொங்கும். ஆச்சரியப்பட்டு இது கானபயிர் வசியமென்று கண்ணிமையாமல் பார்த்து நிற்பார்கள்.

67621

373. காடு பற்றியெரியும் ஜாலம்.

இந்தவித்தை செய்துபார்க்க விருப்பமுண்டாயின் தனக்கு இஷ்டமான பெயர்களையும் இன்னும் எவர்களையாயினும் அழைத்துக்கொண்டு இரவில் ஒரு அடவியிற்சென்று, தன்னுடன் வந்தவர்களைப் பார்த்து, இந்தக்காட்டை எரியும்படி செய்கிறேனென்று அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டு சிறிய கல்லொன்றை எடுத்து அந்தமையை அதின்மேற்பூசி, வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பைரவர் மந்திரம் நூற்றெட்டு ஜெபித்து, ஜாலக்காளைத் தொழுது, அந்தக்கல்லை அனைவரும் பார்க்க அடவியில் விட்டெறிய உடனே காடானது குபீலென்று எரிவதுபோல் தோற்றும். அனைவரும் ஆச்சரியப்பட்டு அக்கினிதேவன் வசியமென்பார்கள். உடனே அவித்துவிடுகிறேன் பாரென்று ஒரு சிறியகல்லை எடுத்து ஐங்கோலக்கருவைத் தடவிவிட்டெறிய உடனே எரிவது விட்டமர்ந்து முன்போல்தோன்ற, அப்போது உன்னை மகாமந்திரவாதி என்றும் மதிமயங்கி திகிலடைந்துப் பிரமித்துக் கொண்டாடுவார்கள்.

374. அரசன் படையெடுத்து வருவதுபோல் காட்டும் ஜாலம்.

வெட்டவெளியான மைதானத்தில் இஷ்டமான பெயர்களையும் இன்னு மற்றவர்களையும் இரவில் அழைத்துச்சென்று, இதோ பாருங்கள் இந்த மைதானத்தில் அரசன் தன்படைகளோடு வரும்படியாகச் செய்கிறேன் என்று அஷ்டமாசித்திமையும் மகாமாயமையும் விரலில்தீட்டு ஒன்பது எலுமிச்சம் பழத்தை எடுத்துத் தந்திரமாக அதுகளின்மேல் தடவி எட்டுதிக்கிலும் எட்டுபழத்தை விட்டெறிந்து அரசன்படை எதிர்த்து வருவதுபோல் தோற்றுமென்று மனதில் நினைத்தவுடனே ரதகஜதுரகபதாதிகளுடனே திரளாகத்திரண்டு வருவதுடன் அரசன் யானையின்மீது ஏறிவருவதுபோற் றோற்றும். யாவரும் பார்த்து ஆனந்தசந்தோஷமடைந்து, அது அருமையான வித்தையென்று ஆச்சரியப்படுவார்கள். உடனே நீ ஒரு எலுமிச்சம் பழத்தை ஐங்கோலக் கருவைத் தடவி அதை நாலுதிக்கிலும் போட அரசன் சேனைகளும் மாயமாகப் போய்விடும்.

375. குடத்தினுள் மனிதன் புகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு மண்குடங்கொண்டு வரும்படியாகச்செய்து அங்குள்ளவர்களைப் பார்த்து இந்தக் குடத்தினுள் யான்புகுகிறேன் பாருங்களென்றுசொல்லி அஷ்டமாசித்திமையும் மகாமாயமையும் விரலில்தொட்டு குடத்தின்மேல்தடவி, கண்கட்டுமையைக் கையிற்பூசிக் கொண்டு குடத்தின்மேல் கையைவைத்துத், தலையைக் குடத்தின் வாய்க்குநேராக வைத்துக்கொண்டிருக்க பார்ப்போர்கள் அனைவருக்கும் குடத்துக்குள் நுழைந்து விட்டாப்போல் தோற்றும். இது ஆஞ்சநேயர் வசியமென்று ஆச்சரியப்படுவார்கள்.

376. மாட்டின் வயிற்றில் மனிதன் புகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் மாடொன்றைக் கொண்டுவந்து நிறுத்தி, சபையோர்களைப்பார்த்து, இந்தமாட்டின் ஆசனவழியாகப் புகுந்து காதின்

வழியாக வெளிவருகிறேன் பாருங்களென்று வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டு சொல்லி, பைரவர் மந்திரம் நூற்றியெட்டு ஜெபித்து அஷ்டமாசித்து மையை விரலில்தொட்டு மாட்டின்மேல் தெளித்து கண்கட்டு மையைக் கையிற்பூசிக்கொண்டு மாட்டின் ஆசனத்தில் கையைவைத்துக் காதுவரைக்குந் தடவிக்கொண்டேவர பார்ப்போர்களுக்கு ஆசனவழியாகப் புகுந்து காதுவழியாக வந்ததுபோலிருக்கும். இது குட்டிச் ஏவல் வேலையென்று ஆச்சரியப்படுவார்கள்.

377. பெட்டியில்போட்டுப் பூட்டினமனிதன் வெளிவரும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒரு பெட்டியைக் கொண்டுவரும்படியாகச் செய்து அங்குள்ள அனைவர்களையும் பார்த்து, இந்தப் பெட்டியில் என்னைப்போட்டு மூடிவிடுங்கள்; பூட்டினபடியே பெட்டியிருக்க நான் வெளியே வருகிறேனென்று மயானருத்திரியைத் தியானித்து வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி அஷ்டமாசித்திமையைப் பெட்டியின் பேரில் தெளித்து, கண்கட்டு மையைக்கையிற் பூசிக்கொண்டு பெட்டி திறந்து மூடிவிட்டு, தந்திரமாக மறப்புமையைக் கொஞ்சம் தொட்டு பொட்டிட்டுக்கொள்ள பார்ப்போர்களுக்கு மனிதன் பெட்டிக்குள் யிருப்பதாகத் தோற்றும். அப்போது நீ ஜாக்கிரதையாய் மறப்புமையைத் துடைத்துவிட பெட்டியிலிருந்து வெளிவந்தாற்போல் தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள்.

378. பாராங்கல் தண்ணீரின்மேல் மிதக்கும் ஜாலம்.

தடாகத்தின் அருகில்சென்று பெரியபாராங்கல் ஒன்றைக்கொண்டு வரும்படியாக அங்குள்ளவர்களைப் பார்த்து, இந்தக் கல்லைத் தண்ணீரின் மேல் மிதக்கும்படி செய்கிறேனென்று வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி, பைரவர் மந்திரம் நூற்றியெட்டு ஜெபித்து, அஷ்டமாசித்து மையைவிரலில் தொட்டுப் பாறையின்மேல் தெளித்து, அடா குட்டிச்சாத்தான்! இந்தப் பாறையைக் குளத்திற்போடுகிறேன்: அது தண்ணீரில் முழுகவொட்டாமல் நீ அந்தக் கல்லின் அடியிலிருந்து தாங்கிக் கொண்டு விருவென்று கல்லையுருட்டிக் குளத்திற்குள்விட பார்ப்போர்களுக்குக் கல்மிதப்பதுபோல் தோற்றும். அனைவரும் ஆச்சரியப்பட்டு இது சங்கரபவானி வசியமென்று நம்புவார்கள்.

379. சவரன் உண்டாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் துப்பட்டிக்காயொன்றைக் கையிலெடுத்து சபையைப் பார்த்து இந்தக்காயைப் பூமியின்மேல் அடிக்கிறேன்; அதிலிருந்து சவரன்கள் உண்டாகும் பாருங்களென்று வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, பைரவர்மந்திரம் நூற்றியெட்டோதி அஷ்டமாசித்து மையை விரலில் தொட்டு, சவரன் உண்டாகவேண்டுமென்று நினைத்து மையைக்காயின்மேல் தடவிப் பூமியின்மேல் மோதியடிக்க அந்தக் காயினுள்ளிருந்த விதை எத்தனையோ அத்தனை சவரன் உண்டாகும். ஆச்சரியப்படுவார்கள் உடனே எடுத்து மறைத்துவிடலாம்.

380. வெள்ளி ரூபா வகையறுக்கள் உண்டாகும் ஜாலம்.

ஜாலமாடு மிடத்தில் வந்து நின்று தந்திரமாக அஷ்டமாசித்து மையை விரலில் தொட்டுக்கொண்டு, பூமியில் வேர்பிடி மண்ணைக் கையில் அள்ளிச் சபையோர்களைப் பார்த்து, இந்த மண்ணைக் கீழே போடுகிறேன், முழுரூபா அரைரூபா கால்ரூபா அரைக்கால்ரூபா இவைகளாகும்படி செய்கிறேனென்று வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பைரவர்மந்திரம் துந்நிபெட்டு ஜெபித்து ஜாலக்காளைத் துதித்து, சல் மலையாளபகவதி! ரூபா வகையறுக்களாக வேண்டுமென்று மனதி லெண்ணி, கையிலுள்ள மண்ணைக் கீழேபோட மேற்சொன்னபடி ரூபா வகையறுக்கள்தோற்றும் பார்ப்போர்கள் ஆச்சரியப்பட்டு, இது குட்டிச் சாத்தான் எவலென்று நம்புவார்கள். முன்போல் இதையும் உடனே மறைத்துவிடவும்.

381. செம்பு துட்டுவகையறுக்கள் உண்டாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் வந்துநின்று மேற்கூறியவண்ணம் தவறாமல் செய்து, அரையணு காலணு அரைக்காசு இவைகளாகவேண்டுமென்று மனதிலெண்ணி மண்ணைக் கீழேபோட செம்புதுட்டு வகையறுக்கள் தோற்றும். அதுகண்டு சபையோர்கள் யாவரும் பிரமித்துத் திகைத்து ஆச்சரியப்படுவார்கள். ஆனல் நீ முன்போல் உடனே மறைத்துவிட வேண்டும். என் மறைத்துவிட வேண்டுமென்றால் மூன்றேமுக்கால் நாழிக்குள் மாயமாகமறைந்துவிடும். அதற்குமுன் நாமே மறைத்துவிட்டால் சபையோர்களுக்கு இரகசியந்தெரியாது நிஜமென்று நம்புவார்கள்.

382. மண்பாத்திரங்கள் பித்தளைப்பாத்திரமாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் தனக்கு இஷ்டமான பாத்திரங்களைக்கொண்டு வந்துவைத்து சபையோர்களைப்பார்த்து, இந்த மண்பாத்திரங்களையெல்லாம் பித்தளை பாத்திரமாக்குகிறேனென்று வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டுதரம் ஜெபித்து, பைரவர் மந்திரத்தை அந்நிபெட்டுதரஞ் சொல்லி, அஷ்டமாசித்து மையையும் ஐங்கோலக்கருவையும் விரலில் தொட்டு, இந்த மண்பாத்திரமெல்லாம் பித்தளைபாத்திரமாகவேண்டு மென்று மனதிலெண்ணி, ஜாலக்காளை ஜெபித்து மேற்படி மையை பாத்திரங்களின்மீது தெளிக்க உடனே பித்தளைபாத்திரங்களாகத்தோற் றும்; யாவருங்கண்டு அதிசயிப்பார்கள். பிறகு நீ அந்தப்பாத்திரங்களைப் பார்த்து, சல் மலையாளபகவதி முன்போல் மண்பாத்திரமாகச் செய்வா யென்று துணியைப்போட்டு மறைத்துவிடவேண்டும்.

383. வெள்ளிப்பாத்திரம் பொன்பாத்திரமாகும் ஜாலம்.

ஜாலமாடு மிடத்தில் வெள்ளிப் பாத்திரங்களைக் கொண்டுவந்து வைத்து, இதைப் பொன்பாத்திர மாக்குகிறேனென்று மேற்கூறியபடி மந்திர முதலானதுஞ் செபித்து வெள்ளிபாத்திரத்தைப் பொன்பாத்திர மாக்கவேண்டுமென்று மனதில்யெண்ணி முன்போல் மையைத்தொட்டு பாத்திரத்தின்மேல் தெளிக்க பொன்பாத்திரமாகத் தோற்றும். பார்ப்

போருடைய கண்கள் பூர்த்துப் பலவிதமாக உன்னைக் கொண்டாடு வார்கள்; ஆனல் நீ மேற்சொல்லியபடி சொல்லி அதை மறைத்துவிட வேண்டும்.

384. பித்தளைப்பாத்திரம் வெள்ளிப்பாத்திர மாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் பித்தளைப் பாத்திரங்களைக் கொண்டுவந்து வைத்து, மேற்சொல்லியவாறு மந்திர முதலானது மோதி, பித்தளைப் பாத்திரம் வெள்ளிப் பாத்திர மாகவேண்டுமென்று மனதிலெண்ணி மையைத் தெளித்தவுடன் வெள்ளிப் பாத்திரமாகத் தோற்றும். பார்ப் போர்கள் யாவரும் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

385. வஸ்திரங்கள் உண்டாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலேனும் இன்னும் எந்த இடங்களிலேனும் ஒரு மூங்கிற் பெட்டியைக் கொண்டுவந்து வைத்து, அந்தப் பெட்டியைத் திறந்து யாவருக்குங் காட்டி, இந்தப் பெட்டியில் பஞ்சைப்போட்டு மூடி விடுகிறேன், வஸ்திரங்களாகும் விநோதங்களைப் பாருங்களென்று அஷ்டமாசித்துமையையும் ஐங்கோலக் கருவையும் விரலில்தொட்டு வாலைமந் திரத்தை ஆயிரத்தெட்டுஜெபித்து, கொஞ்சம் பஞ்சைக் கையிலெடுத்து மையைதிற்றடவி இந்தப்பஞ்சு, வஸ்திரங்களாகவேண்டுமென்று மன தில் எண்ணி, மூங்கிற்பெட்டியிற் போட்டுமூடி பிறகு குட்டிச்சாத்தான் பொம்மையைக் கையிலெடுத்து, சபையோர்கள் நம்பும்படியாக அடே குட்டிச்சாத்தான்! இந்தப் பெட்டிக்குள் ளிருக்கும் பஞ்சியைப் பட்டுவஸ் திரங்களாகத் தோற்றும்படியாகச் செய்வாயென்றுசொல்ல, பட்டுவஸ் திரங்களாகவே தோற்றும். பார்ப்போர்களனைவரும் இது என்ன ஆச் சரியமென்று எண்ணாதும் எண்ணி உன்னை மகா மந்திரக்காரனென்று கொண்டாடுவார்கள். உடனே மேற்சொன்னபடி மறைத்துவிடவேண்டும்.

386. ஜெகஜால வித்தைகளாட கரு.

கத்தியால் வெட்டுண்டு இறந்தவர்களின் கொழுப்பை எடுத்துருக்கி, அதை நெய்யுடன் சேர்த்துவைத்துக்கொண்டு, அவனுடைய சிரசைக் கத்தியால் வெட்டி உரலிலிட்டு இடித்து உலர்த்திச் சருகுபோல் ஆன பின்பு செல்வாமணக்கு பலம் எட்டு இவை இரண்டையும் இடித்து அத னுடன் சேர்த்து காதலிந்து பலம் இரண்டும், சிரியாநங்கை சமூலம் இரண்டுபலமும், எட்டிக்கொட்டை பலம் எட்டும் இவைகளை யிடித்து அத்துடன்சேர்த்து, மேற்படி நெய்யுங் கொழுப்பையும் கலந்து கோரோசனை கஸ்தூரி புனுகு இவை மூன்றும் காற்பலமாகச் சேர்த்து, இறந்தவரை சமாதியில் வைத்த யெலும்பு பலமெட்டும் மஞ்சள் எட்டுபலமாக இவை யிரண்டையு மிடித்து அதிற்கலந்து, ஒரு புதுபாண்டத்தில் மேற்கூறிய வகைகள்யாவையும் ஒன்றாகக் கலந்துவிட்டு மேல் ஒருபாண்டத்தை மூடி, ஏருமண்சீலைசெய்து இரண்டுமுழம் குழி பூமியில்வெட்டி அந்தக் குழிமத்தியில் ஒரு சிறிய கலசம்வைத்து, பாண்டத்திற் கடியில் சிறிய துவாரஞ்செய்து, அந்தப் பாண்டத்தின்மேல்வைத்து சமாதியெருவைக் கொண்டுவந்து குழியைமூடி அதன்மேல் காலாக்கினியாகத் தீமூட்டி

ஒரு சாமம்வரைக்கு மெரித்து விட்டுவிடவேண்டும். பிறகு ஒருமண்டலம் பொறுத்து குழியைத்தோண்டிப் பாண்டத்தையெடுத்து அப்புறம் வைத்து விட்டு, கலசத்தை எடுத்துப்பார்க்க தயிலமிறங்கி யிருக்கும். அதைச் சீசாவிலிட்டு வைத்துக்கொண்டு குருபரனைத் தியானித்து, சக்கலாதேவி பூசைசெய்ய சித்தியாகும்.

பூசைமந்திரம் செபிக்கும்விதம் எவ்விதமெனில் மையைப் பூசையில் வைத்து ஓம் றீம் கிரியும் சவ்வுமென்று ஒருமண்டலம் தவராமல் நாள்தோறும் மூன்றுவேளையும் வேளையொன்றுக்கு முன்னூறு உருகொடுத்து வர சக்கலாதேவிப் பிரசன்னமாவாள். அப்படிப்பிரசன்ன மானவுடனே மையை யெடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு மனம்போல ஜாலவித்தையாடலாம்.

387. கல்பிள்ளையாரை நகரவைக்கும் ஜாலம்.

விநாயகருடைய ஆலயத்திற்சென்று அங்குள்ளவர்களைப் பார்த்து இந்தப் பிள்ளையாரைப் பூசைசெய்து என்வசமாக்கி அவரிருக்கும் இடத்தைவிட்டு அப்பால் நகரும்படி செய்கிறேன் பாரென்றுசொல்லி, ஜெகஜாலக்கருவை விரலில்தொட்டு, சக்கலாதேவியை நினைத்துத் தந்திரமாகக் கருவைப் பிள்ளையார் சிரசில் தடவிவிட்டு ஆலயத்திற்கு வெளியில் வந்து பாதையில் நின்று ஸ்மரிக்க, பிள்ளையார் தன்னிருப்பிடம்விட்டு அப்பால் நகருவதுபோல் தோற்றும்; பார்ப்பவர்கள் யாவரும் புதுமையாயிருக்குதென்று அதிசயிப்பார்கள்.

388. நோக்கர் கெடைகம்பம் பொடியாகும் ஜாலம்.

நோக்கர் கெடைகம்பம் நட்டு ஆடுமிடத்திற்குப் போகுமுன்னமே ஜெகஜாலக்கருவில் அரை குண்டுமணியெடுத்து, கோட்டான் இரத்தங் கொஞ்சம் விட்டு இரண்டையும் மத்தித்து வைத்துக்கொள்ளவும், நோக்கர் ஆடுமிடத்திற்குச் சென்று வேடிக்கைப் பார்ப்பவன்போல் நின்று சக்கலாதேவியின் மூலமந்திரத்தை செபித்து மேற்படி தயிலத்தை அவர்களாடும் கம்பத்திற்றடவி விட்டு நீ உன்னுடைய வீட்டிற்கு வந்துவிடுவையாகில் உடனே நோக்கர் சமர்த்தாக ஊடெரங்குந்திரிந்து ஆடும்படியான கம்பமானது பளபளவென்று முறிந்து பொடிப்பொடியாய்ப் போய் விடும். வெகுபேர்கள் மூர்ச்சையாக விழுவார்கள். நோக்கனும் வாடியோடிப்போவான் வேடிக்கைப் பார்ப்பவர்களெல்லாம் மிரளுவார்கள்.

389. ஆலமரம் அடியோடு சாயும் அற்புதஜாலம்.

இஷ்டமான பெயர்களை அழைத்துக்கொண்டு ஆலவிருட்சத்தருகிற்சென்று இதைவேரோடு சாய்ந்துவிடும்படி செய்கிறேனென்றுசொல்லி ஜெகஜாலக்கருவையும் கோட்டான் இரத்தத்தையும் மத்தித்து விரலிற்தொட்டு சக்கலாதேவி மந்திரத்தைச் செபித்து மையை மரத்தில் தடவிவிட்டு அப்பால்வந்துவிட ஆலமரம் அடியோடே சாயும். பார்க்கும் பெயர்களெல்லாம் பயந்தோடுவார்கள். சிலர் அனுமார் வசியமென்று நம்புவார்கள்.

390. கருங்கல் பாறையைப் பொடிப்பொடியாக வெடிக்கச்செய்யும் ஜாலம்.

ஒரு பெருங் கருங்கல்லைக் கொண்டுவரும்படிச் செய்தாவது அல்லது பாறை யிருக்குமிடத்திலேனும் சென்று, இந்தப் பாறையைக் கண்மூடி கண்திறக்குமுன்னமே பொடிப்பொடியாகச் செய்கிறேனென்று சபதங்கள் கூறிப் பந்தயங்கட்டுவாராயினும் கட்டிக்கொண்டு முன்போல் மையை விரலில் தொட்டு, சக்கலாதேவி மூலமந்திரத்தைச் செபித்துப் பாறையின்மேல் படும்படி தெளிக்க உடனே பாறையானது படாலென்று வெடித்து சுக்கல் சுக்கலாகப்போகும். பார்ப்பவர்களெல்லாம் பதைத்துப் பயந்து மிரண்டோடுவார்கள்.

391. எதிரிசெய்யும் பாணுதடியைப் பொடிப்பொடியாகச் செய்யும் ஜாலம்.

பாணுசெய்யுமிடத்தில் வேடிக்கைப் பார்ப்பவர்கள்போல் நின்று, மேற்படி கருவை விரலில்தொட்டு சக்கலாதேவி மூலமந்திரத்தைச் செபித்து, தந்திரமாக பாணுதடியில் படும்படியாகத் தெளித்துவிட்டு நீ உன்னிருப்பிடம் வந்துவிட அந்தத் தடியானது பொடிப்பொடியாக முறிந்தொடிந்துப் போய்விடும். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

392. எதிரிசெய்யும் பட்டாக்கத்தியை இரண்டு துண்டாக்கும் ஜாலம்.

மேற்சொன்னபடி சக்கலாதேவி மூலமந்திரத்தைச் செபித்து ஜெகஜாலக்கருவைப் பட்டாக்கத்தியில் தடவிவிட்டு நீவேடிக்கைப் பார்ப்பவன்போல் நின்றுகொண்டிருக்கவும். அவன் அந்தப் பட்டாக்கத்தியை யெடுத்து ஒரு சுழற்று சுழற்று முன்னே ஒன்பது துண்டாக ஒடிந்து போகும். பார்ப்போர்கள் இது என்ன புதுமையென்று எண்ணித் திகைப்பார்கள்.

393. தேங்காய்கள் ஒன்றோடொன்று தாக்கப் பொடிப்பொடியாகும் ஜாலம்.

ஜாலம்செய்யுமிடத்தில் முக்கோண சக்கரங்கீறி, அந்த ஒன்பது கோணத்திலும் தேங்காய்வைத்து மத்தியில் ஒரு தேங்காய்வைத்து அதற்கு மஞ்சள்நீர் தெளித்துக் குங்குமமிட்டு, பிறகு சபையோர்களைப்பார்த்து, இந்தப்பத்துத் தேங்காயும் ஒன்றோடொன்று எதிர்த்துப் போர்புரிவதுபோல் புரிந்து பொடிப்பொடியாகப் போகச்செய்கிறேன் பாருங்களென்று மேற்படி ஜெகஜாலக் கருவை விரலிற்தொட்டு சக்கலாதேவி மூலமந்திரத்தை செபித்துப் பத்துத் தேங்காய்களிலும் மைபடும்படியாகத் தெளித்துவிட உடனே அந்தத் தேங்காய்கள் பூமியில் நிற்காமல் கிளம்பி வேடிக்கையாக ஒன்றோடொன்று சடால்படாலென்று தாக்கிப் பொடிப்பொடியாகப் பூமியில் உதிர்ந்துவிடும். அனைவரும் பார்த்து ஆச்சரியப்பட்டு மந்திரவாதி என்று உன்னை மதித்துக் கொண்டாடுவார்கள்.

394 உடைந்ததேங்காயைமறுபடியும் முழுதேங்காயாக்கும் ஜாலம்.

மேற்படி உடைந்த தேங்காய்ப்பொடியெல்லாம் ஒன்றாகச்சேர்த்து சபையோர்களைப்பார்த்து, இந்தத்தேங்காய்ப் பொடிகளை முழுதேங்காயாகச் செய்கிறேன் பாருங்களென்று முன்கூறியதுபோலவே நவகோண சக்கரமொன்றுகீறி, இந்தத் தேங்காய்ச்சுக்கலைப் பத்துப்பங்காகச்செய்து ஒன்பது மூலையிலும் ஒன்பது பங்குவைத்து, ஒருபங்கு நடுவில்வைத்து ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு வாலைமூலமந்திரத்தை ஆயிரத்தொட்டு ஜெபித்து, இந்தத் தேங்காய்ப்பொடியை முழுதேங்காயாகத் தோற்றச் செய்வாயென்று கருவை அக்கூறுகளின்மேல் தெளித்து, ஒரு தட்டுபோட்டு மூடி சபையோர்கள் நம்பும்படியாக மாத்திரைக்கோலைக் கையிலெடுத்து, அடேகுட்டிச்சாத்தான்! இந்தக் கூடைக்குள்ளிருக்கும் தேங்காய்ப்பொடியை எல்லாங்கொண்டுபோய் ஆற்றிலெறிந்துவிட்டு தேங்காய் கடைக்குச்சென்று கடைக்காரனையேமாற்றி நன்றாய்த்தேறின தேங்காய் பத்து கொண்டுவந்து கூடைக்குள் சீக்கிரம் வையடாவென்று மாத்திரைக்கோலால் தட்டின்மேல் மூன்றுதரந்தட்டி, தட்டைத் திறந்துக்காட்ட முன்வைத்ததுபோலவே முழுதேங்காய்களாகத் தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள்.

395. ஆடுபற்றியெரியும் வித்தை.

ஜாலமாடுமிடத்திலாவது இன்னுமெந்த விடத்திலாவது ஒரு ஆட்டைக்கொண்டுவந்து நிறுத்தச்சொல்லி, அங்குள்ள பேர்கள் அனைவரையும் பார்த்து, இந்த ஆட்டைப் பற்றியெரிந்துபோகும்படி செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை அரைகுண்டுமணி யிடையெடுத்து அதனில் கோட்டான் ரத்தம்விட்டு முன்பாகவே கலந்துவைத்திருந்து, அந்தக் கருவைக் கையில் தொட்டு, சக்கலாதேவி மூலமந்திரத்தை ஜெபித்து இந்த ஆட்டை எரிந்துபோகச் செய்வாயென்று மனதில் எண்ணி அந்தக்கருவை ஆட்டின்மேல் தெளிக்க உடனே குபீலென்று பற்றியெரிந்து சாம்பலாகப்போகும். பார்ப்பவர்கள் அனைவரும் திடுக்கிட்டு இது அக்கினிதேவன் வசியமென்று ஆச்சரியப்படுவார்கள்.

396. எரிந்துபோன ஆட்டை மறுபடியும் உண்டாக்கும் ஜாலம்.

அந்தக்ஷணமே நீ சபையோர்களைப்பார்த்து, இப்போது எரிந்துபோன ஆட்டை எப்போதும்போல் உண்டாக்குகிறேன் பாருங்களென்று எரிந்த ஆட்டின் சாம்பலையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து ஐங்கோலக்கருவையும் கண்கட்டுமையையும் விரலில்தொட்டு வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பைரவர் மந்திரத்தை நூற்றெட்டோதி, எரிந்துபோன ஆட்டை எப்போதும்போல் உருவாகத்தோற்றச் செய்யவேண்டுமென்று மனதில் எண்ணி மையை அந்தச் சாம்பலில் தெளித்து ஒரு பெரிய துப்பட்டியைப்போட்டு மூடி, சற்றுநேரம் பொறுத்து துப்பட்டியை வாங்க முன்போல் ஆடாகத்தோற்றும். அனைவரும் ஆச்சரியப்பட்டு உன்னை மகாமந்திரவாதியென்று நிச்சயித்துக் கொண்டாடுவார்கள். ஆனால் இவையெல்லாம் மூன்றேமுக்கால் நாழிகை வரைக்

குந்தான் மையின் மறைவு தோற்றமாகும். அதற்குள் வித்தை யாடவேண்டும்.

397. ஏற்றமரம் முறியும் வித்தை.

ஏற்றமிறைக்கு மிடத்திற்சென்று வேடிக்கைப் பார்ப்பவன்போல் அங்கு நின்று, ஜெகஜாலக்கருவும் கோட்டான் ரத்தமுங்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சக்கலாதேவி மூலமந்திரத்தை ஜெபித்து கருவை ஏற்றமத்தில் தடவ உடனே ஏற்றமரத்தின்மே லிருப்பவர்களோடு ஏற்றமரம் அடியோடே சாய்ந்துவிடும். அப்போதங்குள்ளவர்கள் அலறிக்குய்யோ முறையோவென்று கூச்சலிடுவார்கள்.

398. எதிரியை வெல்லும் வித்தை.

தான் தனியாக காட்டுவழியிலேனும் இன்னும் எந்தவிடங்களிலேனும் போகும்போது, கள்ளர்களாயினும் தனக்கெதிரிகளாயினும் வந்து வழிமறித்துத் தொந்திரவுசெய்ய வருவார்களாயின் அப்போது உடனே நீ ஜெகஜாலக்கருவை விரலில்தொட்டு, சக்கலாதேவியைத் தியானித்து, எதிர்கள் கைகால் அசைக்காமல் அப்படியே நிற்கவேண்டுமென்று மனதிலெண்ணிக் கருவை அவர்கள்மேல் தெளிக்க கருவுமேலே பட்டவுடனே வீரமொடு வந்தவர்கள் வீரங்குலைந்து நின்றவிடத்திலேயே நிற்பார்கள். பின்பு அவர்களுன்னைப் பார்த்து, ஐயா! யாங்கள் அறியாமற்செய்தபிழையைப் பொறுத்து எங்களை இவ்விடம் விட்டுப்போகும்படி செய்வீரென்று மிகவும் வருந்துவார்கள். அப்போது நீ ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு வாலைமந்திரத்தை ஜெபித்து அவர்கள்மேல் தெளிக்க, உன்னைப்பார்த்துப் பயந்து வந்தவழி தெரியாமல் வோடிப்போவார்கள். நீ போகுமிடத்தில் அச்சமில்லாமற்போகலாம்.

399. பச்சைமரம் பற்றியெரியும் வித்தை.

எந்தஜாதி மரமாயினும் பச்சென்று தழைத்திருப்பதைப் பார்த்து, இந்த மரத்தை காலாக்கினிபோல் பற்றியெரியும்படிசெய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை முன்போலவே கூட்டி விரலில் தொட்டுக்கொண்டு சக்கலாதேவி மூலமந்திரத்தை ஜெபித்து, பச்சைமரம் பற்றியெரியவேண்டும் என்று மனதில் ஸ்மரித்துக்கருவை அம்மரத்தின்மேல் தெளிக்க, உடனே காலாக்கினிபோல் பற்றியெரியும். பார்ப்பவர்கள் ஆச்சரிப்பட்டு உன்னுடைய அருகில்வந்து ஐயாவென்று வணங்கி, இப்போது எரிகின்ற தீயை அடக்கி மரத்தை முன்போல் பச்சென்று தழைத்திருக்கும்படி செய்வாயா வென்பாராகில் அப்போது நீ அப்படியே செய்கிறேனென்று ஐங்கோலக்கருவை யாருக்கும் தெரியாமல் விரலில் தொட்டு, வாலைமந்திரத்தை ஜெபித்துத் தந்திரமாக மரத்தின்மேல் தெளிக்க, உடனே தீயானது அடங்கி முன்போல் பச்சென்றிருப்பது போல் தழைத்துத் தோற்றும். அனைவரும் ஆச்சரியப்பட்டு அடிபணிவார்கள்.

400. பனைமரம் இரண்டாய்ப் பிளந்துவிழும் ஜாலம்.

பனைமரத்தின் அருகிற்சென்று தன்னுடன் வந்தவர்களைப்பார்த்து, இந்தப் பனைமரத்தை யாவரும்பார்த்து ஆச்சரியப்படும்படியாக இரண்டு

பிளவாய்பிளந்து பூமியில் விழும்படியாக செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவையும் கோட்டான் இரத்தமுங்கலந்து விரலில்தொட்டு, சக்கலாதேவி மூலமந்திரத்தை ஜெபித்து, இந்தமரம் இரண்டுபிளவாக விழவேண்டுமென்று மனதில் நினைத்துக்கருவை மரத்தின்மேல்தெளிக்க உடனே மரமானது படாரென்று பிளந்து இரண்டுபக்கமும் விழும். பார்ப்போர்கள் யாவரும் பிரமித்து இது மகா புதுமையாக இருக்குதென்று உன்னைப்புகழ்ந்து மறுபடியும் மரத்தை ஒன்றாகச் செவ்வையா என்பருகில் அப்போது நீ யாவரும் மிரளும்படியாக இதோ க்ஷணநேரத்திற்குள் முன்போல் "செய்கிறேன் பாரென்று ஐங்கோலக்கருவை விரலில் தொட்டு வாலையை தியானித்து, மரத்தின்மேல் தெளிக்க எப்போதும்போல் தோற்றும். பார்ப்போர்களும் இது கண்கட்டுவித்தையென்று பலவாறாகப் பேசிக்கொள்வார்கள்.

401. மணிச்சிலம் புடையும் ஜாலம்.

பூசாலிகளின் மணிச்சிலம்பை உடைக்கும்வித மெவ்விதமெனில்: ஜெகஜாலக் கருவில் அரைகுண்டு மணியிடை எடுத்து நுழைநரியின் பித்தை யதனுடன் கலந்து மந்திரித்து ஒருபானை ஓட்டில்பூசி, அந்த ஓட்டை எட்டி இலையாமல் மூடி. வங்-சிங்-ஓம்-விரிம்-சவ்வும்-ஓம் என்று நூற்றியெட்டு உருகொடுத்து எதிரிகளின் பெயரைமாறி தியானஞ்செய்து பின்பு அவர்கள் வாழும்படியான தெருவீதியிற்சென்று ஷை ஓட்டைப் பூமியில்வைத்து இடது காலை அதின்மேல்வைத்து மூன்று அரக்கரக்க எதிரியுடைய மணிச்சிலம்பு பொடிப்பொடியாகப்போகும். அப்போது பூசாலியும் மிரளுவான். சபையோர்களும் ஆச்சரியப்பட்டு யாரோ யேவல் செய்தானென்று பலவாறாகப் பேசிக்கொள்வார்கள்.

402. தம்புருடையும் ஜாலம்.

ஜெகஜாலமையில் அரைகுண்டு மணியிடை எடுத்து அரணையின் பித்துடன் சேர்த்து மத்தித்து, பிள்ளையின் தலைமண்டையோடு சம்பாதித்து மேற்படிக்கருவை அந்த ஒரு ஓட்டிற்பூசி கருஊமத்தன் இலையை அதின்மேல் பரப்பி வக்-அங்-உக்-யூரி அரியும் என்பது உரு நூற்றியெட்டு கொடுத்து வைத்துக்கொள்ளவும். அதன்பிறகு தம்பூர் வாசிக்குமிடத்தில் சென்று ஒருவருக்குந்தெரியாமல் மேற்படி மண்டையோட்டைப் பூமியில் விட்டு இடதுகாலினால் மூன்று அறக்கு அறக்க, தம்புருகம்பி பொடிப்பொடியாக அறுந்துபோகும். அப்போது வாசிப்போனும் அங்குள்ளவர்களும் பார்த்து இது என்ன புதுமையென்று ஏங்கி எவனோ ஏவல்செய்தானென்று பலவாறாகப்பேசிக்கொள்வார்கள்.

403. கின்னரியுடையும் ஜாலம்.

கின்னரி வாசிக்குமிடத்திற்சென்று ஒருவருக்கும் தெரியாமலிருக்கும்படியாக மறப்புமையைத் திலர்தபிட்டிக்கொண்டு மேற்கூறியபடியே செய்து மண்டையோட்டை முன்போல் பூமியில்போட்டு அறக்க கின்னரி சின்னபின்னமாக உடைந்துபோகும். வாசிப்பவன் மதிமயங்கி மிரளுவான்.

404. உடுக்கையுடையும் ஜாலம்.

ஜெகஜாலக் கருவில் அரை குண்டுமணி யெடுத்து, அத்துடன் நரியின் ரத்தம் சேர்த்து அந்த ஓட்டிற்பூசி. பேமிரட்டி இலையை அதின்மேல் பரப்பி ஓம்-மக்-சிங்-வங்-கிலியும்-வவ்வுமென்று நூற்றியெட்டு உரு ஜெபித்து, பூசாலிகள் உடுக்கையெடுத்து வன்னிக்கு மிடஞ்சென்று வேடிக்கைப் பார்ப்பவன்போல் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு ஷை ஓட்டைப் பூமியில்வைத்து இடது உள்ளங் கையினால் மூன்று அறக்கு அறக்க உடனே அங்கு எத்தனை உடுக்கை அடித்துக்கொண்டிருந்தார்களோ அத்தனை உடுக்கை கிழிந்துபோகும். வேறே உடுக்கையெடுத்து அடித்தாலும் அதுவுங் கிழிந்துபோகும். பூசாலி முதலானவர்களும் மிரண்டு எவனோ எதிரி யேவல் செய்தானென்பார்கள்.

405. பம்பையுடையும் ஜாலம்.

மேற்சொன்னபடியாவும் செய்து முடித்துக்கொண்டு மூலமந்திரம் அம்-டம்-சம்-நசி-மசி-சவ்வும் என்று நூற்றியெட்டு ஜெபித்து, பம்பையடிக்கு மிடத்திற்போய்நின்று ஷை ஓட்டைப் பூமியில்போட்டு இடது காலால் மூன்று அறக்கு அறக்க உடனேபம்பையானது படாரென்று வெடித்துப்போகும். வேறே எத்தனை எடுத்தடித்தாலும் அத்தனை பம்பையும் உடைந்துபோகும். பம்பைக்காரன் முதலானவர்களும் பதறி மயங்கி நிற்பார்கள்.

406. மேளமுடையும் ஜாலம்.

ஜெகஜாலக்கருவில் கொஞ்சமெடுத்து, கரும்பூனை ரத்தம்விட்டு மத்தித்து முன்போல் தலைப்பிள்ளை மண்டையோடு சம்பாதித்து, அந்த வோட்டில் மேற்படி கருவைப்பூசி ஊமத்தன் இலையை அதின்மேல் பூசி வங்-அங்-உங்-யூரி-அரியும் என்று நூற்றியெட்டு உருஜெபித்து, மேளம் வாசிக்கு மிடத்திற்சென்று ஷை ஓட்டை ஒருவருக்குந் தெரியாமல் பூமியில்போட்டு இடதுகாலால் மூன்று அதற்கு அறக்க அங்கு அடித்துக்கொண்டிருக்கும் படியான மேளங்கள் யாவும் படால்படால் என்று கிழிந்து பொடிபொடியாகப் போகும். மேளம் வாசிப்பவர்களும் திகைத்து வேறெமேளம் எடுத்து அடித்தாலும்அதுவும் கிழிந்துபோகும்; பிறகு எவனோ வசியஞ்செய்து விட்டானென்று ஏங்கி நிற்பார்கள்.

407. மத்தளமுடையும் ஜாலம்.

ஜெகஜாலக்கருவில் ஒருகுண்டுமணியிடை எடுத்து, கோட்டான் இரத்தத்தைவிட்டு மத்தித்து, கரும்பூனையின் மண்டையோடு சம்பாதித்து அந்த வோட்டில் மேற்படி மையைத்தடவி, கருஊமத்தன் இலையை அதின்மேல் பரப்பி வங்-சிங்-ஓம்-யவிரீம்-சவ்வும் என்று நூற்றியெட்டு உருஜெபித்து, மத்தளம் வாசிக்கு மிடத்துக்குச்சென்று வேடிக்கைப் பார்ப்பவன்போல் நின்றுகொண்டேனும் அல்லது உட்கார்ந்துகொண்டேனும் ஒருவருக்குந் தெரியாமல் ஷை யோட்டைக் கீழேபோட்டு இடது காலை அதின்மேல் வைத்து மூன்று அறக்கு அறக்க உடனே மத்தள

மானது இரண்டுபக்கமும் கிழிந்துபோம். மத்தளக்கட்டையும் பொடிப் பொடியாகப் போய்விடும். மத்தளம் வாசிப்பவனும் மிரண்டு விழிப்பான் மற்று முள்ளவர்களும் திகிலடைந்து இதுயாரோ எதிரிவசியஞ்செய்து மத்தளத்தை உடைத்து விட்டானென்று மயங்கித் திகைப்பார்கள்.

408. பேரிகையுடையுஞ் ஜாலம்.

ஜெகஜாலக்கருவில் அரைகுண்டுமணி யிடையெடுத்து முன்போல் நுழைநரியின் ரத்தத்தைவிட்டு, தலைசன் பிள்ளையின் மண்டையோடு சம்பாதித்து அந்த ஓட்டின்மேல்தடவி, எட்டியிலையை அதின்மேல்மூடி வங்-சிங்-ஓம்-யவிரீம்-சவ்வும் என்று நூற்றியெட்டு ஜெபித்து, பேரிகை முழங்கு மிடஞ்சென்று ஒருவருக்குந் தெரியாமல் டை ஓட்டைக் கீழே போட்டு இடதுகாலை யதன்மேல்வைத்து மூன்றறக்கு அறக்க பேரிகை யானது படாலென்று கிழிந்து பொடிப்பொடியாகப் போகும். பேரிகை வாசிப்பவனும் இன்னு முள்ளவர்களும் பிரமிப்பார்கள்.

409. தாளமுடையும் ஜாலம்.

ஜெகஜாலக்கருவில் ஒரு குண்டுமணியிடை எடுத்து அத்துடன் கோட்டான் ரத்தம் விட்டுக் குழைத்து, குரங்கு மண்டையோடு சம்பாதித்து மேற்படி கருவையதிற்பூசி, அதன்மேல் கருஊமத்தன் இலையைப் பரப்பி ஓம்-மங்-மங்-சிங்-சிங்-வங்-வங்-சவ்வும் என்று நூற்றியெட்டு உரு ஜெபித்து, பஜனைகூடம் நாடகம் கோயில் முதலான இடங்களில் தாளம் அல்லது பிரமதாளம் அல்லது சாலர் வாசிக்குமிடத்தில் நீ வேடிக்கைப் பார்ப்பவன்போல் நின்றுகொண்டு மேற்படி மண்டையோட்டைப் பூமியில் போட்டுக்காலால் மூன்று உதையுதைக்க மேற்சொன்ன தாளவகைகளெல்லாம் பொடிப்பொடியாக ஒடிந்துபோகும். ஆலயம் போவோரும் மற்றுமுள்ளவர்களும் மதிமயங்கி மனந்திடுக்கிட்டு நின்றுவிடுவார்கள்.

410. பிட்டிலுடையும் ஜாலம்.

ஜெகஜாலக்கருவில் மிளகு பிரமாணமெடுத்து, தேவாங்கு ரத்தம் விட்டுக் குழைத்து மனிதர் தலை மண்டையோட்டிற்பூசி, பேயத்தி யிலையை அதன்மேல் பரப்பி லங்-மங்-உங்-நசிமசி என்று நூற்றியெட்டு உருஜெபித்து, சச்சேரி காலக்ஷேபங்கள் செய்யுமிடத்திலேனும், பிட்டில் வாசிக்குமிடத்திற் சென்று ஒருவருக்குந் தெரியாமல் பூமியில் மேற்படி ஓட்டைப்போட்டு, மேற்சொன்ன மூலமந்திரத்தைச் சொல்லிக் கொண்டே மூன்றறக்கு இடதுகாலால் அறக்க பிட்டிலின் நரம்புகள் துண்டுதுண்டாக அருந்து. பிட்டிலும் பொடிப்பொடியாக உடைந்து போய்விடும். பிட்டில் வாசிப்பவனும் சபையோர்களும் இது என்ன புதுமையா யிருக்கிறதென்று எக்கம் பிடிப்பார்கள். சிலர் கண்திருஷ்டியோவென்று கவலைப்படுவார்கள்.

411. நாகசுர மிரண்டாய்ப் பிளக்கும் ஜாலம்.

ஜெகஜாலக்கருவில் அரைகுண்டுமணி இடையெடுத்து அத்துடன் நுழைநரி ரத்தம்விட்டுக்குழைத்துத் தலைசன்பிள்ளை மண்டையோட்டில்

அந்தக் கருவைப்பூசி அதன்மேல் எட்டியிலையை மூடி வங்-சிங்-ஓம்-யங் ரீம்-சவ்வும் என்று நூற்றியெட்டு உருஜெபித்து, அம்பட்டர்கள் நாகசுரம் வாசிக்குமிடத்திலாவது அவர்கள்வீட்டிற் கெதிரிலாவது மேற்படி ஓட்டைப் பூமியில்போட்டு இடதுகாலால் மூன்று அறக்கறக்கி மேற்படி மூலமந்திரத்தை நூற்றியெட்டு ஜெபிக்க, வாயில்வைத்து ஊதும் நாகசுரமானது படாலென்று இரண்டுபத்தலாகப் பிளந்துபோகும். வேறே எத்தனை நாகசுரமெடுத்து ஊதினாலும் அது பிளந்தேபோகும்.

412. துத்தி கிழியும் ஜாலம்.

மேற்சொல்லியபடி ஒன்றும் தவராமல்செய்து மூலமந்திரம் ஓம்-சிங்-வங்-யங்ரீம்-சவ்வும் என்று நூற்றியெட்டு உருஜெபித்து, துத்தி பிடிப்பவனெதிரில் நின்று முன்போல் பூமியில்போட்டு இடதுகாலால் மூன்று அறக்கறக்க துத்தி படாலென்று கிழிந்துபோகும். அனைவரும் திடுக்கிட்டு மயங்குவார்கள்.

413. சகல வாத்தியங்களையும் முழக்கமில்லாது செய்யும் ஜாலம்.

ஜெகஜாலக்கருவை குண்டுமணி இடை எடுத்து, அதில் கூளியின் ரத்தம்விட்டு மர்த்தித்து ஒரு பானையோட்டில் தடவி, பேயத்தியிலையை அதன்மேல் சுற்றி ஓம் ஸ்ரீம் றிம் வங் சிங் மங் சவ்வும் என்று ஆயிரத்தெட்டு உருஜெபித்து சகல வாத்தியங்களும் கூட்டமாக முழங்குமிடத்திற் சென்று வேடிக்கைப் பார்ப்போர்போல் ஒரு பக்கமாய் நின்றுக் கொண்டு, மேற்படி ஓட்டை ஒருவருக்குந் தெரியாமல் பூமியில்போட்டு இடதுகாலால் மூன்று அறக்கு இடதுபக்கமாகத் திரும்பி அறக்கியவுடன் அங்கு முழங்கும் வாத்தியம் பொட்டென்று நின்றுபோகும். அவர்கள் எவ்விதமாகப் பிரயாசைப்பட்டாலும் முழங்கமாட்டாது. அப்போது யாவரும் மதிமயங்கி எவனோ எதிரி கட்டிவிட்டானென்று திகைத்து நிற்பார்கள். அப்போது நீ யாரோ ஒருவனைப்போல் வந்து அவர்களைப் பார்த்து, எதிரி எவனோ வாத்தியம் முழங்காமற்படிக்குக் கட்டுகட்டி விட்டான்; அதையான் திருப்பிவிடுகிறேனென்று உனக்கு இஷ்டமான பொருளைக்கேட்டு வாங்கிக்கொண்டு, மேற்படி ஓட்டைக்கண்டு அதின் மேல் வலதுகால்வைத்து வலதுபக்கமாக மூன்றுதரம் அறக்கி, சும்மா விபூதியை யெடுத்து அனைவருக்குங் கொடுத்து அணிந்துகொள்ளச் சொல்லி, பிறகு வாத்தியங்களை வாசிக்கச்சொல்லு. சகல வாத்தியமும் முன்போல் வேடிக்கையாக முழங்கும். வாத்தியக்காரரும் வேடிக்கைப் பார்ப்போர்களும் உன்னைப் புகழ்ந்து கொண்டாடுவார்கள்.

414. வில்லம்பு குண்டாயுதங்களோடுவரும் படையைச் சிதறச்செய்யும் வித்தை.

எதிரிகளானவர் படைகளோடுவந்து எதிர்ப்பதையும் வில்லு, அம்பு, தடி, குண்டு, கத்தி, வளைதடி, சக்கரம், சில்லாக்கோல், நேரிசம், சமுதாளி, பாணம், அஸ்திரம், அக்கினி மந்திரம், பில்லி, ஏவல், குத்து வெட்டு, அடியல் தடியல் இவை முதலானதையும் தடைசெய்ய வேண்டு

மெனில்; ஜெகஜாலக் கருவில் அரைகுண்டுமணிப் பிரமாணமெடுத்து, அத்துடன் சிரியாங்கை சார்விட்டுப் புலியனிடபித்துங் கூடசேர்த்து மர்த்தித்து அந்தத் தயிலத்தை நெற்றியில் பொட்டிட்டுக்கொண்டு இரண்டு புருவத்திலும் பூசிக்கொண்டு, மந்திரம் ஓம் கிறீயும் கிருங்கிலியும் சவ்வும் என்று நூற்றியெட்டுதரம் ஜெபித்து, எப்படிப்பட்ட யுத்தரங்க ரணக்களத்தின் நடுவேபோய் நின்று மேற்கூறிய மூலமந்திரத்தை விடாமல் ஜெபித்துக்கொண்டேயிருக்க, எதிரிகள் மேற்கூறிய ஆயுதங்களினால் எவ்விதமாக ஜாடினும் யாவும் சிதறிப்போகும். அவர்கள் அடிப்பதெல்லாம் புஷ்பமாரிப் பொழிவதுபோலிருக்கும்; எதிரிகளும் கைசலித்து ஓய்ந்து உன்னைப் புகழ்ந்து கொண்டாடுவார்கள்.

415. இடி மழை மின்னல் காற்று இவைகள் சிதறும்படி செய்யும் வித்தை.

ஜெகஜாலக்கருவில் அரைகுண்டுமணிப் பிரமாணம் வாங்கி அத்துடனே செய்யான் ரத்தமும் பித்தமும் உடும்பினுடைய பித்தம் ரத்தமுஞ் சேர்த்து மர்த்திக்க மெழுகுபோலாகும் அதை யெடுத்து வைத்துக் கொண்டு, தாம்பரத்தகட்டில் குளிசஞ்செய்து அதில் மேற்படிமெழுக்கை அடைத்துகிரியும் ஐயும் அங் செயா வெய்யலே என்று நூற்றியெட்டு உருஜெபித்துக் குளிசத்தை வலதுகையில் கட்டிக்கொண்டு இடிமழை மின்னல் காற்று இவைகள் பிரசண்டமாகப் பொழியும்போது போருல் இடி காற்று மழைமின்னல் முதலானதும் சிதறிப்போகும்; பயமில்லாமற் போகலாம்.

416. வசியமை ஜாலம்.

ஆள்காட்டிக் குயிலியின் முட்டையும், அரணையினுடைய பித்தும் சேர்த்து அத்துடன் கருங்கோழி ரத்தமொரு பலமும், பிண்டம் நெய் பலமிரண்டுஞ் சேர்த்து, கோரோசனை கஸ்தூரி புனுகு இவைகள் ஓரிடையாகக் கூடச்சேர்த்துக் கல்வத்திலிட்டு, காவித்து பலம் இரண்டு சூரியகாந்தங் பலம் ஒன்றும், கென்னுயுருவிச்சார் பலம் விட்டு இரண்டு ஜாமம் வரையிலு மரைக்க, பழம் புளிபோல்வரும். அதை வழித்து செப்புப்பாத்திரத்தில் வைத்து வாலையினுடைய பூசை ஒருமண்டலம் செய்துவர தேவதைகள் வசியமாகும். அரசர்களும் வசியமாவார்கள். பேய் பூதம் வேதாளம் இவை முதலானதும் வசியமாகும்; குட்டிச் சாத்தானும் வசியமாகுவான்.

417! மோகன மை.

கட்டுக்காடை முட்டையும், நாயினுடைய பித்தும் மூன்று பலமாகத் தாக்கிக் கழுகின் கொழுப்பும், பேரண்டத்தயிலம், புழுகத்தம் பலம், நாதவிந்து பலம், ஜெகஜாலக்கருவை அரைபலம் சேர்த்து கஸ்தூரி மஞ்சள் புனுகு கஸ்தூரி கோரோசனை இவைகள் வகைக்கு கால் கழஞ்சியாகச் சேர்த்து, துருசு பலமொன்று கூட்டி இவைகளை யெல்லாங் கல்வத்திலிட்டு, குப்பமேனிச்சார் பலம்விட்டு இரண்டு ஜாமம் வரையிலு மெழுகுபோல் அரைத்து வழித்து செப்புச் சிமிளில் வைத்துக் கொள்ளவும். பிறகு அகாரபுவனையுடபூசை ஒரு மண்டலம் செய்துவர

சகலமுஞ் சித்தியாகும். சராசரங்களும் அதிக மோகமாகும். இந்த மோகனமையை திலர்தமிட்டுக்கொண்டு அடிபணி வாயாகில் ஸ்திரீ முதல் புருஷர்களும் மோக அரசரெல்லாம் மோகநாடெல்லா மோக யானை முதல் மிருகங்களெல்லா மோக மிர்க்கிரீகர் மோக தேவதைகள் மோக தேவகணமொடு பூதவேதாளங்களு மோகமாகும்.

418. உச்சாடன மை.

தேவாங்கின் முட்டையோடு மந்தியின் பிச்சும், கொழுப்பு பலமுங் கூடச்சேர்த்து, மாட்டு உணியுஞ் சேர்த்து, கட்டுக்காடை ரத்தமும் மாதர்களுடைய நாதமும் விந்து வகைக்கு பலமாகச் சேர்த்து, வாணியன் இறந்துபோனவுடன் அவனை கொளுத்தும்போது அதில் வடியு நெய் ஒரு பலமும் தம்புலப்பூச்சி ஒருபலமும் சேர்த்து, கஸ்தூரி பலம் ஒன்று, புழுகு கால்கழஞ்சியும் கோரோசனை கால்கழஞ்சியும் முலைப்பால் பலம் ஒன்று இவைகளையும் சேர்த்து சீந்தில் கொடிரசம் பலம் அறையும் கொடிவேலியின் ரசம் பலம் நாலுவிட்டு மேற்சொன்னவைகளை யெல்லாம் கல்வத்திலிட்டு இரண்டு ஜாமம்விடாமல் அரைக்கப்புளிபோல் வரும். அப்போது ஜாதிலிங்கம் ஒருபலம் அதிற்போட்டு கிளிரத்தம் மூன்றுபலம்விட்டு மறுபடியும் இரண்டுசாமமரைத்து வழித்தெடுத்து செம்புசிமிளில் வைத்து வைரவர்பூசை ஒருமண்டலம் செய்துவர ஜெக சித்தி பிரசன்னமாகுவான். அனவுடன் மையையெடுத்து திலர்தமிட்டுக் கொண்டு வெளியே வருவராயாகில் காட்டிலுள்ள ஸ்திரீ புருஷரும் உச்சாடனமாவார். உலகோரும் அரசர்களும் உச்சாடனமாவார்; தேவகணங்களும் பூதபேதவேதாளங்களும் காட்டிலுள்ள பல உயிர்களும் உச்சாடனமாகும். பிதுர்தேவதைகளும் குட்டிச்சாத்தானும் உச்சாடனமாவார்; நவக்கிரகங்களும் உச்சாடனமாகும்.

419. தம்பன மை.

கோட்டான் முட்டையுடன் மூசலின் கொழுப்பும் பிச்சும் சேர்த்து கருநாரை ரத்தம் ஒருபலமும் அக்களுக்குருவிப் பிச்சும் ரத்தமும் சேர்த்து, கோர்வாணம் பலம் ஒன்றும் கேசரியின் நெய்பலம் ஒன்றும் நாதவிந்து இரண்டுபலமும் சேர்த்து, கருநாயின் இரண்டுகண்ணுஞ் சேர்த்து, அழிஞ்சி விதைத்தயிலம் பலம் ஒன்றும் சேர்த்து புழுகு ஜெகஜாலக்கரு நாற்பலஞ்சேர்த்து, அவ்விடமே கஸ்தூரி மஞ்சளும் சேர்த்து, புழுகு காற்கழஞ்சியும் இவைகளை யெல்லாம் கல்வத்திலிட்டு வருக்கன்சார் பலம் ஒன்று செங்காமணக்கிலை சாறுபலம் நாலு, அலரி இலைச்சார் பலம் இரண்டு இவைகளைவிட்டு இரண்டுஜாமம் அரைத்து மெழுகு பதமாகவரும்போது பார்த்து சித்தாமணக்கெண்ணெ பலம் வார்த்து, மறுபடியும் ஒருசாமம் அரைத்து வழித்து செம்பு சிமிளில் வைத்து நாற்பதுநாளுந் தவறாமல் வராகிப் பூசைசெய்து தம்பனக்கரு வைத்துப்பணித்து சித்தியானபிறகு இத்தமையில் கடுகளவு எடுத்து வதனத்தில் திலர்தம் இட்டுக்கொண்டு நாற்றிசைகளை நோக்கிப் பார்ப்பாராகில் திரிபுவனமும் அண்டசராசரமும் தம்பனமாகும். இன்னம் ஸ்திரீ புருஷரும் லோகமுழுதும் தேவதைகளும் பூதபேத வேதாளங்களும்

நவக்கிரகங்களும் கருவிகரணாதிகளும் மிருகங்களும் காளிகாதேவியும் வாசியமாகும்; இவை முதலானவைகளும் தம்பனமாகும்.

420. பேதன மை.

உடும்பின்முட்டையுடன் கரும்பூனை பித்தும் செந்நாயின் கொழுப்பும் பித்தும் சேர்த்து அத்துடன் நட்டுவக்காலி முழுமையும் சேர்த்து ஆந்தையின் ரத்தம் பலம் ஒன்றும் சலம் சமூலியெண்டு ஒரு பலமும் பிராமணப் பெண்ணெய்யும் சேர்த்து நஞ்சக்கொடி ஒரு பலமும் நாதவிந்து இரண்டுபலமும் கருப்பு குண்டுமணி பலம் ஒன்றும் ஜெகஜாலக்கருவில் காற்பலமும் வீரத்தில் ஒரு பலமும் எருமையுணி அரைப் பலமும் முத்லை கெய்யில் பலம் ஒன்றும் சேர்த்து கருங்குரங்கின் கண்ணும் சேர்த்து பேய்பீர்க்கன்சார் பலம் ஒன்றும் ஆவாரம் பிசினி பலம் ஒன்றும் சேர்த்து விஷ்ணுகிராந்திசாறு பலம் மூன்றும் நத்தைச் சூரிச்சார் பலம் மூன்றும் மஞ்சள் கஸ்தூரி புனுகு கோரோசனை இவைகள் காற்கழஞ்சும் சேர்த்து, சாராயம் 6-பலமும் வார்த்துக் கல்வத்தில் மேற்சொல்லியவைகளை எல்லாம் போட்டு இரண்டு ஜாமம் அரைத்துப் பார்க்க மைபோலாகும். அதை வழித்து செம்பு சிமிளில் அடைத்து வைத்து திரிபுரதேவியின் பூசை ஒருமண்டலம் தவறாமற்செய்து சித்தியாகும்படி அம்மனடியைப்பணிந்து, பேதனக்கருவைக் கடுகளவு எடுத்து திலர்தமிட்டுக்கொண்டு வருவையாகில் பாசபர்தமும் பேதனமாகும்; லோகமெல்லாம் பேதனமும் இன்னம் வாசிபூதப்பிரேதம் அஷ்டகணம் தேவர்களும் ஸ்திரீ புருஷர்களும் புவியாளும் மன்னரும் வேதாளமும் மிருகஜாதிகளும் குட்டிச்சாத்தானும் பேதனமாவான்.

421. ஆக்ருஷ்ண மை.

வக்காவின் முட்டையோடு கழுதையினுடைய கொழுப்பும் பிச்சும் சேர்த்து தலைச்சன்பிள்ளை பிண்டகருவு பலம் ஒன்றும், நஞ்சுகொடி பலம் ஒன்றும் சேர்த்து இன்னம் நாதவிந்து பலம் இரண்டும் மண்ணெண்ணை இரண்டுபலம் விட்டு, வாலைரசம் பலம் ஒன்றும் வாத்தினுடைய ரத்தம் பலம் இரண்டும் சேர்த்து, வரப்பெலி பிச்சும் கண்ணும் கூடசேர்த்து, சமாதியினுடைய எலும்பின் தயிலம் ஒருபலமும் சேர்த்து, சிரியாநங்கை யின் வடக்கேபோகும்வேர் பலம் ஒன்றும் கஸ்தூரி மலைமஞ்சள் புனுகு கோரோசனை இவைகள் வகைக்கு காற்கழஞ்சும் சந்தனம் பலம் ஒன்று சேர்த்து; ஆடாதொடை யிலைச்சார் பலம் மூன்று பேய்க்கரையின் தைலம் பலம்நாலு இவைகளையெல்லா மொன்றாகச்சேர்த்துக் கல்வத்தி லிட்டு நாளொன்றுக்கு நாலுசாமமரைத்து மைபோலானபின்பு வழித்து, செம்பு சிமிளில்வைத்துக் கருவைக்கைதொழுதுப்பணிந்து, சாமளாதேவி பூசை ஒருமண்டலம் தவறாமல்செய்து அம்மன் பிரசன்னமானவுடன் ஆக்ருஷ்ண மையைத் தொழுது அந்த மையை தெற்றியிலிட்டுக் கொண்டு நீ நாலுதிசையும் பார்ப்பாயாகில் நவசரசரங்களும் ஆக்ருஷ்ணமாகும். இன்னம் வாசியுந் தேவதைகளுந் தேவகணங்களும் பூதபேதங்களுங் குட்டிச்சாத்தானுந் தராதர முதலானதும் ஆக்ருஷ்ணமாகும். இன்னம் ஸ்திரீபுருஷர்களும் லோகமாதியர்தமும் மிருகஜாதிகளும் ஆனைபடை சேனைதனங்களும் மணிமந்திரமும் வாதவைத்தியமிவைகள் முதலானதும் ஆக்ருஷ்ணமாகும்

422. வித்துவேஷண மை.

செம்பருந்தின் முட்டையைக் கொண்டுவந்து அத்துடன் விச்சுளியின் பிச்சுங் கண்ணுஞ் செவ்வாத்தின் கொழுப்பும் பிச்சுந் தலைச்சன் பிள்ளையின்கரு பலமொன்றும்; தாரிஞ்சில் ரத்தம் பலம் மூன்றும் பல்லிமுட்டை குழியானை பலம் ஒன்று, நாதவிந்து இரண்டு பலம், நஞ்சுகொடி இரண்டு பலம் இலைப்பாசி பலம் ஒன்று கெந்தி பலம் ஒன்றும் கர்ப்பூரவள்ளிச் சார் பலம் மூன்றும் புங்கன்கொட்டை தைலம் பலம் ஒன்றும் ஆனை நெருஞ்சியின்சார் பலம் மூன்றும் புன்நெய் பலம் ஒன்றும் வடக்கே போகும் பூனைக்காலிவேர் சார் பலம் ஒன்றும் கோரோசனை புனுகு கஸ்தூரி பலம் ஒன்றும் கொச்சி மஞ்சள் பலம் அரையும் இவைகள் யாவையும் ஒன்றாகச்சேர்த்து கல்வத்திலிட்டு பனிநீர் ஐந்துபலம்விட்டு இரண்டு ஜாமம் விடாமல் அரைத்து வழித்து செம்புசிமிளில் வைத்துக்கொள்ளவும், பின்பு சாமளாதேவி பூசை ஒருமண்டலந் தவறாமல்செய்து சித்தியானவுடன் மையை நெற்றியி லிட்டுக்கொண்டு வெளிவருவாயாகில் ஸ்திரீ புருஷாளும் தேவதைகளும் ஜெகமுழுதும் பூதவேத வேதாளமும் சகலபுவனங்களும் நவக்கிரகங்களும் வாதமும் வைத்தியமும் வாசிமுதலானதும் மிருகஜாதிகளும் மூலிகைகளும் பிதுர்களும் தேவகணங்களும் செய்தொழில் முதலானதும் அண்டசராசரமும் அஷ்டகஜமும் பேய்கள் முதலானதும் யாவும் வித்துவேஷணமாகும்.

423. மாரண மை.

அணிப்பிள்ளையின் முட்டையுடன் அண்டங்காக்கை ரத்தம் பலம் ஒன்றும் வெண்கூளி பிச்சும் பச்சோந்தியின் பிச்சும் அதின் ரத்தமும் பலம் ஒன்றும், பச்சைத்தவளை பிச்சும் தேரையின் பிச்சும் கொழுப்பும் ஜெகஜாலக்கரு ஒரு பலமும், காபி பலம் ஒன்றும்; பாம்பின் விஷம் பலம் ஒன்றும், எட்டிக்கொட்டை தைலம் பலம் ஒன்றும் நாய்விந்து பலம் இரண்டும் சீந்திற்கொடியின் வடக்கேபோகும் வேரும் கோரோசனை கஸ்தூரி புனுகு இவைகள் வகைக்கு காற்கழஞ்சு மேற்கூறிய இவைகள் யாவையும் ஒன்றாகச்சேர்த்து கல்வத்திலிட்டு அழுகண்ணியிலையின்சார் மூன்றுபலமும் விட்டு சுத்தநீர் இரண்டுபலம் விட்டு கிலைப்பால் இரண்டு பலம்விட்டு வாழுன்னிசார் மூன்றுபலம் விட்டு இரண்டு ஜாமம் விடாமல் அரைத்து மைபோலானபின்பு வழித்து, எட்டிமரத்துவேர் சிமிளில் வைத்துக்கொள்ளவும். பிறகு சக்கலாதேவியின் பூசை ஒருமண்டலந் தவறாமல் செய்துவர சித்தியாகும். அஷ்டமாசித்தியாட மாரணக்கருவையும் சக்கலாதேவியையும் பணிந்து சகல சித்துமாடலாம், மாரணக்கருவின் தொழில் யாதெனில்:—நாணிப்பனையோலை ஒரு அங்குலம் நீண்டில் சக்கலாதேவியின் சக்கரத்தை யெழுதி மாரணத்தின் கோஜமும் பீஜமும் அடைத்து உனக்கு எதிரியின் பேரையறிந்து அதைத் தலைக்காலாய் மாற்றி மாரணமையைப்பூசி அனலிட்டு சக்கலாதேவியைப் பூசித்து மாரணமூலமந்திரத்தை நூற்றியெட்டு ஜெபிக்க அன்னெதிரி ஒருவாரத்தில் தேகமெல்லாம் வெடித்து அந்தகன் பட்டணமேக வழி

பார்ப்பான். அல்லது குஷ்டரோய் கண்டமாலை நாலுநாளில் காணும் இதைத்திருப்ப யாவராலும் ஆகாது. உன்னை தேடிவந்து உன்னை அடிதொழுவாராகில் அப்போது நீ பசும்பால் விட்டு சக்கரத்தைக் கழுவிவிட பாதகர்களுக்குக் கண்டபிணியானது தீர்ந்து சுகப்படுவார்கள். இத்தொழில் செய்வது பாபம்; கருமிகளுக்குச் செய்தால் தோஷமில்லையென முன்னோர் கூறுகின்றனர்.

424. பந்திசெண்டு அழைப்பிக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு பூக்குடலையெடுத்து அனைவருக்குங்காட்டி இந்தப் பூக்குடலை நிறையப்பூ அழைப்பித்து அனைவருக்கும் கொடுக்கிறேன் என்று அந்தக்கூடையைப் பூமியில்வைத்து அதன்மேல் ஒரு துணியைப் போட்டுமூடி வேதாளமந்திரத்தை நினைத்து ஜெகஜாலமையைக் கூடையின் மேல் தெளித்து உச்சாடன மையை விரலில் தொட்டு நெற்றியில் பொட்டிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானை நினைக்க, ஒருவர் கண்ணுக்கும் தோன்றாமல் உன்னெதிரேவந்து நிற்பான். அப்போது நீ அவனைப்பார்த்து இந்தப் பூக்குடலை நிறைய புஷ்பச்செண்டு கொண்டுவாவென்று சொல்லுவாயாகில் உடனே அந்தக்குட்டிச்சாத்தான் பூந்தோட்டத்திற்சென்று பூபறித்து பந்திசெண்டு கட்டி பூக்குடலையில் கொண்டுவந்து வைப்பான். அதன்பிறகு நீ துணியைத்திறந்து காண்பிக்க பூக்குடலைநிறைய பூச்செண்டு இருக்கும். சபையோர்களும் ஆச்சரியப்படுவார்கள். புஷ்பத்தை யெடுத்து அப்புறம் வைத்துக்கொள்ளவும். ஆனால் இது உண்மையான புஷ்பமாகையால் மறைந்துபோகாது.

425. சந்தனமழைப்பிக்கும் ஜாலம்,

ஒரு சந்தனக்கிண்ணத்தையெடுத்து சபையோர்களுக்குக்காட்டிச் சந்தனமழைப்பிக்கிறேன் பாருங்களென்று அந்தக்கிண்ணத்தை மேசையின்மேல்வைத்து ஒரு வெள்ளைத்துணியைப்போட்டு மூடி முன்போல் மந்திரத்தை ஜெபித்து, குட்டிச்சாத்தானை அழைக்க முன்போல் வருவான். சந்தனம் கொண்டுவரும்படியாகச் சொல்ல உடனே சந்தனங்கொண்டு வந்து கிண்ணத்தில் நிறையவைப்பான். பிறகு துணியைத் திறந்து பார்க்க சந்தனம் நிறையவிருக்கும்; சபையோர்களுக்குக்காட்டி அதையெடுத்து அப்புறம் வைத்துக்கொள்ளவேண்டியது.

426. ப்ன்னீரழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு பன்னீர்ப்புட்டியை யெடுத்து அனைவருக்குங்காட்டிப் பன்னீர் அழைப்பிக்கிறேனென்று மேற்கூறிய வாறுசெய்து ஜெபிக்க முன்போல் குட்டிச்சாத்தான் வருவான், பன்னீர் கொண்டுவாவென்று சொல்ல அப்படியே கொண்டு வந்து வைப்பான். பிறகு துணியை நீக்கிப்பார்க்கப் புட்டி நிறைய பன்னீரிருக்கும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்; அதையெடுத்து அப்புறம் வைத்துக்கொள்ளவேண்டியது.

427. வெற்றிலையழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு பிறப்பன் கூடையையெடுத்து அனைவருக்குங்காட்டி இந்தக் கூடைநிறைய வெற்றிலை அழைப்பிக்கிறேன் என்று முன்போல் துணி

போட்டு மூடி மேற்கூறியவாறுசெய்து ஜெபிக்க, குட்டிச்சாத்தான் வருவான். அவனுடன் வெற்றிலையைக் கொண்டுவரும்படிச்சொல்ல அந்த க்ஷணமே கூடை நிறைய வெற்றிலைக் கொண்டுவந்து வைப்பான். சற்றுநேரம்பொருத்துக் கூடையைத்திறந்துபார்க்க வெற்றிலை நிறையவிருக்கும்; பார்த்தவர்கள் பிரமிப்பார்கள். அதையும் அப்புறமெடுத்து வைத்துக்கொள்ள வேண்டியது.

428. பாக்கழைப்பித்தும் ஜாலம்.

சபையோர்களைப் பார்த்து, வெற்றிலை அழைப்பித்தேன், இதோ பாக்கு அழைப்பிக்கிறேன் என்று மேற்கூறியவாறு செய்து ஜெபித்து, ஒரு சிறிய கூடையை மேசைமேல் வைத்து முன்போல் துணிபோட்டு மூடி, குட்டிச்சாத்தானை நினைத்தவுடன் வருவான். பாக்கு கொண்டுவாவென்று சொல்ல அந்த க்ஷணமே நல்ல பிடின்பாக்காய்க் கூடைநிறைய கொண்டுவந்து வைப்பான். பிறகு சற்றுநேரம்பொருத்துக் கூடையைத் திறந்து பார்க்க,பாக்கு கூடைநிறைய விருக்கும்; ஆச்சரியப் படுவார்கள். அதையும் அப்புறமெடுத்து வைத்துக்கொள்ள வேண்டியது.

429. ஜாதிக்காய் அழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு தாம்பாளத்தை யெடுத்து சபையோர்களுக்குக் காட்டி, மேசையின்மேல்வைத்து,நல்லிதமான சீலையைப்போட்டு மூடி மேற்சொல்லியவாறு செய்து ஜெபிக்க குட்டி வருவான். ஜாதிக்காய் கொண்டுவாவென்று சொல்வாயாகில் உடனே தட்டுநிறைய கொண்டுவந்து வைப்பான். சற்றுநேரம்பொருத்து திறந்துபார்க்க ஜாதிக்காய் வந்திருக்கும். சந்தோஷப் படுவார்கள். அதையும் அப்புறமெடுத்து வைத்துக்கொள்ள வேண்டியது.

430. ஜாதிபத்திரி யழைப்பிக்கும் ஜாலம்.

மேற்சொல்லியபடி தாம்பளத்தை வைத்துமூடி செபிக்க குட்டி வருவான். ஜாதிபத்திரி கொண்டுவாவென்று சொல்வாயாகில் உடனே கொண்டுவந்து வைப்பான். சற்றுநேரம்பொருத்து திறந்து பார்க்க ஜாதிபத்திரி வந்திருக்கும். அதையும் அப்புற மெடுத்து வைத்துக் கொள்ள வேண்டியது.

431. ஏலக்காயழைப்பிக்கும் ஜாலம்.

மேற்சொல்லியபடி தாம்பாளத்தை வைத்துமூடி முன்போல் கருவைத் தெளித்து செபிக்க குட்டிச்சாத்தான் வருவான். ஏலக்காய் கொண்டுவா வென்று சொல்ல உடனே கொண்டுவந்து வைப்பான். சற்றுநேரம் பொருத்துத் திறந்துபார்க்க ஏலக்காய் வந்திருக்கும். அதையும் சபையோர்களுக் குக்காட்டி அப்புறம் வைத்துக் கொள்ள வேண்டியது.

432. லவங்கமழைப்பிக்கும் ஜாலம்.

மேற்சொல்லியபடி தாம்பாளத்தைவைத்து மூடி, முன்போல் கருவைத்தெளித்து செபிக்க குட்டிச்சாத்தான் வருவான். லவங்கம்

கொண்டுவரும்படியாகச் சொல்ல அந்தக்ஷணமே லவங்கம் கொண்டு வந்து வைப்பான். சற்றுநேரம் பொருத்துத் திறந்துபார்க்க லவங்கம் வந்திருக்கும். அதையும் சபையோர்களுக்குக் காட்டி அப்புறம் வைத்துக்கொள்ள வேண்டியது.

433. வால்மிளகழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு டப்பியை யெடுத்துத் திறந்து சபையோர்களுக்குக் காட்டி மேற்சொல்லியபடி மூடிவைத்து கருவைத்தெளித்து செபிக்க குட்டி வருவான். வால்மிளகு கொண்டுவாவென உடனே கொண்டுவந்து வைப்பான். சற்றுநேரம் பொருத்து டப்பியைத்திறந்து பார்க்க மிளகு வந்திருக்கும். அதையும் சபையோர்களுக்குக் காட்டி அப்புறம் வைத்துக்கொள்ளவேண்டியது.

434. கொப்பறைத்தேங்கா யழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு கூடையை மேசைமேல் வைத்து அதன்மேல் துணியைப் போட்டுமூடி, மேற்சொல்லியபடி யாவும் செய்து கருவைத்தெளித்து செபிக்க குட்டிச்சாத்தான் வருவான். கொப்பரைத்தேங்காய் கொண்டுவாவென்று சொல்வாயாகில் உடனே கொண்டுவந்து வைப்பான். சற்று நேரம் பொருத்து மூடிய துணியைத் திறந்துபார்க்க தேங்காய் வந்திருக்கும். அதையும் சபையோர்களுக்குக் காட்டி அப்புறம் வைத்துக் கொள்ளவேண்டியது.

435. மாம்பழமழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு தட்டை மேசைமேல் வைத்து, மேலே துணியைப்போட்டு மூடி முன்போல் கருமுதலானதும் தெளித்து உச்சாடன மையைத் திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானைத் தியானிக்க குட்டிவருவான். மாம்பழத்தைக் கொண்டுவரும்படி சொல்ல அந்தக்ஷணமே கொண்டுவந்து தட்டை நிறையவைப்பான். சற்றுநேரம் பொருத்து மூடியதுணியைத் திறந்துபார்க்க பாம்பழம் வந்திருக்கும்; அதையும் சபையோர்களுக்குக் காட்டி அப்பால் எடுத்து வைத்துக்கொள்ளவும்.

436. வாழைப்பழ மழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு மூங்கிற் பெட்டியை எடுத்து அனைவருக்குங்காட்டிப் பெட்டிக்குள்ளே கருவுமுதலானதும் தெளித்து மேல்மூடியை மூடி,சக்கலாதேவி மூலமந்திரத்தை நூற்றியெட்டுதரஞ்செபித்து மேற்படி திலர்தத்தையிட்டுக்கொண்டு குட்டியைத் தியானிக்கக் குட்டிவருவான். வாழைப்பழம் கொண்டுவாடா என்றுசொல்ல அப்படியே கொண்டுவந்து மூங்கிற்பெட்டியில் வைப்பான். முன்போல் சற்றுநேரம் பொருத்து பெட்டியைத் திறந்துபார்க்க வாழைப்பழக்குலை வந்திருக்கும். அதையும் சபையோர் களுக்குக் காண்பித்து அப்பாலெடுத்து வைத்துக்கொள்ளவும். ஆனால் நாம் எத்தனை குலை கொண்டுவரும்படி சொல்லுகின்றோமோ அத்தனை குலை வந்திருக்கும்.

437. கோய்யாப்பழ மழைப்பிக்கும் வித்தை.

முன்போல் ஒரு கூடையை மேஜைமேல் வைத்துத் துணியைப் போட்டு மூடி, மேற்கூறியபடி செய்து பைரவர் மூலமந்திரத்தை நூற்றியெட்டு ஓதி உச்சாடனமையைத் திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானைத் தியானிக்க குட்டிச்சாத்தான் உன்கண்ணுக்குப் பிரசன்னமாவான். கொய்யாப்பழம் கொண்டுவாடா வென்றுசொல்ல அப்படியே கொண்டு வந்து வைப்பான். முன்போல் சற்றுநேரம்பொருத்து மூடியதுணியைத் திறந்துபார்க்க கூடைநிறைய கொய்யாப்பழ மிருக்கும். அதையுஞ்சபையோர்களுக்குக்காட்டி அப்பால் வைத்துவிட வேண்டியது.

438. பலாப்பழமழைப்பிக்கும் வித்தை.

ஒருபெரிய கூடையையெடுத்து அனைவருக்குங்காட்டி மூடிவைத்து, மேற்கூறியபடி செய்து வேதாளமந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து மேற்படிமையை திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானைத் தியானிக்க முன்போல்வருவான். பலாப்பழம் கொண்டுவாடா வென்றுசொல்ல அப்படியே அந்த க்ஷணம் கொண்டுவந்து வைப்பான். சற்றுநேரம் பொருத்துத் திறந்துபார்க்க பலாப்பழம் வந்திருக்கும்; அனைவருக்குங் காண்பித்து அப்பாலெடுத்து வைத்துக்கொள்ளவும்.

439. எலுமிச்சம்பழ மழைப்பிக்கும் வித்தை.

எந்தக் கூடையாகிலும் ஒரு கூடையையெடுத்து அனைவருக்குங் காட்டி மேற்கூறியபடி செய்து துணியைப்போட்டு மூடி, முன்போல் மந்திரத்தைத் தியானித்துக் குட்டியை வாவென்று அழைக்க குட்டிச் சாத்தான் ஓடிவருவான். அவனைப்பார்த்து எலுமிச்சம்பழங் கொண்டு வாடா என்றுசொல்ல அந்தக்ஷணமே எலுமிச்சம்பழங் கொண்டுவந்து வைப்பான். சற்றுநேரம்பொருத்து மூடியதுணியைத் திறந்துபார்க்க எலுமிச்சம்பழம் வந்திருக்கும். அனைவருக்குங்காட்டி அப்பால் எடுத்து வைத்துக்கொள்ளவும். ஆனால் கருவைமாத்திரம் கூடையில் மறவாமல் தெளிக்கவேண்டியது.

440. மாதுளம்பழ மழைப்பிக்கும் வித்தை.

முன்போலொரு சிறியகூடையை யெடுத்து அனைவருக்குங் காட்டி மேற்சொன்னபடி கருமுதலானது பூசி, சக்கலாதேவி மூலமந்திரத்தை நூற்றியெட்டு ஓதி கூடைமேல் துணிபோட்டுமூடி, குட்டிச்சாத்தானைத் தியானிக்கவருவான். அவனை மாதுளம்பழங் கொண்டுவரச்சொல்ல அந்தக்ஷணமே கொண்டுவந்து கூடைநிறையவைப்பான். முன்போல் சற்றுநேரம் பொருத்து மூடியதுணியைத் திறந்துபார்க்க மாதுளம்பழம் வந்திருக்கும். அனைவருக்குங்காட்டி அப்பாலெடுத்து வைத்துக்கொள்ள வேண்டியது.

441. விளாம்பழ மழைப்பிக்கும் வித்தை.

மேற்கூறியபடி ஒரு கூடையை எடுத்து அனைவருக்குங்காட்டி முன்போல் யாவுஞ்செய்து கூடைமேல் துணியைப்போட்டுமூடி, வேதாளமந்தி

ரத்தை நூற்றியெட்டு ஓதி, மேற்படி திலர்தத்தை இட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானைத் தியானிக்க வருவான். அடே குட்டிச்சாத்தான்! விளாம்பழங் கூடைநிறையக் கொண்டுவாவென்று சொல்ல, கொண்டுவந்து வைப்பான். நீ முன்போல் சற்றுநேரம் பொறுத்து மூடிய துணியைத் திறந்து பார்க்க விளாம்பழம் வந்திருக்கும். அதையுஞ் சபையோர்களுக்குக் காட்டி அப்பால் எடுத்துவைத்துக் கொள்ளவேண்டியது.

442. பொம்புளிமாஸ்பழம் அழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு மூங்கிற் கூடையை எடுத்து அனைவருக்குங் காட்டி மேற்சொன்ன கருவை யதில் தெளித்து மேலே துணியைப்போட்டு மூடி, வராகி மந்திரத்தை நூற்றியெட்டுதரம் ஓதிக் குட்டிச்சாத்தானைத் தியானிக்க வருவான். அவனைப்பார்த்து பம்புளிமாஸ் பழம் கொண்டுவாடாவென்றுசொல்ல உடனே கொண்டுவந்து மூங்கிற்கூடை நிறைய வைப்பான். நீ முன்போல் சற்றுநேரம் பொறுத்து மேலே மூடிய துணியைத் திறந்துபார்க்க பம்புளிமாஸ் பழம் வைத்திருக்கும். அதையெடுத்து சபையோர்களுக்குக் காட்டி அப்பால் வைத்துக்கொள்ளவேண்டியது.

443. அன்னாசிப்பழம் அழைப்பிக்கும் வித்தை.

முன்போலொரு மூங்கிற்கூடையை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்தக் கூடைநிறைய அன்னாசிப்பழ மழைப்பிக்கிறேனென்று ஜெகஜாலக்கருவும் ஐங்கோலக்கருவும் அந்தக் கூடையில் தெளித்து மேலே துணியைப்போட்டு மூடி சக்கலாதேவி மந்திரத்தை நூற்றியெட்டு ஓதி, உச்சாடனக்கருவை முன்போல் திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானைத் தியானிக்க வருவான். அவனைப்பார்த்து சீக்கிரம் அன்னாசிப்பழங் கொண்டுவாடாவென்று சொல்ல அந்தக்ஷணமே கொண்டுவந்து கூடைநிறையச் சேர்ப்பான். நீ முன்போல் சற்றுநேரம் பொறுத்து மூடிய துணியைத் திறந்துபார்க்க அன்னாசிப்பழம் வந்திருக்கும், அதையெடுத்து அனைவருக்குங் காட்டி அப்பாலெடுத்து வைத்துக்கொள்ள வேண்டியது.

444. ஆரஞ்சிப்பழம் அழைப்பிக்கும் ஜாலம்.

எந்தக் கூடையாகிலும் ஒரு கூடையெடுத்து அனைவருக்குங்காட்டிப் பூமியின்மேல் வைதது, மேற்சொல்லியவாறு கருவுகளைப் பூசி வாலை மந்திரத்தை நூற்றியெட்டு ஓதி, கூடையின்மேல் துணியைப்போட்டு மூடி, குட்டிச்சாத்தான்! சீக்கிரம் ஆரஞ்சிப்பழம் கொண்டுவாடா என்று சொல்ல, அந்தக்ஷணமே கொண்டுவந்து கூடைநிறைய வைப்பான். நீ முன்போல் சற்றுப்பொறுத்து மூடியதுணியைத் திறந்துபார்க்க பழம் வந்திருக்கும். அதையெடுத்து அனைவருக்குங் காட்டி அப்பாலெடுத்து வைத்துக் கொள்ளவும்.

445. கிச்சிலிப்பழம் அழைப்பிக்கும் ஜாலம்.

முன்போல் எந்தக் கூடையாகிலும் ஒன்றையெடுத்து அனைவருக்குங் காட்டி, இந்தக் கூடைநிறைய கிச்சிலிப்பழம் அழைப்பிக்கிறேன்

பாருங்களென்று மேற்கூறியபடி கருவுகளைப் பூசி வேதாளமந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து கூடையை பூமியில்வைத்து மேலே துணியைப் போட்டு மூடி மேற்படி மையை மறவாமல் திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானைத் தியானிக்க வருவான், அவனைப் பார்த்துக் கிச்சிலிப்பழங் கொண்டுவாடா வென்றுசொல்ல, அப்படியே அந்தக்ஷணம் கொண்டுவந்து கூடைநிறையவைப்பான். நீ முன்போல் சற்றுநேரம் பொறுத்து மூடிய துணியைத் திறந்துபார்க்கப் பழம் வந்திருக்கும். அதையெடுத்து சபையோர்களுக்குக் காட்டி அப்பாலெடுத்து வைத்துக் கொள்ளவும்.

446. பேரிச்சம்பழம் அழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு பெரிய தாம்பாளத்தை எடுத்து, சபையோர் அனைவருக்குங் காட்டி, இந்தத் தட்டுநிறைய பேரிச்சம்பழம் அழைப்பிக்கிறேன் பாரென்று ஜெகஜாலக் கருவையும் ஐங்கோலக் கருவையும் தாம்பாளத்திற் பூசி பைரவர் மந்திரத்தை நூற்றியெட்டு உருகொடுத்து உச்சாடன மையைத் திலர்தமிட்டுக்கொண்டு தாம்பாளத்தின்மேல் ஒரு கூடைபோட்டு மூடி, குட்டிச்சாத்தானை நினைக்க வருவான். அவனைப்பார்த்துப் பேரிச்சம் பழம் கொண்டுவாடாவென்று சொல்ல, அந்தக்ஷணமே தட்டின் நிறைய பேரிச்சம்பழத்தைக் கொண்டுவந்து வைப்பான். நீ முன்போல் சற்றுநேரம் பொறுத்து மூடிய துணியைத் திறந்து பார்க்க பழம் வந்திருக்கும். அதையெடுத்து அனைவருக்குங் காட்டி அப்பாலெடுத்து வைத்துக்கொள்ளவும்.

447. திராட்சைப்பழம் அழைப்பிக்கும் ஜாலம்.

மேல்மூடியோடிருக்கும் ஒரு மூங்கிற்கூடையை யெடுத்துச் சபையோர்களுக்குக் காட்டி இதோ இந்தக் கூடைநிறைய திராட்சைப்பழம் அழைப்பிக்கின்றேன் பாரென்று ஜெகஜாலக்கருவும் ஐங்கோலக்கருவும் கூடையிற் பூசி மேல்மூடியை மூடி அதின்மேல் துணியைப்போட்டு மூடி, சக்கலாதேவி மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து மேற்படி மையைத் திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானைத் தியானிக்கக் குட்டிச்சாத்தான் வரப்பார்த்துத் திராட்சைப்பழம் கொண்டுவாடாவென்று சொல்லி வாய்மூடுமுன்னே கொண்டுவந்து வைப்பான். நீ முன்போல் சற்றுநேரம் பொறுத்து மூடிய துணியைத் திறந்துபார்க்க திராட்சைப்பழம் வந்திருக்கும். அதையெடுத்து அனைவருக்குங் காட்டி அப்பாலெடுத்து வைத்துக்கொள்ளவும்.

448. அத்திப்பழ மழைப்பிக்கும் ஜாலம்.

எந்தத் தட்டாகிலும் எடுத்துத் தட்டுநிறைய அத்திப்பழம் அழைப்பிக்கின்றேனென்று முன்போல் தட்டில் கருவுகளைப்பூசித் துணிபோட்டு பைரவர் மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து உச்சாடன மையைத் திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானைத் தியானிக்க குட்டிச்சாத்தான் வருவான். அவனைப்பார்த்து அடே அதிசீக்கிரமாக அத்திப்பழம் கொண்டுவாடாவென்று சொல்ல, உடனே பழங்கொண்டு வந்து தட்டு

நிறைய வைப்பான். நீ முன்போலவே சற்றுநேரம் பொறுத்து மூடிய துணியைத் திறந்துபார்க்க பழம் வந்திருக்கும்; அனைவருக்குங் காட்டி அப்பாலெடுத்துக்கொள்ளவும்.

449. சர்க்கரையழைப்பிக்கும் ஜாலம்.

புதுத்தோண்டி யொன்று எடுத்துச் சபையோர்களுக்குக் காட்டி இத்தோண்டிநிறைய சர்க்கரை அழைப்பிக்கிறேன் பாரென்று ஜெகஜாலக்கருவை விரலில்தொட்டுத் தோண்டியிற்பூசி, சச்கலாதேவியைத் தியானித்து வேதாளமந்திரத்தை நூற்றியெட்டு ஓதி ஜாலக்காளைப் பூசித்து உச்சாடனமையைப் பொட்டிட்டுக்கொண்டு தோண்டிமேல் ஒரு துணியைப்போட்டு மூடிக் குட்டிச்சாத்தானைத் தியானிக்க பிரசன்னமாகவருவான். அவனைப்பார்த்து அடேகுட்டிச்சாத்தான்! சீக்கிரமாக இந்தத் தோண்டிநிறைய சர்க்கரைக் கொண்டுவாடா வென்று சொல்ல அந்தக்ஷணமே கொண்டுவந்து வைப்பான். சற்றுநேரம் பொருத்து மூடியதுணியைத் திறந்துபார்க்க குடத்தின்நிறைய சர்க்கரை வந்திருக்கும். அனைவருக்குங்காட்டி அப்பால் எடுத்து வைத்துக்கொள்ளவும்.

450. கற்கண்டழைப்பிக்கும் ஜாலம்.

ஒரு பீங்கான் ஜாடியை எடுத்துச் சபையோர்களுக்குக் காட்டி, இந்தஜாடிநிறைய கற்கண்டு அழைப்பிக்கிறே னென்றுசொல்லி அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டு ஜாடிமேல் தெளித்துத் துணியைப் போட்டு மூடிவிட்டு பைரவர்மந்திரத்தை நூற்றெட்டோதி வேதாளமந்திரத்தையு மப்படியேஓதி ஜாலக்காளைப்பூசித்து உச்சாடனமையைத் திலர்தமிட்டுக் குட்டிச்சாத்தானை நினைக்க பிரசன்னமாக வருவான். அவனைப்பார்த்து அடே இந்தஜாடிநிறைய கற்கண்டு கொண்டுவாடா வென்றுசொல்ல அப்படியே அந்தக்ஷணம் கொண்டுவந்து வைப்பான். நீ முன்பொல் சற்றுநேரமிருந்து மூடியதுணியைத் திறந்துபார்க்க கற்கண்டு வந்திருக்கும் அதை அனைவருக்குங்காட்டி அப்பாலெடுத்து வைத்துக்கொள்ள வேண்டியது.

451. தேன் அழைப்பிக்கும் ஜாலம்.

புட்டியொன்றை எடுத்து அனைவருக்குங்காட்டி, இந்தப்புட்டிநிறைய தேன் அழைப்பிக்கிறேன் என்று மகாமாயமையை விரலில் தொட்டுப் புட்டியின்மேல் தெளித்து மேஜையின்மேல் வைத்துக் கூடையைப் போட்டு மூடிவிட்டு வாராகிமந்திரத்தை நூற்றியெட்டுஓதி ஆஞ்சநேயரைத் தியானித்து ஜாலக்காளைப் பூசித்து உச்சாடனமையைத் திலர்தமிட்டுக் கொண்டு குட்டிச்சாத்தானை நினைக்க உடனே வருவான். அவனைப் பார்த்து அடேகுட்டிச்சாத்தான்! இந்தப்புட்டிநிறைய தேன் கொண்டு வாடாவென்றுசொல்ல அந்தக்ஷணமே கொண்டுவந்து வைப்பான். நீ முன்போல் சற்றுநேரம்பொருத்து மூடியகூடையைத் திறந்துபார்க்க தேன் வந்திருக்கும்; அனைவருக்குங்காட்டி அப்பால் எடுத்துவைத்துக் கொள்ளவேண்டியது.

452. பசும்பால் அழைப்பிக்கும் ஜாலம்.

பெரிய சொம்பு ஒன்றையெடுத்து அங்குள்ள யாவருக்குங் காட்டி, இந்தச் சொம்புநிறைய பசும்பால் அழைப்பிக்கிறே னென்று அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டு, சொம்பின்மேல் தெளித்து முன்போல் துணியைப்போட்டு மூடிவிட்டு வாலைமந்திரத்தை நூற்றியெட்டு ஓதி, பைரவரைத் தியானித்து ஜாலக்காளைப்பூசித்து உச்சாடன் மையைத் திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானை நினைக்க வருவான். அவனைப் பார்த்து அடே குட்டிச்சாத்தான்! சீக்கிரமாக பசும்பால்கொண்டுவாடா வென்றுசொல்ல உடனே சொம்புநிறைய கொண்டுவந்து வைப்பான். நீ சற்றுநேரம்பொருத்து மூடியதுணியைத்திறந்து பார்க்கப் பசும்பால் வந்திருக்கும் அதை அனைவருக்குங்காட்டி அப்பால் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டியது.

453. நெய் அழைப்பிக்கும் ஜாலம்.

காலியான நெய்சித்தையைக் கொண்டுவந்து சபையோர்களுக்குக் காட்டி, இதோ இந்தநெய்சித்தைநிறைய நெய் அழைப்பிக்கிறேனென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு சித்தையின்மேல் தெளித்து அதின் மேல் துப்பட்டியைப்போட்டு மூடி சக்கலாதேவி மூலமந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து வேதாளமந்திரத்தையும் அப்படியே ஜெபித்து, ஜாலக்காளைத் தியானித்து; உச்சாடனமையைத் திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானை நினைக்கவருவான். அவனுடன் சீக்கிரமிந்த சித்தை நிறைய நெய்கொண்டுவாடா வென்றுசொல்ல அப்படியே அந்தக்ஷணம் கொண்டுவந்து வைப்பான். நீ முன்போல் மூடியதுணியைத் திறந்து பார்க்க நெய்வந்திருக்கும். அதையுமனைவருக்குங்காட்டி அப்பால்எடுத்து வைத்துக்கொள்ள வேண்டியது.

454. சபையில் நாகல் வந்துவிழும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலாவது இன்னமெந்த யிடங்களிலாவது இருக்குஞ் சபையோர்களைப்பார்த்து. இந்த சபைநடுவில் நாகல்வந்து விழும்படி செய்கிறேன் பாருங்களென்று மயானருத்திரி மந்திரத்தை நூற்றியெட்டு உரு ஜெபித்து, சங்கிலிக்கருப்பனைத் தியானித்து, தம்பனக் கருவில் கடுகு பிரமாணமெடுத்து நெற்றியில் திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானை நினைக்கவருவான். அவனைப்பார்த்து, அடே குட்டி! இந்தச் சபையோர்களெல்லாம் மிரளும்படியாக நாகலைக்கொண்டுவந்து வையடாவென்று சொல்ல அந்தக்ஷணமே அப்படியே கொண்டுவந்து வைப்பான். அதைப் பார்த்தபேர்களெல்லாம் இது என்ன புதுமையென்று அந்தநாற்றம் பொருக்காமல் ஓடுவார்கள். அவர்களைத்தடுத்து இதோ யிந்தநாகலை மாயமாய்ப் போகும்படிச் செய்கிறேன் பாருங்களென்று முன்போல் குட்டிச்சாத்தானை அழைத்து நாகலை எடுத்துப் போகச்சொல்ல யெடுத்தேகுவான். சபையோர்களும் இதுயென்ன வித்தையா யிருக்குதென்று ஆச்சரியப்படுவார்கள்.

455. சபையில் பாராங்கல் வந்துவிழும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலாவது இன்னுமெந்த விடங்களிலாவது அங்குள்ளவர்களைப்பார்த்து, இப்போது இந்தசபையில் திடீர்பிரவேசமாக ஒரு பெரிய பாராங்கல் வந்துவிழும்படிச் செய்கிறேனென்று அஷ்டமாசித்திமையை விரலில் தொட்டுக்கொண்டு, ஆஞ்சநேயர் மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி, வேதாளமந்திரத்தை நூற்றியெட்டோதி, கையிற்றெரட்ட கருவை நாலுதிக்கிலும் தெளித்துவிட்டு உச்சாடனமையைத் திலர்தமிட்டுக்கொண்டு குட்டிச்சாத்தானை தியானிக்க உடனே வருவான். அவனைப்பார்த்து ஓ குட்டிச்சாத்தான்! நீ இந்தக்ஷணமே ஒரு பெரிய பாராங்கல்லை தூக்கிக்கொண்டு யாருக்குந்தெரியாமல் அந்தரமாகவந்து இந்த சபையிலுள்ளவர்கள்மேல் படாமல் ஒரு பாராங்கல்லைப் பேரிடிமுழக்கம்போல் திடுலென்று போடவேண்டுமென்றுசொல்ல, குட்டிச்சாத்தான் கல்லைத் தூக்கிக்கொண்டுவந்து சபைநடுவில் தபாலென்று போடுவான். அப்போது அங்குள்ள சிறியோர் பெரியோர் விருத்தர் ஸ்திரீகள் முதலானவர்களும் திடுக்கிட்டு மெய்மறந்து மிரண்டு விழிப்பார்கள். சிலர் இது குட்டிச்சாத்தான் வேலையென்று கொண்டாடுவார்கள்.

456. நெருப்புமழை பெய்யும் ஜாலம்.

சபையோர்களைப் பார்த்து, இப்போது ஆகஸ்மாத்தாய் நெருப்புமழை பெய்யும்படி செய்கிறேன், ஜாக்கிரதையாக யிருந்து பாருங்களென்று சக்கலாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி, வேதாளமந்திரம் நூற்றியெட்டோதி, ஜெகஜாலக்கருவை விரலில்தொட்டு ஒரு எலுமிச்சம்பழத்திற்றடவி கையில் வைத்துக்கொண்டு முன்போல் குட்டிச்சாத்தானைத் தியானிக்க வருவான். அவனைப் பார்த்து அடே குட்டிச்சாத்தான்! சபையிலுள்ளவர்கள்மேல் படாமற்படிக்கு அக்கினிமழை பெய்யும்படிச் செய்வாயென்றுசொல்லி, கையிலுள்ள எலுமிச்சம்பழத்தை நாலுபத்தையாக அறுத்து நாலுதிக்கிலும் விட்டெறிய உடனே குட்டிச்சாத்தான் கெச்சக்காய்ப் பிரமாணமாக சலசலவென்று சபையில் அக்கினிமழை பெய்யும்படி செய்வான். அதுகண்டு சிலர் மிரண்டோடுவார்கள்; சிலர் இதுவென்ன நமதுமேலே விழாமல் பக்கங்களில் விழும் புதுமை யிதுவென்னமோவென்று ஆச்சரியப்படுவார்கள். சிலர் இது அக்கினிதேவனுடைய வசியமென்பார்கள். அப்போது நீ இதோ மழையை நிறுத்திவிடுகிறேன் பாரென்று தந்திரமாக ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு; அதனுடன் மண்ணைசேர்த்து வாரி முன்போல் நாலுதிக்கிலும் விட்டெறிந்து, குட்டியைத் தியானிக்க நெருப்புமழை நின்றுவிடும்; அனைவரும் உன்னைக் கொண்டாடுவார்கள்.

457. புஷ்பமாரி பொழியும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலாவது இன்னுமெவ்விடங்களிலாவது அங்குள்ள யாவர்களையும் பார்த்து, இப்போது யாவரும் சந்தோஷிக்கும்படி புஷ்பமாரி பொழியும்படி செய்கிறேன் பாருங்களென்று சக்கலாதேவி மூலமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி, வேதாளமந்திரத்தை நூற்றியெட்டு

செபித்து, உச்சாடன கருவைக் கடுகளவு எடுத்துத் திலர்தமிட்டுக்கொண்டு, குட்டிச்சாத்தானை நினைத்துத் தியானிக்க உடனே வருவான். அவனைப்பார்த்து அடே குட்டி! நீ இந்தக்ஷணமே பூந்தோட்டத்திற்சென்று பலவிதமான புஷ்பங்களையும் பறித்துக்கொண்டு வந்து இந்த சபையோர்கள் மகிழும்படியாகப் புஷ்பவிருஷ்டி வருஷிப்பாயென்று சொல்ல அப்படியே அவன் வருஷிப்பான். அப்போது சபையோர்கள் யாவரும் பார்த்து அதிக சந்தோஷத்தையடைந்து ஆனந்தப் பரவசமாவார்கள். உன்னை மகா மாந்திரிக சித்தனென்று புகழ்ந்து கொண்டாடுவார்கள்.

மேற்சொன்னபடி அழைப்பித்த பலவகைகளையும் சபையோர் முதலானவர்களுக்குங் கொடுத்துப் புசிக்கும்படி செய்யலாம். தானும் தன் வர்க்கங்களும் உபயோகிக்கவேண்டாம். ஏனென்றால் அப்படி உபயோகிப்பாராகில் பின்பு எந்த வித்தையும் பலியாமற்போமென்று மேலோர் சொல்லியிருப்பதால் யோசித்து நடக்கவேண்டும். அன்றியும் பகலில் அழைப்பிப்பது இரவில் மாயமாய்ப்போகும். ஆகையால் அழைப்பித்தவுடனே அநுபவிக்கவேண்டுமென்பது முன்னோர் வாக்கியம்.

458. காளிகாதேவி வசிய தியானம்.

காளியின் தியானம் செய்வது எவ்விதமெனில், "அரிகாளி ஆகாசகாளி ஒடிகாளி வீரகாளி சூலகபாலி மோடிதேவி பூமிகாளி ஓங்காளி பிடாரிகாளி மசானபோடிகாளி மந்திரகாளி என்று மந்திரஞ்சொல்லி பிறகு ஓம் ஆம் கோதண்டரூபி யாளிவாகனத்திலேறி அரசர்களோடும் சபையோர்களும் மெச்ச விருதுகை கொடியுடன் வேதாளஞ்சூழ ஆங்காரசக்தி கொண்டுவருவாய் என்று இருபத்தொரு வெள்ளிக்கிழமையும் பூசைசெய்து, நாள்தோறுந் தவறாமல் மேற்சொல்லிய மூலமந்திரத்தை லட்சம் உருஜெபிக்கவே காளிகாதேவி பிரசன்னமாகி சித்தியாக வந்தருளுவாள்.

459. மாடன் வசிய தியானம்.

கஞ்சனன்று இறந்துபோன மனிதரை தகனஞ்செய்த மறுநாள் காடேற்றமுன்னே நீ சென்று, அந்தக்கரியை எடுத்துவந்து அதின்மேல் ஐங்கோலக் கருவைப்பூசி, வான்போல் மண்டைகீறி முகந்தோற்றும்படியாக சுவாலையில் எழுதி, எதிரிபெயரை அதின்கீழ் எழுதி, ஆகாசமாடன் மந்திரத்தை லட்சம் உரு ஓதிடவேண்டிய தெவ்விதமெனில் ஓம் நமோ பகவதே பகவாதவென்று மேற்சொன்ன கணக்கைப்போல் ஜெபித்து, பெருத்த பூசைபோட்டுப் பலிகொடுத்து மாடனைத் தியானஞ்செய்து மாடனைக் கட்டிக்கொண்டு ஓ ஆகாசமாடாவென்றுசொல்லி, பின்பு கல்லைத் தகட்டின்மேல் வைக்க கல்லும் ஒருகோடி பூதங்கள் சுற்றிலும் பார்த்துக் கொண்டிருக்க கல்லானது எரியும். அப்படி எரிவதுடன் மண்ணையும் சாம்பலையும் மாட்டெலும்பையும் செங்கல்லையும் வாட்டியையும் பண்டங்களையும் அரிசி உப்பு மிளகு நீட்டுசீலை குப்பை இவைகளோடு கண்டத்தை யெல்லாம் எதிரியுடைய வீட்டிலிருந்து வெளியே

வாரி யெரியும். எதிரியோடுயிட மெல்லாங் கூடவேபோகும். அப்போது எதிரியானவன் மிரண்டு பயந்தோடி யுன்னைவணங்கிவந்தால் நீயுமனமிரங்கி, மாடனை அமர்த்தி, ஓ மாடா! கல்லைத்தாவென்று வாங்கிக்கொண்டு பிறகு அந்த மாடனைச் சாணையிட்டு யெழுதியபின்பு சக்கரத்தை கழுவி ஜாலத்தில் விட்டுவிட்டு மாடனைப் பூசைசெய்ய சகலமும் நிவர்த்தியாகும்.

460. கலசமந்திரம்.

கலசமந்திரம் ஜெபிக்கு விதம் எவ்விதமெனில், ரீங்காரமாகிய வெள்ளிதகட்டில் இம் உம் கம் ரங் சிங் யாயிடாகினி மாங்கினி விஷ்ணு சகோதரி சர்வாணி உமாதேவி பராசக்தி நமசி என்று லட்சம் உருஜெபித்து சக்தி பூசைசெய்து விபூதிப்பூசி வருவையாகில் ஜெகத்தில் ஏவல் முதலானதுடன் பிசாசு பூதம் பேர்சொல்லின போதையில் வேர்பிடுங்குதல் கருத்தடவி சக்கரங்கல்லாட்டல் வைப்புபார்வை குற்றியேவல் மற்றுமுள்ள சூனியங்கள் கல்லெறிதல் இவை முதலானதும் இந்த மந்திரத்தை எழுதிக்கட்ட நிவர்த்தியாகும்.

461. சகலதோஷமும் நீங்க ஒண்டிமூலிகை.

ஒண்டி மூலிகையைக்கண்டு பிடித்து அமாவாசை வரும் ஆதிவாரத்தில் மஞ்சல் நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிபூசைசெய்து அந்த வேரைப் பிடுங்கிவந்து குளிசமாடிக் கட்டிக்கொள்ள இப்பூமியின் கண் எவ்விதத்துன்பங்களும் அணுகாது. பூதப்பேத பிசாசுகள் முதலான துஷ்டஏவல்பு சூனியங்களும் எருமயோடும்.

462. செப்பிடு வித்தை.

செப்பிடு வித்தையாடும் விதம் எப்படியெனில் செம்பஞ்சுபந்து ஐந்தும் கோல் ஒன்றும் எடுத்துக்கொண்டு சபையில்வந்து காளியுடைய தியானத்தை ஓதி பக்தியோடு ஜாலமையைக் கையில்தேய்த்துப் பந்தையாட ஆடும். அன்றியும் ஐந்து பத்து பார்வைக்கு லட்சம் பந்துபோடும். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

463. கொள்ளி ஜாலம்.

கொள்ளியுடைய வசியமந்திரம் ஓதுவது எவ்விதமெனில் சிவ சிவ என்று லட்சம் உருஜெபித்துப் பூசைமுதலானதும் செய்துவர சித்தியாகும். சித்தியானவுடன் அக்கினியைத் துணியில்வைத்துச் சுற்றித் தகட்டில் அட்சரத்தைக்கீறி அதின்மேல் ஐங்காயமும் ஐங்கோலமும் சுடலைக்கருவும் பூசி அதில் உனக்கு எதிரியினுடைய பெயரைநாட்டிப் பூசைசெய்து, கொள்ளியைத் தியானித்துப் பந்தையெடுத்துத் தகட்டின் மேல் வைத்து இருதலைச்கொள்ளி! என் மொழியைக்கேளாய்த் சத்துருவின் மனைகள் தோறும் வைத்துக்கொளுத்துவாயென்று தியானமோதிட, அப்படியே எதிரிகள் திக்கிடுபடியாக பந்தானது திரிந்து கொளுத்தும்.

464. மலக்குட்டி வசியம்.

மலக்குட்டி தியானஞ்செய்வது எவ்விதமெனில், ஓம் ரீம் வா மலக்குட்டிச்சாத்தான்! நான் வைத்தப் பூசையைக்கொண்டு நான் சொல்லும் வேலையைக்கேட்டு மலத்தைவாரி நான் நினைத்த யிடத்திற் போடென்று சொல்லிப் பலி பூசை பலக்கச் செய்துவர மலக்குட்டி வசியமாவான்.

465. மலக்குட்டி ஜாலம்.

மேற்கூறியபடி சித்தியானவுடன் மந்திரத்தைத் தகட்டிற்கீறி அதன் மேல் ஐங்காயமும் ஐங்கோலமும் சுடலைக்கரு இம்மூன்றையுங்கூட்டி மத்தித்துத் தகட்டிற்பூசி அதில் எதிரியினுடைய பெயரையும்நாட்டி மேற்சொல்லிய மந்திரத்தை லட்சம் ஓதி பலிபூசை பலக்கச்செய்து, பிறகு மலத்தையெடுத்து தகட்டில்வைத்து மலயிந்தா, மலக்குடி என்ற மந்திரத்தைச் சொல்லித் தியானஞ்செய்வாயாகில் குட்டி வலக்கையில் மலத்தை வாரிக்கொண்டுபோய் நீ நினைத்தவிடத்திற்போடுவான். அப்போது நீ தகட்டைஜலம்விட்டுக் கழுவிப்போடுவாயாகில் கொண்டு போய் போட்ட மலமெல்லாம் மாயமாகப்போய்விடும்.

466. வனமடக்கு வித்தை.

வனமடக்கமாவது சொல்லக்கேட்பாயாக, அவையடக்கம் அங்கமடக்கம் பங்கமடக்கம் வழியடக்கம் சுவாகாவென்று ஜெபித்து ஆதிவாரத்தில் தண்ணீர்விட்டான் கிழங்கின் செடிக்குக்காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துப் பூசைபோட்டு, மேற்சொல்லிய மந்திரத்தை ஆயிரமோதி வேரைப்பிடுங்கிவந்து ஐங்காயம்ஐங்கோலம் சுடலைக்கரு இவை மூன்றையுஞ் சேர்த்து மத்தித்து வேறில் தடவி காலில்போட்டு மிதித்துக்கொண்டு, வனத்தைப்பார்த்து மந்திரமோதி நிற்க வனமடக்கமாகி வெட்டும் அந்தரத்திற் செல்லாது,

467. குறிசொல்லும் வித்தை.

ஆடையொட்டி சமூலமுடன் கின்றிட நிஞ்சமூலி சவிஞ்சிலை இவை மூன்றையும் கருக்கியுமைபோல் அரைத்து சுடலைத்தயிலஞ் சேர்த்து கிறுபடியும் மைபோல் அரைத்து வழித்துச் சிமிளில்வைத்து பிறகு அனுமாரைத் தியானஞ்செய்து மையையெடுத்து நெற்றியில் பொட்டிட்டுக்கொண்டு, ஓ அஞ்சனாதேவிபுத்ரா! வாயுமைந்தா! புருஷருபவல்லபா! அனுமந்தா! ராமதூதா! வந்து குறிச்சொல்லென்று வணங்கிக் கொள்வாயாகில் நினைத்ததை யெல்லாம் வந்து சொல்வான். நாட்டிலுள்ளோர் உன்னைப் புகழுவார்கள்.

468. வஸ்துபாண்ட முடையும் வித்தை.

சாராயத்தில் ஊறும் பட்டையைக் கொண்டுவந்து அதின்மேல் கருச்சிலைசுற்றி காளிகோயில் முன்னே கொண்டுபோய்வைக்க பானை கள்யாவும் ஆடி உடையும்; விற்காறுக் கெட்டுப்போகும். அதை எடுத்துவிட்டால் பானை உடையாது; எப்போதும்போல் விற்கும்,

469. வாழைத்தோப்பைப் பெருகச்செய்யும் வித்தை.

வாழைத்தோப்புப் பெருகச்செய்யவேண்டில் முன்போல் நாயுருவிச் செடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி சிறியகுடுவையில் பொங்கலிட்டுப் பூசைபோட்டுப் பலிகொடுத்து, வேரைப் பிடுங்கிவந்து அஷ்டமாசித்திமையும் ஐங்கோலக்கருவையும் மத்தித்து வேரின்மேல் பூசி கலசத்தில்வைத்துமூடி வாழைத்தோப்பின் கிழக்குத் திக்கில் புதைத்துவிட நன்றாய் வாழைவிருத்தியோங்கி குலைகள் விசேஷமாகிவிடும்.

470. தென்னந்தோப்பு ஈடேறுதபடி செய்யும் ஜாலம்.

கொடிவேலிச் செடிக்கு கிராணத்தில் காப்புகட்டிப் பலிபூசை செய்து வேரைப்பிடுங்கிக் கொண்டுவந்து, சுடலைக்கருவும் ஜெகஜாலக்கருவுஞ்சேர்த்து மர்த்தித்து வேரின்மேல்பூசி, காளியைத் தியானித்துக் கலசத்தினுள்ளே வைத்துமூடி தென்னந்தோப்பண்டைக் கொண்டுபோய் அக்கினிமூலை பக்கமாய்ப் புதைத்துவிட தேங்காய் காய்த்தாலுங் கருகிப்போகும். புதைத்ததை யெடுத்தால் எப்போதும் விருத்தியடையும்.

471. தென்னந்தோப்பு விருத்தியாகும் ஜாலம்.

நாயுருவிச்செடிக்கு ஞாயிற்றுக்கிழமையில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பலிபூசைபோட்டு வேரைப்பிடுங்கிவந்து, ஐங்கோலக்கருவும் அஷ்டமாசித்துமையுங் கலந்து வேரின்மேல்பூசிக் கலசத்தினுள்வைத்து வாயைமூடித் தென்னந்தோப்பிற் கொண்டுபோய் நிருத்தி மூலையில் புதைக்க, தோப்பு நாளுக்குநாள் நன்றாகச் செழித்து விருத்தியாகும்.

472. காடு காய்ந்துபோகும் ஜாலம்.

கள்ளிமடையான் செடிக்கு ஞாயிற்றுக்கிழமையில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துத் தூபதீபங்காட்டி வேரைப் பிடுங்கிவந்து, அதன்மேல் சுடலைக்கருவும் ஜெகஜாலமையும்பூசி, கலசத்தில் அந்த வேரைப்போட்டுக் கொள்ளியைத் தியானித்துக் காட்டில் கொண்டுபோய் புதைத்துவிட காடுகாய்ந்து உலர்ந்துவிடும். புதைத்த கலசத்தை எடுத்தால் காடுதுளிர்க்கும்.

473. காடு தழைக்கும் ஜாலம்.

விலித்தொடங்கி யென்னும் செடிக்கு நல்லபருவத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பலிபூசை முதலானதும் கொடுத்து, வேரைப்பிடுங்கி வந்து அதின்மேல் அஷ்டமாசித்தி மையையும் ஐங்கோலக்கருவையும் பூசிக் கலசத்திற்போட்டு பைரவர் மந்திரமோதி, காட்டிற் கொண்டு போய்ப் புதைக்கக் காய்ந்துகிடக்கும் காடாயினும் துளிர்த்து செழித்தோங்கும்.

474. கரும்புகோல்லையைக் கருகச்செய்யும் ஜாலம்.

பேருமுட்டி செடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி, குளியைத் தியானித்துத் தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிவந்து அதன்மேல் சுடலைக் கருவையும் பூசித் தம்பன மையையுந் தடவி கலசத்திற்போட்டு மூடிக் கொல்லையில் புதைக்க கரும்பு பயிராகாது. பயிரானாலும் எல்லாம் சொத்தைவிழுந்து உலர்ந்துபோகும். புதைத்த கலசத்தை எடுத்துவிட்டால் எப்போதும்போல் பயிராகும்.

475. கரும்பு கோல்லையை விருத்திசெய்யும் ஜாலம்.

சிறியாநங்கைசெடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி, வாலைமந்திரத்தை நூற்றியெட்டுதரம் ஓதி, அஷ்டமாசித்து மையை அந்தச் செடிமேல் கொஞ்சம் தெளித்துவிட்டு வந்துவிடவும். மறுவாரம் எந்தநாளில் காப்பு கட்டினையோ அந்தக் கிழமையில் சென்று பொங்கலிட்டுப் பலிகொடுத்துப் பூசை முதலானதும் போட்டு வேரைப் பிடுங்கிவந்து உச்சாடன மையையும் ஐங்கோலக்கருவையும் வேரின்மேல் பூசி, கரும்புகொல்லையில் கொண்டுபோய் புதைத்துவிட கரும்பு நன்றாய்க் கனத்து ஓங்கி வளர்ந்து தழைக்கும்.

476. வெற்றிலைக்கொடி காய்ந்துபோகச் செய்யும் வித்தை.

வெள்ளைச்செடிக்குக் கிராணத்தில் மஞ்சள்நூல் காப்பு கட்டி விட்டு வந்து விடவும்; பிறகு விருச்சிலக்கனத்திற்சென்று பலிபூசை முதலானதும்போட்டு அதின்வடக்குப்போகும் வேரைப்பிடுங்கிக் கொண்டுவந்து அதன்மேல் சுடலைக்கருவும் ஜெகஜாலக்கருவும் பூசிக்குறளியை தியானித்துக் கலசத்திற்போட்டு மூடி வெற்றிலைதோட்டத்திற் கொண்டுபோய்ப் புதைத்து விட்டு வந்துவிட அந்தத்தோட்டம் பாழாவதுடன் கொடிகளெல்லாம் கருகிப்போகும். வெற்றிலை துளிர்க்காது. புதைத்த கலசத்தை எடுத்துவிட எப்போதும்போல் துளிர்க்கும்.

477. தாமரையை அழுகச்செய்யும் ஜாலம்.

கருணமத்தஞ்செடிக்கு செவ்வாய்க்கிழமை மஞ்சள்நூல் காப்பு கட்டி, கொள்ளியைத்தியானித்துப் பூசை முதலானதும்போட்டு அதின் வேரைப்பிடுங்கிவந்து, சுடலைக்கருவும் தம்பனமையும் அதின்மேற்பூசி, மாடன் மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து கலசத்திற் போட்டுமூடி, தாமரைத்தழைதோங்கி இருக்கும் தடாகம் மடுவு முதலான இடங்களில் இதைக் கொண்டுபோய்ப்போட அந்தத் தடாகத்திலுள்ள தாமரைகளெல்லாம் அழுகிப்போகும். போட்ட கலசத்தை எடுத்துவிட்டால் மறுபடியும் முன்போல் தழைக்கும் புஷ்பிக்கும்.

478. தாமரை தழைக்கும் ஜாலம்.

நீர்முள்ளிசெடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சள்நூல்காப்புகட்டி பொங்கலிட்டுப் பூசைபோட்டுப் பலிகொடுத்து வாலைமந்திரத்தை நூற்றியெட்டோதி வேரைப்பிடுங்கிவந்து ஐங்கோலக்கருவும் அஷ்டமாசித்துமையையும் அதின்மேல்பூசி பைரவரை தியானித்து, கலசத்திற் போட்டுமூடி, தாமரைத்தடாகத்திற் போட்டுவிட முன்னிருப்பதுடன் அதிகமாகப்படர்ந்து விர்த்தியாகி புஷ்பங்களும் புஷ்பித்து தழைக்கும்.

479. புளிமரத் தோப்பை உலரச்செய்யும் ஜாலம்.

சுணைக்கோரைச்செடிக்கு செவ்வாய்க்கிழமையும் அமாவாசையும் கூடியதினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி, மாடன்மந்திரத்தை நூற்றியெட்டு ஓதி பொங்கலிட்டுப் பூசைபோட்டுப் பலிகொடுத்து வேரைப் பிடுங்கிவந்து சுடலைக்கருவையும் மாரணமையையும் அதின்மேல்பூசிக் கலசத்திற்போட்டு மூடி, கொள்ளியைத் தியானித்து, புளியமரம் விசேஷமாகயிருக்குந் தோப்பிற்குள் ஹோமத்தியில் புதைத்து விட அத்தோட்டம் பாழாவதுடன் மரங்களெல்லாம் உலர்ந்துபோகும்; பூவெடுத்துக் காய் காய்க்காது. அப்படிக்காய்க்கினும் கருகிப்போகும்.

480. புளியமரத்தோப்பை விருத்திசெய்யும் ஜாலம்.

பூனைக்காலிச்செடிக்குப் பூரணபருவமும் ஆதிவாரமும் கூடியதினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி, பைரவர்மந்திரத்தை நூற்றியெட்டோதி பொங்கலிட்டுப் பலிகொடுத்து, பூசைமுதலானதும்போட்டு வேரைப் பிடுங்கிவந்து அஷ்டமாசித்திமையையும் ஐங்கோலக்கருவும் உச்சாடனமை இவைமூன்றையும் வேரின்மேல்பூசி வாலையைத்தியானித்துக் கலசத்திற்போட்டுப் புளியந்தோப்பில் முன்போல் வைத்துவிட அங்குள்ள புளியமரங்கள் யாவும் விருத்தியாகி விசேஷமான காய்கள் காய்த்துப் பழம்புளிக்கும்; பூச்சி புழு சொத்தை இவைகள் ஆகாது.

481. பாக்குமரத்தோப்பைப் பாழாகச்செய்யும் ஜாலம்.

கண்டங்கத்திரி செடிக்குக் கிராணத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி மாடன் மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்துப் பலிபூசை முதலானதும் செய்து அதின்வடக்குபோகும் வேரைப்பிடுங்கிவந்து, சுடலைக்கருவையும் மாரணமையையும் வேரின்மேல்பூசி, வராகியைத்தியானித்து கலசத்தில்போட்டுப் பாக்குமரம் விசேஷமாக இருக்குந் தோப்புக்குள் இதைக் கொண்டுபோய் அக்கினிமூலையில் புதைத்துவிட பாக்குமரமெல்லாம் பட்டுப்போவதுடன் பாளைவிடாது. பாக்கு உண்டாகாது; அப்படிப் பாளை விடினும் கருகிப்போய்விடும், புதைத்ததை எடுத்துவிட்டால் எப்போதும்போல் பாளைகள்விட்டுப் பாக்குகாய்க்கும்; விசேஷப்படாது.

482. பாக்குமரத்தோப்பு விருத்தியாகும் ஜாலம்.

பின்னைவாடிச்செடிக்கு வளர்பிறையில் ஆதிவாரத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துப் பூசைப்போட்டு மகாகாளி மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து, வேரையறுமல் பிடுங்கிவந்து ஐங்கோலக்கருவும் அஷ்டமாசித்திமையும் உச்சாடனமையும் வேரின்மேல்தடவி, வாலையைத்தியானித்து கலசத்திற்போட்டு மூடி, பாக்குமரத்தோப்பிற் கொண்டுபோய் முன்போல் புதைத்துவிட அங்குள்ள பாக்குமரங்கள் நாளுக்குநாள் விருத்தியாகி விசேஷமாய்ப் பாளைகள்விட்டுப் பாக்குக்காய்க்கும்.

483. பலவிதமான மரங்கள் நிறைந்த தோட்டத்தைப் பாழாக்கும் ஜாலம்.

கொல்லைப்பல்லி என்னுஞ்செடிக்கு அமாவாசையும் ஆதிவாரமும் விருச்சிக லக்கினமுங் கூடினதினத்தில் காப்புகட்டி, வராகிமந்திரத்தை 108-செபித்து பொங்கலிட்டுப் பலிகொடுத்து அந்தச்செடியை சமூலத்தோடு பிடுங்கிவந்து சுடலைக்கருவுந் தும்பனையுந்தடவி மாடன்மந்திரத்தை 108-ஓதி கலசத்திற்போட்டு மறைத்து பலவிதமரங்கள் நிறைந்திருக்கும் தோப்புக்குள் கொண்டுபோய் ஈசானியமூலையில் புதைத்துவிட அத்தோட்டம் பாழாகப் போவதுடன் அங்குள்ள ஒவ்வொருமரமும் காய்த்துக் கருகிப்போகும். அப்படிப் பூத்துக்காய்க்கினு மழுகி உதிர்ந்துபோகும். புதைத்ததைத்தோண்டி எடுத்துவிட்டால் தோட்டமெப்போதும்போல் செழிக்கும். ஆனால் இப்படிச்செய்வது மகாதோஷமாகையால் வித்தையைப் பரிட்சித்துப் பார்த்து உடனே புதைத்ததைத் தோண்டியெடுத்து விடவேண்டும்.

484. மாந்தோப்பைப் பாழாக்கும் ஜாலம்.

கள்ளிச்செடிக்கு செவ்வாய்கிழமையில் மஞ்சள்நூல் காப்புகட்டி, பலிபூசை முதலானதுங் கொடுத்து, அதன்வடக்குப் பக்கம்போகும் வேரைப்பிடுங்கி வந்து. சுடலைக்கருவும் பேதனமையும் அதன்மேல்தடவி கொள்ளியைத்தியானித்து கலசத்திற்போட்டு மூடி தழைத்தோங்கிய மாந்தோப்பிற் கொண்டுபுதைத்துவிட அந்தத்தோட்டம் பாழாவதுடன் அங்குள்ள மரத்தில் காய்கள் காய்க்காது. அப்படிக்காய்க்கினும் பூ பிஞ்சாக யிருக்கும்போதே கருகிப்போகும்; புதைத்தகலசத்தை எடுத்துவிட்டால் எப்போதும் போலாகப் பூக்கும்.

485. மாந்தோப்பை விருத்திசெய்யும் ஜாலம்.

சிவப்புபசளை செடிக்கு ஆதிவாரம் பருவமுங் கூடியதினத்தில் மஞ்சன் நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துப் பூசைமுதலானதும் போட்டு, வேரை அறுமல் பிடுங்கிவந்து அதன்மேல் அஷ்டமாசித்திமையும் ஐங்கோலக்கருவும் உச்சாடனமை இம்மூன்றையும் தடவி, வாலைமந்திரம் நூற்றியெட்டு ஓதி முன்போல் கலசத்திற்போட்டு மூடி மாந்தோப்பிற் கொண்டுபோய் நிறுத்தி, மூலையில் புதைத்துவிட மாந்தோப்பு நாளுக்கு நாள் விருத்தியாகி விசேஷமாக காய்கள்காய்த்துப் பழம்பழுக்கும்.

486. விளைவை விளையாமற்செய்யும் வித்தை.

எதிரியினுடைய விளைவைக் கெடுக்க வேண்டில், கொடிவேலிச் செடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி ஓம் என்று லட்சம் உருஜெபித்து வேரைப் பிடுங்கிவந்து சுடலைக் கருவைப்பூசிக் கலசத்தில் வைத்து மூடி விளையுமிடத்தில் கொண்டுபோய் வைக்க விளையாது; வேரையெடுத்துவிட்டால் பிறகு விளைவு நன்றாய்விளையும்.

487. விளைவுநன்றாய் விளையும் வித்தை.

விளைவு நன்றாகவிளையச் செய்யவேண்டில் நாயுருவிச்செடிக்கு மஞ்சள்நூல் காப்புகட்டி ஸ்ரீம் என்று லட்சம் உருஜெபித்து வேரைப்பிடுங்கி வந்து ஐங்கோலக்கருவை யதின்மேற்பூசி கலசத்தில் வைத்து விளைவுயிருக்குமிடத்திற் கொண்டுபோய் புதைக்க விசேஷமாக விளையும்.

488. வாழைமரம் குலைவிடாதிருக்கும் ஜாலம்.

மேற்சொல்லியபடி கொடிவேலிசெடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சள்நூல் காப்பு கட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்து அபதியங்காட்டி வேரைப் பிடுங்கிவந்து சுடலைக் கருவை யதின்மேல்பூசி கலசத்தில் வைத்துமூடி வாழைத்தோப்பிற் கொண்டுபோய் ஈசான்னிய மூலையில் புதைத்துவிட வாழைமரமும் தங்கிவளராது; எத்தனைக்காலமிருந்தாலும் கொலைவிடாது. புதைத்த கலசத்தை யெடுத்து விட்டால் அனைவரும் குலைவிடும்.

489. பூந்தோட்டத்தை கருகிப்போகுஞ் ஜாலம்.

தொட்டாசினிங்கி செடிக்கு அமாவாசையில் மஞ்சள்நூல் காப்பு கட்டி, வராகிமந்திரத்தை நூற்றியெட்டு வோதி அதன் வேரைப்பிடுங்கி வந்து சுடலைக்கருவும் ஸ்தம்பன மையும் அதன்மேல் தடவி, பைரவரை தியானித்து கலசத்தில்போட்டு நந்தவனத்திற் கொண்டுபோய்ப் புதைக்க நந்தவனங்கள் தீய்ந்துபோவதுடன் என்ன பிரயாசைப் பட்டாலும் புஷ்பங்கள் பூர்க்காது; அப்படிப்பூர்க்கினும் கருகி அழுகிப்போகும்; மணமிராது. புதைத்ததை எடுத்துவிட்டால் முன்போல் பூர்க்கும்.

490. பூந்தோட்டத்தை விருத்திசெய்யும் ஜாலம்.

மஞ்சள்செடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி வாலை மந்திரத்தை நூற்றியெட்டுஓதி பலிபூசை முதலானதும் கொடுத்து வேரையும் கிழங்கையும் பிடுங்கிவந்து ஐங்கோலக்கருவையும் அதன்மேல் பூசி அனுமாரைத் தியானித்து கலசத்திற்போட்டுமூடி, பூந்தோட்டத்திற் கொண்டுபோய் குபேரமூலையில் புதைக்கப் பூந்தோட்டம் நாளுக்கு நாள் விருத்தியாவதுடன் விசேஷமாக புஷ்பிக்கும்; பரிமளமும் அதிகமாக இருக்கும்.

491. வெற்றிலைத் தோட்டத்தை விருத்திசெய்யும் வித்தை

எத்தைசொன்னாலும் கேட்கும் நத்தைசூரிசெடியென்னும் செடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டு பலிகொடுத்து பூசை முதலானதும் போட்டு, அதின் வேரைப்பிடுங்கிவந்து அதின்மேல் ஐக்கோலக்கருவைத் தடவிக் கலசத்திற்போட்டு மூடி, பைரவர்மந்திரத்தை நூற்றியெட்டு ஓதி வெற்றிலை தோட்டத்திற் கொண்டுபோய் யீசானிய மூலையிற் புதைத்துவிட்டுவர தோட்டம் நாளுக்குநாள் விருத்தியாகி கொடிகள் தழைத்துக் கிளைத்தோடி வெற்றிலை விசேஷமாகும்; துளிர்க்கும்.

492. பலவித மரங்கள் தோட்டத்தை விருத்திசெய்யும் வித்தை.

தண்ணீர்விட்டான் கிழங்கின் செடிக்குப் பூரணபருவமும் சுக்கிரவாரமுங் கன்னியாலக்கினமுங் கூடியதினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துப் பூசை முதலானதும்போட்டு, வாலை மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து வேரைப்பிடுங்கிவந்து ஐங்கோலக்கருவும் அஷ்டமாசித்திமையும் உச்சாடனமையும் இம்மூன்றையும் வேரின் மேல்பூசி கலசத்திற்போட்டு மூடி, பைரவரைத்தியானித்து இதைக் கொண்டுபோய் பலவிருட்சங்களும் நிறைந்துள்ள தோட்டத்தின் மத்தியில் புதைத்துவிட அத்தோட்டமானது நாளுக்குநாள் விர்த்தியாகும்; பலவிதமான மரங்களும் காய்களைக் காய்க்கும்.

493. வேறுமுறை தண்ணீர்மேல் நடக்கும் ஜாலம்.

தன்னோடுகூட சிலரை அழைத்துக்கொண்டு தண்ணீர் நிறைந்துள்ள தடாகத்தின் அருகிற்சென்று, தன்னுடன் வந்தவர்களைப் பார்த்து இந்தத் தடாகத்திலுள்ள தண்ணீரின்மேல் நடந்து போகிறேன் பாருங்க ளென்று ஆஞ்சநேயரைத் தியானித்து ஒருவருக்குந் தெரியாமல் கண்கட்டு மையைவிரலில் தொட்டு நெற்றியில் திலர்தமிட்டுக்கொண்டு அனைவரும்பார்க்க நீ கரையின்பேரில் நடந்துபோனால் பார்ப்போர்களுக்குத் தண்ணீரின்மேல் நடந்து போவதுபோலிருக்கும். பார்ப்போர் பிரமித்து ஆச்சரியப்பட்டு இது கங்காபவானி வசியமென்பார்கள்.

494. பூதப்பிசாசுகளை ஆட்டும் விநோத வித்தை.

சொரி தவளையைப்பிடித்துவைத்து சாம்பிராணியைப் போதுமான மட்டும் அதின் வாயின் வழியாகச்சேர்த்து வாயைத்தைத்து புகையூறும்படியாக தலைகீழாகக்கட்டி ஒரு மண்டலம் வரைக்குந் தொங்கினபின்பு அதையெடுத்து அதனுள் செலுத்தின சாம்பிராணியை எடுத்துக்கொண்டு அதனுடன் தலைமஞ்சங் கொடியைச் சேர்த்து வைத்துக்கொள்ளவும். பேயாட்டவேண்டில் ஷை சாம்பிராணியை நெருப்பில்போட்டு அதில் வரும்புகையை அவர்கள் நாசிக்கேரும்படியாக பிடிக்க, புகையேறினமாத்திரத்தில் பிசாசு பூதம் தேவர் சடாமுனி வான்முனி செம்முனி கருமுனி கருப்பன் பிரமராட்சதன் குட்டிச்சாத்தான் லாடமுனி சப்பாணி இவை பிடித்தபேர்கள் தலையை விரித்தாடி பேரும் ஊரும் சொல்லுவார்கள். உடனே செய்யவேண்டிய சடங்குகள் எல்லாம் செய்துமுடித்துக்கொள்ளவேண்டும்.

495. தேவதைகளை ஆட்டும் ஜாலம்.

மனிதருடைய அஸ்தி, கழுதையினுடைய அஸ்தி, கழுதையின் தண்டுச்சீலை, மனிதருடையமலம், பன்றியின் அஸ்தி, காக்கணம் வேர், குப்பமேனிவேர், மூட்டை கொஞ்சமும் முதலானதும் சேர்த்து இடித்து வைத்துக்கொண்டு புகைபோட தேவதைகள் முதலானதும், தேவர்களும் மருள்பிடித்தவர் போலாடுவார்கள்; பார்ப்போர்கள் உன்னை மகா மந்திரவாதி யென்று மதித்துக் கொண்டாடுவார்கள்.

496. தேவர்கள் திருநடனமாமே ஜாலம்.

உச்சாடன சக்கரத்தைக்கீறி பிராமண ஜாதியில் பிரமச்சாரியாயிருக்கப்பட்டவன் இறந்தபின் அவனைக்கொண்டுபோய் தகனம் செய்து மறுநாள் காடாற்று முன்னமே போய் அஸ்தியில் ஒன்று எடுத்து வந்து வைத்து பேர்வாங்கி வாரி மந்திரத்தை ஒரு லட்சம் ஓதி சக்கரத்தைத் தேவாலயங்களுக்கு முன்னும் புதைத்து வைத்து, அஸ்தியை அவர்க்கு முன்புவைத்துப் பலிபூசை முதலானது செய்வாயாகில் தேவர்கள் அதைப்பார்க்க வருவார்கள் ஜெனக்கூட்டமும் திரளும்.

497. ஒருவரைக் கொட்டினதேள் விஷத்தை இன்னொருவர்க் கேற்றும் ஜாலம்.

செம்பொத்தியினுடைய நாக்கும் உடும்பினுடைய நாக்கையுங் கூட்டி அதனுடன் கீழ்காய்நெல்லி காமப்பால் விராகன் ஒன்றும் சேர்த்து இவைகளை யெல்லாம் ஆண்கழர்ச்சிக் காயினுள்செலுத்தி, கிராணம் தீண்டும்போது எடுத்து கொசுகின் மெழுகால் மூடிவைத்துக் கொள்ளவும். தேள் கடித்துவந்தபேர்கள் கையை நீட்டச்சொல்லி டை கழற்சிக் காயைக்கொடுத்து உடனே அதை இன்னொருவர் கையிற்கொடுக்க, அந்த விஷமானது இவனைவிட்டு அவன்மேல் போகும். அப்போது அவன் தேள்விஷமேறி நடுநடுங்கி அழுவான். கொட்டினபக்கம் னெரியானது கட்டும். அப்போது நீ காயைக் கீழேபோடென்று சொல்ல போட்டவுடன் விஷமானது இறங்கிவிடும்; ஆனால் இப்படி எத்தனைபேர்கள் மீதிலேனு மேற்றியிறக்கலாம்.

498. வேறுமுறை பேயாட்டல்.

பேயாட்டும் மூலமந்திர மெவ்விதமெனில் வங் சிங் வயாமவென்று லட்ச முருசெபிக்க உடனே பேய் பிசாசு பூத பிரேதங்களெல்லாம் அழுதுக்கொள்வதுடன் அலறியோடும்.

499. உடுக்கை கட்டும் ஜாலம்.

உடுக்கையைக் கட்டுகிறவித மெப்படியெனில், சிவன் ஆணை பகவதியாணை ஐயுங் கிலியும் சவ்வும் கட்டு மதவாரணகட்டு ஐயும் கிலியும் சுவகாவென்று ஜெபித்து ஆதியந்தமுலவ் கட்டென்று ஜெபித்தவுடன் உடுக்கையைக் கட்டிவிடும் எவ்விதமாக அடித்தாலும் ஓசைகிளம்பாது.

500. வியாதிபோக்க ஜாலம்.

சகலவியாதிகளையும் போக்கவேண்டில், தாளி தாளு உன்னிரு கண்ணிற் பின் தாளி என்று ஜெபித்து காய்ச்சல் தலைவலி முதலானதும் பரந்தோடச் செய்வாய் சுவாமி குருவாணை போவென்று விபூதி மந்திரித்தால் கழுப்புகள் பலபிணிகளும் அகன்று போகும்; உன்னைப் புகழ்வார்கள்.

501. பார்வை மை.

பார்வை மை செய்யும் முறை எவ்விதமெனில், ஆமை ஒன்று தவளை ஒன்று கோழிமுட்டை ஒன்று, மனிதரைப் புதைத்த எலும்பு பலம் இரண்டு, ஈசல் பலம் இரண்டு நிலவாகைவிதை பலம் இரண்டு, மரக்கொடி விராகன் மூன்று இவைகளை எல்லாம் சேர்த்துத் தயிலம் வாங்கி ஆழமுள்ள கல்வத்திற்போட்டு அத்துடன் அஞ்சனக்கல் விராகன் ஒன்று சேர்த்து, ஆள்காட்டி குருவியின் முட்டை நெய் கொஞ்சம் விட்டு ஒரு ஜாமம் நன்றாயரைத்து வழித்து சிமிளியில் வைத்து, அனுமாரையும் அஞ்சனாதேவியையும் பூசைசெய்து பின்பு மையையெடுத்துப் பார்ப்பாயாகில் களவு முதலானதுடன் எவல், தொழில் முறை, தெய்வம், பூதம், பிசாசு, ராட்சதக் கணங்கள், ஒருவன் செய்யும் மோடியும் இவை முதலானதும் கண்ணிற்கு நன்றாகத் தோற்றும்; நேராகப்போய் கண்டு பிடிக்கலாம்; ஒருவருக்கும் தீரமாகச் சொல்லலாம்.

502. வசிய அஞ்சனம்.

ஊசிகாந்தம் நீலம் ஆமை மஞ்சள் வேசியினுடைய கைவெற்றிலை செங்கழநீர் வேர் மலைமஞ்சங்கொடி கோரோசனம் குங்குமப்பூ இவைகள் வகைக்கு விராகன் ஒன்று நிறுத்தெடுத்துக் குழியம்மியிலிட்டு, மாடப்புறாவொன்றை யறுத்து அதின் இரத்தம் முழுமையும் விட்டு, சிவப்புப் பசுவெண்ணெய் விராகன் பன்னிரெண்டு இவைகளை அதில் விட்டுத் தவறாமல் மூன்றுநாளரைத்து எடுத்து சிமிளில் வைத்து, காளிகோயில் முன்பாகக் கொண்டுபோய் புதைத்துவைத்து எட்டுநாள் பொருத்தெடுத்து அத்துடன் புனுகு சவ்வாது வகைக்கு விராகனொன்று சேர்த்து மத்தித்துக்கொண்டு மூலமந்திரம் சர்வலோக வசீகரி ஓம் என்று ஆயிரத்தெட்டு ஜெபித்து நெற்றியில் திலர்தமிட்டுக்கொள்ள, புருஷாள் பெண்கள் நீ கேட்டதையெல்லாந் தருவார்கள். உனக்குண்டாயிருக்கும் பகையெல்லாம் கசிந்துப்போகும். உன்மேல் ஒரு குற்றமும் நேராது.

503. பாதாள அஞ்சனம்.

பாதாள அஞ்சனம் செய்யும் முறையெவ்விதமெனில், வேரில் பழுத்து வெடித்த பலாப்பழத்தின் கொட்டையைக் கருவி விராகனிடைபத்து எடுத்து, அத்துடன் அஞ்சன பாஷாணம் விராகன் ஒன்றுசேர்த்து கல்வத்திலிட்டு விளக்கெண்ணெய் விட்டு ஒரு ஜாமம் நன்றாயரைத்து வழித்து சிமிளில் வைத்து அஞ்சனாதேவிக்கும் அனுமானுக்கும் பூசை செய்து, பின்பு மையைக் கையிலிட்டுப் பார்க்க ஜெகத்திலுள்ள நிதிகள் யாவும் தோற்றும்; எடுத்துக்கொள்ளலாம். பாதாளத்திலுள்ள பொருளையும் கண்ணுக்கு நேராகக்கண்டு எடுக்கலாம்.

504. வேறுமுறை மாரணம்.

மாரணம் செய்வது கொடிய பாதகமாயினும் செய்யவேண்டில், மாரணசக்கரத்தைக்கீறி எதிரியின் சிறுநீரும் மலமும் காலடி மண்ணும் கருவும் சேர்த்து அரைத்து சக்கரத்திற்பூசி, அதிலவன்பேரை எழுதி

அந்தச் சக்கரத்தைப் பாம்பின் வாயில் வைத்து, அதைத் தலைகீழாகத் தூக்கிக்கட்டிப் பிறகு எலுமிச்சம்பழச் சாறும் நெய்யும் சேர்த்து ஓமம் வளர்த்தி அதில் அந்தப் பாம்பை வெட்டிப்போட்டுத் தென்முகமாக வைத்துக்கொண்டு மசி நசி என்று எட்டுநாளும் இருவேளையும் மறவாமல் மந்திர உரு ஜெபித்து வருவையானால் உனக்கெதிரி யாரானாலும் விநாடியில் மரணமாவார்கள்.

505. வேறுமுறை பேதனம்.

இரட்டை ஊமத்தங்காயைக் கொண்டுவந்து; பகையாளியுடைய இடதுகால் மண்ணெடுத்து அக்காயில் சேர்த்து, அக்காயில் அவன் பெயரை வரைந்து பேதனமந்திரத்தைச் சொல்லி அவனிருக்கும் ஊரைச் சுற்றி மயானத்திற் கொண்டுபோய் புதைக்கவும். புதைத்தவுடன் பகைவனுக்கு பக்கத்திற் பிரமேகத்துடன் அனேக நோய்கள் தோன்றி பாதை செய்யும். தேசமெங்கும் சுற்றிமாள்வான். அனைவரும் பார்த்து பழித்துச் சிரிப்பார்கள். அவன் பதைபதைத்தழுவான். அப்படி பதைத்து உன்னை வணங்கி வருவானானால் புதைத்ததை எடுத்து ஆற்றிலிட எதிரியினுடைய பிணியானது அகன்று சுகப்படுவான்.

506. வேறுமுறை வித்துவேஷணம்.

வேப்பமரத்தின்மேல் கட்டியிருக்கும் காக்கையின் கூடும், கழுதையுடைய சடையும், மாங்கிலிய ஸ்திரீ அவிழ்த்த கயிறும், பஞ்சு கொட்டியில் அறுந்துபோன நரம்பும், பன்றி ரோமமும், பித்த கசம்பித்தக்கூடையும் முறமும் இதை முச்சந்திமண்ணிற் கொளுத்தி அடுப்பில் வைத்து நீ தெற்குமுகமாக நிர்வாணரூபமாக நின்று சுட்டுச் சாம்பலாக்கி அதில் அறுகோணச் சக்கரத்தைக் கீறி அதனுள் அமசியென்று வரைந்து ஹாம்-ஹாம்-சிசி-ஓம்-நசி-நசி என்று சொல்லி யெடுத்து வந்து, பகைவனது பெயரை வரைந்து அவன் வசிக்கும்படியான வீட்டின் இறப்பில்கொண்டு போய் வைக்க புருஷனும் பெண்டும் ஊரைவிட்டு வெவ்வேறுவார்கள்.

507. இதுவுமது.

மேற்சொன்னபடி நரம்பு எலும்பு மயிர் சுடலையினுடைய சாம்பலும் உடும்பினுடைய தலை, நாய் பல்லும் இவை முதலானதும் ஒன்றாய்ச் சேர்த்து, எட்டிப்பலகையில் மாடன்செய்து புது கலசத்தில் வைத்து, மேற்சொன்னவைகளையெல்லாம் அதிற்போட்டு மாடன் மந்திரத்தை யோதவேண்டும்.

வண்ணார உதிரமாடன் அக்னிசாமுண்டி வித்தையாகப் பார்க்க என்றவுடன் கருகருத்தாற்போலும் குரங்குபோலும் பூனைபோலும் புலிபோலும் கரடிபோலும் பன்றிபோலும் தோன்றுவதுடன் பேய்போலும் பூதம்போலும் பிடித்து இளித்துக் கடிப்பதுபோற் செய்வான் மாடன். அந்த மாடனை மறவாமல் பூசித்துப் பகைவன் முன் மேற்படி கலசத்தைக் கொண்டுபோய் உடைத்துவிட பகைவன் குலம் நாசமாகும். வியாதியில் பாதைப்படுவார்கள். மாடு கன்றுகளும் சேதமாகும். பொன் பொருளும் அழிந்துபோம். ஆண்மை ஆங்கார மூன்று அன்றி பகைவ

னுடைய பெயரைக் காரீயத்தகட்டில் வரைந்து ஐங்காயமரைத்து அதன் மேற் பூசி கலசத்திற்போட்டுவிடவும். சத்துருக்களான பேர்கள் உன்னை வணங்கி வருவாராகில் மேற்படி தகட்டை எடுத்து பாலிற்போட்டு கழுவி ஓடுகின்ற ஜலத்திற் போடுவாயானால் எதிரிகளுக்கு மேற்சொன்ன நோய்கள் யாவும் நீங்கிச் சுகப்படுவார்கள்.

508. பூமியில் பூதங்கள் புறப்படும் ஜாலம்.

சபையிலுள்ளவர்களைப் பார்த்து இதோ உங்கள் முன்னிலையில் பூமியைக் கையால் தட்டுகிறேன் பூமியானது வெடித்துப் பூதங்களை புறப்படச் செய்கிறேன் பாருங்களென்று ஒருவருக்குந் தெரியாமல் ஜெக ஜாலக்கருவை விரலில் தொட்டு, மயானருத்திரியின் அட்சரத்தை நூற்றியெட்டு சொல்லி, அம்மணி! மயானருத்திரியே! இப்போது பூமியானது வெடித்து பூதக்கூட்டங்கள் புறப்பட்டு வருவதுபோல் தோற்றமாகச் செய்வாயென்று மனதில் நினைத்து, ஜாலக்காளை ஜபித்து சபையோர்கள் மிரளும்படியாக சல் மலையாள பகவதி என்று கருவை தொட்டுவைத்திருக்கும் வலதுகையால் பூமியையோங்கித் தட்ட, உடனே பூமியானது படாலென்று வெடித்தாற்போலும் அதனுள்ளிருந்து பூதக்கூட்டங்கள் பிரவேசமாவதுபோலும் தோற்றப்படும். அப்போது வேடிக்கைப்பார்த்திருந்தபேர்கள் யாவரும் மிரண்டு ஒருவர்மேலொருவர் விழுந்து ஓடுவார்கள். அப்போது நீ அவர்களை ஓடவொட்டாமல் தடுத்து மறுபடியும் சபையோர்களைப் பார்த்து, இப்போது இந்தப் பூதங்களையெல்லாம் வந்த வழியாகப் பூமிக்குள் போகும்படிச் செய்கிறேன். பயப்படாமல் நின்று பாருங்களென்று உடனே ஒருவருக்குந் தெரியாமல் ஐங்கோலக் கருவைக் கையில் தொட்டுக்கொண்டு, வைரவர் அட்சரத்தை நூற்றியெட்டு ஜெபித்து சல் மலையாளபகவதி என்றால் பூதங்கள் பாதாளத்திற்குள் இறங்கிவிட்டாற்போலும், வெடித்த நிலம் மூடிக்கொண்டாற்போலும் பார்ப்போர்களுக்குத் தோன்றும்; எல்லாரும் ஆச்சரியப்படுவார்கள்.

509. தடாகத்திலுள்ள தண்ணீரையெல்லாம் குடிக்கும் ஜாலம்.

தண்ணீர் நிறைந்துள்ள தடாகத்தினருகிற் சென்று தன்னுடன் வந்தவர்களைப் பார்த்து, உங்கள் முன்பாகவே இந்தத் தடாகத்திலுள்ள நீரைக் குடித்துவிடுகிறேன் பாருங்களென்று கண்கட்டு மையைத்தொட்டு நெற்றியிலிட்டுக்கொண்டு, வாலைமந்திரத்தை 108-சொல்லி அஷ்டமாசித்திமையைத் தொட்டு சாமுண்டியை ஸ்மரணைசெய்து அந்த மையைத் தடாகத்தண்ணீரில் தெளித்து, நீ குளத்தின் படிக்கட்டிலிறங்கி சல் மலையாள பகவதா! இந்த தடாகத்திலுள்ள தண்ணீரையெல்லாம் என் வயிற்றிற்குள் போகச்செய்யடியென்று மனதிலெண்ணி அனைவரும் கேட்கும்படியாக உரக்கச்சொல்ல நீ தண்ணீரில் வாயைவைத்துக்கொண்டு ஒரு நாழிகை பரியந்திருக்கப் பார்ப்போர்கள் யாவருக்கும் குளத்துத் தண்ணீரைக் குடித்துவிட்டானென்று மதிமயங்கி ஆச்சரியப்படுவார்கள். அப்போது நீ அவர்களைப் பார்த்து, இப்போது யான் குடித்த தண்ணீரையெல்லாம் குளத்தில் வரும்படிச் செய்கிறேன் பாருங்களென்று காளியை

நினைத்து ஒருவருக்குந் தெரியாமல் ஐங்கோலக்கருவை விரலில் தொட்டு மேற்படி தடாகத்திற் றெளித்து, ஆவென்று கக்குவதைப்போல கக்கித் தந்திரமாக நெற்றியிலிட்டுக் கொண்டிருக்கும் பொட்டைத் துடைத்து விட எப்போதும்போல் தடாகத்தண்ணீர் தோற்றும்.

510. கிணற்றில் போட்ட மோதிரத்தை அழைப்பிக்கும் ஜாலம்.

ஜாலமாடும் ஜாகையில் வேடிக்கைப்பார்க்க வருபவர்கள் கையில் போட்டிருக்கும் மோதிரமொன்று வாங்கி, அவர்களைப் பார்த்து இதோ இந்த மோதிரத்தை ஒரு துணியில் முடித்து கிணற்றில் போட்டுவிடுகிறேன்; மறுகிணற்றில் ஜலமொண்டு வருவீராகில் அதிலந்த மோதிரத்தை வரும்படிச் செய்கிறேன் பாருங்களென்று, ஒருவருக்குந் தெரியாமல் தந்திரமாகக் கண்கட்டு மையைத்தொட்டு மேற்படி மோதிரத்தின்மேற்றடவி பூமியின்மேல் வைக்க, அது ஒருவர் கண்ணிற்கும் தெரியாமலிருக்கும். உடனே அம்மாதிரியான ஒரு மோதிரத்தை எடுத்து அனைவருக்குங் காட்டி, ஒரு துண்டு கந்தைத்துணியில் முடிந்து ஒருவர் கையில் கொடுத்து அவர்களுக்கு இஷ்டமான கிணற்றில் போட்டு வரும்படியாகச் சொல்ல, அப்படியே அவன் போட்டுவிட்டு வந்தவுடன் அவன் கையிலேயே ஒரு சிறு செம்பைக் கொடுத்து அந்தக் கிணறுதவிர இன்னம் எந்தக் கிணற்றிலாவது ஜலமொண்டு வரும்படியாகச் செய்து மேற்படி ஜலத்தில்போட்டு அவனையே கைபோட்டு மோதிரம் இருக்குதா பாரென்று சொல்ல அவன் கைபோட்டு மோதிரமிருக்குதென்று எடுத்துக்கொடுக்க அனைவரும் சந்தோஷமடைந்து இது குட்டிச்சாத்தான் வேலையென்று புகழ்வார்கள்.

511. ஒருவனை மூர்ச்சையாக்கி மறுபடியும் எழுப்பும் ஜாலம்.

ஒருவனை சபையோர்களுக்குமுன் நிற்கவைத்து, இவனை மூர்ச்சையாக விழும்படிசெய்து மறுபடியும் மூர்ச்சை தெளியவைக்கிறேன் பாரென்று ஜெகஜாலக்கருவை கைவிரலில் தொட்டு, சங்கலாதேவி மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து. அந்தக்கருவை அவன்மேல் தெளிக்க அவன் உடனே பூமியின்மேல் சுருண்டுவிழுந்து மூர்ச்சையாவான். சபையிலுள்ள யாவர்களும் பார்த்து மயங்கி அலறுவார்கள். அப்போது நீ அவனைப்பார்த்து இவனை மூர்ச்சைதெளிந்து எழுந்திருக்கும்படிச் செய்கிறேன் பாருங்களென்று ஐங்கோலக் கருவைத் தொட்டு, பைரவர் மந்திரத்தைச் சொல்லி கருவை அவன்மேல் தெளித்து [ஒ]ரு துணியைப் போட்டு மூடி சற்றுநேரம் பொறுத்துத் துணியை வாங்[கி]விட நித்திரைபோய் எழுந்திருப்பான்; யாவரும் ஆச்சரியப்படுவார்கள்.

512. ஒருவனை இரத்தம் கக்கும்படிச்செய்யும் விநோத ஜாலம்.

ஜாலமாடும் ஜாகையில் தங்களுக்குள் ஒருவனைச் சபையில் நிற்கவைத்து சபையோர்களைப் பார்த்து, இதோ இவன் வாயில் ரத்தம் கக்கும்படிச் செய்கிறேன் பாரென்று ஜெகஜாலக்கருவை விரலில் தொட்டு சக்கலாதேவி அட்சரத்தை ஆயிரத்தொரு உரு ஜெபித்து, அம்மணி! இவன் வாயில் ரத்தங்கக்குவதுபோல் தோற்றச்செய்வாயென்று மனதில்

தியானித்து அந்தக் கருவை அவன்மேல் படும்படித் தெளிக்க உடனே அவன் வாயிலிருந்து குபீல் குபீலென்று ரத்தங் கக்குவதுபோல் பார்ப்போர் யாவர்களுக்குந் தோற்றும். அப்போது அவர்களு மய்யைய்யோ இது யென்ன கோராமையென்று தங்கள் கண்களை மூடிக்கொள்வார்கள். உடனே நீயதை நிறுத்திவிடுகிறேன் பாரென்று ஐங்கோலக்கருவை விரலில் தொட்டு பைரவர் அட்சரத்தை நூற்றியெட்டுசொல்லிக் கருவையவன்மேல் தெளிக்க உடனே ரத்தங்கக்குவது நின்றுவிடும். அனைவரும் பார்த்து அதிசயிப்பார்கள்.

513. மல்லிகை மொக்கை வாயால் கக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் வேடிக்கைப்பார்க்க வந்திருக்கும் சபையோர்களைப் பார்த்து, என் வாயிலிருந்து மல்லிகை மொக்கைக் கக்குகிறேன் பாரென்று அஷ்டமாசித்தி மையை விரலில் தொட்டுக்கொண்டு காளியினுடைய திலர்தமிட்டுக்கொண்டு காளியினுடைய அட்சரத்தை நூற்றியெட்டு செபித்து, கண்கட்டு மையைத் திலர்தமிட்டுக்கொண்டு ஜாலக்காளைத் தியானித்து ஒரு துல்லிதமான துணியைக் கீழேபோட்டு அனைவருக்கும் எதிரில் ஆவென்று வாயைத் திறந்து கக்க குபுகுபுவென்று மல்லிகை மொக்கு சொரிவதுபோல் பார்ப்போர்கள் கண்களுக்குத் தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள். ஆனால் உடனே கக்கிய புஷ்பத்தை மறைத்து சல் ஓடிப்போவென்று நீ சொல்லவேண்டும்.

514, சாமந்திப்பூ கக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் அங்குள்ளவர்களைப் பார்த்து, இப்போது மல்லிகை மொக்கைக் கக்கினதைப் பார்த்தீர்கள். இதோ சாமந்திப்பூவைக் கக்குகிறேன் பாருங்களென்று கண்கட்டு மையைத் திலர்தமிட்டுக் கொண்டு ஜெகஜாலக்கருவை விரலிற் தொட்டு, சக்கலாதேவி அட்சரத்தை ஆயிரத்தெட்டு செபித்து ஜாலக்காளைப் பூசித்து, அம்மணி! சாமந்திப்புஷ்பம் கக்குவதுபோல் பார்ப்போர்கள் கண்ணுக்குத் தோற்றும்படிச் செய்வாயென்று ஒரு துணியைக் கீழேபோட, கபகபவென்று இப்போதுதான் செடியில் கொய்த புஷ்பம்போல் வந்து தோற்றும். பார்ப்போர்கள் பிரமித்து நிற்பார்கள்; நீ உடனே முன்போல் மறைத்துவிடவேண்டும்.

515. ரோஜாபுஷ்பம் கக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து சாமந்திப்பூ கக்கினதை யாவரும் பார்த்தீர்கள்; இதோ ரோஜாபுஷ்பம் கக்குகின்றேன் பாருங்களென்று கண்கட்டு மையைத் திலர்தமிட்டுக்கொண்டு மகாமாய மையை விரலில் தொட்டு மயான ருத்திரி அட்சரத்தை ஆயிரத்தெட்டு செபித்து, ஜாலக்காளைப் பூசித்து அம்மணி! ரோஜாபுஷ்பம் கக்குவதுபோல் பார்ப்போர்களுக்குத் தோற்றச் செய்வாயென்று மனதில் நினைத்து; முன்போல் துணியைப் பூமியில் விரித்துப்போட்டு, சல் மலையான பகவதியென்று வாயைத்திறந்து கக்க ரோஜாபுட்பங்கள் சொரிவதுபோல் எதிரிகளுடைய கண்களுக்குத் தோற்றும். இது அபூர்வ

மான வித்தையென்று ஆச்சரியப்படுவார்கள். அதையும் முன்போல் மறைத்துவிடவும்.

516. மனோரஞ்சித புஷ்பங்கக்கும் ஜாலம்.

முன்போல் சபையோர்களைப் பார்த்து, ரோஜாபுஷ்பம் கக்கினதைப் பார்த்தீர்கள்; இதோ மனோரஞ்சித புஷ்பம் கக்குகிறேன் பாருங்களென்று கண்கட்டு மையைத் திலர்தமிட்டுக்கொண்டு இந்திர ஜாலமையை விரலில் தொட்டு சாமுண்டி அட்சரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து ஜாலக்காரனைத் தியானித்து, அம்மணி! மனோரஞ்சிதபுஷ்பம் கக்குவதுபோல் தோற்றும்படிச் செய்குவாயென்று முன்போல் துணியை விரித்துப் பூமியின்மேல் போட்டு சல் மலையாளபகவதி ஓடிவாடியென்று வாயைத்திறந்து கக்க புஷ்பம் சொரிவதுபோல் தோற்றும்; அனைவரும் ஆச்சரியப்பட்டானதும் முன்போல் மறைத்துவிடவும்.

517. பலவிதமான புஷ்பங்கள் கக்கும் வித்தை.

ஜாலமாடும் இடத்திலுள்ள சபையோர்களைப் பார்த்து, இப்போது நாலுவித புஷ்பங்களைக் கக்கின விநோதங்களைப் பார்த்தீர்கள். இதோ பாருங்கள் பலவிதமான புஷ்பங்களும் கக்குகிறேனென்று சக்கலாதேவி அட்சரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து, அஷ்டமாசித்திமையும் ஜங்கோலக்கருவும் மகாமாயமையும் ஒன்றாய் மத்தித்துக் கையிற் பூசிக்கொண்டு, கண்கட்டுமையைத் திலர்தமிட்டுக்கொண்டு அஞ்சனாதேவியையும் ஆஞ்சநேயரையும் மனதில் தியானித்து, இரண்டு கையையும் இரண்டுதொடையின்மேல் வைத்து முன்போல் பலவித புஷ்பங்கள் கக்குவதுபோல் பார்ப்போர்கள் கண்களுக்குத் தோற்றவேணுமென்று மனதிலெண்ணி வாயை ஆவென்று திறந்துகக்க பலவித புஷ்பங்கள் கக்குவதுபோல் தோற்றும். அனைவரும் இது மகா புதுமையென்று பிரமித்து ஆச்சரியப்படுவார்கள். நீ முன்போல் மறைத்துவிடவேண்டும்.

518. சவரன்கள் கக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு தாம்பாளத்தை மேஜையின்மேல் வைத்து இந்த தாம்பாளத்தின் நிறைய சவரன்களை வயிற்றிலிருந்து கக்குகிறேன் பாருங்களென்று அஷ்டமாசித்திமையை விரலில்தடவி அம் அட்சரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அந்தமையை தட்டில்தடவி, அம்மணி! இந்த தட்டுநிறைய சவரன் இருப்பதுபோல் தோற்றச்செய்வாயென்று மனதில் தியானித்து கண்கட்டுமையை எடுத்துத் திலர்தமிட்டுக்கொண்டு ஜாலக்காரனைப்பூசித்து தட்டிற்குநேராய் தலையை குனிந்து ஆவென்று வாயைத் திறந்துபார்க்க பார்ப்போர்களுக்குத் தட்டுநிறைய சவரன் கக்கினதுபோல் தோற்றப்படும்; ஆச்சரியப்படுவார்கள். உடனே முன்போல் மறைத்துவிடவேண்டும்.

519. ரூபாய்கள் கக்கும் ஜாலம்.

முன்போலொரு தாம்பாளத்தை சபையோர்களுக்குக் காட்டி, முன்னே சவரன் கக்கின விநோதங்களைப் பார்த்தீர்கள்; இதோ ரூபாய்

களைக் கக்குகிறேன் பாருங்களென்று சொல்லி, அஷ்டமாசித்திமையையெடுத்து ஒருவருக்குந் தெரியாமல் விரலில்தொட்டு வாலை அட்சரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து அந்தமையை தட்டில்தடவி ஜாலக்காரனைப் பூசித்து, இந்தத் தட்டின்நிறைய ரூபாய்கள் தோற்றும்படிச் செய்வாயென்று தியானித்து கண்கட்டுமையைத் திலர்தமிட்டுக்கொண்டு முன்போல் கக்க பார்ப்போர்களுக்கு ரூபாய் கக்கினதுபோல் தோற்றும்; பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்; அதையும் முன்போல் மறைத்துவிடவும்.

520. பவழங்கள் கக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் வேடிக்கைப் பார்க்க வந்திருக்கும் யாவரையும் பார்த்து இதோ பவழங்கள் கக்குகின்றேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை விரலில் தொட்டுக்கொண்டு காலபைரவர் அட்சரத்தை அற்றியெட்டு ஜெபித்து, கண்கட்டுமையைத் திலர்தமிட்டுக்கொண்டு மேற்படிமையை முன்போல் தட்டில்பூசி ஜாலக்காரனைத் தியானித்து முன்போல் கக்க பவழங்களாகத் தோற்றும். இது மகா புதுமையான வித்தையென்று உன்னைப் புகழ்வார்கள். அதையும் முன்போல் மறைத்துவிடவும்.

521. முத்துகள் கக்கும் ஜாலம்.

சபையோர்களைப் பார்த்து இப்போது பவழம் கக்கின விநோதங்களைப் பார்த்து மகிழ்ந்தீர்கள். இதோ முத்துக்கள் கக்குகிறேன் பாருங்களென்று மகாமாயமையை விரலில்தொட்டு மயானருத்திரி அட்சரத்தை நூற்றெட்டு ஜெபித்து அந்தமையைத் தந்திரமாகத் தாம்பாளத்திற்றடவி பின்பு கண்கட்டுமையை திலர்தமிட்டுக்கொண்டு பைரவரைத் தியானித்து முத்து கக்குவதுபோல் தோற்றச்செய்வாயென்று மனதிலெண்ணி ஜாலக்காரனைத் தியானித்து முன்போற்கக்க பார்ப்போர்கள் பிரமித்ததாக முத்து கக்கினதுபோல் தோற்றும்; அனைவரும் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் நீ முன்போல் மறைத்து சல்மலையாளபகவதி முத்தைக் கொண்டுபோவென்று சொல்லவேண்டும்.

522. கெம்புகள் கக்கும் ஜாலம்.

முன்போலவே சபையோர்களைப்பார்த்து முத்துகக்கின விநோதங்களைப் பார்த்தீர்கள். இப்போது கெம்புகள் கக்குகிறேன் பாருங்களென்று இந்திர ஜாலமையை விரலில்தொட்டு ருத்திராதேவி அட்சரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்துத் தந்திரமாக மையைத் தட்டிற்பூசி, கண்கட்டுமையைத் திலர்தமிட்டுக்கொண்டு காலபைரவரைத் தியானித்துக் கெம்புகள் கக்குவதுபோல் தோன்றச் செய்யவேண்டுமென்று மனதிலெண்ணி முன்போல் கக்க, பிரகாசமாக கெம்பு கக்கியதுபோல் தோற்றும். கண்டவர்கள் கண்கள் பூர்த்து மதிமயங்கி நிற்பார்கள். நீ முன்போல் மறைத்துவிடவேண்டும்.

523. ஸ்படிகக்கற்கள் கக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் யாவரையும் பார்த்து, கெம்புகள் கக்கினதைப் பார்த்தீர்கள்; இதோ ஸ்படிகக் கற்களைக் கக்குகின்றேன் பாருங்க

ளென்று அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டு வாலை அட்சரத்தை ஆயிரத்தெட்டோதி, பைரவர் அட்சரம் நூற்றியெட்டு ஜெபித்து, மையை தட்டில்பூசி; ஜாலக்காளைத் தியானித்து அம்மனி! ஸ்படிகம் கக்குவது போல் தோற்றச் செய்குவாயென்று மனதிலெண்ணி மயானருத்திரியைப் பூசித்து முன்போல் வாயைத்திறந்து ஆவென்று கக்க, ஸ்படிகம் கக்குவதுபோல் தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள்; நீ முன்போல் மறைத்துவிடவும்.

524. புஷ்பராகம் கக்கும் ஜாலம்.

முன்போல் சபையோர்களைப் பார்த்து, ஸ்படிகம் கக்கினதைப் பார்த்து மகிழ்ந்தீர்கள்; இதோ புஷ்பராகம் கக்குகின்றேன் பாருங்களென்று மகாமாயமை, இந்திர ஜாலமை, ஐங்கோலமை இது மூன்றுங் கலந்து தாம்பாளத்தில் பூசி, சாமுண்டி அட்சரத்தை நூற்றியெட்டு ஜெபித்து புஷ்பராகம் கக்குவதுபோல் தோற்றச் செய்குவாயென்று மனதிலெண்ணி ஜாலக்காளைத் தியானித்து முன்போல் வாயைத்திறந்து கக்க, புஷ்பராகம் கக்குவதுபோல் தோற்றும். இது மகா புதுமையென்று அனைவரும் ஆச்சரியப்படுவார்கள். நீ முன்போல் சல்லியமான பகவதியென்று மறைத்துவிடவேண்டும்.

525. ரவைகள் கக்கும் ஜாலம்.

வேடிக்கைப் பார்க்க வந்திருக்கும் சபையோர்களைப் பார்த்து, புஷ்பராகம் கக்கினதைப் பார்த்தானந்த மடைந்தீர்கள். இதோ ரவைகளைக் கக்குகின்றேன். இந்த விநோதங்களைப் பாருங்களென்று ஜெகஜாலமையை விரலில்தொட்டு சக்கலாதேவியைத் தியானித்து அட்சரம் ஆயிரத்தெட்டோதி மையை தாம்பாளத்திற்றடவி கண்கட்டு மையைத் திலர்தமிட்டுக்கொண்டு ஜாலக்காளைத் தியானித்து அம்மனி! ரவைகள் கக்குவதுபோற் பார்ப்போர்கள் கண்ணுக்குத் தோற்றும்படியாகச் செய்வாயென்று மனதில் எண்ணி முன்போல் அனைவரும் பார்க்க வாயைத்திறந்து ஆவென்று கக்க குபுகுபென்று ரவைகள் கக்குவது போல் தோற்றும்; பார்ப்போர்கள் யாவரும் பிரமித்து இது கண்கட்டு வித்தையென்றும் காளியுடைய வசியமென்றும் வாலையினுடைய வசியமென்றும் வராகியினுடைவசியமென்றும் பைரவருடைய வசியமென்றும் மயானருத்ரி வசியமென்றும் சக்கலாதேவி வசியமென்றும் கருவினுடைய வேலையென்றும் கண்டபடி பேசிக்கொள்வார்கள். ஆனால் நீ முன்போல் சல்லியமானதேவியென்று மறைத்துவிடவேண்டும்.

526. பச்சைக்கல் கக்கும் ஜாலம்.

ஜாலமாடும் ஜாகையில் சனங்களைப் பார்த்து, இப்போது ரவை கக்கினதைப் பார்த்தீர்கள். இதோ பச்சைக்கல் கக்குகிறேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை விரலில் தொட்டு, சக்கலாதேவி அட்சரத்தை நூற்றியெட்டு ஜெபித்து, அம்மனி! பச்சைக்கல் கக்குவது போல் பார்ப்போர்களுக்கு தோற்றச்செய்வாயென்று மனதில் எண்ணி மையைத் தட்டிற்றடவி, பின்பு கண்கட்டு மையைத் திலர்தமிட்டுக்

கொண்டு ஜாலக்காளைப் பூசித்து, முன்போல் வாயைத்திறந்து ஆவென்று கக்க குபுகுபென்று பச்சைக்கல் வயிற்றுக்குள்ளிருந்து வருவதுபோல் தோற்றும். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள். நீ உடனே முன்போல் சல்லியப்போவென்று கல்லை மறைத்துவிடவேண்டும்.

527. எலுமிச்சம்பழத்தை அறுக்க சப்தகன்னிகைகள் தோற்றும் வித்தை.

ஜாலமாடும் ஜாகையில் சபையோர்களைப் பார்த்து, ஒரு எலுமிச்சம் பழத்தைக் கையிலெடுத்து இந்த எலுமிச்சம் பழத்திலுள்ளிருந்து சப்த கன்னிகளை அழைப்பிக்கின்றேன் பாருங்களென்று அஷ்டமாசித்திமையை விரலில் தொட்டு வாலையைத் தியானித்து சப்தகன்னிகளைத் தோற்றும்படிச் செய்வாயென்று மேற்படி மையைப் பழத்தில் தடவிப் பழத்தை இடது கையில் பிடித்து வலது கையில் கூரிகத்தியெடுத்து இரண்டாய் அறுத்து பூமியில் போட, சப்தகன்னிகளும் பார்ப்போர்கள் கண்களுக்குத் தோற்றமாகும். இது புதுமையான வித்தையென்று உன்னைப் புகழ்வார்கள். உடனே நீ அறுத்துப்போட்ட பழத்தை எடுத்து மறைத்துவிட, சப்த கன்னிகளும் மாயமாக மறைந்துவிடுவார்கள், ஆனால் கண்கட்டு மையை மறவாமல் திலர்தமிட்டுக் கொள்ளவேண்டும்.

528. வாழைப்பழத்தை அறுக்க மயில் தோற்றும் வித்தை.

ஒரு வாழைப்பழத்தை எடுத்து சனங்களுக்குக் காட்டி, இந்த வாழைப்பழத்தை அறுத்து மயில் தோன்றும்படி செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலமையை விரலில் தொட்டு, பைரவர் அட்சரத்தை நூற்றியெட்டு ஜெபித்து மயிலைப்போல் பார்ப்போர்களுக்குத் தோற்றும்படிச் செய்வாயென்று மையை வாழைப்பழத்தின்மேல் தடவி முன்போல் அறுத்துக் கீழேபோட பார்ப்போர்களுக்கு மயில்போல் தோற்றமாகி நிருத்தனமாடும். அனைவருங் கண்டு பிரமித்து அதிசயப்படுவார்கள். உடனே முன்போல் பழத்தையெடுத்து மறைத்துவிடவேண்டும்.

529. கொய்யாப்பழத்தை அறுக்க ரிஷிகள் தோற்றும் ஜாலம்.

ஜாலமாடும் ஜாகையிலாவது இன்னும்மெந்த இடத்திலாவது ஒரு கொய்யாப்பழத்தைக் கையிலெடுத்து அங்குள்ள யாவருக்குங் காட்டி, இந்தப் பழத்தை அறுத்து ரிஷிகள் தோற்றும்படிச் செய்கிறேன் பாரென்று இந்திரஜாலமையை விரலில் தொட்டு சாமுண்டி அட்சரத்தை நூற்றியெட்டு செபித்து ரிஷிகள் தோற்றும்படிச் செய்வாயென்று மனதில் எண்ணி மையைப் பழத்தின்மேல் தடவி இரண்டாக அறுத்து பூமியின்மேல் போட, ரிஷிகள் தபஞ்செய்துகொண்டு இருப்பதுபோல் பார்ப்போர்கள் அனைவருக்குந் தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள். முன்போல் பழத்தையெடுத்து மறைத்துவிடவேண்டும்.

530. கிச்சிலிப்பழத்தை அறுக்க தேவர்கள் தோற்றும் வித்தை.

கிச்சிலிப்பழம் ஒன்றையெடுத்து சபையோர்களுக்குக்காட்டி, இதை அறுத்து தேவர்கள் தோற்றும்படிச் செய்கிறேன் பாரென்று மகாமாய

மையை விரலில் தொட்டு, மயானருத்ரி அட்சரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, அம்மணி! தேவர்கள் தோற்றம்படிச் செய்வாயென்று மனதில் எண்ணி மையைப் பழத்தின்மேல் தடவி முன்போலவறுத்துத் தரையில் போட தேவர்கள் கூட்டமாகத் தோற்றுவார்கள்; பார்ப்போர்களும் பிரமித்து மெய்மறந்து நிற்பார்கள். நீ உடனே முன்போல் பழத்தையெடுத்து மறைத்துவிடவும்.

531. கரு ஊமத்தங்காயை அறுக்க ராட்சதர்கள் தோற்றும் ஜாலம்.

ஜாலமாடுஞ் சபையில் கரு ஊமத்தங்காய்ஒன்றையெடுத்து அதைச் சபையோர்கள் யாவர்களுக்குங் காட்டி, இந்தக் காயை அறுக்கின்றேன்; இராட்சதர்கள் தோற்றமாகும் விநோதங்களைப் பாருங்களென்று உச்சாடனக்கருவை விரலில் தொட்டு, மயானருத்திரியின் மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து, மையைக் காயின்மேல் தடவி, ராட்சதாள் தோற்றமாக வேண்டுமென்று மனதில் தியானித்து, காயை அறுத்து முன்போல் கீழே போட, உடனே விகாரரூபங்களோடு அனேக தலைகளும் அனேக கரங்களும் கோரப் பல்லுகளோடு தோற்றுவார்கள். அதுகண்டு வேடிக்கைப்பார்க்க வந்திருப்பவர்கள் பயந்து மிரண்டோடுவார்கள். அவர்களை ஓடவொட்டாமல் தடுத்து இந்த இராட்சதக் கூட்டங்களை மாயமாகப் போகும்படிச் செய்கிறேன் பாருங்களென்று தந்திரமாக முன்போல் காயையெடுத்து மறைத்துவிட மறைந்துபோய்விடும்; யாவரும் ஆச்சரியப்பட்டு உன்னைப் புகழுவார்கள்.

532. தேங்காயை உடைக்க சூரிய சந்திரர்கள் தோன்றும் வித்தை.

முன்போல் சபையில்நின்று தேங்காயையெடுத்து சபையோர்களுக்குக்காட்டி, இந்த தேங்காயை உடைத்தவுடன் சந்திர சூரியாள் தோற்றும் விநோதங்களைப் பாருங்களென்று ஐங்கோலக்கருவை விரலில் தொட்டு பைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து, சந்திர சூரியாள் தோற்றவேண்டுமென்று மனதில் தியானித்து, சபையோர்களுக்கு முன்னே தேங்காயை உடைக்க, உடனே பார்ப்போர்கள் கண்கள் பூர்க்கும்படியாய் சூரிய சந்திராள் தோற்றுவார்கள். அப்போதனைவரும் இது மகா அற்புதமான வித்தையென்று ஆச்சரியத்தோடு உன்னைப் புகழ்வார்கள். உடனே நீ தேங்காயையெடுத்து மறைத்துவிட மாயமாக மறைந்துபோகும்.

533. விளாம்பழத்தை உடைக்க நட்சத்திரங்கள் தோற்றும் ஜாலம்.

ஒரு விளாம்பழத்தைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக்காட்டி, இந்த பழத்தை உடைக்கிறேன் உடனே நட்சத்திரங்கள் தோற்றும் விநோதங்களைப் பாருங்களென்று முன்போல் ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு பைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி மையைக்

காயின்மேல்பூசி; நட்சத்திரங்கள் தோற்றமாகவேண்டுமென்று மனதில் நினைத்து, அனைவருக்கு முன்பாக விளாம்பழத்தை உடைக்க நட்சத்திரங்கள் தோற்றமாகும். பார்ப்போர்களும் இது மகா அருமையான வித்தையென்று ஆச்சரியப்படுவார்கள். நீ முன்போல் காயை மறைத்துவிட மாயமாய்ப்போகும்.

534. கத்தரிக்காயை அறுக்க கந்திருவர் தோற்றும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில்நின்று ஒரு கத்திரிக்காயை எடுத்து அனைவருக்குங் காட்டி, இதை அறுத்தவுடன் கந்திருவர்கள் தோற்றமாகும் அற்புதத்தைப் பாருங்களென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு வராகி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, கந்திருவர் தோற்றவேண்டுமென்று மனதில் எண்ணி மையைக் காயின்மேல் தந்திரமாகத் தடவி, முன்போல் காயை அறுத்துப் பூமியின்மேல்போட உடனே கந்திருவர் கூட்டம் தோற்றமாகும். பார்ப்போர்கள் பிரமித்து நிற்பார்கள். நீ முன்போல் காயை மறைத்துவிட மாயமாய்ப்போகும்.

535. பீர்க்கங்காயைப் பிளக்க பட்டாளங்கள் தோற்றும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று ஒரு பீர்க்கங்காயை எடுத்து அனைவருக்குங் காட்டி இந்தக்காயை இரண்டாகப் பிளக்கிறேன், பட்டாளங்கள் தோற்றும் விநோதங்களைப் பாருங்களென்று ஐங்கோலக் கருவை விரலில்தொட்டு, மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து, பட்டாளங்கள் தோற்றவேண்டுமென்று மனதில் எண்ணிக் கருவைக் காய்மேல்தடவி உச்சாடன மந்திரத்தை ஓதி, காயைக் கையிலெடுத்துக் குருக்காக இரண்டாய்ப் பிளக்க உடனே பட்டாளம் ரிஜ-மெண்டு துருப்புகள் முதலானதும் கண்ணுக்கெதிரே நிஜரூபமாகத் தோற்றும். சபையோர்களும் பார்த்துப் பிரமித்து இது மகா விநோதஜாலமென்று விழித்தக் கண் இமைக்காமல் பார்ப்பார்கள். நீ முன்போல் காயையெடுத்து மறைத்துவிட மாயமாகப் போய்விடும்.

536. புடலங்காயைப் பிளக்க பூமி வெடிக்கும் புதுமையான ஜாலம்.

முன்போலவே சபையில்நின்று ஒரு புடலங்காயையெடுத்து அனைவருக்குக்காட்டி, இந்தக் காயை இரண்டாகப் பிளக்கிறேன், உடனே பூமி படாலென்று வெடிக்கும் வேடிக்கையைப் பாருங்களென்று ஜெகஜாலக்கரு அஷ்டமாசித்திமை ஐங்கோலக்கரு இம்மூன்றையும் சேர்த்து மத்தித்து விரலில் தொட்டுக்கொண்டு சக்கலாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து, பூமி வெடித்தாற்போல் தோற்றச்செய்வாயென்று மனதிலெண்ணி, மையைக் காயின்மேல்தடவி அதை சடக்க இரண்டாகப்பிளந்து பூமியின்மேல் போட்டவுடன் பார்ப்போர்களுக்கு பூமி பத்தாகப் பிளந்தாற்போல் தோற்றும் யாவரும் பிரமித்து நிற்பார்கள். நீ உடனே முன்போல் காயையெடுத்து மறைத்துவிட பூமியெப்போதும்போல் தோற்றும்.

537. மணலைவாரியிறைக்க மழைபெய்யும் ஜாலம்.

ஒரு மைதானத்திற்சென்று ஒருபிடிமண்ணைக் கையில் எடுத்துத் தன்னுடன் வந்திருப்போர்களுக்குக் காட்டி, இந்தமண்ணை நாலுதிக்கி லும் இறைக்கிறேன்; இறைத்தவுடனே மழைபெய்யும் வேடிக்கையைப் பாருங்களென்று 'மேற்படிகருவைக் கையிற்பூசிக்கொண்டு, காளபைர வர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து, மழைபெய்வதுபோல் தோற் றச்செய்வாயென்று மனதிலெண்ணி மண்ணைவாரி நாலுதிக்கிலுமிறைக்க உடனே !மேகமானது இருண்டு எழும்பியதுபோலும் படபடவென்று தூரல் தூறுவதுபோலுமிருக்கும். பார்ப்பவர்கள் மிரண்டு ஓடுவார்கள்.

538. அம்மிக்குழவியை விழுங்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு அம்மியின் குழவியைக் கொண்டுவரும்படி யாகச்செய்து, இந்தக் குழவியை விழுங்கிவிடுகிறேன் பாருங்களென்று மறப்புமையை ஒருவிரலிலும் தொட்டுக்கொண்டு வாலைமாந்திரத்தை தூற்றியெட்டு ஜெபித்து, ஐங்கோலக்கரு வாயின்மேல்பூசி மறப்புமை யைத் திலர்தமிட்டுக்கொண்டு கல்லையெடுத்து வாயின் அருகில் கொண்டு போய் பின்புரமாகப்போட்டு கல்லைமறைத்துவிட பார்போர்கள் கண்க ளுக்கு கல்லை விழுங்கிவிட்டதுபோல் தோற்றும். உடனே நீ விழுங்கின கல்லைக் கக்கிவிடுகிறேன் பாருங்களென்று மறைத்துவைத்த கல்லைத் தந்திரமாக எடுத்து முன்னேபோட்டு ஆவென்றுகக்கியதுபோல் திலர் தத்தைத் துடைத்துவிட விழுங்கின கல்லைக் கக்கிவிட்டதுபோல் தோற் றும், அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

539. ஒருமனிதனைப் பார்த்தால் பத்துமனிதனாகத் தோற்றும் ஜாலம்.

எதைச் சொன்னாலுங் கேட்கும் நத்தைச்சூரி யென்னும் செடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத் துத் தூபதீபங்காட்டி வேரைப் பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் ஐங் கோலக்கருவைப் பூசி, வராகிமந்திரத்தை லட்சம் உருஜெபித்து, பிறகு அந்தவேரை எடுத்துக் குலிசமாடி வைத்துக்கொள்ளவும். ஜாலமாடும் சபையில் வந்துநின்று தங்களில் ஒருவனை சபையில்நிறுத்தி, சபையோர் களைப்பார்த்து, இதோ இந்தமனிதன் முகத்தைப் பாருங்களென்று கண் கட்டுமையை மேற்படி குலிசத்தின்மேல் தடவி அந்த குலிசத்தைத் தந் திரமாக ஒருவருக்குந்தெரியாமல் அவன் சிரசின்மேல் வைக்க, உடனே பார்ப்போர்கள் கண்ணுக்குப் பத்துமுகமாகத் தெரியும். அனைவரும் ஆச்சரியப்பட்டு பத்துத்தலை ராவணனோவென பலவாறாகப் பேசிமகிழ் வார்கள். உடனே அந்தக்குலிசத்தை எடுத்துவிட ஒரு முகமாகத் தெரியும்.

540. ஒரு ஆட்டை மங்கை ஆடாகக் காட்டும் வித்தை.

ஜாலமாடும் ஜாகையிலாவது இன்னுமெந்த விடத்திலாவது ஒரு ஆட்டைப் பிடித்துவந்து நிருத்தி, அங்குள்ள யாவர்களையும் பார்த்து, இதோ இந்த ஒரு ஆட்டை ஒரு மங்கையாடாகக் காட்டுகிறேன் பாருங்க

ளென்று அஷ்டமாசித்தியையும் ஐங்கோலக்கருவையும் விரலில் தொட் டுக்கொண்டு, மயானருத்ரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து ஜாலக் காளைத் தியானித்து அம்மணி! இந்த ஒரு ஆட்டை மங்கை ஆடாகப் பார்ப்போர் கண்களுக்குத் தெரியச் செய்வீரென்று மேற்படி இரண்டு கருவையும் தந்திரமாக ஆட்டின்மேல் தெளிக்க உடனே ஒரு மங்கை யாடாகத் தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள்.

541. ஒரு அஸ்வத்தை நூறு அஸ்வமாகக் காட்டும் ஜாலம்.

முன்போல் ஒரு அஸ்வத்தை கொண்டுவந்து நிருத்தி அங்குள்ளவர் களைப்பார்த்து, இந்த ஒரு அஸ்வத்தை நூறு அஸ்வமாகத் தோற்றும்படி காட்டும் விநோதத்தைப் பாருங்களென்று மேற்சொன்னபடி மையைத் தொட்டு வராகி மந்திரத்தை லட்சம் ஓதி, ஜாலக்காளைத் தியானித்து, அம்மணி! பார்ப்போர் கண்களுக்கு ஒரு அஸ்வம் நூறு அஸ்வமாகத் தெரியும்படிச் செய்வாயென்று தியானித்து, தந்திரமாக கருவை அஸ் வத்தின்மேல் தெளிக்க உடனே பார்ப்போர் கண்களுக்கு நூறு அஸ்வ மாகத்தெரியும். இது மகா புதுமையான ஜாலமென்று ஆச்சரியப் படுவார்கள்.

542. ஒரு பசுவை நூறு பசுவாகக் காட்டும் வித்தை.

மேற்கூறிய படியே ஒரு பசுவைக் கொண்டுவந்து நிருத்தி சபை யோர்களைப்பார்த்து, இந்த ஒரு பசுவை நூறு பசுவாகத் தோற்றும்படி காட்டுகிறேன் பாருங்களென்று அஷ்டமாசித்திமையும் ஐங்கோலக்கரு வையும் விரலில்தொட்டு சாமுண்டிமந்திரத்தை தூற்றியெட்டு ஜெபித்து அம்மணி! இந்த ஒரு பசுவை நூறுபசுவாகப் பார்ப்போர்களுக்குத் தெரி யும்படி, செய்வாயென்று மனதிலெண்ணி, ஜாலக்காளைத் தியானித்து மேற்படி மையைத் தந்திரமாகப் பசுவின்மேல் தெளிக்க உடனே நூறு பசுவாகப் பார்ப்போர்கண்களுக்கு தோற்றும்; உன்னைப் புகழ்வார்கள்.

543. ஒரு புறுவை நூறுபுறுவாகக் காட்டும் வித்தை.

சாலமாடுமிடத்தில் ஒரு புறுவைக் கையிலெடுத்து அனைவருக்குங் காட்டி, இந்த ஒருபுறுவை நூறு புறுவாகத் தோற்றும்படி காட்டுகிறேன் பாருங்களென்று செகசாலக் கருவும் ஐங்கோலக் கருவும் விரலில் தொட்டுக்கொண்டு, காளபைரவர்மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து, இந்த ஒருபுறுவை நூறுபுறுவாகத் தோற்றும்படி செய்வாயென்று மனதி லெண்ணி, சாலக்காளைத் தியானித்து, கருவைத் தந்திரமாகப் புறுவின் மேல் தடவிப் பூமியில்விட உடனே அது பார்ப்போர் கண்களுக்கு நூறு புறுவாகத் தோற்றும். அனைவரும் இது மகா புதுமையான வித்தை யென்று புகழ்வீர்கள்.

544. ஒரு கிளியை நூறுகிளியாகக் காட்டும் வித்தை.

மேற் சொல்லியதுபோல் ஒரு கிளியைக் கையிலெடுத்து அங்குள்ள அனைவருக்குங் காட்டி, இந்த ஒரு கிளியை நூறு கிளியாகத் தோற்றும் படி காட்டுகிறேன் பாருங்களென்று இந்திரஜாலமையும் ஐங்கோலக்கரு வையும் விரலில்தொட்டு மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு

செபித்து, அம்மணி! இந்த ஒருகிளியை நூறு கிளியாகத் தோற்றும்படி செய்வாயென்று சாலக்காளைத் தியானித்துக் கருவைத் தந்திரமாக கிளியின்மேல் தடவி பூமியில்விட உடனே பார்ப்போர்கள் யாவருக்கும் நூறு கிளியாகத் தெரியும்; ஆச்சரியப்படுவார்கள்.

545. ஒரு கோழியை நூறுகோழியாகக் காட்டும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு கோழியை எடுத்து சபையோர்களுக்குக் காட்டி, இந்த ஒரு கோழியை நூறு கோழியாகத் தோற்றும்படி செய்கிறேன் பாருங்களென்று செகசாலக்கருவும் ஐங்கோலக்கருவும் விரலில் தொட்டு, சக்கலாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து, அம்மணி! இந்த ஒரு கோழியை நூறு கோழியாகத் தெரியும்படி செய்வாயென்று சாலக்காளைத் தியானித்து, தந்திரமாகக் கருவைக் கோழியின்மேல் தடவி பூமியில்விட பார்ப்பவர்கள் யாவருக்கும் நூறு கோழியாகத் தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள்.

546. ஒருமயிலை நூறுமயிலாகக் காட்டும் ஜாலம்.

ஒரு மைதானத்திலாவது அல்லது ஜாலமாடுமிடத்திலாவது ஒரு மயிலைக் கொண்டுவந்து நிறுத்தி சபையோர்களைப் பார்த்து, இந்த ஒரு மயிலை நூறு மயிலாகத் தோற்றும்படி செய்கிறேன் பாருங்களென்று செககாலக் கருவையும் ஐங்கோலக் கருவையும் விரலில் தொட்டுக் கொண்டு, சக்கலாதேவி மந்திரத்தை நூற்றியெட்டு செபித்து, பைரவர் மந்திரத்தை நூற்றியெட்டு செபித்து, இந்த ஒரு மயிலை 100-மயிலாகத் தோற்றும்படி செய்யவேண்டுமென்று பூசித்து சாலக்காளைத் தியானித்துக் கருவைத் தந்திரமாக மயிலின்பேரில் தெளிக்க, உடனே பார்ப்போர்கள் கண்ணுக்கு 100-மயிலாய்த் தோற்றும். அவர்கள் இது மகா புதுமையான சாலமென்று புகழ்வார்கள்.

547. ஒருமைனாவை நூறு மைனாவாகக் காட்டும் ஜாலம்.

ஒரு மயினாவை சபையோர்களுக்குக் காட்டி, இதை நூறு மயினாவாகக்காட்டுகிறேன் பருங்களென்று அஷ்டமாசித்திமையும் ஐங்கோலக்கருவும் விரலால் தொட்டு, வாலையைத்தியானித்து, மந்திரம் நூற்றியெட்டு செபித்து ஜாலக்காலை நினைத்து மையை மயினாவின்மீது தந்திரமாகத்தடவி தரையில்விட, அது உடனே பார்ப்போர் யாவருக்கும் நூறு மயினாவாகத்தோற்றும். சந்தேகமில்லாமல் ஒவ்வொன்றாக எண்ணியுங்காட்டலாம், ஆனால் கண்கட்டுமையைக் கையில் தடவிக்கொண்டு எண்ணிக்காட்ட வேண்டியது.

548. ஒரு வாத்தை நூறுவாத்தாகக் காட்டும் வித்தை.

ஜாலமாடுமிடத்தில் ஒரு வாத்தைப்பிடித்து சபையோர்களுக்குக் காட்டி இந்த ஒரு வாத்தை நூறுவாத்தாகச் செய்கிறேன் பாருங்களென்று அஷ்டமாசித்தி மையும் ஐங்கோலக்கருவும் விரலில் தொட்டுக் கொண்டு, வாலையினுடைய அட்சரத்தை நூற்றியெட்டு செபித்து, அம்மணி! இந்த ஒருவாத்தை நூறுவாத்தாகப் பார்ப்போர் கண்களுக்குத்

தோற்றும்படி செய்வாயென்று மனதில் நினைத்து ஜாலக்காளைப்பூசித்து வாத்தின்மேல் தந்திரமாகத் தடவ உடனே நூறுவாத்தாகத் தெரியும். சபையோர் ஆச்சரியப்படுவார்கள்.

549. ஒரு கீரிப்பிள்ளையை நூறு கீரிப்பிள்ளையாகக் காட்டும் ஜாலம்.

ஒரு கீரிப்பிள்ளையை யெடுத்து அங்குள்ள யாவர்களுக்குங் காட்டி, முன்போல் கருவை விரலில் தொட்டுக்கொண்டு, துர்க்காதேவி மந்திரத்தை நூற்றியெட்டு சொல்லி, அம்மணி! இந்த ஒரு கீரிப்பிள்ளையை நூறு கீரிப்பிள்ளையாகப் பார்ப்போர் கண்களுக்குத் தெரியும்படி செய்வாயென்று ஜாலக்காளைத் தியானித்து மையைத் தந்திரமாகக் கீரிப்பிள்ளையின்மேல் தடவ உடனே பார்ப்போர் கண்களுக்கு நூறு கீரிப்பிள்ளையாகத் தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள்.

550. ஒரு பூனையை நூறு பூனையாகக் காட்டும் ஜாலம்.

பூனையொன்றைப் பிடித்துவந்து சபையோருக்குக்காட்டி இந்த ஒரு பூனையை நூறுபூனையாகச் செய்கிறேன் பாருங்களென்று மகாமாயமையும் ஐங்கோலக்கருவும் விரலில்தொட்டு, பத்திரகாளி சக்கரத்தை ஆயிரத்தெட்டு செபித்து, அம்மணி! இந்த ஒரு பூனையைப் பார்ப்போர்களுக்கு நூறுபூனையாகத் தோற்றும்படி செய்வாயென்று சாலக்காளை நினைத்து, மையைப் பூனையின்மேல் தடவிவிட உடனே பார்ப்போர் கண்களுக்கு நூறுபூனையாகத் தோற்றும்; பார்ப்போர்கள் இதென்ன புதுமை யென்பார்கள்.

551. ஒருநாயை நூறு நாயாகக் காட்டும் ஜாலம்.

ஒரு நாயைக் கொண்டுவந்து நிறுத்தி சபையோர்களைப் பார்த்து, இந்த ஒரு நாயை நூறுநாயாகக் காட்டுகிறேன் பாருங்களென்று ஜெகசாலக்கருவை விரலில் தொட்டு, சக்கலாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு மந்திரித்து ஜாலக்காளைத் தியானித்து மையை நாயின்மேல் தடவ உடனே நூறுநாயாகத் தோற்றமாகி வளைய வளைய ஓடுவதுபோல் தோற்றும்; சகலரும் ஆச்சரியப்படுவார்கள்.

552. ஒரு அணிப்பிள்ளையை நூறு அணிப்பிள்ளையாகக் காட்டும் ஜாலம்.

ஒரு அணிப்பிள்ளையை சபையோர்களுக்குக் காட்டி இந்த ஒரு அணிப்பிள்ளையை நூறு அணிப்பிள்ளையாகக் காட்டுகிறேன் பாருங்களென்று கருவை விரலில்தொட்டு, ஈஸ்வரி! இந்த ஒரு அணிப்பிள்ளையை நூறாகக் காட்டுவாயென்று சொல்லி சாலக்காளையும் நினைத்துக் கருவை அணிப்பிள்ளைமேல் தடவ நூறு அணிப்பிள்ளையாகத் தோற்றும்; எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

553. ஒரு எலுமிச்சம்பழத்தை நூறு எலுமிச்சம்பழமாகக் காட்டும் ஜாலம்.

ஒருகூடையைக் கொண்டுவந்து வைத்து அதில் கண்கட்டு மையை முன்னதாய்த் தடவி சபையோர்கள் முன்புவைத்து, ஒரு எலுமிச்சம் பழத்தை யெடுத்து அதற்கு மஞ்சள்பூசி, குங்குமமிட்டு மேற்படி கூடையில்வைத்து சபையோர்களைப் பார்த்து, இந்த ஒருபழம் கூடைநிறைய ஆகும்படி செய்கின்றேன் பாருங்களென்று அஷ்டமாசித்திமையும் ஐங்கோலக் கருவையும் பழத்திற்றடவி மேலே ஒரு துணியைப்போட்டு மூடி ஜாலக்காளைப் பூசித்துக் கொஞ்சம் விபூதியை எடுத்து சபையோர்கள் மிரளும்படியாக சல்மலையாளபவதி! என்று மூன்றுதரம் விபூதியைக் கூடையின்மேல் போட்டு பிறகு அடேகுட்டிச்சாத்தான்! கூடைநிறைய பழங் கொண்டுவந்தாயா வென்று மூன்றுதரம்கேட்டு, பின்பு கூடைமேல் மூடியதுணியைத் திறந்துபார்க்க பழம் கூடைநிறையத்தோற்றும். வேடிக்கைப் பார்ப்போர்களும் வெகுவிநோதமென்று ஆச்சரியப்படுவார்கள். உடனே நீ முன்போல் துணியைமூடி சல் மாயமாகப் போவென்று சொல்லி சற்றுநேரம் பொருத்துத் துணியைத் திறந்துகாட்ட மாயமாக மறைந்து கூடையும் ஒரு பழமுந்தோற்றும். ஆனால் நீ பழத்தை எடுத்துத் தந்திரமாகக் கழுவிவிடவேண்டும்; சபையோர்கள் பிரமிப்பார்கள்.

554. ஒரு தேங்காயை நூறு தேங்காயாகக் காட்டும் ஜாலம்.

ஒரு தேங்காயை எடுத்து ஜாலமாடுமிடத்தில் சபையோர்களுக்குக் காட்டி, இந்த ஒரு தேங்காயை மந்திரம்செய்து நூறு தேங்காயாகச் செய்கிறேன் பாருங்களென்று செகசாலக்கருவை விரலில்தொட்டு, சக்கலாதேவி மந்திரத்தை நூற்றியெட்டு செபித்து அம்மணி! இந்தத் தேங்காயை நூறுதேங்காயாகப் பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும் படிசெய்யென்று மனதில் தியானித்து, சாலக்காளைப் பூசித்து மையைத் தந்திரமாகத் தேங்காயிற்றடவி பூமியின்மேல்போடப் பார்ப்போர் கண்களுக்கு நூறுதேங்காயாகத் தோற்றும். அதுகண்டு அனைவரும் இது மகாபுதுமையான சாலமென்று புகழ்ந்து கொண்டாடுவார்கள். உடனே நீ தேங்காயை எடுத்து மறைத்துவிட மாயமாக மறைந்துபோகும். பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமாகவிருக்கும்.

555. ஒரு மாம்பழத்தை ஒருகூடை மாம்பழமாகக் காட்டும் வித்தை.

சபையோர்கள் முன்னே ஒரு மாம்பழத்தை எடுத்துக்காட்டி, இந்த ஒரு மாம்பழத்தைக் கூடைபழமாகும் மந்திரம் செய்கிறேன் பாருங்களென்று அஷ்டமாசித்துமையும் ஐங்கோலக்கருவும் விரலில்தொட்டு, ருத்திராதேவியை நினைத்து பைரவர் மந்திரத்தை நூற்றியெட்டு ஓதி, இந்த ஒரு மாம்பழத்தைக் கூடைநிறைய இருப்பதுபோல் தோற்றும்படி செய்வாயென்று மனதில் நினைத்து, அந்தக்கருவையும் மையையும் தந்திரமாக ஒருவருக்கும் தெரியாமல் பழத்தின்மேல் தடவி கூடையில் போட்டு மேலே ஒருதுணியைமூடி ஜாலக்காளை நினைத்து சற்றுநேரம்

மந்திரம் செய்பவன்போல் வாயைமூடி, முணமுணவென்று மந்திரஞ் சொல்வதுபோலிருந்து பிறகு கூடைமேல்மூடின துணியைத் திறந்து பார்க்க கூடைநிறைய பழங்கள் நிறைந்திருப்பதாகத் தெரியும். நீ மறுபடியும் துணியைப்போட்டு மூடி மாம்பழங்களே! ஒரு பழந்தவிர மற்ற பழங்களெல்லாம் ஓடிப்போங்களென்று பழத்தைத் தந்திரமாக கழுவிவிட்டு மறுபடியுங் கூடையைத் திறந்துக்காட்டினால் இதுவென்ன புதுமையென்று ஆச்சரியப்படுவார்கள்.

556. ஒரு கொய்யாப்பழத்தை கூடை பழமாகக் காட்டும் ஜாலம்.

ஜாலமாடுஞ் சபையில் ஒரு கூடைவைத்து, பிறகு ஒரு கொய்யாப் பழத்தை யெடுத்து அனைவருக்குங்காட்டி இந்த ஒருகொய்யாப்பழத்தை இந்தக்கூடையில் போட்டு நிறைய பழமாகும்படி செய்கிறேன் பாருங்களென்று அஷ்டமாசித்திமையும் ஐங்கோலக்கருவும் விரலில்தொட்டு, மயானருத்திர மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து அம்மணி! இந்த ஒருபழத்தைக் கூடைபழமாகப் பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும் படி செய்வாயென்று மனதிலெண்ணி ஜாலக்காளை நினைத்து மையைப் பழத்தின்மேல் தந்திரமாகப்பூசிக் கூடையில்போட்டு முன்போல் துணியால்மூடி சற்றுநேரம் பொறுத்துத் துணியைத் திறந்துபார்க்க, கூடைநிறைய பழம் இருப்பதுபோல் தோற்றும். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள். நீ உடனே பழத்தைக்கழுவி முன்போல் கூடையில்போட்டு மூடித்திறக்க மாயமாய்ப் போகும்; ஒரு பழமாத்திரமிருக்கும் பிரமிப்பார்கள்.

557. ஒரு வாழைக்குலையை நூறு வாழைக்குலையாகக் காட்டும் ஜாலம்.

எந்த இடங்களிலேனும் அல்லது ஜாலமாடுமிடத்திலேனும் ஒரு வாழைக்குலை கொண்டுவந்து சபையோர்களுக்குக் காட்டி, இந்த ஒரு வாழைக்குலை நூறு குலையாகும் அற்புத மந்திரத்தைப் பாருங்களென்று இந்திரசாலக்கருவும் ஐங்கோலக்கருவும் விரலில்தொட்டு, வாராகிமந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து, அஞ்சனாதேவியையும் ஆஞ்சநேயரையும் தியானித்து, சாலக்காளைப் பூசித்து இந்த ஒரு வாழைக்குலை நூறு குலையாகத் தோற்றவேணுமென்று மனதிலெண்ணி விரலிலிருக்குங் கருவைத் தந்திரமாக வாழைக்குலையின்மேல் தடவி, பெரிய துப்பட்டியால்மூடி சற்றுப்பொறுத்துத் துப்பட்டியைத் திறந்துபார்க்க நூறுகுலையாகத் தோன்றும். அதுகண்டு அனைவரும் மதிமயங்கிநிற்பார்கள், உடனே மையைத்துடைத்துத் துப்பட்டியை மூடித்திறக்க ஒருகுலைமாத்திரமிருக்கும்; அனைவரும் மதிமயங்கி ஆச்சரியப்படுவார்கள்.

558. ஒரு திராட்சப் பழக்குலையை நூறு குலையாகக் காட்டும் ஜாலம்.

ஒரு திராட்சப்பழக்குலையை சபையோர்களுக்குக்காட்டி இந்த ஒரு குலையை நூறுகுலைகளாகக் காட்டும் என்னுடைய மந்திரமகிமையைப்

பாருங்களென்று மகாமாயமையும் ஐங்கோலக் கருவையும் விரலில் தொட்டு சாமுண்டீஸ்வரியின் மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து, இந்த ஒரு திராட்சப்பழக்குலையை நூறுகுலையாகப் பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும்படிச் செய்வாயென்று மனதில் நினைத்து, சாலக்காளைப்பூசித்து, மையைத்தந்திரமாக குலையின்மேல் தடவி முன்போல் மூடித் திறந்துகாட்ட நூறு குலையாகத்தோற்றும். பார்ப்போர்களும் இது என்ன புதுமையென்று திகைத்து நிற்பார்கள். அப்போது மையைத் தந்திரமாகத் துடைத்துவிட்டு மறுபடியும் மூடித்திறக்க ஒரு குலைதோற்றும், ஆச்சரியப்படுவார்கள்.

559. ஒரு விளாம்பழத்தை நூறு விளாம்பழமாகக் காட்டும் ஜாலம்.

சாலமாடும் சபையில் வந்துநின்று ஒரு விளாம்பழத்தை எடுத்து அனைவருக்குங்காட்டி, இந்த ஒரு பழத்தை மந்திரம்போட்டு நூறு பழமாகக் காட்டுகிறேன் பாருங்களென்று இந்திரஜாலமையும் ஐங்கோலக் கருவையும் விரலில்தொட்டு துர்க்காதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து, அம்மணி! இந்த ஒரு விளாம்பழத்தை 100-விளாம்பழமாகப் பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும்படி செய்வாயென்று மனதில் எண்ணி, சாலக்காளை நினைத்து மையைக் காயின்மேல் தடவி முன்போல் துணியைப்போட்டு மூடி சற்றுநேரம் பொறுத்து திறந்துபார்க்க 100 பழமாக இருக்கும். அனைவரும் பார்த்து திகைத்து விழிப்பார்கள். அப்போது நீ காயின்மேல் பூசினமையைத் தந்திரமாகத் துடைத்து விட்டு முன்போல் மூடித்திறந்து காட்ட ஒரு பழமாத்திரமிருக்கும்; இது புதுமையான மந்திரமென்று ஆச்சரியப்படுவார்கள்.

560. ஒரு ஆரஞ்சிப்பழத்தை நூறு ஆரஞ்சிப் பழமாகக் காட்டும் ஜாலம்.

எவ்விடத்திலேனும் நின்று ஒரு ஆரஞ்சிப்பழத்தைக் கையிலெடுத்து அங்குள்ள அனைவர்களுக்குங் காட்டி. இந்த ஒரு பழத்தை என் மந்திரத்தால் நூறு பழமாகக் காட்டுகிறேன் பாருங்களென்று மகாமாய மையும் ஐங்கோலக்கருவையும் விரலில் தொட்டுக்கொண்டு, மயான ருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உரு ஜெபித்து, அம்மணி! இந்த ஒரு ஆரஞ்சிப்பழம் நூறு பழமாகப் பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும்படி செய்யவேண்டுமென்று மனதிலெண்ணி, சாலக்காளை நினைத்து மையைப் பழத்தின்மேல் ஒருவருக்குந் தெரியாமல் தந்திரமாகத்தடவி மேசையின் மேல் வைத்து துணியைப்போட்டு மூடி சற்று நேரம்பொறுத்து திறந்து பார்க்க நூறுபழமாக அனைவர்களுக்குந் தோற்றும். ஆச்சரியப் படுவார்கள்; நீ உடனே அந்தப்பழத்தின்மேல் பூசிய மையைத் துடைத்தாகிலும் கழுவியாகிலும் மறுபடியும் மேசையின்மேல் வைத்து முன் போல் மூடித்திறந்து காட்ட ஒருபழமாத்திரம் இருக்கும்; இது மகா சாலமென்று புகழ்வார்கள்;

561. ஒருமாதுளம்பழத்தை நூறு மாதுளம்பழமாகக் காட்டும் ஜாலம்.

பெரியோர் சிறியோர் முதலானபேரும் நிறைந்திருக்கும் சபையில் வந்து நின்று ஒரு மாதுளம்பழத்தை எடுத்து அனைவருக்குங்காட்டி; இதோ ஒரு மந்திரம் போடுகிறேன்; இந்த மாதுளம்பழம் நூறு பழமாகும் விநோதத்தைப் பாருங்களென ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலக் கருவையும் விரலில்தொட்டு, காளபைரவர் மந்திரம் நூற்றியெட்டு ஜெபித்து, இந்த ஒரு மாதுளம்பழம் பார்ப்போர் கண்களுக்கு நூறு பழமாகத் தோற்றும்படி செய்வாயென்று மனதிலெண்ணி ஜாலக்காளை நினைத்துக் கருவைத் தந்திரமாகப் பழத்தின்மேல் தடவி மேஜைமேல் வைத்து, முன்போல் ஒரு துணியை மூடிச் சற்றுநேரம் பொறுத்து திறந்துகாட்ட அனைவர் கண்களுக்கும் நூறு பழமாகத்தோற்றும். ஆச்சரியப்படுவார்கள். நீ முன்போல் பழத்தின்மேலிருக்கும் மையைத் துடைத்து, மூடித்திறக்க அந்த ஒரு பழமாத்திரமிருக்கும். இது மகா மந்திரமென்று மகிழ்வார்கள்.

562. ஒருபடி நெல்லிக்காயை ஒருகூடை நெல்லிக்காயாகக் காட்டும் ஜாலம்.

ஜாலமாடும் இடத்தில் ஒரு பெரிய தட்டைக் கொண்டுவந்து வைத்து, பின்பு ஒருபடி நெல்லிக்காயை அளந்து அனைவருக்குங்காட்டி ஒருபடி நெல்லிக்காயை ஒரு கூடை நெல்லிக்காயாக என் மந்திரத்தால் செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவும் ஐங்கோலக்கருவும் விரலில் தொட்டுக்கொண்டு, சக்கலாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜபித்து, அம்மணி! ஒருபடிகாயை ஒருகூடையாகப் பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும்படிச் செய்வாயென்று மனதிலெண்ணி, ஜாலக்காளைத் தியானித்து, மையைத் தந்திரமாக ஒரு காயின்மேல் தடவி ஒரு படிகாயும் கூடையில் கொட்டி மைதடவினகாயை அடையாளமாக மேலே வைத்து முன்போல் துணியைமூடிச் சற்றுநேரம் பொறுத்துத் திறந்துக்காட்ட தட்டுநிறைய நெல்லிக்காயிருப்பதுபோல் தோற்றும்; அனைவரும் அதிசயிப்பார்கள். நீ உடனே மைதடவின காயை மகா தந்திரமாக எடுத்துவிட்டு முன்போல் மூடித் திறக்க காயெல்லாம் மாயமாகப்போய் ஒருபடி காய் மாத்திரம் கூடையிலிருக்கும். அப்போது அனைவரும் மகாபுதுமையென்று மகிழ்வார்கள்.

563. ஒருபடி கேச்சைக்காயை ஒருகூடை கேச்சைக்காயாகக் காட்டும் வித்தை.

ஜாலமாடும் இடத்தில் ஒரு கெச்சைக்காய் எடுத்து ஜனங்களுக்குக் காட்டி ஒரு மந்திரம்போட்டு இந்த ஒரு கெச்சைக்காய் ஒருபடி கெச்சைக் காயாகச் செய்கிறேனென்று அ[illegible] மையும் ஐங்கோலக்கருவை யும் விரலில் தொட்டு, வராகி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, அம்மணி! இந்த ஒரு கெச்சைக்காயை ஒருபடி கெச்சைக்காயாக பார்ப்போர்களுக்குத் தோற்றும்படி செய்வாயென்று மனதில் எண்ணி,

ஜாலக்காளைத் தியானித்து மையைத் தந்திரமாக கெச்சைக்காயில் தடவி படியொன்றை யெடுத்து அனைவருக்குங் காட்டி மேஜையின்மேல் வைத்து அதில் இந்தக் காயைப்போட்டு முன்போல் துணியால்மூடி சற்றுநேரம் பொருத்துத் துணியை வாங்கிப்பார்க்க படிநிறைய இருப்பதுபோல் தோற்றும். பார்ப்போர்கள் பிரமிப்பார்கள். அப்போது நீ உடனே காயிலுள்ள மையைத் தந்திரமாகப்போக்கி மறுபடியும் படியில் போட்டுத் திறந்துகாட்ட ஒரு காயிருக்கும்; ஆச்சரியப்படுவார்கள்.

564. ஒரு அன்றுசிப்பழத்தை நூறு அன்றுசிப்பழமாகக் காட்டும் ஜாலம்.

ஜாலமாடும் சபையிலாவது இன்னும் எந்த இடங்களிலாவது நின்று ஒரு அன்றுசிப்பழத்தை எடுத்து ஒரு மந்திரம் போட்டு, இந்த ஒரு பழத்தை நூறுபழமாகச் செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக் கருவும் ஐங்கோலக்கருவும் விரலில் தொட்டு, காளியுடைய மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, அம்மணி! இந்த ஒரு அன்றுசிப்பழத்தைப் பார்ப்போர் கண்களுக்கு நூறு பழமாகத் தோற்றும்படிச் செய்வா யென்று மனதில் தியானித்து, ஜாலக்காளைப் பூசித்து, மையைத் தந்திரமாகப் பழத்தில் பூசி மேசையின்மேல் வைத்து முன்போல் துப்பட்டியைப்போட்டு மூடி சற்றுநேரம் பொறுத்துத் துணியைத்திறந்து காட்ட பார்ப்போர் கண்களுக்கு நூறு பழமாகத் தோற்றும். அதிக ஆனந்த சந்தோஷத்தை அடைவார்கள். நீ உடனே முன்போல் பழத்திற் பூசிய மையைப்போக்கி மறுபடியும் மூடித் திறந்துகாட்ட ஒரு பழமாகத் தெரியும். அப்போது இது கண்கட்டு வித்தை என்பார்கள்.

565. ஒரு கிச்சிலிப்பழத்தை ஒருகூடை கிச்சிலிப்பழமாகக் காட்டும் ஜாலம்.

சபையில் ஒரு பெரிய கூடையைக் கொண்டுவந்து வைத்து பின்பு ஒரு கிச்சிலிப்பழத்தைக் கையிலெடுத்து சனங்களைப்பார்த்து; இந்த ஒரு கிச்சிலிப்பழத்தைக் கூடை பழமாக ஒரு மந்திரம் செய்கிறேன் பாருங்களென்று அஷ்டமாசித்தி மையும் ஐங்கோலக்கருவும் விரலில் தொட்டு, மயானருத்திரியின் அட்சரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, அம்மணி! இந்த ஒரு கிச்சிலிப்பழத்தை ஒரு கூடை பழமாகப் பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும்படிச் செய்வாயென்று மனதில் தியானித்து ஜாலக்காளைப் பூசித்து மையைத் தந்திரமாகக் காயில் தடவி தட்டில் போட்டு முன்போல் துணியைப்போட்டு மூடி சற்றுநேரம் பொறுத்துத் திறந்து பார்க்க தட்டு நிறைய பழமிருப்பதுபோல் பார்ப்போர்களுக்குத் தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள். நீ உடனே பழத்தின்மேல் பூசிய மையைப் போக்கித் திறந்துகாட்டினால் ஒரு பழமாத்திரந் தெரியும். சபையோர் ஆச்சரியப்படுவார்கள்.

566. ஒரு பூசினிக்காயை நூறு பூசினிக்காயாகக் காட்டும் ஜாலம்.

ஒரு பூசினிக்காயைக் கொண்டுவந்து அதை சனங்களுக்குக் காட்டி மந்திரம் போட்டு, நூறு காயாகக் காட்டுகிறேன் பாருங்களென்று இர

ஜாலக் கருவையும், ஐங்கோலக்கருவையும் விரலில்தொட்டு, வாலை மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, அம்மணி! இந்த ஒரு பூசினிக் காயை நூறு காயாகச் செய்வாயென்று மனதிலெண்ணி ஜாலக்காளை நினைத்து தந்திரமாக மையைக் காயின்மேல் தடவி தரையில்வைத்து ஒரு துப்பட்டியைப் போட்டுமூடி, சற்றுநேரம் பொருத்து துப்பட்டியை எடுத்துக்காட்ட, பார்ப்போர் கண்களுக்கு நூறு பூசினிக்காயும் ஒரு போர்போலக் கும்பலாகத் தோற்றும். கண்டோர்கள், கண் பூர்க்கும் படியாகப் பார்த்துப் பிரமித்து நிற்பார்கள். அப்போது நீ காயின்மேல் தடவியமையைத் தந்திரமாமப்போக்கி மறுபடியும் முன்போல் துணியை மூடித்திறக்க ஒரு காயாகத் தோற்றும்; அனைவரும் இது புதுமையான ஜாலமென்று புகழுவார்கள்.

567. ஒரு பலாப்பழத்தை நூறு பலாப்பழமாகக் காட்டும் ஜாலம்.

ஜாமாடுமிடத்திலேனும் இன்னும் வேறெந்த இடங்களிலும் ஒரு பலாப்பழத்தைக் கொண்டுவரும்படியாகச் செய்து, அதை அங்குள்ள யாவர்களுக்குங் காட்டி, இந்த ஒரு பழத்தை ஒரு மந்திரம்போட்டு 100-பழமாகப் பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும்படிச் செய்வாயென்று மனதிலெண்ணி, ஜாலக்காளைத் தியானித்து மையைப் பழத்தின்மேல் தடவி தரையில்வைத்து, ஒரு பெரிய துப்பட்டியைப்போட்டு மூடி சற்று நேரம்பொறுத்து திறந்துகாட்ட பார்ப்போர் கண்களுக்கு பலாப்பழம் போராகத் தோற்றும்; பார்த்துப் பார்த்து இது என்ன புதுமையென்று பிரமித்து நிற்பார்கள். அப்போது நீ பழத்திற்றடவிய மையைப்போக்கி முன்போல் மூடித் திறந்துகாட்ட ஒரு பழமாகத் தெரியும். அனைவரும் மிரண்டு இது காளியுடைய வசியமென கண்டபடி பேசிக்கொள்வார்கள்.

568. ஒரு டம்புளிமாஸ் பழத்தை நூறு பழமாகக் காட்டும் ஜாலம்.

ஒரு பம்புளிமாஸ் பழத்தை எடுத்து அனைவருக்குங் காட்டி, இந்த ஒரு பம்புளிமாஸ் பழத்தை மந்திர உச்சாடனத்தினால் நூறு பழமாகக் காட்டுகிறேன் பாருங்களென ஜெகசாலக்கருவை விரலில் தொட்டு, மயானருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, அம்மணி, இந்த ஒரு பம்புளிமாஸ் பழத்தைப் பார்ப்போர் கண்களுக்கு நூறு பழமாகக் காணப்படும்படி செய்விப்பாய் என மனதில் எண்ணி ஜாலக்காளைத் தியானித்து மையைத் தந்திரமாக பழத்தின்மேல் தடவி ஒரு துப்பட்டியைப்போட்டு மூடி கொஞ்சநேரம் பொறுத்து திறந்துகாட்ட பார்ப்போர் கண்களுக்கு பழம் போராகக் காணப்படும். இதென்ன புதுமையென ஆச்சரியப்படுவார்கள். அப்போது நீ பழத்தில் தடவிய மையைப் போக்கி முன்போல் மூடித்திறந்து காட்ட ஒரு பழமாகக் காணப்படும். இது குட்டிச்சாத்தான் வேலையென்று கெட்டியாக நம்புவார்கள்.

569. ஒரு அத்திப்பழத்தைக் கூடை பழமாகக் காட்டும் ஜாலம்.

ஒரு அத்திப்பழத்தை எடுத்து சபையோர்கள் யாவருக்குங் காட்டி, இந்த ஒரு அத்திப்பழத்தைக் கூடைபழமாகக் காட்டுகிறேன் பாருங்க ளென ஜெகசாலக் கருவை விரலில் தொட்டுக்கொண்டு, வாராகிமந்தி

ரத்தை ஆயிரத்தெட்டு செபித்து, அம்மணி! இந்த ஒரு அத்திப்பழத்தைப் பார்ப்போர் கண்களுக்கு ஒரு கூடைபழமாகத் தோற்றவேண்டுமென மனதில் தியானித்து, ஒரு கூடையெடுத்து அனைவருக்குங் காட்டி, அந்தக் கூடையில் பழத்தைப்போட்டு முன்போல் ஒரு துப்பட்டியைப் போட்டு மூடி கொஞ்சநேரம் பொறுத்து துணியைத் திறந்துக்காட்ட கூடைநிறைய பழமிருப்பதுபோல் பார்ப்போருடைய கண்களுக்குக் காணப்படும்; ஆச்சரியப்படுவார்கள். அப்போது நீ பழந்திற்றடவிய மையைப்போக்கி முன்போல் மூடித் திறந்துகாட்ட ஒரு பழமாத்திரமிருக்கும். இது அருமையான வித்தையென்பார்.

570. ஒருபடிநெல்லை ஒருமரக்கால் நெல்லாகக் காட்டும் ஜாலம்.

ஜாலமாடும்சபையில் ஒருபடி நெல்லையளந்து அனைவருக்குங்காட்டி, இந்த ஒருபடிநெல்லை ஒருமரக்கால் நெல்லாகும்படி செய்கிறேன் பாருங்களென அஷ்டமாசித்துமையும் ஐங்கோலக்கருவும் விரலில்தொட்டு, காளபைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து, இந்த ஒருபடிநெல் ஒரு மரக்கால் நெல்லாகப் பார்ப்போர் கண்களுக்குத் தெரியும்படிச் செய்வாயென ஜாலக்காளைத் தியானித்து மையை மரக்காலில் தடவி மரக்காலை அனைவருக்குங் காட்டி, அந்த ஒருபடி நெல்லையும் அதில் கொட்டி அதின்மேல் ஒரு துணியைப்போட்டு மூடி சற்றுநேரம் பொறுத்து திறந்துக்காட்ட மரக்கால்நிறைய நெல்லிருப்பதுபோல் பார்ப்போருடைய கண்களுக்குத் தோற்றும்; கண்டு மதிமயங்கி நிற்பார்கள். அப்போது நீ மரக்காலில் தடவின மையைப்போக்கி மறுபடியும் மூடித்திறக்க ஒருபடி நெல்மாத்திரமிருக்கும். பார்ப்போர்கள் இது இந்திரஜாலமா யிருக்குதென்று ஏக்கம்பிடித்து எண்ணாதுமெண்ணுவார்கள்.

571. ஒருதீபம் பலவர்ன தீபமாகத் தோற்றும் ஜாலம்.

பச்சைத்தவளையின் கொழுப்பை எடுத்து அதில் வெள்ளைச்சீலையை நனைத்து நிழலில் உலர்த்தித் திரிசெய்து மனிதருடைய தலைமண்டையோட்டில் நெல்லெண்ணெய், புங்கெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், தேங்காயெண்ணெய், நெய் முதலானதைம் கலந்து மேற்படி மண்டையோட்டில் வார்த்து, திரியின்மேல் ஐங்கோலக் கருவைப்பூசி, கொள்ளி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, அம்மணி! தீபமேற்றிப் பார்த்தால் பலவித வர்ணமாகவும் லட்சந்தீபமாகவும், பார்ப்போர் கண்களுக்குத் தெரியும்படிச் செய்வாயென்று மனதில் எண்ணி வத்தியை மண்டையோட்டில் போட்டுத் தீபமேற்றிவிட லட்சம் தீபமாகிவிடும் பலவித வர்னங்களாகவும் தெரியும்; அனைவரும் கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

572. வியாதி உண்டாகும் ஜாலம்.

மூஞ்சுரைப் பிடித்துவந்து அதனுள்ளிருக்கும் குடல் ஈரல் முதலானதையும் போக்கி அதனில் எதிரியினுடைய நீர் மலம் இவையிரண்டையும் உள்ளே செலுத்தி அந்த வாயைப் பஞ்சுகொட்டும் நரம்பால் இறுக்கிப் பிடித்துக்கட்டி நாற்பதுநாள் வரைக்கும் வைத்திருந்து ஓம் நமோ

பகவதி சுவாகா என்று லட்சம் உருகொடுக்க சித்தியாகும். எதிரி வியாதிபடுவான்.

573. வேறுமுறை வியாதியுண்டாகும் வித்தை.

கருநாபி பச்சைநாபி இவை யிரண்டையும் கொண்டுபோய் ஒரு ஊரில் காற்றுவாட்டம் பார்த்து வரட்டியை அடுக்கிப் புடம்போட அந்தப் புகைபட்டபேர்களெல்லாம் நடுங்கிக் காய்ச்சல் குளிரும் தலைவலியுமாக வியாதிகொள்வார்கள். அந்த வியாதியைத் தீர்க்க ஒருவராலும் முடியாது. நீயே அந்த ஊரில்சென்று அவிழ்தங்கொடுத்துத் தீர்ப்பேனென்று சொல்வாகில் உன்னைத் தெய்வமாகப் பாவித்து அடிபணிவார்கள். அப்போது நீ அவிழ்தம் செலுத்தும் விதம் எவ்விதமெனில், நீலிவேர் சிறுநீரைவேர் மிளகு இவை மூன்றையும் சேர்த்துக் கியாழம் வைத்து வடிகட்டி அதில் பஸ்பம் போடுவதுபோல் விபூதியைப்போட்டு மூன்றுவேளையும் தவறாமல் உள்ளுக்குக்கொடுக்க வியாதிதீரும். உனக்கு வேண்டிய பொருளுங்கொடுத்து புகழ்ந்துகொண்டாடுவார்கள்.

574. வேறுமுறை வியாதியுண்டாகும் வித்தை.

கள்ளிச்சார் கார்த்திகையின்மூலம் பாஷாணம் துருசுநேர்வாளம் கருநாபி இவைகளையெல்லாம் சேர்த்து இடித்து சீலையில் மூட்டைகட்டி ஒரு கலசத்திற்போட்டு அது அமுந்தும்படியாக ஒரு கல்லைக்கட்டி துறவில் கழுத்தளவு தண்ணீரில்விட அந்தத் துரவில் நீரைக் குடித்தவர்களெல்லாம் வாந்தியும் பேதியுமாகி மயக்கத்தில் விழுந்து கிடப்பார்கள். அவர்களிடம் நீ சென்று இந்த ஊரிலுள்ள யாவரையுமழைத்து இது தேவதையின் குற்றம் பூசைபோடவேணுமென்று சொல்லிப் பூசை முதலானதும் போட்டு; பிறகு அந்தத் துறவிலுள்ள கலசத்தை எடுத்து நீரையெல்லாம் இறைக்கும்படி செய்து பின்பு கணபதிக்கு அபிஷேகஞ் செய்து ஒருவருக்குந் தெரியாமல் அவுரிவேரை இடித்துக்கொண்டு போய் அந்தக்கிணற்றில் போட்டு, பிறகு விபூதியை யெடுத்து, கணபதியைத் தியானித்து அனைவருக்குங் கொடுத்து இட்டுக்கொள்ளும்படியாகச் சொல்ல வியாதியானது நீங்கிவிடும். உன்னையும் புகழ்ந்து நீ கேட்ட பொருளையும் கொடுப்பார்கள்.

575. உலோகவசிய தியானம்.

உலோகவசியதியான மந்திரம் செபிக்கும்விதமெவ்விதமெனில், ரீம் ஐயும் கிலியும் ஸ்ரீயும் சவ்வும் றீம் கிலீம் ஓம் என்று லட்சமுருசெபிக்க க்ஷணத்திற்குள் சித்தியாகும். வறுமையானது அகன்றுபோகும்; மன்னர்கள் தேவதைகள் உலோகமுதலானதும் வசியமாகும்; தொழில் முதலானதுஞ் சித்தியாகும்.

576. எக்காள விநோத ஜாலம்.

எக்காள ஜாலமந்திரம் எவ்விதமெனில் ஆம் ஓம் கம் வாயாவென்று லட்சமுருசெபித்து, ஜாலக்காளைப் பூசைசெய்து, நத்தைச்சூரி செடிக்குக் காப்புகட்டி வேரைப்பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் ஐங்கோலக்

கருவைப்பூசிக் கையில் வைத்துக்கொண்டு வேரைமுருக்கி, மந்திரத்தைத் தியானித்து மண்ணையெடுத்து எதிரில்போட எக்காளம் தாரை சின்னம் கர்ணா நாகசுரம் மத்திமக்குழல் சங்கு இவைகளெல்லாம் உடைந்துபோகும்; வாசிக்காது.

577. ஈடுமுறை வித்தை.

ஈடுமுறைக்கட்டுவது எவ்விதமெனில், ஆண் சிட்டுக்குருவியைப் பிடித்துவந்து அபானவாயைத் தைத்து அதன்வாயில் ஊசிக்காந்தத்தை உள்ளேசெலுத்தி வாயைத்தைத்து ஒரு சிறிய பாண்டத்தில் ஒருபடி வஸ்துவை யூற்றி பாண்டத்தின் வாயைமூடி சீலைசெய்து, பிறகு அடுப்பின் மேல்வைத்துத் தீமூட்டி ஒருஜாதி விரகினால் ஒருசாமமெரித்து எடுத்துக் கொண்டு அதை கல்வத்திற்போட்டு ரோமத்தையும் அஸ்திகளையும் நீக்கி, மாக்கொடி ஊமத்தின்வித்து பின்னற்பூச்சி சுழல்வண்டு குழியானை இந்திரகோபம் தொட்டால்வாடிவேர் நாயுருவிவேர் கையாந்தகரை வேர் கைப்பூண்டுபூச்சி இவை வகையொன்றுக்கு விராகன் ஒன்றாகத் தாக்கி அதனுடன் ஈப்புலி சயமுஞ்சேர்த்து ஆடையொட்டி ஐவிரல் கெஞ்சா பேய்க்கருப்பஞ்சார் இவையெல்லாம் சரியிடையாக விட்டு அரைத்துப் பின்பு துவரைப்பிரமாணமாக மாத்திரைசெய்து நிழலி லுலர்த்தி வைத்துக்கொண்டு சொல்லும் மந்திரமாவது நமோ இங் இஞ் சுவாகாவென்று ஆயிரத்தெட்டுருசெபித்து வைத்துக்கொள்ளவும். ஜன்ளுக்கு செலுத்தும் விதம்: ஒரு மாத்திரையெடுத்து பீக்குவிட்டுக் குழைத்து ஸ்திரீகளுக்கு அறுசுவையில் தாம்பூலத்தில் வைத்து, உள்ளுக்குச்செலுத்த மங்கையர்கள் மையல்மீறி அலையவருவார்கள்.

578. பிரிவுசெய்யும் வித்தை.

பிரிவுசெய்யுங் குளிகைசெய்வது எவ்விதமெனில், செத்த ஆட்டு உணி விஷவாலம்பட்டை இவையிரண்டையுங் கூட்டித் தண்ணீர் விட்டு மைபோலரைத்து துவரைப்பிரமாணங் குளிகைசெய்து அறுசுவையில் கலந்துகொடுக்க நாளுக்குநாள் பிரிந்துபோகச் செய்யும்.

579. வசிய வித்தை.

வசியமாகும்படிச் செய்வது எவ்விதமெனில், பொன்னுவாரை வேரைக் கொண்டுவந்து நசுக்கி நிழலில் உலர்த்தி அதைக் குழித்தயிலமாகவாங்கிக் கல்வத்திலிட்டு, அதனுடன் கோழிமுட்டையின் வெள்ளை அம்புலியும் விட்டரைத்து மாக்கொடி புனுகு பூரம் கோரோசனை இவைகளை ஓரிடையாகத் தாக்கி அதில் சேர்த்தரைத்து வழித்து சிமிளில் வைத்துக்கொண்டு போவாயாகில் புருஷர் முதல் ஸ்திரீகளும் வசியமாவார்கள்; கேட்டபொருளுந் தருவார்கள். உன் வாசலில்வந்து காத்துக்கொண்டிருப்பார்கள்; உனக்கு அடிமையான வேலைகள் செய்வார்கள்; உன்னைக்காணவிட்டால் தேடி சிணுங்குவார்கள்.

580. வேறுமுறை வசிய வித்தை.

வேறுமுறையாவது என்னவெனில், புல்லாமணக்குச் சமூலத்துடன் ஸ்திரீகள் மாதவிடாயான சீலையில் விராகனிடை ஒன்றுங் கூட்டி, உன்

சிறுநீர்விட்டு மைபோலரைத்துத் துவரைப்பிரமாணமாக மாத்திரைகள் செய்துவைத்துக் கொள்ளவும். உள்ளுக்குச் செலுத்தவேண்டில் தாம்பூலம் அல்லது அறுசுவைப் பதார்த்தங்கள் இவைகளில் ஒரு மாத்திரைக் கலந்து உள்ளுக்குச் செலுத்த உடனே அவர்கள் மயங்குவார்கள்; ஸ்திரீகளுக்குக் கொடுக்கில் அவர்கள் உன்னைவிட்டுப் பிரியார்கள்; மறுமுகத்தைப் பாரார்கள்; சுகமாக உன்னுடன் மருவுவார்கள்; கேட்டவைகளுங் கொடுப்பார்கள்: ஏவல் செய்வார்கள்; சாகுமளவும் உன்னைவிட்டுப் பிரியாமல் மகிழ்ச்சியோடு மதனும் ரதியும்போல் கூடியிருப்பார்கள்.

581. பெண்பிரிவுக்குக் குளிகை வித்தை.

பெண்பிரிவு குளிகைசெய்யும் விதமெவ்விதமெனில், கடுகு, பானைச் சாம்பல், குடிபோன வீட்டின் மண், ஆதிவாரம் இரவில் கழுதை புரண்ட மண் இந்த இரண்டுமண்ணுஞ் சேகரித்து வைத்துக்கொண்டு ஜெபிக்கு மந்திரமெவ்விதமெனில், ஓம் ஸ்ரீம் பெரிய நசி மசி என்று இவர்களுடைய பெயரை மாறி அந்தத் தகட்டில் ஐங்காயத்தை அரைத்துப் பூசி மேற்சொன்ன மூலமந்திரத்தை மறவாமல் ஆயிரத்தெட்டோதி தைவகைகளையெல்லாம் சீலையில் வைத்துக்கட்டி பூசைசெய்து பின்பு எதிரி வாழும்படியான வீட்டின் இரப்பில் கொண்டுபோய்வைத்த எட்டுநாளுக்கு இருவர்களும் வெவ்வேறாகப் பிரிந்துபோவார்கள்.

582. தாதுபுஷ்டியாகும் ஜாலம்.

சந்தனம் தேற்றாங்கொட்டை பூமி சர்க்கரைக்கிழங்கு பூனைக்காலி விரை முருங்கைவேர் ஷை பட்டை இவை வகைக்கு விராகனிடை இரண்டு நிறுத்தரைத்து, தேங்காய்ப்பாலில் கரைத்து சீனியிட்டு 12-நாளும் காலை மாலை இருவேளை குடித்துவர தாது புஷ்டியாகும், வீரியம் விளையும்போது சூடானது தணியும்; தேகமானது பளபளப்பாய் காந்தியானது உண்டாகும். மாதர்களைப் புணர்வாயாகில் மன்மதனே யென்பார்கள்.

583. உழக்கு மல்லிகை மொக்கை ஒரு மரக்காலாக்கும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் உழக்கு மல்லிகை மொக்கை அளந்து அனைவருக்குங்காட்டி, அந்த உழக்கு மொக்கை ஒரு மரக்கால் மொக்காகக் காட்டும் வினோதங்களைப் பாருங்களென்று அஷ்டமாசித்து மையும் ஐங்கோலக்கருவையும் விரலில் தொட்டு, காளபைரவர் மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து, ஜாலக்காளைத் தியானித்து ஒருவருக்குந்தெரியாமல் கருவைத் தந்திரமாக மரக்காலில் ஓர் புறமாகத் தடவி, அம்மணி! உழக்கு மொக்கு ஒரு மரக்காலாகப் பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும்படிச் செய்யவேண்டுமென்று மனதில் தியானித்து, மொக்கை மரக்காலில் கொட்டி மேலே ஒரு துணியைப்போட்டு மூடி, சற்றுநேரம் பொறுத்துத் திறந்துகாட்ட மரக்கால் நிறைய மொக்கு இருப்பதாகப் பார்ப்பவர் கண்களுக்குத் தெரியும். இது மகா புதுமை என்று ஆச்சரியப்படுவார்கள்.

584. ஒரு சாமந்தி புஷ்பத்தை நூறு புஷ்பமாகக் காட்டும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு சாமந்தி புஷ்பத்தை எடுத்து அனைவருக்குங் காட்டி இந்த ஒரு புஷ்பத்தை நூறுபுஷ்பமாகக் காட்டும் என்னுடைய மந்திரத்தைப் பாருங்களென்று அஷ்டமாசித்து மையும் ஐங்கோலக்கருவையும் விரலில் தொட்டு, காளபைரவர் மந்திரத்தை 108 ஜெபித்து, அம்மணி! இந்த ஒரு சாமந்தி புஷ்பத்தை நூறுபுஷ்பமாகத் தெரியும்படிச் செய்வாயென்று ஜாலக்காரனைத் தியானித்து ஒருவருக்குந் தெரியாமல் தந்திரமாகக் கருவை புஷ்பத்தில் தடவி மேஜையின்மேல் வைத்து முன்போல் துணியைப்போட்டு மூடி சற்றுநேரம் பொறுத்து மூடிய துணியைத் திறந்துகாட்ட பார்ப்போர் கண்களுக்கு, நூறு புஷ்பமாகத் தோற்றும். இது அருமையான வித்தையென்று மகிழ்வார்கள். ஆனால் உடனே புஷ்பத்திலிருக்கும் மையைப்போக்கி முன்போல் மேஜையின்மேல் வைத்து மூடித்திறக்க ஒரு புஷ்பந்தோற்றும். அப்போது இது கண்கட்டு வித்தை என்பார்கள்.

585. ஒரு ரோஜாபுஷ்பத்தை நூறு புஷ்பமாகக் காட்டும் ஜாலம்.

பெரியோர்களும் சிறியோர்களும் நிறைந்த சபையில் வந்து நின்று, ஒரு ரோஜா புஷ்பத்தை எடுத்து அனைவருக்குங் காட்டி, இந்தப் புஷ்பத்தை நூறு புஷ்பமாகக் காட்டும் விநோதத்தைப் பாருங்களென்று இந்திரஜாலக்கருவும் ஐங்கோலக்கருவையும் விரலில் தொட்டு [illegible] வராகிமந்திரத்தை ஜபித்து, அம்மணி! இந்த ஒரு புஷ்பத்தை நூறு புஷ்பமாக பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும்படிச் செய்வாய் என்று மனதில் நினைத்து ஜாலக்காரனைப் பூசித்துத் தந்திரமாக மையைப் புஷ்பத்தில் தடவி மேஜையின்மேல் வைத்து, காளபைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து முன்போல் துணியைப்போட்டு மூடி சற்றுநேரம் பொறுத்துத் திறந்துகாட்ட, நூறு புஷ்பமாகத் தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள். நீ முன்போல் புஷ்பத்திலுள்ள கருவைப்போக்கி மேஜைமேல் வைத்து மூடித்திறந்து காட்ட ஒரு புஷ்பமாகவிருக்கும். இது பசுர் கட்டென்பார்கள்.

586. ஓர் தாமரை புட்பத்தை நூறு தாமரை புட்பமாக காட்டும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலாவது இன்னும் எந்த இடத்திலாவது ஒரு தாமரைப் புஷ்பத்தை எடுத்து இந்த ஒரு புஷ்பத்தை 100 புஷ்பமாகக் காட்டும் விநோதத்தைப் பாருங்களென்று மகாமாய மையும் ஐங்கோலக்கருவையும் விரலில் தொட்டு மயானருத்ரி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, அம்மணி! இந்த ஒரு தாமரைப்புஷ்பத்தை 100 புஷ்பமாகப் பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும்படிச் செய்வாயென்று மனதில் நினைத்து மையைப் புஷ்பத்தின்மேல் தடவி, ஜாலக்காரனைப் பூசித்து மேஜையின்மேல் வைத்து, ஒரு துணியைப்போட்டு மூடித் திறந்து காட்ட ஒரு புஷ்பமாகத் தோற்றும்; அப்போது இது வாராகி வசியமென்பார்கள்,

587. ஓர் சவரனை நூறு சவரனுகக் காட்டும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்து நின்று ஓர் சவரனை எடுத்து அங்குள்ள அனைவர்களுக்குங் காட்டி, இந்த ஓர் சவரனை 100 சவரனுகத் தெரியும்படிக் காட்டும் விநோதங்களைக் காணுங்களென்று இந்திரஜால மையும் ஐங்கோலக்கருவும் விரலில் தொட்டுக்கொண்டு காளபைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து, இந்த ஓர் சவரத்தைப் பார்ப்போர் கண்களுக்கு 100 சவரன்போல் தோற்றச்செய்வாயென்று மனதில் எண்ணி, சாலக்காரனைத் தியானித்துக் கருவைத் தந்திரமாக சவரன் பேரில் தடவி மேசையின்மேல் வைத்து, துணியைப்போட்டு மூடி, சற்று நேரம் கழித்து மூடிய துணியைத் திறந்துகாட்ட 100 சவரமாகத் தெரியும். அப்போது பார்ப்போர்கள் இது மகாமந்திர உச்சாடன வித்தை என்று புகழ்வார்கள்; அப்போது தந்திரமாக சவரன்மேல் பூசிய கருவைப்போக்கி மறுபடியும் மூடித் திறந்துகாட்ட ஓர் சவரன் இருக்கும். குட்டிச்சாத்தான் ஏவலென்பர்.

588. ஓர் ரூபாயை நூறு ரூபாயாகக் காட்டும் ஜாலம்.

முன்போல் சபையில் வந்து நின்று ஒரு ரூபாயைக் கையிலெடுத்து அங்குள்ள அனைவருக்குங் காட்டி. இந்த ஒரு ரூபாயை நூறு ரூபாயாகக் காட்டும் விநோதத்தைப் பாருங்களென்று இந்திரஜாலக் கருவையும் ஐங்கோலக்கருவையும் விரலில் தொட்டுச் சாமுண்டி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, அம்மணி! இந்த ஒரு ரூபாயை நூறு ரூபாயாகப் பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும்படிச் செய்வாயென்று மனதில் நினைத்து ஜாலக்காரனைத் தியானித்துக் கருவை ரூபாயின்மேல் தந்திரமாகத் தடவி மேசைமேல் வைத்து, துணியைப்போட்டு மூடிச் சற்று நேரம் பொறுத்துத் திறந்துகாட்ட நூறுரூபாயாகத் தோற்றும். இது என்ன ஆச்சரியமென்று எண்ணித் திகைப்பார்கள். நீ அந்தக்ஷணமே ரூபாயின்மேல் பூசின கருவைப்போக்கி மறுபடியும் திறந்துகாட்ட ஒரு ரூபாயாகத் தெரியும்; அப்போது இது குறளி வசியமென்பார்கள்.

589. உடைந்த தேங்காயை உருவாக்கும் ஜாலம்.

ஒரு தேங்காயை எடுத்து சபையோர் முதலானவர்களுக்குங் காட்டி, இந்தத் தேங்காயைச் சுரைக்காயைப்போல் உடைத்து மறுபடியும் முன்னிருந்ததுபோல் முழுக்காயாகச் செய்கிறேனென்று மறப்புமையை அந்தத் தேங்காயில் தடவி ஒருபுரம்வைக்க அது ஒருவருடைய கண்ணுக்குந் தெரியாது. நீ தந்திரமாய் வேறொருதேங்காய் வைத்திருந்தெடுத்து, அதை யாவருக்கு முன்பு பொடிப்பொடியாக்கி இதோ இந்தத் தேங்காய்ப் பொடியை முழுதேங்காயாக்குகிறேன் என்று முன்போல் மறப்பு மையைத் தேங்காய்ப் பொடிமேல் தெளித்து, தட்டைப்போட்டு மூடி, சற்றுநேரம் பொறுத்துத் திறந்து முழுத்தேங்காயாக எடுத்துக்காட்ட பிரமிப்பார்கள்.

590. கொளுத்திய துணியை மறுபடியும் காட்டும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று, ஒரு துணியைக் கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி. இந்தத் துணியைக் கொளுத்திவிடுகிறேன். மறு

படியும் துணியை அழைப்பிக்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக் கருவை விரலில்தொட்டு, சக்கலாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அம்மணி! இந்தத் துணி பற்றியெறிந்து சாம்பலானதுபோல் பார்ப்போர்களுக்குத் தெரியச் செய்வாயென்று கருவைத் துணியின் மேல் தெளிக்க குபீலென்று பற்றியெறிந்து சாம்பலாகப் போனது போல் தோற்றும். அனைவரும் ஆச்சரியப்பட்டு நிற்பார்கள். அப்போது நீ அவர்களைப் பார்த்து, இப்போ கொளுத்திய துணியை மறுபடியும் அழைப்பிக்கிறேன் பாருங்களென்று தந்திரமாக ஐங்கோலக்கருவைத் தொட்டு பைரவர் மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்து சாம்பல்போல் தோற்றும் துணியின்மேல் தெளித்து தட்டைப்போட்டு மூடித் திறந்துக் காட்ட முன்போல் துணியிருக்கும். கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

591. குடத்தை உடைத்து மறுபடியும் குடமாக்கும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒரு மண்குடத்தை எடுத்து அனைவருக்குங் காட்டி இந்தக் குடத்தை உடைத்து மறுபடியும் முன்னிருந்ததுபோல் செய்கிறேனென்று குடத்தைப் பூமியில்வைத்து, ஜெகஜாலக்கருவை விரலில்தொட்டு சக்கலாதேவி மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்துக் குடம் பார்ப்போர் கண்களுக்கு உடைந்தாற்போல் தோற்றவேணுமென்று மனதில் எண்ணிக் கருவைக் குடத்தின்மேல் தெளித்துத் தடியைக் குடத்தின் பக்கத்தில் அடிக்கப் பார்ப்போர்களுக்குக் குடம் பொடிப்பொடியாகப் போனதுபோல் தோற்றும். உடனே நீ அவர்களைப் பார்த்து, இதோ ஒடிந்துப்போன குடத்தை உருவாகச் செய்கிறேன் பாருங்களென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு, பைரவர் மந்திரத்தை நூற்றியெட்டு ஜெபித்துக் குடத்தின்மேல் தடவி, துணியைப்போட்டு மூடி, சற்றுநேரம் பொறுத்துத் திறந்துகாட்ட முன்போல் குடமிருக்கும். ஆச்சரியப்படுவார்கள்.

592. துணியை இரண்டாகக் கிழித்து மறுபடியும் ஒன்றாகச் செய்யும் ஜாலம்.

எவ்விதமான துணியானாலு மெடுத்துச் சபையிலுள்ள அனைவருக்குங்காட்டி இந்தத் துணியை இரண்டாகக்கிழித்து மறுபடியும் ஒன்றாகச் செய்கிறேன் பாருங்களென்று கண்கட்டு மையைத் திலர்தமிட்டுக் கொண்டு மகாமாயமையை விரலில் தடவிக்கொண்டு ஜாலக்காளைத் தியானித்துத் துணியை எடுத்து முறுக்கிக் கிழேபோட பார்ப்போர்களுக்கு 2-துண்டாகக் கிழித்துப் போட்டாற்போல் தெரியும். அப்போது நீ அதை எடுத்து மறுபடியும் அனைவருக்குங் காட்டி இதை முன்போல் ஒரு துண்டாகச் செய்கிறேனென்று ஐங்கோலக்கருவைத் தந்திரமாகத் துணியில் தடவி, பந்துபோல் சுருட்டி பூமியின்மேல் சற்றுநேரம் வைத்து எடுத்துப் பிரித்துக்காட்ட இரண்டு துண்டும் ஒரு துண்டாகத் தெரியும்; காண்போர் ஆச்சரியப்படுவார்கள்.

593. அருத்தநூலை ஒட்டவைக்கும் ஜாலம்.

நாலுமுழம் நூலைக் கையிலெடுத்து சபையோர்களுக்குக் காட்டி, இந்த நூலை இரண்டு துண்டாக அறுத்து மறுபடியும் முன்னிருந்தது

போல் ஒரு துண்டாகக் காட்டுகிறேன் பாருங்களென்று தந்திரமாக கண்கட்டுமையை விரலில்தொட்டு நூலில்தடவி, அறுப்பதுபோல் இரண்டாய் மடித்துக் கிழேபோட பார்ப்போர்களுக்கு இரண்டு துண்டாக அறுத்துப் போட்டதுபோல் தோற்றும். உடனே நீ அதையெடுத்து அனைவருக்குங் காட்டி உருண்டையாகச் சுற்றி ஐங்கோலக்கருவைத் தடவி நூலைப் பிரித்துக்காட்ட முன்போல் நிகளமாகத் தோற்றும்; பிரமிப்பார்கள்.

594. கரும்புகோலைத் துண்டுதுண்டாக வெட்டி மறுபடியும் ஒன்றாகச் செய்யும் ஜாலம்.

ஜாலமாடும் இடத்தில் ஒரு கரும்புகோலை எடுத்து அனைவருக்குங் காட்டி, இந்தக் கோலைத் துண்டுதுண்டாக வெட்டி மறுபடியும் முழு கோலாகச் செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை விரலில் தொட்டு, சக்கலாதேவியைத் தியானித்து, அம்மணி! பார்ப்போர் கண்களுக்குக் கரும்பை நான் துண்டுதுண்டாக அறுப்பதுபோல் தோற்றும்படிச் செய்வாயென்று மனதில் எண்ணி கத்தியில் மேற்படி கருவைத் தடவி, கரும்புகெடை அறுப்பதுபோல் அறுக்க பார்ப்போர் கண்களுக்குத் துண்டுதுண்டாகத் தோற்றும்; உடனே நீ அவர்களைப் பார்த்து இந்தத் துண்டை எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து முன்போல் முழு கரும்பு கிடையாக்குகிறேன் பாருமென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு, பைரவரைத் தியானிக்க கரும்புகிடையாகத் தோற்றும்; ஆனந்திப்பார்.

595. எலுமிச்சம் பழத்தை நாலுபத்தையாக அறுத்து மறுபடியும் முழுபழமாக்கும் ஜாலம்.

முன்போல் ஜாலமாடும் சபையில் ஒரு எலுமிச்சம்பழத்தை எடுத்து அனைவருக்குங் காட்டி, இதை நாலுபத்தையாக அறுத்து மறுபடியும் முன்னிருந்ததுபோல் ஒரு பழமாகச் செய்கிறேனென்று ஜெகஜாலக் கருவை விரலில்தொட்டு, சக்கலாதேவி மந்திரத்தை 108-ஜெபித்து, கத்தியில் கருவைத்தடவி பழத்தை அறுப்பதுபோல் காட்ட நாலுபத்தையாகத் தோற்றும். ஒன்றாகச் செய்கிறேனென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு, காளபைரவர் மந்திரத்தை 108-ஜெபித்துப் பழத்தின் மேல் தடவிக் கிழேபோட முன்போல் பழம் உருவாகத் தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள்.

596. காடை சண்டை ஜாலம்.

காடை இரண்டு கொண்டுவந்து சபையில் அனைவர்களுக்குங்காட்டி இவைகளைச் சண்டை விடுகிறேன் பாரென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு, காளபைரவர் மந்திரத்தை 108-ஜெபித்து, கருவை ஒரு காடையின்மேல் தடவி மற்றொரு காடையைச் சும்மாய்விட கருவை பூசியிருக்கும் காடை நன்றாக எதிர்ப்பாய்ந்து சண்டைபோடும்; எதிரில் நின்ற காடை உறக்கம்பிடித்தோடும்.

597. கௌதாரி சண்டை ஜாலம்.

முன்போல் கௌதாரி இரண்டைக் கொண்டுவந்து சபையோர்களுக்குக் காட்டி, இதைச் சண்டை விடுகிறேன் பாருங்களென்று மேற்

சொன்னபடி கருவையெடுத்துத் தியானித்துப் பூசிவிட, கருவுயினை கவுதாரி ஜெயிக்கும். எதிரில் நிற்கும் கவுதாரி சுருண்டு விழுந்துவிடும்.

598. கோழிச் சண்டை ஜாலம்.

இரண்டு சாவலைக் கொண்டுவந்து கத்திகட்டியாவது சும்மாவாவது நிறுத்தி அங்குள்ளவர்களைப் பார்த்து, இந்தச்சாவல்களிரண்டும் சண்டைபோடும் வேடிக்கையைப் பாருங்களென்று ஐங்கோலக்கருவை விரலில் தொட்டு வாலைமந்திரத்தைச் செபித்து, அந்தக் கருவை ஒரு சாவல்மேல் மாத்திரந் தடவி மற்றொரு சாவலை சும்மாவிட இரண்டும் விசேஷமாக சண்டைபோடும். ஆனால் கருவு பூசிவிட்ட சாவல் எவ்வளவுநேரம் சண்டைபோட்டாலும் சலிக்காது. காயம்பட்டாலும் ரத்தம் வராது. கத்திபட்டாலும் அறாது. எதிர்நிற்கும் சாவல் உறக்கம் பிடித்தாப்போலிருக்கும். ஆச்சரியப்படுவார்கள்.

599. புறாவைப் பறக்கவிடும் ஜாலம்.

ஒரு புறாவைக் கொண்டுவந்து அனைவருக்குங் காட்டி, இந்தப் புறாவைப் பறக்கவிட்டு மேகத்தில்போய் மறையும்படிச் செய்கிறேன் பாருங்களென்று ஜெகஜாலக்கருவைத் தொட்டு, சக்கலாதேவி மந்திரத்தைச் செபித்து, அம்மணி! இந்தப் புறாவை மேகத்தில் மறையச்செய்தாயென்று மனதிலெண்ணி, கருவைப் புறாவின்மேல் தடவி விட, அது ஜிவ்வென்று ஆகாயமார்க்கமாகப் பறந்துபோய் மேகத்தில் மறைந்துவிடும். பார்ப்போரெல்லாம் புறாவைக் காணோமே என்று பார்த்துப் பார்த்து கண் பூர்த்து நிற்பார்கள். அப்போது நீ அவர்களைப் பார்த்து ஆகாயத்தில் மறைந்த புறாவை இதோ வரவழைக்கிறேனென்று உச்சாடனமையை நெற்றியிலிட்டுக்கொண்டு வேதாளமந்திரம் ஆயிரத்தெட்டு செபிக்க, உடனே மேகத்தில் மறைந்த புறா வட்டமிட்டபடியே கீழே வந்திறங்கிவிடும். எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

600. எலுமிச்சம்பழம் மேகத்தில் மறையும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒரு எலுமிச்சம்பழத்தைக் காட்டி, இதை ஆகாயமார்க்கமாக விட்டெறிகிறேன்; அது மேகத்தில் மறைந்துபோம் அற்புதத்தைப் பாருங்களென்று ஜெகசாலக் கருவை விரலில்தொட்டு வேதாளமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்துக் கருவைப் பழத்தின் மேல் தடவி ஆகாயத்தில் விட்டெறிய உடனே பழம் மறைந்துபோம். உடனே நீ உச்சாடனமையை விரலில்தொட்டு வேதாள மந்திரத்தை நூற்றியெட்டு செபிக்க அக்கினி கீழேவந்து விழும்; உன்னை இந்திர சித்தனென்பார்கள்.

601. தேங்காய் மேகத்தில் மறையும் ஜாலம்.

ஒரு தேங்காயையெடுத்து சபையோர்களுக்குக் காட்டி பிறகு மஞ்சள் பூசி குங்குமமிட்டு, என்னுடைய மந்திரத்தினால் ஆகாயத்தில் விடுகிறேன் பாருங்களென்று ஜெகசாலக்கருவை விரலில்தொட்டு, சக்கலாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து, கருவைத் தேங்காயின் மேல் தடவி பூமியில்வைக்க, அது சிட்டுக்குருவி பறப்பதுபோல் கிளம்பி

உடனே மேகமண்டலத்தில் மறைந்துபோம், பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள். அப்போது நீ அவர்களைப் பார்த்து, அந்தரத்தில் மறைந்த அத்தேங்காயை வரவழைக்கிறேன் பாருங்களென்று உச்சாடனமையை விரலில்தொட்டுத் திலர்தமிட்டுக்கொண்டு வேதாளமந்திரம் நூற்றியெட்டு செபிக்க தேங்காயானது கரகரவென்று சுழன்றுவந்து பூமியில் விழும்; பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

602. விநாயகர் வசியமாகும் பூசை.

வில்வமரத்துக்கு ஆதிவாரத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி வேரைப் பிடுங்கிவந்து அதின்மேல் ஐங்கோலக்கருவைப்பூசி பூசையில்வைத்து, ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஐயும் கிலியும் சவ்வும் ஓம் சுவாகாவென்று நாளொன்றுக்கு லட்சம் உருசெபித்து, இப்படி 21-நாள் ஜெபித்து 22-நாள் விநா[illegible]ஷேகம் பூசை நைவேத்தியம் முதலானதும் செய்ய சித்தியாகும்; நினைத்தகாரியமும் முடியும்.

603. சுப்பிரமணியர் வசியம்.

கொன்றைமரத்துக்கு சுக்கிரவாரத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி வேரைப்பிடுங்கிவந்து அதின்மேல் ஐங்கோலக் கருவைப்பூசிப் பூமியில் வைத்து, சரவணபவா ஐயும் கிலியும் சவ்வும் ஓம் சுவாகாவென்று இருபத்தொருநாள் தவறாமல் காலையும் மாலையும் வேளை ஒன்றுக்கு 1008-உரு செபித்து 22-ம்நாள் பூசை முதலானதும்போட்டு வேரைக் குளிசமாடி கட்டிக்கொள்ள வசியமாகும்.

604. திரிமூர்த்திகள் வசியம்.

அரசமரத்திற்கு ஆதிவாரத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டித் தூபதீபங் கொடுத்து வேரைப் பிடுங்கிவந்து அதின்மேல் ஐங்கோலக் கருவைப்பூசிப் பூசையில்வைத்து, திரிமூர்த்திகளையும் மனதில் நினைத்து, வேரையெடுத்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாவார்கள்.

605. தேவர்கள் வசியம்.

மஞ்சள்செடிக்கு சுக்கிரவாரத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டித் தூபதீபங்காட்டி அதின்வேரைப் பிடுங்கிவந்து ஐங்கோலக் கருவைப்பூசிப் பூசையில்வைத்து தேவர்களைத் தியானித்து, வேரையெடுத்துக் கட்டிக்கொள்ள வசியமாவார்கள்.

606 அஷ்டதிக்குப் பாலர்கள்.

அருகம்புல்லுக்கு சுக்கிரவாரத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டித் தூபதீபங்கொடுத்துப் பூசைபோட்டு வேரைப்பிடுங்கிவந்து, அதின்மேல் ஐங்கோலக்கருவைப்பூசி அஷ்டதிக்குப் பாலர்களைத் தியானித்து வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாவார்கள்.

607. சூரியன் வசியம்.

செம்முருங்கைச் செடிக்கு ஆதிவாரதினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பூசைபோட்டு, சூரியனைத் தியானம்பண்ணி மறு ஆதிவாரஞ்

சென்று வேரைப்பிடுங்கிவந்து அதன்மேல் ஐங்கோலக் கருவைத்தடவிப் பூசையில்வைத்து ஒன்பதுநாள் தியானஞ்செய்து பத்தாநாள் வேரை யெடுத்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாவார்கள்.

608. சந்திரன் வசியம்.

மரமஞ்சள்செடிக்குத் திங்கட்கிழமையில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பூசைமுதலானதும் போட்டு சந்திரதியானஞ்செய்து, மறு திங்கட்கிழமையதினஞ் சென்று பிடுங்கிவந்து முன்போல் ஒன்பதுநாளுஞ் சந்திரனைத் தியானித்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாவார்.

609. அங்காரகன் வசியம்.

இரும்புக்கொல்லி என்னுஞ்செடிக்கு செவ்வாய்க்கிழமையில் காப்புகட்டிப் பூசைமுதலானதும் போட்டு, செவ்வாயைத் தியானித்து, மறு செவ்வாய்க்கிழமை வேரைப் பிடுங்கிவந்து அதன்மேல் ஐங்கோலக் கருவைத் தடவிப் பூசையில் வைத்து முன்போல் ஒன்பதுநாளு மறவாமல் செவ்வாயைத் தியானித்து எடுத்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள செவ்வாய் வசியமாவார். (இரும்புக்கொல்லி என்பது சிவனார்வேம்பு.)

610. புதன் வசியம்.

இருவேலி என்னுஞ்செடிக்குப் புதன்கிழமையதினங் காப்புகட்டிப் பூசை முதலானதும் போட்டுப் புதனைத் தியானஞ்செய்து மறு புதன் கிழமையன்று வேரைப் பிடுங்கிவந்து அதன்மேல் ஐங்கோலக்கருவைத் தடவிப் பூசையில்வைத்துப் புதனைத் தியானஞ்செய்து வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள புதன் வசியமாவார்.

611. வியாழன் வசியம்.

செங்கழுநீர் செடிக்கு வியாழக்கிழமை மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்து மறுவியாழக்கிழமை வேரைப் பிடுங்கி வந்து பூசையில்வைத்து அதன்மேல் ஐங்கோலக்கருவைத் தடவி முன் போல் பூசையில்வைத்து கட்டிக்கொள்ள வியாழன் வசியமாவார்.

612. சுக்கிரன் வசியம்.

கருஊமத்தன் செடிக்கு வெள்ளிக்கிழமை மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துத் தூபங்காட்டி மறு வெள்ளிக் கிழமை வேரைப்பிடுங்கிவந்து முன்போல் ஐங்கோலக்கருவைத் தடவிப் பூசையில்வைத்து, சுக்கிரனை தியானஞ்செய்து ஒன்பதாநாளெடுத்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள சுக்கிரன் வசியமாவார்.

613. சனி வசியம்.

செவ்வலரிச் செடிக்குச் சனிக்கிழமை மஞ்சள்நூல் காப்புகட்டிச் சனிபகவானைத் தியானித்துப் பூசைமுதலானதும் போட்டு, மறு சனிக் கிழமையில் வேரைப்பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் கருவைத் தடவி வைத்து, சனிபகவானைத் தியானஞ்செய்து குளிசமாடிக் கட்டிக் கொள்ள சனிபவான் வசியமாவார்.

614. இராகு வசியம்.

எட்டிமரத்திற்கு அமாவாசையில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துத் தூபதீபங்காட்டி, எட்டாநாள் சென்று வேரைப்பிடுங்கிவந்து ஐங்கோலக்கருவை வேர்மேல்தடவிப் பூசையில் வைத்து நவநாளுஞ்சென்று எடுத்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள இராகு வசியமாவார்.

615. கேது வசியம்.

வேப்பமரத்திற்குக் கிராணத்தில் காப்புகட்டிப் பொங்கல் முதலானதுஞ்செய்து கேதுவைத் தியானித்து, எட்டாநாள்சென்று வேரைப் பிடுங்கிவந்து அதற்குக் கருவைத்தடவிப் பூசையில்வைத்துக் கேதுவைத் தியானித்து வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள கேதுசித்தியாவார்.

616. காளி வசியம்.

குண்டுமணிச்செடிக்கு செவ்வாய்க்கிழமை மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துப் பூசைசெய்து காளிகாதேவியைத் தியானித்து, வேரைப்பிடுங்கிவந்து ஐங்கோலக்கருவை வேரின்மேல் தடவிப் பூசையில்வைத்துக் காளிமந்திரத்தை லட்சஞ்செபிக்க வசியமாவாள். வேரைக்குளிசமாடி கட்டிக்கொள்ளவும்; சித்தியாம்.

617. துர்க்கை வசியம்.

கரு ஊமத்தன் செடிக்கு ஆதிவாரம் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துத் தூபதீபங்காட்டி, துர்க்கையைத் தியானித்து வேரைப்பிடுங்கிவந்து அதன்மேல் உச்சாடனமையும் ஐங்கோலக் கருவும் தடவிப் பூசையில்வைத்துத் துர்க்கை மந்திரத்தை லட்சஞ் செபித்து, வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாவாள்.

618. மயான ருத்திரி வசியம்.

தைவேளைச்செடிக்குக் கிராணத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பலிகொடுத்துத் தூபதீபங்காட்டி, மயானருத்திரியை மனதிலெண்ணி வேரைப் பிடுங்கிவந்து அதன்மேல் தம்பனக்கருவையும் ஐங்கோலக் கருவையுந் தடவிப் பூசையில் வைத்து, மயானருத்திரி மந்திரத்தை லட்சமோதி, வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாவாள்.

619. சாமுண்டி வசியம்.

வெலிப்பருத்திக்குப் பருவத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்க லிட்டுப் பலிகொடுத்துத் தூபதீபங்காட்டி, சாமுண்டீஸ்வரியை மனதி லெண்ணி வேரைப் பிடுங்கிவந்து உச்சாடன மையும் ஐங்கோலக்கருவும் வேரில் தடவிப் பூசையில் வைத்து, சாமுண்டீஸ்வரி மந்திரத்தை லட்ச மோதி வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாவாள்.

620. சரஸ்வதி வசியம்.

செண்பகச்செடிக்கு வெள்ளிக்கிழமையில் காப்புகட்டிப் பூசை முதலானதும் போட்டு, சரஸ்வதியை மனதில் நினைத்து வேரைப் பிடுங்கி

வந்து ஐங்கோலக்கருவைப் பூசிப் பூசையில் வைத்து, சரஸ்வதி மந்திரத்தை லட்சமோதி வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள சரஸ்வதி வசியமாவாள்.

621. சாமளாதேவி வசியம்.

முல்லைச்செடிக்கு ஆதிவாரத்தில் காப்புகட்டிப் பூசைபோட்டுப் பலிகொடுத்து, சாமளாதேவியை நினைத்து வேரைப்பிடுங்கிவந்து அதன்மேல் உச்சாடனமையும் ஐங்கோலக் கருவுந் தடவிப் பூசையில் வைத்து, சாமளாதேவி மந்திரத்தை லட்சமோதி வேரைக் குளிசமாடிக் கட்ட வசியமாவாள்.

622. ஜாலக்காள் வசியம்-

தும்பைச் செடிக்கு வியாழக்கிழமை மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துத் தூபதீபங்காட்டி ஜாலக்காளை மனதில் நினைத்து அம்மணி! யென்று வேரைப் பிடுங்கிவந்து அதற்கு பேதனமையும் ஐங்கோலக்கருவுந் தடவி மலையாளபகவதி மந்திரத்தை லட்சமோதிக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாம்.

623. மலையாள பகவதி வசியம்.

பிரமதண்டிசெடிக்கு மங்களவாரத்தில் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துப் பூசைமுதலானதும் போட்டு, மலையாள பகவதியை நினைத்து வேரைப்பிடுங்கிவந்து உச்சாடனமையும் ஐங்கோலக்கருவுந் தடவிப் பூசையில் வைத்து, மலையாளபகவதி அட்சரத்தை லட்சஞ்சொல்லி வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாவாள்.

624. சக்கலாதேவி வசியம்.

நிண்ணூல்வாடிச் செடிக்கு செவ்வாய்க்கிழமையில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துப் பூசைமுதலானதும் போட்டு சக்கலாதேவியை மனதில் நினைத்து வேரைப் பிடுங்கிவந்து அதற்கு ஐங்கோலக்கருவும், அஷ்டமாசித்துமையுந் தடவிப் பூசையில் வைத்து, சக்கலாதேவி மந்திரத்தை லட்சஞ்சொல்லி வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாவாள்.

625. பத்திரகாளி வசியம்

எட்டிமரத்திற்கு- ஞாயிற்றுக்கிழமை காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துப் பூசைமுதலானதுஞ் செய்து, பத்திரகாளியை மனதிலெண்ணி வேரைப்பிடுங்கிவந்து அதற்கு உச்சாடனமையும் ஐங்கோலக் கருவுந்தடவி பத்திரகாளி மந்திரத்தை லட்சஞ்சொல்லி வேரையெடுத்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாகுவாள்.

626. வாலை வசியம்.

அழிஞ்சிசெடிக்கு மங்களவாரம் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துத் தூபதீபங்காட்டி, வாலையை மனதிலெண்ணி

வேரைப் பிடுங்கிவந்து அதற்கு உச்சாடனமையும் ஐங்கோலக்கருவுந் தடவி வாலைமந்திரத்தை நூற்றியெட்டுருஜெபித்து வேரைக்குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாவாள்.

627. வராகி வசியம்.

வேளைச்செடிக்கு வெள்ளிக்கிழமையில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொலித்து வராகிபெயரைச் சொல்லி வேரைப் பிடுங்கிவந்து அதற்கு உச்சாடன மையும் ஐங்கோலக்கருவுந் தடவி வராகி மந்திரத்தை லட்சமோதி வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள வராகி வசியமாவாள்.

628. பைரவர் வசியம்.

வில்வமரத்திற்கு வெள்ளிக்கிழமையும் பருவமுங்கூடிய நாளில் மஞ்சள் நூல் காப்புகட்டிப் பைரவர் பெயரைச்சொல்லிச் செபித்து வேரைப் பிடுங்கிவந்து அதற்கு உச்சாடனமையும் ஐங்கோலக்கருவுந் தடவி பைரவர் மந்திரத்தை லட்சமோதிக் குளிசமாடிக்கட்டிக்கொள்ள வசியமாவார்.

629. அஞ்சனாதேவி வசியம்.

மயில்கொண்டைச் செடிக்கு மங்களவாரத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துத் தூபதீபங்காட்டி, அஞ்சனாதேவியை நினைத்து வேரைப்பிடுங்கிவந்து, அதற்கு ஸ்தம்பனமையும் ஐங்கோலக்கருவையுந் தடவி செபித்து, அஞ்சனாதேவி மந்திரத்தை லட்சமோதி வேரைக்குளிசமாடிக் கட்டிக்கொள்ளவும்; வசியமாவாள்.

630. ஆஞ்சநேய வசியம்.

இருவாட்சி செடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டிச் செபித்து, ஆஞ்சநேயரை மனதில் நினைத்து வேரைப் பிடுங்கிவந்து அதற்கு வித்துவேஷணமையும் ஐங்கோலக்கருவையுந்தடவி செபித்து, ஆஞ்சநேயர் மந்திரத்தை லட்சமோதி வேரைக்குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாவார்.

631. வீரபத்திரர் வசியம்.

வில்வமரத்திற்கு வெள்ளிக்கிழமையில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப்பலிகொடுத்து, வீரபத்திரர் பெயரைச்சொல்லி செபித்து வேரைப்பிடுங்கிவந்து, அதற்கு அஷ்டமாசித்துமையும் ஐங்கோலக் கருவையுந்தடவி செபித்து, வீரமாங்காளி மந்திரம் லட்சமோதி வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள வீரபத்திரர் வசியமாவார்.

632. வீரமாங்காளி வசியம்.

அடாசனி என்னுஞ் செடிக்கு திங்கட்கிழமையில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்து, வீரமாங்காளி பெயரைச் சொல்லி செபித்து வேரைப்பிடுங்கிவந்து அதற்கு உச்சாடனக்கருவும்

ஐங்கோலக்கருவுந்தடவி செபித்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாம்.

633. குறளி வசியம்.

ஊமத்தஞ்செடிக்கு அமாவாசையும் ஆதிவாரமுங்கூடிய தினத்தில் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துப் பூசை முதலானதும் போட்டு, மறுவாரஞ்சென்று குறளியைத் தியானித்து வேரைப்பிடுங்கி வந்து அதற்கு ஆக்ருஷ்ணமையும் ஐங்கோலக்கருவையுந்தடவிப் பூசையில் வைத்துக் குறளிமந்திரத்தை லட்சஞ்செபித்து, வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாவான்.

634. கொள்ளி வசியம்.

ஆடு தின்னாப்பாளை செடிக்கு ஆதிவாரமுங் கேட்டை நக்ஷத்திரமுங்கூடிய தினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி, பலி முதலானதுங் கொடுத்து, கொள்ளியின் பெயரைச்சொல்லி வேரைப்பிடுங்கிவந்து அதற்குப் பேதனக்கருவும் ஐங்கோலக் கருவுந்தடவி, கொள்ளிமந்திரத்தை ஆயிரத்தெட்டு உருசெபித்து வேரையெடுத்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாகி சொன்ன ஏவல் செய்வான்.

635. குட்டிச்சாத்தான் வசியம்.

கோவிலை யென்னுஞ்செடிக்குக் கிரஹணத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பலி முதலானதுங்கொடுத்து, குட்டிச்சாத்தான் பெயரைச் சொல்லி வேரைப்பிடுங்கி அதற்கு ஜெகஜாலககருவையும் ஐங்கோலக் கருவையுந்தடவி, குட்டிச்சாத்தான் மந்திரத்தை ஆயிரத்தெட்டுரு செபித்து வேரைக்குளிசமாடிக் கட்டிக்கொள்ள குட்டி வசியமாவான். (கோவிலையென்பது சிறுகாஞ்சொறி.)

636. வேதாள வசியம்.

மோகனமென்னுஞ்செடிக்கு மங்களவாரமும் அமாவாசையுங்கூடிய தினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலி முதலியதுஞ் செய்து வேதாளத்தை தியானித்து வேரைப்பிடுங்கிவந்து அதற்கு உச்சாடனக்கருவும் ஐங்கோலக்கருவுந்தடவி வேதாளமந்திரத்தை லட்சமோதி, வேரைக்குளிசமாடிக் கட்டிக்கொள்ள வேதாளம் வசியமாகி சொன்னஏவல் செய்யும்.

637. பூத வசியம்

குடிக்கினி என்னுஞ்செடிக்குக் கிரஹணத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டிப்பொங்கலிட்டுப் பலிகொடுத்து, பூதத்தைத்தியானித்து வேரைப் பிடுங்கிவந்து அதின்மேல் உச்சாடனமையும் ஐங்கோலக்கருவும் அஷ்டமாசித்துமையுந்தடவி செபித்து, வேரைக்குளிசமாடிக் கட்டிக்கொள்ள வசியமாகி உன்மனம்போல் சொன்னபடி ஏவல்வேலைச்செய்து, நினைக்கும் போது எதிரில் தோற்றமாகும்.

638. புருஷ வசியம்.

குஞ்சமென்னுஞ் செடிக்குப் பருவமும் ஆதிவாரமுங்கூடிய தினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பலிபூசை முதலானதும் போட்டுப் பைரவரைத் தியானஞ்செய்துவேரைப் பிடுங்கிவந்து பூசையில்வைத்து, பைரவர் மந்திரத்தை 108 செபித்து வேரின்மேல் அஷ்டமாசித்துமையைத்தடவி செப்புக்குழாவிலடைத்துக் குளிசமாடிக்கட்டிக்கொள்ள வசியமாம் (குஞ்சம் என்பது குன்றிக்கொடி.)

639 ஸ்திரீ வசியம்

தொட்டால்சிணுங்கி செடிக்கு வெள்ளிக்கிழமைதினம் மஞ்சள்நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துப் பூசைபோட்டு, மறு வெள்ளிக்கிழமையில் வேரைப்பிடுங்கி அதற்கு ஐங்கோலக்கருவைத் தடவி, வாலைமந்திரத்தை 1008 செபித்து வேரைக்குளிசமாடிக் கட்டிக் கொள்ள ஸ்திரீகள் வசியமாவார்கள்.

640. புலிவசிய ஜாலம்.

குணகண்டி யென்னுஞ்செடிக்குக் கிரஹணத்தில் காப்புகட்டி, காளி மந்திரத்தை 108 ஓதி, வேரைப்பிடுங்கி அதற்கு ஜெகஜாலக்கருவுந் தடவி, காளிமந்திரத்தை 1008 செபித்து வேருக்கு வெள்ளிக்கம்பி சுற்றி மோதிரம்போல் செய்து விரலில்போட்டுக்கொள்ள புலி வசியமாகும். குணகண்டி என்பது சிவதை.

641. யானைவசிய ஜாலம்.

குப்பைமேனிக்கு ஆதிவாரம் தனுசுலக்கினத்தில் காப்புகட்டி கணபதியை தியானஞ்செய்து மறுவாரம் மீனலக்னத்தில் வேரறுமல் பிடுங்கிவந்து அதற்கு ஐங்கோலக் கருவைத்தடவி வாலைமந்திரத்தை 1008 செபித்து வேர்மேல் பொன்கம்பி சுற்றி மோதிரம்போல் விரலில் போட்டுக்கொள்ள யானை வசியமாகும்.

642. காடி வசிய ஜாலம்.

குண்டலிச்செடிக்குக் கிரஹணத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி, மயானருத்திரி மந்திரத்தை 108 செபித்துப் பூசைபோட்டு வேரைப் பிடுங்கி, அதற்கு அஷ்டமாசித்து மையைத்தடவி ருத்திராதேவி மந்திரத்தை 1008 செபித்து வேருக்கு வெள்ளிக்கம்பியுந் தாம்பிரக்கம்பியுஞ் சுற்றி மோதிரஞ்செய்து விரலில் போட்டுக்கொண்டு காடிமுன்சென்றால் காடிபயந்து நடுங்கி எதிரில்வந்து நிற்கும். குண்டலி என்பது சிந்தில்.

643. மந்தி வசிய ஜாலம்.

குற்றாலம் என்னுஞ் செடிக்கு ஆதிவாரமும் அமாவாசையுங் கன்னியாலக்கினமுங்கூடிய தினத்தில் காப்புகட்டி, அஞ்சனாதேவியையும் ஆஞ்சநேயரையுந் தியானித்து, வேரைப்பிடுங்கி அதற்கு ஐங்கோலக் கருவைத்தடவிப் பொன் மோதிரத்தினுள் வேரைச் சொருகி கையிலணிந்துகொள்ள மந்திவசியமாகும்.

644. செந்நாய் வசிய ஜாலம்.

தேதி என்னுஞ்செடிக்கு மங்களவாரத்தில் காப்புகட்டி, மயான ருத்திரியை நினைத்து வேரைக்கொண்டுவந்து ஐங்கோலக்கருவைத் தடவி அம்மனுடைய பாதத்தில் வைத்துத் தியானித்து 1008 உருசெபித்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள செந்நாய் வசியமாகும்.

645. நாய் வசியம்.

செங்கருங்காலிச் செடிக்குச் சந்திரகிராணத்தில் காப்புகட்டி வேரைப்பிடுங்கிவந்து, ஐங்கோலக்கருவைத்தடவி பைரவர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து வேரை மோதிரம்போல் சுற்றி விரலில் போட்டுக்கொள்ள எப்பேர்ப்பட்ட துஷ்டநாய்களும் வணங்கி வசியமாகும்.

646. பூனை வசியம்.

சுறழிஞ்சிச் செடிக்குத் திங்கட்கிழமையில் காப்புகட்டி மயான ருத்திரியை நினைத்துப் பூசைபோட்டு வேரைப்பிடுங்கி அதற்கு ஐங்கோலக் கருவைத்தடவி மயானருத்திரியின் பாதத்தில்வைத்து 1008 உருசெபித்துவேரைகுளிசமாடிக் கட்டிக்கொள்ள சகலமான பூனைகளும் கைதட்டஅழைக்க வரும்.

647. மான் வசியம்.

சிறுபுள்ளடி என்னும் செடிக்குக் குருவாரங் காப்புகட்டி வாலை விரதமிருந்து நைவேத்திய முதலானதுஞ் செய்து வேரைப்பிடுங்கி வந்து, அஷ்டமாசித்துமையும் ஐங்கோலக் கருவுந்தடவி வராகிமந்திரத்தை 1008 உருசெபித்து, வேரைக்குளிசமாடி வலதுகையில் கட்டிக்கொண்டு மான்கூட்டத் தெதிரில்நின்று கையைத் தட்டியழைக்க மான்களெல்லாம் கூட்டமாகவரும்.

648. நரி வசியம்.

அலரிச்செடிக்கு ஆதிவாரமும் அமாவாசையுங்கூடிய தினத்தில் காப்புகட்டி, வீரபத்திரரைத் தியானித்து நைவேத்திய முதலானதைச் செய்து வேரைப்பிடுங்கி அதற்கு ஜெகஜாலக்கருவைத்தடவி, வீரபத்திர மந்திரத்தை 1008 செபித்து, வேருக்கு வெள்ளைக் கம்பிளி சுற்றி மோதிரம்போலுருட்டி கைவிரலில் போட்டுக்கொண்டு, நரிகள் விசேஷமாயிருக்குங் காட்டிற்சென்று கையைத்தட்ட, நரிகளெல்லாமோடி வந்து சொன்னபடி கேட்கும்.

649. நழைநரி வசியம்.

சிறியாநங்கைசெடிக்குக் கிராணத்தில் காப்புகட்டி, மாடனைத்தியானித்து வேரைப்பிடுங்கிவந்து அதற்கு அஷ்டமாசித்து மையைத்தடவி, அம்மன்மந்திரம் 1008 செபித்து பாதத்தருகில்வைத்து அதன்பேரில் வெள்ளிக்கம்பி பொன்கம்பி சுற்றி விரலில் போட்டுக்கொண்டு நழைநரிகளிருக்கும் காட்டிற்சென்று கையைத்தட்ட நரிகளெல்லாம் கூட்டமாக ஓடிவரும்.

650. முள்ளம்பன்றி வசியம்.

பூனைக்காஞ்சான்செடிக்கு ஞாயிற்றுக்கிழமை காப்புகட்டி, மாடனைத் தியானித்துப் பலிகொடுத்து நைவேத்திய முதலானதுஞ் செய்து, வேரைப்பிடுங்கிவந்து அதற்கு ஐங்கோலக்கருவைத் தடவி மாடன் மந்திரத்தை நாளொன்றுக்கு 108 செபித்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள முள்ளம்பன்றி வசியமாகும்.

651. மரநாய் வசியம்.

பெரியாநங்கைசெடிக்குத் திங்கட்கிழமை மீனலக்கினத்தில் காப்புகட்டிக் குறளியைத் தியானித்துப் பூசைசெய்து வேரைப்பிடுங்கிவந்து அதற்கு ஜெகஜாலக்கருவும் ஐங்கோலக்கருவுந்தடவி, குறளிமந்திரத்தை 1008 செபித்து, வேரைக்குளிசமாடிக் கட்டிக்கொள்ள மரநாய் வசியமாகும்.

652. மாடுகேள் வசியம்.

ஆடுதின்னாப்பாளைசெடிக்குக் கிராணத்தில் காப்புகட்டி வாலையைத் தியானித்து நைவேத்தியஞ்செய்து, வே[illegible]டுங்கி அதற்கு ஐங்கோலக் கருவைத்தடவி, வாலைமந்திரத்தை லட்சமோதி [illegible]ஞ்செய்து அதன் மேல் பொன்கம்பியைச் சுற்றி விரலில்போட்டுக்கொள்ள [illegible]ட்டு மாடுகளாயிருந்தாலும் வசியமாகும்.

653. அஸ்வங்கள் வசியம்.

அருகியரத்தம் என்னுஞ்செடிக்கு ஆதிவாரமும் அமாவாசையுங் கூடிய தினத்தில் காப்புகட்டி, வேரைப்பிடுங்கி அதற்கு ஐங்கோலந் தடவி பூசைசெய்து பைரவரைத்தியானித்து. வேரைக்குளிசமாடிக் கட்டிக்கொள்ள அங்குள்ள அஸ்வங்களெல்லாம் வசியமாகும். ஓடாத அஸ்வங்களெல்லாம் ஓடும். அருகியரத்தம் என்பது பூனைக்காலி.

654. பாம்புகள் வசியம்.

நாகமல்லி செடிக்கு ஆதிவாரம் மீனலக்கினத்தில் காப்பு கட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துத் தீபதூபாராதனை செய்து, வடக்கே போகும் வேரைப் பிடுங்கிவந்து, அதற்கு ஐங்கோலக்கருவைத் தடவி, கெருடபகவானைத் தியானித்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள சர்வ பாம்புகளும் வசியமாகும். உன்னைக் கண்டவுடன் பாம்புகடித்து இறந்தவர்களும் எழுந்திருப்பார்கள்.

655. தேள் வசியம்.

ஆகாடம் என்னுஞ் செடிக்கு மங்களவாரத்தில் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துத் தூபதீபங்காட்டி வேரைப் பிடுங்கி வந்து, அதன்மேல் ஐங்கோலக் கருவும் அஷ்டமாசித்து மையுந்தடவி, பைரவர் மந்திரத்தை 1008-செபித்து வேரை மோதிரம்போல் சுற்றி அதன்மேல் பொன்வெள்ளிக் கம்பிசுற்றி கைவிரலில் போட்டுக்கொள்ள தேள்கள் வசியமாகும்.

656. பகைவர் வசியம்.

சிற்றாமுட்டி என்னுஞ் செடிக்குத் திங்கட்கிழமை கன்னியாலக்கினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி வேரைப் பிடுங்கிவந்து, அதன்மேல் ஐங்கோலக்கருவைத் தடவிப் பூசையில்வைத்து, காளிமந்திரம் ஆயிரத்தெட்டு உருஜெபித்து வேரையெடுத்து மோதிரம்போல் சுற்றிப் பொன் வெள்ளிக் கூடயத்தில்வைத்து வலது இடதுகைகளில் அணிந்துகொள்ளவும். பகைவரைக் கண்டவுடன் கூடயத்தைக் கிழக்கிறக்க பகைவர் வலியவந்து உன்னை வணங்கி வார்த்தையாடுவார்கள். உன் மொழியைத் தள்ளி நடக்கமாட்டார்கள்.

657. கள்ளர்கள் வசியம்.

பேருமுட்டி செடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சள் சரடு காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துப் பூசைமுதலானதும் போட்டு, பைரவர் மந்திரத்தை உச்சரித்து வேரைப்பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் அஷ்டமாசித்துமையும் ஐங்கோலக்கருவுந் தடவிப் பூசையில்வைத்து, பைரவருடைய மூலமந்திரத்தை ஆயிரத்தெட்டு உருசெபித்து வேரையெடுத்துக் குளிசமாய் உனது [illegible] கட்டிக்கொண்டு தனியாகக் காட்டுவழியேனும் மற்ற [illegible] வழியேனும் செல்லக் கள்ளர்கள் எதிர்பட்டாலும் உன்னைக்கண்டு அஞ்சி பயந்து ஓடுவார்கள்.

658. உலக்கை தாண்டும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று, உலக்கை யொன்றையெடுத்துச் சபையோர்களைப் பார்த்து, இந்த உலக்கையைப் பூமியில் படுக்கப்போடுகிறேன்; இதைக் குறுக்கே தாண்டி யாராகிலும் போவாராகில் அவர்களுக்குப் பத்துவராகன் கொடுக்கிறேன் என்று நீ பந்தயங்கூற, அப்போது அங்குள்ளவர்களில் யாரேனுமொருவர் தாண்டுகிறேனென்று வருவாராகில் அப்போது நீ அஷ்டமாசித்துமையும் ஐங்கோலக் கருவையும் விரலில்தொட்டு, ஒருவருக்குந் தெரியாமல் உலக்கையின்மேல் தடவிவிட்டு, உச்சாடன மந்திரத்தை செபித்துக்கொண்டிருக்க எதிரியை உலக்கை தாண்டவொட்டாமல் மறிமறி அடிக்கும். அப்போது அவன் பயந்து உன்னை வணங்குவானாகில் தந்திரமாக உலக்கைமேலிருக்கும் மையைத் துடைத்துவிட, உலக்கை எப்போதும்போல் பூமியில் விழுந்துகிடைக்கும்; அனைவரு மாச்சரியப்படுவார்கள்.

659. கோட்டைத் தாண்டும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் அனைவருக்கு முன்பாக ஒரு கோடுகிழித்து இந்தக் கோட்டை யாராகிலும் தாண்டிப் போவாராகில் பத்துவராகன் கொடுக்கிறேனென்று முன்போல் பந்தயங்கட்டி, யாரேனும் தாண்ட வருவாராகில் நீ உடனே ஒருவருக்குந் தெரியாமல் சிறியபானை ஓட்டில் ஐங்கோலக்கருவுஞ் ஜெகசாலக்கருவுந் தடவி அந்தக் கோட்டின் மத்தியில் வைத்துவிட்டுக் குறளியின் மந்திரத்தை செபித்துக்கொண்டிருக்க, தாண்டும்படியாகவந்த எதிரி கோட்டிற்கு அந்தப்புறமாக ஒருகாலும் வைத்துத் தாண்டியதுபோலவே அசையாமல் நின்றுவிடுவான் அனைவ

ரும் ஆச்சரியப்படுவார்கள். எதிரி உன்னைவணங்கி இந்தக் கோட்டை விட்டுக் கிளம்பும்படிச் செய்வாய் என்று கேட்பானாகில் நீ உடனே தந்திரமாகத் தடவிப்போட்ட ஓட்டை எடுத்துவிடுவாயாகில் கட்டியிருந்தவனை அவிழ்த்துவிட்டதுபோல் ஓடுவான்; சபையோர்கள் பிரமிப்பார்கள்.

660. செருப்பை மந்திரித்துவிடும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலாவது இன்னுமெந்த விடங்களிலாவது இடத்தை மெழுகிப் பிள்ளையார்வைத்து அதன்சிரசில் அருகம்புல்சூடி வெல்லம் பழம் வெற்றிலைப்பாக்கு வைத்துத் தேங்காயை யுடைத்துச் சூடங்கொளுத்திப் பிறகு ஒரு செருப்பையெடுத்துக் கழுவி மஞ்சள் நீரைத் தெளித்து அங்குள்ளவர்களைப் பார்த்து, இதோ இந்த செருப்பை மந்திரித்து விடுகிறேன்; இந்த வாசலெல்லாம் கரகரவென்று சுழலும் விநோதத்தைப் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை விரலில் தொட்டுக்கொண்டு, சக்கவாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டுசெபித்து, அம்மணி! இந்தசெருப்பை சுழலும்படி சீக்கிரம் செய்வாயென்று மனதில் நினைத்துக் கருவைத் தந்திரமாக செருப்பின்மேல் தடவி, பின்பு உச்சாடன மந்திரத்தை செபிக்க; உடனே செருப்பானது கிளம்பி அந்தவாசல் முழுதும் கரகரவென்று சுழன்றுகொண்டே இருக்கும். மந்திரத்தை நிறுத்தினால் நின்றுவிடும்; ஆச்சரியப்படுவார்கள்.

661. துடப்பத்தை மந்திரித்துவிடும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் துடப்பக்கட்டை ஒன்று கையிலெடுத்து, இதை மந்திரித்து விடுகிறேன்; இந்த வாசலில் இருகிரென்று சுற்றும் விநோதத்தைப் பாருங்களென்று! ஜெகசாலக்கருவும் ஐங்கோலக்கருவும் விரலில் தொட்டு, சக்கலாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து, கருவைத் துடப்பக்கட்டையின்மேல் தடவித் தரையில்போட்டு மந்திரத்தை செபித்துக்கொண்டே யிருக்க இருகிரென்று வாசலெல்லாம் சுழலும், பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் மந்திரம் ஜெபிப்பதை நிறுத்திவிட சுழலாது.

662. முறத்தை மந்திரித்துவிடும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தைப் பசுஞ்சாணத்தால் மெழுகி, மஞ்சள் பிள்ளையார் பிடித்துவைத்துச் சிரசில் அருகம் புல்சூடி, பழம் வெல்லம் வெற்றிலைப்பாக்குவைத்து, தேங்காயுடைத்துச் சூடங்கொளுத்தி முறத்துக்கு மஞ்சள் தடவிக் குங்குமமிட்டுப் பிள்ளையார் அருகில்வைத்து, ஜெகஜாலக்கருவும் ஐங்கோலக்கருவும் விரலில்தொட்டு சக்கலாதேவி மந்திரத்தை விடாமல் செபித்து அம்மணி! இந்த முறத்தைச் சக்கரம்போல் சுற்றும்படி செய்வாயென்று செபித்துக்கொண்டேயிருக்க முறம் இருகிரென்று வாசலெல்லாம் சுற்றிவரும், பார்ப்பவர்கள் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள். நீ மந்திரஞ் ஜெபிப்பதை நிறுத்திவிட்டால் முறம் சுழலாது.

663. கோழிமுட்டையை மந்திரித்துவிடும் ஜாலம்.

முன்போல் பிள்ளையார் பிடித்துப் பழமுதலானதும் வைத்துத் தேங்காயுடைத்துச் சூடங்கொளுத்தி, பின்பு கோழிமுட்டை ஒன்றையெடுத்து அங்குள்ள அனைவருக்குங்காட்டி, இந்த முட்டையை மந்திர உச்சாடனஞ்செய்து அந்தரமாகக் கிளம்பும்படி செய்கிறேன் பாருங்களென்று முட்டைக்கு மஞ்சள்தடவிக் குங்குமமிட்டுப் பிள்ளையார்க்கு முன்புவைத்து, ஐங்கோலக்கருவும் அஷ்டமாசித்துமையும் விரலில் தொட்டு, வாலைமந்திரம் 1008-ஓதி கருவை முட்டைமேல் தடவி உச்சாடனமையும் விரலில்தொட்டு மந்திரஞ் ஜெபித்துக்கொண்டேயிருக்க முட்டை கீழேறிற்காமல் அந்தரமாகக் கிளம்பி கரகரவென்று சுழலும். ஜெபிப்பதை நிறுத்திவிடச் சுழல்வது நின்றுவிடும். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

664. எலுமிச்சம்பழத்தை மந்திரித்துவிடும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு எலுமிச்சம் பழத்தை யெடுத்துச் சபையோர்களுக்குக்காட்டி, இதை ஊரெல்லாம் புரளும்படிச் செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி, ஜெக்ஜாலக் கருவையும்ஐங்கோலக்கருவையும் விரலில்தொட்டு, சக்கலாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து அம்மணி! இந்தப்பழத்தை வாசல்முற்றும் புறளும்படி செய்வாயென்று கருவைப் பழத்தின்மேல் தடவித் தரையில்வைத்து மந்திரத்தை மறவாமல் ஜெபித்துக்கொண்டேயிருக்க, பழம் வாசல்முழுதும் கடகடவென்று புறளும்; ஆச்சரியப்படுவார்கள்.

665. சூரியபகவான் தியானபூசை.

மத்தியஸ்தானத்திலிருக்கும் சூரியபகவானுக்கு ஆபரணம் மாணிக்கம் சமித்து எருக்கு கடுகுசேர்ந்த சாதமும் காரம்சேர்ந்த பலகாரமும் படைத்து, செந்தாமரைப் புஷ்பம்வைத்து ஞாயிற்றுக்கிழமையில் தீபதூபங்கொடுத்து சூரியதரிசனஞ்செய்ய சித்தியாகும். மேற்சொன்னபடி படைத்தவைகளைச் சாப்பிட சூரியபகவான் தனது கோரத்தைக் கட்டாமல் காப்பாற்றுவார்.

666. சந்திரபகவான் தியானபூசை.

தென்கிழக்கு அக்கினிமூலையிலிருக்கும் சந்திரபகவானுக்கு ஆபரணம் முத்து புஷ்பம் வெள்ளல்லி சமித்து முருங்கை தித்திப்பு சேர்ந்த சாதம் இவைகளைப் படைத்துத் தீபதூபங்கொடுத்து சந்திரபகவானைத் தியானித்துவர சகலமும் சித்தியாகும்.

667. செவ்வாய்த் தியான பூசை.

தெற்கு எமன் திசையிலிருக்கும் செவ்வாய் பகவானுக்கு ஆபரணம் பவளம் புஷ்பம் செண்பகம் சமித்து கருங்காய்தாகவிலை வெண்ணெய் சேர்ந்த சாதம் துவர்ப்புள்ள பதார்த்தம் துவரைசேர்ந்த பலகாரம் இவைகளை செவ்வாய்க்கிழமையில் படைத்து, செவ்வாயைத் தியானித்துவர சித்தியாகும்; கொடுமைசெய்யாமல் காத்துவருவார்.

668. புதபகவான் தியானபூசை.

வடகிழக்கு ஈசான்ய மூலையிலிருக்கும் புதபகவானுக்கு ஆபரணம் பச்சைபுஷ்பம் வெண்காந்தம் சமித்து நாயுருவி வேப்பிலை சர்க்கரை சேர்ந்த சாதமும் உப்புமாவும் பச்சைப்பயறு பலகாரத்துடன் புதன்கிழமை படைத்து தீபதூபங்கொடுத்துப் புதபகவானைத் தியானித்து சாப்பிட பிரசன்னமாகி நன்மைதருவார்.

669. குருபகவான் தியானபூசை.

வடக்கு குபேரதிசையிலிருக்கும் குருபகவானுக்கு ஆபரணம் புஷ்பராகம் முல்லை சமித்து அரசு அரசிலை வெள்ளைச்சாதம் தித்திப்புப் பதார்த்தம் கடலைசேர்ந்த பலகாரம் இவைகளை வியாழக்கிழமையில் படைத்து, வியாழபகவானைத் தியானித்துத் தீபதூபங்காட்டி சாப்பிட சித்தியாகி நன்மையைத் தருவார்.

670. சுக்கிரபகவான் தியானபூசை.

கிழக்கு இந்திர திசையிலிருக்கும் சுக்கிர பகவானுக்கு ஆபரணம் வைரம் புஷ்பம் வெண்டாமரை சமித்து அத்தி குங்குலி வெண்ணெய் சேர்ந்த சாதம் இனிப்பாகிய பதார்த்தம் மொச்சைக்கொட்டைச் சேர்ந்த பலகாரம் இவை முதலானதும் வெள்ளிக்கிழமையில் படைத்து, சுக்கிர பகவானைத் தியானித்துத் தூபதீபங்கொடுத்து சாப்பிட சித்தியாகி வேதனைத்தராமல் காப்பாற்றுவார்.

671. சனிபகவான் தியானபூஜை.

தெற்கு வருண திசையிலிருக்கும் சனிபகவானுக்கு ஆபரணம் நீலம் புஷ்பம் கருங்குவளை சமித்து வன்னி ஆலம் இலை மாம்பழத்துடன் சாதம் கசப்புசேர்ந்த பதார்த்தம் எள்ளுசேர்ந்த பலகாரம் இவை சனிக்கிழமையில் படைத்து, சனிபகவானைத் தியானித்து சாப்பிட சித்தியாகி இம்சை தராமல் காப்பாற்றுவார்கள்.

672. இராகுவின் தியானபூஜை.

தென்மேற்கு நிருதிமூலையில் இருக்கும் இராகுவுக்குக் கோமேதகம் ஆபரணம் புஷ்பம் மந்தாரை சமித்து அருகு தாழையிலை சுத்தமாகிய சாதம் புளிப்புசேர்ந்த பதார்த்தம் உளுந்துசேர்ந்த பலகாரம் காலை ஏழரை நாழிகைக்குமேல் படைத்து இராகுவைத் தியானித்துத் தூபதீபம் கொடுத்து சாப்பிட சித்தியாகி தொந்திரவு செய்யாமல் இரட்சிப்பார்.

673. கேதுவின் தியானபூஜை.

வடமேற்கு வாயுமூலையில் இருக்கும் கேதுவுக்கு ஆபரணம் வைடூரியம் செவ்வல்லி சமித்து தர்ப்பை தாழையிலை சுத்தசாதம் புளிப்பு சேர்ந்த பதார்த்தம் கொள்ளுசேர்ந்த பலகாரம் இவைகளைக் காலை ஏழரை நாழிகைக்குமேல் படைத்துத் தூபதீபங்கொடுத்துக் கேதுவைத் தியானித்து சாப்பிட சித்தியாகி நன்மையைத்தருவார்.

674. சண்டை ஜாலம்.

காக்கை மூலிகை குரங்கு மூலிகை இவைகள் இரண்டும் மலைகள் தோறும் விசேஷமாயிருக்கும்; இவைகளைப் பிடுங்கிவந்து காக்கை மூலிகை ஒருகடையிலும், குரங்குமூலிகை மற்றொரு கடையிலும் கடைக்காரர் கண்ணுக்குத் தோற்றாமல் சொருகிவைத்தால், அவர்களிருவரும் உடனே சண்டைப்போட்டு மண்டையோடு மண்டை புடைத்துக்கொள்வார்கள். யார்போய்ச்சமாதானஞ்செய்தாலும் கேளார்கள். அந்த மூலிகைகளை எடுத்துவிட்டால் சமாதானமாவார்கள்.

675. நீலகண்டர் வசிய மந்திரம்.

ஓம் நீலகண்ட மித்திர மங்கிங் சர்வ மனோகண்டா பகேவாகா என்று லட்சம் உருஜெபித்து பூசைபோட்டு, அறுபிராமணருக்கு அன்னதானம்செய்து மேற்சொன்னபடி மந்திரத்தை மறவாமல் பத்துநாள் ஜெபித்துவர நீலகண்டர் சித்தியாவார்.

676. பொன்னிறத் தியானம்.

நீலகண்டரைப் பொன்னிறமாகவைத்து ஸ்தம்பனஞ்செய்து மனதில் தியானித்து, எண்கோண சக்கரங்கீறி அதில் வெம்புரொபு என்று நாட்டி உரு 36-ஜெபிக்க சகலமும் தம்பிக்கும்.

677. தங்கநிறத் தியானம்.

நீலகண்டரைத் தங்கநிறமாக வைத்து, மேற்சொன்னபடி எண்கோணமிட்டு மனதில் மறவாமல் தியானித்து முன்போல், உரு 36-ஜெபித்துத் தூபதீபங் கொடுக்க மனதில் கொண்ட எண்ணம் நிறைவேறும்.

678. வெள்ளிநிறத் தியானம்.

நீலகண்டரை வெள்ளிநிறமாக வைத்து, திருநீற்றால் வட்டங்கீறி, யபமர்ரோவென்று நாட்டி 1008-உருஜெபித்து விபூதியைக் கொடுக்க நினைத்தபடி யாவும் வசியமாகும்.

679. செந்நிறத் தியானம்.

நீலகண்டரை செந்நிறமாகவைத்துத் தியானித்து முக்கோணங்கீறி அதில் கிலியும் ரோவென்று நாட்டி 1008-உருஜெபித்து, பின்பு தூளிதத்தை எடுத்து அணிந்துகொண்டு வெளியேபோக சகலமும் வசியமாகும்; பிறருக்குக் கொடுக்கினும் அவர்களும் உன்னை வணங்குவார்கள்.

680. ஸ்படிகநிறத் தியானம்.

நீலகண்டரை ஸ்படிகநிறமாக வைத்துத் தியானஞ்செய்து பிறைபோல் கீறி, அதில் யம்மரோவென்று நாட்டி, ஆயிரத்தெட்டு உருஜெபித்துத் தூளிதத்தை யெடுத்துத் தடவிக்கொண்டு வெளியேபோக சகலமும் வசியமாகும்.

681. மேகநிறத் தியானம்.

நீலகண்டரை மேகநிறமாகவைத்துத் தியானித்து நாற்கோணங்கீறி, அதில் ஓம் ரம்ரோவென்று தென்னம் ஓலையில் நாட்டி, இருவருடைய பேரையும் கூட்டி ஆயிரத்தெட்டு உருஜெபித்து, எதிரியினுடைய வீட்டின் இறப்பில் கொண்டுபோய் வைக்க, அவர்கள் இருவரும் இணைபிரிவார்கள்.

682. புகைநிறத் தியானம்.

நீலகண்டரைப் புகைநிறமாகவைத்துத் தியானித்து ஐங்கோண சக்கரங்கீறி அதில் யம்ரோவென்று நாட்டி, ஆயிரத்தெட்டு உருஜெபித்துத் தூளிதத்தை வாரிப்போட சகல பிணிகளும் சகல தோஷங்களும் சகல பகைகளும் வீரிட்டு ஓடிப்போகும்.

683. பிரளயகால ருத்திரத் தியானம்.

நீலகண்டரைப் பிரளயகால ருத்திரரைப்போல வைத்துத் தியானித்து முக்கோண சக்கரங்கீறி, அதில் ஓம் ரோகம் என்று காட்டிப் பகைவன் பெயரைச்சொல்லி ஆயிரத்தெட்டு உருஜெபித்து அனலில் காட்டக் கருகி மரணமாகப்போகும்.

684. கறுப்புநிறத் தியானம்.

நீலகண்டரைக் கருநிறமாகவைத்துத் தியானித்து முக்கோண சக்கரங்கீறி, அதில் பம் என்று நாட்டி ஆயிரத்தெட்டு உருஜெபித்துத் தூளிதத்தை யெடுத்து அணிந்துகொள்ள சகலசித்தும் விளையாடலாம்.

685. சத்திபூசைத்தியானம்.

ஐயும் நமோ பகவதே ஓம் மகாரூபி மகம்மாயி மாதவசக்தி சர்வதாரணி சுவாகாவென்று லட்சம் உருஜெபித்துத் தம்பனத்தோடு பூசைமுதலானதும் போட்டுத் தியானிக்க மகம்மாயி சித்தியாவாள், அப்படி சித்தயானபெருமை என்னவெனில் சத்திபூசை செய்வதை கேலிசெய்து சோதனைபார்க்க யாராவது வருவாராகில் அப்போது நீ மந்திரத்தைத் தியானஞ்செய்து வஸ்துசுத்தி பால் பூவாக இருக்கும்; சோதனைகாட்ட சகலரும் மிரண்டு பணிவார்கள்.

686. தேங்காயைப் பனங்காயாக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு தேங்காயை யெடுத்து சபையோர்களுக்குக் காட்டி, இதைப் பனங்காயாக்குகிறேன் பாருங்களென்று ஜெக ஜாலக்கருவைக் கலந்து விரலில்தொட்டு சத்தியின் மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்துக் கருவைத் தேங்காயின்மேல் தடவி மேஜையின் மேல் வைத்துத் தட்டைப்போட்டுமூடி, பிறகு திறந்துக்காட்ட பனங்காயாகத் தோற்றும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். மறுபடியும் மூடித்திறக்க தேங்காயாகும்.

687. பனங்காய் தேங்காயாகும் ஜாலம்.

ஒரு பனங்காயையெடுத்து முன் தேங்காயைப் பனங்காயாகக் காட்டினேன், இப்போது இப் பனங்காயைத் தேங்காயாகக் காட்டுகிறேன் பாருங்களென்று அஷ்டமாசித்திமையை விரலில்தொட்டு, சத்தியை நினைத்துக் கருவைப் பனங்காயின்மேல் தடவித் தட்டைப் போட்டு மூடித் திறந்துகாட்ட தேங்காயாகத் தோற்றும், பிறகு கூடையால் மூடித்திறக்க பனங்காயாகும்; பார்ப்போர் பலேபேஷ் என்பார்கள்.

688. ரோஜாபுஷ்பம் சாமந்திப்புஷ்பமாகும் ஜாலம்.

ஒரு ரோஜாபுஷ்பத்தை யெடுத்துக்காட்டி, இந்தப் புஷ்பத்தைச் சாமந்திப் புஷ்பமாகும்படி செய்கிறேன் கவனியுங்களென்று ஐங்கோலக் கருவை விரலில்தொட்டு உருஜெபித்து, கருவைப் புஷ்பத்தின்மேல் தடவி மேஜையின்மேல் வைத்துத் தட்டைப்போட்டு மூடித்திறக்க ரோஜா புஷ்பமாகும்; சகலரும் ஆச்சரியப்படுவார்கள்.

689. சாமந்திப்புஷ்பம் ரோஜாபுஷ்பமாகும் ஜாலம்.

ஒரு சாமந்திப் புஷ்பத்தையெடுத்து சபையோர்களுக்குக் காட்டி முன் ரோஜாபுஷ்பம் சாமந்திப் புஷ்பமானதைப் பார்த்தீர்கள்; இதோ சாமந்திப் புஷ்பத்தை ரோஜா புஷ்பமாகக் காட்டுகிறேன் பாருங்களென்று விரலில் ஐங்கோலக்கருவைத் தொட்டு நீலகண்டரைத் தியானித்துக் கருவைப் புஷ்பத்திற்றடவி மேசையின்மேல் வைத்துக் கூடையால் மூடித்திறக்க ரோஜாபுஷ்பமாகத் தோற்றும்; மறுபடியும் மூடித் திறக்க சாமந்தியாய்விடும்.

690. மல்லிகை முல்லையாகும் ஜாலம்.

ஆழாக்கு மல்லிகைமொக்கை யெடுத்து சபையோர்களுக்குக் காட்டி, ஒரு தாம்பாளத்தில் வைத்து, ஜெகசாலக் கருவை விரலில் தொட்டு, சத்திமந்திரத்தை 1008-ஜெபித்து மல்லிகைமேல் கருவைத் தடவிக் கூடைப்போட்டு மூடித்திறக்க முல்லையாகவேயிருக்கும்; பார்ப்பவர்கள் மாயாஜாலமென்பார்கள்.

691. முல்லை மல்லியாகும் ஜாலம்.

முன்போல் ஆழாக்கு முல்லையெடுத்து சபையோருக்குக் காட்டி இம்முல்லையை மல்லியாக்குகிறேன் பாருங்களென்று ஜெகசாலக்கருவைத்தொட்டு, சத்திமந்திரத்தை 1008-உருசெபித்து, கருவைப் புஷ்பத்தின்மேல் தெளித்து கூடைபோட்டு மூடித்திறக்க முல்லை மல்லியாகத்தோற்றும்; மறுபடியும் மூடித்திறக்க முல்லையாய்விடும்.

692. வாழைப்பழம் பலாப்பழமாகும் ஜாலம்.

ஜாலசபையில் ஒரு வாழைப்பழத்தை யெடுத்துக்காட்டி, இதைப் பலாப்பழமாக மாற்றுகிறேன் பாருங்களென்று ஜெகசாலக்கருவும் ஐங்கோலக்கருவும் எடுத்து மந்திரத்தை 1008-உருசெபித்துக் கருவைப்

பழத்தின்மேல் தடவி முன்போல் மூடித் திறந்துகாட்ட வாழைப்பழம் பலாப்பழமாகத் தோற்றும்; மறுபடியும் மூடித்திறக்க வாழைப்பழமாகவே யிருக்கும்.

693. பலாப்பழம் வாழைப்பழமாகும் ஜாலம்.

ஒரு பலாப்பழச் சுளையையெடுத்து அனைவர்க்குங்காட்டி, இதை வாழைப்பழமாகச் செய்கிறேன் பாருங்களென்று இந்திர சாலக்கருவும் ஐங்கோலக்கருவுங் கலந்து விரலில்தொட்டு சத்தியைத் தியானித்து, நீலகண்டர் மந்திரத்தை 1008-செபித்து, பலாச்சுளையை வாழைப்பழமாகத் தோற்றும்படிச் செய்வாயென்று கருவைப் பழத்தின்மேல் தடவி முன்போல் மூடித்திறக்க பலாப்பழம் வாழைப்பழமாகத் தோற்றும், எல்லோரும் இது மகா புதுமையான வித்தையென்பார்கள்.

694. மாம்பழம் கிச்சிலிப்பழமாகும் ஜாலம்.

ஜாலசபையில் மாம்பழமொன்று யெடுத்துக்காட்டி, இதை கிச்சிலிப் பழமாகச் செய்கிறேன் பாருங்களென்று அஷ்டமாசித்துமையும் ஐங்கோலக்கருவுங் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு நீலகண்டரைத் தியானித்து, சத்திமந்திரத்தை 1008-தரம் செபித்துக் கருவைப் பழத்தின்மேல் தடவிக் கூடையைக் கவிழ்த்துத் திறக்க மாம்பழம் கிச்சிலிப் பழமாகத் தோற்றும். பிறகு கூடையால் மூடித் திறந்துகாட்ட பழயபடி மாம்பழமாகும். சபையோர்கள் சந்தோஷப்படுவார்கள்.

695. கிச்சிலிப்பழம் மாம்பழமாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு கிச்சிலிப்பழத்தை எடுத்து அனைவருக்குங் காட்டி இதை மாம்பழமாக மாற்றுகிறேன் பாருங்களென்று இந்திர சாலக்கருவும் ஐங்கோலக்கருவுங் கலந்து விரலால் தீண்டி சத்தி மந்திரத்தை 1008-செபித்து கருவைப் பழத்தின்மேல் தடவிக் கூடையால் மூடி, சற்றுநேரம் பொறுத்துத் திறந்துகாட்ட கிச்சிலிப்பழம் மாம்பழமாக மாறியிருக்கும், மறுபடியும் மூடித்திறக்க கிச்சிலிப்பழமாகவே யிருக்கும்; எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

696. அன்ஞசிப்பழம் ஆரஞ்சிப்பழமாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு அன்ஞசிப்பழத்தை யெடுத்துக்காட்டி, இந்த அன்ஞசிப்பழத்தை ஆரஞ்சிப்பழமாகச் செய்கிறேன் பாருங்களென்று ஜெகசாலக்கருவும் ஐங்கோலக்கருவுங்கலந்து விரலில்தொட்டு நீலகண்டரைத் தியானித்துக் கருவைப் பழத்தின்மேல் தடவிக் கூடையைப்போட்டுமூடிப் பிறகு முன்போல் கூடைப்போட்டு மூடித்திறக்க பழையபடி அன்ஞசிப்பழமாகவே யிருக்கும்; சபாஷென்பார்கள்.

697. ஆரஞ்சிப்பழம் அன்ஞசிப்பழமாகும் ஜாலம்.

சபையில் ஒரு ஆரஞ்சிப்பழத்தை யெடுத்து, இதை அன்ஞசிப்பழமாக்குகின்றேன் சந்தோஷப்படுங்களென்று ஜெகசாலக்கருவும் ஐங்கோலக்கருவுங் கலந்து விரலில்தொட்டு, நீலகண்டமந்திரம் 1008-

செபித்துக் கருவைப் பழத்தின்மேல் தடவிக் கூடையால் மூடித்திறக்க ஆரஞ்சிப் பழ அன்ஞசிப்பழமாக மாறும். மறுபடியும் மூடித்திறக்க மாய்விடும்.

698. கோய்யாப்பழம் முந்திரிப்பழமாகும் ஜாலம்.

ஒரு கொய்யாப்பழத்தை யெடுத்து சபையோர்களுக்குக் காட்டி, இந்தக்கொய்யாப்பழத்தை முந்திரிப்பழமாக்குகிறேன். பாருங்களென்று அஷ்டமாசித்து மையும் ஐங்கோலக்கருவுங்கலந்து விரலில் தீண்டி, நீலகண்ட மந்திரம் 1008-செபித்துக் கருவைப் பழத்தின்மேல் தடவிக் கூடைபோட்டு மூடித்திறக்க கொய்யாப்பழமாகிவிடும்; முன்போல் மாற்றியுங் கொள்ளலாம்.

699. முந்திரிப்பழம் கோய்யாப்பழமாகும் ஜாலம்.

முன்போல் சபையில் ஒரு முந்திரிப்பழத்தை யெடுத்து அனைவருக் குங்காட்டி, இது கொய்யாப்பழமாகும் விநோதத்தைப் பாருங்களென்று ஜெகசாலக்கருவும் ஐங்கோலக்கருவுங் கலந்து விரலில் தொட்டுக் கொண்டு, சத்தி மந்திரத்தை 1008-செபித்து, நீலகண்ட மந்திரத்தையும் தியானித்துக் கருவைப் பழத்தின்மேல் தடவிக் கூடையால் மூடித் திறக்க முந்திரிப்பழம் கொய்யாப்பழ மாகிவிடும். மறுபடியும் மூடித் திறக்க பழயபடி முந்திரிப்பழமாகவேயிருக்கும்.

700. அத்திப்பழம் ஆலம்பழமாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் நாலு ஐந்து அத்திப்பழத்தை யெடுத்து அனை வருக்குங்காட்டி, இதை ஆலம்பழமாகச் செய்யும் விநோதங்களைப் பாருங்களென்று ஐங்கோலக்கருவும் அஷ்டமாசித்து மையுங்கலந்து விரலில்தொட்டு, சத்தி மந்திரத்தை 1008-செபித்துக் கருவைப் பழத் தின்மேல் தெளித்து முன்போல் மூடித்திறக்க ஆலம்பழமாகத்தோற்றும்.

701. ஆலம்பழம் அத்திப்பழமாகும் ஜாலம்.

சபையில் ஆலம்பழம் நாலைந்து எடுத்துக்காட்டி, இதை அத்திப் பழமாக்குகிறேன் சந்தோஷப்படுங்களென்று அஷ்டமாசித்து மையும் ஐங்கோலமுங்கலந்து, சத்திமந்திரம் 1008 ஓதிக் கருவைப்பழத்தின் மேல் தடவ அந்த ஆலம்பழம் அத்திப்பழமாய்விடும்.

702. சிகப்புக் குண்டுமணி வெள்ளைக் குண்டுமணியாகும் ஜாலம்.

ஜாலமாடுஞ்சபையில் ஆழாக்கு சிகப்புக் குண்டுமணியை யெடுத்து அனைவருக்குங்காட்டி இதை வெள்ளைக் குண்டுமணி யாக்குகிறேன் வேடிக்கைப்பாருங்களென்று இந்திரசாலக்கருவும் ஐங்கோலமுங்கலந்து விரலில்தொட்டு, சத்திமந்திரம் 1008 ஓதிக் கருவைக் குண்டுமணிமேல் தடவி ஒரு தாம்பாளத்தில்போட்டு மேலேமூடித் திறந்துகாட்ட சிகப்பு மாறி வெள்ளைக் குண்டுமணியாக யிருக்கும்.

703. வெள்ளைக்குண்டுமணி சிகப்புக்குண்டுமணியாகும் ஜாலம்.

முன்போலவே குண்டுமணியையெடுத்து இதை சிகப்புக்குண்டுமணி யாக்குகின்றேன் தமாஷ் பாருங்களென்று கருவைத்தடவிச் சத்திமந்தி ரத்தை 1008-ஓதி நீலகண்டரைத் தியானித்து மூடித்திறக்க வெள்ளைக் குண்டுமணி சிகப்பாயிருக்கும்.

704. ஆடு மாடாகும் ஜாலம்.

ஒரு ஆட்டைக்கொண்டுவந்து சபையோர்களுக்குக் காட்டி, இதை மாடாக்குகிறேன் பாருங்களென்று சடலைக்கருவும் ஐங்கோலக்கருவும் கலந்துகொண்டு மயானருத்திரி மந்திரத்தை 1008-செபித்து ஒருவருக் குந்தெரியாது தந்திரமாக ஆட்டுக்கொம்பு அல்லது வாலிற்குத்தடவி, ஆட்டைச்சுற்றிலும் கருப்புத்துணி மறைவுகட்டி சற்றுப்பொருத்து திற ந்துகாட்ட ஆடுமாடாகத் தோன்றும், பார்ப்பவர்கள் உன்னைப் பிரம னென்பார்கள்.

705. மாடு ஆடாகும் ஜாலம்.

முன்போல் சபையில்நின்று ஒரு மாட்டைக்கொண்டுவந்து நிறுத்தி சபையோர்களைப்பார்த்து, முன்னே ஆடு மாடான விநோதத்தைப்பார்த் தீர்கள்; இப்போது மாடு ஆடாகும் அற்புதத்தைப் பாருங்களென்று வேடி கருவுகளைப்பூசி முன்போல் திரையிட்டுக்காட்ட, மாடு ஆடாகத்தோன் றும்; ஆச்சரியப்படுவார்கள்.

706. நாய் நரியாகும் ஜாலம்.

ஒரு நாயைப்பிடித்துவந்து சபையோர்களுக்குக்காட்டி; இதை நரி யாக்குகிறேன் பாருங்களென்று வேடி 8-கருவையுங்கலந்து விரலில் தொட்டுக் குறளிமந்திரத்தை 1008-செபித்து, பைரவரையும் சம்புமகா ரிஷியையுந் தியானித்து, நாய் நரியாகவேணுமென்று மனதிலெண்ணிக் கருவைத் தந்திரமாக நாயின் நெற்றியில்பூசி மறைப்புகட்டி சற்றுநேரம் பொருத்துத் திரையை வாங்கிப்பார்க்க நாய் நரியாக மாறியிருக்கும்; பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

707. நரி நாயாகும் ஜாலம்

முன்போல் நரியைப்பிடித்துக்காட்டி, இதை நாயாக்குகிறேன் பாருங்களென்று சடலைக்கருவும் ஐங்கோலக்கருவுங் கலந்து விரலில் தொட்டு குறளிமந்திரத்தை 1008 செபித்து முன்போல் மூடிக்காட்ட நரி நாயாகத்தோற்றும்,

708. பூனை முசலாகும் ஜாலம்.

ஒரு பூனையைப்பிடித்துவந்து சபையோர்களுக்குக் காட்டி, இது முசலாகும் புதுமையைப் பாருங்களென்று ஐங்கோலக்கருவுடன் சடலைக் கருவைக் கலந்து விரலில்தொட்டு, மயானருத்திரி மந்திரத்தை செபித் து, கருவைப் பூனைவாலில்பூசி திரைக்குள் சற்றுநேரம் வைத்திருந்து திறந்துகாட்ட முசலாகத்தோற்றும்.

709. முசல் பூனையாகும் ஜாலம்.

ஒரு முசலை சபையோர்களுக்குக்காட்டி முன்போல் கருவைத்தடவி மயானருத்திரி மந்திரம் 1008 செபித்து, கருவை முசலின்மேல் தடவிக் காட்ட முசல் பூனையாகத்தோற்றும்.

710. எலி பெருச்சாளியாகும் ஜாலம்.

ஒரு எலியைப்பிடித்து வந்து அனைவருக்குங்காட்டி, இது பெருச்சாளியாகும் விநோதத்தைப் பாருங்களென்று அஷ்டமாசித்து மையும், ஐங்கோலமுங் கலந்து விரலில்தொட்டு, சக்கலாதேவி மந்திரத்தை 1008 செபித்து, விநாயகரை தியானித்துக் கருவை எலியின்மேல் தடவிக் கூடைபோட்டுமூடி, சற்றுநேரம்பொருத்துத் திறந்துகாட்ட பெருச்சாளி யுருவாகத் தோற்றும்.

711. பெருச்சாளி எலியாகும் ஜாலம்.

ஒரு பெருச்சாளியைக் கொண்டுவந்து முன்போல் சபையோர்களுக்காட்டி, இந்த விநோதத்தைப் பாருங்களென்று சடலைக்கருவையும் ஐங்கோலத்தையுங் கலந்து தொட்டு மயானருத்திரியையும் விநாயகரையுந்தியானித்துக் கருவைப் பெருச்சாளிமீது தடவி மூடித் திறந்து காட்ட எலியாகத்தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள்

712. குதிரை கழுதையாகும் ஜாலம்.

ஒரு அஸ்வத்தைப் பிடித்துவந்து நிறுத்தி அனைவருக்குங்காட்டி, இது கழுதையாகும் விநோதத்தைப் பாருங்களென்று சடலைக்கருவையும் ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் நன்றாய்க்கலந்து விரலில் தொட்டு, வாலைமந்திரத்தை 1000 செபித்து, சத்தியைத்தியானித்துக் குதிரையைப் பார்ப்போர் கண்களுக்குக் கழுதையாகத் தோற்றும்படி செய்வாயென்று மனதில் நினைத்துக் கருவைக் குதிரைமுகத்தில் தெளித்து முகத்தைத் துணியால் மறைத்து சற்றுநேரம் பொருத்துத் துணியை யெடுத்துவிட குதிரை கழுதையாகத்தோற்றும்.

713. கழுதை குதிரையாகும் ஜாலம்.

ஒரு கழுதையைப் பிடித்துவந்து சபையில்நிறுத்தி, இந்தக் கழுதையை ரூபம் மாறுதலடையச் செய்கிறேன் பாருங்களென்று ஜெகசாலக்கருவையு மைங்கோலக்கருவுங் கலந்து விரலில்தொட்டு, குறளி குட்டிச்சாத்தானையும் வணங்கி சத்திமந்திரம் 108 செபித்துக் கருவை முன்போல் தடவித் திறந்துகாட்ட குதிரையாகத் தோற்றும்.

714. கோழி வாத்தாகும் ஜாலம்

ஜாலமாடுமிடத்தில் ஒரு கோழிகொண்டுவந்துஅனைவருக்குங்காட்டி, இது வாத்தாகும் வேடிக்கைப்பாருங்களென்று ஐங்கோலக் கருவைக் கலந்து விரலில் தொட்டு, முருகக்கடவுளையும் பிரமதேவனையும் நினைத்துக் கருவைக் கோழிக்கொண்டையில் தடவிக் கூடையால்மூடித் திறந்துக்காட்டவாத்தாகத்தோன்றும். இது ஊர்வசிமந்திரமோ என்னமோ வென்று மயங்குவார்கள்.

715. வாத்து கோழியாகும் ஜாலம்.

முன்போல் வாத்தெடுத்து அனைவருக்குங்காட்டி, இது கோழியாகும் ஆச்சரியம் பாருங்களென்று ஐங்கோலமும் அஷ்டமாசித்து மையுமொன்றாய்க் கலந்து விரலில் தொட்டு, சத்திமந்திரத்தை 1008 செபித்து, நீலகண்டர் மந்திரம் 108 செபித்து, வாத்து கோழியாக வேண்டுமென்று மனதிலெண்ணிக் கருவை வாத்தின்மேல் தெளித்து முன்போல் மூடித்திறக்க வாத்து கோழியாகத்தோற்றும்; கண்டவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

716. கரடி புலியாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலேனும் இன்னுமெந்த விடத்திலேனும் கரடியைப்போனிலடைத்துக் கொண்டுவந்து நிறுத்தி, இந்தக் கரடி புலியாகும் விநோதத்தைப் பாருமென்று சடலைக்கரு ஜெகஜாலக்கரு இதனைக்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு, சக்கலாதேவி மந்திரத்தை 1008 செபித்து, சத்தியைத் தியானித்து, கரடி புலியாகவேண்டுமென்று மனதிலெண்ணிக் கருவைக் கரடிமேல் தெளித்து, போனைசுற்றிலும் கருப்புத்துணியால் திரைகட்டி சற்றுநேரம் பொருத்துத் திரையை நீங்க கரடி புலியாகத்தோற்றும்; பார்த்தவர்கள் இது வித்தையென்று ஆச்சரியப்படுவார்கள்.

717. புலி கரடியாகும் ஜாலம்.

முன்போல் புலியைப் போனிலடைத்துக் கொண்டுவந்து நிறுத்தி, கரடி புலியான விநோதத்தைப் பார்த்தீர்கள்; இப்போது புலி கரடியாகும் ஆச்சரியத்தைப் பாருங்களென்று முன்போல் கருவைத்தடவி, வாராகிமந்திரத்தை 1008 செபித்துச் சத்தியை தியானித்து, புலி கரடியாகத் தோற்ற வேண்டுமென்று திறந்துகாட்ட புலி கரடியாகத் தோற்று.

718. மான் கடம்பையாகும் ஜாலம்

மானைப்பிடித்துவந்து சபையில் நிறுத்தி; இந்தமான் கடம்பையாகும் விநோதத்தைப் பாருங்களென்று ஜெகஜாலக்கரு, அஷ்டமாசித்திமை, இவைகளை ஒன்றாய்க்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு, சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து, நீலகண்டரைத் தியானித்து மான் கடம்பையாக வேண்டுமென்று நினைத்துக் கருவைத் தந்திரமாக மானின்மேல் தெளித்து, மானைச்சுற்றிலுந் திரைபோட்டு மூடிச் சற்றுநேரம்பொருத்துத் திறந்துகாட்ட மான் கடம்பையாகத் தோற்றும்; அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

719. கடம்பை மானாகும் ஜாலம்.

கடம்பையைக்கொண்டுவந்து முன்போல்செய்து, கடம்பை மானாகும் வேடிக்கையைப் பாருங்களென்று கருவுகளைத்தடவி, சத்தியைத் தியானித்து, சக்கலாதேவி மந்திரத்தை 1008 செபித்து தியானித்துக் கடம்பை மானாக வேண்டுமென்று மனதிலெண்ணிக் கருவைக் கடம்பையின்மேல் தெளித்து முன்போல் திரையை மூடிச் சற்று

நேரம் பொறுத்துத் திரையைத் திறந்துகாட்ட கூடம்பை மாறுகத் தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள்.

720. அணிப்பிள்ளை கீரிப்பிள்ளையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் அணிப்பிள்ளையொன்றையெடுத்து அனைவருக்குங்காட்டி, இந்த அணிப்பிள்ளை கீரிப்பிள்ளையாகும் விநோதத்தைப் பாருங்களென்று ஐங்கோலக் கருவையும் அட்டமாசித்து மையையும் ஒன்றாய்க்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு, சத்தியைத் தியானித்து, மந்திரம் ஆயிரத்தெட்டு உருசெபித்து வாலையைப்பூசித்து, அணிப்பிள்ளை கீரிப்பிள்ளையாகத் தோற்றவேண்டுமென்று மனதிலெண்ணிக் கருவை அணிப்பிள்ளையின்மேல் தடவிப் பூமியின்மேல் வைத்து, கூடையைப் போட்டு மூடி, சற்றுநேரம் பொறுத்துத் திறந்துகாட்ட கீரிப்பிள்ளையாகத் தோற்றும்.

721. கீரிப்பிள்ளை அணிப்பிள்ளையாகும் ஜாலம்.

முன்போல் சபையில்நின்று கீரிப்பிள்ளையைப் பிடித்துவந்து அனைவருக்குங் காட்டி, முன் அணிப்பிள்ளை கீரிப்பிள்ளையான வேடிக்கைப் பார்த்தீர்கள்; கீரிப்பிள்ளை அணிப்பிள்ளையாகும் விநோதத்தைப் பாருங்களென்று சுடலைக்கருவையும் ஐங்கோலக் கருவையும் கலந்து விரலில் தொட்டு, சக்கலாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து, சத்தியைத் தியானித்து, கீரிப்பிள்ளை அணிப்பிள்ளை யாகவேண்டுமென்று மனதில் தியானித்துக் கருவைக் கீரிப்பிள்ளையின்மேல் தடவி முன் போல் தட்டைப்போட்டுமூடி சற்றுநேரம் பொறுத்துத் திறந்துகாட்ட கீரிப்பிள்ளை அணிப்பிள்ளையாகத் தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள்.

722. மயில் வான்கோழியாகும் ஜாலம்.

மயிலைப் பிடித்துவந்து சபையில் நிறுத்தி, இந்த மயில் வான்கோழி யாகும் விநோதத்தைப் பாருங்களென்று ஜெகஜாலக்கருவையும் ஐங் கோலக்கருவையும் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு, சத்தியின் மந் திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து வாலையைத் தியானித்து, வான் கோழியாக வேண்டுமென்று மனதில் எண்ணிக் கருவைத் தந்திரமாக மயிலின்மேல் தெளித்து, சுற்றிலும் திரைகட்டி மூடி, சற்றுநேரம் பொறுத்துத் திறந்துகாட்ட மயில் வான்கோழியாகத் தோற்றும்; பிர மிப்பார்கள்.

723. வான்கோழி மயிலாகும் ஜாலம்.

முன்போல் வான்கோழியைக் கொண்டுவந்து சபையில் நிறுத்தி சனங்களைப்பார்த்து, மயில் வான்கோழியான விநோதத்தைப் பார்த்தீர் கள் இப்போது வான்கோழி மயிலாகும் அற்புதத்தை பாருங்களென்று இந்திரஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில்தொட் டுக்கொண்டு சக்கலாதேவி மந்திரத்தை 1008-உருஜெபித்து, கால பைரவரைத் தியானித்து, வான்கோழி மயிலாகத் தோற்றவேண்டு மென்று மனதில் எண்ணிக் கருவை வான்கோழியின்மேல் தடவி முன் போல் படுதாகட்டிமூடி, சற்றுநேரம் பொறுத்துத் திறந்துகாட்ட வான் கோழி மயிலாகத்தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள்.

724. மைனு கிளியாகும் ஜாலம்.

மைனுவைக் கூண்டில் அடக்கஞ்செய்து சபையில் கொண்டுவந்து அனைவருக்குங் காட்டி. இந்த மைனு கிளியாகும் விநோதத்தைப் பாருங்களென்று ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில்தொட்டு, சத்தியின் மந்திரத்தை 1008-ஜெபித்து, ஜாலக்காளைத் தியானித்து, மைனு கிளியாகத் தோற்றவேண்டுமென்று மனதிலெண் ணிக் கருவை மைனுமேல் தடவிக் கூண்டின்மேல் துணியைப்போட்டு மூடி, சற்றுநேரம் பொறுத்துத் திறந்துக்காட்ட மைனு கிளியாகத் தோற்றும்.

725. கிளி மைனுவாகும் ஜாலம்.

முன்போல் கிளியைக் கூண்டிலடைத்து சனங்களுக்குக் காட்டி சுடலைக் கருவையும் ஐங்கோலக் கருவையும் கலந்து விரலில்தொட்டு, சக்கலாதேவி மந்திரத்தை 1008-ஜெபித்து, சத்தியைத் தியானித்துக் கிளி மைனுவாகவேண்டுமென்று மனதிலெண்ணிக் கருவைக் கிளியின் மேல் தடவி முன்போல் மூடித்திறந்துகாட்ட, கிளி மைனுவாகத் தோற் றும்; சபையோர் ஆச்சரியப்படுவார்கள்.

726. காடை கவுதாரியாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் காடையையொன்று கூண்டிலடைத்து சனங் களுக்குக் காட்டி, இதைக் கவுதாரி யாக்குகிறேன் பாருங்களென்று சொல்லி, ஐங்கோலக் கருவையும் அஷ்டமாசித்துக் கருவையும் கலந்து விரலில்தொட்டு, சாமளாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, ஜாலக்காளைப் பூசித்துக் காடை கவுதாரியாகத் தோற்றவேண்டு மென்று மனதிலெண்ணிக் கருவைக் காடையின்மேல் தடவி, கூண்டின் மேல் துணியைப்போட்டு மூடிச் சற்றுநேரம் பொறுத்து மூடிய துணி யைத் திறந்துகாட்ட கவுதாரியாகத்தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள்.

727. கவுதாரி காடையாகும் ஜாலம்.

முன்போல் கவுதாரியைக் கூண்டிலடைத்து சபையில் கொண்டு வந்து அனைவருக்குங் காட்டி, இதைக் காடையாக்குகிறேனென்று ஜெக ஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில்தொட்டு சத் தியை தியானித்து, காலகண்டர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித் துக் கருவைக் கவுதாரியின்மேல் தடவி முன்போல் மூடித் திறந்து காட்ட, கவுதாரி காடையாகத் தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள்.

728. புறு பஞ்சவர்னக் கிளியாகும் ஜாலம்.

ஒரு புறுவையெடுத்து அனைவர்க்குங்காட்டி, இதைப் பஞ்சவர்ன கிளியாகச் செய்கிறேன் பாருங்களென்று இந்திரஜாலக்கருவையும் ஐங் கோலக்கருவையும் கலந்து விரலில்தொட்டு சத்தியை தியானித்துக் காலகண்டர் மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, புறுவைப் பஞ்ச வர்ன கிளியாகத் தோற்றும்படிச் செய்வாயென்று கருவைப் புறுவின் மேல்தடவி முன்போல் மூடித்திறக்க புறு பஞ்சவர்னக்கிளியாகத் தோற் றும்; எல்லாரும் மகா புதுமை என்பார்கள்.

729. பஞ்சவர்ணக்கிளி புறுவாகும் ஜாலம்.

முன்போல் சபையில்நின்று பஞ்சவர்ணக்கிளியைப்பிடித்துக்காட்டி, இதைப் புறுவாகச்செய்கிறேன் பாருங்களென்று அஷ்டமாசித்து மையும் ஐங்கோலக் கருவையும் கலந்து விரலில்தொட்டு, சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு நரம் ஜெபித்துக் கருவைக் கிளியின்மேல் தடவி, தட்டைக் கவிழ்த்துத்திறக்க புறுவாகத்தோற்றும்; சந்தோஷப்படுவார்கள்.

730. நல்லபாம்பு சாரப்பாம்பாகும் ஜாலம்

ஜாலமாடு மிடத்தில் பழகிவைத்திருக்கும் நல்லபாம்பைக் கையி லெடுத்து சபையோர்க்குக் காட்டி, இந்த நல்லபாம்பு சாரப்பாம்பாகும் வினோதத்தைப் பாருங்களென்று இந்திரஜாலக் கருவையும் ஜெகஜாலக் கருவையும் ஐங்கோலக் கருவையும் கலந்து விரலில்தொட்டு, சத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு நரம் ஜெபித்து நல்ல பாம்பு சாரப்பாம் பாகத் தோற்றவேணுமென்று மனதிலெண்ணிக் கருவை நல்லபாம்பின் மேல் தடவிப் பாம்பைப் பெட்டியில்போட்டு சற்றுநேரம் பொருத்துத் திறந்துக்காட்ட சாரப்பாம்பாகத் தோற்றும்; அனைவரும் மாயாஜால மென்பார்கள்.

731. சாரப்பாம்பு நல்லபாம்பாகும் ஜாலம்.

முன்போல் ஒரு சாரப்பாம்பை யெடுத்து அனைவருக்குங் காட்டி நல்லபாம்பு சாரப்பாம்பான வேடிக்கையைப் பார்த்தீர்கள். இப்போது சாரப்பாம்பு நல்லபாம்பாகும் வினோதங்களை பாருங்களென்று இந்திர சாலக்கருவை விரலில் தொட்டுக் கொண்டு சாமுண்டியின் மந்திரம் 1008-செபித்து, சக்கலாதேவியைத் தியானித்து, சாரப்பாம்பு நல்லபாம் பாக வேணுமென்று தியானித்துக் கருவைச் சாரப்பாம்பின்மேல் தடவி முன்போல் சற்றுநேரம் பொருத்து திறந்துகாட்ட சாரப்பாம்பு நல்லபாம்பாய்த் தோற்றும்; பார்ப்போர் பிரமிப்பார்கள்.

மேற்சொல்லிய சாலங்கள் ஒவ்வொன்றையுங் காட்டி அனைவரும் பார்த்து மகிழ்ச்சியடைந்தவுடன் அப்போதுக்கப்போது மறைத்துவிட வேண்டும். ஏனென்றால் மூன்றேமுக்கால் நாழிகைவரைக்கும் தோற் றும்; அதற்குள் தந்திரமாக வித்தைகளைக்காட்டி ஆடவேண்டும்.

732. பந்தாடும் ஜாலம்.

சாலமாடுமிடத்தில் வந்துநின்று ஒரு பந்தையெடுத்து சபையோருக் குக்காட்டி இந்தப்பந்தை ஆகாயமார்க்கமாக எறிகிறேன். ஒரு பந்து அனேக பந்துகளாக விளையாடும் வினோதங்களைப் பாருங்களென்று ஜெகஜாலக்கருவும் சடலைக்கருவும் ஐங்கோலக்கருவும் ஒன்றாய்க்கலந்து விரலில்தொட்டு சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு உருசெபித்து இந்தப் பந்து பார்ப்போர்கண்களுக்கு ஆகாயவீதியில் அநேகம் பந்துகளாகத் தோற்றமாகி ஆடவேண்டுமென்று மனதில்எண்ணி, பந்தை அனைவருக்கு முன்பாக ஆகாயமார்க்கமாக விட்டெறிய ஒருபந்து அநேக பந்துகளாக கீழுமேலும் இருகிறென்று விளையாடும். அனைவரும் மகா அற்புதமான வித்தையென்று ஆச்சரியப்படுவார்கள். அப்போது நீ மகாமாயமையைக்

கையில் தடவிக்கொண்டு பந்தைக் கையில் பிடித்துக்கொள்ள ஒரு பந் தாகத் தோற்றும்.

733. எலுமிச்சம்பழ ஜாலம்.

முன்போல் சாலமாடும் சபையில் எலுமிச்சம்பழத்தை யெடுத்து அனைவருக்குங்காட்டி பந்து எவ்விதம் விளையாடினதோ அவ்விதமாக இந்த எலுமிச்சம்பழம் விளையாடும் வினோதங்களைப்பாருகளென்று முன் போல் கருவை விரலில்தொட்டு, சக்கலாதேவி மந்திரத்தை ஆயிரத் தெட்டு செபித்து ஜாலக்காளைத் தியானித்து, பந்தைப்போல் எலுமிச்சம் பழம் விளையாடவேண்டுமென்று மனதில் எண்ணிப் பழத்தின்மேல் கரு வைபூசி விட்டெறிய அனேமாக ஆடும். நீ முன்போல் மையைப்பூசி பழத் தைப்பிடிக்க ஒரு பழமாகத்தோற்றும். அனைவரும் அற்புதமானவித்தை யென்று ஆச்சரியப்படுவார்கள்.

734. கூடை ஜாலம்.

சாலமாடுமிடத்தில்ஒருகூடையெடுத்து அனைவர்க்குங்காட்டி இந்தக் கூடையை உங்கள் அனைவர்க்கு முன்பாகவைத்துத் துணியைப்போட்டு மூடி திறக்கிறேன்; அந்தக்கூடைநிறைய பலவிதமான புஷ்பங்களும் நிறைந்திருக்கும் வினோதங்களைப் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை விரலில்தொட்டு மந்திரம் 1008-செபித்து குட்டிச்சாத்தானைத் தியா னித்துச் சற்றுநேரம் பொருத்து கூடைமேல் மூடிய துணியைத் திறந்து காட்ட பார்ப்போர்கண்களுக்கு கூடைநிறைய பலவிதமான புஷ்பங்களும் தோற்றப்படும்; அப்போது யாவரும் சந்தோஷப்படுவார்கள்.

735. கேச்சைக்காய் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் பத்துகெச்சைக்காயையெடுத்து அனைவருக்குங் காட்டி இந்தப் பத்துககாயையும் காதின்வழியாக உள்ளுக்குச்செலுத்தி வாயின் வழியாக வரும்படி செய்கிறேன் பாருங்களென்று கண்கட்டு மையைத் திலர்தமிட்டுக்கொண்டு மறைவுமையைக் காயின்மேல் தடவி ஜாலக்காளைத் தியானிக்க ஒவ்வொரு காயாக வலதுகாதின் வழியாக செலுத்துவதுபோல் தெரியும். உடனே ஒவ்வொரு காயாக எடுத்து மையைத்துடைத்து வாயில் கையை வைத்துமூடி சல் வாவாவென்று சொல்லி காயைக்கீழேபோட பார்ப்பவர்களுக்கு வாயிலிருந்து வருவது போல் தெரியும், ஆச்சரியப்படுவார்கள். ஆனால் ஒவ்வொரு காயையும் மேற்கூறியதுபோல் செய்யவேண்டும்.

736, இரசகுண்டு ஜாலம்.

ஜாலமாடும்சபையில் ஒருரசகுண்டை எடுத்து அனைவர்க்குங்காட்டி இந்த ரசகுண்டை காதின்வழியாகச் செலுத்தி வாயின்வழியாய் வரும் படிச்செய்கிறேன் பாருங்களென்று முன்போல் மை முதலானதும் பூசி செய்துகாட்ட சந்தோஷப்படுவார்கள்.

737. இரும்புகுண்டு ஜாலம்.

இரும்புகுண்டு ஒன்றெடுத்து அனைவர்க்குங்காட்டி இந்தக் குண்டை காதுவழியாக வரும்படி செய்கிறேன் பாருங்களென்று மேற்கூறியபடி

மைமுதலானதும் தடவி சத்தியை தியானித்து செய்துகாட்ட பிரமிப்பார்கள்.

738. பலகரை ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் பத்துப் பதினைந்து பலகரையைக் கையில் எடுத்து அனைவர்க்குங்காட்டி இந்தப் பலகரையானையும் காதுவழியாக செலுத்தி வாயின் வழியாக வரும்படி செய்யும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் கருவும் மையும் பலகரைகளுக்குத் தடவி, மேற்கூறியபடியே செய்துகாட்ட மதிமயங்கி நிற்பார்கள்.

739. குண்டுமணி ஜாலம்.

மேற்கூறியவண்ணம் குண்மணியையெடுத்து சபையோர்களுக்குக் காட்டி இதைக் காதுவழியாக வரும்படி செய்கிறேன் பாருங்களென்று முன்போல் கருவுமை முதலானதும் குண்டுமணியின்மேல் பூசி மேற்சொன்னபடி செய்துகாட்ட இது மகா விநோதமென்று மகிழ்வார்கள்.

740. கூழாங்கல் ஜாலம்.

முன்போல் சபையில் நின்று கூழாங்கல் ஒன்றெடுத்து அனைவருக்கும் காட்டி இக்கல்லை முன்போல் காதுவழியாக வரும்படிச் செய்கிறேன் பாருங்களென்று மேற்கூறியபடி கருவு மைமுதலானதும் தடவி தவறாமல் செய்துகாட்ட சந்தோஷப்படுவார்கள்.

741. நீர்க்குட ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஓர்குடம் நீரைக்கொண்டு வந்துவைத்து அனைவரையும் பார்த்து இவ்வளவு நீரையும் காதுவழியாகச் செலுத்தி வாய்வழியாகவரும்படி செய்கிறேன் பாருங்களென்று முன்போல் குடத்தின்மேல் மைதடவி காதைக் குடத்தின் வாயில்வைத்து சற்றுநேரம் பொருத்து யாவரையும் குடத்தைவந்து பார்க்கச்சொல்ல நீரில்லாமலிருக்கும். மறைவுமையைத் துடைத்துவிட்டு வாயை சற்றுநேரம் வைத்திருந்து வாயைக் குடத்தைவிட்டு எடுத்துக்காட்ட நீர் வாய்வழியாக வந்தாற்போலும் தோற்றமாகி குடம்நிறைய நீர் இருக்கும். அதைப்பார்த்த யாவரும் பிரமித்து இது குட்டிச்சாத்தான் ஏவல் என்பார்கள்.

742. தீபவிநோத வித்தை.

இரவில் ஒரு மைதானத்திற்சென்று ஒரு பெரிய அகண்டமொன்றெடுத்து அதுநிறைய முத்தெண்ணெயை ஊற்றி அகண்டம் சுற்றிலும் பத்துப்பதினைந்து வத்திகள் கொளுத்திப் பூமியில்வைத்து பிறகு தன்னுடன் வந்தவர்களைப்பார்த்து இந்த அகண்டவிளக்கை ஆகாயமார்க்கமாக கிளம்பும்படி செய்கிறேன் பாருங்களென்று ஒருவருக்குந் தெரியாமல் ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் அஷ்டமாசித்து மையும் ஒன்றாய்க்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு சக்கலாதேவி அட்சரத்தைப் பலமுறைசொல்லி கருவு ஒருவருமறியாமல் அகண்டத்தின் கீழே தடவிக் கையிலெடுத்து சாமுண்டியை நினைத்துக்கொண்டிருக்க அகண்டதீபமானது ஆகாயமார்க்கமாகக் கிளம்பி கிருகிருவென்று சுழன்று

விநோதமாகத் தோற்றும். அனைவரும் பிரமித்து சந்தோஷப்படுவார்கள். ஆனால் சாமுண்டியை ஸ்மரிப்பதை நிறுத்திவிட அகண்டம் கீழிறங்கிவரும்; சாக்கிரதையாய்ப் பிடித்துக்கொள்ளவும்.

743. தடாகத்துள்ளே சேபஞ்செய்யும் வித்தை.

தண்ணீர் நிறைந்துள்ள தடாகக்கரையிற்சென்று தன்னுடன் வந்தவர்களைப்பார்த்து, இந்தத் தடாகத்தில் மூழ்கி இரண்டுமணிநேரம் வரையிலும் உள்ளேயிருந்து ஜெபங்களை முடித்துக்கொண்டு வெளியே வருகிறேன் பாருங்களென்று கண்கட்டு மையைப் பொட்டிட்டுக்கொண்டு, நீலகண்டர் மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே தடாகஜலத்தில் கழுத்தளவாக இறங்கி நிற்க பார்ப்போர்களுக்கு குளத்தில் மூழ்கிவிட்டாற்போல் தோற்றும். மேற்சொன்ன மணிவரையிலுமிருந்து குளத்தில் மூழ்கி மையைக் கலைத்துவிட்டுவர அனைவரும் ஜலபந்தனஞ் செய்தானென்று பேசிக்கொள்வார்கள்.

744. வேறு சர்வ வசிய ஜாலம்.

வெள்ளி-ஞாயறு-திங்கள்-வியாழம் இந்த வாரங்களில் பசுநெய்யிலும் செவ்வாய் புதன்-சனி இந்த வாரங்களில் பசும்பாலிலும் புல்லுருவி மூலத்தைக்குழைத்துத் திலர்தமிட்டுக்கொண்டுவர தேவர்முதல் மானிடர் யாவரும் வசியமாவார்.

745. வேறு இராஜ வசிய ஜாலம்.

தேன்கொடுக்கு நிலப்பனைவேர் அருகு வெள்ளெருக்கு காஞ்சொறி குப்பைமேனி இலவம்பிசின் ஆவாரை முசட்டை பொன்னாங்கண்ணி பொற்றலையான் சிவனார்வேம்பு இவைகளை அரைத்துத் திலர்தமிட்டுக்கொண்டுபோக இராஜாக்கள் வசியமாவார்கள்.

746. வேறு புருஷ வசிய ஜாலம்.

செந்நாயுருவி செம்முள்ளி செஞ்சா செங்குவளை பொன்னாங்கண்ணி மயக்கி வழிமறித்தான் புனுகு மஞ்சள் இவைகளையெல்லாம் சேர்த்தரைத்து திலர்தமிட்டுக் கொள்ள புருஷர் வசியமாவார்கள்.

747. வேறு ஸ்திரீ வசிய ஜாலம்.

அரிதாரம் மயில்துத்தம் செஞ்சாந்து சவ்வாது கர்ப்பூரம் அரமானசீலை மதிமயக்கி இவைகள் யாவையும் அரைத்து திலர்தமிட்டுக்கொள்ள ஸ்திரீகள் வசியமாவார்கள். ஒவ்வோர் மருந்தையும் தனித்தனியாகவுமிட்டுக்கொள்ளலாம்.

748. வேறு மிருக வசிய ஜாலம்.

விஷ்ணு கிரந்திவேர் விஷ்ணுசொல்லிவேர் காசிகட்டிவேர் காஞ்சொறிவேர் நாயுருவிவேர் மின்னிவேர் சங்கம்விதை அழிஞ்சிவிதை இவைகளைக்கொணர்ந்தரைத்து அதில் தயிலமிறக்கி திலர்தமிட்டுக்கொள்ள சர்வ மிருகங்களும் வசியமாகும்.

749. வேறு சர்ப்பவசிய ஜாலம்.

பொற்றலைக் கையாந்தகரைவேர் சிலம்புரண்டிவேர் நீலிவேர் சிறுக்கிரைவேர் பொன்னுங்கண்ணி நாயுருவிவேர் தொட்டால் சிணுங்கிவேர் ஆடையொட்டி இம்மருந்துகள் யாவையுங்கொண்டு வந்து தயிலமிறக்கி திலர்தமிட்டுக்கொள்ள சர்வ சர்ப்பங்களுக்கும் வசியமாகும்.

750. வேறு சத்துருவசிய ஜாலம்.

பொற்றலைக் கையாந்தகரைவேர் வெள்ளெருக்கன்வேர் விஷ்ணு காந்திவேர் இவைகள் மூன்றையும் ஒன்றாய்ச்சேர்த்து ஆவின் நெய்விட்டு மைபோலரைத்து வழித்து வைத்துக்கொண்டு திலர்தமிட்டுக் கொண்டு போக சத்துருக்கள் வந்து வணங்குவார்கள்.

751. வேறு லோகவசிய ஜாலம்.

நின்றால் சிணுங்கி செவ்வகத்தி நீரில்கழுநும் வண்டும் ஆவாரை வேர் கொழுந்தொட்டி குதம்பை இம்மருந்துகளை சமனிடையாய் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு பன்னீர்விட்டு மைபோலரைத்து திலர்தமிட்டுக் கொள்ள உலோகவசியமாகும், ஒன்றுக்கொன்று உதவி செய்துவைக்கும்.

752. வசியம் 8-க்கும் தியான மூலமந்திரம்.

வசியம் எட்டிற்கும் தியானம் செய்யும் மார்க்கம் எவ்விதமெனில் ஓம் ஆம் ஜெய ஜெய சீக்கிரம் வாவா அவ்வும் உவ்வும் வசிய வசிய கண பதிசித்திக்க சுவாகாவென்று 108 உரு தியானித்து திலர்தமிட அஷ்ட வசியமும் சித்தியாகும்.

753. சர்வமோகன ஜாலம்.

அல்லி அதிமதுரம் கோஷ்டம் புல்லுருவி வெண் குன்றிவிதை இவைகளை ஓரிடையாக நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டு மைபோல் அரைத்து திலர்தமிட்டுக்கொள்ள சர்வமும் மோகன மாகும்.

754. இராஜமோகன ஜாலம்.

ஆவின்நெய் தேன் புல்லுருவிவேர் குங்குமப்பூ ஆலவிருட்சத்தின் பால் இவைகளை ஒருயிடையாக எடுத்து கல்வத்தில் மைபோலரைத்து திலர்த மிட்டுக்கொள்ள இராஜமோகன மாகும்.

755. புருஷமோகன ஜாலம்.

செவ்வாமணக்கு செவ்வகத்தி சென்றுபூரிவி செம்முள்ளி கஸ்தூரி ஸ்திரீகள் மீட்டுக்குத் தூரமான சீலை இவைகள் வகைக்கு விராகனிடை யாக நிருத்தெடுத்து மைபோல் அரைத்துத் திலர்தமிட புருஷமோகன மாகும்.

756. ஸ்திரீமோகன ஜாலம்.

குங்குமம் மரலிவேர் நீர்க்கொல்லி மோகச்சாலை நீலிவேர் மண்டூகம் கோடகச்சாலை செங்குன்றி இவைகளை எல்லாம் ஓரிடையாக நிறுத்

தெடுத்து கல்வத்திலிட்டு பசும்நெய் விட்டரைத்து மைபோலானபின்பு வழித்துவைத்து திலர்த மிட்டுக்கொண்டு வெளியேவர ஸ்ரீமோகன மாகும்.

757. மிருகமோகன ஜாலம்.

வெள்ளைக் குண்டுமணி முத்தக்காசு கெச்சக்காய் நரியின் தலை மண்டை ஓடு இவைகளை ஓரிடையாக நிருத்தெடுத்து கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டு மைபோல் அரைத்து வைத்துக்கொள்ளவும்; திலர்த மிட்டுக்கொண்டு வெளியேவர மிருகங்கள் யாவும் மோகனமாகும்.

758. சொர்னமோக்ன ஜாலம்.

மருதன்வேர் வெண் ஊமத்தன் வேர் நன்னாறிவேர் மருளூமத்தன் வேர் இவைகளைச் சரியிடையாகயெடுத்து கல்வத்திலிட்டு வெள்ளுமத் தன் சார்விட்டு மைபோல் அரைத்து உருட்டி வைத்துக்கொள்ள சொர்ன மோகனமாகும்.

759. சத்துருமோகன ஜாலம்.

செசன்றுபூரிவி வேர் வெள்ளைக் குண்டுமணி பொன்னுங்கண்ணி செங்கழுநீர் சிறுபுன்னை இந்த ஐந்து தினுசையும் ஓரிடையாக நிறுத் தெடுத்து அரைத்துக் கொண்டு திலர்தமிட்டுக்கொள்ள சத்துருக்கள் யாவரும் மோகனமாவார்கள்.

760. உலோகமோகன ஜாலம்.

முல்லைவேர் வெண்கொழிஞ்சி காயம் நொச்சி கையான் தகரை விரலிவேர் சோம்பு நன்னாரி இவைகளை ஓரிடையாக நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு மைபோலரைத்து வழித்து வைத்துக்கொண்டு திலர்த மிட்டுக்கொள்ள லோக மோகனமாகும்; உலகத்தாரெல்லாம் வணங்கி வசியமாவார்கள்.

761. மோகன மேட்டுக்கும் மூலமந்திரம்.

மோகனமெட்டுக்கும் மூலமந்திரம் ஜெபிக்கும் விதம் எவ்வித மெனில் ஹரா ஹரா ஹரி ஹரி மோகாய பரமமோகினி இருசிப் பிரி மாய் உங் ல ல ல என்று 108-செபித்து திலர்தமிட மோகனம் எட்டும் சித்தியாகும்; ஒவ்வொன்றுக்கும் மேற்கூறிய மந்திரத்தை செபிக்கவும்.

762. வேறுமுறை தம்பன ஜாலம்.

கருப்புக்குண்டுமணி சதுரக்கள்ளி ஆவிளா கருத்தகெஞ்சா புரங் கொல்லி நாவடங்கி வழிமரித்தான் ஆடையொட்டி இவைகளை ஓரிடை யாய் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு ஆவின் நெய்விட்டு மைபோல் அரைத்து வழித்து வைத்துக்கொண்டு திலர்தமிட்டுக்கொள்ள தம்பன மாவார்கள்.

763. சுக்கில தம்பன ஜாலம்.

விஷ்ணுகிரந்திவேர் விளாம்பிசினி சிகப்புகெஞ்சா மருளூமத்தன் விதை இவைகளை ஓரிடையாக எடுத்துக் கல்வத்திலிட்டு மத்தனகஞ்சா

வும் அவ்விடையே சேர்த்து மைபோலரைத்து திலர்தமிட்டுக்கொள்ள சக்திலதம்பனமாகும்.

764. ஆயுத தம்பன ஜாலம்.

சூரிவேர், ஸ்ரீகள் ஆரமானசீலே, பொன்முசட்டைவேர், ஆவிரை, பச்சைவாழைமரத்தின்வேர், பேயன்தண்டு, பச்சைப்பாம்பு, ருத்திரன் மூலி என்றுவழங்கும் இரண்டும் இவைகளை யெல்லாம் ஓரிடையாக நிறுத்தெடுத்து மைபோலரைத்து திலர்தமிட்டுக்கொள்ள உலகவாயுதங்கள் யாவும் தம்பனஞ்செய்யலாகும்.

765. மிருக தம்பன ஜாலம்.

பச்சையோனான் வால் அழிஞ்சிவிதை, இருள்வலிமூலி, நரிஞரி, பேய்பீர்க்கன் வேர் இவைகளையெல்லாம் ஓரிடையாக நிறுத்தெடுத்து பசுநெய்யுந்தேனும் விட்டரைத்து மைபோலானபின்பு வழித்து வைத்துக்கொண்டு திலர்தமிட மிருகங்கள் யாவும் தம்பனமாகும்.

766. ஜல தம்பன ஜாலம்.

கல்லுருவிவேர், வன்னிக்கட்டுக்கொடி, நின்றூல் சிணுங்கி, நிலம்புரண்டி, சுடலையெலும்பு, மூடக்கத்தான் இவைகளையெல்லாம் ஒரு இடையாக நிறுத்தெடுத்து மைபோலரைத்து வழித்து வைத்துக் கொண்டு திலர்தமிட ஜலஸ்தம்பனமாகும்.

767. அக்கினி தம்பன ஜாலம்.

சங்கன்வேர், குமரிவேர், தாமரைக்கிழங்கு, குப்பைமேனிவேர், வெள்ளைக்காளாம்வேர், சுண்டைவேர், செவ்வகத்திவேர், செருப்படி, வட்டத்துத்தி, ஓரிலைத்தாமரை, வேலிப்பருத்தி, சதுரக்கள்ளி. மாதர் மாதவிடாயான சீலே, இவைகளை ஓரிடையாக நிறுத்தெடுத்து நெய் தேன்விட்டு மைபோலரைத்து வழித்துவைத்துக்கொண்டு திலர்தமிட அக்கினி தம்பனமாகும்.

768. தேவ தம்பன ஜாலம்.

கொத்தான்வேர், வொழிஞ்சிவேர், நிலவாகைவேர், ஆவின்வேர் இவைகளை ஓரிடையாக நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு மைபோலரைத்து வழித்தெடுத்து வைத்துக்கொண்டு திலர்தமிட தேவ தம்பனமாகும்.

769. சர்ப்ப தம்பன ஜாலம்.

சிறியாநங்கை, ஆவிலா, முகமிணுக்கி இரண்டும், நாகவல்லி, ஆத்திவேர், செவ்வாமணக்கு, செவரொட்டி, கருங்குண்டுமணி இவைகளை ஓரிடையாக நிறுத்தெடுத்து மைபோலரைத்து வைத்துக்கொண்டு திலர்தமிட சர்ப்பஸ்தம்பனமாகும்.

770. தம்பன மெட்டிற்கும் மூலமந்திரம்.

தம்பனமெட்டுக்கும் மூலமந்திரம் செபிக்கும் விதம் எவ்விதமெனில் ரிங் வங் சிங் லங் மங் என்றும் மறுபடியும் மங் லங் வங் லங் யங் என்றும்

லங் தம் பயா தம்பயா அரே அரே நிர்சிய நீலகண்டரூபி ரசம்ரூபி ஆதியானந்தி தம்பனபாராயணி ஐயுங் கிலியும் சுவாகா என்று லட்சம் உரு செபிக்க சித்தியாகும்.

771. சர்வவுச்சாடன ஜாலம்.

நடையத்தான், பாம்புகண்ணி, சாத்திரபேதி, கோட்டம், சதுரக் கள்ளி, இருவாரை ஒட்டிவைத்தான், புழுதியிலிருக்கும் நவ்வி, நாய்மயிர், கழுதைப்புட்டை, இவைகளைச்சேர்த்து அரைத்து மைபோலானபின்பு வழித்தெடுத்து வைத்துக்கொண்டு திலர்தமிட சர்வமும் உச்சாடனமாகும்.

772. மிருகவுச்சாடன ஜாலம்.

நரிமிரட்டிவேர், இருவ்வாமிரட்டிவேர், கழுதையின்புட்டை, புலைச்சியை சுட்ட சாம்பல், பொன்னுங்கண்ணி, செங்கழுநீர் இவைகளை ஓரிடையாக நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு மைபோலரைத்து வழித்து திலர்தமிட்டுக்கொள்ள சர்வமிருகங்களும் உச்சாடனமாகி ஓடும்.

773. சத்துரு உச்சாடன ஜாலம்.

செவியின்வேர், கள்ளியின்வேர், மதிமயக்கிவேர், யாழுத்தான், காக்கையின் கூண்டு, வேம்பின்வேர், சுடலைக்கருவு, ஆரமான ஸ்திரீயின் சீலே, இவைகளை ஓரிடையாககூட்டி மைபோலரைத்து உபயோகப்படுத்த சத்துரு உச்சாடனமாகி ஓட்டிவிடும்.

774. தேவ உச்சாடன ஜாலம்.

குமரன்புட்டை, கழுதையின்மலம், ஸ்திரீஆரமானசீலே, துரிசு, இவைகளைச்சேர்த்து சாம்பலாக்கி விபூதியில் கலந்து நெற்றியில் இட்டுக்கொள்ள தேவவுச்சாடனமாகி பதியைக்குலைத்து ஓட்டிவைக்கும்; பூதங்கள் தேவதைகள் உச்சாடனமாகும்.

775. விஷ உச்சாடன ஜாலம்.

நீலிவேர், அனலிவேர், மாவிலிங்கம்வேர், ஒன்பது விரலுள்ள பாம்புகளின் ஊனும், சேர்வாளம் இவைகளைக்கூட்டி மைபோல் அரைத்து வழித்தெடுத்து சிமிளில் வைத்து பூசைசெய்யும் மந்திரமாவது லங் மங் என்று 108 செபித்து மையையுபயோகப்படுத்த விஷ உச்சாடனமாகும்.

776. ஸ்திரீ உச்சாடன ஜாலம்.

குப்பைமேனிவேர், கௌதும்பைவேர், மந்தியின் முதுகெலும்பு, தாயைக்கொன்றான், தேள்கொடுக்குச் செடியின்வேர், மாதர்கள் வீட்டுத் தூரமானசீலே, மதிமயக்கி இவைகளை ஓரிடையாக நிறுத்தெடுத்து கல்வத்திலரைத்து திலர்தமிட ஓட்டிய மாதர்களைக் கலைக்கும் உச்சாடனமாகும்.

777. சர்வவியாதி உச்சாடன ஜாலம்.

காய்காந்தை, திரிகடுகு, சித்திரமூலம், மதிமூலி, மிளகு, குளவித்தம், மிளகாய் இவைகளெட்டு வியாதிகளை உச்சாடனம்செய்யும். கருவை உபயோகப்படுத்தவும்.

778. உச்சாடனமெட்டிற்கும் மூலமந்திரம்.

உச்சாடன மெட்டிற்கும் மூலமந்திரம் செபிக்கும்வித மெவ்வித மெனில் ஆம் ஓம் குரோங் குச்சாடு அரங் அரங் ரா ரா சிக்கிரம் உச்சாடாயா ஆதிவயிரவி முருங் அாளி நாளி அாக்கு அாக்கு அருணி அருணி ஆங்காராடப் அகோரரூபி சுவாகா என்று ஆயிரத்தெட்டு உருசெபித்துவர உச்சாடனமெட்டும் சித்தியாகும்.

779. பில்லி வஞ்சனை சூனியங்கள் முதலானதிற்கும் மந்திரம்.

கொன்றை, செங்கழுனீர், கோஷ்டம், வெண்குண்டுமணி, மாடப் புறாவின் எச்சம், விந்தும், பொன்னாங்கண்ணி இவைகளை எலுமிச்சம் பழச் சார்விட்டு மைபோலரைத்து வைத்துக்கொண்டு ஓம் பரிகினே சர்பனே தேருதேரு கிங்ரங் சித்திரரூபி சிஷ்டபரிபாலினி வங்ரங் வாங்கு ராங்கு உருளு உருளு கோரோதகனி திந்திரதகனி ரரிட்டா ஓடுவோடி உங் உங் எங் எங்கும் ஐயும் சுவாகா என்று ஆயிரத்தெட்டு உருசெபிக்க சித்தியாகும்.

780. சர்வபூத ஆக்ருஷ்ண ஜாலம்.

பாதரிவேர், முல்லைவேர், காக்காணம்வேர், கோழிப்பிச்சு, காக்காணங்குருவி, சிகப்பு செப்பைவைத்து உப்பு, சுண்டைவேர், கிலாரகம், இவைகளை ஒன்றாய்ச் சேர்த்தரைத்து மைபோலானபின்பு உபயோகப் படுத்த சர்வ ஆக்ருஷ்ணமும் சித்தியாம்.

781. இராஜ ஆக்ருஷ்ண ஜாலம்.

தலைச்சுருள், நீர்முள்ளி, சந்திச்சாரணைவேர், ஆந்தைக்கண், கல் அருவி, செம்பூலா இவைகளை சரிடையாகசேர்த்து அரைத்து மை செய்து வைத்துக்கொண்டு உபயோகப்படுத்த ராஜராஜாக்களும் ஆக் ருஷ்ணமாவார்கள்.

782. புருஷ ஆக்ருஷ்ண ஜாலம்.

சிறுபுன்னை, விஷ்ணுகாந்தி, சிறுவேர், கொத்தான், குருந்தொட்டி, வசம்பு, குளவிந்தம், காக்கைநீர், பல்அருவி இவைகளையெல்லாம் ஒன் றாகச்சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த புருஷ ஆக்ருஷ்ணமாகும்.

783. ஸ்திரீ ஆக்ருஷ்ண ஜாலம்.

அடையொத்தி, புன்னை, கொன்றை, உப்பு, அரணியினுடையவால், புறாவின் எச்சம், நாகப்பாம்பின் சட்டை இவைகளை ஒன்றாய்க்கூட்டி மைசெய்து உபயோகிக்க மிருக ஜாதிகளெல்லாம் ஸ்திரீ ஆக்ருஷ்ண மாகும்.

784. மிருக ஆக்ருஷ்ண ஜாலம்.

நன்னாரிவேர், தடரி, குப்பமேனி, சிறுகீரைவேர், கொன்றை, பொன்னுவரை, அண்டம், கஸ்தூரி, மஞ்சள், புறாவினெச்சம், இவை களையரைத்து மைசெய்து உபயோகப்படுத்த மிருகஜாதிகளெல்லாந் தொடரும் ஆக்ருஷ்ணமாகும்.

785. தெய்வ ஆக்ருஷ்ண ஜாலம்.

குப்பைமேனிவேர், சிறுபுன்னைவேர், முலைப்பால், கொன்றை, சிவ னார்வேம்பு, நாயுருவிவேர், மருளுமத்தன் இவைகளைச் சேர்த்து மை செய்து உபயோகப்படுத்த தெய்வ ஆக்ருஷ்ணமாகும்.

786. லோக ஆக்ருஷ்ண ஜாலம்.

தொட்டால்வாடி, வெள்ளெருக்கு, கலப்பைக்கிழங்கு, பால் குரண்டி, சிறுதன்னை, ஐங்கோலக்கருவும், புறாவினெச்சம் இவைகளைச் சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த உலோக ஆக்ருஷ்ணமாகும்.

787. ஆக்ருஷ்ண மெட்டுக்கும் மூலமந்திரம்.

ஆக்ருஷ்ண மெட்டுக்கும் மூலமந்திரம் ஜெபிக்கும்விதம் எவ்வித மெனில் மாகாளி வைரவி முக்கண்ணி ஆக்ருஷ்ணதாளி ஆனந்தவல்லி நீலிநீலி பகவதி ஜெயஜெய மாட்டடா வெசயா வெசயா ஆக்ருஷ்ண யாரங் ருங் கிலுங் லிங் கிமடி கிருடி யீம்யீம் லா லா லங் லங் நங் நங் பரா பரா ரா ரா சுசி சுசி சுவாகா என்று ஆயிரத்தெட்டு செபிக்க ஆக்ருஷ் ணம் மெட்டும் சித்தியாகும்.

788. சர்வபேதன ஜாலம்.

கோட்டான் முட்டை, குழிபண்ணிகூடும் இருவர்களுடைய மடி குருவி செம்பருத்தி வெள்ளைக்கொழுஞ்சி செவ்வலரி தட்டான்கன்னி நெடு ஆலன் தலையிலாடி இவைகளைச்சேர்த்து மைசெய்து உபயோகப் படுத்த சர்வமும் பேதனமாகும்.

789. இராஜ பேதன ஜாலம்.

கோழியவரை, காக்கைகூடு, தேள்முதுகின் முள்ளெலும்பு, சீந்தில், தும்பை, வலியன் முட்டை, காஞ்சரை, பச்சோந்தி இவைகளை மைசெய்து உபயோகப்படுத்த இராஜராஜாக்களும் பேதனமாவார்கள்.

790. புருஷபேதன ஜாலம்.

கோதும்பைச்செடியை இரவில் கண்டு பிடுங்கிவந்து பச்சைமுளைத் தான் கருவழித்தாளிவையும் பகைவர்களுண்ணும் வாப்பருக்கையும் நச்சுபல்லு பெருந்தும்பை இவைகளை கருசெய்து உபயோகப்படுத்த புருஷர்கள் பேதனமாவார்கள்.

791. ஸ்திரீபேதன ஜாலம்.

பொன்னாங்கண்ணி, செங்கழுனீர், தாயைக்கொன்றான்மூலி, மடை யன், குடியனைத்தான் காந்தல், பெருந்தும்பை, கலையலைத்தான், காக்கை கூடு, கருந்தண்டு இவைகளைச்சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த மாதர்கள் மனத்தை முரித்தோட்டும் பேதனமாகும்.

792. மிருகபேதன ஜாலம்.

ஜீவன்கருங்குன்றி, எட்டி, முசட்டை, கழுகொம்பு, கூகை, கருங்காக்கை மண்டையோடு மூருசுமுட்டை, விஷங்கள் வளத்தி பதியலைத்தான்

சாற்றைவிட்டு மைபோல் அறைத்து வைத்துக்கொண்டு உபயோகப் படுத்த மிருகங்களை யெல்லாம் கலக்கியோடும்படிச் செய்யும் மிருக பேதனமாம்.

793. தேவபேதன ஜாலம்.

கழுதையின் குளம்பும், அறின்கூடையும், கழுதைபுட்டையும், பாதரிவேர், மாவிலிங்கம்வேர், பூதந்தலை அடைத்தான், கச்சரக்குருவி, சிவனிவித்து இவைகளைச்சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த தெய்வபேதனமாகும்.

794. அக்கினிபேதன ஜாலம்.

மத்தானி, செவ்வகத்தி, ஆலங்கொழுந்து, சுண்டைவேர், மரைக்கிழங்கு, அத்திவேர், பச்சையோனன், கொத்தான்வித்து, குப்பமேனிவேர், செங்குவளை, ஓரிலைத்தாமரை இதுகளை ஒன்றாய்ச்சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த அக்கினிபேதனமாகும்.

795. உலோகபேதன ஜாலம்.

நாகசெவி, நச்சுப்பல்லி, வேப்பமரத்தில் கட்டிய காக்கையின் கூடு, பச்சைஓனன், இந்திரகோபம், சுண்டைவேர், தும்பைவேர், வரைபூச்சி, மாதர்கள் மாதவிடாயான தீட்டுசீலை இவைகளைக் கொண்டுவந்து ஒன்றாய்ச்சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த லோகபேதனமாகும்.

796. பேதனமேட்டிற்கு மூலமந்திரம்.

பேதனம் எட்டுக்கும் மூலமந்திரம் செபிக்கும்விதம் எவ்விதமெனில் அரகர சிவநமா திரிபுரதகனி தேவி நாரணி செந்தாமரை யாத்தாள் பேதனமாம் ஜரிட்ட பார்வைவாளே பேதகி நீலி முக்கண்ணி பரங்டாங் டுங் டுங் சாரூபி ஆயி பிரத்தியங்கிரே ஜெய ஜெய பேதையா சிங் சிங் யங் லங் மங் மங் யா யா சுவாஹா என்று ஆயிரத்தெட்டு உருஜெபித்து மையை உபயோகப்படுத்த பேதனம் எட்டும் சித்தியாகும்.

797. சர்வமாரண ஜாலம்.

செந்தும்பை, சிவந்தபூச்சி, எழுமுள்ளு; மூக்கன். காக்காமுட்டை, குத்தான், மத்தான்வேர், இதுகளை உபயோகப்படுத்த சர்வமாரணமு மாகும்.

798. அரசமாரண ஜாலம்.

அரசன்வேர் புரசன்வேர் அருணி அவைகள் வகைக்குக்கழஞ்சி ஒன்றும் கொங்கன் மூலைகாத்தியன் குலமந்து மரமஞ்சுப் ஓரிதழ் தாரையும் மாண்ட மனிதனுடைய பல்லும் மண்டையும் இவைகளைச் சேர்த்து விரக்கி உபயோகப்படுத்த அரசர் மாரணமாகும்.

799. சத்துருமாரண ஜாலம்.

கஞ்சு, புங்கு, ஐங்காயம், காகத்தின் தலை, வஞ்சகமுடைய குலமும், வலிவுமறிந்து அதிகாரியாக யிருப்போர்களுக்கும் கொழிஞ்சிவிஷம்

கொங்க மூலை இவைகளைச்சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த வஞ்சகரை றக்கும். சத்துருக்கள் மாரணமாவார்.

800. சர்வபூதபசாசுமாரண ஜாலம்.

நச்சுப்புல்லு கழுதைக்குளம்பு கழுதைக்கண் கடுகு முருங்கைவித்து கழுதைசடை, பன்றியின் விட்டை, கருநாபி, கன்னு, ஐங்காயம் இவைகளைக்கொண்டுவந்து ஒன்றாய்ச்சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த சர்வபூதமும் சர்வபசாசுகளும் மாரணமாகும்.

801. சர்வஜீவஜெந்துக்களின் மாரணஜாலம்.

தும்மட்டிவேர், குழந்தையின் பித்து, நகதக்தம், கல்லொட்டி, மதிமயக்கி கருநாபி, சொல்மயக்கி, பிணமயக்கி, இவைகளைக் கொண்டுவந்து ஒன்றாகச்சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த சர்வ ஜீவஜெந்துக்களும் மாரணமாகும்.

802. சர்வவிஷமாரண ஜாலம்.

குப்பமேனிவேர், நீலிவேர், கன்னிவேர், வாளம், புலால்நாரி, மாவிலங்குவேர், அழுஞ்சி, காஞ்சொரி, கருநொச்சி, கார்த்திகைவேர், சித்திரமூலம் இவைகளைக்கொண்டுவந்து ஒன்றாய்ச்சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த சர்வவிஷமும் நீங்கும்.

803. சர்வதேவமாரண ஜாலம்.

என்னெண்ணெய், மனிதன் தலைமண்டை ஓடு, காக்கையின் எச்சம், புறாவின் எச்சம், மயிரில்லா மாணிக்கம், சவைபிராட்டி, தேவாங்கு, பச்சைவோனன், அரிதாரம் இவைகளை எல்லாம் ஓரிடையாக நிறுத்து மைசெய்து உபயோகப்படுத்த சர்வதேவ மாரணமாகும்.

804. சர்வரிஷிமாரண ஜாலம்.

கொத்தான் வித்து, ஐங்கோட்கரு, புறாவின் பித்தும், எச்சமும், எட்டிவித்து, கரிக்குருவி, வெள்ளிமருட்டி, காக்கை ரத்தம், இவைகளைக் கொண்டு வந்து ஒன்றாகச்சேர்த்து மைபோலறைத்து வழித்து இலர்துயிட்டுக்கொள்ள சர்வ ரிஷிகளும் மாரணமாவார்.

805. மாரணமேட்டிற்கு மூலமந்திரம்.

மாரணமெட்டுக்கும் மூலமந்திரம் ஜெபிக்கும் விதமெவ்விதமெனில் மாரி பகவதி அம்பூான் திருசூலி டாகினியே சாடு சாடு அய்யா அய்யா அரசர் மாணி ஆயி சீபோ தேவி என்று ஆயிரத்தெட்டு செபிக்க மாண ஆயி சீபோ தேவி என்று ஆயிரத்தெட்டு செபிக்க மாரணமெட்டும் சித்தியாகும்.

806. பாதாளந்தோற்றும் ஜாலம்.

மஞ்சள், ஜாதிக்காய், வனவித்து, தண்ணீர் விட்டான் கிழங்கு, தும்பையான் தகரை, பசுவின் கண், இவைகளைக் கொண்டுவந்து ஓரிடையாக நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு சித்தாமணக்கு எண்ணெய்விட்டு மைபோல் அரைத்து இந்த மையை பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு அஞ்சனம் போட்டுப் பார்க்க பாதாளம் முழுமையுந்தோற்றும்.

807. பூதகணங்கள் தோற்றும் ஜாலம்.

தண்ணீர்தேற்றி, சௌதும்பை, குப்பைகுரைவிரை, பச்சைகுளவிந்தம், காக்கைகண், இவைகள் கொண்டுவந்து ஓரிடையாக நிறுத்து ஒன்றாகச்சேர்த்து கல்வத்திலிட்டு வென்னீர்விட்டு மைபோல் அரைத்து வழித்து சிமிளில் வைத்துக்கொண்டு அஞ்சனம்போட்டுப்பார்க்க கண்ணில் பூதகணங்கள் தோற்றும்.

808. நுலதூரத்திலுள்ள தேவர்கள்தோற்றும் ஜாலம்.

ஈசலின் இறகு, சிறுகீரைவேர், ஆடுதின்னாப்பாளை, காக்காயின் நஞ்சுபித்தம், குரங்கின் மண்டை இவைகளைக் கொண்டுவந்து ஆவின் நெய் விட்டு அரைத்து மைபோல் செய்துவைத்துக்கொண்டு அஞ்சனம் போட்டுப் பார்க்க துலதூரமுள்ள தேசங்களெல்லாந் தோற்றும்.

809. சலத்திலுள்ளவைகள் தோற்றும் ஜாலம்.

கோசம் பச்சையோந்தின் பித்தும், கண்ணும், கீழ்காய்நெல்லி, நரியோட்டு கையான்தகரை, இவைகளை கல்வத்திலிட்டு தேன்விட்டு மைபோல் அரைத்து வைத்துக்கொண்டு அஞ்சனம் போட்டுப்பார்க்க சலத்தி லிவைகளெல்லாந் தோற்றும்.

810. உலகத்திலுள்ள குறிமை தோற்றும் ஜாலம்.

கூகையினுடைய கண்ணும் பித்து இரச்சியும், தக்காளி, புன்னை, வாகை இவைகளின்வேர் கையான்தகரைவேர், காட்டின்வேர், நாகனை அழைக்கும்வேர், தும்பைவேரும் இவைகளைக் கொண்டுவந்து மைபோல் அஞ்சனம்போட்டு பார்க்க உலகிலுள்ள குறிமைகள்யாவும் தெளிவாகத் தோற்றும்.

811. நினைத்தவை தோற்றும் ஜாலம்.

பூனைவணங்கிவேர், இலுகிலுப்பைவேர், துரிலைத்தழுமரை, கீழ்காய் நெல்லிவேர், ஆடுதின்னாப்பாளை வேர், தும்பைவேர், செங்கழுநீர்,

812. பரவை அஞ்சனம்.

நன்றாய்ப்பழுத்த பலாப்பழத்தின் கொட்டை பூமியமிர்தம், புத்து தேனும் சேர்த்து மைபோல் அரைத்து வைத்துக்கொண்டு நெற்றியில் திலர்தமிட்டுக்கொள்ள பரவைகள் யாவுந்தோறும்.

ரெல்லாம் பிரமித்து காவரண்டு இதுயாரோ ஏவல் செய்தார்களென்று எங்குவார்கள். அந்தக்கருவைக் கழுவிவிட்டால் கல்விழுவது நின்றுவிடும்.

826. கெருடவசிய வித்தை.

கெருடன் வசியமாக சொல்லும் மந்திர மென்னவெனில் எவோ நவவே என்றுசொல்ல கெருடப் பட்சியானது எதிர் நோக்கிவரும். சிவோ இலியு மென்றுசொல்ல கருடனானது அரவத்தை தூக்கிக்கொண்டு ஆகாயமார்க்கமாகச் செல்லும். ஆவோ நாவோ ஏன்றுசொல்ல அரவம் அவ்விடத்திற்குப்போகும். வாவோ நவ்வி என்றுசொல்ல கருடப் பட்சியானது மயங்கிநிற்கும்.

827: மிருகவசிய வித்தை.

மிருகங்கள் வசியமாகச் சொல்லும் மந்திரங்க ளென்னவெனில் சிஓ என்றுசொல்ல கேரிட்ட மிருகங்கள்யாவும் சினைத்திடும்; அங் ஐ என்று சொல்ல மிருகங்கள் ஒதுங்கி விலகிப்போகும்; அய்யா என்றுசொல்ல மிருகங்கள் யாவுமாடும்.

828. அரவ உச்சாடன வித்தை.

உம்-எ-ஒ-என்று ஓத அரவமானது நிற்கும்; அம்-எ-ஒ-என்று ஓதிட அரவங்களின் வாயைக்கட்டும்; பெம்வம் யாயூா-என்றோதிட வந்து எதிரில் நின்ற அரவங்களெல்லாம் ஓடிப்போகும்; சியாம் ஊ என்று ஓதிட அரவங்களெல்லாம் ஓடிப்போகும்; இலியுமென்று ஓதிட அரவங்கள் பயந்து ஒதுங்கிப்போகும்; கிலியுமென்று ஓதிட அரவங்கள் வாயில் ரத்தங்கக்கும்; நாடி-வா என்று ஓத அரவங்களெல்லாம் நகரும்.

829. சர்வ விஷங்கள் நீங்கும் வித்தை.

சர்வ விஷங்களும் விட்டுநீங்க நங்-சிங்-என்று செபிக்கவேண்டும்; நேர்வான பருப்பில் வித்தைக்கலந்து அங்-ஊங்-என்று செபிக்க விஷமேறி மாண்டவன் பிழைத்துக்கொள்வான். பட்டவன் பிழைக்கவேண்டுமாகில் இலியுமென்று செபிக்கவேண்டும்.

830. கார்த்திகை வீரியார்ச்சுன மந்திரம்.

கார்த்திகை வீரியார்ச்சுன மந்திரம் செபிக்கும்வித மெவ்விதமெனில் ஓம்-ஆம்-ஸ்ரீயும்-இலியும் கார்த்தவீரியார்ச்சுன சுவாகா என்று லட்சமுருசெபித்து, பூசைசெய்து பத்துப் பிராமணருக்கு அன்னம் படைக்க சித்தியாகும்; நினைத்தபடிக்கெல்லாம் செய்யும்.

831. நரசிங்க மந்திரம்.

நரசிங்க மந்திரம் செபிக்கும்விதம் எவ்விதமெனில் ஓங்-சிங்-லங்முகா ஓம் ஓம் கடித்து தொடுத்து சுற்றி கண்டுபிடித்து அறைவாரைப் போல் பிசாசுபேய்கள் பொடிப்பட்டோட நரசிங்கராஜ வாவோ ஸ்ரீம் இலீம் சுவாகா என்று லட்சம் உருசெபித்து தர்ப்பணஞ்செய்து ஹோமம் வளர்த்தி அன்னம்படைத்து பூசைசெய்ய சித்தியாகும்.

832. ஆனைவசிய ஜாலம்.

மேற்கூறிய நரசிங்கமந்திரத்தை செப்புத்தகட்டிலெழுதி பூஜையில் வைத்து லட்சம் உருசெபித்து தகட்டையெடுத்து குளிசமாடிக் கட்டிக் கொண்டு யானைமுன் செல்ல யானை வணங்கி வருவதுடன் இஷ்டம் போல் நடக்கும்.

833. மிருகங்களை வசியமாக்கும் ஜாலம்.

மேற்சொல்லிய நரசிங்கமந்திரத்தை காரீயத்தகட்டிலெழுதி பூஜை யில்வைத்து லட்சம் உருசெபித்து தகட்டைக் குளிசமாடிக் கட்டிக் கொள்ள மிருகங்கள் கண்டவுடன் வீரிட்டோடும்; அழைத்தால் அருகில் வரும் சொன்னபடிக்கெல்லாம் செய்யும்.

834. பாழடைந்தமனை விருத்தியாகும் ஜாலம்.

மேற்கூறியபடி நரசிம்ம மந்திரத்தை எட்டிப்பலகையில் எழுதி பூசையில்வைத்து லட்சம் உருசெபித்து அந்தப்பலகையைப் பாழடைந்த வீட்டில் தெருவாசலின் உள்புரமாக சுவற்றில் பதியவைக்கவேண்டும். அப்படி செய்துவைக்க நாளுக்குநாள் அவ்வீட்டிலுள்ள துஷ்ட கிரகங்களும்போய் பிசாசு பூதம் முதலானவைகளுந் துலைத்து வீடு செழிப்படையும்.

835. செந்நெல் விருத்தியாகும் ஜாலம்.

மேற்கூறியபடி நரசிம்ம மந்திரத்தைப் பொன்தகட்டில் எழுதி அதின்மேல் ஐங்கோலக்கருவைப் பூசிப் பூசையில் வைத்து லட்சம் உரு செபித்து செந்நெல் விளையும் பூமியில்கொண்டு போய் ஈசான்னிய மூலையில் புதைக்க ஒவ்வொரு கதிர்முழம் நீளமாகும், ஓங்கி வளர்ந்துவரும்; ஏழையான குடும்பம் குபேரசம்பத்தாக வோங்கி வளரும்.

836. பேயோட்டும் வித்தை.

ஒரு தாம்பாளத்தில் விபூதியைப்போட்டு அதைப் பரப்பி அதின் மேற்கூறிய நரசிம்ம மந்திரத்தை எழுதி குடங்கொளுத்தி வைத்து லட்சம் உருசெபித்து; அந்த விபூதியைப் பேய்முதல்லானது பிடித்திருப்பவர்களின் வாயில் கொஞ்சம்போட்டு சிரசில் கொஞ்சம்போட்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டேயிருக்க, ஆடாதபேய்களெல்லாமாடும்; ஓடாத பேய்களெல்லாமோடும்.

837. பயம்நீங்கும் ஜாலம்.

மேற்கூறிய நரசிங்க மந்திரத்தை காரீயத்தகட்டிலெழுதி தன்னுடையபெயரையும் அதில் எழுதி பூசையில்வைத்து லட்சம் உருஜெபித்து குளிசமாடி கட்டிக்கொண்டு எந்த தீவாந்திரங்களிலேனும் நாடுநகரங்களிலேனும் அச்சமில்லாமல் போகலாம்; ஒரு துன்பமுமணுகாது.

838. விபூதிபிடிக்கும் ஜாலம்.

ஒரு அறையை பசுஞ்சாணமிட்டு மெழுகி தீபங்கொளுத்தி வைத்து ஊதுவத்தியைக் கொளுத்தி இடது உள்ளங்கையில் விபூதியைப்போட்

பூதபேதங்களைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வாடாவென்று மூன்றுதரஞ்சொல்ல அப்படியே கட்டிக்கொண்டுவருவான்.

848. பிரமராட்சதனை அடக்கும் ஜாலம்.

ஜெகஜாலக்கருவும் அஷ்டமாசித்துமையுங்கலந்து விரலில்தொட்டு, கெண்டபேரண்ட மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து, அடே கெண்டபேரண்டா! பிரமராட்சதனைப் பிடித்துக்கொண்டுவாவென்றால் உடனே கொண்டுவந்து காட்டுவான்.

849. சூனியம்வைப்பு நிவர்த்தி ஜாலம்.

சூனியவைப்பில் மெலிந்து துன்பப்படுவோர்களைக் குந்தவைத்து ஐங்கோலக்கருவை விரலில்தொட்டுக்கொண்டு ஒருதாம்பாளத்தில் விபூதியைப்போட்டு சாம்பிராணி வத்தியைக் கொளுத்திவைத்து கெண்டபேரண்ட மந்திரத்தை 1008-ஜெபித்து, அந்த விபூதியை நோயாளர் தேகமாதியந்தமும் பூசி உச்சியிலும் வாயிலும்போட பிணிநீங்கி சுகப்படுவார்கள்; உன்னை பெரிய மந்திரக்காரனென்றும் புகழ்வார்கள்.

850. சத்துருக்களால் நேர்ந்த துன்பங்களை நிவர்த்திசெய்யும் ஜாலம்.

சத்துருக்களால் நேர்ந்த துன்பங்களை விலக்கவேண்டில் ஐங்கோலக்கருவை விரலில் தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை லட்சம் உருஜெபித்து, அடே கெண்டபேரண்டா! என்பேரில் எதிர்த்த சத்துருக்களை இம்சைப்படுத்து என்றதும் சுகமுண்டாகச்செய்யும்.

851. மிருகங்களைக் கட்டிவரும் வித்தை.

ஜெகஜாலக்கருவை விரலில் தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை 1008-ஜெபித்து, கருவை பானையோட்டில் தடவி ஈசானிய மூலைபக்கம் விட்டெறிந்து அடே கெண்டபேரண்டா! கானகத்திற்சேதி மிருகக்கூட்டங்களைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வாடாவென்று மூன்று தரஞ்சொல்ல அதன்படியே செய்வான்.

852. விஷஜெந்துக்கள் விலகும் ஜாலம்.

சர்வ விஷஜெந்துக்களும் விலகியோடவேண்டில் கெண்டபேரண்ட மந்திரத்தை ஜெபித்துக்கொண்டு இரவிலேனும் பகலிலேனும் வனங்கள் வனாந்திரங்களிலேனும் மலைகுகைகளிலேனும் இன்னும் எந்த விடங்களிலேனும் மேற்சொன்ன மந்திரத்தை செபித்துக்கொண்டே போகக்கண்ட சர்வவிஷஜெந்துக்களும் எதிர்நில்லாமல் மிரண்டு பயந்து ஒளிக்கும்.

853. நினைத்தவையெல்லாம் சித்தியாகும் ஜாலம்.

கெண்டபேரண்ட மந்திரத்தை ஜெபித்து சித்தியானவுடன் மேற்கூறிய ஜாலங்களும் பலிதமாகும். இந்த மந்திரத்தை ஜெபித்து எதைக் கொண்டுவரும்படி நினைக்கின்றையோ அதைக்கொண்டுவந்து எதிரில் வைக்கும். ஜாலமாடுஞ் சபையிலும் வெகுவீரமொடு செய்துகாட்டலாம்; சனங்கள் உன்னைப்புகழ்ந்து கொண்டாடுவார்கள்.

854. யானை சபையில்தோன்றி உடனே மாயமாய் மறையும் ஜாலம்.

ஜாலமாடுஞ்சபையில் வந்துநின்று சபையோர்களைப்பார்த்து இதோ ஒரு மதயானை தோற்றமாகி உடனே மறைந்துபோகும்படி செய்கிறேன் பாருங்களென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு, பலகரையில் தடவி கெண்டபேரண்டை மந்திரத்தை லட்சம் உரு செபித்து அந்தப் பலகரையை குபேரமூலைபக்கம் சரேலெனவிட்டெறிந்து அடேகெண்ட பேரண்டா! யானையைப் பிடித்துக்கொண்டுவந்து சபையில்நின்று பார்ப் போர்களுக்குக்காட்டி மறைத்துவிட வேண்டும் என்று மூன்றுதரஞ் சொல்லி மந்திரத்தைசெபிக்க அப்படியே கொண்டுவந்துகாட்டி மறைத் துவிடும். அப்போது உன்னை மகா மந்திரவாதியென்று மதித்துப் புகழ் வார்கள்.

855. சபையில் நின்றோர்கள் மிரண்டோட புலியைக்காட்டி மறைக்கும் ஜாலம்.

சபையோர்களைப்பார்த்து இதோ புலிவரும் புதுமைகளைப் பாருங்க ளென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு கெச்சக்காய்மீதில் தடவி கெண்டபேரண்டா! புலியைக் கொண்டுவந்து காட்டி மறைத்து விடென்று மூன்றுதரஞ் சொல்லி மந்திரத்தை செபித்துக்கொண்டே யிருக்க புலியானது சபையில் வீரிட்டு ஓடிவந்தவுடனே மறைந்துபோம்; அப்போது சபையோர்கள் மிரண்டு மூலைக்குமூலை ஓடுவார்கள்.

856. கரடியைக் காட்டி மறைக்கும் ஜாலம்.

ஜாலமாடுஞ் சபையில்நின்று சபையோர்களைப் பார்த்து, கரடிவரும் விநோதத்தைப் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை விரலில்தொட்டுக் கொண்டு பேரண்ட மந்திரத்தை லட்சமுருசெபித்து, அட கண்ட பேரண்டா, காட்டில்வாழுங் கரடியைப் பிடித்துவந்து இந்த சபையோர் களுக்குக்காட்டி உடனே காட்டில்கொண்டுபோய் விட்டுவிடடாவென்று மூன்றுதரஞ்சொல்லி மந்திரத்தை செபித்துக்கொண்டேயிருக்க குபீ லென்று கரடியானது சபையில்தோன்றி மறையும்.

856. சிட்டுக்குருவி விநோத ஜாலம்.

சபையோர்முன் ஒருகூடையை யெடுத்துக்காட்டி மேஜைமேல் வைத்து இதோ இந்தக்கூடையை இந்த மேஜைமேல் கவிழ்த்து திறக் கிறக்கிறேன்; இதற்குள்ளிருந்து சிட்டுக்குருவிகள் பறந்தோடும் விநோ தங்களைப் பாருமென்று அஷ்டமாசித்துமையும் ஐங்கோலக்கருவுங் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை லட்சமுருசெபித்து கருவைக் கூடையில் தெளித்து கூடைமேல் துணி யைப்போட்டுமறைத்து அடே கெண்டபேரண்டா! இந்தக்கூடைநிறைய சிட்டுக்குருவிகளைக் கொண்டு வந்து ரொப்பி மறுபடியும் கொண்டு போடாவென மூன்றுதரஞ்சொல்லி கூடைமேல்மூடிய துணியைத்திறக்க சிட்டுக்குருவிகள் குபீலென்று பறந்து ஆகாயத்தில் மறைந்துபோய் விடும்.

கௌதும்பை இவைகளை ஓரிடையாக நிருத்து கல்வத்திலிட்டு மைபோல் அரைத்து வைத்துக்கொண்டு அஞ்சனம்போட்டு பார்க்க ஏதேது நினைக் கின்றோமோ அவைகளெல்லாந் தோற்றும்.

813. எடனை ஜாலம்.

கொன்றூன் கொழுஞ்சி வன்னைபுன்னை, வெள்ளாமணக்கு எத்தார் மூலி கருங்கண்ணி, செம்பூத்தின் எச்சம், புறாவின் இறகு, நற்றுமரை நால்ஜாதிலிங்கம் இவைகளை ஓரிடையாகச்சேர்த்து மைசெய்து உப யோகப்படுத்த மாதரும் அரசரும் எடனையாகும்.

814. இராஜ எடனை ஜாலம்.

குருஞ்சா, கருங்குன்றி, புனத்தின்கம்பு, லிங்கம், அரிதாரம், கோஷ் டம் இவைகளை மயானத்தில் கொண்டுபோய் ஜெபஞ்செய்து மையை உபயோகப்படுத்த இராஜ எடனையாகும்; மையை முதலிலேயே செய்து கொள்ளவேண்டும்.

815. புருஷ எடனை ஜாலம்.

திருகுகள்ளி, வெள்ளை காக்கணன், செம்முள்ளி, செங்கொழிஞ்சி, தகரை, ஆறை, கோஷ்டம், சுக்குறம் இவைகளை ஓரிடையாக நிறுத் தெடுத்து மைபோலறைத்து வழித்துவைத்துக்கொண்டு உபயோகித்து வர புருஷ எடனையாகும்.

816. ஸ்திரீ எடனை ஜாலம்.

சிகப்பு சித்திரமூலம், ஆமணக்கு, கோஷ்டம், சிறுநீர், தாயினைக் கொன்றூன், மண்தின்னும்பாம்பு இவைகளை ஓரிடையாக ஒக்கச்சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த தவஞ்செய்யும் மாதராகிலும் எடனை யாகும்.

817. மிருக எடனை ஜாலம்.

பூனைக்காலிவேர், செங்கத்தாரி, அருகின்வேர், முத்தக்காசு, சல்லி, இருவலக ஒட்டி, தொட்டி நாயின் ஊன் இவைகளை ஒன்றாகச் சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த மிருக எடனையாகும்.

818. தேவ எடனை ஜாலம்.

கருங்காக்கையின் கண், திருகுகள்ளி, செங்கத்தாரி, வெண்காக்க ணம்வேர், குப்பைமேனிவேர், வழிமரித்தான், தொட்டாசிணுங்கி பன்றிரத்தம் நாரைரத்தம், இவைகளை ஓரிடையாகச்சேர்த்து மைசெய்து உபயோகப்படுத்த பிசுமுதல் தேவர்களும் எடனையாவார்,

819. உலோக எடனை ஜாலம்.

சீவமடக்கும்வேர், கள்ளிகொத்தான், அம்மைகோவின் மறைவு மை, பன்றிநெய் இவைகளை மைபோலரைத்து வழித்துக்கொண்டு உப யோகப்படுத்த உலோக ஏடனையாகுமென மேலோர் கூறுகின்றனர்.

820. சர்வபூத எடனை ஜாலம்.

காட்டு இலுஇலுப்பைவேர், ஆடுதின்னாப்பாளைவேர், கீழ்காய்நெல்லி வேர், சிறுகிரைவேர், கையாந்தகரைவேர், சிவட்டையாடி மாண்டவ னுடைய மண்டையோடும் பல்லும் ஒன்றாய்க்கூட்டி மைசெய்து உப யோகப்படுத்த சர்வபூத எடனையாம்.

821. சர்வபூத எடனை மூலமந்திரம்.

சர்வபூத எடனை மூலமந்திரம் செபிக்கும்வித மெவ்விதமெனில் ஓம் காட்டேரி சாமுண்டி ஆத்தாள் காமரூபி அங் அங் நாரி நாரி எந்து எந்து எசையா எசையா அவடே அவடே அர ரார அம்மை சிங் சிங் சிங் வங் வங் சர்வ எடனை சுவாகா என்று ஒருலட்சமுருசெபிக்க சர்வபூத எடனையும் நொடியில் சித்தியாம்.

822. அஷ்டகாயம் எட்டிற்கும் சக்காத்தின் உயிரெழுத்து.

உலோகவசிய சக்கரத்திற்கு உயிரெழுத்து அகாரமாகும்; உச் சாடன சக்கரத்திற்கு உயிரெழுத்து தகாரமாகும்; தம்பனசக்கரத்திற்கு உயிரெழுத்து பகாரமாகும்; எடனை சக்கரத்திற்கு உயிரெழுத்து உகார மாகும். இவ்விதமாக அஷ்ட கர்மங்களையும் அறிந்து வகாரத்தில் அறிந் துப் பார்க்கில் சக்கரத்தில் அடைத்தது மூலமாகத் தோற்றும்.

823. வசியங்களாகுந் திசைகள்.

ஞாயர் வசியம், திங்கள் மோகனம், செவ்வாய் எடனை பேதனம், புதன் தம்பனம், வியாழம் உச்சாடனம், சனிக்கு மாரணம், வெள்ளிக்கு ஆக்குருஷ்ணம், இவ்விதமாக அஷ்ட கர்மங்களுக்கும் அறிந்து கொள் ளவும்.

824. வசியமாகுந் திசைகள்.

கிழக்கிற்கு மோகனம், தெற்கிற்கு மாரணம், மேற்கிற்கு உச்சாடன மாகும்; வடக்கிற்கு பேதனமாகும், எடனைக்கும் கன்னியாராசிதிக்கு, தென் கிழக்கிற்கு தம்பனம், வாய்வுமூலைக்கு ஆக்ருஷ்ணமாகும், ஈசானி யத்திற்கு சகலகர்மமுமாம்; இவ்வாறறிந்துசெய்ய சித்தியாகும்.

825. கல்லெறிகுட்டி வித்தை.

நஞ்சுண்டு இறந்துபோனவனை சுடலையில் தகனஞ் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்து அந்தக்கருவைக் கொண்டுவந்து அதைவிர லில் தொட்டுக்கொண்டு மந்திரங்களனைத்தையும் மறவாமல் 1008 செபித்து எதிரியினுடைய வாசல் நனையாத விடத்தில் கருவைத் தடவி விட்டுவர மனிதர்கள் கையினால் வாரியெறிவதுபோல் கல்லுகள் அங் கங்கோடிவந்து விழும். அப்போது அந்தமனையில வாசஞ்செய்வோ

டுக்கொண்டு அந்த விபூதியைப் பிசைந்துகொண்டே நரசிம்ம மந்தி ரத்தை 1008-செபித்து, பிறகு அந்தவிபூதியை இரவில்பயந்தவர், அந்தி சந்திவேளையில் பயந்தவர், இன்னும் பலவிதத்திலும் பயந்தபேர்களுக்கு இந்த விபூதியைக்கொடுக்க உடனே பயந்தெளிந்து உடம்புதெளிவு கொடுக்கும். ஆனால் எந்தெந்த காரியத்தைக் குறித்து மந்திரமெழுதும் போது அதில் அந்தப்பெயரையு மெழுதிவைக்கவேண்டும்.

839. பூதமோட்டும் ஜாலம்.

பூதமோட்டு மந்திரம் செபிக்கும் விதமெவ்விதமெனில் ஓம் பவாத் துருநாதா, ஓம் பசிசுவாகா, என்று லட்சம் உருஜெபித்து தர்ப்பணஞ் செய்து வோமம்வளர்த்தி அன்னம்படைத்து பூசைபோட்டு ஒரு ஜாமம் நின்றுகியானிக்க சித்தியாகும்; நினைத்தபடி எல்லாம் செய்யும், பிசாசு முதல் பூதங்களெல்லாம் பறந்தோடும.

840. மண்ணைக் கடலையாக்கும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று தந்திரமாக மகாமாயமையும் ஐங்கோலக்கருவையும் ஒன்றாய்க்கலந்து கையில் பூசிக்கொண்டு குட்டிச் சாத்தான் உச்சாடன மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே அங்குள்ள மண்ணை ஒருபிடி அள்ளி பொரிஞ்ச கடலையாகவேணுமென்று சபை யோர்கள் முன்போட அப்போது வறுத்த கடலைபோல் உண்டாகும். அது குட்டிச்சாத்தானுடைய வேலையாகும். அந்தக்கடலையையும் தின்ன லாம். சபையோர் ஆச்சரியப்படுவார்கள், இவ்வாறாகவே எவ்வகை தானி யங்களையும் சபையோர்கள் பிரமிக்கும்படிச் செய்துகாட்டலாம்.

841. கெண்டபேரண்ட ஜாலம்.

கெண்டபோண்ட மந்திரம் செபிக்கும் விதமெவ்விதமெனில் ஆம் ஓம் அகோர பிரபல காண்ட சிங்காவா வியாக்கிரக வாகா சாகாயகா காக்ரூடு பல்லர் அஷ்டவச்சரா சங்குசக்கரா தாதுப்பிராணு மாலிதாகமா கெஜபட்சே எர்தநசிம்மா கற்பாந்தா அக்னிலிலா ஜடதாப்புயந்திரத்திற் கில வச்சிரமான குண்டாதரவ்ந்டிக உக்கிர மூர்த்தி பட்சமாருத மாருத மச்சாந்த உத்தண்டவ யந்திரசர்ப்பா கெண்டபேரண்ட சித்தியாவா என்று மாலைஓதி பின்பு மூலமந்திரம் ஓம் இரீம் ஸ்ரீயும் கிலியும் கெண்ட பேரண்ட நரசிங்கா மகா சர்வ சத்துரு நாச என்று அந்திவேளையில் தவ ராமல் லட்சம் உருசெபித்து பூசை முதலானதும்போட்டு ஆறுபேர் பிராமணாளுக்கு அன்னம்படைக்க கெண்டபேரண்டசித்தியாகும்; பின்பு சகல சித்துமாடலாம்.

842. பிரமதரிசனை ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் வந்துநின்று சபையோர்களைப்பார்த்து, இதோ அந்தரத்தில் பிரமதெரிசனை காட்டுகிறேன் பாருங்களென்று மகாமாய மையை விரலில்தொட்டு கெண்டபேரண்ட மந்திரத்தை லட்சம் உரு ஜெபித்து அடே கெண்டபேரண்டா! பிரமலோகம்போய் பிரம்தேவரை அழைத்துவாடாவென்று மூன்றுதரம்சொல்ல ஆகாயமார்க்கத்தில் பிரம

தேவன் அன்னவாகனரூடராய் பிரகாசமுடன் தோற்றுவார். பார்ப்போர்கள் யாவரும் அகமகிழ்ந்து ஆச்சரியப்படுவார்கள்.

843. மகாவிஷ்ணுதரிசனை ஜாலம்.

முன்போலவே சபையோர்களைப் பார்த்து பிரமதெரிசனங்கண்டு களித்தீர்கள்; இப்போது மகாவிஷ்ணுவின் தரிசனம் காட்டும் விநோதத்தைப் பாருங்களென்று ஐங்கோலக்கருவு விரலில் தொட்டுக்கொண்டு கெண்டபேரண்டமந்திரத்தை ஆயிரத்தெட்டுருஜெபித்து அடேகெண்டபேரண்டா! வைகுந்தத்திற்குச் சென்று மகாவிஷ்ணுவை அழைத்தோடிவாடா என்று மூன்றுதரஞ்சொல்ல ஆகாயவீதியில் கெருடவாகனரூடராய் லட்சுமிசமேதராய் தோற்றப்படும்; பார்ப்போர்களும் மதிமயங்கி திகைத்து சுவாமியைப்பார்த்து ஆனந்திப்பார்கள்.

844. ருத்திரதரிசனை ஜாலம்.

முன்போலவே சபையோர்களைப் பார்த்து, பிரமதேவன் மகாவிஷ்ணு இருவர் தரிசனமும் கண்டுகளித்தீர்கள் இதோ ருத்திரமூர்த்தி தரிசனம் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை விரலில் தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை லட்சம் உரு ஜெபித்து அடேகண்டபேரண்டா! கொடுமுடி கைலாசத்திற்குப்போய் ருத்திரமூர்த்தியை அழைத்தோடி வாடாவென்று மூன்றுதரஞ்சொல்ல, ஆகாயவீதியில் பரமசிவன் பார்வதிதேவியுடன் இடபவாகனரூடராய் எழுந்தருளி மறைவார்; அவரைப்பலரும் தரிசித்துப் பரமானந்த மடைவார்கள்.

845. தேவர்களின் ஜாலம்.

முன்போலவே சனங்களைப்பார்த்து, மும்மூர்த்திகளின் தரிசனம் கண்டுகளித்தீர் இப்போது இந்திராதி தேவர்களின் தரிசனம் காண்பிக்கிறேன் பாருங்களென்று இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டுக்கொண்டு மந்திரத்தை லட்சம் உருஜெபித்து அடே கெண்டபேரண்டா! இந்திரலோகஞ்சென்று இந்திராதிதேவர்களை அழைத்தோடி வாடாவென்று மூன்றுதரஞ்சொல்ல ஆகாய வீதியில் தேவர்கள் தோற்றப்படுவார்கள்; கண்ட சனங்கள் கண்பூத்துக் களிப்படைவார்கள். ஆதலால் இந்த ஜாலங்களை இரவில்செய்து காட்டவேண்டும்.

846. சித்தர்கள்தரிசனை ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் சபையோர்களைப் பார்த்து இபபோது சித்தர்களின் தரிசனம் காட்டும் விநோதங்களைப் பாருங்களென்று ஐங்கோலக்கருவை விரலில் தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை லட்சம் உருஜெபித்து, அடே கெண்டபேரண்டா! கானகத்தில் தபசுபுரியும் சித்தர்கூட்டங்களை அழைத்தோடி வாடாவென்று மூன்றுதரஞ்சொல்ல சபைநிறைய சித்தராகத் தோற்றுவார்; பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள்.

847. பூதபேதங்களை அடக்கும் ஜாலம்.

ஐங்கோலக்கருவை கையில் தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து அடே கெண்டபேரண்டா

858. ஒட்டை விநோத ஜாலம்.

ஜாலமாடுஞ்சபையில்வந்து அங்குள்ளவர்களைப்பார்த்து ஒட்டையையிந்த சபைமுன் வரும்படிச்செய்யும் விநோதத்தைப் பாருங்களென்று ஐங்கோலக்கருவும் அஷ்டமாசித்துமையுங் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு கெண்டபேரண்ட மந்திரத்தை லட்சஞ்செபித்து, கருவை ஒரு சிறிய கல்லில்தடவி அடா கெண்டபேரண்டா! ஒட்டையைக்கொண்டு வந்து சபையிலுள்ளோர் பார்க்கும்படி காட்டிமறையடாவென்று மூன்றுமுறைசொல்லி கல்லை மேற்குத்திக்காக விட்டெறிய உடனே ஒட்டையானது அனைவரும் பிரமிக்கும்படியாக சபையில் தோன்றி மறைந்துவிடும்.

859. பனைமரத்தை அழைப்பிக்கும் ஜாலம்.

கெண்டபேரண்ட மந்திரதை லட்சமுருசெபித்துப் பனைமரத்தைப் பிடுங்கிக்கொண்டு வரவேண்டுமென்று மனதில் தியானிக்க உடனே பனைமரந்தோன்றும்; சபையோர் ஆச்சரியப்படுவார்கள்.

860. சுரைக்காய் வெடிக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒருசுரைக்காயை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த சுரைககாய் தானுய் வெடிக்கும் விநோதத்தைப் பாருங்களென்று ஜெகஜாலக்கருவை விரலில்தொட்டு குறளிமந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து சுரைக்காய்மேல் கருவைத் தந்திரமாகத்தெளிக்க உடனே படாவென்று வெடிக்கும், ஆச்சரியப்படுவார்கள்.

861. பூசனிக்காய் வெடிக்கும் ஜாலம்.

சபைமுன் ஒருபூசினிக்காயை எடுத்துக்காட்டி சுரைக்காய்வெடித்த விநோதத்தைப் பார்த்தீர்கள். பூசினிக்காய் வெடிக்கும் வேடிக்கையைப் பாருங்களென்று முன்போல் கருவை விரலில்தொட்டுக்கொண்டு குறளி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து கருவை பூசினிக்காயின்மேல் தெளிக்க, உடனே படாவென்று வெடிக்கும்.

862. பாராங்கல் சபையில்வந்துவிழுந்து மாயமாய்மறையும்ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் கெண்டபேரண்டனைத் தியானித்து லட்சமந்திரஞ்செபித்து, அடா கெண்டபேரண்டா! மலையிலுள்ள ஒரு பெரிய பாறையை தூக்கிக்கொண்டுவந்து இந்த சபையில்போட்டு உடனே மாயமாக மறைத்துவிடுவாயென்று மூன்றுதரஞ்சொல்லி மந்திரத்தை செபித்துக்கொண்டேயிருக்க உடனே கல்லானது தபாவென்று வந்து சபையில்விழுந்து உடனே மறைந்துபோகும்.

863. முள்ளின்மேல் படுக்கும் ஜாலம்.

எந்தஇடத்திலாவது வைக்கோலைப்பரப்பி அதின்மேல் ஐங்கோலக்கருவைத்தெளித்து கண்கட்டுமையைத் திலர்தமிட்டுக்கொண்டு சக்கலாதேவிமந்திரத்தை 1008-செபித்து ஜாலக்காளை தியானித்து, இந்தவைக்கோலின்மேல் படுத்துக் கொள்ளுகிறேன், முள்ளின்மேல் படுத்திருப்பதுபோல் தோற்றச் செய்வாயென மந்திரத்தைச் செபித்துத்

கொண்டே வைக்கோலின்மேல் படுத்துக்கொள்ளவும். பார்ப்பவர்க
ளெல்லாம் முள்ளின்மேல் படுத்துக்கொண் டிருக்கிறானென்று உன்னைப்
பலவாறாகப் புகழ்வார்கள்.

864. கிரியை நகரச்செய்யும் ஜாலம்.

கிரியினருகிற் சென்று தன்னுடன் வந்தவர்களைப் பார்த்து, இந்த
கிரியை நகர்ந்து வரும்படியாகச் செய்கிறேன் பாருங்களென்று ஜெக
ஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் கலந்து ஒருசிறிய கல்லில்தடவி
கையில் பிடித்துக்கொண்டு, கெண்டபேரண்ட மந்திரத்தை லட்சம் உரு
ஜெபித்து கல்லை மலையின்மேல் விட்டெறிந்து, அடே கெண்டபே
ரண்டா! இந்த மலை பார்ப்பவர்கள் கண்களுக்குநகர்ந்து வருவதுபோல்
தோற்றமாகி உடனே எதாஸ்தானத்தில் இருப்பதுபோல் காட்டவேணு
மென்று மூன்றுதரம் சொல்லி, மந்திரத்தைஜெபித்துக் கொண்டேயி
ருக்க கிரியானது நகர்ந்துக்கொண்டு வருவதுபோல் பார்ப்போர் கண்
களுக்குத்தோற்றும். அப்போதவர்கள் இது என்னபுதுமை என்றுபேசிக்
கொண்டிருக்கும்போதே எதாஸ்தானத்தில் நிற்கவேண்டுமென்று கெண்
டபேரண்டனை நினைக்க கிரி தன்னிலையில் போய்நின்றுவிடும்.

865. மாயாவினோத ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒரு கோழிமுட்டையை எடுத்து அனைவருக்
குங்காட்டி முட்டையை மேசையின்மேல்வைத்து மூடிவிடவேண்டும்.
சற்றுநேரம் பொருத்து மூடிய கூடையைத் திறந்து காட்ட முட்டை
மாயமாகப்போய் விட்டதுபோல் தோற்றும். அனைவரும் ஆச்சரியப்படு
வார்கள்; இப்போது மாயமாக மறைந்துபோன முட்டையை வரும்படி
யாகச் செய்யும் வேடிக்கையைப் பாருங்களென்று ஒருவருக்குந் தெரி
யாமல் மேற்படி முட்டையின்மேலிருக்கும் மறைவுமையை நன்றாய்த்
துடைத்துவிட்டு முன்போல்மூடி, சற்றுநேரம் பொருத்து திறந்துகாட்ட
முட்டையானது இருக்கும்; சந்தோஷப்பட்டு புகழ்வார்கள்.

866. எதிரியை வணங்கச்செய்யும் ஜாலம்.

உனக்கு எதிரியினுடைய பெயரை செப்புத்தகட்டினால் மாறி
எழுதி, உச்சாடன மையை அதின்மேல்பூசி கெண்டபேரண்ட மந்தி
ரத்தை 1008 உருசெபித்து எதிரியின் வீட்டின் இரப்பில் சொருகி
விட்டுவர உடனே எதிரியானவன் பயந்து நடுநடுங்கி உன்காலில் வந்து
விழுவான்.

867. ஓலையனுப்பி நல்லபாம்பை அழைப்பிக்கும் ஜாலம்.

தாளி ஓலைத்துண்டில் ஓம் ஸ்ரீம் இரிம் சவ்வும் என்று எழுதி பின்பு
ஓ நல்ல பாம்பே! இந்த சிட்டைக் கண்டவுடன் ஓடிவருவாயென்று கீழே
எழுதி ஜெகஜாலக் கருவையும் கடலைக்கருவையும் ஐங்கோலக்கருவையும்
கலந்து சிட்டின்மேலெழுதி சக்கலாதேவி மந்திரத்தை 1008 செபித்து,
அம்மணி! இந்த சிட்டைக் கீழே போடுகிறேன், ஓடிவந்து அதை
யெடுத்துக்கொண்டு போய் நல்லபாம்பு இந்த சபைக்குவரும்படியாக
செய்யவேண்டும் என்று மனதில் நினைத்து மந்திரத்தை செபித்துக்
கொண்டே சிட்டைக் கீழேபோட உடனே ஓடுறனது வந்து அந்த

சிட்டை வாயில் கவ்வியெடுத்துப் புற்றின்மேல் வைத்தவுடன் புற்றி
லிருக்கும் நல்ல பாம்பானது பயந்து சரேலென்று சபைக்குவரும்;
சொன்னபடி யெல்லாம் செய்யும்; எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.
பின்பு பாம்பை தன்னிருப்பிடம் போவென்று சொல்ல உடனே சரே
லென்று போய்விடும்; உன்னை மந்திரவாதி என்று புகழ்வார்கள்.

868. வர்த்தகம் விர்த்தியாகச்செய்யும் ஜாலம்.

சிறியாநங்கை என்னும் செடியைக் கண்டுபிடித்து ஆதிவாரமும்
கூடியதினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து
பூசைபோட்டு வேரைப்பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் அஷ்டமாசித்து
மையைத்தடவி பூசையில் வைத்து, கானபைரவர் மந்திரத்தை 1008
செபித்து வேரையெடுத்துக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள எந்த வர்த்
தகம் செய்தாலும் விருத்தியடையும்; லாபம்பெருகும்.

869. உத்தியோக விருத்தி வித்தை.

குப்பைமேனிச்செடிக்கு திங்கட்கிழமைதினம் கன்னியா லக்கினத்
தில் மஞ்சள் நூல் காப்புகட்டிப் பொங்கலிட்டுப் பலிகொடுத்துப் பூசை
போட்டு மறுவாரம் சென்று வேரைப்பிடுங்கிவந்து அந்த வேரின்மேல்
ஐங்கோலக்கருவைப் பூசி பூசையில்வைத்து நீலகண்டர்மந்திரத்தை ஆயி
ரத்தெட்டு செபித்து வேரை எடுத்துக் குளிசமாடி கட்டிக்கொண்டு
எந்த இடத்திற்குப் போனாலும் நன்மையானவார்த்தை பேசுவார்கள்;
உத்தியோகமும் நாளுக்குநாள் விருத்தியாகும்.

870. ரசமணி வித்தை.

பாதரசத்தை சுத்திசெய்து நாகப்பாம்பின் வாயில்வார்த்து, அத
னோடு மூப்பூவும் கழுஞ்சிபோட்டு பாம்பின் வாயைக்கட்டி மேலே தூக்
கிக்கட்டி அதின்கீழ் பானையை வைக்கவும், பாம்பானது அழுகிவரும்
ரசமானது கட்டிமணியாக விழுக அதை எடுத்து உபயோகப்படுத்த சகல
தேவதை முதலானதும் வசியமாகும்; நினைத்தவை எல்லாங்கைகூடும்.

871. வேதாள வித்தை.

ஜாலமாடும் சபையில் நின்று சபையோர்களைப்பார்த்து இதோ
இரண்டு மாயா ஸ்திரீகளை அழைப்பிக்கின்றேன் பாருங்களென்று ஐங்
கோலக் கருவை விரலில் தொட்டுக்கொண்டு வேதாளமந்திரத்தை 1008
ஜெபித்து, கருவை ஒரு சிறிய கல்லில்தடவி குபேரமூலைபக்கம் விட்
டெறிந்து மந்திரத்தைத் தியானித்துக் கொண்டேயிருக்க உடனே
ஆடையாபரண அலங்காரமுடன் எவ்வர்ணமுடைய இரண்டு ஸ்திரீகள்
தோற்றப்படுவார்கள். அதைக்கண்ட சபையோர் முதலானவர்களும்
பிரமித்துப் பார்த்துக்கொண்டே யிருக்கும்போது மாயமாய் மறைந்து
விடுவார்கள்; பார்ப்போர்கள் மெய்மறந்து இதுமகா புதுமை என்று
மகிழ்வார்கள்.

872. கானக வித்தை.

கானகத்தி னிடமாகச்சென்று தன்னுடன் வந்தவர்களைப்பார்த்து
இந்தவனத்திலுள்ள மிருகசாதிகளை அழைப்பிக்கின்றேன் பாருங்க

வென்று செகசாலக் கருவையும் உச்சாடனக் கருவையும் ஐங்கோலக் கருவையும் ஒன்றாய்க்கலந்து மாத்திரைக்கோலில் பூசி கெண்டபேரண்டா! இந்த வனத்திலுள்ள மிருகக் கூட்டங்களை அழைத்துவாடா வென்று மந்திரத்தை செபித்துக்கொண்டே மாத்திரைக்கோலைக்காட்டி அழைக்க ஒவ்வொரு கூட்டங்களும் அணியணியாக கூடிக்கொண்டு வீரிட்டோடிவரும்; சொன்ன படிக்கெல்லாம் செய்யும்; போவென்றால் தங்கள் தங்களிருப்பிடம் போய் சேர்ந்துவிடும். அதைக்கண்ட அனைவரும் அலண்டு மிரண்டு மதிமயங்கி தியங்கி உன்னைகண்டால் நடுங்கி உன் அடியில் விழுவார்கள்.

873. எலுமிச்சம்பழ வித்தை.

ஜாலமாடுமிடத்தில் ஒரு எலுமிச்சம்பழத்தை எடுத்து சபையோர்களுக்குக் காட்டி இந்தபழத்தை நாலுதுண்டாக அறுத்து பூமியில்போடுகிறேன் நாலுபட்சிகளாகப் பறந்துபோகும் விநோதங்களைப் பாருங்களென்று அஷ்டமாசித்துமையும் ஜெகஜாலக்கருவும் ஐங்கோலக்கருவும் ஒன்றாய்க்கலந்து காயின்மேல் பூசி சக்கலாதேவி மந்திரத்தை 1008-ஜெபித்து சாலக்காளை தியானித்து அம்மணி! இந்தப்பழத்தை நாலுபத்தையாக அறுத்து பூமியின்மேல் போடுகிறேன் நாலுபட்சியாகப் பறந்துபோவதுபோல் தோற்றச்செய்வாய் என்று மந்திரத்தை செபித்துக்கொண்டே பழத்தை நாலுபத்தையாக அறுத்து கீழேபோட உடனே நாலுவகை பட்சிகளாக தோற்றமாகி மாயமாய்ப் பறந்துபோகும். பார்ப்போர்கள் பிரமித்து முழிப்பார்கள். ஆனால் கீழே அறுத்துப்போட்ட பழத்தின் பத்தையை ஒருவருக்குந்தெரியாமல் மறைக்கவேண்டும்.

874. பேய்துமட்டிக்காய் வித்தை.

ஜாலமாடுமிடத்தில் ஒரு பேய்துமட்டிக்காயை எடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்த துமட்டிக்காயை நாலுபத்தையாக அறுத்துபூமியில் போடுகிறேன் அந்த நாலுபத்தையும் நாலு விஷஜெந்துக்களாக தோற்றமாகிமறையும் அற்புதத்தை பாருங்களென்று இந்திரஜாலக்கருவும் சுடலைக்கருவும் ஐங்கோலக்கருவும் கூட்டி விரலில்தொட்டுக்கொண்டு முன்போல் சக்கலாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து கருவை காயின்மேல்பூசி சாலக்காளை தியானித்து அம்மணி! இந்தப் பேய்த்துமட்டிக்காயை நாலு பத்தையாக அறுத்து பூமியில் போடுகிறேன் நாலு பத்தையும் நாலு விஷஜெந்துக்களாகத் தோற்றச்செய்வா யென்று செபிக்க நாலுவிஷ ஜெந்துக்களாகத் தோற்றமாகி மாயமாய் மறைந்துவிடும். கண்டோர்கள் மனங்கலங்கி திகைத்து இது என்ன புதுமையென்று முழிப்பார்கள், நீ முன்போல் காயைத் தந்திரமாக மறைத்துவிடவேண்டும்.

875. நாலுமூலையிலும் நாலுபேர் ஆடிமறையும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் நாலு கரு ஊமத்தங்காயை எடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்தக்காயை நாலுமூலையிலும் மூலைக்கொன்றாக வைத்துவிடுகிறேன், இந்த நாலுகாயும் நாலுபேய் ரூபமெடுத்து ஆடிமறையும் விநோதத்தைப் பாருங்களென்று சுடலைக்கருவையும் உச்சாடனக்கருவையுங்கலந்து நாலுகாய்களுக்கும் தந்திரமாகப்பூசி நாலுமூலையில் வைத்துவிட்டு குறளிமந்திரத்தை 1008-உரு செபிக்க நாலுமூலையிலும் பேயாகத் தோற்றமாகி ஆடிமறையும்; அனைவரும் இது என்ன உச்சாடன மந்திரமோவென்று ஏக்கம்பிடித்து தங்கள் மனதிற்கு ஒன்றுந்தோற்றாமல் திகைத்து நிற்பார்கள்.

876. கதவின்றாள் திறக்கும் வித்தை.

ஒரு அறைக்குள் புகுந்துகொண்டு அறைக்கு வெளியிலிருப்போரைப் பார்த்து இந்த அறையின்றாளைப் போட்டுக்கொள்ளுங்கள் நான் உள்ளே இருந்தபடி அத்தாளைத் திறந்துகொண்டு வெளியே வருகிறேன் பாருங்களென்று அறைக்குள்ளிருந்தபடியே சிறீம் சிங்கு அவ்வும் அறியும் ஸ்ரீயும் என்று 108-உரு ஜெபித்து ஐங்கோலக்கருவைக் கதவின்மேல் தெளிக்க உடனே கதவினிடத்தாப்பாள் படாலென்று திறக்கும்; திறந்தவுடன் நீ வெளியேவர அனைவரும் பார்த்து ஆச்சரியப்படுவார்கள்.

877. காயக்க பூர்க்க பூவும்பிஞ்சு முதிரும் வித்தை.

காய்க்க பூர்க்க பூவும்பிஞ்சும் உதிரும்படி செய்யும் வித்தை எவ்விதமெனில் கிலியும் ஓம் என்றுசொல்ல மரமானதுவிசேஷமாகக்காய்க்கும்; ஐ எ எ என்றுசொல்ல மரத்தின் பூவானது;பூர்க்காது கசி என்றுசொல்ல மரத்திலுள்ள தளிரும் பூவும் உதிரும்.

878. வைரவர் தியான மந்திரம்.

வைரவர் தியானஞ்செய்ய ஓதும் மூலமந்திரம் எவ்விதமெனில் ஓம் சவ்வும் கிலியும் அரி ஸ்ரீ சிங் அங்கு சாயா அருளுவாய் என்று காலைமாலையுந் தவறாமல் 108-உருஜெபித்து இந்தப்படிக்கு நாற்பதுநாளும் செய்து நாற்பத்தோராநாள் பூசை முதலானதும்போட வயிரவர்சித்தியாகுவார்; பின்பு எல்வித சித்துமாடலாம்.

879. காளபைரவர் மந்திரம்.

காளபைரவர் மூலமந்திரம் செபிக்கும்விதம் எவ்விதமெனில் சிறீம் சிங்கு அவ்வும் அறிம் ஸ்ரீ என்று 1008-உருஜெபிக்க சித்தியாகும்; ஆனால் மேற்கூறியபடிச் செய்யவேண்டும்.

880. திரிபுரை தியான மூலமந்திரம்.

திரிபுரையின் மூலமந்திரம் செபிக்கும்விதம் எவ்விதமெனில் ஓம் ஸ்ரீ சிரியும் சிங் ஜுயும் சிராம கிரியும் கிலியும் சவ்வும் ஊம் ஆம திரிபுரையோசா வந்தருளுவாய்என்று 1008-ஓதிக்கொண்டுவர சித்தியாகும்.

881. வாராகிதியான மூலமந்திரம்.

வாராகுமூலமந்திரம் செபிக்கும் விதம் எவ்விதமெனில் ஓம் ஸ்ரீ சிறியும் உவ்வும் தேவி ராரா வாராஙி ஙவ் வறிம சவ்வும் ஜுயும் என்று 1008 உருஜெபிக்க சித்தியாவார்கள்.

882. நாராயணி மூலமந்திரம்.

நாராயணி மூலமந்திரம் செபிக்கும்விதம் எவ்விதமெனில் ஓம்ராயும் நவ்வும் மவ்வும் ராஅறிம் ஸ்ரீம் வவ்வும் சிங்கிலியும் ஆயி நாராயணி மகேஸ்வரி மணி ராரா என்று 1008-உரு ஜெபிக்க சித்தியாவாள்.

883. வாலைதியான மூலமந்திரம்.

வாலையினுடைய மூலமந்திரம் செபிக்கும் விதம் எவ்விதமெனில் ஓம் சவ்வும் கிலியும் ராரா ஓகோ கோ கிறாம் ஸ்ரீ அறிம் ... ராரா யங்கிமன் அம் அங்குசாயா அஞுவாய் அம்மணி தாயி ராரா என்று 1008 உருசெபித்துவர சித்தியாவாள்.

884. சாமளா தேவிமூலமந்திரம்.

சாமளாதேவி மூலமந்திரம் உருஜெபிக்கும் விதம் எவ்விதமெனில் ஓம் அறி ஸ்ரீம் கிலியும் சவ்வும் சாமளாதேவி சகலாடம் பரி சர்வதயாநிதி அருள்புரிவாய் என்று 1008 உருசெபித்துவர சித்தியாகும்; பின்பு சகல வித்தையு மாடலாம்.

885. சாமுண்டீஸ்வரி மூலமந்திரம்.

சாமுண்டீஸ்வரி மூலமந்திரம் செபிக்கும்வித மெவ்விதமெனில் பகவதி அம்மாள் ருத்திரி திரிபுர தகனி பரமன்மகிழ் கல்யாணி என்பிங்கில் வா-வா என்றுசொல்லி ஓம் ஸ்ரீம் கிறிம் சவ்வும் கிலியும் ஐயும் சுவாகா என்று 1008 உருசெபித்துவர சித்தியாகும்;பின்பு சகலவித்தைகளும் விளையாடலாம்.

886. சக்கலாதேவி மூலமந்திரம்.

சக்கலாதேவி மூலமந்திரம் செபிக்கும் விதம் ஓம் அறிம் ஸ்ரீம் கிறிம் கிலியும் சவ்வும் மவ்வும் ஐயும் சுவாகாதேவி தாயே சகலசித்தியாகும் அருள் ராரா என்று 1008 உருசெபித்துவர சித்தியாவாள்; பின்பு சகல வித்தையு மாடலாம்.

887. காளி மூலமந்திரம்.

காளியின் மூலமந்திரமானது செபிக்கும்வித மெவ்விதமெனில் றிம் ஸ்ரீம் கிறிம் கிலியும் அருள்புரிவாய் என்று 1008 உருசெபித்து சித்தியாகும்; பின்பு சகலத்திற்கும் இந்த மந்திரத்தை உபயோகப்படுத்தலாம்.

888. துர்க்கை மூலமந்திரம்.

துர்க்கை மூலமந்திரஞ் செபிக்கும் விதம் ஓம் ஆம் ஊண் ஸ்ரீம் றீம் சுவாகா துர்க்காதேவி துணைபுரிவாய் என்று 1008 உருசெபிக்க சித்தியாவாள்.

889. ஜாலக்காள் மூலமந்திரம்.

ஜாலக்காள் மூலமந்திரம் செபிக்கும்வித மெவ்விதமெனில் சாகினி டாகினி சாலக்காள்தேவி நீ ருரு என்று லட்சமுருசெபித்து சத்திபூசை முதலானதும் போட சித்தியாவாள்; பின்பு நினைத்தபடி ஜாலங்களாட பலிதமுண்டாகும்,

890. மலையாளபகவதி மூலமந்திரம்.

மலையாளபகவதி மூலமந்திரஞ் செபிக்கும் வித மெவ்விதமெனில் மலையாளபாவதி உக்கிர மலையாளபகவதி சகலசித்திற்கும் முதற்காரணி அடியேனுக்கருள்புரிவாய் அம்மணியென்று மூர்த்தி தியானித்து பின்பு ஓம் ஸ்ரீம் றீம் கிலியும் சவ்வும் சுவாகாவென்று 1008 உருசெபித்துவர மலையாளபகவதி சித்தியாவாள்.

891. வேதாள மூலமந்திரம்.

வேதாள மூலமந்திரஞ் செபிக்கும்வித மெப்படியெனில் ஓம் கிறிம் வங்யங் கிலியும் வேதாளா என்பங்கில் வாவா என்று 1008 உருசெபித்துவர வேதாளம் சித்தியாகும்; நினைத்தவித்தையாடலாம்.

892. பேதன வித்தை.

மூலைப்பாலினோடு காயத்தைக்கூட்டி ஊமத்தான் சார்விட்டு பேய்பீர்க்கன் தைலமுங் கூடவிட்டு மத்தியான வேளையில் பேதனமந்திரத்தை 108 செபித்து இதை மைபோல் அறைத்து வைத்துக்கொண்டு பின்பு இதைக்கண்ட வித்தைகளெல்லாமாடலாம்.

893. லோகவசிய ஜாலம்.

நிலப்பனங்கிழங்கு தாளகம் இவை இரண்டையும் கல்வத்திலிட்டு கரு ஊமத்தன் சார்விட்டு மைபோல் அறைத்து வழித்து சிமிளில்வைத்து லோகவசிய மந்திரத்தை 1008 செபித்து மையை திலர்தமிட்டுக்கொண்டு போக உலகமெல்லாம் உன்வசமாகும்.

894. மோகன ஜாலம்,

அரிதாரம் துடரிமூலம்சிறுகும் மூலநாரத்தம் எலுமிச்சம்பழம் இவை மூன்றுவஸ்துவையும் ஓரிடையாக நிறுத்தி கல்வத்திலிட்டு தைரத்தமும் பழஞ்சாறும் விட்டு மைபோல் அறைத்து வழித்து சிமிளில் வைத்துக்கொண்டு மோகனமந்திரத்தை 1008-செபிக்க சித்தியாகும்.

895. ஸ்ரீ வசிய ஜாலம்.

வசியமை விரலில்தொட்டு வசியமந்திரத்தை 1008செபித்து கையால்தொட்டு கூட ஐங்கோலக்கருவையுஞ் சேர்த்து மாதர்களின் நெற்றியில் திலர்தமிட வசியமாகி பின்வருவார்கள்.

896 மாரண ஜாலம்.

எட்டிக் கொம்பைக் கொண்டுவந்து மூளைபோல்சீவி அதின்பேரில் கருவைப்பூசி மாரணமந்திரத்தை 1008-செபிக்க சித்தியாகி ஜெகத்தில் நினைப்பதெல்லாம் தடையில்லாமல் நடக்கும்.

897. பிணியுண்டாக்குஞ் ஜாலம்.

மேற்கூறியகருவை தவளையினுடைய வாயில்செலுத்தி மாரண மந்திரத்தை 1008-செபித்து அந்தத் தவளையை பூமியில் புதைத்துவைக்க பலவிதமான வியாதியும் தோன்றி பாதிக்கும்; ஆனால் எதிரியின்பெயரை மாற்றிவைக்கவும்.

898. வித்துவேஷண ஜாலம்.

ஐங்காயம் வெள்ளைப்பாம்பின் ஊன் கடலைக்கருவும் இவை மூன்றையுங் கலந்துக்கொண்டு வித்துவேஷண மந்திரத்தை 1008 செபித்து மாலையிலும் காலையிலும் எரியினிடத்தில் இக்கருவை எதிரியினுடைய பெயரெழுதியிருக்கும் சீட்டில் பூசிக்கொண்டுபோய்வைக்க அவன் தேகமெல்லாம் சொரிந்தெம்பி அதிகமாக வியாதியுண்டாகும். அதையெடுத்து ஆற்றில் கழுவி சீட்டை அவ்வாற்றிலேயே விட்டுவிட தேகம் சுகமாகும்.

899. நோய் நீங்குஞ் ஜாலம்.

சணங்கன்புல் வெண்ணிறமான பாம்பின் ஊன் ஐங்கோலக்கரு இம்மூன்றையும் ஒன்றாய்ச்சேர்த்து வைத்துக்கொண்டு வியாதியஸ்தனுடைய பெயரை பனையோலையில் எழுதி கருவையதின்மேல் தடவி மற்றிரண்டு வஸ்துவையுங்கூடசேர்த்து மந்திரம் 1008-செபித்து நீர்க்கரையில் கொண்டுபோய் வைக்க வியாதிகளெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிவிடும்.

900. உருமாறும் வித்தை.

கரும்பூனையின் ரத்தம் கதலியின்சாறு அத்திவிதை வாகையின் பிசின் இவைகளை அரைத்து குளிகை செய்துக்கொள்ளவும். பின்பு சத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து சத்திக்கு பூசை முதலான தூம்போட்டு குளிகையை யெடுத்துவிடவேண்டும்.

901. பூனை உருவாகும் வித்தை.

சபையில் வந்திருக்கும் ஒரு மனிதனை யழைத்து இந்த மனிதனைப் பூனையாகச் செய்கிறேன் பாருங்களென்று அவன் வாயில் ஒருவருக்குந் தெரியாமல் உருமாறுங் குளிகையைப்போட உடனே பூனையாகத் தோற்றுவான்; உடனே மேற்படி குளிகையைக் கக்கிவிடச்செய்ய பழமபடி மனிதனாய் விடுவான். பார்ப்பவர்கள் திடுக்கிட்டு பிரமிப்பார்கள்.

902. நாயுருவாகும் வித்தை.

முன்போல் சபையோர்களைப்பார்த்து, முந்தி பூனையான விநோதங்களைப் பார்த்தீர்கள், இப்போது மனிதன் நாயுருவாகும் வித்தையைப் பாருங்களென்று உருமாறுங் குளிகையிலொன்றெடுத்து சத்திமந்திரம் ஆயிரத்தெட்டு செபித்து முன்போல் ஒருமனிதனுடைய வாயில்போட்டு நாயுருவாகுமென்று சொல்ல அவன் நாயாககாண்பான். எல்லோரும் இது மாயவித்தையென்பார்கள். மேற்படி குளிகையை கக்கிவிடச்செய்ய பழயபடி மனிதனாகவே தோற்றுவான்.

903. விலங்குதெரிக்கும் வித்தை.

கருடன் முட்டையிட்டு குஞ்சுபொரித்திருக்கும் கூண்டைப்பார்த்து கருடனில்லா சமயத்தில் மரத்தின்மேலேறி அந்தக் குஞ்சுகளின் காலில் இரும்பு விலங்கைப் பூட்டிவிட்டு வந்துவிடவேண்டும்; பிறகு கருடன்வந்து பார்த்து பரிதாபப்பட்டு உடனே அந்த விலங்கு தெரிக்கும்படியான மூலிகை கொண்டுவந்து வைக்கும். அதைக்கவனமாய்

பார்த்துக்கொண்டேயிருந்து அம்மரத்திலேறி அக்கூண்டை அசையாமல் மூலிகையைக் கண்டெடுத்து தீயில் வைத்து எரிக்க அந்த மூலிகை பச்சென்றிருக்கும் அதையெடுத்து வைத்துக்கொள்ளவும்.

904. பூட்டுதெரிக்கும் வித்தை.

சிரிப்பிள்ளையின் கூண்டைக்கொண்டுவந்து ஓடுகின்ற நீரில்விட எல்லாம் தண்ணீரோடுகூட ஓடிவிடும் அதிலுள்ள மூலிகையானது எதிர் நோக்கிவரும், அதையெடுத்து பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும்; இந்த மூலிகையைப்பூட்டியிருக்கும் பூட்டின்மேல் வைக்க அது திறக்கும்.

905. சத்துருவை ஜெயம்பண்ணும் வித்தை.

கோழிமுட்டையின்மேல் கடலைமையால் உருவெழுதி எதிரியின் பெயரையும்மாறி கருவைப்பூசி மந்திரம் 1008 செபித்து முட்டையைக் கொண்டுபோய் புதைத்துவிட சத்துருக்கள் உன்னை வணங்குவார்கள்; நீ நினைத்த கருமங்களெல்லாம் முடியும்.

906. வியாதியுண்டாகும் வித்தை.

புறாவின்முட்டை இந்திரகோபப்பூச்சி வல்லூறு குருவிப்பக்து கடலைக்கருவும் இந்த நாலுதினுசையும் சேர்த்தரைத்து மைசெய்து வைத்து காளியின் மந்திரத்தை 1008 செபித்து பிறகு எதிரியினுடைய பெயரை தாளிப்பனையோலையில் மாற்றி எழுதி இந்த மையைப்பூசி அவன் வாழும்படியான மனையின் இரப்பில் கொண்டுபோய்வைக்க பிணிபடுவான்; இதை எடுத்து நீரில் அலம்பிவிட பிணி உடனே நீங்கும்.

907. சத்துரு பேதன வித்தை.

அநுமந்த மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து பின்பு எதிரியினுடைய காலடிமண்ணையெடுத்து கருவைக்கலந்து வேலைசெய்து வைக்க விரணம் பாதியாகக்காணும்; அவன் வீடெங்கும் குறங்குகளாகத் தோற்றும்; தரணியோர் ஆச்சரியப்படுவார்கள்.

908. வேறுமுறை வசிய வித்தை

தொட்டால்வாடி செடியின்வேர் அரணையின்வால் காலின்கீழ் மண்ணும் இவைகளை நன்றாய்சேர்த்து மோகினிமந்திரத்தை 1008 செபிக்க மாதர்களுன்னை தேடிவருவார்கள்; கேட்டதெல்லாந்தருவார்கள்; இஷ்டம்போல் நடப்பார்கள்.

909. காந்தகிண்ண வித்தை.

காந்தத்தித ஒருசேர் நிறுத்தெடுத்து அத்துடன் விந்துநாலுபலமும் அவ்விடையே பனிநீரும்சேர்த்து இவ்விரண்டையும் பீங்கானில்விட்டு அதில் காந்தத்தையும் வைத்து சூரியபுடம் ஒருநாழிகைவைக்க காந்தத்தினுடைய சத்தானதுபோகும். அத்த சத்து மஞ்சள் நிறமாகயிருக்கும். அதை எடுத்துக்கொண்டு காலாக்கினி தயிலத்திற்போட்டு மறைவாக அறைநாழிவைக்க பச்சைநிறமுள்ள மெழுகுபோலாகும். ஆனவுடன் அதையெடுத்து சட்டிக்குள்வைத்து அஷ்டமாசித்து தைலம் ஒருபலம்

அடுப்பின்மேல் ஏற்றி சூடுகொட்டி கொம்பினால் எறித்துவர இரண்டு நாழிகையில் நாறுபோல் உருகும். அந்த உருகும்பதம் பார்த்து யிரக்கி விடவேண்டும். அதற்கு முன்னதாக மெழுகினால் அச்சுசெய்து வைத்திருந்து அந்த அச்சில் ஷை காந்தத்தைச் சாய்க்க அது அந்த அச்சில் பாய்ந்து இன்னம்போலாகும் அதை அரைநாழிகை சென்றுபார்க்க காந்தக்கின்னமானது விநோதமாகத் தோற்றும்.

910. மிட்டாய் வகைகள் அழைப்பிக்கும் ஜாலம்.

ஜாலமாடுஞ்சபையில் வந்துநின்று ஒருபெரிய தாம்பாளத்தைக் கொண்டு வரும்படிச்சொல்லி அதை மேசைமேல் வைத்து அனைவரையும் பார்த்து, இந்த தாம்பாளத்தின் நிறைய பலவிதமான மிட்டாய்கள் வந்து நிறையும்படிச் செய்கிறேன் பாருங்களென்று உச்சாடனக்கருவை மாத்திரைக்கோலில் தடவிக்கொண்டு, ஐங்கோலக்கருவை விரலில் தொட்டு குட்டிச்சாத்தான் மந்திரத்தை 1008-செபிக்க குட்டி கண்ணுக்குத் தோற்றமாவான். அப்போது நீ அடே குட்டிச்சாத்தான் நீ இந்நொடிக்குள் மிட்டாய் கடைக்குச்சென்று அங்குள்ள தினுசுகளில் ஒன்றுகூடவிடாமல் வகைக்கு இரண்டறை பலமாக கொண்டுவந்து இதோ மேசைமேலிருக்குந் தட்டில் வையடாவென்று மந்திரத்தை செபித்துக் கொண்டே கருவைத் தாம்பாளத்தில்தடவி மேல் ஒரு குட்டையைமூடி சபையோர் பிரளும்படியாய் மாத்திரைக்கோலால் மூன்றுதரந்தட்டி குடையைத் திறந்துகாட்ட மிட்டாய்வகையெல்லாம் தட்டுநிறைய வந்திருக்கும்; சபையோர்கள் பிரமைகொண்டவர்போல் பார்த்து வேர்த்து முழிப்பார்கள்; நீ உடனே துணியைமூடி தாம்பாளத்தை அப்புறங் கொண்டுபோய்விட வேண்டும்.

911. பயந்தெளி வித்தை.

எத்தைச்சொன்னாலுங் கேட்கும் நத்தைச்சூரிசெடிக்கு ஆதிவாரமும் கிரானமுங்கூடிய தினத்தில் காப்புகட்டிப் பொங்கலிட்டு பலி கொடுத்து பூசைபோட்டு வேரைப்பிடுங்கிவந்து பூசையில்வைத்து 40-நாள் தவறாமல் பைரவர் மந்திரத்தை இருவேளையும் 1008-உருசெபித்து வந்து குளிசமாடிக் கட்டிக்கொண்டு சத்துருக்கள் முன்போக, வணங்கி வருவார்கள். மிருகங்கள் முன்போக கலந்து உறவாகவிளையாடும்; கொலைஞர்கள் முன்போக கருவிகளை மறைத்து நல்ல வார்த்தையாடுவார்கள்; வர்த்தகம் உத்தியோகம் கைத்தொழில் முதலானதும் விருத்தியாகும்; எடுத்தவேலைகள் இடையூறில்லாது முடியும். ஆனால் ஒவ்வொரு தொழிலுக்கும் போகும்போதெல்லாம் பைரவர் மந்திரத்தை ஜெபித்துப்போக வேண்டும்.

912. அற்புத ஜாலவித்தைகளாடும் மாயாசத்திக்கரு.

விஷந்தீண்டி இறந்த மனிதனைக் கொண்டுபோய் புதைத்த இடத்தைப் பார்த்துக்கொண்டிருந்து ஒருமண்டலஞ் சென்றபின்பு அதைத் தோண்டி அஸ்தியைக் கொண்டுவந்து அத்துடன் கூளியின் நிணமும் பித்தும் கரும்பூனையின் பித்தும் கள்ளிக்காக்கையின் பித்தும் நரைநரியின் நிணமும் பித்தும் கோட்டான் ரத்தம் பித்தும் மாடப்புறா பித்தும்

பச்சைப்பாம்பு பச்சோந்தி பச்சைத்தவளை கருங்கோழி முட்டை இவைகளை ஒருபாண்டத்திலிட்டு அத்துடன் நாய்ப்பாலை முசுமுசுக்கை முட்கொத்தான் நரிமிரட்டி தூதுளை கிழாநெல்லி கவுதும்பை வல்லாரை கருந்துளசி பத்மாட்சி வெள்ளருகு புளியாரை ஆதண்டை குப்பைமேனி பேய்ச்சுரை கையாந்தகரை பொடுதலை கஞ்சா அவுரி பிரமியம் நாயுருவி சிவகரந்தை செவ்வல்லி இவைகளின்வேர் வகைக்கு இரண்டுபலமாக எடுத்து மேற்படி பாண்டத்தில் சேர்த்து, அதனுடன் நிலப்பனைவேர் ஆகாச அமுக்கிருக்கிழங்கு மெருகங்கிழங்கு மிளகரனை வெட்பாலைவேர் ஆகாசகெருடன் கிழங்கு பூதவிருட்சம் அதன்பட்டை சித்திரமூலப்பட்டை செம்பருத்திவேர் துத்திவேர் பூவரசன்பட்டை அத்திவேர்பட்டை ஆலம்பட்டை அசோகவேர்பட்டை மாதளம்வேர் வில்வவேர் விலாமிச்சவேர் சரக்கொன்றைவேர் இதுகளை வகைக்கு ஒருபலமாக எடுத்து முன்மருந்தோடு சேர்த்து அதில் அரைபடி முத்தெண்ணெய் வார்த்து வாயை மூடி சீலைமண்செய்து மூன்றுநாள் சூரியபுடம் வைத்து நாலாநாள் பூமியில் ஒன்றரையடி பள்ளந்தோண்டி அதில் சுடுகாட்டுச்சாம்பலை கொஞ்சம் போட்டு அந்த குழிமத்தியில் ஒரு சிறிய கலசம்வைத்து கலசத்தின்மேல் ஒரு சாணகியின் மத்தியில் சிறிய துவாரஞ்செய்து பாண்டத்தின்கீழ் அதுபோலவே சிறிய துவாரஞ்செய்து ஜானகிமேல் அசையாமல்வைத்து சுடலை சாம்பலால் குழியைப்பக்குவமாய் மூடிவிடவேண்டும் அதன்பின் ஒருமண்டலஞ் சென்றதும் அக்குழிமேல் ஒரு சாதிவிரகால் 2-சாமமெரித்து தீ ஆறினபின் குழியைத்தோண்டி பாண்டத்தை யெடுத்து அப்புறம் வைத்து சிறியகலசத்தை எடுத்துப்பார்க்க தைலமிறங்கியிருக்கும். அதையெடுத்து அதனுடன் புனுகு கஸ்தூரி கோரோசனை இதுகள் வகைக்கு கால்கழஞ்சு சேர்த்து பூசையில்வைத்து மாயாசத்தி மந்திரம் ஓம் அறிம் ஸ்ரீம் நம் கிலியும் சவ்வும் ஐயும் மாயாசத்தி ரா ரா கிரியா சத்தி ரா ரா சிறிம் சுவகாவென்று 21 நாள் காலை மாலை தவறாமல் 1008 செபித்துக்கொண்டுவந்து சித்தியானவுடன் பூசைபோட்டு பலிகொடுத்து மையையெடுத்து சிமிளில் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு இஷ்டமான ஜாலங்கள் ஆடலாம்.

913. எலுமிச்சம்பழம் அந்தரமாகபோகும் ஜாலம்.

ஜாலமாடுஞ்சபையில் வந்துநின்று ஒரு எலுமிச்சம்பழத்தை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்தப்பழம் பறக்கும் வேடிக்கைப் பாருங்களென்று மாயாசத்தி மந்திரத்தை 1008 செபித்து கருவைத்தடவி ஆகாயமார்க்கமாக போவென்று சொல்ல உடனே பறக்கும்; பார்ப்பவர்கள் அந்தரதேவதை வசியமென்பார்கள்.

914. எலுமிச்சம்பழம் சொன்னபடி கேட்குஞ் ஜாலம்.

ஒரு எலுமிச்சம்பழத்தை முன்போல் கையிலெடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்தபழம் விளையாடும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திகருவை விரலில்தொட்டு செபித்து கருவை காயிற்றடவி அம்மணி! இந்தப் பழத்தை சபையோர்மடியின்மேல் குதித்து விளையாடி வரும்படிச்செய்வாயென்று தியானித்து பழத்தை பூமியின்மேல் வைக்க அந்தப் பழமானது ஜிவ்வென்று கிளம்பி சபையோர்கள் மடியின்மீதில்

போய்புரண்டு விளையாடிவரும். அனைவரும் ஆச்சரியப்பட்டு இது மகா புதுமையாக யிருக்குமென்று பிரமிப்பார்கள்; பழம் அவர்கள் கையில் அகப்படாது; உன்னிடம் வந்தவுடன் மையைத்துடைத்துவிட பழத்தின் விளையாட்டு நின்றுவிடும்.

915. எலுமிச்சம்பழம் மோகினியாகுஞ் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் ஒரு திரைகட்டி சுற்றிலும் பந்தோபஸ்து செய்து பிறகு எலுமிச்சம்பழத்தையெடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்த பழத்தை இந்த திரைக்குள்போடுகிறேன், மோகினி ஸ்திரியாகத் தோற்றும் விநோதத்தைப்பாருங்களென்று அனைவரையும் திரைக்குள் போய்பார்த்து வரும்படியாகச்செய்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து கருவு பழத்தின்மேல் தடவ மாயாமோகினியாகத் தோற்றும்; அதை அனைவருக்குங்காட்டி திரைமூட பழயபடி பழமாகவே இருக்கும்; அந்த மோகினியை இனி எந்தப் பிறப்பில் காணப்போகிறோமென்று ஏக்கங்கொள்வார்கள்.

916. எலுமிச்சம்பழம் ரிஷியாகுஞ் ஜாலம்.

இரவில் ஒரு விடுதியறையை சுத்தப்படுத்தி விளக்குவைத்து கதவை தாள்போட்டுக்கொண்டு ஒரு எலுமிச்சம் பழத்தை எடுத்து சபையோர்களுக்குக்காட்டி இந்தப்பழத்தை இந்த அறைக்குள்போட்டு கதவைமூடி திறக்கின்றேன், இந்த அறைக்குள் ரிஷி ஜெபஞ்செய்துகொண்டிருக்கும் விநோதத்தைப் பாருங்களென்று அனைவரையும் அறைக்குள் அனுப்பி சோதனைபார்க்கும்படிசெய்து, இதற்குள் நீ மாயாசக்திகருவை விரலில்தொட்டு மாயாசக்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து ரிஷி உருவாகத் தோற்றவேணுமென்று தியானித்து அனைவரையும் வெளியே வரும்படிசெய்து பழத்தை அறைக்குள் போட்டுமூடி கதவைத்தாளிட்டு மந்திரத்தைச் செபித்துக் கொண்டே வரவேண்டும். சற்றுநேரம் பொருத்து க வைத்திறந்துகாட்ட ரிஷி செபம்செய்துகொண்டு குந்தியிருப்பதுபோல் தோற்றும்; உடனே கதவை மூடித்திறக்க மாயமாகப்போய் விடும்; பார்த்தவர்கள் மனம்போன படிக்கெல்லாம் பேசுவார்கள்.

917. தேளாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வேப்பிலைக் கொத்தொன்றெடுத்து மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு மாயாசத்தி மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே வேப்பிலையையுருவி கீழேபோட கருந்தேளும் செந்தேளுமாக ஓடி பிறகு தானே மறைந்துவிடும்; பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

918. குளவியாகும் ஜால்ம்.

ஜாலமாடும் சபையில் அடுப்புக்கரியைக் கொண்டுவந்து சபையோர்களைப்பார்த்து இந்தக்கரியை கருங்குளவி செங்குளவியாக்கும் விநோதத்தைப்பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு மாயாசத்தி மந்திரத்தைச் செபித்துக்கொண்டே கரியையள்ளி குளவியாக வேணுமென்று கீழேபோட கருங்குளவியும் செங்குளவியுமாகத்தோன்றி பறக்கும்; பார்ப்பவர்கள் அதிசயிப்பார்கள்.

919. செய்யான் பூரானாகும் ஜாலம்.

மாயாசத்திகருவை வலதுகையில் தடவிக்கொண்டு சபையில்வந்து இதோமண்ணை அள்ளிப்போடுகிறேன், செய்யான் பூரானாகும் விநோதத்தைப் பாருங்களென்று மண்ணை கையிலள்ளி மந்திரத்தைச் செபித்துக் கொண்டே கீழேபோட செய்யானும் பூரானுமாகவோடும்.

920. பொன்வண்டாகும் ஜாலம்.

முன்போல் மாயாசத்திக்கருவை வலதுகையில் பூசிக்கொண்டு சபையில் நின்று சிவப்பு குண்டுமணியை கையிலள்ளிக்கொண்டு மாயாசத்தி மந்திரத்தை செபித்துக்கொண்டே பொன்வண்டுகளாக வேணுமென்று கீழேபோட சபையெங்கும் பொன்வண்டு மயமாகத்தோற்றும்; இவைகளைக் காண்பவர்கள் பூரிப்படைவார்கள்.

921. மஞ்சாக்குருவியாகும் ஜாலம்.

முன்போல் மாயாசத்திக்கருவை வலதுகையில் பூசிக்கொண்டு பத்திருபது கெச்சைக்காயையெடுத்து அனைவருக்குங்காட்டி இந்த காய்கள் மஞ்சாகுருவியாகும் விநோதத்தைப் பாருங்களென்று, மஞ்சாக்குருவியாக வேணுமென்று கெச்சைக்காயைவாரி பூமியில்போட மஞ்சாக்குருவிகளாக சபைமுழுதும் தோற்றும்; சபையோர் மனதில் சந்தோஷப்படுவார்கள்.

922. பாம்புண்டாகும் ஜாலம்.

தென்னையோலை ஒன்றெடுத்து அதின் முதுகிலுள்ள நரம்பையெடுத்துவிட்டு அந்த ஓலையைச் சுருளாகச்சுற்றி மேஜையின்மேல் வைத்து இந்த ஓலை பச்சைப்பாம்பாகும் வேடிக்கைப் பாருங்களென்று மாயாசத்திக் கருவை விரலில் தொட்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே அந்த ஓலைச்சுருளில்தடவி பச்சைப்பாம்பாகவேணுமென்று கீழேபோட பச்சைப்பாம்பாகத்தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்; அது உடனே மறைந்துவிடும்.

923. நல்லப்பாம்புண்டாகும் ஜாலம்.

முன்போலவே சபையில்வந்து நின்று பனவோலையைச் சுருளாகச் சுற்றி மேஜையின்மேல் வைத்து இந்த பனவோலை நல்லபாம்பாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவு விரலில் தொட்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே மாயாசத்திக்கருவை ஓலையில் தடவி பாம்பாகவேணுமென்று கீழே போட நல்லபாம்பாகத் தோற்றி விளையாடி மறைந்துபோம்; பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

924. மலைப்பாம்பாகும் ஜாலம்.

இரண்டுமார் நீளமும் கைபெருமனுமாக வைக்கோல் பிரியைச் சுற்றிக் கொண்டுவந்து இந்த வைக்கோற்பிரியை மலைப்பாம்பாக்கும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு மந்திரத்தைசெபித்துக் கருவை வைக்கோல்பிரியின்மேல் தடவி கீழே போட மலைப்பாம்பாகி சபையில் புரண்டு மறைந்துவிடும்.

925. கருவூமத்தனிலை பச்சைத்தவளையாகும் ஜாலம்

கருஊமத்தனிலை பத்துபதினைந்து கொண்டுவந்து இந்த ஊமத்தன் இலை பச்சைத்தவளையாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திமையை விரலில்தொட்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே கருவை இலையில்பூசிகீழேபோட சபையெங்கும் பச்சைத்தவளையாகத் தோன்றிய பிறகு மறைந்துபோகும்; சனங்கள்யெல்லாம் ஆச்சரியப்படுவார்கள்.

926. பச்சோந்தியாகும் ஜாலம்.

சுரைக்கொடியைக் கொண்டுவந்து ஜாண்நீளத்திற்கு பத்துப்பதினைந்து துண்டுகளாகவெட்டி மேஜையின்மேல்வைத்து இந்த சுரைக்கொடி பச்சோந்தியாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை கையில்தொட்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே கருவு கொடிகளின்மேல் தந்திரமாகப்பூசி, பச்சோந்தியாகவேணுமென்று கீழே போட சபையெங்கும் பச்சையோணானாகத் தோற்றும்; கண்டோர்கள் நெஞ்சம்பதைத்து துடித்து பலவாறாகப் பேசுவார்கள்.

927. கருநாகனாகும் ஜாலம்.

ஒரு வரகு வைக்கோற்கரை எடுத்து அனைவருக்குங் காட்டி இந்த வைக்கோல் கருநாகப்பாம்பாகும் இந்தவிநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவைத் தொட்டு மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே கருவை வைக்கோல்மீது தடவி கருநாகப்பாம்பாக வேணுமென்று கீழே போட கருநாகப் பாம்பாகத்தோன்றி மறையும்.

928. கெடைகம்ப வித்தை.

முப்பது நாற்பது அடி உயரமுள்ள ஒருகெடகம்பத்தைநட்டு அதை சாயவொட்டாமல் நாலுபக்கத்திலும் முளையடித்து நால்கயிற்றினால் பந்தோபஸ்தாகக்கட்டி, பின்பு மாயாசத்திமையை கம்பத்தில்தடவி மாயாசத்திமந்திரத்தை செபித்துக்கொண்டே; கெடைமீது பயமில்லாமலேறி இஷ்டப்படி விளையாடலாம். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

929. கல்லுருளும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்திலாவது இன்னம் எந்த இடத்திலாவது ஒருபெரிய பாராங்கல்லை பிறட்டிக்கொண்டு வரும்படிசெய்து சபையோர்களைப் பார்த்து இந்த பாராங்கல்லை கடகடவென்று உருளும்படி செய்கிறேன், பாருங்களென்று மாயாசத்திக்கருவைத் தெளித்து இந்தஇடத்தில் உருளுவாய் என்று மந்திரத்தைச் சொல்லிக் கொண்டேயிருக்க கடகடவென்பதாகப்பிரளும். கண்டோர்கள் பிரமித்துநிற்பார்கள்; மந்திரத்தைநிறுத்திமையைத் துடைத்துவிட பிறளுவது நின்றுவிடும்.

930. முட்டை பறக்கும் ஜாலம்.

ஒரு கோழிமுட்டையையெடுத்து அனைவருக்குங்காட்டி மேசையின் மேல்வைத்து இந்தமுட்டை ஆகாயமார்க்கமாகப்போகும் அற்புதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு மந்திரத்தை ஆயிரத்தெட்டுசெபித்து தந்திரமாகக்கருவை முட்டையின்மேல்தடவி ஆகாய

மார்க்கமாகப்போகும், அனைவரும் இது அந்தரதேவதை வசியமென்று ஆச்சரியப்படுவார்கள்.

931. பந்தாடும் ஜாலம்.

ஐந்துபந்தை கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி மேசையின் மேல் வைத்து இந்த ஐந்துபந்தும் ஐம்பதுபந்துகளாக விளையாடும் அதிசயத்தைபாருங்களென்று மாயாசத்திக் கருவைத்தொட்டு இரண்டுகையிலும் பூசிக்கொண்டு மந்திரத்தை செபித் துக்கொண்டே பந்தையெடுத்துவிளையாட பார்ப்போர்கள் கண்களுக்கு ஐம்பது பந்துகளாகத் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள். நீ உடனே கையில்பூசிய கருவை கழுவிவிட்டு பந்தையெடுக்க ஐந்து பந்தாகத்தோற்றும்.

932. கெச்சக்காய் வித்தை.

ஜாலமாடுமிடத்தில் வந்துநின்று ஒருபடி கெச்சக்காயை எடுத்து அனைவருக்குங்காட்டி மேஜையின்மேல்வைத்து இந்த கெச்சக்காய்கள் ஒன்றோடொன்று தாக்கிபிறளும் விநோதத்தைப்பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு இரண்டுகையிலும் பூசிக்மொண்டு மந்திரத்தை ஜெபித்து இரண்டுகையிலும் காயைவாரி கீழேபோட அவைகள் ஒன்றோடொன்று தாக்கிக்கொண்டு வாசலெல்லாம் பிறளும் ஆச்சரியப் படுவார்கள்; கருவைக்கழுவிவிட நின்றுவிடும்.

933. வேறுமுறை மாஞ்செடி முளையும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒரு மாங்கொட்டையை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்தகொட்டை பூமியில் புதைக்கிறேன், உடனே மாஞ்செடியாகி பூ பூர்த்து காய்த்து பழுக்கும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை மாங்கொட்டையில்தடவி மந்திரத்தைச்செபித்து மாஞ்செடியாகி காய் பழம் முதலானதும் காய்த்திருக்கும்படி தோற்றவேணுமென்று பூமியில்கொஞ்சம் பள்ளந்தோண்டி மந்திரத்தைச்செபித்துக்கொண்டே மாங்கொட்டையைப் புதைத்து ஜலம்கொஞ்சம் விட்டு கூடையைப்போட்டு மூடித்திறக்க சொன்னதுபோ லிருக்கும்; சற்று நேரம் பொருத்து முன்போல்மூடித் திறந்துகாட்ட மாயமாக மறைந்து போம்.

934. பலகரை ஜாலம்.

ஐம்பது பலகரையையெடுத்து அனைவருக்குங்காட்டி இந்த ஐம்பது பலகரையும் ஒன்றோடொன்று தாக்கிக்கொண்டு விளையாடும் வேடிக்கையை பாருங்களென்று மாயாசத்திகருவை விரலில்தொட்டு இரண்டு கையிலும் தடவிக்கொண்டு மந்திரத்தை செபித்து பலகரையை கையில் வாரி கீழேபோட அவைகள் ஒன்றோடொன்று தாக்கிக்கொண்டு குதித்து விளையாடும்; ஆனால் முன்போல் மறைத்துவிடவேண்டும்.

935. குண்டுமணி ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் 1-படி குண்டுமணியையெடுத்து அனைவருக்குங் காட்டி இந்தகுண்டுமணிகள் ஒன்றோடொன்று தாக்கிவிளையாடும் வேடிக்

கையைப் பாருங்களென்று மாயாசத்தி கருவை விரலில்தொட்டு கையிற் பூசிக்கொண்டு மந்திரத்தைச் செபித்து குண்டுமணியை அள்ளி கீழே போட அவைகள் ஒன்றோடொன்று தாக்கிக்கொண்டு வேடிக்கையாக விளையாடும்.

936. கத்தரிக்கோல் ஜாலம்.

இரண்டு கத்திரிக்கோலை எடுத்து அனைவருக்குங்காட்டி மேஜையின்மேல் வைத்து இந்த கத்திரிக்கோல்கள் ஒன்றோடொன்று தாக்கி யுத்தம்புரிவதை பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு மந்திரத்தைஜெபித்து தந்திரமாககருவை கத்திரிக்கோல்களில் பூசி யுத்தஞ்செய்யென்று ஜெபிக்க அவைகள் உடனேகிளம்பி ஒன்றோடொன்று யுத்தம்புரியும்; கருவை துடைத்துவிட நின்று விடும்.

937. ரசகுண்டு ஜாலம்.

பத்துப் பதினைந்து ரசகுண்டுகளை எடுத்து சபையோர்களுக்கு காட்டி இந்த குண்டுகள் விளையாடும் விநோதத்தைப் பாருங்களென்று மாயா சத்திகருவை விரலில்தொட்டு வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே ஒவ்வொரு குண்டாக வலதுகையிலெடுத்து பந்தாடுவதுபோல் ஆட பார்ப்போர் கண்களுக்கு ஆயிரம் ரசகுண்டுகள் ஆகாயத்தில் ஆடுவதுபோல் தோற்றும்; ஆசசரியப்படுவார்கள். உடனே கையில் தடவிய கருவைக்கழுவிவிட முன்னிருந்த பதினைந்து குண்டாகத் தோற்றும்; இது மகாபுதுமையென்று புகழ்வார்கள்.

938. தேங்காய் ஜாலம்.

ஒரு தேங்காயை எடுத்து அதற்கு மஞ்சள் தடவி குங்குமமிட்டு சபையோர்களுக்குக்காட்டி தேங்காயை கீழேவைத்து இந்த தேங்காய் இந்த வாசலெல்லாம் புரளும் வேடிக்கையைப் பாருங்களென்று மாயா சத்திக்கருவை விரலில்தொட்டு காயின்மேல் தடவி மந்திரத்தை ஜெபித்துக் கொண்டேயிருக்க தேங்காய் கடகடவென்று வாசலில் புரளும்; பார்ப்போரெல்லாம் மிரண்டு இது பத்திரகாளி வசியமென்பார்கள். ஆனால் நீ உடனே தேங்காயை எடுத்துக் கழுவ புரளுவது நின்றுவிடும்.

939. கிளியாகும் ஜாலம்.

ஜாலமாடுஞ் சபையில் வந்துநின்று ஒரு பெரிய வெற்றிலையைக் கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி மேசையின்மேல்வைத்து இந்த வெற்றிலையைப் பச்சைக்கிளியாக்கும் வேடிக்கையைப் பாருங்களென்று மாயாசத்திமையை விரலில்தொட்டு மந்திரத்தை 1008 செபித்து தந்திரமாக கருவை வெற்றிலையில் தடவி ஒரு கூடைபோட்டுமூடி சற்றுநேரம் பொருத்து திறந்துகாட்ட பச்சைக் கிளியாகத் தோற்றும். அதை அனைவர்க்குங்காட்டி உடனே வெற்றிலையைக் கழுவ முன்போல் வெற்றிலையாக இருக்கும்.

940. புறுவாகும் ஜாலம்.

ஒரு எலுமிச்சம்பழத்தை யெடுத்து அனைவருக்குங்காட்டி மேசைமேல்வைத்து இந்தப்பழம் புறுவாகும் வேடிக்கையைப் பாருங்களென்று

மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு மந்திரத்தை 1008 ஓதி பழம் புறுவாகத் தோற்றவேணுமென்று தந்திரமாகக் கருவை பழத்தின்மேல் தடவி கூடைபோட்டு மூடி சற்றுநேரம் பொருத்து திறந்துகாட்ட புறுவாகத்தோற்றும்; ஆச்சரியப்பட்டு உன்னைப் புகழ்வார்கள். ஆனால் நீ முன்போல் பழத்தைக் கழுவ முன்போல் பழமாக இருக்கும்.

941. ஆற்றுத் துமட்டிக்காய் வித்தை.

ஜாலமாடுமிடத்தில் வந்துநின்று ஐந்து துமட்டிக்காயெடுத்து அனைவர்க்குங் காட்டி மேசைமேல்வைத்து இந்த ஐந்துகாய் ஐந்து மைனாவாகு மற்புதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில் தொட்டு மந்திரங்கள் 1008 செபித்து மயினாவாகத் தோற்றவேணுமென்று கருவைதந்திரமாக ஐந்து காயிலுந் தடவி முன்போல் சற்றுநேரம் பொருத்து திறந்துகாட்ட மயினாவாகத் தோற்றும்; அனைவருமாச்சரியப்படுவார்கள். உடனே நீ முன்போல் மறைத்துவிடவும்.

942. கரு ஊமத்தங்காய் வித்தை.

ஒரு கரு ஊமத்தங் காயெடுத்து அனைவர்க்குங்காட்டி இந்த ஊமத்தங்காய் காகமாகும் காட்சியைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு மந்திரங்கள் 1008 செபித்து காகமாக வேண்டுமென்று கருவை தந்திரமாக காயின்மேல் தடவி கூடைபோட்டு மூடி சற்றுநேரம் பொருத்து திறந்துகாட்ட காகமாகத் தோற்றும்; அனைவரும்பார்த்து ஆச்சரியப்படுவார்கள். உடனே நீ முன்போல் செய்து மறைத்துவிட வேண்டியது.

943. பச்சைநெல் ஜாலம்.

ஜாலமாடுஞ் சபைக்கு வருமுன்னமே மாயாசத்திக் கருவை வலதுகையில் பூசிக்கொண்டுவந்து ஒருபிடி நெல் மேசைமேல் கொண்டுவந்து வைக்கும்படிச் செய்து அந்த நெல்லை அள்ளிக் கீழேபோட பொன்னெல்லாகத் தோற்றும். அனைவரு மெடுத்துப்பார்த்து ஆச்சரியப்படுவார்கள்.

944. எதிரி வணங்கிவரும் ஜாலம்.

ஒரு பனையோலைத் துண்டில் எதிரியினுடைய பெயரெழுதி மாயா சத்திக் கருவைத்தொட்டு ஓலைத்துண்டின்மேல் பூசி மந்திரத்தை 1008 செபித்து அதைக் கொண்டுபோய்ப் பிடாரிகோயிலுக்கு பின்புறத்தில் புதைக்க எதிரியானவன் உன்னைத் தேடிவந்து உன்னிஷ்டம்போல் நடப்பான்.

945. புளியங்காய் ஜாலம்

சபையில் வந்துநின்று நாலைந்து புளியங்காயெடுத்து அனைவர்க்குங் காட்டி மேசைமேல்வைத்து இந்தப்புளியங்காயை தேவாங்காக்குகிறேன் பாருங்களென்று மாயாசத்திக்கருவை தந்திரமாகத்தடவி மேலே கூடையைப்போட்டுமூடி மந்திரத்தை செபித்துக் கொண்டே சற்றுநேரம்

பொருத்து கூடையைத் திறந்துகாட்ட தேவாங்காகத்தோற்றும். அனை வர்க்குக்காண்பித்து நீமுன்போல் மறைத்துவிடவேண்டியது.

946. மாதளஞ்செடியாகும் ஜாலம்.

சபையில்வந்துநின்று மாதுளன்விதை ஒன்றெடுத்து அனைவர்க்குங் காட்டி இந்தவிதையை பூமியில் புதைத்துவிடுகிறேன், இது உடனே செடியாகி புஷ்பித்து காய்த்து பழம் பழுக்கும் வேடிக்கைகளைப் பாருங்களென்று மாயாசத்திக் கருவைத்தடவி பூமியில் புதைத்து ஜலம்விட்டு பெரிய கூடைபோட்டு மூடி மாயாசத்தியைத் தியானித்துக்கொண்டே சற்றுநேரம் பொருத்து கூடையைத்திறந்துவிட பார்ப்போர்கள் பிரமிக்கும்படி மாதுளஞ்செடியாகி பூ காய் பழங்களாகத்தோற்றும்; அனைவரும் ஆச்சரியப்பட்டு உன்னைப்புகழ்வார்கள். ஆனால் நீ முன்போல் செய்து மூடித்திறக்க மறைந்துபோம்.

947. கத்திரிசெடி முளைபடும் ஜாலம்.

சபையில் வந்துநின்று ஒரு கத்திரி நாத்தெடுத்து அனைவர்க்குங் காட்டி இந்த நாத்தைநட்டு ஜலம்வார்க்கிறேன், உடனே பூ பூர்த்து காய்கள் காய்க்கும் விநோதத்தைப் பாருங்களென்று சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து கருவை கத்திரிநாத்தின்மேல் தடவி பூமியில்நட்டு ஜலம்விட்டு உடனே பூ பூர்த்து காய்க்கவேணுமென்று மந்திரத்தை தியானித்துக் கொண்டே செடியின்மேல் கூடைப்போட்டு மூடி சற்று நேரம்பொருத்து திறந்துகாட்ட கத்திரிசெடி தழைத்து கிளைகள்விட்டு பூ பூர்த்து காய்கள் காய்த்து தொங்குவதுபோல் பார்ப்போர்களுக்குத் தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள்; நீ முன்போல் செய்து மூடி மறைத்துவிடலாம்.

948. மிளகாய்செடி முளையும் ஜாலம்.

முன்போல் சபையில்வந்து ஒரு மிளகாய்செடி நாற்றையெடுத்து அனைவருக்குங்காட்டி இந்தநாற்றை பூமியில்நட்டு உடனே பூ பூர்த்து காய்க்கும்படி செய்கிறேன் பாருங்களென்று மாயாசத்திகருவை நாற்றின்மேல்தடவி உடனே பூ பூர்த்து காய்க்கவேணுமென்று பூமியில்நட்டு ஜலம்விட்டு கூடையைப்போட்டுமூடி மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே சற்றுநேரம் பொருத்து திறந்துகாட்ட மிளகாய்செடி தழைத்து பூத்து காய்காய்த்து பழம் பழுத்து விநோதமாகத் தோற்றும். பார்ப்போரெல்லாம் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள், நீ முன்போல் செய்து மறைத்துவிடவேண்டும்.

949. வேறுமுறை தாமரைத்தடாகம் உண்டாகும் ஜாலம்.

இரவில் ஒரு மைதானத்திற் சென்று அங்கே சவுக்கமாக கோடுகீறி நாலுமூலைக்கும் நாலுமுளையடித்து பின்பு தன்னுடன் வந்தவர்களைப் பார்த்து இதோ இங்கு தாமரைத்தடாகம் உண்டாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில் தொட்டுக்கொண்டு மந்திரத்தைச் செபித்து நாலுமூலையிலும் கருவைப்பூசி பிறகு தடாகமுண்

டாக வேணுமென்றதும் உண்டாகி தன்னுடன் வந்திருப்பவர்கள் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள். அப்போது நீ அவர்களைப்பார்த்து இந்த தடாகத்தை மாயமாக மறைந்து போகும்படி செய்கிறேன் பாருங்களென்று தந்திரமாக குளத்தைச் சுற்றிவருவதுபோல் நாலுமூலையிலுள்ள முளையைப்பிடுங்கிவிட தடாகம் மாயமாய் மறைந்துபோகும்.

950. மேஜைமேல் வைத்த தேங்காய் மாயமாய்ப்போகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று ஒரு தேங்காயையெடுத்து அனைவருக்குங்காட்டி அதற்கு மஞ்சள்தடவி குங்குமமிட்டு மேஜையின்மேல் வைத்து, இந்த தேங்காய் மாயமாய்ப்போகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திகருவை விரலில்தொட்டு மந்திரத்தை 1008 உரு ஜெபித்து மாயமாய்ப் போகவேணுமென்று கருவை தந்திரமாக காயின் மேல்பூசி தேங்காயை அனைவரையும் பார்க்கச்சொல்லி கூடையைப் போட்டுமூடி சற்றுநேரம்பொருத்து திறந்துகாட்ட, தேங்காய் மாயமாய் மறைந்துவிட்டதென்று அனைவரும் ஆச்சரியப்படுவார்கள். அப்போது நீ அவர்களைப்பார்த்து மாயமாய்ப்போன தேங்காயை வரவழைக்கிறேன் பாருங்களென்று தேங்காய்மீது பூசினகருவை துடைத்துவிட்டு முன்போல் மூடித்திறந்துகாட்ட தேங்காயிலிருக்கும் புதுமையைக்கண்டு புகழ்வார்கள்.

951: மணல் துவரையாகும் ஜாலம்.

சபையில் வந்துநின்று ஒருபிடி ஆற்றுமணல் கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி இந்தமணல் துவரையாகும் விநோதங்களைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு பூசிக்கொண்டு மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து மணலை கையில்வாரி ஒருஉழக்கில் போட்டு மேலே ஒருதுணியை மூடி துவரையாக வேணுமென்று மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே சற்றுநேரம்பொருத்து திறந்து கொட்டிகாட்ட துவரையாயிருக்கும்; பார்ப்போர்கள் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள், பிறகு துவரையை உழக்கில்போட்டு மூடிகவிழ்க்க மணலாகும்.

952 மணல் கடலையாகும் ஜாலம்.

முன்போலவே மணலையள்ளி கடலையாகும் அதிசயத்தைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை செபித்துக்கொண்டே கடலையாக வேணுமென்று மணலைவாரி உழக்கில் போட்டு மூடி சற்றுநேரம்பொருத்து திறந்து கொட்டிக்காட்ட கடலையாகயிருக்கும்; அனைவரும் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். பின்பு முன்போல் நீ கடலையை உழக்கில்போட்டு மூடி திறந்துகாட்ட எப்போதும்போல் மணலாகிவிடும்; மறுபடியும் பிரமானந்தங் கொள்வார்கள்.

953. மணல் மொச்சக்கோட்டையாகும் ஜாலம்.

முன்போல் மணலையள்ளி அனைவருக்குங் காட்டிவைத்து இந்த மணல் மொச்சக்கொட்டையாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயா சத்திக்கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை செபித்துக்கொண்டே மணல் மொச்சக்கொட்டையாக வேணுமென்று மணலை

அள்ளி உழக்கில்போட்டு மூடித்திறந்து கொட்டிக்காட்ட மொச்சக் கொட்டையாகத் தோற்றும்; அதை அனைவருக்குங்காட்டி முன்போல் மொச்சக்கொட்டையை உழக்கில் போட்டு மூடி திறந்துகாட்ட மணலாகிவிடும்; கண்டுகளிப்பார்கள்.

954. மணல் பச்சைப்பயறாகும் ஜாலம்.

முன்போலவே ஆற்றுமணலை அள்ளி சபையோர்களுக்கு காட்டி வைத்து இந்த மணல் பச்சைப்பயறாகும் வேடிக்கையைப் பாருங்களென்று மாயாசத்தி கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை செபித்துக்கொண்டே மணல் பச்சைப் பயறாகவேண்டுமென்று மணலை அள்ளி உழக்கில்போட்டு மூடித்திறந்து கொட்டிகாட்ட பச்சைப் பயறாகத்தோற்றும். அதை அனைவருக்குங்காட்டி முன்போல் பச்சைப்பயறை உழக்கில்போட்டு மூடி திறந்துகாட்ட மணலாகிவிடும்; அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

955. மணல் உளுந்தாகும் ஜாலம்.

முன்போலவே ஆற்றுமணலை அள்ளி அனைவருக்குங்காட்டி வைத்துவிட்டு இந்த மணலை உளுந்தாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை வலதுகையில் பூசிக்கொண்டு உளுந்தாகவேண்டுமென்று மணலைவாரி உழக்கில் போட்டு மூடி திறந்து கொட்டிக்காட்ட மணல் உளுந்தாகத்தோற்றும்; அனைவருக்குங்காட்டி முன்பேல் உளுந்தை உழக்கில் போட்டுமூடி திறந்துகாட்ட மணலாகிவிடும்; அதிசயப்படுவார்.

956. மணல் மலைத்துவரையாகும் ஜாலம்.

முன்போல் ஆற்று மணலை அள்ளி அனைவர் களுக்குங் காட்டி வைத்து இந்த மணல் மலைத் துவரையாகும் அற்புதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக் கருவை வலது கையில் பூசிக்கொண்டு மந்திரத்தைச் செபித்துக்கொண்டே மணல் மலைத்துவரை யாகவேணுமென்று மணலை உழக்கில் போட்டு மூடித்திறந்துக் கொட்டிக்காட்ட மலைத்துவரையாகத் தோற்றும்; அனைவர்க்குங்காட்டி முன்போல் துவரையை உழக்கில்போட்டு மூடித் திறந்துக்காட்ட முன்போல் மணலாகும்.

957. மணல் பட்டாணியாகும் ஜாலம்.

முன்போலவே மணலையள்ளி அனைவர்க்குங் காட்டிவைத்து இந்த மணல் பட்டாணியாகும் வேடிக்கைப் பாருங்களென்று மாயாசத்திக் கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டு மணல் பட்டாணியாகத் தோற்றவேணுமென்று மணலைவாரி உழக்கில் போட்டு மூடித்திரந்துக் கொட்டிக்காட்ட மணல் பட்டாணியாகத் தோற்றும்; அதையெடுத்து அனைவர்க்குங்காட்டி முன்போல் பட்டாணியை உழக்கில்போட்டு மூடித்திறந்துகாட்ட மணலாகும்; பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள்.

958. மணல் காராமணியாகும் வித்தை.

முன்போலவே மணலையள்ளி அனைவர்க்குங்காட்டி வைத்து இந்த மணல் காராமணியாகும் வேடிக்கைப் பாருங்களென்று மாயாசத்திக்

கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே மணல் காராமணியாகத் தோற்றவேணுமென்று மணலையள்ளி உழக்கில் போட்டு மூடித்திறந்து கொட்டிக்காட்ட மணல் காராமணியாகத் தோற்றும்; பிறகு காராமணியை உழக்கில்போட்டு மூடி திறந்து கொட்டிக் காட்ட ஆற்றுமணலாகும் ஆச்சரியப்படுவார்கள்.

959. மணல் கோதுமையாகும் வித்தை

முன்போலவே மணலையள்ளி அனைவருக்குங் காட்டிவைத்து இந்த மணல் கோதுமையாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக் கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரங்களை செபித்துக்கொண்டே மணல் கோதுமையாகத் தோற்றவேணுமென்று மணலையள்ளி உழக்கில் போட்டு மூடித்திறந்து கொட்டிக்காட்ட ஆற்றுமணலாகும். இது அற்புதமான வித்தையென்பார்கள்.

960. மணல் பச்சைநெல்லாகும் ஜாலம்

முன்போலவே ஆற்றுமணலையள்ளி அனைவர்க்குங் காட்டிவைத்து இந்த மணல் பச்சைநெல்லாகும் வேடிக்கைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே மணல் பசசை நெல்லாக வேணுமென்று மணலையள்ளி உழக்கில்போட்டு மூடி திரந்து கொட்டிங்காட்ட ஆற்று மணலாகயிருக்கும் அனைவரும் திகைத்து பிரமிப்பார்கள்.

961. மணல் சோளமாகும் ஜாலம்.

முன்போலவே ஆற்றுமணலை அனைவர்க்குங் காட்டிவைத்து இந்த மணல் சோளமாகும் விநோதங்களைப் பாருங்களென்று மாயாசத்திக் கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தைஜெபித்துக்கொண்டே மணல் சோளமாகவேணுமென்று மணலையள்ளி உழக்கில்போட்டு மூடித் திறந்துக் கொட்டிக்காட்ட சோளமாகத்தோற்றும்; அனைவர்க்குங்காட்டி முன்போல் சோளத்தை உழக்கில்போட்டு மூடிதிறந்து கொட்டிக்காட்ட முன்போல் மணலாகிவிடும்; அனைவரும் ஆச்சரியப்பட்டு இது கண்கட்டு வித்தையென்பார்கள்.

962. மணல் கம்பாகும் வித்தை.

முன்போலவே ஆற்றுமணலையள்ளி அனைவர்க்குங் காட்டிவைத்து இந்தமணல் கம்பாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக் கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை செபித்துக்கொண்டே மணல் கம்பாகத் தோற்றவேணுமென்று மணலை அள்ளி உழக்கில் போட்டு மூடித்திறந்து கொட்டிக்காட்ட கம்பாகத்தோற்றும்; அனைவருக் குங்காட்டி முன்போல் கம்பை உழக்கில்போட்டு மூடித்திறந்துகாட்ட ஆற்றுமணலாகிவிடும் இதைப் பார்ப்பவர்கள் குட்டிச்சாத்தான் ஏவலென்று பிரமிப்பார்கள்.

963. மணல் வரகாகும் வித்தை.

முன்போலவே ஆற்றுமணலையள்ளி அனைவர்க்குங்காட்டி வைத்து இந்தமணல் வரகாகும் வேடிக்கைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே மணல் வரகாகவேணுமென்று மணலையள்ளி உழக்கில்போட்டு மூடித்திறந்து கொட்டிக்காட்ட வரகாகத்தோற்றும் அதை எல்லோருக்குங் காட்டி முன்போல் வரகை உழக்கில்போட்டு மூடித்திறந்து கொட்டிக்காட்ட ஆற்றுமணலாகும்; ஆச்சரியப்படுவார்கள்.

964 மணல் கேழ்வரகாகும் வித்தை.

முன்போல்மணலையள்ளி அனைவர்க்குங்காட்டிவைத்து இந்தமணல் கேழ்வரகாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே மணல் கேழ்வரகாகத் தோற்றவேணுமென்று மணலையள்ளி உழக்கில்போட்டு மூடித்திறந்து கொட்டிக்காட்ட கேழ்வரகாகத்தோற்றும். பின் முன்போல் கேழ்வரகை உழக்கில்போட்டு மூடித்திறந்து கொட்டிக்காட்ட ஆற்று மணலாக இருக்கும்; இது அற்புதமான வித்தையென்பார்கள்.

965. மணல் தினையாகும் ஜாலம்.

முன்போல் ஆற்றுமணலை அள்ளி அனைவருக்குங்காட்டி வைத்து இந்தமணல் தினையாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக் கருவை வலதுகையில்தடவிக்கொண்டு மந்திரத்தைஜெபித்துக் கொண்டே மணல் தினையாகத் தோற்றவேணுமென்று மணலை அள்ளி உழக்கில் போட்டுமூடித் திறந்து கொட்டிக்காட்ட தினையாகத்தோற்றும். அதை அனைவருக்குங்காட்டி முன்போல் தினையை உழக்கில்போட்டு மூடித் திறந்துகொட்ட ஆற்றுமணலாகத் தோற்றும்;இது என்னபுதுமை என்று எண்ணி மகிழ்வார்கள்.

966. மணல் கொள்ளாகும் ஜாலம்.

முன்போலவே ஆற்றுமணலையள்ளி அனைவருக்குங் காட்டிவைத்து இந்தமணல் கொள்ளாகும் வேடிக்கையைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை வலதுகையில் பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே மணல் கொள்ளாக வேணுமென்று மணலையள்ளி உழக்கில் போட்டு மூடித்திறந்து கொட்டிக்காட்ட கொள்ளாகத்தோன்றும்;அனைவருக்குங்காட்டி முன்போல்கொள்ளை உழக்கில்போட்டு மூடித்திறந்துக் கொட்டுக்காட்ட ஆற்றுமணலாகும்; அனைவரும் திகைத்து பிரமிப்பார்கள்.

967. மணல் எள்ளாகும் ஜாலம்.

முன்போலவே ஆற்றுமணலையள்ளி அனைவருக்குங்காட்டி வைத்து இந்தமணல் எள்ளாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக் கருவை வலதுகையில்பூசிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே

மணல் எள்ளாகத்தோற்றும்; அதை எல்லோருக்குங்காட்டி முன்போல் எள்ளை உழக்கில்போட்டு மூடித்திறந்துகொட்டஆற்றுமணலாகும்; அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

968. மணல் குண்டுமணியாகும் வித்தை.

முன்போலவே ஆற்றுமணலை எடுத்து அனைவருக்குங் காட்டி வைத்து இந்தமணல் குண்டுமணியாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை வலதுகையில்தடவிக்கொண்டு மந்திரத்தைஜெபித்துக்கொண்டே மணல் குண்டுமணியாக வேணுமென்று மணலை உழக்கில் போட்டு மூடித்திறந்து கொட்டிக்காட்ட குண்டுமணியாகத் தோற்றும். அதை அனைவருக்குங்காட்டி முன்போல் குண்டுமணியை உழக்கில் போட்டு மூடித்திறந்துகொட்ட ஆற்றுமணலாக இருக்கும்; ஆச்சரியப்படுவார்கள்

969. மணல் கீரைவிரையாகும் வித்தை.

முன்போலவே ஆற்றுமணலையள்ளி அனைவருக்குக்காட்டி வைத்து இந்த மணல் கீரைவிரையாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை வலதுகையில்தடவிக்கொண்டு மந்திரத்தை செபித்துக்கொண்டே மணல் கீரைவிரையாக வேணுமென்று மணலை அள்ளி உழக்கில்போட்டு மூடித்திறந்து கொட்டிக்காட்ட கீரைவிரையாகத் தோற்றும்; உடனே அதை உழக்கில்போட்டு மூடித்திறந்துகாட்ட மணலாயிருக்கும்; அதைக்கண்டு அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்,

970. மணல் கடுகாகும் வித்தை.

முன்போலவே ஆற்றுமணலையள்ளி அனைவருக்குங் காட்டிவைத்து இந்தமணல் கடுகாகும் காட்சியைப் பாருங்களென்று மாயாசத்திக் கருவை வலதுகையில் தடவிக்கொண்டு மந்திரத்தைச் செபித்துக் கொண்டே மணல் கடுகாகத் தோற்றவேணுமென்று மணலை அள்ளி உழக்கில்போட்டு திறந்து கொட்டிக்காட்ட கடுகாகத்தோற்றும்; அனைவருக்குங்காட்டி உடனே முன்போல் கடுகை உழக்கில்போட்டு மூடி சற்றுநேரம்பொருத்து கொட்டிக்காட்ட ஆற்றுமணலாகிவிடும், அனைவரும் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

971. மணல் மிளகாகும் வித்தை.

முன்போல் ஆற்றுமணலை அள்ளி எல்லோருக்குங் காட்டி வைத்து இந்த மணல் மிளகாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக் கருவை வலதுகையில் தடவிக்கொண்டு மந்திரத்தைச் செபித்துக் கொண்டே மணலை அள்ளி உழக்கில்போட்டு மூடி திறந்து கொட்டிக் காட்ட மிளகாகத்தோற்றும்; அதை எல்லோருக்குங் காட்டி முன்போல் மிளகை உழக்கில்போட்டுமூடி திறந்துகாட்ட ஆற்றுமணலாக விருக்கும் அது அற்புதமான வித்தையென்று புகழ்வார்கள்.

972. மணல் கொத்தமல்லியாகும் வித்தை.

முன்போலவே ஆற்றுமணலை எடுத்து அனைவருக்குங்காட்டி இந்த மணல் கொத்துமல்லியாகும் விநோதத்தைத்தைப் பாருங்களென்று

மாயாசத்திகருவை வலதுகையில் தடவிக்கொண்டு மந்திரத்தை செபித்துக்கொண்டே மணல் கொத்தமல்லியாக வேணுமென்று மணலை உழக்கில் போட்டு மூடி திறந்து கொட்டிக்காட்ட கொத்துமல்லியாகத் தோற்றும் அதை முன்போல் உழக்கில் போட்டு மூடி திறந்துகாட்ட ஆற்றுமணலாக இருக்கும், ஆச்சரியப்படுவார்கள்.

973. மணல் வெந்தியமாகும் வித்தை.

முன்போலவே ஆற்றுமணலையள்ளி அனைவருக்குங்காட்டி வைத்து இந்தமணல் வெந்தியமாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயா சத்தி கருவை வலதுகையில் தடவிக்கொண்டு மந்திரத்தை ஜெபித்துக் கொண்டே மணல் வெந்தியமாக வேணுமென்று மணலை யள்ளி உழக்கில்போட்டு மூடி திறந்து கொட்டிக்காட்ட வெந்தியமாகத்தோற்றும்; உடனே அதை உழக்கில்போட்டு மூடி திறந்துகாட்ட மணலாயிருக்கும் அதைக்கண்டு அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

974. மணல் சீரகமாகும் வித்தை.

முன்போலவே ஆற்றுமணலையள்ளி அனைவருக்குங்காட்டி வைத்து இந்தமணல் சீரகமாகும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக் கருவை வலதுகையில் தடவிக்கொண்டு மந்திரத்தை . ஜெபித்துக் கொண்டே மணல் சீரகமாகத் தோற்றவேணுமென்று மணலை அள்ளி உழக்கிற் போட்டுமூடி திறந்து கொட்டிக்காட்ட. சீரகமாகத்தோற்றும்; அதை அனைவருக்குங்காட்டி முன்போல் சீரகத்தை உழக்கில்போட்டு மூடி திறந்துகொட்ட ஆற்றுமணலாகத்தோற்றும். இது என்ன புதுமை என்று எண்ணி மகிழ்வார்கள். ஆனால் ஆற்றுமணலை ஆய்ந்து பெரு மணலாக எடுத்து வைத்திருக்கவேண்டும்.

975. புளியன்விதை சவரமாகும் வித்தை.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று ஒருபிடி புளியின்விதையைஅள்ளி அனைவருக்குங்காட்டி தாம்பாளத்திற்போட்டு மேஜையின்மேல்வைத்து இந்த புளியன்விதை சவரமாகும் விநோதத்தைப்பாருங்களென்று மாயா சத்திக்கருவை விரலில்தொட்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே புளியன்விதை சவரமாகவேணுமென்று கருவை தந்திரமாகக் கொட்டைகளின்மீது தெளித்து மேலே துணியைப்போட்டு மூடி சற்றுநேரம் பொருத்து திறந்துகாட்ட சவரன்களாகத் தோற்றும்; அதை அனைவருக்குங்காட்டி நீ முன்போல் துணியைப் போட்டுமூடி புளியங்கொட்டை மையைத் துடைத்துவிட முன்போன் புளியன்விதைகளாயிருக்கும்.

976. பலகரை ரூபாயாகும் வித்தை.

முன்போல் சபையில்வந்துநின்று ஒருபிடிபலகரையை அள்ளி அனைவருக்குங்காட்டி இந்த பலகரையை ரூபாயாகும் விநோதத்தைப்பாருங்களென்று கருவுகளை விரலில்தொட்டு மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே பலகரை ரூபாயாகவேணுமென்று கருவை பலகரைமீது தெளித்து முன்னே துணியால் மறைவுகட்டி சற்றுப்பொறுத்துத் திறந்து காட்ட ரூபாயாகத்தோணும். பார்த்தவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

977. எட்டிக்கோட்டை இஷ்டப்படி ஆடும் ஜாலம்.

பத்துப் பதினைந்து எட்டிக்கொட்டை யெடுத்து அனைவருக்குங் காட்டி இந்த கொட்டைகளாடும் விநோதத்தைப் பாருங்களென்று மேசையின்மேல்வைத்து மாயாசக்திக்கருவைத் தொட்டு மந்திரத்தை செபித்துக் கொண்டே கருவை கொட்டைமேல் தெளிக்க உடனே அக் கொட்டைகளானது ஜிவ்வென்றெழும்பி விளையாடும்; பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமாகவிருக்கும்; ஆனால் மந்திரத்தை நிறுத்தி மையைத்துடைத்து விட கொட்டைகள் எப்போதும்போல் விழுந்துகிடக்கும்.

978. புரு மாயமாய்ப்போகும் ஜாலம்.

சபையில் ஒரு புருவைப் பிடித்துவந்து இந்தப்புருவை கூடை போட்டுமூடி வைக்கிறேன் அது மாயமாகப் பறந்துபோய் ஆகாயத்தி லிருந்துவரும் வேடிக்கையைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை தொட்டு மாயாசத்தி மந்திரத்தை செபித்துக்கொண்டே, கூடையில் மூடியபுரு ஆகாயமார்க்கமாக யிருந்து இறங்குவதுபோல் தோற்றச் செய்குவாயென்று சத்தியைத்தியானித்து கருவைபுருமேல்தடவி கூடை போட்டுமூடி சற்றுநேரம் பொருத்து திறந்துகாட்ட சபையோர் களுக்கு புரு மாயமாய் போய்விட்டதுபோல் தோற்றும். அப்போது நீ புருவைத்தந்திரமாக ஆகாயத்தில்துறத்திவிட்டு பின்பு சபையோர்களைப் பார்த்து இதோ கூடையில் மூடியபுரு ஆகாயத்திலிருக்கிற வேடிக்கைப் பாருங்களெனக் காட்ட ஆச்சரியப்படுவார்கள்.

979. முத்துசரங் கோர்க்கும் ஜாலம்.

ஜாலசபைக்கு வருமுன்னமே செம்பினால் சிறிய தாம்பாள மிரண்டு. ஒரேமாதிரியாகச்செய்து வைத்துக் கொள்ளவும், ஒருமுழ நூலும் அது பிடிக்கும்படியான முத்து ஒரு தாம்பாளத்தில் வைத்து ஒருமுழ முத்து சரங்கோர்த்து அதை ஒரு தட்டில்வைத்து ஜாலமாடும்சபையில் கோர்க் காத முத்தையும் நூலையும் அனைவருக்குங்காட்டி இந்தநூல் முத்துகளைக் கோர்த்துக்கொள்ளும் விநோதத்தைப் பாருங்களென்று மறைவுமையை தட்டின்மேல் தெளித்துவிட அந்ததட்டு சபையோர்கண்களுக்குத் தெரி யாது. அதனை மாற்றிவிட்டு சரங்கோர்த்து வைத்திருக்கும் தட்டை வைத்து மூடித்திறந்து சரத்தை எடுத்துக்காட்ட ஆச்சரியப்பட்டு இது குட்டிச்சாத்தான் ஏவலென்பார்கள்.

980. பவளசரங் கோர்க்கும் ஜாலம்.

முன்போல் தாம்பாளஞ்சேகரித்து ஒன்றில் உதிரிபவழமும் அந்தப் பவழத்தைக் கோர்க்க போதுமான நூல்சரமும் வைத்துபிறகு ஜாலமாடுஞ் சபையில் உதிரி பவழத்தையும் நூலையுமெடுத்து அனைவருக்குங் காட்டி இதோ இந்த பவழத்தையும் நூலையும்வைத்து மூடிவிடுகிறேன். அது சரமாகக் கோர்த்திருக்கும் வேடிக்கைப் பாருங்களென்று மேஜை மேல்வைத்து மறைவுமையைத்தொட்டு ஜாலக்காளைப்பூசித்து உதிரிபவ ழமிருக்கும் தட்டின்மேல்தெளிக்க அங்கிருக்கும் சபையோர்களுக்குத்

தெரியாது; அப்போது நீ தந்திரமாக அந்த தட்டைமாற்றிவிட்டு பவள சரங்கோர்த்து வைத்திருக்கும் தட்டை மேஜைமேல்வைத்துமூடி சற்று நேரம்பொறுத்துத் திறந்து பவழசரத்தை எடுத்துக்காட்ட அனைவரும் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

981. பாஸமணி கோர்க்கும் ஜாலம்.

முன்போலவே இரண்டுதாம்பாளம் ஒரேமாதிரியாகச் செய்து ஒரு தட்டில் உதிரி பாலமணியும் நூல்சரமும்வைத்து மற்றொருதட்டில் பால மணிகோர்த்த சரத்தைவைத்து பிறகு ஜாலமாடுஞ்சபையில் உதிரி மணியும் நூல்சரமெடுத்து அனைவருக்குங்காட்டி இந்த உதிரி மணியையும் நூல்சரத்தையும் வைத்து மூடிவிடுகிறேன் அது சரமாகக்கோர்த்திருக்கு மற்புதம் பாருங்களென்று தட்டை மேஜைமேல்வைத்து ஜாலக்காரனை நியானித்து மறைவுமையை தாம்பாளத்தின்மீது தெளிக்க அது சபையோர் கண்களுக்குத்தெரியாது. அப்போது நீ அந்தத்தட்டை மறைத்துவிட்டு சரங்கோர்த்து வைத்திருக்குந் தாம்பாளத்தை மேஜைமேல் வைத்துமூடி சற்றுநேரம்பொருத்துத் திறந்துகாட்ட அனைவரும் மதி மயங்கி ஆச்சரியப்படுவார்கள்.

982. கிரமணி கோர்க்கும் ஜாலம்.

ஜாலமாடுஞ்சபைக்கு வருமுன்னமே ஒருமுழுநீளத்தில் பத்துகிர மணி சரங்கோர்த்து வைத்துக்கொள்ளவும்; ஒரு தாம்பாளத்தில் கிரமணியைப்போட்டு ஷை சரத்தளவு நூற்சரபெத்தும் மணியுடன் வைத்து அனைவருக்குங்காட்டி இதோ இந்த உதிரிமணியையும் நூல் சரட்டையும் மேஜைமேல்வைத்து மூடிவிடுகிறேன்; அது தானே சரங்கோர்த்துக் கொள்ளும் விநோதத்தைப் பாருங்களென்று மேஜைமேல்வைத்து மறைவுமை விரலில்தொட்டு தட்டின்மேல் தெளிக்க தாம்பாளமும் மணியும் நூல் சரட்டையும் மறைந்துவிட்டு ஷை கோர்த்து வைத்திருக்கும் பத்து சரத்தையும் தாம்பாளத்தில் தந்திரமாக வைத்துமூடி சற்றுநேரம்பொருத்துத் திறந்துகாட்ட உன்னைப் புகழ்வார்கள்.

983. பலவிதமணிகள் கோர்க்கும் ஜாலம்.

ஜாலமாடும் சபைக்கு வருமுன்னமே பலவித வர்ணமுள்ள மணிகளை எடுத்து நூல்சரட்டில் கலந்தாற்போல் மாற்றிமாற்றி கோர்த்து பத்துசரம் வைத்துக்கொள்ளவும்; பலவிதமான வர்ணமுள்ளமணிகளை ஷை சரத்திற்கு திட்டமான நூல் சரட்டையும் தாம்பாளத்தில் வைத்து சபையோர்களுக்குக்காட்டி இப்பலவித வர்ணமுள்ள மணிகள் ஒன்று மாற்றி ஒன்று கலந்தாற்போல் சரம் கோர்த்து வைக்கும் புதுமையைப் பாருங்களென்று தாம்பாளத்தை மேஜைமேல் வைத்து மறைவுமை விரலில் தொட்டு ஜாலக்காரனை பூஜித்து மையை தாம்பாளத்தின்மேல் தெளிக்க தாம்பாளம் ஒருவர் கண்ணுக்குந்தெரியாது, அப்போது நீ அந்த உதிரி மணியையும் நூல்சரட்டையும் மறைத்துவிட்டு கோர்த்துவைத்திருக்கும் சரத்தை தாம்பாளத்தில் வைத்துமூடி சற்றுநேரம்பொருத்து திறந்து எடுத்து சபையோர்களுக்குக் காட்ட பிரமித்து உன்னைப் புகழ்ந்து கொண்டாடுவார்கள்.

984. கூடையில் மூடிவைத்தபூனை மறைந்து மறுபடிவரும் ஜாலம்.

ஜாலமாடுஞ் சபையில் ஒரு பூனைக்குட்டியைப் பிடித்துவந்து அனைவர்க்குங்காட்டி இந்தபூனையை கூடைப்போட்டு மூடிவிடுகிறேன் அது மாயமாக மறைந்துபோய் மறுபடியும் வரும் விநோதங்களைப் பாருங்களென்று மறைவுமையை விரலில்தொட்டு ஜாலக்காரனைத் தியானித்து மையை பூனையின்மேல் அடையாளமாகத்தடவி கூடைபோட்டுமூடி, சற்றுநேரம் பொருத்துத்திறந்துகாட்ட பூனை அங்கேயே யிருந்தபோதிலும் சபையோர் கண்களுக்குத் தெரியாது, அனைவரும் பூனையைக் காணோமென்பார்கள். அப்போது நீ சபையோர்களைப் பார்த்து மாயமாய்ப் போன பூனை மறுபடியும் கூடைக்குள் வரும்படிச்செய்கிறேன், பாருங்களென்று ஒருவர்க்குந்தெரியாமல் தந்திரமாக பூனைமேல்தடவிய மையை போக்கிவிட்டு கூடையை எடுக்க பூனை தோன்றும்; ஆச்சரியப்படுவார்கள்.

985. கூண்டிலடைத்தகிளி மாயமாய்மறைந்து மறுபடிவரும்ஜாலம்

ஷை சபையில்நின்று ஒரு கிளியைப்பிடித்து கூண்டிலடைத்து அனைவரையும்பார்த்து இதோ இந்தக்கிளியை மூடிவிடுகிறேன் அது மாயமாக மறைந்து மறுபடியும் கூண்டில்வரும் விநோதத்தைப் பாருங்களென்று மறைவுமையை விரலில்தொட்டு சாலக்காரனைத் தியானித்து தந்திரமாக மையை கிளியின்மேல் தெளிக்க கிளி மாயமாய் மறையும். மையைப் போக்கி முன்போல் மூடித்திறக்க கிளியிருக்கும் சந்தோஷப்படுவார்கள்.

986. கூண்டிலடைத்தமைனா மறைந்து மறுபடிவரும் ஜாலம்.

முன்போல் சபையில்வந்துநின்று ஒரு மயினாவைப்பிடித்து கூண்டிலடைத்து இதோ இந்த மயினாவை மூடிவைக்கிறேன் அது மாயமாகப் போய் மறுபடியும்வரும் விநோதத்தைப் பாருங்களென்று மறைவுமை விரலில் தொட்டு சாலக்காரனைத் தியானித்து மையை மைனாமேல்தடவி மூடி திறந்துக்காட்ட மயினாயிருப்பது ஒருவர்க்குந் தெரியாது மாயமாய் போய்விட்டதென்றே எண்ணுவார்கள். அப்போது மாயமாய் மறைந்த மயினாவை மறுபடியும் கூண்டில் வரச்செய்கிறேன் பாருங்களென்று தந்திரமாக மயினாமேல் தடவிய மையைப்போக்கித் திறந்துகாட்ட மயினா விருக்கக்கண்டு மகிழ்ச்சியடைவார்கள்.

987. போனிலடைத்த புனுகுபூனைமறைந்து மறுபடிவரும் ஜாலம்.

ஜாலமாடுஞ் சபையில் ஒரு புனுகுபூனையைப் பிடித்து போனிலடைத்து இதோ இந்தப் புனுகுபூனை மறைந்துபோய் மறுபடியும் வரும் விநோதத்தைப் பாருமென்று மறைவுமையைத் தொட்டு ஜாலக்காரனை நினைத்து மையை போனில் ஒருபக்கந்தடவிவிட்டு முன்போல் மூடித் திறந்துகாட்ட பூனைத்தோற்றாது. சபையார் பூனை மாயமாய்ப்போய் விட்டதென்று நம்புவார்கள். தந்திரமாக போனில்தடவிய மையைப் போக்கி முன்போல் மூடித்திறந்துகாட்ட புனுகுபூனை போனிலிருக்கக் கண்டு மதிமயங்கி இது கண்கட்டு வித்தையென்பார்கள்.

988. பாம்பை பெட்டியில்போட்டு மூடிவைக்க மாயமாய்மறைந்து மறுபடியும் வரும் ஜாலம்.

ஜாலமாடுஞ் சபையில் பாம்புப் பெட்டியை அனைவருக்குங் காட்டி அதில் பாம்பைப்போட்டடைத்து மேல்மூடிவைத்து இந்தப்பாம்பு பெட்டியைவிட்டு மாயமாகப்போய் மறுபடியும் பெட்டியில்வரும் அற்புதத்தைப் பாருங்களென்று மையை விரலில்தொட்டு ஜாலக்காளை நினைத்து தந்திரமாக பாம்புப்பெட்டியில் தடவிமூடி சற்றுநேரம்பொருத்து திறந்து அனைவரையும் பார்க்கச்சொல்ல அவர்கள் கண்களுக்கு வெறும்பெட்டியாகத்தோன்றும்; அவர்கள் பாம்புமாயமாக போய்விட்டதென்று நம்புவார்கள், அப்போது நீ அவர்களைப்பார்த்து மாயமாய்ப்போன பாம்பைக் காட்டுகிறேனென்று மறுபடியும் பெட்டியில் தடவிய மையைப்போக்கி முன்போல் மூடித் திறந்துகாட்ட பெட்டியில் பாம்பு இருக்கக்கண்டு கொண்டாடுவார்கள்.

989. மூடிய கீரிப்பிள்ளை மாயமாய் மறைந்து மறுபடிவரும் ஜாலம்.

ஜாலமாடு மிடத்தில் ஒரு கீரிப்பிள்ளையைப் பிடித்து அனைவர்க்குங் காட்டி இந்த கீரிப்பிள்ளையைக் கூடைக்குள்போட்டு மூடிவிடுகிறேன் அது மாயமாக மறைந்துபோய் மறுபடியும் கூடைக்குவரும் விநோதத்தைப் பாருங்களென்று மறைவுமையை விரலில்தீண்டி ஜாலக்காளைத் தியானித்து தந்திரமாக மையை கீரிப்பிள்ளையின்மேல் தடவி பூமியில் வைத்து கூடையைப்போட்டு மூடித்திறக்க கீரிப்பிள்ளை மாயமாய்ப் போனதுபோலிருக்கும்; அனைவரும் பிரமித்து நிற்பார்கள். பிறகு தந்திரமாக கீரிப்பிள்ளைமேல்தடவிய மறைவுமையை போக்கிவிட்டு முன்போல் மூடித்திறந்துகாட்ட கீரிப்பிள்ளை கூடைக்குள் வந்திருக்கும்; அப்போது அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

990. மூடியபுறா மாயமாய் மறைந்து மறுபடிவரும் ஜாலம்.

முன்போலவே ஜாலமாடும் சபையில் வந்துநின்று ஒரு புறாவை யெடுத்து அனைவருக்குங்காட்டி இதோ இந்தப்புறாவை கூடையாக மூடிவிடுகிறேன்; இது மாயமாகமறைந்து மறுபடியும் வரும் வேடிக்கையைப் பாருங்களென்று மறைவுமையை விரலில்தீண்டி ஜாலக்காளை நினைத்து தந்திரமாக மையை புறாவின்மேல்தடவி தரையில்வைத்து கூடையைப் போட்டுமூடி அதின்மேல்துணியை மூடி சற்றுப்பொருத்து துணியை வாங்கி திறந்துகாட்ட புறாயிருப்பது தோற்றப்படாது, அப்போதவர்கள் புறாமாயமாப் போய்விட்டதென்று நம்புவார்கள். அப்போது நீ அவர்களைப்பார்த்து மாயமாய்ப்போன புறாவை மறுபடியும் கூடைக்குள் வரும்படி செய்கிறேன் பாருங்களென்று தந்திரமாக புறாவின்மேல் தடவிய மையைப்போக்கி முன்போல்மூடி திறந்துகாட்ட புறா கூடைக்குள்ளிருப்பதைகண்டு கண்பூர்த்து இது காளிவசியமென்பார்கள்.

991. போனிலடைத்தநரி மாயமாய்மறைந்து மறுபடிவரும் ஜாலம்.

ஒரு போன்செய்து அதில் ஒரு நரியைப்பிடித்து அடைத்து ஜாலமாடும்சபையில் கொண்டுவந்துநிறுத்தி அங்குள்ள அனைவரையும்பார்த்து

இந்தபோனிலிருக்கும் நரியைமூடிவைக்கிறேன் அது மாயமாகமறைந்து போய் மறுபடியும் போனுக்குள்வரும் விநோதத்தைப் பாருங்களென்று மறைவுமையை விரலில்தொட்டு ஜாலக்காளைத் தியானித்து மையைத் தந்திரமாக போனின் முன்னேதடவி மேலே ஒரு துணியைப்போட்டு மூடி சற்றுநேரம்பொருத்து துணியைத்திறந்துபார்க்க நரி மறைந்துவிட்டதுபோல்தோற்றும்; அனைவரும் விழிசிமிட்டாமல் பார்த்துப் பிரமிப்பார்கள். அப்போது நீ அவர்களைப்பார்த்து மாயமாய் மறைந்துபோனநரியைமறுபடியும் போனில் வரும்படிசெய்கிறேன் பாருங்களென்று உபாயமாக போனில் பூசியமையை துடைத்துவிட்டு முன்போல் மூடி திறந்துகாட்ட போனில் நரியிருக்கக்கண்டு ஆச்சரியப்பட்டு உன்னைப்புகழ்வார்கள்.

992. நாலுமூலையில் வைத்த எலுமிச்சம்பழம் ஒரு மூலையில் வந்துசேரும் ஜாலம்.

ஜாலமாடும்சபையில் நாலு எலுமிச்சம்பழத்தை எடுத்து அனைவருக்குங்காட்டி மேசையின்மேல் நாலுமூலையும் நாலுபழத்தை வைத்து அங்குள்ளவர்களைப் பார்த்து, இந்த நாலுபழத்தையும் தனித்தனியாக சிறிய கூடைப்போட்டு மூடிவிடுகிறேன் அந்த நாலுபழம் ஒரு கூடையில் வந்திருக்கும் வேடிக்கைப்பாருங்களென்று மறைவுமையை விரலில்தொட்டு தந்திரமாக மூன்று பழத்திற்குந்தடவி மற்ற ஒருவருக்கும் தெரியாமல் மூன்றுபழம் கூடசேர்த்து சிறியதட்டில் தனியேமூடி சற்றுநேரம் பொருத்து மைதடவி வைத்திலிக்கும் பழத்தின்தட்டை ஒவ்வொன்றாக திறந்துகாட்ட பழம் இல்லாததுபோல் தோற்றும் நாலாவது தட்டை திறந்துகாட்ட நாலுபழமும் தோற்றும் பார்ப்பவர்கள் பிரமித்து திகைப்பார்கள்.

993. நாலுமூலையில் வைத்த கோழிமுட்டை ஒரு மூலையில் வந்துசேரும் ஜாலம்.

முந்தி எலுமிச்சம்பழத்தை வைத்ததுபோல் மேசையின் நாலுமூலையிலும் நாலுமுட்டைவைத்து சனங்களைப்பார்த்து இந்த நாலுமுட்டையையும் தனித்தனியே சிறியதட்டைப்போட்டு மூடிவைக்கிறேன்; நாலும் ஒருதட்டுக்குள்வந்திருக்கும் விநோதத்தைப்பாருங்களென்று மறைவுமை விரலில் தொட்டுக்கொண்டு ஜாலக்காளைத் தியானித்து மையை தந்திரமாக மூன்றுமுட்டையின்மேல் தடவிமூடி நாலாவதுமுட்டையுடன் ஒருவருக்குந்தெரியாமல் மூன்று முட்டைகூடசேர்த்து இமைகொட்டு முன்னமே மூடி சற்றுநேரம் பொருத்து கருவைதடவியிருக்கும் முட்டையின் தட்டை ஒவ்வொன்றாக திறந்துகாட்ட முட்டையிருப்பது தெரியாது. நாலாவது தட்டைத் திறந்துகாட்ட நாலுமுட்டையும் அதிலிருக்கக் கண்டு ஆச்சரியப்படுவார்கள் அப்போது நீ அவர்களைப்பார்த்து முன்போலவே நாலுகூடையிலும் நாலுமுட்டை போகும்படிச் செய்கிறேன் பாருங்களென்று முட்டையின்மேல் பூசியமையை தந்திரமாக துடைத்து மூடி தட்டுசேர்ந்த மூன்றுமுட்டையும் மறைத்துவிட்டு மூடிதிறந்துகாட்ட நாலு கூடையிலும் நாலு முட்டையிருக்கும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

994. நாலுமூலையில்வைத்த கெச்சக்காய் ஒரு மூலையில் வந்துசேரும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் நாலுகெச்சக்காயை எடுத்து அனைவருக்குங்காட்டிமேஜையின்மேல் நாலுமூலையிலும்காயைவைத்து அங்குள்ளவர்களைப் பார்த்து இந்த நாலு காய்யும் தனித்தனியாக சிறிய தட்டுப்போட்டு மூடிவிடுகிறேன் அந்த நாலும் ஒரு கூடையில் வந்துசேரும் விநோதத்தைப் பாருங்களென்று மறைவுமையை விரலில்தொட்டு ஜாலக்காரனை தியானித்து மை மூன்காயின்மேல் தடவி மூடி நாலாவது காயுடன் தந்திரமாக மூன்று காயைச்சேர்த்து மூடி சற்றுநேரம் பொருத்து முன்போல்மூன்று தட்டையுந் திறந்துகாட்ட காய்கள் இல்லாததுபோலிருக்கும் நாலாவது தட்டைதிறந்துகாட்ட நாலுகாயும் அதில்தோன்றும்; அனைவரும்பார்த்து ஆச்சரியப்படுவார்கள். அப்போது நீ அவர்களைப்பார்த்துமுன்போல்நாலு தட்டிலும் நாலு காயைப்போகும்படி செய்கிறேன் பாருங்களென்று தந்திரமாக மைதுடைத்து மூடி அதிகமாகச்சேர்த்து காய் மூன்றையும் மறைத்து திறந்துகாட்ட நாலு தட்டிலும் நாலுகாயிருக்கும்; இதுமகா புதுமையென்று புகழ்வார்கள்.

995. மணல்சக்கரையாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் வந்துநின்று ஆற்றுமணலை அள்ளி அனைவருக்குங்காட்டிவைத்து இந்த மணலைசக்கரையாக்குகிறேன் பாருங்களென்று மாயாசத்தி மை வலதுகையில் பூசிக்கொண்டு மாயாசத்தி மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே மணல் சக்கரையாகத் தோற்றவேணுமென்ற மணலை அள்ளி உழக்கில் போட்டு மூடி சற்றுநேரம்பொருத்து திறந்து கொட்டிக்காட்ட துல்லியமான வெள்ளைசர்க்கரைபோல் தோன்றும். அதை அனைவருக்குங்காட்டி உடனே முன்போல் சக்கரை உழக்கில் போட்டு மூடி சற்றுநேரம்பொருத்து கொட்டிக்காட்ட ஆற்றுமணலாகிவிடும்; அனைவரும் பிரமித்து ஆச்சரியப்படுவார்கள்.

996. வேறுமுறை வழக்குவெல்லும் ஜாலம்.

சிறியாநங்கை செடிக்கு ஞாயிற்றுகிழமையில் மஞ்சள்நூல் காப்புகட்டி தூபதீபங்கொடுத்து வேரைப் பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் மாயாசத்தி மையை தடவி பூசையில்வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து பூசைமுதலானதும்போட்டு வேரையெடுத்துக் குளிசமாடி வைத்துக்கொள்ளவும். தனக்கு வழக்கு நேரிடுங்காலத்தில் குளிசத்தைக்கட்டிக் கொண்டுபோக வழக்கை வென்று எதிரியை ஜெயங் கொள்ளலாம்.

997. வேறு சத்துருவை ஜெயிக்கும் ஜாலம்.

சோனைப்புல்லென்னும் செடிக்கு திங்கட்கிழமையில் மஞ்சள்நூல் காப்புகட்டி தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிவந்து பூசையில் வைத்து மாயாசத்தி கருவைத் தடவி பூஜையில் வைத்து மாயாசத்திமந்திரத்தை 108 உருஜெபித்து பூசைபோட்டு வேரையெடுத்து வெள்ளித்தகட்டில் குளிசமாட்டிக்கொள்ள சத்துருக்கள் உன்னைக்கண்டால் சாந்தமாகப் பேசுவார்கள், உன்னிஷ்டம்போல் நடப்பார்கள்; நீ ஜெயம்பண்ணலாம்.

998. வேறு துலதூரம் நடக்கும் ஜாலம்.

காதானம் என்னுஞ்செடிக்கு மங்களவாரம் விருச்சிகலக்கினத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி தூபதீபங்கொடுத்து அதின் வடக்குப்போகும் வேரைப்பிடுங்கி அதின்மேல் மாயாசத்திக் கருவைத்தடவி பூசை முதலானதும் போட்டு வேரையெடுத்து குளிசமாடி வைத்துக்கொள்ளவும்; எங்கேயேனும் பிரயாணம் போக நேரிடுமாகில்அப்போது இந்த குளிசத்தை யெடுத்து வலதுகாலில்கட்டிக்கொண்டு எவ்வளவுதூரம் நடந்துபோனாலும் இளைப்பு ஆயாசம் இராது; கால்நோகாது.

999. வேறு ஸ்திரீவசிய ஜாலம்.

முல்லைசெடிக்கு ஆதிவாரம் கன்னியா லக்கினத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி மறுவாரம் துலாலக்கினத்தில் வேரைப்பிடுங்கிவந்து அதின் மேல் மாயாசத்திக் கருவைப்பூசி பூசையில் வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து பூசைமுதலானதும்போட்டு வேரையெடுத்து குளிசமாடி கட்டிக் கொண்டுபோக விரோதமான ஸ்திரீகளெல்லாம் உறவாடி வருவார்கள்; கேட்டதையெல்லாந் தருவார்கள். உன்னுடைய இஷ்டம்போலும் நடப்பார்கள்; உன்னையும் பின்தொடருவார்கள்.

1000. வேறு புருஷவசிய ஜாலம்.

சிற்றரத்தைசெடிக்கு வெள்ளிக்கிழமையில் தனுசுலக்கினத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி தூபதீபங்கொடுத்து மறுவாரத்தில் சிம்பலக்கினத்தில் வேரைப்பிடுங்கிக்கொண்டுவந்து அந்த வேரின்மேல் மாயாசத்திக்கருவைப்பூசி பூசையில் வைத்து மாயாசத்தி மந்திரத்தை 108 ஜெபித்து பூசை முதலானதும் போட்டு வேரையெடுத்து பொன்தகட்டில் குளிசமாடிக்கட்டிக்கொள்ள புருஷர்களெல்லாம் வசியமாவார்கள். உன்னுடைய இஷ்டம்போல் நடப்பார்கள்; நீ இட்டவேலையும் செய்வார்கள்.

1001. வேறு புலிவசிய ஜாலம்.

புலிதுடக்கி என்னுஞ்செடிக்கு கிரகணத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி தூபதீபங்கொடுத்து வேரைப்பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் மாயாசத்திக் கருவைத்தடவி பூசையில்வைத்து மாயாசத்தி மந்திரத்தை 108-ஜெபித்து பூசைமுதலானதும் போட்டு வேரையெடுத்து வெள்ளித்தகட்டில் குளிசமாடிக் கட்டிக்கொள்ள புலிவசியமாகும்; புலியைப் பசுவைப்போல் பழக்கலாம்.

1002. வேறு யானை வசிய ஜாலம்.

குப்பமேனிச் செடிக்கு ஆதிவாரத்தில் சிம்பலக்கினத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி வேரைப்பிடுங்கிவந்து அந்தவேரின்மேல் மாயாசத்திக் கருவுபூசி பூசையில் வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து பூசைமுதலானதும் போட்டு வேரை எடுத்து குளிசமாடிக்கட்டிக்கொண்டுபோக யானை வசியமாகும்; இஷ்டம்போல் நடக்கும்படி பழக்கலாம்.

1003. வேறு கள்ளர்வசிய ஜாலம்.

தேள் கொடுக்கு செடிக்கு செவ்வாய்க்கிழமையில் காப்புகட்டிப் பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிவந்து அந்தவேரின்மேல் மாயாசத்திக் கருவைத்தடவி பூசையில்வைத்து மாயாசத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பூசைமுதலானதும் போட்டு வேரையெடுத்து குளிசமாடிகட்டிக்கொண்டு இராவிலேனும் பகலிலேனும் கள்ளர்கள் உன்னைக்கண்டவுடன் வணங்கி அவர்களுடைய பருத கருமங்களை எல்லாஞ்சொல்லி உன்னிஷ்டம்போலும் நடப்பார்கள்.

1004. வேறு கரடிவசிய ஜாலம்.

இரசனி என்னுஞ் செடிக்கு வியாழக்கிழமை அமாவாசை கூடிய தினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி வேரைப்பிடுங்கிவந்து அந்த வேரின் மேல் மாயாசத்திக் கருவைத்தடவி பூசையில்வைத்து மாயாசத்தி மந்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பூசைமுதலானதும் போட்டு வேரைகுளிசமாடிக் கட்டிக்கொள்ள கரடிவசியமாகும். கரடியை ஆட்டுக் கிடாபோல் பழக்கலாம்; நமது இஷ்டம்போல் ஆடும்படி செய்யலாம்; அதுவும் உன்னைக்கண்டால் நடுநடுங்கி பயந்துகிடக்கும்.

1005. வேறு சண்டை ஜாலம்.

பூனைக்காலி என்னுஞ்செடிக்கு கிராணத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் மாயாசத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பூசைமுதலானதும் போட்டு வேரை எதிரியினுடைய மனையில் கொண்டுபோய்வைக்க அவன் வருவார் போவார்களிடத்தில் வலியசண்டைபோடுவான். அதனால் துன்பமடைகுவான். வேரை எடுத்துவிட்டால் சண்டையும் நின்று அதனால் வரும் துன்பமும் விலகும்.

1006. வேறு சகலவசிய ஜாலம்.

எத்தைச் சொன்னாலும் கேட்கும் நத்தைச்சூரிசெடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டுப் பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிக் கொண்டுவந்து அந்த வேரின்மேல் மாயாசத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து வேரையெடுத்து குளிசமாடிக் கட்டிக்கொள்ள சகலமும் வசியமாகும். எந்த இடத்திற்குப் போனாலும் ஜெயமாகும்; பகைவரார்களிருந்தாலும் உறவாடுவார்கள்.

1007. வேறு தொழில் விருத்தியாகும் ஜாலம்.

சீதேவி என்னுஞ்செடிக்கு திங்கட்கிழமை வளர்பிறையில் கன்னியாலக்கினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி தூபதீபங்கொடுத்து மறுவாரத்துலாலக்கினத்தில் சென்று தூபதீபங்காட்டி வேரைப் பிடுங்கிவந்து அந்தவேரின்மேல் மாயாசத்திக் கருவைத்தடவி பூசையில்வைத்து மாயாசத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பூசைமுதலானதும் போட்டு வேரை குளிசமாடிக் கட்டிக்கொள்ள எந்தத்தொழில்செய்தாலும் விருத்தியாகும்; லாபம் விசேஷமாய்க் கிடைக்கும்.

1008. வேறுமுறை பயிர் விருத்தியாகும் ஜாலம்.

கோடிவேலிச்செடிக்கு ஆதிவாரமும் பருவமுங்கூடியதினத்தில்மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டுப் பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிவந்து அந்தவேரின்மேல் மாயாசத்திக் கருவைத்தடவி பூசையில்வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜபித்து பூசைமுதலானதும் போட்டு வேரையெடுத்து அந்தவேரின்மேல் பொன்கம்பி வெள்ளிக்கம்பி செம்புகம்பி இந்த மூன்றுகம்பியையும் சுற்றிவைத்துக் கொள்ளவும் விதை விதைக்கும்போது அந்தவிதையில் இந்தவேரைப் போட்டுவிதைக்க பயிர் விருத்தியாகி கதிர் நன்றாய்விட்டு தானியம் உபரியாகும்; ஆனால் வேரைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கவும்.

1009. பாம்பாட்டும் ஜாலம்.

பாம்புகொல்லி என்னும் செடிக்கு அமாவாசையில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டுப் பலிகொடுத்து பூசைப்போட்டு வேரைப் பிடுங்கிவந்து அந்தவேரின்மேல் மாயாசத்திக் கருவைத்தடவி பூசையில் வைத்து மாயாசத்தி மந்திரத்தை 1008-செபித்து பூசைமுதலானதும் போட்டு வேரையெடுத்து செப்புக்கடயம் செய்து அதில்போட்டு அடக்கம்செய்து கடயத்தை வலதுகையில் மாட்டிக்கொண்டு பாம்பை எதிரில் விட்டு மனம்போல் ஆடும்படிசெய்யலாம். ஆனால் பாம்பை ஆட்டும்போது கடயத்தை மணிக்கட்டண்டை இரக்கிக்கொள்ளவேண்டும்.

1010. பசுவைப் பால் அதிகமாகக் கரக்கும்படி செய்யும் ஜாலம்.

பூனைக்காலிச் செடிக்கு வியாழக்கிழமையில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டுப் பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிவந்து அந்தவேரின்மேல் மாயாசத்திக்கருவும் ஐங்கோலக்கருவும் தடவி பூசையில்வைத்து மாயாசத்தி மந்திரத்தை 1008-உருஜெபித்து பூசைமுதலானதும் போட்டு வேரையெடுத்து குளிசமாடி வைத்துக்கொள்ளவும். பால் கரக்கும்போது குளிசத்தைக்கட்டி மற்றவேளையில் அவிழ்த்து வைத்துக்கோள்ள வேண்டியது.

1011. குதிரை வேகமாக ஓடும் ஜாலம்.

வள்ளைக்கொடி செடிக்கு மங்களவாரம் தனுசு லக்கினத்தில் மஞ்சள் நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி மறுவாரம்சென்று சிம்பலக்கினத்தில் வேரைப்பிடுங்கிவந்து அந்தவேரின் மேல் மாயாசத்திமையும் ஐங்கோலக்கருவும் தடவி பூசையில்வைத்து மாயாசத்திமந்திரத்தை 1008 உருஜெபித்து பூசைமுதலானதும்போட்டு வேரையெடுத்து குளிசமாடி வைத்துக்கொள்ளவும். குதிரை சவாரிசெய்யும்போது இந்த குளிசத்தை பட்டுக்கயற்றில்கோத்து குதிரையின்கழுத்தில்கட்டி சவாரிசெய்ய அதிக வேகமாக ஓடும்; குதிரைக்கு இளைப்பு ஆயாசம் இவைகள் இராது.

1012. வேறு விஷமேறுதிருக்கும் ஜாலம்.

கருஞ்சுமந்தவன் செடிக்கு கிராணைத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் மாயாசத்திக்கருவும் ஐங்கோலக்கருவுந் தடவி பூசையில்வைத்து மாயாசத்தி மந்திரத்தை 1008 ஜெபித்து பூசைமுதலானதும்போட்டு செம்பு அல்லது வெள்ளியினால் கடயஞ்செய்து அந்தகடயத்தில் வேரை அடக்கஞ்செய்து வைத்துக்கொள்ளவும். கடயத்தை வலதுகையில் மாட்டிக்கொண்டு இராப்பகலில் எங்கே போனாலும் அவ்விடங்களிலிருக்கும் எல்லாவிஷக்கிருமிகளும் ஏறாது; விஷந்தீண்டிய மக்களுக்கு இந்த கடயத்தால் உச்சியிலிருந்து உள்ளங்கால் வரைக்கும் ஒன்பதுதரம் வைத்திறக்க விஷம் நீங்கும்.

1013. ஒருவர்பின் ஒருவர்தொடரும் ஜாலம்.

எருமுட்டை செடிக்கு ஆதிவாரம் கிருத்திகைத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி தூபதீபங்கொடுத்து வேரைப்பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் மாயாசத்திக்கருவும் ஐங்கோலக்கருவும் தடவி பூசையில் வைத்து சத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து பூசைமுதலானதும் போட்டு வேரையெடுத்து வைத்துக்கொண்டு பேயாடும்போது இந்த வேரை வேப்பெண்ணெயில் குழைத்து அத்துடன் உச்சாடனக்கருவும் கலந்து விரலில்தொட்டு பேயாடுவோர் நெற்றியில்தெளித்து குருவிமந்திரத்தை 108 ஜெபிக்க ஓடாதபேய்களெல்லாம் ஓடும் ஓடாதமுனிகளெல்லாம் ஓடும் ஊரும்பேரும் சொல்லும்; உடனே முடியமுடித்து சடங்குகள் செய்யவும்.

1014. வேறு தேவதைகள் வசியமாகும் ஜாலம்.

செங்கழுநீர்செடிக்கு வெள்ளிக்கிழமையில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப்பிடுங்கிவந்து அந்தவேரின்மேல் மாயாசத்திக்கருவும் ஐங்கோலக்கருவும் அஞ்சனசித்தி மையுங்கலந்து தடவி பூசையில்வைத்து மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து வேரையெடுத்து குளிகையாய்க் கட்டிக்கொள்ள வசியமாவார்; நினைத்த வண்ணம்போல் முடியும்.

1015. வேறு பேயாட்டு ஜாலம்.

தொட்டால்வாடிசெடிக்கு கிராணைத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி தூபதீபங்காட்டி வேருடன் செடியைப்பிடுங்கிவந்து உரலிலிட்டுஇடித்து சாறுபிழிந்து அத்துடன் கஸ்தூரி கோரோசனம் சேர்த்து நயமாக அரைத்து எடுத்து கல்வத்திலிட்டு மைபோல் அரைத்து வழித்து அத்துடன் மாயாசத்திக்கருவும் ஐங்கோலக்கருவும் அஞ்சனசித்தி மையுங் கலந்து சிமிழில் அடைத்து பூசையில்வைத்து மாயாசத்திமந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து வைத்துக்கொள்ளவும். அந்தமையை நெற்றியிலிட்டுக்கொண்டுபோக உன்னைக் கண்டோரெல்லாம் உன்பின் தொடர்வார்கள்; உன் சொற்படி கேட்பார்கள்; நீயிட்டவேலையுஞ் செய்வார்கள்.

1016. வேறு சகலமிருகங்களும் வசிய ஜாலம்.

நின்றால் வாடிசெடிக்கு ஆதிவாரமும் அமாவாசையுங்கூடிய தினத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி வேரைப் பிடுங்கிவந்து அந்த வேரின்மேல் மாயாசத்தி கருவையும் ஐங்கோலக்கருவையும் தடவி பூசையில் வைத்து மாயாசத்தி மந்திரத்தை 1008 உருஜெபித்து பெருத்தபூசைபோட்டு வேரையெடுத்து பொன்தகட்டில் குளிசம்செய்து அதில்வேரை அடைத்து பட்டுக்கயத்தில் கோர்த்து வலதுகையில் கட்டிக் கொண்டுபோக புலி கரடி யானை சென்னாய் கருநாய் முள்ளம்பன்றி நரி உழுகரி இன்னம் பலவிதமான மிருகங்களும் உன்னைக் கண்டால் நடுநடுங்கி பயந்து ஓடுவதுடன் உன் வசியமாகும்; நீ அழைத்தால் வரும், இஷ்டப்படி நடக்கும், இவ்விதம் செய்யீ உன்னை அனைவரும் சித்தனென்று புகழ்வார்கள்.

1017. பக்ஷம் 2-க்கு பக்ஷிவலுவரியும் வித்தை.

ஜாலமாடுமிடத்தில் வரும்போது பட்சிகளின் வலுவைப்பார்க்கவேண்டுவது எவ்விதமெனில் ஊண்பட்சி வலுவுமுக்கால் காடைபட்சி ஊணிற்பாதி அரசிபட்சியின் வலுவோ அதிகமாகும். நித்திரைசெய்யும் பட்சியின்வலுவோ நடைவலுவிற்பாதியாகும், மரணபட்சியின் வலிவோ நித்திரைபட்சியின் வலுவிற்பாதியாகும். அரசிபட்சிக்கு நிகர்வேறில்லை ஆனால்ஊண்பட்சி சுயம்பாகியாகும் நடைபட்சி ஓட்டக்காரன் மற்றபட்சி வலுவில்லாதவையாகும். அரசுபட்சிக்கோ பகை ஒரு பட்சியுமில்லை, யாவும் மித்துரு பட்சியாகும், ஆயினும் ஊண்பட்சி ஆந்தையாகும்; நடைபட்சி வல்லூறாகும், அரசுபட்சி காகமாகும், நித்திரைபட்சி கோழியாகும் மரணபட்சி மயிலாகும். பூர்வபட்சத்திற்கும் அமரபட்சத்திற்கும் இது கண்டு வித்தையாடுவோரை ஒருவரும் வெல்லமாட்டார்கள். ஆகிலும் நாளும் வேளையும் நட்சத்திரமும் பார்க்கில் தன்னுடைய ராசியும் இதியுமாகில் எல்லாம் சித்தியாகும்; நினைத்த வித்தையாடலாம்.

1018. அட்சரபட்சி அறியும் வித்தை.

அகரம் வல்லூறாகும், இகரம் ஆந்தையாகும், உகரம் காகமாகும், எகரம்கோழியாகும், ஒகரம் மயிலாகும், இவ்வித பூர்வபட்சத்திற்கு கண்டு வித்தையாடவேண்டும்.

1019. பகல் முதல்சாமத்தில் ஊண்பட்சி அறியும் வித்தை.

ஞாயிறு செவ்வாய் வல்லூறுபட்சியாகும், புதன் திங்கள் ஆந்தையாகும், வியாழம் காகமாகும், வெள்ளி கோழியாகும், சனி மயிலாகும், இவ்விதமாக பூர்வபட்சத்தின் பகலில் முதற்சாமத்தில் உண்ணுமென்றறிந்து கொள்ளவும், அன்றிரவில் செவ்வாய் ஞாயிறு காகம் புதன் திங்கள் கோழி, வியாழம்மயில் வெள்ளிவல்லூறு சனி ஆந்தை இவ்விதமாக உண்ணும். ஆகிலும் இரவுபகல் பட்சியின் வலுவும் மித்துருசத்துரு வலுவும் இவைகளைப்பார்த்து வித்தைகள் ஆடவேணும். சத்துருநாளாக இருக்குமாகில் தள்ளிவிடவேண்டும்.

1020. நட்சத்திரப்பட்சி அறியும் வித்தை.

அசுவனி பரணி கிருத்திகை ரோகணி மிருகசீரிடம் இவை நட்சத்திரமும் வல்லூராகும், திருவாதிரை புனர்பூசம் ஆயிலியம் மகம் பூரம் இவை ஐந்துநட்சத்திரமும் ஆந்தையாகும், உத்திரம் அஸ்தம் சித்திரை சுவாதி விசாகம் இவை ஐந்தும் காகமாகும், அனுஷம் கேட்டை மூலம் பூராடம் உத்திராடம் இவை ஐந்தும் கோழியாகும், திருவோணம் அவிட்டம் சதயம் பூரட்டாதி உத்ரட்டாதி ரேவதி இவை ஆறும் மயிலாகும், பூர்வபக்ஷத்து நாள் பக்ஷியென அறிந்து வித்தைகள் ஆடவேண்டும்.

1021. திதிபட்சி அறியும் வித்தை.

பிரதமை சஷ்டி ஏகாதசி வல்லூறு பட்சியாகும், துதியை சப்தமி துவாதசிஆந்தைப்பட்சியாகும், திரிதிகை அஷ்டமி திரையோதசி காகமாகும், சதுர்த்தி நவமி சதுர்த்தசி கோழியாகும், பஞ்சமி பௌரணை மயிலாகும், பூர்வபட்சத்தில் நாள் திதி என அறிந்து வித்தைகள் ஆடவேண்டும்.

1022. இராசிபட்சி அறியும் வித்தை.

மேஷம் விருச்சிகம் சிங்கம் வல்லூராகும், கடகம் மிதுனம் கன்னி ஆந்தையாகும், தனுசு மீனம் காகமாகும், துலாம் ரிஷபம் கோழியாகும் மகாம் கும்பம் மயிலாம், இவைகளைக் கவனித்து வித்தையாடவேண்டும்.

1023. வல்லூரின் சத்துருமித்துரு அறியும் வித்தை

பூர்வபக்ஷத்து பக்ஷிகளின் பகை நட்பாவது எவ்விதமெனில் வல்லூருக்கு காகமும்கோழியும் பகையாகும், மயிலும் ஆந்தையும் சத்துருவாம் இவைகளைக்கண்டு வித்தைகள் ஆடவேண்டும்.

1024. ஆந்தையின் சத்துருமித்துரு அறியும் வித்தை.

ஆந்தையின்சத்துரு எதுவெனில் மயில் கோழியாகும் மித்துருபக்ஷி எதுவெனில் வல்லூறு காகமாகும், ஆயினும் மித்துருவைச்சேர்த்து வித்தையாடில் மேன்மையாகும் சத்துருவைச் சேர்த்து வித்தையாட இடையூரு நேரும்; இதையறிந்து செய்யவேண்டும்.

1025. காகத்தின் சத்துருமித்துரு அறியும் வித்தை.

காகத்தின் சத்துருபட்சி எதுவெனில் வல்லூறு மயிலாகும், மித்துருபக்ஷியாவது எதுவெனில் ஆந்தையும் கோழியுமாம்; சத்துருவைச்சேர்த்து வித்தையாட சண்டையும் சச்சரவும் வரும். மித்துருவைச் சேர்த்து வித்தையாட இடையூறில்லாமல் நடக்கும்.

1026. கோழி சத்துரு மித்துரு வித்தை.

கோழியின் சத்துருபக்ஷி எதுவெனில் வல்லூரும் ஆந்தையுமாகும், மித்துருபக்ஷி எதுவெனில் காகமும் மயிலுமாகும், மித்துருவைச்சேர்த்து வித்தையாட யாவும்நன்றாயோங்கும், சத்துருவைச்சேர்த்து வித்தையாட ஒன்றும் பலிதமில்லாமற்போகும்; ஆனதால் சத்துருபக்ஷியறிந்து வித்தைகள் ஆடவேண்டும்,

1027. மயில் சத்துரு மித்துரு வித்தை.

மயிலின் சத்துருபட்சியாவது எதுவெனில் ஆந்தையும் காகமும், மித்துருபட்சியாவது எதுவெனில் வல்லூரும் கோழியுமாகும், மித்துருவைச் சேர்த்துக்கொண்டு தொழில்செய்ய விருத்தியாகும்; சத்துருவைச் சேர்த்துக்கொண்டு தொழில் செய்வாயாகில் பொல்லாப்பு வந்தணுகும், ஆதலால் சத்துருமித்துரு பட்சிகளை அறிந்து வித்தையாடவேண்டும்.

1028. மித்துருபட்சி பலன் அறிந்து ஆடும் வித்தை.

யாதொரு வித்தையாவது உபதேசித்தபோதிலும் அப்போதுமித்துருபட்சியைச் சேர்த்துக்கொண்டு விளையாட காரியங்களெல்லாம் சித்தியாகும் பகைவரும் உறவாகவந்து கூடுவார்கள். புத்தியும் அதிக விஸ்தீரமாகும்; மனம்போல் நடக்கும் பொருள்கூடும் உன்னையெதிர்த்தபேர்கள் பின்னிடைந்துபோவார்கள், க்ஷேமங்களகரமாக சுகத்தையடைந்து வாழ்குவாய். அன்றியும் அந்த மித்துருபட்சி அரசுபட்சியாகில் மனத்தாழ்வுவராது, பிரபுக்கள் உதவியாவார்கள். எடுத்துச்செய்யும் வித்தைகளெல்லாம் இடையூறில்லாமல் நடக்கும்; ஜெயமாகும்; அவ்வேளையில் என்ன செய்தபோதிலும் அனுகூலமாகும்; எதிரிகளை மயக்கும்.

1029. சத்துருபலனறியும் வித்தை.

சத்துருவின் பட்சியின் பலனையறிந்து வித்தையாடில் இடுக்கண் நேரும் துயரமுண்டாகும் தொல்லைவிளையும் துன்பம்செய்யும் எடுத்துச் செய்யும் வித்தைகளெல்லாம் இடையூறாகும் நல்லோர்களும் பகையாவார் எடுத்ததொழில் முடியாது அன்றியும் சத்துருபட்சி ஊண் அரசாகவிருக்குமாகில் ஒரு தொழிலையும் கூடிவரச் செய்யமாட்டாது; கொஞ்சமேனும் மனதிற்குசந்தோஷமிராது ஆதலால்சத்துருபட்சியைச்சேர்த்து எந்தத்தொழிலும் எந்தவித்தையும் ஆடப்போகாது.

1030. வாரங்கள் 7-ம் மரணபட்சி அறியும் வித்தை.

சனி வியாழம் கோழி மரணமாகும் புதன் வெள்ளிக்கு மயில்மரணமாகும் ஞாயிறுக்கு காகம் சாகும் திங்களுக்கு எந்தஜாலவித்தையும் இன்னமெந்த தொழிலும் செய்யப்போகாது அப்படிச்செய்யில் இடையூறு நேரும் நீக்கிவிடவும்.

1031. படுபட்சியின் பலனறிந்து ஆடும் வித்தை.

பட்சிகள் ஊண் மித்துருவாக யிருந்தாலும் ஒரு பலனுந் தரமாட்டாது சத்துருவாகவே யிருந்து கெடுக்கும் எடுத்துச்செய்யும் வேலையில் இடையூறு புத்தி குறையும் ஓரிடத்திலும் போகமனம் தோன்றாது இதை அறிந்து வித்தையாட ஆரம்பரம் செய்யவேண்டும்.

படுபட்சியானது நடையாகில் வனுவு கொஞ்சமேனுமிராது ஆதலால் ஓர் தொழிலும் செய்யப்போகாது ஊர்விட்டுபிரதேசம் செல்லலாகாது இது சண்டாள வேலையானதால் எந்த வித்தையைச்செய்தாலும் எதிரிகளுக்கு திருப்பதியிராது ஆதலால் அந்நாளை நீக்கவேண்டும்,

படுபட்சி அரசாக யிருந்தபோதிலும் அதற்கு வலுவில்லையாதலால் விஷந்தீண்டும் கெடுதி உடனே காட்டும் துயரம் விளைவிக்கும் ஆதலால் அந்த வேளையில் எந்த வித்தையும் எந்த தொழிலும் செய்யலாகாது.

படுபட்சி தூக்கமாகில் மரணம்செய்யும் கொடுமை விளையும் நிலையற்றுப் போகும், நினைவு பிசகும் மரணம் வேறுகும் மதியை குலைக்கும் எடுத்த வேலையெல்லாம் இடையூறுகும். ஆதலால் இந்த நாளில் வித்தை ஆரம்பஞ்செய்ய பலிதமிராது; தனக்கே சொல்லமுடியாத ஆபத்து சேரிடும்.

1032. கடாநிலை பட்சியறிந்து ஆடும் வித்தை.

பூர்வபட்சத்தில் மரணமான பட்சி உண்ணும், அன்று இரவில் நித்திரை பட்சி உண்ணும், அமரபட்சத்தில் நடைபட்சி உண்ணும், அன்று இரவில் அரசபட்சி உண்ணும், அன்றியும் அட்சரங்களை பிரயித்துப்பார்த்தோர்கள் இதன்வகையை அறிவார்கள்; மற்றோர்கள் அறிவது கஷ்டமாகும்; இதையறிந்து யாதொரு வித்தையும் ஆட ஆரம்பம் செய்ய வேண்டும்.

1033. பட்சிகளின் தொழில்முறையறிந்து ஆடும் வித்தை.

பூர்வபட்சத்தில் பட்சிகளின் தொழிலின் நாழியாவது பகலில் ஒன்றரை நாழியாகும், நடை ஒன்னேகால் நாழியாகும், அரசு இரண்டுநாழியாகும், சத்தி முக்கால்நாழியாகும், மரணம் அரைநாழியாகும், அன்றிரவில் ஊண் ஒன்னேகால் நாழியாகும், அரசு ஒருநாழியாகும் மரணம் ஒன்றரைநாழியாகும் நடை ஒன்னேகால் நாழியாகும், நித்திரைக்கு ஒரு நாழியாகும் இதையறிந்து வித்தை ஆரம்பமும் வித்தை ஆடவும் ஜெயமாகும்.

1034. அமரபட்சம் பட்சிகளின் தொழில்முறையறிந்தாடும் வித்தை.

பூர்வபட்சத்தில் பட்சிகளின்தொழிலின் நாழியாவது ஊண் 2-நாழிகையாகும் மரணம் ஒன்னேகால் நாழிகையாகும் நித்திரை அரைநாழியாகும் அரசு முக்கால்நாழியாகும் நடை ஒன்றரை நாழியாகும். அன்று இரவில் ஊண் ஒன்னேமுக்கால் நாழியாகும் நித்திரைமுக்கால் நாழியாகும் நடை ஒன்னேமுக்கால் நாழியாகும் இதையறிந்து வித்தையாரம்பமும் வித்தையாடவும் ஜெயமாகும்.

1035. நட்சத்திரப்பட்சி யறிந்தாடும் வித்தை.

அசுவனி பரணி கிருத்திகை ரோகணி மிருகசீரிடம் இவை ஐந்தும் மயிலாகும், திருவாதிரை புனர்பூசம் ஆயிலியம் மகம் பூசம் இவை ஆறும் கோழியாகும், உத்திரம் அஸ்தம் சித்திரை சுவாதி விசாகம் இவை ஐந்தும் காகமாகும், அனுஷம் கேட்டை மூலம் பூராடம் உத்திராடம் திருவோணம் இவை ஆறும் வல்லூராகும். அவிட்டம் சதயம் பூரட்டாதி உத்திரட்டாதி ரேவதி இவை ஐந்தும் ஆந்தையாகும். அமரபட்சத்தின் நாள் பட்சி என அறிந்து வித்தைகளாட ஜெயமாகும்.

1036. திதிபட்சியறிந்தாடும் வித்தை.

பிரதமை சஷ்டி ஏகாதசி மயிலாகும், துதியை சப்தமி துவாதசி கோழியாகும், திரிதிகை அஷ்டமி திரையோதசி காகமாகும், சதுர்த்தசி நவமி ஆந்தையாகும், பஞ்சமி தசமி அமாவாசை வல்லூராகும், அமரபட்சத்தின் நாள்பட்சியென அறிந்து வித்தைகளாட ஜெயமாகும்.

1037. இராசிபட்சு யறிந்தாடும் வித்தை.

கடகம் மயிலாகும், மேஷம் விருச்சிகம் கோழியாகும் கன்னி சிங்கம் மகரம் காகத்திற்கும் தனுசு கும்பம் மிதுனம் ஆந்தைக்கும் துலாம் மீனம் ரிஷபம் வல்லூர்க்காகும்; இவைகள் அமரபட்சத்தின் ராசிபட்சிகளென்று அறிந்து வித்தைகளாடவும், வித்தைகளாரம்பம் செய்யவும் வேண்டுமென அறிவோர் கூறுகின்றனர்.

1038. மயிலின் சத்துருமித்துரு அறிந்தாடும் வித்தை.

அமரபட்சத்தின் மயிலின் சத்துருபட்சியாவது எதுவெனில் ஆந்தையும் காகமுமாகும், மித்துரு பட்சியாவது எதுவெனில் வல்லூரு கோழியுமாகும், மித்துருபட்சியைச் சேர்த்துக்கொண்டு யாதொருதொழிலும் யாதொருவித்தையும் ஆடவும் ஆரம்பஞ்செய்யவும் விருத்தியாகும், பகைவரும் உறவாவார்கள்; சத்துருபட்சியைச்சேர்த்து யாதொருதொழிலும் செய்யப்போகாது அப்படிசெய்யில் இடையூறுவரும்.

1039. கோழியின் சத்துருமித்துரு அறிந்தாடும் வித்தை.

அமரபட்சதில் கோழியின் சத்துருபட்சியாவது எதுவெனில் காகமும் வல்லூருமாகும், மித்துருபட்சியாவது எதுவெனில் மயிலும் ஆந்தையுமாகும், மித்துருபட்சியை சேர்த்துக்கொண்டு யாதொருதொழிலும் யாதொருவித்தையும் ஆடவும் ஆரம்பம் செய்யவும் விருத்தியாகும். சத்துருபட்சியைச்சேர்த்து எத்தொழிலும் வித்தையும் செய்யப்போகாது அப்படி மீறி செய்வாயாகில் கொடுமையானது வந்துசூழும்; செய்யும் வேடிக்கையும் அபலமாகப்போகும் அவர் சொல்லுமெடுபடாது சபையும் ரம்பிக்காது.

1040. ஆந்தையின் சத்துருமித்துரு அறிந்தாடும் வித்தை.

அமரபட்சத்தில் ஆந்தையின் சத்துருபட்சியாவது எதுவெனில் வல்லூரும் மயிலுமாகும், மித்துருபட்சியாவது எதுவெனில் கோழியும் காகமாகும், மித்துருபட்சியை சேர்த்துக்கொண்டு ஜாலவேடிக்கைகளாட சபை ரம்பிதமாயிருக்கும் புத்தியதிகரிக்கும் சபையோர்களை மயங்கச்செய்யும் வகையொன்றும் வராது; சத்துரு பட்சியைச் சேர்த்துக்கொண்டு யாதொருவேடிக்கையும் ஆடப்போகாது அப்படிமீறிச்சேர்த்து ஆடுவாராகில் கஷ்டமும் பகையும் பழியும் வந்தணுகும்.

1041. காகத்தின் சத்துருமித்துரு அறிந்தாடும் வித்தை.

அமரபட்சத்தில் காகத்தின் சத்துருபட்சியாவது எதுவெனில் மயிலும் கோழியுமாகும், மித்துருபட்சியாவது எதுவெனில் ஆந்தையும்

வல்லூருமாகும், மித்துருவை சேர்த்துக்கொண்டு எத்தொழிலும் எவ்வித்தையும் எந்த ஆடல்பாடலும்செய்ய விருத்தியாகும்,சத்துருபட்சியை சேர்த்து யாதொரு தொழிலும் செய்யப்போகாது.

1042. வல்லூரின் சத்துருமித்துரு அறிந்தாடும் வித்தை.

அமரபட்சத்தில் வல்லூரின் சத்துருபட்சியாவது எதுவெனில் கோழியும் ஆந்தையாகும், மித்துருபட்சியாவது எதுவெனில் மயிலும் காகமுமாகும். மித்துருவை சேர்த்துக்கொண்டு வித்தையாட கீர்த்தியும் புகழுமுண்டாகும், சத்துருபட்சியைச் சேர்த்து யாதொரு தொழிலும் செய்யப்போகாது.

1043. மித்துருவின் பலனறிந்தாடும் வித்தை.

யாதொரு வித்தையாட ஆரம்பித்தபோதிலும் அப்போது மித்துரு பட்சியைச் சேர்த்துக்கொள்ள அதா தரும்பலன் யாதெனில் வாழ்வுண்டாகும் எடுத்தவேலை முடியும் அடுத்தயிடத்தில் நன்மையாகும் தொடுத்த வழக்கு வெல்லும் இனச்சேர்க்கை யுண்டாகும் தான்செய்யும் வேடிக்கைகள் பார்ப்போர்க்கு விநோதமாகும்.

1044. சத்துருவின் பலனறிந்தாடும் வித்தை.

யாதொரு வேடிக்கையாட ஆரம்பித்தபோதிலும் சத்துருபட்சியை சேர்க்கலாகாது,அப்படிச்சேர்த்து செய்வாராகில் துக்கங்களை யுண்டாக்கும் எடுத்தகாரியம் முடிவுபெறாது நீ எவ்விதமான வேடிக்கைசெயினும் ஒருவர்க்கும் ரம்பிக்காது.

1045. ஆதிவார திதிநட்சத்ர இராசிபலனறிந்தாடும் மோகன வித்தை.

ஞாயிறில் அசுவனி சஷ்டி மிதுனராசியும் மோகனமாகும், பரணியும் ஏகாதசியும் கடகவிராசியும் ஸ்தம்பனமாகும், கிர்த்திகை துதிகை சிங்கராசியும் வித்வேஷணமாகும், ரோகணி கன்னியாராசியும் பேதனமாகும், மிருகசீரிடம் துவாதசி திருதியை விருச்சிகராசியும் மாரணமாகும். புனர்பூசம் அஷ்டமி தனுசுராசியும் வசியமாகும் பூசம் திரையோதசி கோராசியும் ஆக்ருஷணமாகும் ஆயிலியம் திருதியை கும்பவிராசியும் மோகனமாகும் மகம் நவமி மீனராசியும் ஸ்தம்பனமாகும் பூரம் அமாவாசை மேஷராசியும் வித்துவேஷணமாகும் உத்திரம் பஞ்சமி ரிஷபராசியும் மோகனமாகும் அஸ்தம் தசமி மிதுனவிராசியும் உச்சாடனமாகும் சித்திரை அமாவாசை கடகவிராசியும் மாரணமாகும் சுவாதி சஷ்டி சிங்கராசியும் வசியமாகும் விசாகம் பிரதமை கடகவிராசியும் மாரணமாகும் அனுஷம் சஷ்டி சிங்கராசியும் வசியாகும் கேட்டை ஏகாதசி கன்னியாராசியும் ஆக்ருஷணமாகும் மூலம் துதிகை துலாவிராசியும் மோகனமாகும் பூராடம் சத்தமி விருச்சிகராசியும் ஸ்தம்பனமாகும் உத்திராடம் துவாதசி தனுசுராசியும் வித்துவேஷணமாகும் திருவோணம் திருதியை மகரராசியும் பேதனமாகும் அவிட்டம்அஷ்டமி கும்பராசியும் உச்சாடனமாகும் உத்திரட்டாதி திரயோதசி மீனராசியும் மாரணமாகும் சதயம் சதுர்த்தி மேஷராசியும் வசியமாகும் பூரட்டாதி நவமி கடகவிராசியும் ஆக்ருஷணமாகும் ரேவதி சதுர்த்தி மிதுனராசியும் மோகனமாகும் இவைகளையறுத்து வேடிக்கையாட சித்தியாம்.

1046. சோமவாரதிதி நட்சத்திர ராசிபலனறிந்தாடும் தம்பனவித்தை.

திங்கட்கிழமையில் அசுவனி பஞ்சமி கடகராசியும் ஸ்தம்பனமாகும் பரணி நவமி சிங்கராசியும் வித்வேஷணமாகும் கிருத்திகை அமாவாசை கன்னியாராசியும் பேதனமாகும் ரோகணி பிரதமை துவாதசியும் உச்சாடனமாகும் மிருகசீரிடம் சஷ்டி விருச்சிகராசியும் மாரணமாகும் திருவாதிரை ஏகாதசி தனுசுராசியும் வசியமாகும் புனர்பூசம் துதியை மகரராசியும் ஆக்ருஷ்ணமாகும் பூசம் சத்தமி கும்பராசியும் மோகனமாகும் ஆயிலியம் துவாதசி மீனராசியும் ஸ்தம்பனமாகும் புனர்பூசம் திருதியை மேஷராசியும் வித்துவேஷணமாகும் பூரம் அஷ்டமி ரிஷபராசியும் பேதனமாகும் உத்திரம் திரயோதசி மிதுனராசியும் உச்சாடனமாகும் அஸ்தம் சதுர்த்தசி கடகராசியும் மாரணமாகும்; சுவாதி நவமி சிங்கராசியும் வசியமாகும் சித்திரை சதுர்த்தசி கன்னியாராசியும் ஆக்ருஷ்ணமாகும் விசாகம் பஞ்சமிதுலாராசியும்மோகனமாகும்அனுடம் தசமி மீனராசியும் விருச்சிகமும் ஸ்தம்பனமாகும் கேட்டை அமாவாசை தனுசுராசியும் வித்வேஷணமாகும் பிரதமை மூலம்மகரராசியும் பேதனமாகும் பூராடம் சஷ்டி கும்பராசியும் உச்சாடனமாகும் திருவோணம் ஏகாதசி மீனராசியும் மோகனமாகும் ரேவதி திரிதியை கடகராசியும் தம்பனமாகும் பூரட்டாதி அட்டமி சிங்கராசியும் பேதனமாகும் இவ்விதமறிந்து யாதொருவித்தையு மாடவேண்டும்.

1047. மங்களவார திதி நட்சத்ர ராசிபலனறிந்தாடு முச்சாடன வித்தை.

செவ்வாய்க்கிழமையில் அஸ்வனி சதுர்த்தசி துலாராசியும் உச்சாடனமாகும், பரணி நவமி விருச்சிகராசியும் மாரணமாகும், கிருத்திகை சதுர்த்தசி தனுசுராசியும் வசியமாகும், ரோகணி பஞ்சமி மகரராசியும் வசியமாகும், ரோகணி பஞ்சமி மகரவிராசியும் ஆக்ருஷணமாகும், மிருகசீரிடம் தசமி கும்பவிராசியும் மோகனமாகும் திருவாதிரை அமாவாசை மீனவிராசியும் தம்பனமாகும் பூசம் சஷ்டி ரிஷபவிராசியும் பேதனமாகும் ஆயிலியம் ஏகாதசி மிதுனராசியும் உச்சாடனமாகும் மகம் துதிகை கடகராசியும் மாரணமாகும் பூசம் சத்தமி சிங்கராசியும் வசியமாகும் உத்திரம் துவாதசி கன்னியாராசியும் ஆக்ருஷணமாகும் அஸ்தம் திரிதிகை துலாராசியும் மோகனமாகும் சோதி அஷ்டமி விருச்சிகராசியும் ஸ்தம்பனமாகும் சித்திரை திரயோதசி தனுசுராசியும் வித்துவேஷணமாகும் விசாகம் சதுர்த்தசி தனுசுராசியும் மாரணமாகும் அனுஷம் நவமி கும்பராசியும் உச்சாடனமாகும்; கேட்டை சதுர்த்தசி மீனராசியும் மாரணமாகும்; மூலம் பஞ்சமி ரிடபம் மேடமும் வசியமாகும் பூராடம் தசமி ரிஷபராசியும் ஆக்ஷ்ணமாகும். உத்திராடம் அமாவாசை மிதுனராசியும்

மோகனமாகும்; திருவோணம் பிரதமை கடகராசியும் ஸ்தம்பனமாகும்; அவிட்டம் சஷ்டி சிங்கராசியும் வித்துவேஷணமாகும்; உத்திரட்டாதி ஏகாதசி கன்னியாராசியும் தபதனமாகும்; துலாம் மிதுனம் உச்சாடனமாகும்; பூரட்டாதி சத்தமி விருச்சிகராசியும் மாரணமாகும்; ரேவதியும் துவாதசி கடகராசியும் வசியமாகும்; இவ்விதமறிந்து யாதொரு வேடிக்கைகளுமாட ஜெயமுண்டாகும்.

1048. புதவார திதிநட்சத்திர ராசி பலனறிந்தாடு மாக்ருஷ்ண வித்தை.

புதன்கிழமையில் அசுவனி திரிதியை மகரராசியும் ஆக்ருஷ்ணமாகும்; பரணி அஷ்டமி நவமி கும்பம் மொகனமாகும் கிருத்திகை திரயோதசி மீனம் ஸ்தம்பனமாகும்; உரோகணி சதுர்த்தி மேஷம் வித்வேஷணமாகும் மிருகசீரிடம் நவமி ரிஷபம் பேதனமாகும்; திருவாதிரை சதுர்த்தி மிதுனம் உச்சாடனமாகும்; புனர்பூசம் பஞ்சமி கடகம் மாரணமாகும்; பூசம் தசமி சிங்கம் வசியமாகும்; ஆயிலியம் அமாவாசை கன்னியா ஆக்ருஷ்ணமாகும்; மகம் பிரதமை துலா மோகனமாகும் பூரம் சஷ்டி விருச்சிகம் ஸ்தம்பனமாகும்; உத்திரமேகாதசி தனுசு வித்துவேஷணமாகும்; அஸ்தம் துதியை மகரம் பேதனமாகும்; சுவாதி சத்தமி கும்பம் உச்சாடனமாகும்; சித்திரை துவாதசி மீனம் மாரணமாகும்; விசாகம் திருதியை மேடம் வசியமாகும்; அனுடம் அட்டமி ரிடபம் ஆக்ருஷ்ணமாகும்; கேட்டை திரியோதசி மிதுனம் மோகனமாகும்; மூலம் சதுர்த்தி கடகம் ஸ்தம்பனமாகும்; பூராடம் நவமி சிங்கம் வித்துஷேணமாகும்; உத்திராடம் சதுர்த்தி கன்னியா பேதனம் திருவோணம் பஞ்சமி துலா உச்சாடனமாகும்; அவிட்டம் தசமி விருக்சிகம் மாரணமாகும்; உத்திரட்டாதி சஷ்டி கும்பம் மோகனமாகும்; ரேவதி ஏகாதசி மீனம் ஸ்தம்பனமாகும்.

1049. குருவார திதிநட்சத்ர ராசி பலமறிந்தாடும் வித்வேஷண வித்தை.

வியாழக்கிழமையில் அசுவனி துதியை மேடம் வித்துவேடணமாகும்; பரணி சப்தமி ரிடபம் பேதனமாகும்; கிருத்திகை துவாதசி மிதுனம் உச்சாடனமாகும்; உத்திரம் அமாவாசை மீனம் மாரணமாகும்; அஸ்தம் பிரதமை மேடம் வசியமாகும்; சுவாதி சஷ்டி ரிஷபராசியும் ஆக்ருஷ்ணமாகும் சித்திரை ஏகாதசி மிதுனம் மோகனமாகும்; விசாகம் துதியை கடகவிராசியும் தம்பனமாகும்; அனுஷம் சத்தமி சிங்கராசியும் வித்வேஷணமாகும்; மூலம் திருதியை துலாவிராசியும் உத்திராடம் திரயோதசி தனுசுராசியும் வசியமாகும்; திருவோணம் சதுர்த்தி மகரவிராசியும் ஆக்ருஷ்ணமாகும்; அவிட்டம் நவகும்ப விராசியும் மோகனமாகும் உத்திரட்டாதி சதுர்த்தி மீனராசியும் ஸ்தம்பனமாகும்; சதையம் பஞ்சமி மேஷவிராசியும் வித்துவேஷணமாகும்; ரேவதி அமாவாசை மிதுனவிராசியும் உச்சாடனமாகும்; இதையறிந்து எந்தவித்தையுமாட ஜெயமாகும்.

1050. சுக்ரவார திதிநட்சத்திரம் ராசிபலனறிந்தாடு மாரண வித்தை.

வெள்ளிக்கிழமை அசுவனி பிரதமை கடகவிராசியும் மாரணமாகும்; பரணி சஷ்டி சிங்கராசியும் வசியமாகும்; கிருத்திகை ஏகாதசி கன்னியாராசியும் ஆக்ருஷ்ணமாகும்; ரேவதி துதியை துலாவிராசியும் மோகனமாகும்; மிருகசீரிடமும் சத்தமியும் விருச்சிக விராசியும் ஸ்தம்பனமாகும்; திருவாதிரை துவாதசி தனுசு விருச்சிகராசியும் பேதனமாகும்; பூசம் அஷ்டமி கும்பவிராசியும் வசியமாகும்; ஆயிலியம் ஏகாதசி மீனவிராசியும் மாரணமாகும்; மகம் சதுர்த்தி மேஷவிராசியும் வசியமாகும்; பூசம் நவமி ரிஷபராசியும் ஆக்ருஷ்ணமாகும்; உத்திரம் சதுர்த்தசி மிதுனராசியும் மோகனமாகும்; அஸ்தம் பஞ்சமி கடகவிராசியும் தம்பனமாகும்; சுவாதி தசமி சிங்கவிராசியும் வித்துவேஷணமாகும்; சித்திரை அமாவாசை கன்னியாராசியும் தம்பனமாகும்; விசாகம் பிரதமை துலாராசியும் உச்சாடனமாகும்; அனுஷம் சஷ்டி விருச்சிகராசியும் மாரணமாகும்; கேட்டை ஏகாதசி தனுசு ராசியும் ஆக்ருஷ்ணமாகும்; பூராடம் சத்தமி கும்பராசியும் மீனராசியும் தம்பனமாகும்; திருவோணம் திருதியை மேஷவிராசியும் வித்துவேஷணமாகும்; சதையம் திரயோதசி மிதுனராசியும் உச்சாடனமாகும்; பூரட்டாதி சதுர்த்தி கடகராசியும் மாரணமாகும்; உத்திரட்டாதி நவமி சிங்கவிராசியும் வசியமாகும்; ரேவதி சதுர்த்தசி கன்னியாராசியும் ஆக்ருஷ்ணமாகும்; இவ்விதங்கண்டு வித்தைகளாடவேண்டும்.

1051. சனிவார திதிநட்சத்ர ராசிபலனறிந்தாடும் மோகன வித்தை.

சனிக்கிழமையில் அசுவனி பஞ்சமி துலாவிராசியும் மோகனமாகும்; பரணி தசமி விருச்சிகராசியும் ஸ்தம்பனமாகும்; கிருத்திகை அமாவாசை தனுசுராசியும் வித்துவேஷணயாகும்; சதையம் திரயோதசி மிதுனராசியும் பேதனமாகும்; மிருகசீரிடம் சஷ்டி கும்பராசியும் உச்சாடனமாகும்; திருவாதிரை ஏகாதசி மீனவிராசியும் மாரணமாகும்; புனர்பூசம் துதிகை மேஷவிராசியும் வசியமாகும்; பூசம் சத்தமி ரிஷபராசியும் ஆக்ருஷ்ணமாகும்; ஆயிலியம் துவாதசி மிதுனராசியும் மோகனமாகும், மகம் திரிதிகை கடகராசியும் தம்பனமாகும்; பூசம் அஷ்டமி சிங்கராசியும் மேஷணமாகும்; உத்திரம் திரையோதசி கன்னியாராசியும் பேதனமாகும்; அஸ்தம் சதுர்த்தி துலா உச்சாடனமாகும்; சுவாதி நவமி விருச்சிக மாரணமாகும்; சித்திரை சதுர்த்தி தனுசு வசியமாகும்; விசாகம் பஞ்சமி தனுசுராசியும் ஆக்ருஷ்ணமாகும்; அனுஷம் தசமி கும்பம் ஸ்தம்பனமாகும்; மூலம் பிரதமை மேஷம் வித்துவேஷணமாகும்; பூராடம் சஷ்டி ரிஷபம் பேதனமாகும்; உத்திராடம் ஏகாதசி மிதுனம் உச்சாடனமாகும்; திருவோணம் துதியை கடகம் மாரணமாகும்; அவிட்டம் சத்தமி சிங்கம் வசியமாகும்; உத்திரட்டாதி துவாதசி கன்னியா ஆக்ருஷ்ணமாகும்; சதையம் திரிதியை துலா மோகனமாகும்; பூரட்டாதி அவிட்டம் விருச்சிகம் ஸ்தம்பனமாகும்; ரேவதி திரையோதசி தனுசு வித்துவேஷணமாகும்; இந்த நாளில் திதிநட்சத்திரம் இராசியுங்கண்டு எந்த வித்தைகளை

ஆரம்பஞ்செய்யினும் சித்தியும் ஜெயமுமாகுமென மேலோர் கூறுகின்றனர். அன்றியும் பக்ஷியை அறிந்து வித்தையை ஆடுவோருக்கு ஒருபோதும் பழுதுவாராது; அப்படிப்பாராமல் செய்தால் பழுதுநேரிடும்; பக்ஷியறிந்து செய்யும் வித்தைகள் தடையில்லாமல் பலிதமாகும்; ஆதலால் தன்னுடைய பக்ஷியின் வலுவறிந்து கரும முதலானதுங் கூட்ட சித்தியாகும்.

1052. ஊண்பட்சியில் பிணிகண்டால் விலக்கும்வித்தை.

தனதுபக்ஷி ஊணாக யிருக்கையில் வியாதிகண்டு அதுதீராவிடில் தரையை மெழுகி பிள்ளையார் பிடித்துவைத்து வெள்ளைப் புட்பஞ்சாற்றி பலகாரம் முதலானதும் படைத்து விநாயகரைப்போற்றி மந்திரமாவது சொல்லக் கேட்பீராக; ஓம் ஸ்ரீயுங் அங் உங் ஐயுங் கிலியுங் கணபதி நசி நசி என்று ஆயிரத்தெட்டு உருஜெபித்து பின்பு கும்பம் வைத்து ஒருபடி பச்சை நெல்லைப்பரப்பி அதில் அறுகோணமிட்டு பஞ்சாட்சரத்தை வைத்து சக்கரத்தில் சூலம்போட்டு அதன் நடுவில் ஐங் அங் சிவசிவா என்று நாட்டி கலசத்தில் வைத்து நூல்சுற்றி ஆடைசாற்றி அதன் முன்னே அமுது சந்திரம் வைத்து பிறகு ஓங் ஐயுங் சவ்வும் அங் உங் பீடையாகவும் நசிமசி என்று 1008 உருஜெபித்து ஓமகுண்டம் இரண்டு போட்டு செய்யவேண்டியது. இவைகளைச்செய்து சொல்லும் மந்திரமாவது ஓம் ஸ்ரீயும் அங் சகலபீடை நசிமசி யென்று 5000 உருசெபித்து பொங்கலிட்டு பலிகொடுத்து நைவேத்தியஞ் செய்து ஓமகுண்ட சாம்பலையெல்லாம் கும்ப கலசத்திற் போட்டு குடத்தின்நீரை பிணியாளன் மேல் விடும்போது ஆதிசிவனை நினைத்து ஓம் சிவசிவா என்று அபிஷேகம் முதலானதும் செய்துவைத்து பொன்தகடு பூசை முன் தகட்டை வைத்து குளிசமாடிக்கட்ட சகல பிணிகளும் பதினேறு நாளில் பறந்தோடும்; ஆனால் வாலை பூசை தவறாமல் செய்யவேண்டும்.

1053. நடைபட்சியில் பிணிப்பட்டால் விலக்கும் வித்தை.

தனது பக்ஷி நடையாக விருக்குமாகில் பீடையானது வந்தது அது தீராவிடில் விநாயகரை வைத்து வெள்ளை புட்பஞ் சாற்றி கும்பலாக முன்போல் வைத்து ஓமகுண்டம் இரண்டுவெட்டி அரசு வன்னி நாயுருவி தர்ப்பை விளா மரத்தின்விறகு கருங்காலி நெற்பொரி கடலை மொச்சை இவைகளைப்போட்டு ஓமம்வளர்த்தி ஆவின்நெய் இலுப்பநெய் ஒன்ருய்க் கலந்து எக்கியத்திலிட்டு ஆகுதிகள் செய்து சொல்லும் மந்திரமாவது ஓம் ரீயும் அவ்வும் கிலியும் அங் உங் பீடை நசியென்று பதினாயிரம் உரு ஜெபித்து பொங்கலிட்டு பலிகொடுத்து சோட சவுபசாரஞ்செய்து பிறகு கும்பத்தின் சாம்பல்களை யெல்லாம் கொஞ்சமும் விடாமல் கலசத்திற் போட்டு ஆதிசிவ பெருமானைப்போற்றி சிவசிவாவென்று தடவி வாலையினுடைய தியானஞ்செய்ய பீடைகள்யாவும் பறந்தோடும்: ஆனால், இவ்வண்ணமாக தவறாமல் பதினேறுநாளும் செய்துவரவேண்டும்.

1054. அரசுபட்சியில் பிணிகண்டால் விலக்கும் வித்தை.

தனதுபட்சி அரசாகயிருக்கையில் பீடையானதுகண்டு அது தீராவிடில் கணபதியை வைத்துப்போற்றி முன்போல் கும்பகலசம் நிறுத்தி

வாலையினுடைய பூசைசெய்து ஓமகுண்டம் இரண்டுவைத்து அரசு சந்தனம் பச்சைநெல் இவைகளைக்கொண்டு ஓமம்வளர்த்தி உரு பதினாயிரம் ஜெபித்து பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி ஓம சாம்பலையெல்லாம் கும்பகலசத்திற்போட்டு குடத்தைக் கையிலெடுக்கும் போதெல்லாம் சிவனை தியானித்துவர வினையாவும் நீங்கும். பிறகு தங்கத்தகடு செய்து அதில் முன்சொன்ன யெழுத்தை அடைத்து பூசையில்வைத்து நாள் ஏழுந்தவறுமற் செய்து தகட்டை யெடுத்து குளிசமாடிக்கொள்ள சகல பீடையும் விலகிப்போகும். சிவனை மறவாமல் தியானித்து வரவேண்டும்.

1055. நித்திரைப்பட்சியில் பிணிகண்டால் விலக்கும் வித்தை.

தனதுபட்சி நித்திரையிலிருக்கும்போது பீடையானது கண்டு தீராவிடில் அதற்கு முன்பால் கணபதியைவைத்து, கும்பகலசம் நிறுத்தி, ஓமகுண்டம் நாலு போட்டு ஆல் அரசு அத்தி இத்தி வன்னி முன்னை நாயுருவி என்னு நவதானியம் நெற்பொரி இவைகளைப்போட்டு ஓமம் வளர்த்தி பசுநெய்யும் இலுப்பைநெய்யும் கலந்து ஓமத்தில் தர்ப்பையினுல் சொரிந்துகொண்டே உரு ஜெபிக்கவேண்டும். ஓம் ரீயும் கிலியும் சவ்வும் ஸ்ரீம் ரீயும் நசி மசி என்று தர்ப்புத்தியை விலக்கி ஒரு நினைவாக நின்று பதினாயிரம் உரு ஜெபித்து கும்பம் ஒன்றில் ஸ்தம்பனத்தைப் போட்டு பேதனமும் கூடப்போட்டு வித்துவேடணமும் மோகனமும் போட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி ஓம சாம்பலைவாரி கும்ப கலசத்திற்போட்டு சிவ பெருமானுக்கு அபிஷேகஞ்செய்து பிறகு உச்சாடனஞ் செய்து சாம்பலை பிணியாளியின் மேல்போட சகல பிணியும் சகல தோஷமும் சூரியனைக்கண்ட பனிபோல் பறந்தோடிவிடும். ஆனால் நாளும் சிவனைப் பூசித்துவரவேண்டும்.

1056. மரணட்சியில் பிணிகண்டால் விலக்கும் வித்தை.

தனதுபட்சி மரணமாக விருக்கில் பீடையானதுகண்டு அது தீராவிடில் முன்போல் கணபதியைவைத்து வாலையினுடைய கும்பகலசம் நிறுத்தி ஓமகுண்ட மெட்டு போட்டு அரசு வன்னி நாயுருவி அத்தி கருங்காலி ஆலம்கொம்பு மாசிப்பி அறுகு நவதானியம் நெற்பொரி இவைகளைப்போட்டு தீவளர்த்தி ஆவின் நெய் இலுப்பைநெய், தேங்காநெய், புங்கயெண்ணை, புன்னை யெண்ணை, வேப்பெண்ணை, பன்றிநெய், கேசரிநெய், இவைகளை ஒன்ருய்க் கூட்டி எக்கியத்திலிட்டு ஓம குண்டம் எட்டிலும் அட்டகர்மம் எட்டையும் உரு பதினாயிரம் செபித்து பொங்கலிட்டு பலிகொடுத்து தூபதீபங்காட்டி பிறகு ஓமகுண்டத்தின் சாம்பலை குடத்திற்போட்டு சிவனை தியானித்து, பிணியாளன் சிரசில் சாம்பலைப்போட்டு நீர் விடுத்து சிவனுக்கு அபிஷேகஞ்செய்து வைக்கவேண்டும்; ஆனால் இவ்வகையாக ஒரு மண்டலம் செய்துவர பீடையாவும் பறந்தோடும்; இந்த வண்ணம் செய்து பீடை விலகிக் கொள்ளாதவர்களுக்கு பிரமனுடைய வயிறிருக்குமளவும் பீடையிற்பட்டு மெலிவாரென மேலோர் கூறுகின்றனர்.

1057. அட்சரம்மாறல் அறியும் வித்தை.

பூர்வபட்சம் பகலுக்கு ஆக்ருஷணமும் வசியம் இவை இரண்டுமாம் பூர்வபட்சம் இரவிற்கு மோகனமும் தம்பனமாம், அமரபட்சத்து பகலிற்உச்சாடனமும் வித்துவேஷணமும், அமரபட்சம்இரவிற்குமாரணமும் பேதனமுமாம், ஆயினும் பூர்வபட்சத்திற்கு கடை நிலையைப்பிடித்து மாறவேண்டும், பூர்வபட்சத்தின் இரவிற்கு நாலெழுத்தைமாறி ஓத வேண்டும், அமரபட்சத்தின் பகலில் இரண்டெழுத்து மாறவேண்டும், அமரபட்சத்தின் இரவிற்கு நடுநிலை மாறவேண்டும்.

1058. திக்குகளின் அஷ்டகாமம் அறியும் வித்தை.

தெற்குபக்கத்தில் பேதனம் மாரணம் இரண்டை மாறவேண்டும், வடக்கில் வித்துவேஷணம் மோகனமும் மாறவேண்டும், மேற்கில் தம்பனமும் மோகனமும் மாறவேண்டும், கிழக்கில் வசியமும் ஆக்ருஷணமும் மாறவேண்டும், இங்கேகண்டு மாறல்செய்ய தொழில்யாவும் சித்தியாம், உலகத்தோரெல்லாம் வணங்கு வார்கள்; அஷ்டகன்மமும் கருத் தொழிலும் சல்லியம் ஒட்டியம் மந்திரம் இவையெல்லாம் பட்சிக் கீடாகாதென்று சித்த முத்தர் முனிவர் மூத்தோர் முதலானோரும் மெச்சினார்களென மேலோர் கூறுகின்றனர்.

1059. பிரமன் பிரிதிவி வீட்டின் அக்ஷரம் அறியும் வித்தை.

உருவைநன்றாய் வகுத்துக்கொண்டு பிரிதிவியில் நாற்கோணங்கீறி நான்முகனுடைய பீஜம்வைத்து அதில் அங் சங் என்று இரண்டெழுத்தையே கருவாக தொட்டுக்கொண்டு ஓத சகலமும் தடையின்றிப் பலிதமாகும்.

1060. மாலின் அப்பு வீட்டின் அக்ஷரம் அறியும் வித்தை.

அப்புவின் வீடாவது பிறைபோல் கீறவேண்டும், அதில்மாலினுடைய பீஜம் வைத்து இங் என்று கோஜபீஜமாகவைத்து நாட்டி கருவைத்தொட்டு நேரத்தை பார்த்து ஓர் மனதாகக்கொண்டு ஓதசித்தியாம்.

1061. ருத்திரன் தேயுவினுடைய வீட்டின் அக்ஷரம் அறியும் வித்தை.

தேயுவென்னும் வீடு முக்கோணம் அது சிவனுடைய வீடு; அதில் சிவனுடைய பீஜம்வைத்து இங் சிங் என்றுநாட்டி அதை கோஜபீஜமாக வைத்துசுலர்து கருவைத்தொட்டுக் கொண்டு ஜெபம்செய்ய சித்தியாகும்; ஆயினும் முக்கோணம் பொல்லாதென்று அறியவேண்டும்,

1062. சதாசிவன் ஆகாசவீட்டின் அக்ஷரம் அறியும் வித்தை.

ஆகாசவீட்டில் மதிரவியும் பூண்டிருப்பார்கள்; அது சிவனுடைய வட்டமாகும்; அதில் சிவனுடைய பீஜம்வைத்து ஒங் எங் என்னு இந்த இரண்டெழுத்தையும் கோஜபீஜமாகவைத்து அதைசுற்றிலும் வரை பதிந்து கருவைத்தொட்டு நேரம்பார்த்து ஜெபிக்க ஏகவெளியாய்த் தோற்றும் சித்தியாகும்.

1063. பஞ்சபூதபோதலின் பலனறியும் வித்தை.

ஆகாயமும் வாயுவும் சேர்ந்தால் ஒருவரையும் மதிப்பிக்கப்போகாது பிரசண்ட வாயுவுஞ்சேர்ந்து நிலைக்கவொட்டாது; தொழிலையும் மாற்றி விடும்; மனவிறுதியாக யெண்ணி அஷ்டகன்மவித்தையை அறிவுள்ளோர்கள் அறிவார்கள்; அதன்றியும் ஆகாசவெளியெனும் காற்றும் அக்கினியும் சேர்ந்துக்கொண்டால் எரிந்துபோகும்; கண்ணுக்குத்தோற்றாது; அக்கினியும் வாயுவும் சேர்ந்தால் பிரிந்துபோகும்; யேகவொளியும் ஒன்றாய்க் கூடிக்கொண்டால் பேச ஒன்றுமில்லை, பெண்ணாசையுந் தலையும், வாயுவும் அக்கினியும் கைவல்லியமாகும், அப்படி அறிந்தோனை வெல்ல ஒருவருமில்லை; அக்கினியும் தண்ணீரும் சேர்ந்தால் தண்ணீர் அக்கினியைவெல்லும், வாயுவும் கூடுமாகில் எடுத்ததொழில் நாட் செல்லும் சுருக்கில் முடியாது, அப்புவை சேர்க்கொணாது, அப்படியு மல்லது மண்ணுந் தண்ணீரும்சேர்ந்தால் தண்ணீரை மண் வெல்லுமென மேலோர் கூறுகின்றனர்.

1064. சத்தி சிவக் கூறறியும் வித்தை.

கூறிய ஐந்து எழுத்தில் இரண்டு பழுதில்லை, அதாவது மண்ணுந் தண்ணீருமாம். அந்த மண்ணுந் தண்ணீருங்கூடி மனுவென்னும் ஜீவ ஜெந்துக்களை வளர்த்து உறவாடியும் இந்த உறவாழ்க்கையை யெல்லாம் இவை இரண்டினால் உண்டானதால் கண் உயிரைவளர்ப்பது போல் மண்ணுந் தண்ணீரும் மறிவது பெரிதாகும், ஆதலால் சத்தி சித்தியை கண்டபேர்கள் நீடூழிகாலமும் வாழ்வார்கள். உலகத்தினிடத்து சிறுமையானது பெற்று திரிவார்கள், அவரை ஒருவரும் அறியமாட்டார், சித்தெலாமாவாரென மேலோர் கூறுகின்றனர்.

1065. அப்புவீட்டின் அட்சரம் அறியும் வித்தை.

அப்புவிற்கு பிறைபோல்வீடாகும், அதைகிறி அதில் இங் மங் ஸ்ரீரங் என்று கோஜபீஜம்வைத்து எதிரியினுடைய பெயரை சுற்றிவரைந்து கருவைத் தொட்டுக்கொண்டு சொல்லவேண்டியது இங் மங் என்றும், விஷயங்களுக்கு கங் நசிநசி என்று சுத்திவைக்க உன் இஷ்டம்போல் முடியும் அஷ்டகன்மமுமாகும்.

1066. தேயுவீட்டின் அட்சரம் அறியும் வித்தை.

தேயுவின் வீடானது முக்கோணமாகும், அது சிவனுடைய வீடு, ஆதலால் உங் சிங் டங் என்று கோஜபீஜமாக வைத்து ஓதுவது உங் சிங் டங் ரங் லங் நசி மசி என்று எதிரியினுடைய பெயரைச்சுற்றி எழுதி கருவைத்தொட்டு சத்தியுடன் வஸ்துவும் வைத்து முன் மந்திரத்தை ஓதியா அட்டகன்ம அறுபத்திநாலும் பலிதமாகும், குண்டும் வெடிமருந்தும் இதற்கொவ்வாதென்று பக்ஷிவித்தையில் பலனுணடென மேலோர் கூறுகின்றனர்.

1067. வாயுவின் வீட்டின் அட்சரம் அறியும் வித்தை.

வாயுவின் வீடாவது சொல்வேன் கேட்பாயாக: அதுகுமாரகுருவின் சக்கரம் அறுகோணமாகும்; அதில் எங் வங் மங் விங் என்றுகோஜபீஜம்

வைத்து சிவத்தின் எழுத்தாவது எங் வங் சங் ரங் இன்னுனே நசிநசி என்று கருவைத்தொட்டு ஜெபிக்க பிரசண்ட வாயுவானது இளம்பி எதிரியை அழிக்குமென மேலோர் கூறுகின்றனர்.

1068. ஆகாயத்தின் வீட்டின் அட்சரம் அறியும் வித்தை.

ஆகாயவீடானது வட்டம்; அதில் சதாசிவன் வாழ்வார்; ஆதலால் அவ்வீட்டில் ஓங் யங் டங் ரீங் என்று கோஜபிஜம மைத்து தேயுவை வகுத்தி ஓதுவதாவது ஓங் டீரீங் கங் சங் இன்னுனே நசிநசி என்று கருவைத்தொட்டு ஜெபிக்க எதிரியை வெல்லும், ஜெயமுண்டாகும்.

1069. பிரிதிவிக்கு கடைத்தலையாக பிடித்து மாறல், அறியும் வித்தை.

கடைத்தலையைப் பிடித்து மாறுவாயாகில் உன்னைப் பகைத்தபேர்களெல்லாம் உன்பாதத்தில் வந்து விழுவார்கள்; ஆதலால் நசியைவிட்டு வசி என்று ஓதவேண்டும்; எப்போதும் நசியைவிட்டால் பலிதமாகாது; ஆதலால் தொழிலை அறிந்து ஓதுவாயாகில் பலிதமுண்டாகும்; நினைத்ததுபோல் முடியும்; பகைகள் யாவும் விலகி உறவுண்டாகும்.

1070. சுபகாரியங்களுக்கு ஜெபம் செய்யும் ஸ்தலமறிதல்.

சுபகாரியங்களுக்கேற்ற எந்தத் தொழில் செய்ய உத்தேசித்தபோதிலும் மித்துருவான பட்சியை சேர்த்துக்கொண்டு ஒருமனதாக விருந்து வில்வமரத்தடியிலும் சிவாலயங்களிலும் கங்கைகரையோரத்திலும் நந்தவனத்திலும் இருந்துகொண்டு ஜெபம்செய்ய நன்மையான காரியங்கள் யாவும் பலிக்கும், மூன்றுவகை தொழிலும் சித்தியாகும்.

1071. அசுபகாரியத்திற்கு ஜெபம்செய்யும் ஸ்தலமறிதல்.

அசுப காரியங்களுக்கேற்ற எந்தத்தொழில் செய்ய உத்தேசித்தபோதிலும் வெளியிடம், பாழ்வீடு, மெத்தை, முச்சந்திபாதை, காளிகோயில், அம்பலமான விடம், மாட்டுத்தொழுவம், சுடுகாடு, தீயெரியுகாடு, இவ்விடங்களில் செய்ய சித்தியாகும்.

1072. பூர்வபட்சத்திற் பட்சிகள் பச்சிலை அறியும் வித்தை.

புத்தியை ஸ்திரமாகவைத்து மூலிகை தெரியவேண்டும், சத்துருவும் மித்துருவும் நின்ற தன்மைகளைக் காணவேண்டும், அப்படியிருந்து செய்வோர்களுக்கு எல்லாவேடிக்கையும் சித்தியாகும், அன்றியும் வல்லூறுக்கு கீரை, ஆந்தைக்கு சிறுகீரை, காகத்திற்கு சாரணைவேர், கோழிக்கு தகரைவேர், மயிலுக்கு பங்கிவேர், இவ்வகையறிந்து வித்தைகளாட கீர்த்திபெருகி ஜெயமுண்டாகும்.

1073. மூலிகை சாப நிவர்த்தியறியும் வித்தை

எந்தமூலிகையா யிருந்தபோதிலும் அதன்முன் இருந்துகொண்டு ஓம் மூலி சர்வமூலி சாபமும் நசிநசியென்று 1008-உருஜெபித்து அதற்கு கன்னிநூல் காப்புகட்டி சுத்தியும் வஸ்துவும் வைத்து தூபதீபங்காட்டி

வேரைப்பிடுங்குவதற்கு முன்னமே அட்சரத்தை ஓதி சரியானவேளையில் கருவைத்தொட்டு வேரைப்பிடுங்கிக்கொண்டுவர சகலசித்துமாகும்.

மூலிகைப் பிடுங்குகிறபோது நிர்வாணமாக நின்று ருத்திரனை மனதில் தியானித்து வாசியையுள்ளேவாங்கி நீ மனதில் நினைத்ததுபோல் எண்ணிக்கொண்டு எதிரியினுடைய பெயரையும் நினைத்து பக்ஷியின் ஊண் அரசு நடை உறக்கம் மரணம் பார்த்து குறித்தயிடத்தில் நாலு எழுத்தை ஓதி வேரைப்பிடுங்க நசித்துப்போவான்; உன்மனம்போல் மூலிகையாகும்.

1074. மூலிகை பிடுங்கும் வித்தை.

எதிரியினுடைய காலடிமண்ணும் மூலிகையினுடைய வேர்மண் இரண்டையும் ஒன்றாய்க்கலந்து அதில் அவ்வெழுத்தைப் படித்து மாறிவிட ஐம்புலனும் மாறிவிடும், பிடுங்கியவேரை எடுத்துக்கொண்டு மயானஞ்சென்று வேரைச் சுட்டுவிடுவாயாகில் எதிரியைரொம்பவும் பாதைப் படுத்தும்; கொட்டியதேளதுபோல் செய்வதுபாவம்.

1075. பீடையுண்டாகும் வித்தை.

பீடையை நிவர்த்திசெய்ய வேண்டில் முன்பிடுங்கியவேரை வித்தும் விரையும்விட்டு காலைமாலையுங்கண்டு அரசு நடை உரக்கம் மரணம் இந்த வேளைகளில் வேரைப்பிடுங்கப் போகாது, ஊண் அரசில் வேரைப்பிடுங்கிவிட்டு முன்போல் உருஜெபிக்க பீடையானது நிவர்த்தியாகும், உன்னையும் வெல்வதற்கரிதாகும்.

1076. பீடைநிவர்த்தி செய்யும் வித்தை.

தன்னை ஒருவரும் வெல்லாதிருக்கும்படி செய்துகொள்ளவேண்டில் ஆக்ருஷ்ணத்தையும் தனதுபக்ஷி அரசாகயிருக்கும்போது எடுத்து ஓதவேண்டும், வித்துவேஷணம் உச்சாடனம் இவ்விரண்டையுந் தனது பக்ஷிநடையாக யிருக்கும்போது ஓதவேண்டும், பேதனத்தை எகாரத்தில் மாறி மாரணத்தை காலெழுத்தால் மாறி நாலு தொழிலும் வகையாய் செய்து வேர்களின் தலைமையைக்கண்டு அடைக்கும் அட்சரத்தை ஓதிவர உன்னைவெல்வோர்கள் உலகில்ஒருவருமில்லை, நீ மனமுறுதிகொண்டு அஷ்டகன்மமும் செய்ய சித்தியானது பெருகும், ஆதலால் பிறருயிரை வாங்க மனதில் எண்ணுதே, தன்னுயிர்போல் மன்னுயிரை எண்ணிப் பார்க்க சகலவித்தையும் பலிதமாகி கீர்த்திப் பெருகுவாய், யாவரும் உன்னைப் புகழ்வார்கள்.

1077. தன்னை வெல்லக்கூடா தென்னும் வித்தை.

அமரபட்சத்தின் பட்சிகளின் பச்சிலை அறியவேண்டில் மயிலுக்கு தவளையாம், கோழிக்கு குப்பமேனி, வல்லூறுக்கு நாய்கடுகு, ஆந்தைக்கு அரைக்கீரை; காகத்திற்கு அவுரி, இந்தப்படி அறிந்து ஆடவேண்டும்.

1078. அமரபட்ச பட்சிகளின் பச்சிலை அறியும் வித்தை.

நடைபட்சியில் வேர்பிடுங்கில் வெற்றியாகி தம்பனமும் மோகனமும்செய்யும், அரசபட்சியில் வேர்பிடுங்கில் ஜெகத்தில்மெச்சும்படியான

ஆக்ருஷணம் வசியமும் செய்யும் ஆண்பட்சியில் வேர்பிடுங்கி எதிரியினுடைய உடலானது சிதரிப்போகச்செய்யும், ஆதலால் நீ எவ்வகை நினைக்கும்போது அவ்வெழுத்தைப்பிடித்து மாறிக்கொள்ளவேண்டும். முன்சொன்னது தப்பாது, ஆதலால் அமரபட்சத்தில் தொழில் செய்வது பாபமென்று மேலோர் கூறுகின்றனர்.

1079. தன்னைத்தான் அறியும் வித்தை.

தன்னுடைய ஆத்துமாவை பகர்ந்தறிவதாக சொன்னேன் குட்சம், ஆதலால் நீ எந்தெந்த வேலையுங்கண்டு அட்சரத்தை பிரித்து மாறிடுவாய், ஆனால் உலகத்திற்காக பழிதேடப்படாது, அப்படி தேடில் பழியும் பாவமும் வந்தணுகுமென மேலோர் கூறுகின்றனர்.

1080. பட்சிநிலை அறியும் வித்தை.

பட்சிநிலை அறியவேண்டில் மனோன்மணியின் கிருபையானது வேண்டிய கோபமென்பதை அகற்றவேண்டும், குறித்தவனுடைய பக்ஷியுங் கருவும் வேண்டும், மன்னி னுலென்பதைக் காணவேண்டும், பழியாகிய நேரத்தைப் பார்த்துப் பறியவேண்டும்; இவ்விதம் தப்பாமல் செய்வோர்களுக்கு விவேகத்தினாலும் மனமென்னும் அறிவினாலும் வைபாகங்களினாலும் சகலமும் பலிதமாகுமென மேலோர் கூறுகின்றார்.

1081. ஊண்வேளையில் வேர்பிடுங்கும் வித்தை.

பட்சியானது ஊணாக யிருக்கும்பொழுது வேர்பிடுங்கில் நினைத்த காரியங்கள்செய்ய நன்மையுண்டாகும்; பீடையானது விலகும், பொருள் வரத்தாகும், நினைத்தவித்தைகளாட கீர்த்தியுண்டாகும், ஆனால் பிடுங்கியவேரை குளிசமாடிக் கட்டிக் கொள்ளவேண்டியது.

1082. நடைவேளையில் வேர்பிடுங்கும் வித்தை.

பக்ஷியானது நடையில் இருக்கும்பொழுது வேர்பிடுங்கில் நினைத்த காரியங்கள் முடியாது; மூடமாக்கும், வருத்தப்படுத்தும், எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணிமனம் புண்ணாகும், பிராணனுடைய லயிமட்டும் சுகமென்பது இராது, ஆதலால் அந்த வேளையை நீக்கவேண்டியது.

1083. அரசுவேளையில் வேர்பிடுங்கும் வித்தை.

பட்சியானது அரசில் இருக்கும்போது வேர்பிடுங்கிடில் அதின் பலன் யாதெனில் பிடுங்கியவேரை குளிசமாடிக் கட்டிக்கொண்டாலும் பொன்னால் கடயஞ்செய்து வேரை அதில் பதித்து வலகையில் மாட்டிக் கொள்ள சகலமும் சித்தியாகும்.

1084. நித்திரைவேளையில் வேர்பிடுங்கும் வித்தை.

பக்ஷி உறங்கும்போது வேர்பிடுங்கிடில் பகைகொண்டிருக்கும் எதிரி வெல்ல மாட்டான், பகைகொண்டவர்களை ஜெயஞ்செய்யலாம், சேமித்த காரியங்கள் யாவும் சித்தித்தில் வெல்லும், ஆதலால் இந்தவேளையில் ஒரு கொடுமை நினைக்கப் போகாது, அப்படி நினைக்கில் பழிவந் தணுகுமென மேலோர் கூறுகின்றனர்.

1085. மரணவேளையில் வேர்பிடுங்கும் வித்தை.

பக்ஷி மரணமாகவிருக்கில் வேர்பிடுங்கில் அதன் பலன் யாதெனில் தன்னை பகைவருவவன் வெல்லமாட்டான், சத்ருவானவரும் ஒருவருமில்லை; சண்டாள வேலையானதால் ஜெயிக்காது, பொருள்போகும், உயிர் சேதம்வரும், கொடுமையானது செய்யும் ஆதலால் அந்தவேளையில் வேர்பிடுங்கிடில் தோஷம் அணுகுமென மேலோர் கூறுகின்றனர்.

1086. பட்சிகளின் வலிவறியும் வித்தை.

பஞ்சபட்சிகளின் வலுவை பகர்வதற்கு என்றால் முடியாது, ஆயினும் சொல்வேன் கேட்பாயாக, சத்ருபக்ஷியின் நாளாகில் வலுவானது இல்லை, அந்த கொடுமையாகிய நாட்கள் பக்ஷி பகையாகில் சத்துரு பக்ஷியை அழித்துவிடும், பக்ஷிகள் யாவும் ஒன்றாய் கூடிக்கொண்டு மித்துருவா யிருந்தாலும் பக்ஷியின் வலுவு இல்லையென மேலோர் கூறுவர்.

1087. படுபட்சியின் வலிவறியும் ஜாலம்.

படுபக்ஷியின் நாளில் தன்னுடைய வலுவானது நீங்கிவிடும், மித்துருவானவருமில்லை, எத்தொழிலைச் செய்தாலும் தவிர்க்கலாகும், வெற்றி பெறமாட்டாது; பாம்பின் வாய் சிக்கிய தேரைப்போல் மனம்பதரி புண்ணாகும்; ஆணவங்களெல்லா மடங்கி எதுவுமல்லாமல் நடுநடுங்குவார்கள், இந்த கொடுமையாகிய சத்துருநாளில் யாதொரு தொழிலும் வித்தையும் செய்யலாகாது.

1088. எதிரியையடக்கும் வித்தை.

பகையாளியை அடக்கும்விதம் எவ்விதமெனில்: ஒருவருக்கும் கன்னி னுலென்பதை சொல்லாதே, கருவை வெளிவிடாதே, சக்கரத்தைக் காட்டாதே, அட்சரங்களை நினைவில் நினையாதே, மூலிகையின் வகைகளைக்காட்டாதே, சத்துரு மித்துருவைச் சொல்லாதே, பழியாகிய நேரத்தைக் காட்டப்படாது, அப்படி காட்டுவாயானால் பகையாளி பிழைபட்டுழல்வான், ஆதலால் மூலிகையின் சாபத்தை நீக்கி, கருவைத் தொட்டு அட்சரத்தின் மேல் தடவிவைக்க பகைவனுடைய ஆண்மையை யடக்கிவைக்கும்.

1089. தேவிபூசை செய்யும் வித்தை.

சத்துரு பட்சியின் காலையறிந்து தேவியினுடைய பூசைசெய்து சுடலை சாம்பலை தேகமாதியர்தமும் பூசிக்கொண்டு நிர்வாண ரூபமாக நின்று கருவை திலர்தமிட்டு எவனை குறித்தாயோ அவனுடலில் அட்சரத்தைவரைந்து கோடி வஸ்திர மணிந்துகொண்டு உன்மனதை திடப்படுத்திப் பூசைசெய்ய தெளிவுண்டாகும்.

1090. எதிரியை வாங்கும் மூலிபிடுங்கும் ஜாலம்.

எதிரியை வாங்கவேண்டில் மூலிகையின் முன்னின்று எதிரியினுடைய பெயரைச்சொல்லி வஸ்துவுடன் சத்தியும் மாக்கலவைகளும் வைத்து தூபதீபங்காட்டி நீ ஓர் மனதாக இருந்துக்கொண்டு ருத்திரனை

தியானித்து வேரைப்பிடுங்கிடில் எதிரியினுடைய பேரானது போம். எதிரிமேல் ருத்ரகோபஞ் சேலுத்துவார் ஆதலால் இப்படிச்செய்வது பாபமென்று அறிந்த பெரியோர் கூறுகின்றனர்.

1091. மரணமூல கஷணிநூலறியும் வித்தை.

மூலிகையின் முன்போய்நின்று சாபத்தை நிவர்த்திசெய்து, தலைநூடைய நூல்வாங்கி, மித்துருவின் முகத்தைநோக்கி, சத்துருபகுதியின் உறவைக்கொள்ளலாம், காப்புகட்டி வஸ்து சந்திவைத்து தூபதீபங்காட்டி உருவெழுதிய சக்கரத்தை அதின் முன்புவைத்து ஐந்தெழுத்தை செபித்து குறித்த யிடத்தையும் பார்த்துக்கொண்டு பட்சி அறிந்து கருவைத்தொட்டு வாலையினுடைய பூசைசெய்து, சூட்டி குறித்தயிடத்தில் முன்கொண்டு குத்திவிட எதிரிகட்கு வாதனை மெத்தவுண்டாகும் ஆதலால் இது செய்யப்போகாதெனை மேலோர் கூறுகின்றனர்.

1092. வேறு மரணமூல கஷணிநூலறியும் வித்தை.

முன்போல் மூலிகையில் முன்னிருந்துகொண்டு தூபதீபங்காட்டி கன்னிநூல் காப்புகட்டி பட்சியினுடைய சக்கரத்தைவைத்து அந்த அட்சரத்தையே மேல்நோக்கி செபித்து கருவைத்தொட்டு நேரத்தையும் பார்த்து மித்துருபட்சியைக் சேர்த்துக்கொண்டு நீ நிர்வாணமாக நின்று கொண்டு வேரைப்பிடுங்கவேண்டும், எதிரியானவன் நடந்தால்கன்று அல்லாவிட்டால் அவனது காலடிமண்ணையும் வேரின்மண்ணையும் சேர்த்து மயானத்தில் கொண்டுபோய் வைத்துக்கொண்டு தேவிக்கு பூசைசெய்து பச்சையிலையை சுடுவாயாகில் ஒரு ஜாமத்துக்குள்ளாக பகைவனுடைய உடலானது நசிந்துபோகும்.

1093. பிருதிவியின் தொழிலறியும் வித்தை.

பிருதிவின் தொழில்செய்வது எவ்விதமெனில் அப்புவை மண்ணுண்டு உண்ணும், மற்ற எழுத்துகளை சேர்க்கப்போகாது, ஆகாச எழுத்தைக்கூட்டி மாறும்படியான வகையைச் சொல்லவேண்டாம், சிவன்மேல் ஆணையென்று மேலோர் கூறுகின்றனர்.

1094. அப்புவின் தொழிலறியும் வித்தை.

அப்புவின்தொழில் செய்யவேண்டில் வாயுவின் எழுத்தைப்பிடித்து மாறவேண்டும். அத்துடன் அக்கினியைச் சேர்த்தால் தண்ணீர் நிமிஷத்தில் அற்றுப்போகும், ஆதலால் மற்ற எழுத்துகளை சேர்க்கவொண்ணாது, அப்படி சேர்க்கில் சூடானது அழிந்துபோகுமென மேலோர் கூறுகின்றனர்.

1095. தேயுவின் தொழிலறியும் வித்தை.

தேயுவின்தொழிலைச் செய்யவேண்டில் அப்பெழுத்து நதி அத்துடன் ஆகாச எழுத்தையும் சேர்த்து இரண்டையும் ஒன்றாய்ச்சேர்த்து மாறுவாயாகில் அக்கினியானது அமர்ந்துபோகும் அப்புவும் உண்டுபோகும், ஆதலால் தேவியின்மேல் ஆணையாக இத்தொழில் செய்யப்போகாதென மேலோர் கூறுகின்றனர்.

1096. வாயுவின் தொழிலறியும் வித்தை.

வாயுவின் தொழில் செய்ய வேண்டில் பிருதிவின் எழுத்தைப் பிடித்து மாறவேண்டும் அப்பெழுத்தைச் சேர்த்து அநுசரிப்பாயாகில் வாயுவானது அடங்கிப்போகும்; இத்துடன் மற்றஎழுத்துக்களைசேர்க்கப் போகாது; இந்தவித்தை ஒருவழிக்கும் சொல்லப்படாதென மேலோர் கூறுகின்றனர்.

1097. ஆகாசத்தின் தொழிலறியும் வித்தை.

ஆகாசத்தின் தொழில் செய்யவேண்டில் அப்பெழுத்தையும் பிருதிவியெழுத்தையுங்கூட்டி அக்கினி வாயு இவையிரண்டையுஞ் சேர்த்து நாலு எழுத்தையுஞ் செபித்து ஆகாசவெளியில் தாக்கவும், நினைத்த தொழில் செய்யப்போகாதென்றனர் மேலோர்.

1098. வசிய வித்தை.

வசியவித்தை செய்யவேண்டில் ஆகாசவெழுத்தையும் வாயுவின் எழுத்தையும் அக்கினியெழுத்தையும் சேர்த்துக்கொண்டு நீ நினைத்து செய்யும் தொழில் ஒதிட சகலமும் வசியமாகும்; மன்னர் நேசமாவார்கள்; தேவதைகள் சித்தியாக அருள்புரிவார்: இத்தொழிலை என்னமாய்க் கேட்டபோதிலும் வெளியிடப்போகாது; அன்றியும் அவ்வெழுத்தை வசியம்பண்ண அக்கினியை கூடசேர்க்கவும் அக்கினிவசியம்பண்ண வாய்வு எழுத்தை கூடசேர்க்கவும் அப்பெழுத்தை வசியம்பண்ண பிருதுவின் எழுத்தைப்பிடித்து மாறவேண்டும், பிருதிவியை வசியம்பண்ண அக்கினி எழுத்தைப்பிடித்து மாறவேண்டும், அப்படி மாறுவதுபெரிதல்ல; மனம் ஒன்றாகவேண்டும்; உண்மையானது கொண்டு ஐம்புலனை நிறுத்தவேண்டும், நிறுத்திடில் தொழிலெல்லாம் உண்மையாக விளங்கும், சித்தர்கள் புகழும்படியான திடமுள்ள பட்சிவித்தையின் வழியீதாகும், ஆகினும் உலகிலுள்ள மாந்தர்களுக்கு குணம் குறி சத்துரு மித்துரு காணுவிடில் ஒருவராலேயும் அடக்கவொண்ணாது என மேலோர் கூறுகின்றனர்.

1099. சத்துருவை வெல்லும் வித்தை.

எதிரிகளை வெல்லவேண்டில் அந்த எதிரிபட்சியுடன் சத்துருபட்சியைக்கூட்டி எதிரிமேல் செய்கின்றவன் மித்துருபட்சியைச் சேர்த்து சத்துருவின் முகத்தைநோக்கி செய்யும்படியான தொழிலை முன்னே வைத்து நிர்வாணமாக நின்று மந்திரத்தை ஓத இது எதிரியை துன்பப்படுத்திவிடுமென மேலோர் கூறுகின்றனர்.

1100. பேதவியல் பரியும் வித்தை.

பேதாபேதங்கள் காணவேண்டில் ஊண்பட்சியாகில் குள்ளன், அரசு பட்சியாகில் கொடியோன், கடைபட்சியாகில் சமானமானவன், நித்திரைபட்சியாகில ரொம்பவும் குள்ளன், மரணபட்சியாகில் கூனன், இவ்விதமாக அறிவினால் பட்சிகளின் தொழிலைக்கண்டு எத்தமையத்திலும் பேர்களை எளிதாக காணும்பொருட்டு மேலோர் கூறுகின்றனர்.

1101. வியாதி யறியும் வித்தை.

பட்சிகளைக்கொண்டு வியாதி அறியும்விதம் எவ்விதமெனில் ஊண் பட்சியாகில், சிரசுநோய், நித்திரைபட்சியாகில் தலைநோய், கழுத்துநோய், அரசு பட்சியாகில் நெஞ்சில்நோய், மரணபட்சியாகில் அரையில் நோய், இவ்விதமாக கண்டறியவேண்டும்.

1102. மச்சமறியும் வித்தை.

பட்சிகளைக்கொண்டு மச்சமறியவேண்டில் வல்லூருக்கு முதுகில், ஆந்தைக்கு உச்சி, அல்லது கையின்கீழ், காகத்திற்கு புயம், மார்பு இவைகளில் கோழிக்கு முகம் கண்டம், மயிலுக்கு தொடை முழங்கால், இவ்விதமாக மச்சங்களைக்கண்டு அறியவேண்டும்.

1103. பூர்வபட்சத்தில் அட்சரபட்சி அறியும் வித்தை.

அம் என்ற எழுத்துமுதல் வல்லூரு பட்சியாகும், அதில் முதலிரண்டும் ஆந்தைபட்சியாகும்; உம் என்ற எழுத்துமுதல் 2-ம் காகமென்ற பட்சியாகும், என் என்ற எழுத்துமுதல் 2-ம் கோழியாகும், ஒம் என்ற எழுத்துமுதல் 2-ம் மயிலாகும்; இதில் குறில் ஆண் நெடில் பெண்ணென்றும் இவ்விதங் கண்டறியவேண்டும்.

1104. அமரபட்சத்தின் அட்சரபட்சி அறியும் வித்தை.

இம் என்ற எழுத்து இரண்டு வல்லூருமுதல் 2-ம் ஆந்தை, எம் என்ற எழுத்து 2-ம் காகம், அம் என்றஎழுத்து 2-ம் கோழி, எம்என்ற எழுத்து 2-ம் மயிலாகும், இவ்விதமாக அமரபட்சத்தின் பட்சிகளின் அட்சரமறிந்து எத்தொழிலும் செய்யவேண்டுமென மேலோர் கூறுகின்றனர்.

1105. பூர்வபட்சம் பகல்வாரம் 7-க்கும் ஊண்பட்சி அறியும் வித்தை.

செவ்வாய் ஞாயிறு வாரங்களின் வல்லூருபட்சி உண்ணும், வியாழக்கிழமைகளில் காகம் உண்ணும், வெள்ளிக்கிழமையில் கோழியானது உண்ணும், சனிவாரம் மயில் உண்ணும்; ஆதலால் பூர்வபட்சம் பகலிற்கு இவ்வாறு அறிந்து யாதொருதொழிலும் செய்ய விருத்தியாகும்.

1106. அமரபட்சம் பகல்வாரம் 7-க்கும் ஊண்பட்சி அறியும் வித்தை.

திங்கள் சனிவாரங்களில் மயில் உண்ணும், செவ்வாய் ஞாயிறு வாரங்களில் கோழி உண்ணும், புதன்கிழமை காகம் உண்ணும், வியாழக்கிழமையில் ஆந்தைஉண்ணும், வெள்ளிக்கிழமையில் வல்லூருஉண்ணும், ஆதலால் அமரபட்சம் பகலிற்கு இவ்வாறு அறிந்து யாதொ தொழிலும் செய்ய விருத்தியும் ஜெயமு முண்டாகும்.

1107. பூர்வபட்சம் இரவு வாரம் 7-க்கும் பட்சி அறியும் வித்தை

ஞாயிறு செவ்வாய் வாரத்திற்கு படுபட்சி காகம், புதன் திங்கள் வாரத்திற்கு படுபட்சி கோழியாகும். வியாழக்கிழமைக்கு படுபட்சி மயிலாகும், சனிவாரத்திற்கு படுபட்சி ஆந்தையாகும்; இவ்வாறு பூர்வபட்சம் இரவிற்கு படுபட்சி அறிந்து தொழில் நடத்தவேண்டும்.

1108. அமரபட்சம் இரவு வாரம் 7-க்கும் ஊண்பட்சி அறியும் வித்தை.

சனி திங்கள் வாரங்களில் கோழி உண்ணும், வெள்ளிக்கிழமையில் மயில் உண்ணும், புதன்கிழமையில் ஆந்தை உண்ணும், வியாழக்கிழமையில் காகம் உண்ணும், செவ்வாய்க்கிழமையில் வல்லூரு உண்ணும்; இவ்வாறு அமரபட்சம் இரவின் வாரம் 7-க்கும் கண்டு யாதொரு தொழிலும் செய்ய ஜெயமாகும்.

1109. பூர்வபட்சம் வாரம் 7-க்கும் படுபட்சி அறியும் வித்தை.

ஞாயிறு வெள்ளியில் ஆந்தை மரணமாகும், வியாழம் சனிவாரங்களில் வல்லூரு மரணமாகும், திங்கள் கிழமையில் காகம் மரணமாகும், செவ்வாய்க்கிழமையில் மயில்மரணமாகும்; இவ்வாறு பூர்வபட்சம் வாரம் 7-க்கும் படுபட்சிகளறிந்து யாதொருதொழிலும் நடத்தவேண்டும்.

1110. அமரபட்சம் வாரம் 7-க்கும் படுபட்சி அறியும் வித்தை.

திங்கட்கிழமை ஆந்தை மரணமாகும், செவ்வாய்க்கிழமை வல்லூரு மரணமாகும், ஞாயிறு காகம்மரணமாகும். புதன்கிழமையில் மயில்மரணமாகும், சனி வியாழமிவைகளில் கோழிமரணமாகும், அமரபட்சம் வாரம் 7-க்கும் இவ்வாறு படுபட்சிகள் அறிந்து யாதொரு தொழிலும் நடத்தவேண்டும்.

1111. பூர்வபட்சம் பகல் இரவு இரண்டிற்கும் பட்சிகள் ஒவ்வொன்றின் தொழில்முறை அறியும் வித்தை.

பூர்வபட்சம் பகலில் பட்சிகள் உண்டு நடந்து அரசாகி நித்திரைப்போய் முற்பகலில்மரணமாகும்; அன்றிரவில் அரசுறுகி மரணமாகி நடையாகி உண்டு நித்திரைப் போய்விடும். இதையறிந்து யாதொரு தொழிலும் செய்யவேண்டும்.

1112. அமரபட்சம் பகல் இரவு இரண்டிற்கும் பட்சிகள் ஒவ்வொன்றின் தொழில் அறியும் வித்தை.

அமரபட்சம் பகலில் உண்டு மரணமாகி நித்திரைப்போய் அரசாகி நடை நடக்கும்; அன்று இரவில் உண்டு நித்திரைப்போய் நடையாகி மரணமடைந்து அரசாகும்; இதை அறிந்து யாதொருதொழிலுஞ் செய்ய வேண்டும்.

1113. பக்ஷம் இரண்டிற்கும் கடைநிலை பட்சிகள் அறியும்வித்தை.

பூர்வபட்சத்தில் மரணமாகியபட்சி உண்ணும், அன்று இரவில் நித்திரையாகிய பட்சி உண்ணும், அமரபட்சத்தில் நடையாகிய பட்சி உண்

ணும், அன்று இரவில் அரசாகியபக்ஷி உண்ணும். இவ்விதங்கொண்டு யாதொரு தொழிலும் நடத்தவேண்டுமென மேலோர் கூறுகின்றனர்.

1114. பூர்வபட்சம் பகல் ஜாமம் 7-க்கும் பக்ஷிகள் ஐந்தின் தொழில்முறை அறியும் வித்தை.

பூர்வபட்சம் பகலில் முதல் ஜாமம் வல்லூரு உண்ணும், ஆந்தை நடக்கும், காகம் அரசாளும், கோழி நித்திரைபோகும், மயில் மரணமாகும்; இவ்வாறு பக்ஷிகளின் தொழில் அறிந்து யாதொரு தொழிலும் செய்ய வேண்டும்.

பூர்வபட்சம் பகல் இரண்டாம் ஜாமத்தில் மயில் உண்ணும், வல்லூரு நடையாகும் அரசாகும், ஆந்தை மரணமாகும், கோழி நித்திரையாகும்; இவ்வாறு அறிந்து யாதொரு தொழிலும் செய்யவேண்டும்.

பூர்வபட்சம் மூன்றும் ஜாமத்தில் கோழி உண்ணும், மயில் நடக்கும், வல்லூறு அரசாகும், ஆந்தை நித்திரைபோகும், காகம் மரணமாகும்; இவ்வாறு அறிந்து யாதொரு தொழிலும் செய்யவேண்டும்.

பூர்வபட்சம் நான்காம் ஜாமத்தில் காகம் உண்ணும், கோழி நடக்கும், மயில் அரசாகும், வல்லூரு நித்திரைபோகும், ஆந்தை மரணமாகும்; இவ்வாறு அறிந்து யாதொரு தொழிலும் செய்யவேண்டும்.

பூர்வபட்சம் பகல் ஐந்தாம் ஜாமம் ஆந்தை உண்ணும், காகம், நடக்கும், கோழி அரசாகும், மயில் நித்திரைபோகும், வல்லூரு மரணமாகும்; இவ்வாறு அறிந்து யாதொரு தொழிலும் செய்யவேண்டும்.

1115. பூர்வபட்சம் இரவுஜாமம் 5-க்கும் பட்சிகள் ஐந்தின் தொழில்முறை அறியும் வித்தை.

பூர்வபட்சம் இரவில் முதல்ஜாமம் காகம் உண்ணும், ஆந்தை வழி நடக்கும், வல்லூரு அரசாகும், மயில் நித்திரைபோகும், கோழி மரணமாகும்; இவ்வாறு அறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டும்.

பூர்வபட்சம் இரண்டாம் ஜாமத்தில் மயில் உண்ணும், கோழி நடக்கும், காகம் அரசாகும், ஆந்தை நித்திரைபோகும், வல்லூரு மரணமாகும்; இவ்வ?று அறிந்து யாதொரு தொழிலும் செய்யவேண்டும்.

பூர்வபட்சம் இரவில் மூன்றும் ஜாமத்தில் ஆந்தை உண்ணும், வல்லூரு நடக்கும், மயில் அரசாகும், கோழி நித்திரைபோகும், காகம் மரணமாகும்; இவ்வாறு அறிந்து யாதொரு தொழிலும் செய்யவேண்டும்.

பூர்வபட்சம் இரவு ஜாமம் நான்கில் கோழி உண்ணும், காகம் நடக்கும், ஆந்தை அரசாகும், வல்லூரு நித்திரைபோகும், மயில் மரணமாகும்; இவ்வாறு அறிந்து யாதொரு தொழிலும் செய்யவேண்டும்.

பூர்வபட்சம் இரவு ஐந்தாம் ஜாமத்தில் வல்லூரு உண்ணும், மயில் நடக்கும்; கோழி அரசாகும், காகம் நித்திரைபோகும், ஆந்தை மரணமாகும்; இவ்வாறு அறிந்து யாதொரு தொழிலும் செய்யவேண்டும்.

1116. அமரபட்சம் பகல் ஜாமம் 5-க்கும் பட்சிகள் ஐந்தின் தொழில் முறை அறியும் வித்தை.

அமரபட்சம் பகல் முதல் ஜாமம் மயில் உண்ணும், கோழி அரசாகும், காகம் நடையாகும், ஆந்தை நித்திரையாகும், வல்லூரு மரணமாகும்; இவ்வாரறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டும்.

அமரபட்சம் பகல் இரண்டாம் ஜாமத்தில் ஆந்தை உண்ணும், வல்லூரு அரசாகும், மயில் மரணமாகும், கோழி நடையாகும், காகம் நித்திரையாகும்; இவ்வாறு அறிந்து யாதொரு காரியமும் செய்ய வேண்டுமென மேலோர் கூறுகின்றனர்.

அமரபட்சம் பகல் மூன்றும் ஜாமத்தில் கோழி உண்ணும், காகம் அரசாகும், ஆந்தை மரணமாகும், வல்லூறு நடக்கும், மயில் நித்திரையாகும்; இவ்வாறு அறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டும்.

அமரபட்சம் நான்காம் ஜாமத்தில் வல்லூறு உண்ணும்,மயில் மரணமாகும், கோழி அரசாகும், காகம் நடையாகும், ஆந்தை நித்திரையாகும், இவ்வாறு அறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டும்.

அமரபட்சம் பகல் ஐந்தாம் ஜாமத்தில் காகம் உண்ணும், ஆந்தை அரசாகும், வல்லூறு மரணமாகும், மயில் நடையாகும், கோழி நித்திரையாகும்; இவ்வாறறிந்து யாதொருகாரியமும் செய்யவேண்டும்.

1117. அமரபட்சம் இரவு ஜாமம் 5-க்கும் பட்சிகள் ஐந்தின் தொழில்முறை அறியும் வித்தை.

அமரபட்சம் இரவு முதல் ஜாமத்தில் மயில் உண்ணும், வல்லூறு அரசாகும், ஆந்தை மரணமாகும், காகம் நடையாகும், கோழி நித்திரையாகும்; இவ்வாறறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டும்.

அமரபட்சம் இரவு இரண்டாம் ஜாமத்தில் வல்லூறு உண்ணும், ஆந்தை அரசாகும், காகம் நடக்கும், மயில் நித்திரைபோம்; அவ்வாறறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டும்.

அமரபட்சம் மூன்றும் ஜாமத்தில் ஆந்தை உண்ணும், காகம் அரசாளும், கோழி மரணம், மயில் நடக்கும், வல்லூறு நித்திரைபோகும்; இவ்வாறறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டும்.

அமரபட்சம் இரவு நான்காம் ஜாமத்தில் காகம் உண்ணும், கோழி அரசாளும், மயில் மரணமாகும், வல்லூறு நடக்கும், ஆந்தை நித்திரைபோம்; இவ்வாறறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டும்.

அமரபட்சம் இரவு ஐந்தாம் ஜாமத்தில் கோழி உண்ணும், மயில் அரசாகும், வல்லூறு மரணமாகும், ஆந்தை நடக்கும், காகம் நித்திரைபோகும்; அவ்வாறு அறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டும்.

1118. பூர்வபட்சம் பகல் தொழில்முறை 5-க்கும் நாழிகை அறியும் வித்தை.

பூர்வபட்சம் பகலிற்கு ஊண்பட்சிக்கு நாழிகை ஒண்ணரை, நடைபட்சிக்கு ஒண்ணேகால், அரசு பட்சிக்கு இரண்டு, நித்திரை பட்சிக்கு

முக்கால், மரண பட்சிக்கு ஒன்னரை; இவ்விதமாக பட்சிகளின் தொழில்முறை நாழிகள் அறிந்து யாதொரு காரியமும் செய்யலாம்.

1119. பூர்வபட்சம் இரவு தொழில்முறை 5-க்கும் நாழிகை அறியும் வித்தை.

பூர்வபட்சம் இரவில் ஊண்பட்சிக்குக் நாழிகை ஒன்னேகால், நடை பட்சிக்கு ஒன்னேகால், அரசுபட்சிக்கு நித்திரைபட்சிக்கு ஒன்னரை, மரணபட்சி ஒன்று இவ்விதமாக பட்சிகளின் தொழில் முறை நாழிகள் அறிந்து யாதொரு காரியமும் செய்யவேண்டும்.

1120. அமரபட்சம் பகல் தொழில்முறை 5-க்கும் நாழிகை அறியும் வித்தை.

அமரபட்சம் பகலிற்கு ஊண்பட்சிக்கு நாழிகை இரண்டு, நடை பட்சிக்கு ஒன்னரை, அரசுக்கு முக்கால், நித்திரை அரை, மரணத்திற்கு ஒன்னேகால்; இவ்வாறு பட்சிகளின் தொழில்முறை நாழிகள் அறிந்து யாதொருகாரியம் செய்யலாம்.

1121. அமரபட்சம் இரவு தொழில்முறை 5-க்கும் நாழிகை அறியும் வித்தை.

அமரபட்சம் இரவிற்கு ஊண்பட்சிக்கு நாழிகை ஒன்னேமுக்கால் நடைக்கு ஒன்னேகால், அரசுக்கு முக்கால், நித்திரை முக்கால், மரணம் ஒன்று; இவ்வாறு பட்சிகளின் தொழில்முறை நாழிகளறிந்து யாதொருகாரியமும் செய்யலாம்.

1122. பூர்வபட்சத்தின் பட்சிநிற மறியும் வித்தை.

பூர்வபட்சத்திற்கு வல்லூறு பொன்னிறமாகும், ஆந்தை வெள்ளி நிறமாம், காகம் சிவப்பு நிறமாம், கோழி பச்சைநிறமாம், மயில் கருப்பு நிறமாம், இவ்விதம் பட்சிகள் நிறங்காணவேண்டும்.

1123. அமரபத்தின் பட்சிநிறம் அறியும் வித்தை.

அமரபட்சத்திற்கு ஆந்தை சிகப்பு நிறமாகும், காகம் பொன்னிறமாகும், மயில் பச்சைநிறமாகும், கோழி வெள்ளைநிறமாகும், வல்லூறு கருப்புநிறமாகும், இவ்விதம் பட்சிகள் நிறங்காணவேண்டும்.

1124. பூர்வபட்சத்தின் பட்சி குணமறியும் வித்தை.

பூர்வபட்சத்திற்கு வல்லூறு பிராமணனுகும், ஆந்தை வணிகனுகும் காக மசானுகும், கோழி வேளாளன், மயில் சண்டாளன், இவ்விதம் பட்சிகளின் குணமறிய வேண்டும்.

1125. அமரபட்சத்தின் பட்சி குணம் அறியும் வித்தை.

அமரபட்சத்திற்கு மயில் பிராமணன், வல்லூறு வேளாளன், ஆந்தை அரசன், காகம் வணிகன், கோழி இழிகுலத்தான், இவ்வாறு பட்சிகளின் குணமறியவேண்டும்.

1126. பட்சம் இரண்டிற்கும் பட்சி முக்காலம் அறியும் வித்தை.

பூர்வபட்சம் அமரபட்சம் இவை யிரண்டிற்கும் ஆந்தையும் மயிலும் முக்காலமாகும், கோழி நிகழ்காலமாகும், வல்லூருப் காகமும் வருங்காலம்; இவ்விதம் பட்சிகளின் காலமறிந்து யாதொரு தொழிலும் செய்யவேண்டும்.

1127. படசம் இரண்டிற்கும் பட்சி தாதுமூல ஜீவன் அறியும் வித்தை.

பூர்வபட்சம் அமரபட்சம் இவை யிரண்டிற்கும் வல்லூறு மூலம், ஆந்தை சீவன், காகம் தாது, கோழி மூலத்தாது, மயில் ஜீவதாது; இவ்வாறு பட்சிகளின் தாது மூலசீவன் அறிந்து யாதொரு தொழிலும் செய்ய வேண்டும்.

2128. பட்சம் இரண்டிற்கும் பட்சிவடிவமறியும் வித்தை.

பூர்வபட்சம் அமரபட்சம் இவை யிரண்டிற்கும் வல்லூறு நீண்ட வட்டம், ஆந்தைக்கு ஐங்கோணம், காகம் அறுகோணம், கோழி நாற்கோணம், மயில் முக்கோணம், இவ்விதமாக பட்சிகள் வடிவங்கள் அறியவேண்டும்.

1129. பட்சம் இரண்டிற்கும் பட்சிகாலறியும் வித்தை.

பூர்வபட்சம் அமரபட்சம் இவை இரண்டிற்கும் வல்லூறு கால் ஆகும், காகம் நீர்க்கலாகும், ஆந்தை நாற்காலாகும், கோழி கோக்கால் மயில் பெருங்காலாகும் இவ்விதம் பட்சி காலறியவேணும்.

1130. பட்சம் இரண்டிற்கும் பட்சி நிலமறியும் வித்தை.

பூர்வபட்சம் அமரபட்சம் இவை இரண்டிற்கும் நிலமாவது வல்லூறுக்கு பாலைநிலம், ஆந்தைக்கு குறிஞ்சி நிலம் காகத்திற்கு மருதநிலம், கோழிக்கு முல்லை நிலம், மயிலுக்கு நெய்தல் நிலம், இவ்விதம் பட்சிகளின் நிலமறியவேண்டும்.

1131. பட்சம் இரண்டிற்கும் பட்சிலோகமறியும் வித்தை.

பூர்வபட்சம் அமரபட்சம் இவை இரண்டிற்கும் வல்லூறு பொன்னுகும், ஆந்தை வெள்ளியாகும், காகம் செம்பாகும், கோழி வெண்கலமாகும், மயில் இரும்பாகும்.

1132. பட்சம் இரண்டிற்கும் பட்சி ஆண்பெண் அறியும் வித்தை.

பூர்வபட்சம் அமரபட்சம் இவை இரண்டிற்கும் வல்லூறு காகம் மயில் இவை மூன்றுபட்சியும் ஆணுகும், ஆந்தையும் கோழியும் பெண்ணுகும், இவ்விதம் பட்சிகள் ஆண் பெண் என்று அறிந்துக் கொள்ளவும்.

1133. பட்சம் இரண்டிற்கும் பட்சிகளின் சுவை அறியும் வித்தை.

பூர்வபட்சம் அமரபட்சம் இவை இரண்டிற்கும் சுவையாவது ஆந்தைக்குதித்திப்பு, கோழிக்குபுளிப்பு, காகத்திற்குதுவர்ப்பு, வல்லூறுக்கு

காரம், மயிலுக்கு கசப்பாகும், இவ்விதம் பட்சிகளின் சுவை அறிய வேண்டும்.

1134. பட்சம் இரண்டிற்கும் பட்சிகளால் ஆள்வரத் தெரியும் வித்தை.

பூர்வபட்சம் அமரபட்சம் இவை இரண்டிற்கும் பட்சிகளைக்கொண்டு ஆள்வரத்தறிவது எவ்விதமெனில் வல்லூரு நிற்கின்றான் என்றும், ஆந்தை மீண்டான் என்றும், காகம் வருகின்றான், கோழி ஊருக்குள் வந்தானென்றும்,மயி லாகில் அரைநாழிகையில் வருவானென்றும் இவ்விதம் கண்டு சொல்லவும்.

1135. பட்சம் 2-க்கும் பட்சிகள் வரவுகால அளவறியும் வித்தை

பூர்வபட்சம் அமரபட்சம் இவை இரண்டிற்கும் பட்சிகால அளவு அறிவது எவ்விதமெனில் கோழிக்கு நான்குநாள், வல்லூருக்கு ஐந்து நாள், என்று இவ்வித மறியவேண்டும்.

1136. பட்சம் 2-க்கும் பட்சிகளின் பருவம் அறியும்வித்தை.

பூர்வபட்சம அமரபட்சம் அவைஇரண்டிற்கும் பட்சிகளைக்கொண்டு ஆள்வரத்தறிவது எவ்விதமெனில் வல்லூறுபட்சியாகில் நிற்கின்றான் என்றும், ஆந்தையாகில் மீண்டானென்றும், காகமாகில் வருகின்றான் என்றும், கோழியாகில் ஊருக்குள் வந்தானென்றும், மயிலுக்கு அரை நாழிகையில் வருவானென்றும் இவ்விதங்கண்டு சொல்லவேண்டும்,

1137. ஒரு மனிதன் தலையை வெட்டும் வித்தை.

ஜாலமாடும் சபையில் வந்துநின்று தங்களில் ஒருமனிதனைப் பிடித்து அங்குள்ள ஓர் மேஜையின்மேல் குப்புறப் படுக்க வைத்து அவன் தலையை ஓர் துணியினால் மூடி கையில் கத்தியைப் பிடித்துக் கொண்டு சபையோர்களை நோக்கி இதோ மேஜையின்மேல் குப்புறப் படுத்துக் கொண்டிருக்கும் மனிதனுடைய தலையை வெட்டுகிறேன் பாருங்களென்று தன் கையில் தாங்கிய கத்தியினால் அறுத்து அதை கையில் தூக்கிக் கொண்டவுடனே தலையை அறுத்த முண்டத்தின் கையுங்காலும் உதைத்துக் கொள்ளும்.சற்றுநேரம்வரையில் அத்தலையை தன்கையிலேயே வைத்துக் கொண்டு பரிகாசமான சிலவார்த்தைகளை பேசியபின்பு அதனை அந்த முண்டத்தின் பக்கத்திலே வைத்து துவாலையைப்போட்டு மூடிவிட வேண்டும், உடனே தலையை மூடியிருக்கும் துவாலை எடுத்துவிட்டு வெறுமனே வைத்து அதன்பின் இரண்டு நிமிஷங்கள் கழித்து அந்த தலையின் வாயில் ஒரு சுருட்டைவைத்து பற்றவைக்கச் செய்து அவ்வாறு சற்று நேரம் வரையில் வைத்துக்கொண்டிருந்த பிறகு அத்தலை சுருட்டின்புகை குடிக்கத் துடங்குகிறது, அப்போது மூக்கிலிருந்து புகையும் வரும் அன்றியும் முன் சிமிட்டாத கண்களையும் சிமிட்டி முழி களையும் புரட்டும்; அப்போது வெட்டப்பட்டவனை நான் மந்திரத்தினாலே இத்தலையை இப்போது உயிர்ப்பித்தேன் என்று சொல்வார்; மறுபடியும் அந்தத் தலையின் மேல் துவாலையைப்போட்டு மூடி தலைக்குமட்டும் உயிர் கொடுக்கின்றே

னென்று அந்தத் தலையை முன்போலக் கையிற்றூக்கி ஜனங்களுக்குக் காட்டி முண்டத்துடன் சேர்த்து துவாலையால் மூடி ஜெபம்செய்து தண்ணீர்தெளிக்க உடனே வெட்டப்பட்ட மனிதர் எழுந்து வந்தனஞ் செய்து மறைந்துவிட யாவரும் ஆச்சரியப்படுவார்கள்.

1138. மேற்கூறிய ஜாலமாடும் சூட்சுமம் அறியும் வகை.

இதனுடைய இரகசியமாவது மேஜைப் பெட்டிக்குள்ளே ஓர் மனிதன் இருக்கிறதாக செய்யவேண்டும்; மேஜைக்குள்ளிருக்கும் மனிதனையும் வெட்டப் படுவோனையும் தூரத்திலிருந்து பார்த்தால் இருவர் முகங்களும் ஒரேமாதிரியாய் தோற்றும்படியாக இருவருக்கும் வேஷந்தரித்திருக்கவேண்டியது; அதுவுமன்றி இவர்களுடைய தலையைப்போலவே மண்ணிலும் ஒரு தலைசெய்து அந்த தலையின் கழுத்தடியில் சிவப்பு மஜிண்டாப் பவுடரைக் கரைத்து நிரப்பிய தோற்பையைப் பொருத்திருக்கவேண்டியது. வெட்டப்படவேண்டியவன் மேஜையில் படுத்தவுடனே வெட்டப்போகிறவன் அப்போது அந்த மேஜையில் மேற்பக்கத்திலுள்ள துவாரத்தின் வழியாய் தன் தலையை உள்ளே நுழைத்துவிட வேண்டும் அந்த க்ஷணமே மேஜைக்குள்ளே இருக்கிற மனிதன் மண்ணினால் செய்த தலையை அந்தத் துவாரத்தின் வழியாகவே மேஜைமேலே வெட்டப்போகிறவர் கையில் கொடுக்க வேண்டும், பிறகு மேஜைமேல் படுத்திருப்பவன் தலையை அறுப்பதுபோல் அம்மண்தலையினிற் பொருந்தியிருக்கும் தோற்பை அறுக்க அப்பையிலுள்ள பவுடர் தண்ணீர் இரத்தம் போல் பிரவாகித்தோடும், பிறகு அந்த மண்தலையைத்தூக்கி எல்லாருக்குங்காட்டி முண்டத்தின் பக்கத்தில் வைத்து துவாலையால் மூடி அந்த விடதில் ஒரு துவாரமிருக்கிறது, அந்த துவாரத்தின் வழியாய் மண்தலை உள்ளே எடுத்துக்கொண்டு உள்ளேயிருக்கிற மனிதர் தலையை வெளியே காட்டவேண்டும், இந்தவேலை நடந்துகொண்டிருக்கும்போது தலையை வெட்டினவர் பலவகை பாடி வார்த்தைகளால் ஜனங்களின் கவனத்தை தன்வசத்திற் கிழுக்கின்றனே, சுருட்டுப் பிடித்துக்கொண்டிருக்கும் தலையை துவாலையால் மூடும்போது முன்பு தலைநீட்டிய மனிதன் தன்தலையை உள்ளே இழுத்துக்கொண்டு மண்தலையை மேஜையின்மேல் வைத்துவிட வேண்டும் பிறகுதலையை வெட்டின வன் முண்டத்தோடு தலையை பொருந்தவைத்து துவாலை மூடினவுடனே உள்ளே யிருப்பவன் மண்தலையை உள்ளே எடுத்துக்கொண்டு வெட்டுண்டவர் முன்பு உள்ளே சொருகியிருக்கும் தன்தலையை வெளியே யிழுத்துக்கொண்டு எழும்பவேண்டும். இக்காட்சி ஜனங்களுக்கு மிகவும் ஆச்சரியமாகவே யிருக்கும்.

வெட்டப்போகிறவன் கையில் இருக்கும் துவாலை குட்டையின் பிரயோஜனம் இப்போது இன்னதென்று நன்கு விளங்கும். மேஜைக்குள் நுழைந்த உடனே உள்ளிருந்துவரும் மண் தலையை ஜனங்கள் கண்டு கொள்ளாதபடிக்கு வெட்டுண்ட தலையை யெடுத்து மேஜையின் ஓர் பக்கத்தில் வைக்குந் தருணத்தில் இத்தலையை உள்ளுக்கு வாங்கிக்கொண்டு மேஜைக்குள்ளிருக்கும் பொய் தலையைக்கொண்டு வருவதையும் பின்பு சுருட்டு பிடித்துக்கொண்டிருக்கும் தலையை திடீரென்றும் எடுத்து முண்டத்தோடுவைக்க எத்தனிக்கும்போது உள்ளிருக்கும் மனிதன்

தன்தலையை உள்ளிழுத்துக்கொண்டு உள்ளே பதிலுக்கு மண்தலை கொடுப்பதையும் கடைசியாக வெட்டுண்டதலையை முண்டத்தோடு சேர்க்கிறபோது அந்தக்ஷணமே மேஜைக்குள்ளிருக்கும் மனிதன் அந்த மண்தலையை உள்ளுக்கு வாங்கிக் கொள்வதையும் அதேநேரத்தில் வெட்டுண்ட மனிதன் தன் தலையை மேஜைக்கு வெளிப்புறத்தில் கொண்டு வருவதையும் வேடிக்கைப்பார்ப்பவர்கள் அறிந்து கொள்ளாமல் மறைக்கும்பொருட்டே தான், இதிலும் மேற்கூறிய வண்ணம் சூத்திரமாய் மேஜைகள்செய்து முன்பாக அறைக்குள் ஆடிப்பழகி பின்பு எவ்விடங்களிலும் பயமின்றிப் பயிரங்கமாய் ஆடலாம், ஆனால் மேஜையின்மேல் வலபுறமூலையில் வெண்மையான குட்டையை வைத்திருக்கவேண்டும்.

1139. பிரளய கப்பல் காட்டும் ஜாலம்.

ஒரு அறைக்குள் சுவற்றை சுத்தப்படுத்தி பின்பு தில்லைப்பாலையும் திமிரிபாஷாணத்தையுங்கலந்து சித்திரவேலைக்காரரைக் கொண்டாவது அல்லது தானாவது எழுதத்திறமையுண்டானால் ஒரு விசித்திரமான கப்பலொன்று எழுதி முன்னதாகவைத்திருக்கவேண்டும், இராத்திரி காலமானவுடன் ஜாலவித்தையாடுவோன் ஜனங்களைநோக்கி சகோதரர்களே இந்த அறைக்குள்ளிருக்கும் கப்பலைப்பாருங்கள், இது பூர்வம் பிரளய காலத்தில் செய்யப்பட்டகப்பல், இதன் விநோதத்தைச் சற்றுக் கவனியுங்களென்று அறையைத்திறந்து அனைவரையும் உள்ளே அழைத்துக் கொண்டுபோய் பாருங்களென்று காட்டஜனங்கள் யாவரும் கப்பலிருக்கும் காட்சியைப்பார்த்துக் கண்பூர்த்து பிரமைகொண்டு விழித்தவிழி மூடாமல் பார்த்துக்கொண்டிருப்பார்கள் அப்போது நீ அவர்களைப் பார்த்து இந்தகப்பலை பாதாளலோகத்திற்கு அனுப்பவேணுமென்று கொஞ்சம் கற்பூரத்தை கொளுத்திவைக்க கப்பலானது மறைந்துபோகும். கற்பூரம் அமைவதற்கு முன்னமே அனைவரையும் வெளியே அனுப்பிவிட்டு அறையைச்சாற்றித் தாள்போடவேண்டும்.

1140. பத்துத்தலை ராவணனைக் காட்டும் ஜாலம்.

முன்போல் ஒரு அறைக்குள் சுவற்றைச் சுத்தப்படுத்தி தில்லைப் பாலையும் திமிரிபாஷாணத்தையும் கலந்து பத்துத்தலை ராவணனைப் போல் சுவற்றில் எழுதி முன்னதாக வைத்திருந்து ஜாலமாடுவோன் ஜனங்களைநோக்கி சகோதரர்களே! இதோ மூடியிருக்கும் இந்தஅறைக்குள் இலங்கையிலிருந்து பத்துத்தலைராவணன் வந்திருக்கும் விநோதத்தைப் பாருங்களென்று உடனே அறையைத்திறந்துக்காட்ட தகத்தகாயமாய்த் தங்கமயம்போல் பத்துத்தலையும் இருபது கண்ணும் இருபதுகையுமாகத் தெரியும், அனைவரும்பார்த்து இதுமகா புதுமையான வித்தையென்று புகழ்ந்து பேசுவார்கள். அப்போது நீ அவர்களைப்பார்த்துஇந்த ராவணன் வந்து வெகுநாழிகையாச்சு இதோ லங்கைக்கு அனுப்பிவிடுகிறேன் பாருங்களென்று முன்போல் கற்பூரத்தைக் கொளுத்திவைக்க உடனே ராவணன் மறைந்துவிடுவான். நீ கற்பூரம் அவிந்துவிடுவதற்கு முன்னமே அனைவரையும் அறையைவிட்டு வெளியேதுரத்தி கதவைச் சாற்றித் தாள்போடவும்.

1141. இலங்காபுரி பட்டணம் காட்டும் ஜாலம்.

இரவில் ஒரு வெட்டவெளியான பெரிய மைதானத்திற்கு ஜாலவித்தைக்காரன் அனைவரையும் அழைத்துக்கொண்டுபோய் அச்சனங்களை நோக்கி இதோ இந்த மைதானத்தில் இலங்காபட்டணம் வந்து அமரும்படிச்செய்யும் அற்புதத்தைப்பாருங்களென்று நாலு எலுமிச்சம்பழத்தை எடுத்து அதின்மேல் மாயாசத்திக் கருவைப்பூசி மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து இந்த மைதானத்தில் இலங்கைப்பட்டணத்தைப்போல் தோற்றும்படி செய்யவேணுமென்று பழத்தை நாலுதிக்கிலும் விட்டெறிந்து வேதாளமந்திரத்தை உச்சாடனஞ்செய்துக்கொண்டேயிருக்க ஜனங்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அந்தமைதானத்தில் ஆச்சரியமாக இலங்கைபட்டணம் துலங்கும் இராட்சதாள் கூடகோபுரம் மாடமாளிகை கடைவீதி சாலைசோலைகளும் வெகு ஆடம்பரமாகத்தோற்றும். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள், அப்போது நீ இந்தப்பட்டணத்தை மறைந்துபோகும்படி செய்கிறேன் பாருங்களென்று வேதாள உச்சாடன மந்திரத்தை நிறுத்தி நாலுகல்லை எடுத்து நாலுதிக்கிலும்போட்டு மறைந்துபோவென்று மூன்றுதரம் சொல்ல மறைந்துவிடும் அனைவரும் பிரமிப்பார்கள்.

1142. காட்டேரியைக் காட்டும் ஜாலம்.

ஜாலவித்தைக்காரன் ஜனங்களை ஒரு மைதானத்திற்கு இட்டுக் கொண்டுபோய் இதோ காட்டேரியைக் காட்டுகிறேன் பாருங்களென்று இந்திர ஜாலக்கருவைத்தடவி குறளியைத்தியானித்து உச்சாடனம் செய்ய உடனே பார்க்கும்படியான ஜனங்களின் கண்களுக்கு அந்த மைதானமெல்லாம் காட்டேரி கூட்டமாகத் தோற்றும்.

1143. தலைகள் உருளும் விநோத ஜாலம்.

முன்போலவே இரவில் ஜனங்களைக் கூட்டிக்கொண்டு ஒரு மைதானத்திற் சென்று மைதானமெல்லாம் மனிதர்தலைகள் உருளும் விநோதத்தையும் பாருங்களென்று ஐங்கோலக்கருவை விரலில்தொட்டு சக்கலாதேவி மந்திரத்தை செபித்துக்கொண்டே இந்தமைதானமெல்லாம் மனிதத்தலைபோல் தோற்றவேண்டுமென்று உச்சாடனஞ்செய்ய பார்ப்போர்களுக்கு மைதானமெல்லாம் தலைகளாகத் தோற்றும் அனைவரும் பிரமைகொள்வார்கள்.

1144. வனமிருகங்களைக் காட்டும் வித்தை.

ஜாலக்காரன் முன்போலவே இரவில் ஜனங்களை கூட்டிக்கொண்டு ஒரு மைதானத்திற்குச்சென்று ஜனங்களைப்பார்த்து இதோ காட்டில் வாழும்படியான பல பலவித மிருகங்களையும் அழைப்பிக்கும் அற்புதத்தைப் பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு மாயாசத்தி மந்திரத்தை 1008 செபித்து இந்த மைதானம் முழுதும் மிருகக் கூட்டங்களாகத் தோற்ற வேண்டுமென்று உச்சாடன மந்திரத்தைச் செபிக்க உடனே பலவகையான மிருகக் கூட்டங்கள் எங்கும் நிரை நிரையாக நிற்கும், அதைக்கண்ட யாவரும் அடடா இது என்ன ஆச்சரியமாக இருக்குதென்று அனைவரும் உன்னைப் புகழ்வார்கள்,

1145. மூன்றுதலையுள்ள ஸ்திரீ புருஷாளிருவரைக் காட்டும் ஜாலம்

ஒரு அறையை சுத்தப்படுத்தி அந்த சுவற்றில் மூன்று சிரசுள்ள ஸ்திரீ ஒன்றும் புருஷன் ஒன்றும் தில்லைப்பாலையும் திபிரிபாஷாணத்தையுங் கலந்து எழுதிவைத்து அந்த அறையைமூடி தாள்போட்டு வைத்திருக்கவேண்டும் இரவானவுடன் ஜனங்களை அழைத்துக்கொண்டு அந்த அறை யிடமாகச்சென்று அவர்களை நோக்கி இதோ இந்த அறைக்குள் மூன்றுசிரசுள்ள ஆண்பெண் இரண்டுபேர்களைக் காண்பிக்கிறேனென்று அந்த வீட்டைத்திறந்து அனைவரையும் பார்க்கச்சொல்ல கோடி சூரியப் பிரகாசம்போல் மூன்றுதலையுள்ள ஸ்திரீ புருஷாள் தோன்றுவார்கள் அப்போது நீ அவர்களைப்பார்த்து இதோ இந்த புருஷாளை மாயமாகப் போய்விடச் செய்கிறேனென்று கொஞ்சம் கற்பூறத்தை கொளுத்தி வைக்க மறைந்துபோகும்; உடனே அனைவரையும் அறையைவிட்டு வெளியே துரத்திக் கதவைச்சாற்றித் தாள்போடவேண்டியது.

1146. எழு சமுத்திரத்தைக் காட்டும் ஜாலம்.

ஜாலக்காரன் முன்போலவே இரவில் ஜனங்களை ஒரு மைதானத்திற் கழைத்துக் கொண்டுபோய் அவர்களைப்பார்த்து இதோ இந்த மைதானத்தில் எழு சமுத்திரமுந் தோற்றும்படி செய்கிறேன் பாருங்களென்று மாயாசத்திக்கருவை விரலில்தொட்டு எழுகல்லின்மேல் தடவி மாயாசத்தி மந்திரத்தை 1008 செபித்து இந்த மைதானத்தைப் பார்ப்போர்களுக்கு சப்த சமுத்திரம்போல் தோற்றச் செய்வாயென்று உச்சாடனஞ்செய்து எழுகல்லையும் எழுதரம் விட்டெறிய உடனே பார்ப்போர்களுக்கு எழு சமுத்திரமாகத்தோற்றும்; ஆச்சரியப்படுவார்கள்.

1147. சப்தகன்னிகளை காட்டுஞ் ஜாலம்.

ஜாலக்காரன் முன்போலவே இரவில் ஜனங்களை மைதானத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் அவர்களைப்பார்த்து இதோ அந்தர மார்க்கமாகயிருந்து எழு கன்னிகள் வரும் விநோதத்தைப் பாருங்களென்று ஜெகஜாலக்கருவையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில் தொட்டு மாயர்சத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கருவை எழு எலுமிச்சம் பழமெடுத்து அதின்மேல் தடவி எழுமூலையிலும் போட உடனே சந்திர பிரகாசம்போல் எழுகன்னிகள் அந்தரமார்க்கத்தில் தோற்றமாவார்கள் அப்போது பார்க்கும் ஜனங்களெல்லாம் இப்பேர்க்கொத்த ஸ்திரீயை நாம் எந்த பிறப்பிலும் காண்பதறிது; இப்போது ஜாலக்காரனால் பார்த்து மகிழ்ந்தோமென்று புகழ்வார்கள்.

1148. நூறு சிரசுள்ள மனிதனைக் காட்டுஞ் ஜாலம்.

ஒருபெரிய அறைவீட்டை சுவர்முதலானதும் சுத்தப்படுத்தி தில்லைப்பாலும் திபிர்பாஷாணமும் கலந்து சுவற்றில் சித்திரக்காரனைக் கொண்டு விநோதமாக நூறுதலையும் இருநூறுகண்ணும் இருநூறுகையும் இரண்டு காலுமாக எழுதி முன்னதாகவே வைத்து அந்த அறைக்குள் ஒருவரும் போகாமற்படிக்கு சாத்திப்போட்டு வைக்கவேண்டும். இரவானவுடன் ஜாலக்காரன் ஜனங்களை அழைத்துக்கொண்டு, அறை வீட்

டைத் திறக்கின்றேன் அதில் நூறுசிரசும் இருநூறுகண்ணும் இருநூறுகையும் இரண்டு காலுமாக சூரியப்பிரகாசம்போல் தோற்றும் விநோதத்தை பாருங்களென்று உடனே அறைவீட்டின் கதவைத்திறந்து காட்ட மேற்கூறியதுபோல் தோற்றும்; கண்டோர்களெல்லாம் அதிகமாய் மிரண்டு கண்பூர்த்து இது அற்புதமான வித்தையென்று ஆச்சரியப்படுவார்கள்; அப்போது நீ இதோ மாயமாகச் செய்கிறேனென்று கொஞ்சம் கற்பூரத்தைக் கொளுத்திவைக்க உடனே மறைந்துவிடும்; அப்போது அனைவரையும் அறையைவிட்டு வெளியே போகச்செய்து கதவைச்சாத்திக் கொள்ளவேண்டும்.

1149. அந்தரத்தில் ஆட்டுத்தலை ஜாலம்.

ஒரு கொம்புள்ள ஆட்டுத்தலையைக் கொண்டுவந்து ஜலம்விட்டுக் கழுவி சுத்தப்படுத்தி அந்த தலைக்கு மஞ்சள் பூசி குங்குமமிட்டு அதின் வாயில் ஒரு எலுமிச்சம் பழத்தைவைத்து பின்பு ஜனங்களைப்பார்த்து இதோ இந்த ஆட்டுத்தலையை மேஜைமேல் வைத்து மூடிவிடுகிறேன் இது அந்தரமார்க்கமாகப்போய் நிற்கும் விநோதத்தைப் பாருங்களென்று உடனே ஜெகஜாலக்கருவையும் இந்திர ஜாலமையும் ஐங்கோலக் கருவையும் ஒன்றாய்க்கலந்து விரலில்தொட்டு ஜெபித்து இந்த ஆட்டுத்தலை அந்தரமாக நிற்பதுபோல் தோற்றச் செய்வாயென்று கருவை ஆட்டு தலையில் தடவி மேசைமேல்வைத்து ஒரு கூடையைப்போட்டு மூடிவிடவேண்டும். சற்றுநேரம்பொருத்து பார்க்க கூடைக்குள்ளிருந்த தலை அந்தரமாக போய் நிற்கும்; அனைவரும் அதிசயப்படுவார்கள்; ஆனால் நீ வேதாளத்தை உச்சாடனம் செய்துகொண்டே யிருக்கவேண்டும்.

1150. சிம்பத்தின்மேலேறி காளியிருப்பதாக காட்டும் ஜாலம்.

முன்போலவே ஒரு அறையை சுத்தப்படுத்தி அந்த விடுதி அறையின் சுவற்றில் சித்திரமெழுது வோரைக்கொண்டு சிம்பவாகனமும் அவ்வாகனத்தின்மீது பத்ரகாளி குந்தியிருப்பதுபோல் எழுதி அந்த விடுதி அறை கதவைச்சாற்றி தாள்போட்டு வைத்திருக்கவேண்டும்; இதுவானவுடனே ஜனங்களை அழைத்துக் கொண்டுபோய் இதோ இந்த அறைக்குள் சிம்பவாகனத்தின்மேல் பத்திரகாளியம்மன் குந்திக்கொண்டிருக்கும் விநோதத்தை பாருங்களென்று உடனே அந்த வீட்டின் கதவைத்திறந்து காட்ட அறையினுள் பார்ப்போர்கண்களுக்கு சூரியப் பிரகாசம்போல் சிம்பவாகனத்தின் மீது பத்திரகாளியம்மன் தோற்றுவாள்; அதைக்கண்ட யாவரும் ஆச்சரியப்படுவார்கள்; இது ஜாலவித்தையல்ல மகாமந்திர வித்தைப்போ லிருக்கிறதென்று அந்தகாளிமாதேவியைத் தொழுவார்கள்; ஜாலக்காரன் அப்போது அவர்களைப்பார்த்து இதோ அம்மனுக்கு கற்பூரங்கொளுத்தி வைக்க சிம்பவாகனமும் காளியும் மறைந்துபோய்விடும்; அப்போது நீ கற்பூரம் அவிதற்கு முன்னமே அனைவரையும் அறையைவிட்டு வெளியே போகும்படிசெய்து கதவைச் சாற்றித் தாள்போட்டுக் கொள்ளவேண்டும்.

1151. நெருப்பு மீதில் நடக்கும் ஜாலம்.

ஒரு சிறிய மைதானத்திற் சென்று இரண்டு அக்கினிகுண்டம் வெட்டி அந்தகுண்டம் ஒன்றில் கட்டைகளை போட்டுக்கொளுத்தி நியா

ளது தணிந்தபின்பு அந்தநெருப்பைப் பறப்பி அங்குள்ள அனைவரையும் பார்த்து இதோ இந்த நெருப்பின்மேல் நடக்கும் விநோதத்தைப் பாருங்களென்று மாயாசக்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து, மறைவு மையை திலர்தமிட்டுக்கொண்டு நெருப்பை பரப்பிவைத்திருக்கும் குண்டத்திலிறங்கி உலாத்திக்கொண்டிருக்க பார்ப்போர் கண்களுக்கு நெருப்பின்மேல் உலாத்துவதுபோலிருக்கும் அனைவரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு அக்கினிதேவன் வசியம் செய்துகொண்டானென்றும் அல்லது வாலை வசியமோவென்றும் பற்பலரும் பலவிதமாகப்பேசி உன்னைப் புகழ்ந்து கொண்டாடுவார்கள்.

1152. கோணிப்பையில் போட்டு கட்டியமனிதன் மாயமாய்ப்போகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வேடிக்கைப் பார்ப்பதற்காக கூடியிருக்கும் திரளான ஜனங்களுக்கு முன்பாக வேடிக்கைகாட்டுவோன் சிவப்புத் துணியினால் தைக்கப்பட்ட ஒரு பையை யாவருக்கும் செம்மையாய்த் திறந்துகாட்டிய பிறகு அதனுள் ஒருமனுஷனைப்போட்டு அந்தப்பையின் வாயைசேர்த்துப் பிடித்துப் பலமாகக்கட்டி முத்திரைப் போட்டபின் பையின் வாய் சரியாகக் கட்டப்பட்டு அதற்குச் சரியாய் முத்திரை விழுந்திருக்குதாவென்று பரீட்சைப் பார்த்துக் கொள்ளலாம். பிறகு திரைவிடப்பட்டு இரண்டு நிமிஷத்திற்கு பிறகு திரை உயர்த்தப் படுமாகில் அப்போது கட்டுண்ட மனிதன் நிற்பான். பையானது பக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும். அந்த பையின்கட்டை அவிழ்க்காமலும் மனிதன் எவ்விதமாய்த் தப்பித்து வெளியே வந்தானென்று ஆச்சரியப்படுவார்கள்.

1153. மேற்கூறிய வித்தையாட சூட்சுமம்.

ஜாலவித்தை செய்பவர்கள் சமயத்திற்கு தக்கபடி பலவிதமான பகடி வார்த்தைகளாடி ஜனங்களுடைய கவனத்தை தம்வசப்படுத்திக் கொள்ளவேண்டியது மிகவும் முக்கியம்; ஏனெனில் பார்ப்பவர்கள் கவனிக்காதபடி எளிதில் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்க.

இந்த ஜாலத்தில் வேடிக்கைகாட்டுவோர் ஒரு மனிதனைக்கொண்டு வந்து சபையோர்களுக்கு முன்னிறுத்தி, இவன் மகா பெரியதிருடன் பல தடவைகளில் பிடித்து கட்டிவைத்திருந்தும் ஓடிப்போய்விட்டான், இப்போது இவனை அதி ஜாக்கிரதையாய் பையிற்போட்டு கட்டி முத்திரைவைத்து விடுகிறேன், இனியவன் தப்பித்துக்கொள்வதற்கு ஏதுகாமிராதெனக்கூறி சிவப்பு பச்சை துணியினால் தைக்கப்பட்ட ஒரு பையை யாவருக்கும் காண்பித்து அவர்கள் செம்மையாய் புரட்டிப் புரட்டிப் பார்த்தபிறகு அதைவாங்கி அதற்குள் மனிதனைப்போட்டு பையின் வாயை சேர்த்துப்பிடிக்கிறான். அந்த மனிதன் பைக்குள்ளே நுழைவதற்கு இஷ்டமில்லாதவன்போல் பலவித பாசாங்குகள் செய்து கடைசியாய் பலவந்தத்தின்மேல் அவனைப்பிடித்து உள்ளேபோடுகிறான். அந்த மனிதனோ தான் அடைப்பட்டிருக்கின்ற பைப்போல் வேறொருபை தான் இடுப்பில் ஒருவருக்குந் தெரியாமல் மறைத்துவைத்திருக்கிறான், உள்ளேபோனவுடன் தான் தப்பித்துக்கொண்டோடிப்போகிறேனென்று

திமிரி பலவித பாசாங்குசெய்து பைக்கு அசைவு கொடுக்கும்போது மெதுவாய் தன் இடுப்பிலிருக்கிற பையை எடுத்து அதன் வாயை ஒன்றுக்கச்சேர்த்து வேடிக்கைக் காட்டுபவன் கையில் நுழைத்து விடுகிறான். அவன் அதை உபாயமாய் தன்கையில் வாங்கிக்கொண்டு அப்பையின் வாயை வெளியி லெடுத்துக்கொண்டு மேல்பையின் வாயை தன்கையில் அடக்கிக்கொண்டு கெட்டியாய் சுமந்து கொள்ளுகிறான். இந்த சூட்சும் நடக்கும்போது இதன்வாய் பிரிந்திருக்கவில்லை ஜனங்களுடைய கவனத்தை தன்னுடைய நடவடிக்கைகளினால் சிறக்கும்படி பலவித பகடி வார்த்தைகள் கூறி கை விட்டுவிட்டால் திருடன் ஓடிப்போய் விடுவானென்று சொல்லி இரண்டுபையின் வாயையும் வெகு ஜாக்கிறதையாய் பிடித்துக்கொண்டு யிருக்கிறான். மேலே கூறியவாறு வெளிப்பைவாயை தன் கைக்குள் மறைந்தும், உள்பையின் வாய் கைவெளியில் யாவருக்கும் தெரியும்படி யாகவு மிருக்கிறது. இப்போது ஜனங்கள் பார்வைக்குத் தோற்றப்படும் பையின் வாய்தான் திருடன் அடைப்பட்டிருக்கின்ற பையின் வாய் என்று யாவரும் நினைத்திருக்கிறார்கள். பிறகு வித்தைக்காரன் ஜனக் கூட்டத்தில் ஒருவனை அழைத்து ஒருவருடைய மோதிரத்தை வாங்கி அதற்குள் போட்டு பலமான கயிற்றினால் கட்டும்படி ஏவுகிறான்; அவ்விதமாகவே கட்டி முத்திரை போடப்படுகின்றது. கட்டும் முத்திரையும் உட்பையின் வாயில் விழுந்திருக்கிறதே யன்றி மனுஷன் அடைபட்டிருக்கும் வெளிப்பையின்வாய் கட்டு முத்திரை விடப் படுகிறது. அப்போது ஷை திருடன் எழுந்து வெளிப்பையை எடுத்து ஓரிடத்தில் ஒளித்து வைத்துவிட்டு கட்டுடனும் முத்திரை யுடனுமிருக்கிற உள்பையை எடுத்து மேஜைமேல் வைத்துவிட்டு பக்கத்தில் நின்றுக் கொண்டிருக்கிறான். இந்த வேலை வெகு சீக்கிரத்தி லாகவேண்டும்; மீண்டும் திரை திறக்கப்படவே முத்திரைபோட்ட பையை ஜனங்கள் பரிசோதனைசெய்து பார்க்கிறார்கள்; கட்டு கட்டின படியும் முத்திரை போட்டபடியு மிருக்கக் கட்டை யவிழ்க்காமலும் முத்திரை உடைக்காமலு மெவ்விதமாய் மனிதன் வெளியே வந்தானென்று சனங்கள் பிரமிப்பார்கள் என்க.

1154. பை வித்தை.

கருப்புத்துணியினால் ஆள்புகும்படியான பையை இரண்டுசெய்து அதில் ஒருபையை மறைத்துக்கொண்டு மற்றொருபையை யாவருக்கும் செம்மையாகத்திறந்து காட்டிய பிறகு தங்களுள் ஒருமனிதனை அழைத்து சபையோர்களுக்குக்காட்டி இந்த மனிதனை இந்த பையில்போட்டு கட்டி பந்தோபஸ்து செய்துவைக்கிறேன்; அந்த பந்தோபஸ்துகள் அப்படியே யிருக்க இவன் பையிலிருந்து வெளியே ஓடிப்போகும் வேடிக்கைப் பாருங்களென்று ஷை மனிதனை அந்தப்பையில்போட்டு வாயை பிடித்து நன்றாய்க்கட்டி முடிபோட்டு சபைநடுவில் வைத்துவிடவேண்டும். மற்றொருபை வெறும்பையாக வாயைப்பிடித்துக்கட்டி முடிபோட்டு வைத்திருக்கவும் அந்த ஆளை கட்டிவைத்து பைசுற்றி திரைபோட்டு தந்திரமாக மறப்புமையை பையின்மேல் தெளித்து சற்றுநேரம் பொருத்துத் திரையை வாங்கிவிட மூட்டை கட்டிவைக்க பை ஒருவர் கண்ணுக்குந் தோற்றாது பைக்குள் கட்டிய மனிதனை அவிழ்த்து வெளியேவிட்டு

விட்டு அத்தடையை மறைத்து வேறே கட்டிவைத்திருக்கும் பையை அங்கே வைத்திருக்க யாவரும்பார்த்து இந்த பையிலிருந்தவன் பையும் அவிழ்க்காமல் முத்திரையுங்கலையாமல் எப்படி மர்மமாய் போட்டுவிட்டானென்று பிரமைகொள்வார்கள்.

1155 ஒருவரை ஒருவர்பார்க்க தலையில்லா முண்டமாகத் தோற்றும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் வேடிக்கைப்பார்க்க வந்திருக்கும் ஜனங்களை நோக்கி, இதோபாருங்கள் ஒருவர்பார்க்க முண்டமாகத்தோற்றும்விநோதத்தைப் பாருங்களென்று தலைமண்டையோட்டில் ஏறழிஞ்சி யிரங்கழிஞ்சியின் தயிலமும், பசுநெய், முத்தெண்ணெய், எள்ளெண்ணெய், இலுப்பெண்ணெய், வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், புன்னையெண்ணெய், பன்றிநெய், கழுதைநெய் இவை முதலானதும் ஒன்றாய்க்கலந்து அத் தலைமண்டை ஓட்டில்விட்டு அத்துடன் ஐங்கோலக் கருவையும் விட்டு மெல்லியதுணியை வத்தியாகத் திரித்துப்போட்டுத் தீபமேற்றி மாயாசத்தி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபிக்க அந்த தீபத்தைப் பார்த்து மனிதரைப்பார்த்தால் தலையில்லா முண்டம்போல் தோற்றும்; அப்போது சபையிலுள்ளவர்கள் அவரவர்தலைகளைத் தடவிப் பார்த்துக் கொள்வார்கள்; சிலர் மிரளுவார்கள்; தீபத்தை நிருத்திவிட எப்போதும்போல் சிரசு யிருப்பதாகத் தோன்றும்; ஆனால் இந்த வித்தை இரவிலாடவேண்டும்.

1156. கண்ணோய் மருந்து வித்தை.

ரசம் விராகனெடை இரண்டு, துத்தநாகம் விராகனெடை ஒன்று, காரீயம் விராகனெடை நாலு, சங்கு விராகனெடை எட்டு, தாம்பிரம் அரப்பொடி விராகனெடை பதினாறு, எலுமிச்சம் பழச்சாற்றில் இந்த தினுசுகளைச் சேர்த்து கல்வத்திலிட்டு மூன்றுநாள் அரைத்து மாத்திரை செய்து சகல நேத்திர ரோகங்களுக்கும் உபயோகப்படுத்தலாம்.

1157. பிரதி எடுக்கும் இங்கி வித்தை

அவுன்சு சாராயச்செக்கை கியாழத்தில் கொஞ்சம் படிகாரத்தைக் கலந்து சக்கரையும் சோத்துப்பும் சேர்த்துக்கொள்ள இங்கியாகும்.

1158. பல்வலி தீர்க்கும் வித்தை.

இரண்டுகிரான் கற்பூரத்தை ஒரு அவுன்சு தேவதாரி தைலத்தில் போட்டுக்கரைத்து பல்வீரில் உபயோகிக்க பல்வலி உடனே தீரும்.

1159. மூக்கில் உதிரம் விழுதலை நிருத்தும் வித்தை.

வாயில் கொஞ்சம் காகிதத்தையாகிலும் மிட்டாயாகிலும் கொஞ்சம் செவ்வையாய்த் தாள்கள் அசையும்படி மெல்ல உதிரம் விழுதல் நிற்கும்.

1160. சிறுத்திரிமப்பன் செய்யும் வித்தை.

சிறுத்திரிமப்பன் செய்யவேண்டில் பின்வரும் வஸ்துக்கள் தேவை; அதாவது சுத்திசெய்த தாம்பரம் 50-விராகனெடை பகநீஷி 3-விராகனெடை நவாசாரம் ஒண்ணேமுக்கால் விராகனெடை, முக்காலரிக்கால் வீசை காய்ந்தாரின சுண்ணாம்பு டார்ட்டார் ஒன்றும் சாராயப் பீப்பாவில் ஒட்டிக்கொண்டிருக்கும் வெண்பிசின் நாலரைவீசை, தாம்பிரமும் மூசியில் உருக்கப்படுகிறது,

1161. மேல்காற்றுக்கவியா மெழுகுவத்தி செய்யும் வித்தை.

ஓர் சணல்துணியில் பொடித்த உப்பை பரப்பி மெழுகுவத்தி சுற்றிவிட்டு தீபமேற்ற மேல்காற்றுக் கவியாதிருக்கும்.

1162. பொன்னிங்கி செய்யும் வித்தை.

இது அச்சாபீஸ் காரருக்கு மிகவுபயோகம்; இதைச்செய்து மிகலாப மடையலாம்; வெள்ளைகோந்தை மைபோல் பொடிசெய்து ஓர் பீங்கான் உரலில் வைத்துக்கொண்டு அத்துடன் காரமான பிராந்தியைக் கலந்து மிகநீராய் இருக்கும்படி வைத்து, கொஞ்சம் தங்கசன்னத்தை இந்தப்பிசின் ஜலத்தில்போட்டு விரலால் செவ்வையாய் கரையும்படி இரவு முழுதும்வைக்க கலப்பு குழம்பாய்விடும்பட்சத்தில் மஞ்சள்கலந்த கோந்து ஜலத்தைக்கொஞ்சம் சேர்க்கவும்.

1163. எஃகுமேல் கிலிட்டு கொடுக்கும் வித்தை.

எஃகு சாமானை செவ்வையாய் துடைத்து மெருகு கொடுக்கவும்; நைட்ரே முரியடித் திராவகத்தில் பொன்னைப்போட்டு தண்ணியாக்கிக் கொள்ளவும்; எஃகு சாமானை இந்தக்கலப்பில் தோய்த்து உடனே பச்சைஜலத்தில் தோய்க்க பொன்மயமாகிவிடும்.

1164. மெழுகுவத்தி செய்யும் வித்தை.

ஆடுமாடுகளின் கொழுப்பை ஒருபாத்திரத்தில் போட்டு அடுப்பிலேற்றி காய்ச்சி வைத்துக்கொண்டு மெல்லியதாய் பின்னப்பட்ட நூல் வத்தியைத்தோய்த்து உலரவைத்து உலர்ந்தபின் மறுபடியும் தோய்த்து வேண்டிய பரிமாணமாகிக் கொள்ளவேண்டியது.

1165. கில்டு கொடுக்கும் வித்தை.

பொத்தான் முதலிய சிறியவஸ்துக்களுக்கு கிலிட்டு போடவேண்டுமாயின் பொன்னை பாதரசத்துடன் கலக்கவேண்டும்; கிலிட்டுகொடுக்க வேண்டியதை அக்கினி திராவகத்தில் சுத்திசெய்து ஒருபிரஷினால் பொன் பாதரசக் கலப்பை பூசவேண்டியது.

1166. கண்ணாடி செய்யும் வித்தை.

கடல்மணலை செவ்வையாய்ச் சுத்திசெய்து உலர்த்திக்கொள்ள வேண்டியது கார்பனேட் ஆப்பொடாஷ் மணல் இவ்விரண்டையும் இரும்புச் சட்டிகளில் போட்டு எரித்து செவ்வையாய் காய்கிற சமயத்தில் நாகமேணுவை ஆக்சைட் ஆப்லெட் கூடப்போட சீக்கிரம் உருகும்; கண்ணாடி துல்லியமாயிருக்க மாங்கனீஸ் என்பதையும் பாஷாணத்தையும் சேர்க்கவேண்டியது; தினுசுகள் பொன்னிறமாய் உருகியபின்னை வேலை.

யாட்கள் ஊதுகோல் நுனியில் சிறிதுசிறிது கண்ணாடி குழம்பை யெடுத்து இஷ்டமான பாத்திரங்களைச் செய்கிறார்கள்.

1167. சப்பு செய்யும் வித்தை.

அரை அவுன்ஸ் தேங்காய் எண்ணெயை ஒரு பீங்கான் கிண்ணத்தில் விட்டு, கொஞ்சம் காஷ்டிக்சோடா என்னும் உப்பையும் சலஜலமும் விட்டுக் கொதிப்பிக்கவும். இப்படிசெய்ய எண்ணெய் மறைந்துபோய் விடும்; கொஞ்சம் காய்ச்சியபின்னர் கொஞ்சம் உப்பைப்போட சோப்பு வெளிப்படும்; பிறகு அச்சுக்களில் நீ வார்த்துக்கொள்ள வேண்டியது; அச்சுகளுக்கு வாசனைத் தைலத்தைத் தடவி இஷ்டமான வாசனை வரச்செய்யலாம்.

1168. அதிசாரபேதியை நிருத்தும் வித்தை.

ஒருபலம் சுக்கை சன்னமாய்ப் பொடிசெய்து எழுதரம் வஸ்திரகாயம்செய்து அரைபலம் வெள்ளைச் சர்க்கரையுடன் கலந்து சாப்பிட அதிசாரபேதி நிற்கும்.

1169. வேறுமுறை பல்வலி தீர்க்கும் வித்தை.

கருவேலன் காயையும் மாயுரிவி சமூலம் சுட்டு கரியாக்கி எருக்கன் பாலில் உப்புடன் கலந்து புடம்போட்டு பஸ்பம் செய்துக்கொண்டு பல்லீறில் தேய்க்க வலி கிருமி முதலியவை நிவாரணமாய்விடும்.

1170. வாந்திபேதி நிவாரணமாத்திரை செய்யும் வித்தை.

மிளகு பெருங்காயம் அபின் இவை வகையொன்றுக்கு காலேவீசம் பலமெடுத்து செவ்வையாய் கல்வத்தில் அரைத்து 12-மாத்திரைசெய்து வைத்திருந்து அந்த சமயத்தில் அரைமணிக் கொருதரம் கொடுக்க நிற்கும். ஏழுமுதல் பதினறு வயதுள்ளவர்க்கு அரைமாத்திரை கொடுக்க வேண்டும்.

1171. நன்னாரி சர்பத்து செய்யும் வித்தை.

பனிரெண்டரைபலம் நன்னாரிவேரையிடித்து ஒன்னரைபடி வெந்நீரில் 6-மணிநேரம் ஊரவைத்து வடிக்கட்டி முக்கால்படியாய் வற்றவைத்து அதில் ஒன்னரைபலம் சீனிசர்க்கரைக் கலந்து பிசின்பக்குவத்தில் பாகுசெய்துகொண்டு ரூபாயெடை சர்பத்தில் நாலுரூபாயெடை தண்ணீரைக் கலந்து சாப்பிட சகல மேசகாரகங்களும் உஷ்ணமும் நிவர்த்தியாகும்.

1172. ஓமத்திராவகம் செய்யும் வித்தை.

முருங்கப்பூ பத்துபலமும் பசும்பால் அரைபடியும் இரண்டையும் கலந்து அடுப்பிலேற்றி எரித்து முருங்கைப் பூவை வெந்த பிறகு பிசைந்துபிழிந்துச் சக்கையை நீக்கி சாதிக்காய் சாபத்திரி லவங்கம் லவங்கப்பட்டை குராசாணி ஓமம் இதுசுக்கு பலம் ஒன்றாக இவைகளை சூரணித்து வடிகட்டிச் சீனைகற்கண்டு பலம் 15-மேற்படி பாலில் சேர்த்துப் பாபதத்திற் சூரணத்தைக் கொட்டிப் பசுநெய் பலம் 5-விட்டு

லேகியபதமாய்க்கிளறி ஆறவிட்டு தேன் பலம் ஒன்னேகால் விட்டு பிசைத்து அந்தி சந்தி இரண்டுவேளையும் கொட்டைப்பாக்களவு சாப்பிடவும்; இச்சாபத்தியம்.

1173. ஸ்திரீகள் தேகபுஷ்டிக்கு செய்யும் வித்தை.

உளுந்துமாவு படிகால், வெள்ளை வெங்காயம் பலம்பத்து, பசுநெய் பலம் 7-அரை பனவெட்டு பலம்ரெண்டரை, சீரகம் பலம் ஒன்று, பாங்கிச்சக்கை பலம் ஒன்று சாதிக்காய் பலம் கால், இவைகளில் வெந்தயத்தைப் பொடியாய்த் திருத்தி உளுந்து மாவுடன் சேர்த்து எடுகட்டி பாலும் தண்ணீரும் கலந்து அடிபானையில் வைத்து புட்டவித்து உதிர்த்து சக்கராக்குகளைவருத்து வடிகட்டி பாலில் சுத்தித்து நிழலிலுலர்த்தி துவி நெய்விட்டு பனவெட்டுசேர்த்து பிசைந்து இரண்டுவேளையும் எலுமிச்சங்கா யவ்வளவு பிரவிடையான பெண்களுக்கு புட்டிற்கு பதிலாய் 7 8-நாள் கொடுத்துவந்தால் உதிரவோட்டம் நீங்கி இடுப்புக்கு பலமுண்டாகி தேகவலிவேறும்; ஸ்திரீகளுக்குள்ள ரத்தவோட்டம் யாவும் நிவர்த்தியாகும், சுரோணிதம் சுத்தியாகும், யோகாப்பியாசிகள் இதை உபயோகித்து வந்தால் வாசி சரியாக நிற்கும், இச்சாபத்தியமாக யிருக்க வேண்டும்.

1174. மூலக்கிராணி நிவாரணி வித்தை.

பசும்பால் படி கால், கால்பாகம் சலம்விட்டுக் காய்ச்சுமப்போது அசுவகெந்தி பறங்பசக்கை அதிஞ்சிவித்து நீர்முள்ளி வித்து கசகசா வகைக்குப் பலம் கால் இவைகளைப் பால்விட்டு அரைத்து டை பாலில் குழம்பு சுண்டக்காய்ச்சி சக்கரை பலம் இரண்டரைபோட்டு இரக்கி ஆறவைத்துக்கொண்டு காலை மாலை ஆறுவேளை சாப்பிட மூலக்கிராணி அஸ்திசுரம் தேககாந்தல் அஷ்டமா பித்தக்ஷயம் தீரும்.

1175. சுகபேதிக்குழம்பு செய்யும் வித்தை.

பேரீச்சம்பழம் பலம் அரை கொடிமுந்திரிப்பழம் பலம் அரை சுத்திசெய்தவாளம் பலம் அரைபூரம் விராகனெடை கால் தேன்விட்டரைத்து மாட்டுசிமிளில் வைத்துக்கொண்டு குன்றிமணிப் பிரமாணம் சிசுமுதல் விருத்தர்களுக்கு ஆள் பலமறிந்து கொடுக்கவும் இச்சாபத்தியம்.

1176. விநோத கண் தயிலம் செய்யும் வித்தை.

செந்தாழம்பூ 1-பலம் ரெட்டை நந்தியாவட்டைப்பூ 4-பலம் புளிப்பு மாதளம்பூ 4-பலம் செந்தாமரை 6-பலம் இவைகளை இடித்து ரசம் பிழிந்துகொண்டு அந்த ரசத்துடன் கூறல் எள்ளெண்ணெய் பலம் இரண்டரைவிட்டு இளம்பதமாய்க் காய்ச்சி வடித்த தைலத்தில் பூத்தேன் பலம் லவுங்கப்பூ நசுங்கியது விராகனெடை 1 வெள்ளை மிளகு விராகனெடை அரை சீனை கற்கண்டு விராகனெடை 1 இவைகளை தைலத்தால் மைபோல் அரைத்து சேர்த்து குப்பியி லடைக்கவும். உருத்திரகாயத்ரி ஆயிரத்தெட்டு உருஜெபித்து தங்களாலியன்ற அன்னதானஞ்செய்து சாபங்கள் நீக்கி கண்ணில் காலை மாலை தீட்ட கண் ரோகம் தோண்ணூறும் போம்.

1177. ஸ்நானத்திற்கு தயிலம் செய்யும் வித்தை.

நல்லெண்ணெய் 2-படி பசும்பால் 2-படி இரண்டும் ஒருபாண்டத்தி லிட்டு மிளகு 1-படி நன்முகபாலிலரைத்து ஷை பாலில் கலக்கு மஞ்சள் 1-பலம் அதிமதுரம் $\frac{1}{2}$ பலம் சருஞ்சீரகம் பலம் கிராம்பு பலம் கால் அரிசிதிப்பிலி $\frac{1}{2}$-பலம் இலுப்பைப்பட்டை $\frac{1}{4}$-பலம் இவைகளைப் பசும் பாலால் செழுமையரைத்து ஷை எண்ணெயில் கலக்கி அடுப்பிற் சிறுதீயாய் காய்ச்சி பக்குவமணம் உண்டாகும்போது வடித்து அதில் புனுகுசட்டம் 1-பலம் சேதலம் இறக்கி யதையுஞ்சேர்த்து வைத்துக்கொண்டு ஸ்நானஞ் செய்ய கண்டத்திற்கு மேற்பட்ட சகலவியாதிகளும் தீரும்; தலைநோய் கண்சிவப்பு முதலியவைகள் சுகமாகும் இச்சாபத்தியம்.

1178. க்ஷயகுமல சுரசம் செய்யும் வித்தை.

உத்தாமணியிலை குப்பைமேனியிலை சங்கிலை ஆதனை ஆற்றுமுள்ளி யிலை செம்முள்ளியிலை தூதுவளை இவை வகைக்கு ஒரு பிடி இடித்துப் பிட்டவைத்துப் பிழிந்துக்கொண்டு காசிடை தேன்விட்டு மூத்து பவழ பற்பம் சேர்த்துக் கொடுக்கவும், இச்சாபத்தியம்.

1179. அறையாப்புகட்டியை போக்கும் வித்தை.

சவுக்காரம் சித்தண்டவெள்ளை நீர் விட்டு அரைத்துப் பூசக்கரையும் கரையாவிட்டால் அதன்மேல் புளியும் சேராங்கொட்டையும் சேர்த்து அடைதட்டி வைத்துக்கட்டி மூன்றும் நாள் அவிழ்க்கவும். இதுபோல புளியும் காரல்பலம் வெள்ளை பாஷாணமுஞ் சேர்த்த பில்லையுங் கட்ட லாம், கட்டி உடையும் பாதைதீரும்.

1180. தோந்தசுரக்கியாழ வித்தை.

சிறுதேக்கு பாற்படகம் மூத்தக்காசு சீந்திற்கொடி நன்னாரி சிறு காஞ்சொரி தேவதாரு கோஷ்டம் பேய்ப்புடல் சுக்கு இவைகள் சரி யிடை யிடித்து தண்ணீரில் எட்டொன்றாய்க் காய்ச்சி இரண்டு மூன்று போது தினம்கட்டு மாத்திரையில் சாப்பிடத்தீரும். வியாதிபித்த அஸ்தி சுரம் இவைகள் தீரும்.

1181. திராவகம் செய்யும் வித்தை.

பொட்டுப்பும் படிகாரமும் சரியிடை சேர்த்து ஒரு குடுவையிலிட்டு மேலே வாலைவைத்துக் திராவகமிறக்கி அந்ததிராவகத்தை தலைநோய் கழுத்துநோய் காம்பிசிவு முதலியவைகளுக்கு ஒரு துளிதடவகுணமாம். வீரலைரசத்தை இந்த திராவகம் விட்டு இரண்டுசாமம் அரைத்து சீலை மண் செய்து மணலுக்குள்வைத்து நாலுசாமம் எரிக்க செந்தூரமாம்.

1182. வெள்ளியை பஸ்பம் செய்யும் வித்தை.

சரிகைவெள்ளி பலம்கால் உருக்கி ஆறவிட்டு பாதரசம் விராக னெடை 5-விட்டுக் கலக்கியபின் எடுத்து துருசு விராகனெடை 2-க்கு சிறுநீர் விட்டரைத்து ஷை களங்குக்கு கவசமிட்டு காய்ந்த பிறகு மகி ழம்பூ கவசஞ்செய்து காயவைத்து மூன்று சீலை மண்செய்து 15-எருவில்

புடமிட பஸ்பமாகும். பணவிடை நெய்யில் லேகியத்தில் அனுபானம் மேகம் வெட்டைகள் நீங்கும்; தாதுபுஷ்டி தேகம் அழகிடும் மேனி கொடுக்கும் இச்சாபத்தியம்.

1183. வேறுமுறை வெள்ளி பஸ்பிக்கும் வித்தை.

கால்ரூபாய் வொன்றையெடுத்து ஈறைத வாழைமரத்தடியில் மூன்று நாள் சொருகிவைத்திருந்து எடுத்துக்கொள்ள வேண்டும், ஜாலமாடும் சபையில் வேறொரு கால்ரூபாயை கைபிரட்டினால் தந்திரமாக மறைத்து ஷை ரூபாயைப் போட்டு அரைக்க பஸ்பமாகிவிடும்; ஆச்சரியப்படுவார்கள்.

1184. ஆக்கிராணித்தூள் செய்யும் வித்தை.

சுன்னராஷ்டம் மிளகு கடற்பாலை சுக்கு வசம்பு அதிமதுரம் இவை களை இடித்து வஸ்திரகாயஞ்செய்து அந்தத்தூளை ஆக்ராணிக்க ஜன்னி நீங்கும்.

1185. பால்கடுகு செய்யும் வித்தை.

பால் 8-படி அதை அரைதிட்டம் சுண்டக் காய்ச்சி அதில் முருங் கைப்பூ 4-பலம் நன்னாரிவேர் 2-பலம் அதளம்பழம் மஞ்சா பெருஞ்சி வேர் கிலைப் பனங்கிழங்கு தண்ணீர் விட்டான் கிழங்கு அதிமதுரம் இவைகள் வகைக்கு 4-பலம் ஏலரிசி 2-பலம் இவைகளை பாலால் அறைத்து ஷை பாலில் கலக்கி முக்கால் பாகம் சுண்டின பக்குவத்தில் சர்க்கரை வீசை ஒன்று கொட்டி பாகுவரும் சமயத்தில் அமிர்தசர்க்கரை 20-பலம் கொட்டி நன்றாக ஈரம் வற்றினவுடன் நெய் 30-பலம் விட்டுக் கிண்டி ஆறினவுடன் தேனுஞ்சேர்த்து கடுகு பதத்திலிறக்கவும் இதை புன்னைக்காயளவு காலைமாலை இருவேளையும் சாப்பிட்டுவர மேகரோகங் கள் நீங்கும், வீரியவிருத்தி அதிகமாகும் இச்சாபத்தியம்.

1186. பீப்பாய் வெடிக்கும் ஜாலம்.

ஒரு பீப்பாயில் நிறைய தண்ணீர்விட்டு நன்றாக அடைத்து சற்று நீளமான சிறியகுழலை அதில் முறிக்கினபின் அந்தக்குழலில் ஒரு படி ஜலம் விட்டால் உடனே அந்தப்பீப்பாய் வெடித்துப்போகும் அனை வரும் பிரமிப்பார்கள்.

1187. மனிதனை தூக்கும் ஜாலம்.

சுமார் 4-அடி குறுக்களவுள்ள இரண்டு வட்டமான மரப்பலகைகளை எடுத்து ஒன்றுக்கொன்று சுமார் இரண்டடி தூரமாய் இருக்கத் தக்க தாக தோலால் சுற்றி கச்சைபோல்மாட்டி துருத்திபோல தண்ணீரைச் சிந்தாமல் காக்கும்படி பக்குவம்செய்து துருத்தியின்மேற் பலகையில் ஒருவனை நிற்கச்செய்து குழலை நிமிர்வைத்து அதற்குள்ளாகத் தண் ணீரை விட்டால் தண்ணீர் நிரம்ப நிரம்ப மனிதனையும் மேற்பலகை யோடு தூக்கும்; பார்ப்போர் கண்களுக்கும் ஆச்சரியமாயிருக்கும்.

1188. புட்டியின் விநோத ஜாலம்.

ஒருவெறும் புட்டியை எடுத்து கார்க்கினால் அடைத்து வாயில்கயிறு கட்டி கிணற்றிலாவது குளத்திலாவது ஆழத்தில் போகும்படிவிட்டு

சற்றுநேரத்திற் குப்பின் எடுத்துப்பார்த்தால் காய்கு புட்டிக்குள் தண்ணீர் அப்பட்டு புட்டியில் தண்ணீர் நிறையவிருக்கும் ஆச்சரியப்படுவார்கள்.

1189. ஈயத்தகடு ஜலத்தில் மிதக்கும் ஜாலம்.

ஒரு துண்டு ஈயத்தைச் சப்பையாகவும் வட்டமாகவும் தட்டி ஒரு குழையின் வாய்ப்புறத்தில் ஜலம் உள்ளே நுழைய ஏதுவில்லாதபடி பிடித்து நீருக்குள் கொஞ்சம் ஆழத்திற் சேர்த்தவுடனே ஈயத்தை பிடித்திருந்த கையெடுக்கிறுல் ஈயத்தகடு கீழே விழுந்துபோகாமல் மேலோடு ஒட்டினதுபோலிருக்கும் ஆனால் வெறும் ஈயத்தகட்டை மாத்திரம் ஜலத்தில் விட்டால் உடனே அமிழ்ந்துபோகும்.

1190. ப எழுத்தின் விநோத ஜாலம். –

ப என்னும் எழுத்தைப்போல் ஒரு குழையை வளைத்து நிமிர்த்துப் பிடித்து ஒரு பக்கம் வாயில் ஜலம்விட்டால் இருபக்கத்திலும் ஜலம் ஒரே மட்டமாய் நிற்கும். ஆனால் ஒரு பக்கத்தில் ஜலமும் மற்றொரு பக்கத்தில் எண்ணெயும் விட்டால் எண்ணெய் உயரமாயும் தண்ணீர் அதனிலும் தாழ்வாயுமிருக்கும், கண்டோர் ஆச்சரியப்படுவார்கள்.

1191. ஐங்கூட்டுத்தயிலம் செய்யும் வித்தை.

வேப்பெண்ணெய் புங்கெண்ணெய் எள்ளெண்ணெய் முத்தெண்ணை பின்னையெண்ணெய் இவைகளை சமமாய்க்கூட்டி காய்ச்சி ஸ்நானம் செய்துவர வாதம் தனுர்வாதம் மகாவாதம் தோஷம் நிவர்த்தியாகும்.

1192. வீரியவிருத்தி செய்துக்கோள்ளும் ஜாலம்.

சந்தனத்தூள் பலம்-2 சுக்கு பலம்-2 காசினி விரை பலம்-1 சீரகம் பலம்-1 இவைகளை கல்வத்திலிட்டு அரைத்து பில்லை பில்லையாகச் செய்துலர்த்தி வேளைக்கு ஒரு துலாம்வீதம் கொடுத்து உடனே பன்னீராகிலும் நல்ல ஜலமாகிலும் ஒரு ரூபாயெடை சாப்பிடவேண்டும்.

1193. இந்திரியத்தை கட்டிக்கோள்ளும் வித்தை.

நருவிலிபிஞ்சு கருவேலன்பிஞ்சு காட்டுப்பிறண்டையிலை இவைகளை தனித்தனியாய் நிழலிலுலர்த்தி இடித்துச் சூரணமாகச்செய்து அதற்குச் சரியிடையாய் சக்கரைக்கூட்டி இரவில் போசனஞ்செய்தபிறகு திரிகடி பிரமாணம் புசித்து ஆழாக்கு பசும்பால் சாப்பிடவும். இப்படி பதினைந்துநாள் புசிக்க நீத்திருந்த இந்திரியங்கட்டும்; தேகம் காந்தியாகும்.

1194. பொன்றங்கண்ணியின் விநோதம்.

காலையில் எழுந்து பொன்றங்கண்ணி இலைகளைப்பிடுங்கி வாய் கொண்டமட்டும் மென்று தின்னவும்; இப்படி நாற்பது நாளைக்குத் தின்றுவர வீரியவிருத்தி யுண்டாகும்.

1195. விந்து கலிதமாகாதிருக்கச் செய்யும் வித்தை.

தாழம்பூவின் உள்ளிருக்கும் விபூதியையெடுத்து கோழிமுட்டை வெள்ளைக்கருவாலே இழைத்து தண்டில் பூசிப்புணர விந்து சீக்கிரத்தில் கலிதமாகாது.

1196. நரம்பு கெட்டிபட செய்யும் வித்தை.

எட்டிக்கொட்டை அமுக்கிறாங்கிழங்கு வசம்பு சமனெடையாக எடுத்து பசும்பால் விட்டரைத்து லிங்கநரம்புமீது ஒருவாரம் தேய்த்துவர மிருந்த வலிவு உண்டாகும்.

1197. வீரியவிர்த்தி செய்துகோள்ளும் வித்தை.

ஜாதிக்காய் அபினி காமப்பூ லவங்கப்பூ இவைகள் வகைக்கு கால் விராகனெடை எடுத்து அரைத்து ஒரு வெர்க்குருவியின் வயிற்றைக்கீறி குடல் முதலான அசுத்தங்களைநீக்கி அதினுள் வைத்து நூலினால்தைத்து அதற்குப் போதுமான நெய்யைப்போட்டு பொறித்தெடுத்து எலும்பு போக்கி மெழுகுபோல் அரைத்து வைத்துக்கொண்டு கெச்சக்காய் பிரமாணம் சாப்பிட்டு உடனே ஆழாக்கு பசும்பால் சாப்பிடவும். இப்படி நாற்பதுநாள் சாப்பிட வீரியவிருத்தியும் தேகவலியும் உண்டாகும்.

1198. வீரியவிர்த்திக்கு லேகியம் செய்யும் வித்தை.

ஜாதிக்காய் சாரப்பருப்பு பாதம்பருப்பு காமப்பூ மாவுசுக்கு தேத்தாங்கொட்டை முருங்கைப்பிசின் முருங்கைப்பூ வகைக்கு இரண்டரை விராகனிடையாக எடுத்து ஒரு கோழிமுட்டை வெள்ளை கருவினால் மெழுகுபோலரைத்து ஒரு லபம் நெய்யில்போட்டு அரைபலம் சர்க்கரைக்கூட்டிஅடுப்பேற்றி லேகியம்போல் கிளறிவைத்துக்கொண்டு கெச்சக்காயளவு சாப்பிட்டுவர வீரியவிர்த்தியாகும்.

1199. இருதய வலிவுண்டாகும் வித்தை.

சிறுலங்கப்பட்டை சிகப்புநிறமான காவி சந்தனத்தூள் வகைக்கு விராகனிடையில் கூட்டிசாப்பிட இருதயவலிவுதரும்.

1200. வேறுமுறை இருதயவலிவுண்டாகும் வித்தை.

இலவன்கோந்து சுக்கு ஏலரிசி சோம்பு அதிமதிரம் சந்தணம் வில்வசதை ரோஜாப்பூ வகைக்கு துலா-1 தனியா பலம்-3 சீனாகற்கண்டு பலம்-2 இவைகளை சூரணஞ்செய்து முன்பாக கற்கண்டை அடுப்பிலேற்றி ஜலம் கொஞ்சம்விட்டு பாகுசெய்து அதிற்சூரணங்களை கொட்டி பாகமாய்க்கிளறி வேளைக்கு தோலாவீதம் சாப்பிட இருதயவலிவுதரும்.

1201. சரீரம் நன்ருகச் செய்யும் வித்தை.

சுக்கு கடுக்கா திப்பிலி வாலுளுவையரிசி சமனாகச்சேர்த்து தேனில் அரைத்து நாதுளங்காய் பிரமாணம் சாப்பிட்டு உடனே ஆழாக்குப்பால் சாப்பிட சரீரம் நன்றாகும்.

1202. மதன் சஞ்சீவினி.

கிரிகடுகு கிராம்பு வால்மிளகு தக்கோலம் கோக்கர்மூலி சிறுநாகப்பூ, பத்திரி, சீரகம், அபினி இவைகளை வகைக்கு களஞ்சி நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு ஆவின்பால்விட்டு அரைத்து முக்காற்படி பசுநெய்யில் வேகவைத்து நெய்யை வடிகட்டிக்கொண்டு ஒருகாலடி நெய்விட்டு

பாலும் சாதமும் புசித்து சுகித்தால் இன்பத்தைக்கொடுக்கும் சந்தோஷத்தை உண்டாக்கும் ஆனால் புளிப்பு தள்ளிவிடவேண்டும்.

1203. திசை முகக்குளிகை செய்யும் வித்தை.

பச்சைகற்பூரம் லவங்கப்பட்டை சாதிக்காய் வகைக்கு விராகனெடை 2 இதற்குச்சரியிடை வாளம்சேர்த்து குமரிச்சார் விட்டரைத்து உளுந்துப் பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி சீசாவிலடைத்து வைத்துக்கொள்ளவும் அனுபானம் சக்கரையில் ஒருமாத்திரைகொடுக்க பேதியாகும் சுரம் நிற்கும்.

1204. பத்திரகாளி வித்தை.

ஜாலமாடுமிடத்தில் கீழே கூறியபடி மேஜையில் ஒரு மரத்தலைச் செய்து வைத்து அதற்குச் சமீபமாய் படத்தில் மெத்தைப்படியைப் போட்டு உயரமாய் வைத்து மேசையின் அறையில் சுவரைப்போல் காட்டியிருக்கவேண்டும். மேலே யிருந்துக்கொண்டு வரப்பட்ட தகரக்குழையானது அந்தத் தலைக்குள் நுழைந்து அத்தலையின் உட்புறத்திலிருந்து இரண்டுபிரிவாய் பிரித்து ஒருபிரிவு காதின்வழியாகவும் சொல்லும்படி அமைக்கவேண்டும் இவ்வகையான சூட்சுமங்கள் அமைத்துவைத்தபின் அந்தத்தலையின் காதில் பேசுகிற சப்தம் மேலே நோக்கிச்செல்லும் குழவின் மருத்திளையில் காதைவைத்து உற்றுக் கேட்பவர்களுக்கு செம்மையாய் கேட்கும் அப்போது மேலே யிருக்கப்பட்ட மனுஷன் அந்தச் சங்கதியைக் கிரகித்துக்கொண்டு அக்குழையிலேயே அதற்குப் பதில் சொல்லவேண்டும். அது அந்தபொம்மை பேசுகிறதுபோல் கேட்கும். அதாவது அந்தத் தலைவாயினால் பதிலளிப்பதுபோல் தோற்றும் தலைக்குள்ளாகக் குழாய் இரண்டுபிரிவாகப் போகின்றதல்லவா அதில் காதின் பக்கமாக செல்லுங்குழலின் துவாரம் பெரிதாகவும் இருக்கவேண்டும். புராதனகாலங்களில் இம்மாதிரியான தலையினால் நடந்த வைபுங்களைப் பற்றி ஆச்சரியப்படுவார்கள்.

1205. வேறுமுறை தேள் வித்தை.

இந்திர ஜாலக்கருவை விரலில்தொட்டு யாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து வேப்பிலையை உருவிக் கீழேபோட தேள் உண்டாகும்.

1206. வேறுமுறை குளவியாகும் ஜாலம்.

இந்திர ஜாலக்கருவை விரலில்தொட்டு குறளிமந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து புளியன்யிலையை உருவிப்போட குளவியுண்டாகும்.

1207. நண்டுதுரக்காயாகும் ஜாலம்.

ஷை கருவைத்தொட்டு குறளிமந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து கருநொச்சிலையை உருவிப்போட நண்டுதுரக்காயாகும்.

1208. வேறுமுறை பூரானாகும் ஜாலம்.

ஷை கருவைத்தொட்டு சக்கலாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து கருவேலனிலையை உருவிப்போட பூரானாகும்.

1209. வேறுமுறை செய்யானாகும் ஜாலம்.

ஷை கருவைத்தொட்டு கொள்ளி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து அகத்தியினிலையை இருவிப்போட செய்யானாகும்.

1210. கட்டெறும்பாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை கையில்தொட்டு பைரவர்மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து மண்ணை அள்ளிப்போட கட்டெறும்பாகும்.

1211. சிற்றெறும்பாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை கையில்தொட்டு வாராகிமந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து மண்ணை அள்ளிப்போட சிற்றெறும்பாகும்.

1212. வண்டாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை கையில்தொட்டு மாடன்மந்திரத்தை ஆயிரத்தெட்டு உருஜெபித்து முருங்கயிலையை உருவிப்போடவண்டாகும்.

1213. கிளியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில் தொட்டுக்கொண்டு உருத்திராதேவி மந்திரத்தை உருஜெபித்து வெற்றிலையை உருவிப்போட கிளியாகும்.

1214. மைனாவாகும் ஜாலம்.

இந்திரஜாலக் கருவை விரலில்தொட்டு சாமளாதேவி மந்திரத்தை உருஜெபித்து வெற்றிலையை உருவிப்போட மைனாவாகும்.

1215. புருவாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு பத்திரகாளி மந்திரத்தை ஜெபித்து ஆணையிலையை உருவிப்போட புருவாகும்.

1216. சிட்டுக்குருவியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு ஜாலக்காளைத் தியானித்து சீமை அகத்தியிலையை உருவிப்போட சிட்டுக்குருவியாகும்.

1217. காடையாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு குறளிமந்திரத்தை ஜெபித்து காட்டாமணக்கிலையை உருவிப்போட காடையாகும்.

1218. கௌதாரியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவைத்தொட்டு வலதுகையில்பூசிக்கொண்டு இலுப்பையிலையை உருவிப்போட கௌதாரியாகும்.

1219. வல்லூருபட்சியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவைத் தொட்டுக்கொண்டு சாமுண்டீஸ்வரி மந்திரத்தை ஜெபித்து பிரமியிலையை உருவிப்போட வல்லூராகும்.

1220. ஆந்தைபட்சியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு காளபைரவர் மந்திரத்தை ஜெபித்து குருவியாலனிலையை உருவிப்போட ஆந்தைபட்சியாகும்.

1221. கோழியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு சக்லாதேவி மந்திரத்தை செபித்து அத்தியிலையை உருவிப்போட கோழியாகும்.

1222. மயிலாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு மயானருத்ராதேவி மந்திரத்தை செபித்து புங்கயிலையை உருவிப்போட புள்ளிமயிலாகும்.

1223. வான்கோழியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு வாராகிமந்திரத்தைஜெபித்து அரசனிலையை உருவிப்போட வான்கோழியாகும்.

1224. காகமாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில் தொட்டுக்கொண்டு நீலகண்ட மந்திரத்தை ஜெபித்து ஊமத்தனிலையை உருவிப்போட காகமாகும்.

1225. தேனீயாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டுக்கொண்டு காளிமந்திரத்தை செபித்து வாடியிலையை உருவிப்போட தேனீயாகும்.

1226. ஈயாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில் தொட்டுக்கொண்டு ஜாலக்காளைத் தியானித்து அவுரியிலையை உருவிப்போட ஈயாகும்.

1227. தும்பியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவைத்தொட்டு வலதுகையிற் பூசிக்கொண்டு பைரவர் மந்திரத்தை ஜெபித்து கின்னுவாடிசெடி இலையை உருவிப்போட தும்பியாகும்.

1228. பிள்ளைப்பூச்சியாகும் ஜாலம்.

இந்திஜாலக்கருவை விரலில்தொட்டுக்கொண்டு மலையாளபகவதி மந்திரத்தை ஜெபித்து வேளையிலை உருவிப்போட பிள்ளைப்பூச்சியாகும்.

1229. பட்டுப்பூச்சியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு மாயாசக்தி மந்திரத்தை செபித்து குண்டுமணியிலையை உருவிப்போட பட்டுப்பூச்சியாகும்.

1230. கம்பளிப்பூச்சியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு காளிமந்திரத்தை செபித்து மலைவேப்பிலையை உருவிப்போட கம்பளிப்பூச்சியாகும்.

1252. மாடப்புருவாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு சக்கலாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து பூவரசன் இலையிற் கருவைத் தடவிப்போட மாடப்புருவாகும்.

1253. மணிப்புருவாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு பத்திரகாளிமந்திரத்தை செபித்து அரசன் இலையிற் கருவைத்தடவிப்போட மணிப்புருவாகும்.

1254. தவிட்டுப்புருவாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு கொள்ளிமந்திரத்தை செபித்து ஆலனிலையைக் கிள்ளிப்போட தவிட்டுப்புருவாகும்.

1255. கோண்டலாத்திக் குருவியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு பைரவமந்திரத்தை செபித்து மல்லிகையில் கருவைத்தடவிப்போட கொண்டலாத்திக் குருவியாகும்.

1256. அடைக்கலாங்குருவியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலிற்தொட்டு மாயானருத்திரிமந்திரத்தை செபித்து முல்லையிலையில் கருவைத்தடவிப்போட அடைக்கலாங்குருவியைப்போல் தோற்றும்.

1257. ஆள்காட்டிக் குருவியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு மாயர்சக்தி மந்திரத்தை செபித்து பூசினிக்காயிலையில் தடவிப்போட ஆள்காட்டிக் குருவியைப் போல் தோற்றும்.

1258. பஞ்சவர்ன கிளியாகும் ஜாலம்.

இந்திரஜாலக் கருவு விரலில்தொட்டு சக்கலாதேவி மந்திரத்தை செபித்து சுடுக்காயிலையில் தடவிப்போட பஞ்சவர்னக் கிளியாகத் தோற்றும்.

1259. கதண்டுகளாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு குறளிமந்திரத்தை செபித்து மலைவேப்பிலையை உருவிப்போடக் கதண்டுகளாகும்.

1290. செங்குளவி கருங்குளவியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவு விரலில்தொட்டு காளிமந்திரத்தை செபித்து ஆவாரயிலையிற் றடவிப்போட செங்குளவி கருங்குளவியாகும்.

1261. பலவிதமான விஷப்பூச்சிகள் உண்டாகும் ஜாலம்.

இந்திரஜாலக் கருவையும் ஜெகஜாலக்கருவு ஐங்கோலக்கருவு ஒன்றாய்க் கலந்து கையிற் பூசிக்கொண்டு மயானருத்திரி மந்திரத்தை செபி

த்து அவுரியிலே இரண்டுகையால் உருவிப்போட தேள் நண்டுதூரக்காய் செய்யான் சிலந்திப்பூச்சி செங்குளவி கருங்குளவி செந்தேள் கருந்தேள் ஓணான் பல்லி அரணை இன்னம் பலவிதமான விஷப்பூச்சிகளும் உன்னுடைய வலிவாற்றோன்றும் கண்டவர்கள் யாரும் களிப்படைவார்கள்

1262. வாத்தாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவு கையில்தொட்டு வனிமந்திரத்தை செபித்து கருவு பெலாயிலையிற் பூசிப்போட வாத்தாகும்.

1263. பேய்க்கூட்டமாகும் ஜாலம்.

ஜாலக்காரன் இராத்திரியில் இந்திரஜாலக்கருவையும் ஜெகஜாலக் கருவும் ஐங்கோலக்கவும் ஒன்றாய்கலந்து கையில்தொட்டுக்கொண்டு மயான ருத்திரி மந்திரத்தை செபித்து கருவூமத்தனிலையில் கருவைத் தடவிப்போடபேய் ரூபமாகப் பார்ப்போர் கண்களுக்குத் தோற்றும் அனைவரும் மிரளுவார்கள்; ஆனால் எத்தனை யிலையில் தடவிப்போடு கிறாரோ அத்தனை பேய் ரூபம் தோற்றும்.

1264. பூதக்கூட்டம் தோற்றும் ஜாலம்.

முன்போலவே ஜாலக்காரன் இரவில் இந்திரஜால்க்கருவைகையில் தொட்டுசக்கலாதேவி மந்திரத்தைசெபித்து மதுரைவீரனை தியானித்து வேப்பிலையில் தடவி உருவிப்போட பூதரூபமாகப் பார்ப்போர்கண்களுக்குத் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் எத்தனையிலையிற் றடவிப் போடுகின்றாரோ அத்தனைபூதங்கள் தோற்றும்.

1265. பிரவாக ஜாலம்.

முன்போலவே ஜாலக்காரன் இரவில் ஓர் மைதானத்திற்கு சென்று அங்கு தன்னுடன் வேடிக்கைப்பார்க்க திரளாகத்திரண்டு வந்தவர்களைப் பார்த்து இதோ இந்த மைதானத்தில் ஜலப்பிரவாகம் வரும் விநோதத்தை பாருங்களென்று இந்திரஜாலக்கரு ஜெகஜாலக்கரு ஐங்கோலக் கரு இவைமூன்றும் ஒன்றாய்க்கலந்து விரலில்தொட்டு ஒரு எலுமிச்சம் பழமீது தடவி கண்டபேரண்ட மந்திரத்தை செபித்து எலுமிச்சம் பழத்தை ஈசான்னிய மூலைபக்கம் விட்டெறிய உடனே ஜலப்பிரவாகமானது இரைச்சலோடு பிரண்டு வருவதுபோல் தோற்றும். அனைவரும் ஆச்சரியப்பட்டு இது கங்காபவானி வசியமென்பார்கள்.

1266. அக்கினி ஜாலம்.

முன்போலவே இரவில் ஒரு மைதானத்தில் சென்று அங்கு தன்னுடன் வேடிக்கைப்பார்க்க திரளாகத்திரண்டு வந்திருப்போர்களைப் பார்த்து இதோ இம் மைதானத்தில் புதுமையாக யாவருங்காணும்படி ஒருஜோதியுண்டாகும் விநோதத்தை பாருங்களென்று முன்போல் கருவைத்தொட்டு கண்ட பேரண்ட மந்திரத்தை ஜெபித்து அக்கினி பகவானை உச்சாடனஞ்செய்து கருவை ஒரு சிறிய கூழாங்கல்லில் தடவி தன்னுடைய பலங்கொண்டதூரம் விட்டெறிய உடனே கருபலத்தினால் பார்ப்போர் யாவருடைய கண்களும் ஆகாயத்திற்கும் பூமிக்கும் ஒன்றாக

1231, காப்பாம்பூசியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு மாடன்மந்திரத்தைசெபித்து தேன்கொடுக்கிலையை உருவிப்போட காப்பாம்பூச்சியாகும்.

1232. பல்லிகளாகும் ஜாலம்.

இந்திரஜகலக் கருவை விரலில் தொட்டுக்கொண்டு சக்கலாதேவி மந்திரத்தைசெபித்துவெள்ளைநொச்சியிலையைஉருவிப்போடபல்லிகளாகும்.

1233. புழுகாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவைத்தொட்டு குறளிமந்திரத்தை செபித்துநாவேலியிலையை உருவிப்போட புழுகாகும்.

1234. மஞ்சாக்குருவியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து எலுமிச்சயிலையை உருவிப்போட மஞ்சாக்குருவியாகும்.

1235. தூக்கணாங் குருவியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு மயானருத்திரி மந்திரத்தை செபித்து நொணாயிலையை கிள்ளிப்போட தூக்கணாங்குருவியாகும்.

1236. புல்புல் குருவியாகும் ஜாலம்.

இந்திரஜாலக் கருவைத்தொட்டு வீரபத்திரர் மந்திரத்தைஜெபித்து கொய்யாயிலையை உருவிப்போட புல்புல் குருவியாகும்.

1237. நாமக்குருவியாகும் ஜாலம்.

இந்திரஜாலக் கருவை விரலில்தொட்டு நீலகண்ட மந்திரத்தைத் தியானித்து மாவிலையைக் கிள்ளிப்போட நாமக்குருவியாகும்.

1238. மீன்குத்திக் குருவியாகும் ஜாலம்.

இந்திரசாலக் கருவை விரலில்தொட்டு பைரவர் மந்திரத்தை செபித்து நொணாயிலையை கிள்ளிப்போட மீன்குத்திப்பட்சியாகும்.

1339. நாராயணபட்சியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு அஞ்சனாதேவி ஆஞ்சநேயர் மந்திரத்தை செபித்து அசோகயிலையைக் கிள்ளிப்போட நாராயணப் பட்சியாகும்.

1240. வக்காவாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு சாமளாதேவி மந்திரத்தைச் செபித்து குப்பமேனியிலையை உருவிப்போட வக்காவாகும்.

1241. கொக்காகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு மாயாசத்தி மந்திரத்தை கல்லியாண முருக்கனிலையைக் கிள்ளிப்போட கொக்காகும்.

1242. கூளியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு சக்கலாதேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்துப் பேய்ப்பீர்க்கன் இலையைக் கிள்ளிப்போட கூளியாகும்.

1243. நாரையாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு சௌள்ளிமந்திரத்தை செபித்துப் பூசினியிலையைக் கிள்ளிப்போட நாரையாகும்.

1244. கெருடபட்சியாகும் ஜாலம்.

இந்திரஜாலக் கருவை விரலில்தொட்டு நாராயண மந்திரத்தை செபித்து செந்தாமரையிலையைக் கிள்ளிப்போட செருடபட்சியாகும்.

1245. பறந்தாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு குறளிமந்திரத்தை செபித்து கருஊமத்தன் யிலையைக்கிள்ளிப்போடப் பறந்தாகும்.

1246. கடல்காக்கையாகும் வித்தை.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு காளபைரவர் மந்திரத்தைச் செபித்து பேய்துமட்டிச் செடியிலையைக் கிள்ளிப்போட கடல்காக்கையாகும்.

1247. கள்ளிக்காக்கையாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு உருத்திராதேவி மந்திரத்தைச் செபித்து பச்சைப்புகையிலையைக் கிள்ளிப்போட கள்ளிக்காக்காயாகும்.

1248. நீர்க்கோழியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு பத்திரக்காளி மந்திரத்தை செபித்து வெள்ளெருக்கனிலையைக் கிள்ளிப்போட நீர்க் கோழியாகும்.

1249. காட்டுக்கோழியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு சக்கலாதேவி மந்திரத்தை செபித்து காட்டாமணக்கிலையைக்கிள்ளி அதில் அந்தக்கருவைத்தடவிப் போட பார்ப்போர்கள் கண்களுக்கு காட்டுக்கோழிபோல் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

1250. கானுங்கோழியாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு காளிமந்திரத்தை ஜெபித்து நாகயிலையிற் தடவிப்போட கானுங்கோழியாகும்.

1251. கிளுவையுண்டாகும் ஜாலம்.

இந்திரஜாலக்கருவை விரலில்தொட்டு வாராகிமந்திரத்தை செபித்து கருவை ஆடுதின்னாப்பாளையிற் தடவிப்போட கிளுவையாகும்.

ஸ்தம்பம்போல் பிரகாசிக்கும் அதனை கண்டவர் யாவரும் ஆச்சரியப் படுவார்கள்.

1267. சித்துகளாடும் சிட்காமை

வெட்டுண்டு செத்தவனுடைய மண்டை எலும்பு மாடெலும்பு நாடை எலும்பு இவைகளின கொஞ்சம் கொண்டுவந்து அத்துடன் அழிஞ்சி வித்து கெச்சக்காய் பருப்பு எட்டிகொட்டை அமுக்கிறாங்கிழங்கு தண்ணீர் விட்டான் கிழங்கு சீர்முள்ளிவிரை நாய்கடுகு வேளைவேர் குப்பை மேனிவேர் கொல்லேக்குவேர் பல்லிவேர் ஆடையொட்டி நின்னால் வாடிவேர் தொட்டால் வாடிவேர் இவைகளையெல்லாம் வகைக்கு கால்பலமாக திருத்தெடுத்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்து கல்வத்தில்போட்டு கோட்டான் கள்ளிக்காக்கை கூளி கழுகு கரும்பூனை அழுங்கு செம்போத்து கட்டுக்காடை பச்சோந்தி இவைகளின் ரத்தம் சமமாகவிட்டு மைபோல் அரைத்து அதை ஒரு தல்விதமான சீலையில் தடவி கிழலி லுலரவைத்துக் கொள்ளவும் பிறகு மை மண்டையோட்டில் நெய் எண்ணெய் வேப்பெண்ணெய் முத்தெண்ணெய் இலுப்பெண்ணெய் தேங்காயெண்ணெய் புங்கெண்ணெய் புன்னையெண்ணெய் கழுதைநெய் பன்றிநெய் இவைகள் வகைக்கு அரைபலமாக எடுத்துக் கலந்து மை மண்டையோட்டில் ஊத்தி மை திரிக்குமேல் ஐங்கோலக் கருவைப்பூசி அதில்போட்டு பத்திரமாகப் பிடித்து செப்புச்சிமிளில் அடக்கஞ்செய்து பூசையில்வைத்து பத்திரகாளி மந்திரத்தை தவறாமல் நாற்பதுநாளும் காலை மாலை வேளை ஒன்றுக்கு ஆயிரத்தெட்டு உரு ஜெபித்துவர சித்தியானவுடன் பொங்கலிட்டு பலிகொடுத்து பிறகு மையையெடுத்து விளையாட சகலமும் சித்தியாகும். ஆனால் ஒவ்வொரு வித்தையும் கால்மணி நேரந்தாண்டும் பிறகு மறைந்துபோய் விடும் இதை அறிந்து ஜாக்கிரதையாய் நடத்தவேண்டும்.

1268. வேறுமுறை புலித்தோல் புலியாகும் வித்தை.

ஜாலக்காரன் முன்னதாகவே புலித்தோல் ஒன்று பழுதில்லாமல் உரித்ததாக எடுத்து அதின் கழுத்தில் இரும்பு சங்கிலி ஒன்றைகட்டி ஜாலமாடுமிடத்தில் கட்டி பிறகு வேடிக்கைப்பார்க்க வந்திருக்கும் ஜெனங்களைப் பார்த்து இதோ இந்த யிடத்தில் கட்டிய புலித்தோலுக்கு மந்திரத்தால் உயிர்கொடுத்தனுப்பும் விநோதத்தைப் பாருங்களென்று சித்துவிளையாடும் சிட்காமையையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில் தொட்டு பத்திரக்காளி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து கருவை புலித்தோலின்மேல் தெளித்து அந்தத்தோலை சுற்றிலும் சிகப்புத் துணியால் நாலுபக்கமும் தெரியாமல் திரைதைத்து மூடி சற்று நேரம் பொருத்து திரையை வாங்கிக்காட்ட புலிதோற்றும் முன்போல் திரையைமூடி திறந்துகாட்ட முன்னிருந்த தோலாகவே யிருக்கும்.

1269. வேறு யானைத்தோல் யானையாகும் ஜாலம்.

முன்போலவே சாலக்காரன் பழுதில்லாமற்படிக்கு உரித்த யானையின் தோலை எடுத்து வேடிக்கைப்பார்க்க வந்திருக்கும் லெகு ஜனங்களுக்கு காட்டி இந்த யானையின் தோலின் காலில் இரும்பு சங்கிலியை கட்டிவைத்து மந்திர உச்சாடனத்தினால் உயிர்கொடுத்து எழுப்புகிறேன்

பாருங்களென்று சித்து விளையாடும் சிட்காமையையும் ஐங்கோலக் கருவையுங் கலந்து விரலில் தொட்டு பத்திரகாளி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து கருவை தந்திரமாக யானைத்தோலின்மேல் தெளித்து முன்போல் திரைகட்டி மூடி திறந்துக்காட்ட யானை உயிருடன் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள் பிறகு முன்போல் மறைத்துவிடவும்.

1270. கரடிதோல் கரடியாகுந் ஜாலம்.

கரடிதோல் எடுத்து வந்திருக்கும் ஜனங்களுக்குக்காட்டி இந்த தோலுக்கு உயிர்கொடுக்கிறேன் பாருங்களென்று அத்தோலின் கழுத்தில் சங்கிலிமாட்டி முன்போல் ஆணில்கட்டி பிறகு சிட்காமையும் ஐங்கோலக்கருவையும் கலந்து காளிமந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து கருவை தோலின்மேல் தந்திரமாக தெளித்து முன்போல் திரைமூடி திறந்துக்காட்ட கரடிதோல் உயிருள்ள கரடியாகத் தோற்றும் நீ முன்போல் திரையிட்டு திறக்க தோலாகவே யிருக்கும்.

1271. வேறு சிம்பத்தோல் சிம்பமாகும் ஜாலம்.

சிம்பத்தோல் ஒன்றையெடுத்து சனங்களுக்குக்காட்டி இதோ தோலுக்கு உயிர்கொடுக்கிறேன் பாருங்களென்று முன்போல் கருவைத் தொட்டுக்கொண்டு காளிமந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து தந்திரமாகக் கருவை சிம்பத் தோலின்மேல் தெளித்து முன்போல் சுற்றிலுந் திரைபோட்டு சற்றுநேரங் கழித்து திறந்துகாட்ட பார்ப்போர் கண்களுக்கு சிம்பத்தைப்போல் தோற்றும் பார்ப்போர்களெல்லாம் மதி மயங்கி பிரமை கொள்வார்கள்.

1272. வேறு மான்தோல் மானாகும் ஜாலம்.

சபையில்நின்று மான்தோல் ஒன்றெடுத்து அனைவருக்குங் காட்டி இதோ இந்த மான்தோலை மந்திர உச்சாடனத்தினால் உயிருண்டாகும்படி செய்யும் வேடிக்கையைப் பாருங்களென்று முன்போல் கருவை மான்தோலின் மேல் பூசி பெட்டியில்வைத்து மூடி திறந்துகாட்ட மான்தோல் உயிருண்டாகி ஓடியோடி விளையாடுவதுபோல் தோற்றும் ஜனங்கள் மயங்கி நிற்பார்கள்; நீ மறுபடியும் மூடித்திறந்து காட்ட முன்னிருந்தாப்போல் மான்தோலாகவே யிருக்கும்.

1273. வேறு கடம்பைத்தோல் கடம்பையாகும் ஜாலம்.

கடம்பையின்தோல் ஒன்றைக் கையிலெடுத்துக்காட்டி முன்னே மான்தோலுக்குச் செய்தபிரகாரமே செய்ய கடம்பைத்தோல் உயிருண்டாகிமறையும்; சபையோர் பிரமானந்தம் கொள்வார்கள்.

1274. நரித்தோல் நரியாகும் ஜாலம்.

ஜாலக்காரன் முன்னதாகவே நரித்தோல் ஒன்றும் பழுதில்லாமல் உரித்ததாக எடுத்து அதின்கழுத்தில் சிறியசங்கிலி ஒன்றைக்கட்டி ஜாலமாடுமிடத்தில் கட்டி பிறகு வேடிக்கைப்பார்க்க வந்திருக்கும் சனங்களைப்பார்த்து இதோ இந்த இடத்தில் கட்டிய நரித்தோலுக்கு மந்திரத்தை உயிர்கொடுத்தெழுப்பும் விநோதத்தைப் பாருங்களென்று சித்து

விளையாடும் சிட்டுகாமையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில் தொட்டு பத்திரகாளி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து கருவு நரித்தோலின்மேல் தெளித்து அந்தத்தோலைச் சுற்றிலும் கருப்பு துணியால் நாலுபக்கமும் தெரியாமல் திரையைமூடி சற்றுநேரம் பொருத்து திரை வாங்கிக்காட்ட நரி தோற்றும்; முன்போல் திரைமூடித் திறந்துகாட்ட முன்னிருந்த தோலாகவேயிருக்கும்.

1275. வேறு நாய்த்தோல் நாயாகும் ஜாலம்.

நாய்த்தோல் ஒன்றெடுத்து சபையோருக்குக்காட்டி இது நாயாகும் விநோதத்தைப் பாருங்களென்று மேலே நரிக்குச்செய்தபடி செய்ய நாய்த்தோல் உயிர்பெற்று குலைத்து மறையும், இது மகா வேடிக்கையென்று சந்தோஷப்படுவார்கள். என்க.

1276. பசுத்தோல் பசுவாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் பசுத்தோல் ஒன்றையெடுத்து இதற்கு உயிர் கொடுத்து எழுந்திருக்கும்படி செய்யும்விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் கருவைக்கலந்து விரலில்தொட்டு பத்திரகாளி மந்திரத்தை 1008-செபித்து தோலின்மேல்தடவி முன்போல் திரை அமைத்து சற்று நேரம்பொருத்துத் திறந்துகாட்ட பசுத்தோல் உயிருள்ள பசுவைப் போல் தோற்றும் அனைவரும் பிரமிப்பார்கள்.

1277. எருதுதோல் எருதாகும் ஜாலம்.

பசுவைப் போலவே எருதுதோலையுங் காட்டி கருமுதலானதும் தெளித்து திறந்துகாட்ட எருதாகத்தோற்றும்.

1278. எருமைத்தோல் எருமையாகும் ஜாலம்.

சபையில் வந்துநின்று எருமைத்தோலை கையிலேடுத்து அனைவருக்குங்காட்டி இதோ இந்த எருமைத்தோலுக்கு உயிருண்டாகும் பாருங்களென்று முன்போல் கருவைக்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு பத்திரகாளி மந்திரத்தை 1008-ஜெபித்து கருவைத்தந்திரமாக எருமைத் தோலின்மேல் தடவி முன்போல் திரையமைத்து சற்றுநேரம் கழித்து திரையை எடுத்துக்காட்ட தோல் உயிருண்டாகியிருக்கும் நீ மறுபடியும் திரையை அமைத்துத் திறந்துகாட்ட தோலாயிருக்கும்.

1279. ஆட்டுத்தோல் ஆடாகும் ஜாலம்.

ஆட்டுத்தோல் ஒன்று எடுத்து சனங்களுக்குக்காட்டி இதோ இந்த தோலுக்கு உயிர்கொடுக்கிறேன் பாரென்று முன்போல் கருவைத்தொட்டுக்கொண்டு காளிமந்திரத்தை 1008-செபித்து தந்திரமாகக் கருவை ஆட்டுத்தோலின்மேல் தெளித்து முன்போல் சுற்றிலும் மறைவுகட்டி சற்றுநேரம் கழித்துகாட்ட பார்ப்போர்கள் கண்களுக்கு ஆட்டைப்போல் தோற்றும்; பார்ப்போர்களெல்லாம் பிரமைக்கொள்வார்கள்.

1280. குதிரைத்தோல் குதிரையாகும் ஜாலம்.

குதிரைத்தோலை வந்திருக்கும் ஜனங்களுக்குக்காட்டி இத்தோலுக்கு உயிர்கொடுக்கிறேன். பாருங்களென்று அத்தோலின் கழுத்தில்

கயிற்றைக்கட்டி முன்போல் துணிக்கட்டி பிறகு சிட்காமையும் ஐங்கோலக்கருவையும் கலந்து காளிமந்திரத்தை 1008-செபித்து கருவைத்தோலின்மேல் தந்திரமாகத்தெளித்து முன்போல் திரையிட்டு மூடித்திறந்துகாட்ட தோல் உயிருள்ள குதிரையாகத்தோற்றும் மறுபடியும் திரையிட்டுத்திறக்கத் தோலாயிருக்கும்.

1281. ஒட்டைத்தோல் ஒட்டையாகும் ஜாலம்.

முன்போல் ஜாலக்காரனைப் பழுதில்லாமற்படிக்கு உரித்த ஒட்டைத்தோலையெடுத்து வேடிக்கைப் பார்க்க வந்திருக்கும் சனங்களுக்குக் காட்டி இந்த ஒட்டைத்தோலின் கழுத்தில் கயிற்றைக் கட்டிவைத்து காளிமந்திர உச்சாடனத்தினல் உயிர்கொடுத் தெழுப்புகிறேன் பாருங்களென்று சித்துவிளையாடும் சிட்காமையையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில்தொட்டு தோலின்மேல் தெளித்து முன்போல் மறைவு கட்டி மூடித்திறந்துகாட்ட உயிருடன் தோற்றும்; பிறகு முன்போல் திரையைமூடி காட்ட ஒட்டைத்தோலாக இருக்கும்.

1282. கழுதைத்தோல் கழுதையாகும் ஜாலம்.

கழுதைத்தோலை கையிலெடுத்துக்காட்டி இதை உயிராகச்செய்கின்றேன் பாருங்களென்று கருவை விரலில்தொட்டு பத்திரகாளி மந்திரத்தை 1008-செபித்து கருவைத்தந்திரமாக கழுதைத்தோலின்மேல் தடவி முன்போல் காட்ட உயிருண்டாயிருக்கும்.

1283. பூனைத்தோல் பூனையாகும் ஜாலம்.

பூனைத்தோல் ஒன்றையெடுத்து அனைவர்க்குங்காட்டி இதோ இந்த பூனைத்தோலை உயிர்கொடுத்து எழுப்புகிறேன் பாருங்களென்று முன் செய்தபடி செய்ய பூனையாகும் மறுபடியும் முன்போல்செய்ய மறையும்.

1284. நல்லபாம்புதோல் நல்ல பாம்பாகும் ஜாலம்.

நல்லபாம்பு தோலையெடுத்து அனைவர்க்குங்காட்டி இந்த தோலை மந்திர உச்சாடனத்தினல் உயிருண்டாகும்படி செய்யும் வேடிக்கையைப் பாருங்களென்று கருவை விரலில்தொட்டு மந்திரம் செபித்து கருவைப் பாம்பின்மேல் தடவி பெட்டியில்வைத்து மூடி திறந்துகாட்ட வெறுந் தோலாயிருக்கும்.

1285. சாரப் பாம்புதோல் சாரப் பாம்பாகும் ஜாலம்.

முன் நல்லபாம்பின் தோலுக்கு செய்தபடிசெய்து மைதடவி மந்திரம் முதலானதும் செபித்து சாரப்பாம்பின்தோலை பெட்டியில்போட்டு மூடி சற்று நேரம்பொருத்து திறந்துகாட்ட சாரப்பாம்பு உயிருடன் இருப்பதுபோல் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்; மீ பழைய படியே திறந்துகாட்ட தோலாகவே இருக்கும் இது மாயவித்தை யென்பார்கள்.

1286. முசல்தோல் முசலாகும் ஜாலம்.

முன்போல் முசல்தோலை யெடுத்து அனைவருக்குங்காட்டி இந்த தோலை உயிர்வரும்படி செய்கிறேன் பாருங்களென்று ஐங்கோலக் கருவையுங் கலந்து விரலில் தொட்டுக்கொண்டு பத்திரகாளி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து கருவை முசல் தோலின்மேல் தடவி கூடைப் போட்டு மூடி திறந்துகாட்ட உயிருள்ள முசலாகத்தோற்றும் பார்ப்போர் மயங்கி நிற்பார்கள்; அப்போது மீ முன்போல் மூடித் திறந்து காட்ட தோலாகிவிடும்.

1287. மலைப்பாம்புதோல் மலைப்பாம்பாகும் ஜாலம்.

மலைப்பாம்புதோல் ஒன்றையெடுத்து சனங்களுக்குக்காட்டி இதோ இந்த தோலுக்கு உயிர்கொடுக்கிறேன் பாரென்று முன்போல் கருவைத் தொட்டுக்கொண்டு காளிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து தந்திரமாக கருவை தோலின்மேல் தெளித்து முன்போல் சுற்றிலும் திரைபோட்டு சற்று நேரம்பொருத்து திறந்துகாட்ட பார்ப்போர் கண்களுக்கு பாம்பைபோல் தோற்றும்; பார்ப்போர்களெல்லாம் மதிமயங்கி பிரமைகொள்வார்கள்.

1288. பச்சைப் பாம்புத்தோல் பச்சைப்பாம்பாகும் ஜாலம்.

பச்சைப்பாம்பு தோலையெடுத்து ஜனங்களுக்குக் காட்டி இந்த தோலுக்கு உயிர்கொடுக்கிறேன் பாருங்களென்று முன்போல் ஐங்கோலக்கருவைத் தொட்டுகொண்டு காளிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கருவை தோலின்மேல் தந்திரமாகத் தெளித்து முன்போல் திரைமூடி திறந்துகாட்ட பாம்புதோல் உயிருள்ள பாம்பைப்போல் தோற்றும் மீ முன்போல் திரைவிட்டு திறக்க தோலாக யிருக்கும்.

1289. பெருச்சாளிதோற் பெருச்சாளியாகும் ஜாலம்.

பெருச்சாளிதோலை எடுத்து சனங்களுக்குங்காட்டி இந்ததோலுக்கு உயிர்கொடுத்து எழுப்புகிறேன் பாருங்களென்று கருவையும் கலந்து காளிமந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கருவை தோலின்மேல் தந்திரமாகதெளித்து முன்போல் திரைமூடி திறந்துகாட்ட உயிருள்ள பெருச்சாளி யாகத்தோற்றும்; பிறகு முன்போல் மறைத்துவிடவும்.

1290. ஒட்டைத்தோல் ஒட்டையாகும் ஜாலம்.

முன்போல் ஜாலக்காரன் பழுதில்லாமல் உரித்த ஒட்டைத்தோலை எடுத்து வேடிக்கைப்பார்க்க வந்திருக்கும் ஜனங்களுக்குக்காட்டி இதை காளிமந்திர உச்சாடனத்தினல் உயிர்கொடுத்து எழுப்புகிறேன் பாருங்களென்று சித்து விளையாடும் சிட்காமையும் ஐங்கோலக்கருவையும் கலந்து விரலில்தொட்டு தோலின்மேல் தெளித்து முன்போல் மூடித்திறந்து காட்ட உயிருடன் தோற்றும்.

1291. கீரிப்பிள்ளைதோல் கீரிப்பிள்ளையாகும் ஜாலம்.

சபையில்நின்று கீரிப்பிள்ளைத்தோல் எடுத்து அனைவருக்குங்காட்டி இதோ இந்த தோலை மந்திர உச்சாடனத்தினல் உயிருண்டாகும்படி செய்யும் விநோதத்தைப்பாருங்களென்றுமுன்போல்கருவைக்குழைத்து விரலில்தொட்டு மந்திரத்தைச் செபித்து கருவை தோலின்மேல் தடவி மூடி திறந்துகாட்ட கீரிப்பிள்ளைதோல் உயிர்பெற்று உலாவிமறையும்,

1292. அணிப்பிள்ளைத்தோல் அணிப்பிள்ளையாகுஞ் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் நின்று அணிப்பிள்ளைதோல் யெடுத்து இதற்கு உயிர்கொடுத்து எழுந்திருக்கும்படி செய்யும் விநோதத்தைப் பாருங்க ளென்று முன்போல் கருவைக்கலந்து விரலில்தொட்டு பத்திரகாளி மந்திரத்தை 1008-செபித்து தோலின்மேல் தடவி முன்போல் திரை அமைத்து சற்றுநேரம் பொருத்துத் திறந்துகாட்ட அணிப்பிள்ளைதோல் உயிருண்டாகியிருக்கும் ஆச்சரியப்படுவார்கள்; முன்போல் மறுபடியும் மூடித்திறந்து காட்ட தோலாகிவிடும்.

1293. உடும்புதோல் உடும்பாகும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் உடும்புதோல் ஒன்றையெடுத்து அனைவருக்குங் காட்டி இதோ இந்த உடும்புத்தோல் உயிர்வரும்படி செய்யும் விநோதத்தை பாருங்களென்று முன்போல் கருவைக்கலந்து விரலில்தொட்டு மந்திரத்தை ஆயிரத்தெட்டு ஜெபித்து கருவை தந்திரமாக தோலின் மேல் தெளித்து மூடி திறந்துகாட்ட உயிர்வந்து உடும்பு தோற்றும்; கண்டு பிரமை கொள்வார்கள். நீ உடனே முன்போல் மூடி மறைத்து விடவேண்டும்.

1294. பச்சோந்திதோல் பச்சோந்தியாகும் ஜாலம்.

சபையில் பச்சோந்தியின் தோலையெடுத்து அனைவருக்குங்காட்டி இதோ இந்தத் தோலை உயிர்வரும்படி செய்கிறேன் பாருங்களென்று முன்போல் கருவைக்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு பத்திரகாளி மந்திரத்தை 1008-செபித்து கருவை தந்திரமாக தோலின்மேல் தடவி மூடித்திறந்துகாட்ட உயிருண்டாகி யிருக்கும்; நீ மறுபடியும் திரையை அமைத்து திறந்துகாட்ட தோலாயிருக்கும்.

1295. தேவாங்குதோல் தேவாங்காகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒருதேவாங்கின் தோலையெடுத்து அனைவருக்குங் காட்டி இந்த தோலை உயிர்கொடுத்தெழுப்பும் விநோதத்தைப் பாருங்களென்று கருவை கலந்து விரலில்தொட்டு பத்திரக்காளி மந்திரத்தை செபித்து கருவை தோலின்மேல் தடவி மூடிதிறந்து [illegible] உயிருடன்தோற்றும்; அனைவரும் ஆச்சரியப்படுவார்கள். முன்போல் மூடித் திறந்துகாட்டவும்.

1296. மந்தித்தோல் மந்தியாகும் ஜாலம்.

முன்போல் சபையில் வந்துநின்று மந்தியின்தோலுக்கு உயிர்வரும் படிச்செய்யும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் கருமுதலா னதும் தெளித்து திரைசுற்றிலும் அமைத்து சற்றுநேரம் பொருத்துத் திறந்துகாட்ட உயிருள்ள மந்தியைப்போல் தோற்றும். ஜனங்கள் பார்த்து பிரமிப்பார்கள்; நீ முன்போல் திரையை அமைத்து மறைத்து விடவும்.

1298. புனுகுபூனைத்தோல் புனுகுபூனையாகுஞ் ஜாலம்.

ஷை சபையில்நின்று புனுகுபூனையின்தோல் ஒன்றையெடுத்து அனை வர்க்குங்காட்டி இந்ததோல் உயிர்பெற்று எழுந்திருக்கும்படி செய்கி

றேன் பாருங்களென்று கருவை விரலில்தொட்டுக்கொண்டு பத்திரளிகா மந்திரத்தை செபித்து கருவை தந்திரமாக அந்த தோலின்மேல் தடவி முன்போல் மூடித்திறந்துகாட்ட உயிருள்ள புனுகுபூனையைப்போல் தோற்றும் பார்ப்போரெல்லாம் ஆச்சரியப்படுவார்கள்; நீ முன்போல் மறைத்துவிடவும்.

1299. கரும்பூனைத்தோல் கரும்பூனையாகும் ஜாலம்.

ஷை சபையில் நின்று கரும்பூனைத்தோலை யெடுத்து அனைவர்க்குங் காட்டி இந்தத் தோலுக்கு உயிர்கொடுக்கும் விநோதத்தைப் பாருங்க ளென்று முன்போல் கருவைத்தடவி மூடித்திறந்துகாட்ட உயிருள்ள கரும்பூனைபோல் தோற்றும்; அனைவரும் பிரமிப்பார்கள். நீ முன்போல் மூடிமறைத்துவிட வேண்டும்.

1300. காட்டுப்பூனைத்தோல காட்டுப்பூனையாகும் ஜாலம்.

முன்போல் காட்டுப்பூனையின்தோலை யெடுத்து அனைவர்க்குங்காட்டி இதோ இந்தத்தோலை உயிர்வரும்படி செய்யும் வேடிக்கைப்பாருங்க ளென்று முன்போலவே கருவைக்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு பத்திரகாளிமந்திரத்தை செபித்துக்கருவை தந்திரமாகத்தோலில்தடவி ஒரு கூடையைப்போட்டு மூடி சற்றுநேரம்பொருத்து திறந்துகாட்ட உயிருள்ள காட்டுப்பூனைபோல் தோற்றும் அனைவரும் வியப்பார்கள்; நீ முன்போல் மறைத்து விடவேண்டும்.

1301. காய்ந்தபச்சைத்தவளை உயிராகுஞ் ஜாலம்.

ஜாலமாடும் சபையில்வந்து காய்ந்து உலர்ந்த ஒரு பச்சைத்தவ ளைக்கு உயிர்கொடுக்கும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் கருமுதலானதுந்தடவி மூடிவைத்து சற்றுநேரம் பொருத்து திறந்து காட்ட பச்சைத்தவளை உயிராயிருப்பதாகத் தோன்றும்; ஆச்சரியப்படு வார்கள், நீ முன்போல் மூடி மறைத்துவிடவும்.

1302. இறந்துபோன கிளியை எழுப்பிக்காட்டுஞ் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் இறந்துபோன கிளிப்பிள்ளை ஒன்றைக் கையி லெடுத்து அனைவருக்குங்காட்டி இதோ இறந்துபோன கிளிப்பிள்ளையை உயிர்பெற்றெழுந் திருக்கும்படி செய்கிறேன் பாருங்களென்று கெட்கா மையும் ஜெகஜாலக்கருவும் சித்திமையும் சடலைக்கருவும் ஜங்கோலக்கரு இவை ஐந்தும் ஒன்றாய்க்கலந்து விரலில் தொட்டுக்கொண்டு மயான ருத்திரி மந்திரத்தை ஆயிரத்தெட்டுசெபித்து கருவைத்தந்திரமாக இறந் துகிடக்கும் கிளியின்மேல் தெளித்து ஒரு கூடைப்போட்டு மூடி கொஞ் சநேரம்பொருத்து திறந்துகாட்ட உயிர்பெற்ற கிளியைப்போல் பார்ப் பவர் கண்களுக்குத்தோற்றும்; ஆனால் உடனே முன்போல் மூடித்திறந் துகாட்ட இறந்தகிளியாகவே இருக்கும்.

1303. உயிரிழந்தமைனாவிற்கு உயிர்கொடுக்குஞ் ஜாலம்.

உயிரிழந்த ஒருமைனாவை கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி இதோ செத்துக்கிடக்கும் மைனாவுக்கு உயிருண்டாக்கும் விநோதத்தைப்

பாருங்களேன்று முன்போல் கருவை விரலில்தொட்டு உயிரிழந்தமைனு வின்மீது தெளித்து மூடித்திறந்துகாட்ட மைனு உயிர்பிழைத்து உலாவு வதைப்போல் தோற்றும் அதை மறுபடியும் மூடித்திறந்துகாட்ட இறந்த மைனுவாகவேயிருக்கும் காண்பவர்கள் களிப்படைவார்கள்.

1304. உயிரிழந்த கௌதாரிக்கு உயிர்கொடுக்குஞ் ஜாலம்.

முன்போல் உயிரிழந்தகௌதாரிக்கு ஒன்றைகையிலெடுத்து அனைவர்க்குங்காட்டி இதற்குயிர் கொடுத்தெழுப்பும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் கலந்தகருவை விரலில்தொட்டு மந்திரத்தை செபித்து கருவைத்தந்திரமாக உயிரிழந்துகிடக்கும் கௌதாரியின்மேல் தடவிமூடி கொஞ்சநேரம் பொருத்துத் திறந்துகாட்ட கௌதாரி உயிருள்ளதைப்போல் தோற்றும், ஆச்சரியப்படுவார்கள்; உடனே நீ முன்போல்மூடி மறைத்துவிடவேண்டும்.

1305. உயிரிழந்த காடைக்கு உயிர்கொடுக்குஞ் ஜாலம்.

முன்போலவே ஜாலமாடுமிடத்தில் உயிரிழந்த காடையொன்றை எடுத்து இந்த வேடிக்கையைப் பாருங்களென்று பூர்வ... முதலான துந்தடவி ஒருசிறிய கூடைப்போட்டு மூடித்திறந்துகாட்ட உயிருள்ள காடையைப்போல் தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள் உடனே நீ முன்போல் மூடி மறைத்துவிடவேண்டும்.

1306. உயிரிழந்த தூக்கணாங்குருவிக்கு உயிர்கொடுக்குஞ் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் உயிரிழந்த தூக்கணாங்குருவியைக் காட்டி இந்த உயிரிழந்த குருவிக்கு உயிர்கொடுக்கிறேன் பாருங்களென்று முன்கலந்திருக்கும் கருவை விரலில்தொட்டு மந்திரத்தைச் செபித்து கருவை யாருக்குந் தெரியாமல் தந்திரமாக உயிரிழந்திருக்கும் குருவியின்மேல் தடவி மூடித்திறந்துகாட்ட உயிரிழந்த தூக்கணாங்குருவி உயிருடன் இருப்பதுபோற்தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்; நீ உடனே முன்போல் மறுபடியும் மூடித்திறந்துகாட்ட உயிரிழந்ததுபோலவேயிருக்கும்.

1307. உயிரிழந்தபுறாவிற்கு உயிர்கொடுக்குஞ் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் உயிரிழந்த புறாவொன்றை யெடுத்துக்காட்டி இதோ இந்த உயிரிழந்த புறாவிற்கு உயிர்வரும்படிச்செய்யும் வேடிக்கையைப் பாருங்களென்று முன்போய் கருவைக்கலந்து விரலில் தொட்டுக் கொண்டு பத்திரகாளி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து கருவைத் தந்திரமாக புறாவின்மேல்தடவி திறந்துகாட்ட உயிருள்ள புறாவாகத் தோற்றும்; அப்போது நீ முன்போல் மூடித்திறந்துகாட்ட உயிர் மறைந்துவிடும் ஆச்சரியப்படுவார்கள்.

1308. உயிரிழந்த சாவலுக்கு உயிர்கொடுக்குஞ் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் உயிரிழந்த சாவல் ஒன்றை யெடுத்துக்காட்டி இந்த உயிரிழந்த சாவலை மந்திர உச்சாடனஞ்செய்து சாவலை பிழைக்கும்படி செய்கிறேன் பாருங்களென்று முன்போல் கருவைக்கலந்து விரலில் தொட்டுக் கொண்டு பத்திரகாளி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து கருவை ஒருவருக்குந் தெரியாமல் சாவலின்மேல் தடவி கூடையைப்போட்டுமூடி கொஞ்சநேரம் பொருத்து திறந்துகாட்ட உயிருள்ள சாவலாகத்தோற்றும் அனைவர்களும் ஆச்சரியப்படுவார்கள்.

1309. உயிரிழந்த வான்கோழிக்கு உயிர்க்கொடுக்குஞ் ஜாலம்.

முன்போல் உயிரிழந்த வான்கோழி ஒன்றையெடுத்து அனைவர்க்குங்காட்டி இதற்கு உயிர்கொடுத்து எழுப்பும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் கருவைக்கலந்து விரலில் தொட்டுக் கொண்டு பைரவர் மந்திரத்தை செபித்துக் கருவை ஒருவர்க்குந் தெரியாமல் வான்கோழிமேல் தடவி பெரிய கூடையால் மூடி திறந்துக் காட்டி உயிருள்ள வான்கோழிபோல் தோற்றும்;அனைவரும் ஆச்சரியப்படுவார்கள். நீ முன்போல் மறுபடியும் மூடித்திறந்துக்காட்ட உயிரிழந்ததைப் போலிருக்கும்.

1310. உயிரிழந்த வாத்துக்கு உயிர்கொடுக்கும் ஜாலம்.

ஜாலமாடுஞ் சபையில் நின்று உயிரிழந்த வாத்தொன்றை யெடுத்து அனைவருக்குங் காட்டி இந்தவாத்துக்கு உயிர்வரும்படி செய்கிறேன் பாருங்களென்று முன்போல் கலந்து கருவைத்தொட்டு மந்திரத்தை செபித்துக் கருவை ஒருவர்க்குந் தெரியாமல் தந்திரமாக வாத்தின்மேல் தடவி கூடைப்போட்டு மூடித் திறந்துக்காட்ட உயிருள்ள வாத்தாகத் தோற்றும். அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்; முன்போல்மூடி மறைத்துவிட வேண்டும்.

1311. உயிரிழந்த காகத்திற்கு உயிர்கொடுக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் முன்போல் உயிழந்த காகத்திற்கு மறுபடியும் உயிர்வரும்படி செய்யும் வேடிக்கைப் பாருங்களென்று முன்போல் கருவைக்கலந்து விரலில்தொட்டு பத்திரகாளி மந்திரத்தைசெபித்து கருவைக் காகத்தின்மேல் தடவி மூடித்திறந்துகாட்ட உயிருள்ள காகத்தோற்றும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள். நீ முன்போல் மூடி மறுபடியும் திறந்துகாட்ட உயிரில்லாதிருக்கும்.

1312. மகாராஜயோக கருவறியும் வித்தை.

மகாராஜயோகம் செய்யவேண்டில் கருவைச்சொல்வோம் கேட்பாயாக: பூமியின்கண் நான்கு வருணாசிரமங்களிலும் சிறப்போங்கிவிடும் பிரமகுலத்தில் செனித்த பிராமணஸ்திரீயில் 10-12-14-16-18-வயதும் அன்றி 8-வயதாகிலும் மிகவும் நன்று எனவறிந்து கொள்ளவும்.

1313. பிராமணஸ்திரீ நாதங்கழட்டுகிற விதமறியும் வித்தை.

அறிந்துக்கொண்டு நாதமதைக் கழட்டலாகும் கழட்டுவது பிராமணப் பெண்ணாக யிருக்கவேண்டும். இந்த மகாராஜா யோகத்திற்கு அந்தவஞ்சியானவள் ஈன்ற குழவியில் ஆணாகிலும் பெண்ணாகிலும் சரிதான் என்றறிக.

1314. விந்திளகுதல் அறியும் வித்தை.

மேற் கூறியபடி அறிந்தும் அதில் ஆணென்றாலும் அதிகநன்று பெண் அதனிலும் அதிகநன்று. ஆகிலும் மகாராஜயோகத்திற்கு பிரம குலத்தின் ஆண்பிள்ளையாகிலும் அதின் விந்துவினுடைய பலத்தைக் கேட்பாயாக வயது 16-ஆனால் மெத்தவும் நன்று 22-ம் 25-ம் நன்றென்று அறிவாய்.

1215. பெண்ணுறுதங் கழட்டுகிற நாளறியும் வித்தை.

அப்படி அறிந்தும் பெண்ணுதங் கழட்டுகிறநாள் எதுவெனில் 28-வயதில் நன்று அதனிலும் முப்பதுக்குள்ளே மெத்தவும் நன்று. இந்த வயதுகளில் விந்து வானதைக்கழட்ட நன்றாகும் அதற்குமேல் நரைதிரையாகிய விந்து கழட்டிடில் இளகு நீராகப்போகும்; அந்தவிந்து உபயோகப்படாதென்றறிவாய்.

1316. ஆண்விந்து கழட்டும் நாளறியும் வித்தை.

அறிந்தும் மகாராஜயோகத்திற்கு தைமீ பூச நட்சத்திரம் சுக்கிர வாரத்திலும் ஆண்பிள்ளையின் விந்துகழட்ட நன்றாகும்; அதிலும் பத்து மாதமும் சரியாய் தாயுடைய கெர்ப்பத்திலிருந்து பிறந்த பிராமணப் பிள்ளையாகில் மெத்தவும்நன்று; அந்த குழந்தைபிறந்த ஐந்தாநாள் பகு பாதி நேரத்தில் ஒருவர்க்குந் தெரியாமல் செய்யவும்.

1317. வாலை மூலத்தியானம் ஓது வித்தை.

தேகமுழுதும் கருக்கும்படியாகக் கரித்தூளை இடித்து வரண்டத் தெண்ணெய்யில் கலந்து குழறத்து உடல்முழுதும் பூசிக்கொண்டு வஸ்துவை நீ உள்ளுக்குப் பானம்பண்ணி வாலையினுடைய மூலமந்திரத்தை ஓம் ஸ்ரீயும் கிலியும் என்று மூன்றெழுத்தை 108-செபித்து உன்னுடைய உடலுக்கு திக்குபந்தனஞ் செய்துக் கொள்ளவேண்டும்.

1318. பிராமணஸ்திரீ நீரில் இறந்தவனைக் கொளுத்தும்போது நெய் முதலானது எடுக்கும் ஜாலம்.

மேற் கூறியபடி பந்தனஞ்செய்துக்கொண்டு போவாராகில் தன்னை ஒருவரும் கண்டுபிடிக்கமாட்டார்கள்; அது அப்படியிருக்க சுடுகாட்டில் வேகும் பிணத்தினுடைய எலும்பு, கரி, நெய் இவை எடுக்கவேண்டில் சரியான பருவவயதுள்ள பிராமணஸ்திரீ நீரில் விழுந்திருந்தவளை கொண்டுபோய் கொளுத்தும்போது இரும்பினால் செய்தகரண்டி ஒன்று தயார்செய்து வைத்துக்கொண்டிருந்து பிணமானது வெந்து சொரிகிற நெய்யைப் பிடித்து சிசாவில் வார்க்கவும்; வார்த்தநெய் யதனில் பலம் ஒன்றும் முதுகு எலும்பைக் கொண்டுவந்து இடித்து தூள்செய்து வடிகட்டி தூளையெடுத்துப் பீங்கானில்விட்டு டை நெய்யைவிட்டு மத்தித்து உண்டையாகச்செய்து சூரியன்முன் கடினப்போது வைக்க நாலு திசையும் மயக்கப்பொடி பொரிபோல பொரியும் அதில் கற்பூரம் அறைபலம் போடவும்.

1319. வஞ்சி முதுகெலும்பு வாசனைப்பொடி முதலை எடுப்பாண்டில் தைக்கும் வித்தை.

மேற்கூறியபடி கற்பூரம்சேர்த்து அத்துடன் கஸ்தூரி கோசிகி மஞ்சள் கழுந்தியும் வெட்டிவேர் மருவு மருக்கொழுந்து இவைகள் வகைக்கு கால் பலமாகச் சேர்த்து தூளிடித்து டை தூளுடன் கலந்து சிவனுடைய மூலமந்திரத்தை சொல்வேன் கேட்பாயாக் ஓம் கிலி யும் ஸ்ரீயும் என்று கேளாய்.

1320. சிவனை மூலத்தியானம்செய்யும் வேளையறியும் வித்தை.

மேற்கூறிய மூலத்தை நூற்றியெட்டுஜெபிக்க செகஜாலப்பொடி சித்தியாகும். சித்தியானவுடன் அந்தப்பொடியில் பணவிடையெடுத்து அதனில் நீரில்யிறந்தவள் நெய்விட்டு பணவிடையில் பாதிகுழைத்து திலர்தமாக நெற்றியில் இட்டுக்கொண்டு தனிப்பொடி பணவிடையை யெடுத்துக்கொண்டு நடுராத்திரிவேளையில் கேளாய்.

1321. வைரவர் தியான வித்தை.

மேற்கூறிய தலைச்சன்பிள்ளை யின்றவிடத்திற்குயேகி சுவர்யேறி குதித்து வாசலில்வந்து வாய்திறக்காமற்படிக்கு வைரவர் மூலமந்திரத்தை சொல்லும் வகை எவ்விதமெனில் ஓம் சவ்வும் கிறிரீம் ஸ்ரீயும் சிங் அங் சாயா அருவாம் என்று நூற்றியெட்டு உருஜெபிக்க வைரவர் பாதைவழிகாட்டி நடத்திவைப்பார், நன்மையானது பெருகவு மின்னமுங்கேளாய்.

1322. ஜெகஜாலப்பொடிதூவும் வித்தை.

கேட்க ஜெகஜாலப்பொடியைக் கையிலெடுத்து தூத்திவிடு. அங்குள்ளபேர்கள் யாவரும் தூங்கிக்கொண்டிருந்தாலும் அல்லது விழித்துக்கொண்டிருந்தாலும் இந்தப்பொடி வாசனைப்பட்டபோதே திகைப் பெண்டை மிதித்தவர்கள்போலும் திசைகலங்கி மதிமயங்கி திகைக்கும் மூதேவிமானது அவர்களைப்பிடித்து மயக்கும் அன்றியும் மூவுலகத்தையுங் கூடமயக்கும்.

1323. காளபயிரவர் மூலம் ஓதும் வித்தை.

மேற்சொன்ன ஜெகஜாலப் பொடியை ஜெகத்திற் செய்தாக்கால் அவர்க்கீடு இந்தஉலகில் யாவருமில்லை. இந்தப்பொடியை எடுத்துத்தூவி ஒருவீட்டிற்குள்ளே நுழையும்போது காளபைரவரை தியானிக்கவும்.

1324. கதவின் தாள்திறக்கும் வித்தை.

மேற்கூறிய காளபைரவர் தியானிக்கும் மூலமந்திரமாவது சுறிம் சிங்கு அவ்வும் அறியும் ஸ்ரீயும் என்று நூற்றியெட்டு உருஜெபிக்க கதவினுடையத்தாப்பான் திறக்கும்; திறந்தவுடன் நீ உள்ளே நுழைந்து ஜெகஜாலப் பொடியைத்தூவி தெருபாலிருக்கும் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்துவிடவேண்டும் பிறகு தன்னிருப்பிடத்தில் கொண்டுவந்து சேர்க்கவேண்டும்.

1325. விட்டகுறை யறியும் வித்தை.

அப்படி சேர்த்தபிறகு பணவிடை ஜெகஜாலப்பொடியை யெடுத்து அந்த தலசன் பிள்ளைவாயில் வைக்க அரைநொடிக்குள் உயிர் பிரிந்து போகும். அப்படிப்போயினும் உனக்குயாதொரு தோஷமுமில்லை; ஏனெனில் மதலையினுடைய விதிப்பயன் ஆகுமென வேதாந்திகளாகிய முன்னோர் விளம்பிய வார்த்தையாம்.

1326. முன்னோர்கள் வாக்கறியும் வித்தை.

முன்னோர்வாக்கு யாதெனில்மேற்படி சிசுவின்முடியைவாங்கி மயிர் சவ்வுநொரை யிவைகளைப்போக்கி மண்டையின் முடிமூளையையெடுத்து பத்திரப்படுத்தி தலைமண்டை லோடுகளை கல்லுரலில் இடிக்கவேண்டும்.

1327. பேரண்ட சுன்னம் செய்யும் வித்தை.

மேற்சொல்லியபடி இடித்து பேரண்டசுன்னம் செய்யும்வகை எவ்விதமெனில் தலைசன்பிள்ளை மண்டையோட்டில் நாத மரைநேர் விட்டு அரைஜாமம் அரைத்து மெழுகுபோல்வருகையில் அதையெடுத்து குகை செய்து ரவிமுன்னே வைத்து உலர்த்தி பக்குவமாய் வைத்து மூளையை யெடுத்து கல்வத்திலிட்டு கேளுஞ்செவ்வகை.

1328. எண்ணெய்க்கசிவிரங்கும் விதமறியும் வித்தை.

மேற்கூறியபடி செய்கின்ற வகையாவது அந்த மூளையினுடைய ஆண்விந்துபார்த்து கல்வத்திலிட்டு ஓயாமல் இரண்டு சாமமரைத்து வரும்போது நவநீதம்போல் பாயும். அதுகண்டு அதனைவழித்து பீங்கானில் வைத்து இரண்டுஜாமம் சூரியன்முன்வைக்க நல்ல ...ளையின் நிறத்தைப்போலிறங்கும் இரங்கி நிமிஷத்தில் வெண்ணெயைப்போல் கட்டிவிடும் பத்திரப்படுத்துவென்றறியும்.

1329. பழம்புளிபோல் செய்யும் வித்தை.

மேற்சொன்ன கசிவானது இறங்கும்போது அதுவிட்டுப்போலாகும் அந்தப் பிட்டையெடுத்து கல்வத்திலிட்டு அதனுடன் விந்துசேர்த்து விட்டு இரண்டுஜாமம் விடாமல் அரைக்கும்போது பழம்புளிபோலாகும் தன்மை பெறும்படியாக பாகமாய்வரும் தயிலத்தைக்காண்க.

1330. வயது பதினாறுகளை அறியும் வித்தை.

மேற்படி புளியுடன் நாதம்சேர் ஒன்றுவிட்டு இரண்டு ஜாமம் விடாமல் அரைக்க அதினுடைய வாலிபமானது மெத்தவயது பதினாறு களையாகும் அதை வசனிக்கவும்போகாது அந்தபுளி மஞ்சள் நிறமுடைய மெழுகுபோல் ஆகும். அதை கையிலெடுத்து இழுத்துப்பார்க்க நாறுபோல் வரும். அந்தப்பாகங்கொண்டு அதைவழித்து செயல்பெறுகும்படி உருண்டைசெய்து கையில்வைப்பாய்.

1331. சீலைபாகம் ரவிபாகம் தேசபுடம் இவைகள்அறியும் வித்தை.

மேற்சொன்னபடிவைத்து மெழுகினால் கவசஞ்செய்து அதன்மேல் மண்சீலை எழுசெய்து சூரியன் முன்வைத்து உலரச்செய்து ஒரு ஜாமம்

பொருத்து எடுத்து சித்துபெரும்படியான சரக்குகளையெல்லாம் ஒரு கூடை எருவால் கெஜபுடம்போட செந்தூரம் சுன்னமதுவாகும்படி புடம்போட்டு வாங்கவேண்டியது.

1332. துல்லிக்க கதீதவெள்ளை காணும் வித்தை.

வாங்கியகவசத்தின்மேல் சுத்தியசீலையைவாங்கி குகையையுடைத்து அதை பீங்கானில் வைத்து அந்த வாளச்சுன்னத்தை பார்க்கும்போது மன்மதன் உதயமாவது போலும் வாணியைப்போலும் சொல்ல வெளிதாக விருக்கும். துல்லிதமான வெள்ளை இந்த சுன்னவாலில் நாதர்கள் வந்து பணிந்திடுவார்கள், இந்த நன்மையுள்ள சுன்னத்தை சீசாவில் வைத்து சொர்னவைரவரை தியானிப்பாய்.

1333. சொர்னவைரவர் தியானம் சித்தியாகுதல்அறியும் வித்தை.

சொர்னவைரவரை தியானிக்கும் விதம் எவ்விதமெனில் ஓம் சங்கிறியும் அறியும் வா வா சொர்னவைரவர் யங்குசாயாஎன்று இருநூத்தியெட்டு ஜெபித்துவர பேரண்டசுன்னமது சித்தியாகும். அப்படியான பிறகு பகிரண்ட வண்ட சராசரமும்அளமளதற்றதும் சித்திபெறலாகும்.

1334. மகாராஜயோகஞ்செய்கிற சூரியவாலை கற்பமறியும் வித்தை.

மேற்படி சுன்னத்தை பத்திரமாகவைத்துக்கொண்டு மகாராஜயோகம்செய்வோர்கள் அந்தயோக நிலையைப்பெற சூரியவாலைக் கற்பத்தை சொல்வோம் கேட்பாயாக.

1335. மூலிகை தொகுப்பறியும் வித்தை.

...வனூர்மூலி விஷ்ணுமூலி சூரியகாந்தி சந்திரகாந்தி செம்முள்ளி ...ன்...றி நத்தைச்சூரி சிறுகுறிஞ்சா நாயுருவி கண்டங்கத்திரி நாய்ப்பாலை ...சுமுசுக்கை முடக்கொத்தான் நரிமிரட்டி ஆதவாளை கிழ்க்கால்...லி கலித்தும்பை வல்லாரை நெருஞ்சி கருந்துளசி பத்திராட்சி வெ...ளருக்கு புளியாரை ஆதண்டை குப்பைமேனி பேய்கிரை ...பாடுத... கெஞ்சா அவுரி பிரமியம் சென்னயுருவி சிவகரந்தை செங்...வைகள் அறியவும்.

1336. இடைபாகம் ரவிபாகம் அறியும் வித்தை.

மேற்கூறியவண்ணம் அறிவதற்கு ஆகமூலிகை முப்பத்தஞ்சாகும். அதில் ஒவ்வொருமூலி இரண்டு பலமாக நிறுத்தெடுத்து இவ்வகையின் மூலமெல்லாம் சித்திரைமாதத்தின் வெய்யலில் சுக்கிரவாரம் பார்த்து உலரவைத்து பிறகுஎடுத்து கல்லுரலில்போட்டு ஒருஜாமமிடித்துதாளாக்...த் தோண்டி வழகட்டி பின்பு இறக்கி இந்தத்தூளை ஒரு கலசத்தில் போட்டு வைத்துக்கொள்ளவும்; கவசத்தின்மீது சீலைவேடுகட்டி அதை பதனமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

1337. கடைவிது சரக்கின் தொகுப்பறியும் வித்தை.

முன்போல் வைத்துக்கொண்டு அத்துடன் வால்மிளகு மலைமிளகு திப்பிலி நல்லமிளகு கடுக்காய்பிஞ்சு ஜாதிக்காய் கடுக்காய்ப்பூ ஏலம் லவங்கப்பட்டை சுக்கு நற்சீரகம் குரைவிரை சாரவிரை வெப்பாலரிசி

கார்கோலம் பண்பெரங்கி கருஞ்சீரகம் தான்றிக்காய் நாளிச்சபத்திரி அரத்தை குரோசானி திப்பிலி அம்மாஷ்டகம் சாதிபத்ரி இந்த கடைசரக்கு வகை இருபத்தைந்து வகையாகும் இவைவகைக்கு பலம். இரண்டாக நிறுத்தெடுத்து உலர்த்தியெடுத்து கல்லுரலிலிட்டு இரண்டுஜாமம் வரைக்கும் விடாமல் இடித்து ஆளாக்கியபின் தேனும்.

1338. காட்டுக்கிழங்கு வகையறியும் வித்தை.

மேற்படி இடித்தவளைத்தோண்டி கட்டியெடுத்து முன்சொல்லிய தூள்சேர்த்து கலசத்தை பதனமாக வைத்துக்கொள்ளவும். காட்டுக்கிழங்கு வகைசொல்வேன் கேட்பாயாக. இலப்பைவேர் பூவரசன் பட்டை அத்திவேர்பட்டை ஆலம்வேர்பட்டை அசோக விருட்சத்தின் வேர்ப்பட்டை மாதளம்வேர் விலாமிச்சவேர் வில்வவேர் சரக்கொன்றைவேர் இவைகளாகும்.

1339. இடைபாகம் ரவிபாகம் அறியும் வித்தை.

மேற்சொன்னவேர் வகையொன்றுக்கு ஒருபலமாக நிறுத்தெடுத்து வேரையெல்லாம் பில்லைபில்லையாக அறுத்து ஒருவாரம் ரவியிலுலர்த்தி அதை உரலிலிட்டு இடித்து பொடிந்து வடிகட்டி முன்பொடியில் சேர்த்துக்கொள்ளவும்.

1340. பிரமகுலம் பனிநீர் வாங்கும் வித்தை.

பிரமகுலத்திற்பிறந்த தலைச்சன்பிள்ளையின் பனிக்குடம் வசனிப்போம் கேட்பாயாக. ஐந்துபடி நீர்வாங்கி அதில் பேரண்டச்சுன்னம் அரைபலம்போட்டு அரைநாழி பொறுத்துப்பார்க்க சுத்தசலமாகும்; அதையெடுத்து பெருஞ்சட்டியில்வார்த்து சீனிசர்க்கரை 1... போட்டு பின்பு சகலமும் அதிலிட்டு சட்டியை அடுப்பின்மேலேற்றி...

1341. ஒரு மரத்தின் விரகால் எரிக்கும் வித்தை.

கேட்பாயாக: அடுப்பேற்றி தீயையேற்றி ஒருமரத்தின் விரகால் ஒருஜாமமெரிக்க பாகுபோலாகும். அப்போது மேற்படிபொடி... வகையும் உருதிபெரும்படியாக அதில் கொட்டி கிண்டி நல்ல... பேரண்டச்சுன்னம் அரைபலம்போட்டு மறுபடியுங்கிளறிட கெட்டி... மாகவரும். அப்போது அடுப்பைவிட்டிறக்கி கீழேவைத்து நீ சொ... திரியாதபடி சூரியவாலை கற்பத்தை ஆறவைத்துச் சீசாவிற்போட்டு வைத்துக்கொள்ளவும்.

1342. கர்ப்பத்திற்கு திரிபுரை மூலமந்திரம் செபிக்கும் வித்தை.

மேற்படி லேகியத்திற்கு திரிபுரைதியானஞ் செய்வது எவ்விதமெனில் ஓம் ஸ்ரீம் கிரியும் சிங் ஐயு கிரியும் கிலியும் சவ்வும் ஆம் ஆயிமாயி திரிபுரையே ரா என்று 108 உருசெபிக்க சூரிய வாலைகற்பம் சித்தியாகும்; திரிபுரையின் சூட்சமி துவாருமென மேலோர் கூறினர்.

1343. சௌமிய சாகரம் 1500 அறியும் வித்தை.

சூட்சமாகிய இந்த சூரியவாலை கற்பமிதுபோல் முன்னோர்கள் சொன்ன நூலில் சொல்லவில்லை; ஆயினும் சௌமியசாகரத்தின் பீடமானது வசனித்தபடி 1500-யும் பார்க்கவேண்டும், அப்படி பார்ப்போர்களுக்கு சகலமும் சித்தியாகத்தோன்றுமென மேலோர் கூறினர்.

1344. கற்பமுண்ண வசந்தகாலம் மாசம் நாளும் அறியும் வித்தை

கடைத்தேறும்படியான மாணாக்கர்களுக்கு முன்னோர் கருவாகக் கருணை பெறும்படி சொன்னார்; மகராஜயோகஞ்செய்வோர் ஆயிரத்திலொருவன் அமிசையுண்டு, ஆதலால் யோகத்திற்கு வசந்தகாலமே முக்கியமானது.

1345. உடல்சேதி அறியும் வித்தை.

மேற்படி யோகம் செய்யும்வகை எவ்விதமெனில் ஆதிகாலமாகிய முதநாள் பூசநட்சத்திரம் குருவாரம் இந்தநாளில் யோகம்புரியுமிடம் குகை பின்னமில்லாதிருக்கில் நீ அதிற்சென்று தர்ப்பசுத்திமுதலானதுஞ் செய்துக்கொண்டு ஞான காவியத்திற்கூறிய கிரமப்படிக்கு பூசைசெய்துக்கொண்டு ராஜயோக நிஷ்டையானது அடைய சித்தியாகும் விதம் சொல்வோம் பாராய்.

1346. சிவயோகமேடை அறியும் வித்தை.

மேற்கூறியவாறு சித்திபெற சிவயோகமேடையை சொல்லக் கேளாய்: அந்த சிவயோகமேடை அமைப்பது பத்துஜாண் அகலமும் பத்துஜாண் நீளமுமாய் மேடைபோட்டு பிறகு நீ சடலமெங்கும் விபூதியை தனமாயணிந்து முத்திபெறும்படியான 800-ல் யோகத்துக்கெல்லாஞ் சொல்லிய தீட்சையை செபித்து, மவுனமதில் உன்னுடைய அறிவையேட்டி பின்பு கற்பூரார்த்திசெய்து தீபதூப நைவேத்தியத்துடன் சூரியவாலை கற்பலேகியத்தை குண்டுமணிப்பிரமாண மெடுத்து சாப்பிட்டு அரைபடி பசும்பால் சாப்பிடவேண்டும், இப்படி காலைமாலையிருவேளையும் ஒருமண்டலம் சாப்பிடவேண்டுமாம்; யோகசித்தியாகும்.

1347. கற்பக்கோழை வாங்குதலறியும் வித்தை.

மேற்சொன்ன கற்பத்தைக் கையிலெடுத்து இரண்டுநாழிவரைக்கும் மூக்கினிடமாகவைத்து முகர்ந்துக்கொண்டிருந்து பின்பு அதை நாவில் வைத்துதேய்க்க கபங்களெல்லாம் வந்துவிடும்.

1348. கற்பமண்டலமுண்ண உண்டாவது அறியும் வித்தை.

கற்பத்தை உண்ணும்போது ஒருவேளையாக நடுமத்தியானத்தில் பெரிச்சாளியின் மங்கரிசியன்னம் சாப்பிடவேண்டும். இப்படி ஒருமண்டலம் சாப்பிட்டுவந்தால் மகராஜயோகம் சித்தியாகி பிராணவாயு உறுதியாகவிருக்கும்.

1349. நரைதிரையாதி அகற்ற விபரம் அறியும் வித்தை.

மேற்கூறியவண்ணம் கற்பமதை ஒருமண்டலம் உண்ண கபங்கள் யாவும் அகன்றுபோகும். உன்னைக்கண்டோர்கள் யாவரும் தெண்டனிடுவார்கள்; கபமானது கழன்றபோது மாதரெல்லாம் மெச்சும்படியாக நரைதிரையானது ஒருமண்டலத்திற்குள்ளே சித்தியாகும்; உன்னையாவு

ரும் புகழ்ந்து கொண்டாடுவார்கள், உன்னுடைய மகிமை தேசமெங்கும் பேசிப்புகழ்வார்கள்.

1350. சபையை மயக்கும் வித்தை.

சபையில்நின்று கெசாலப்பொடியை யெடுத்து காத்துவாட்டம் பார்த்து கொஞ்சம் தூவிவிட வேடிக்கைப் பார்க்கவந்த யாவரும் மூர்ச்சையடைவார்கள். உடனே நீ போண்டச்சுன்னத்தை கொஞ்சம் தண்ணீரில்போட்டு அவர்கள் மீதுதெளிக்க நித்திரைபோய் எழுந்தவர்போல் எழுந்திருப்பார்கள்.

1351. புலியை மயக்கும் ஜாலம்.

புலிகூட்டங்களின் முன்னே பயமில்லாமற் சென்று பொடியை கொஞ்சமெடுத்து வாட்டமாகநின்று தூவிவிட புலி கூட்டங்களெல்லாம் மூர்ச்சையாய் விழுந்துவிடும் முன்போலெழுப்பவேண்டும்.

1352. சிங்கத்தை மயக்கும் ஜாலம்.

முன்போல் சிம்பக்கூட்டத்தின் முன்சென்று ஜெகஜாலப்பொடியை கொஞ்சமெடுத்து காத்துவாட்டத்தில் தூவிவிட சிம்பக்கூட்டமெல்லாம் மயங்கி மூர்ச்சையாகும்; நீ முன்போல் யெழுப்பிவிடவேண்டும்.

1353. யானை கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

முன்போல் யானைக் கூட்டத்திற்சென்று பொடியை கொஞ்சமெடுத்து காத்துவாட்டகாக தூவிவிட யானைகூட்டமெல்லாம் மூர்ச்சையாய் விழுந்துவிடும்.

1354. கரடி கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

கரடிகூட்டத்தின் முன்சென்று பொடியை யெடுத்து காத்துவாட்டத்தில்நின்று தூவிவிட கரடிகூட்டமெல்லாம் மூர்ச்சையாய்விடும்.

1355. சர்ப கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

எவ்வித சர்பகூட்டங்களா யிருந்தபோதிலும் அதனருகில்சென்று ஜெகஜாலப்பொடிசெய்து காத்துவாட்டமாக தூவிவிட அந்த வாடைபட்டவுடன் சர்ப்பங்களெல்லாம் மூர்ச்சையாய்விடும்.

1356. கீரிப்பிள்ளை கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

ஜாலமாடுமிடத்தில் பத்து இருபது கீரிப்பிள்ளை கூட்டங்களை கொண்டுவந்து நிருத்தி அனைவருக்குங்காட்டி இந்த கீரிப்பிள்ளைகளை மூர்ச்சையடையும்படி செய்கிறேன் பாருங்களென்று பொடியையெடுத்து காத்துவாட்டமாக நின்று கீரிப்பிள்ளைகள்மேல்போட யாவும் மூர்ச்சையாய்விடும்.

1357. அணிப்பிள்ளை கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

முன்போல் சபையில் அணிப்பிள்ளை கூட்டங்களை நிறுத்தி பொடியைத் தெளிக்க மூர்ச்சையாகிவிடும்.

1358. மந்தி கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

குரங்கு கூட்டங்களிருக்குமிடத்தில் சென்று பொடியை எடுத்து காத்து வாட்டமாக நின்று தூவிவிட குரங்கு கூட்டமெல்லாம் மூர்ச்சையாகி விடும் அதை நீ முன்போய் எழுப்பிவிடவேண்டும்.

1359. அஸ்வ கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

ஜாலக்காரன் அஸ்வகூட்டங்களி னிடமாகச்சென்று பொடியைக் கொஞ்சமெடுத்து ஜாலக்காரன் தியானித்து காற்றுவாட்டமாக நின்று பொடியை தூவிவிட அஸ்வங்களெல்லாம் மூர்ச்சையாக விழுந்துவிடும். அதை நீ முன்போல் எழுப்பிவிடவும்.

1360. மாட்டு மந்தைகளை மயக்கும் ஜாலம்.

பசுமாடு எருது எருமைக்கிடா முதலாகிய மாடுகளைமடக்கி வைத்திருக்குமிடத்தில் சென்று பொடியை கொஞ்சமெடுத்து காத்துவாட்டமாகநின்று தூவிவிட மாடுகள்யாவும் மூர்ச்சையாகி விழுந்துவிடும், முன்போலெழுப்பிவிடவும்.

1361. ஆட்டு மந்தைகளை மயக்கும் ஜாலம்.

ஜாலக்காரன் ஆட்டுமந்தைகள் மடக்கியிருக்குமிடத்தில் சென்று பொடியைகொஞ்சமெடுத்து காத்துவாட்டமாக நின்று தெளிக்க ஆடுமாடுகளெல்லாம் மூர்ச்சையாகி விழுந்து விடும்; நீ பரிட்சை பார்த்தவுடன் முன்போல் எழுப்பவும்.

1362. கழுதை மயக்கும் ஜாலம்.

கழுதைக் கூட்டத்தினிடமாகச் சென்று பொடியை கொஞ்சமெடுத்து காத்துவாட்டமாகநின்று தெளித்துவிட கழுதை கூட்டம் யாவும் மூர்ச்சையாகிவிடும் நீ முன்போல்செய்து எழுப்பிவிடவேண்டும்.

1363. நாய்கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

நாய்க்கூட்டத்தைக் கண்டவுடன் பொடியை கொஞ்சமெடுத்து காத்துவாட்டமாக நின்றுதூவ நாய்க்கூட்டமெல்லாம் மயக்கங்கொண்டு மூர்ச்சையாகும். அப்படியானவுடனே நீ முன்போல் செய்து யெழுப்பிவிடவேண்டும்.

1364. நரிகளை மயக்கும் ஜாலம்.

நரிகள் வாழுமிடத்தில் பயமில்லாமற்சென்று தெளிக்க நரிகூட்டங்களெல்லாம் மூர்ச்சையாகி விழுந்துவிடும், முன்போல்செய்து எழுப்பிவிடவும்.

1365. மான் கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

மான் கூட்டங்கள் வாழுமிடத்தில் அச்சமில்லாமற்சென்று பொடியைக் கொஞ்சமெடுத்து காத்துவாட்டமாக நின்று தூவிவிட அங்குள்ள மான்கூட்டங்களெல்லாம் மயங்கி சுருண்டு மூர்ச்சையாய்விடும்; நீ முன்போல்செய்து உடனே எழுப்பிவிட நன்றாகும்.

1366. காட்டுப்பூனையை மயக்கும் ஜாலம்.

காட்டுப்பூனை கூட்டமாக யிருக்குமிடத்திற்சென்று பொடியை கொஞ்சமெடுத்து காத்துவாட்டமாக நின்றுவிடகாட்டுப்பூனை கூட்டம் மூர்ச்சையாய்விடும்.

1367. கருப்பூனையை மயக்கும் ஜாலம்.

கரும்பூனை வாழுமிடத்திற்சென்று பொடியையெடுத்து காத்துவாட்டமாக நின்று பொடியைவிட கரும்பூனை கூட்டங்களெல்லாம் கலங்கி மூர்ச்சையாகிவிடும் என்க.

1368. புனுகுபூனையை மயக்கும் ஜாலம்.

புனுகுபூனை வாழுமிடத்திற்சென்று அதன் கண்ணுக்குப் புலப்படாமல் பதுங்கி பொடியை எடுத்துவிட அந்த வாசனைப்பட்ட பூனையெல்லாம் மூர்ச்சையாகி விழுந்துவிடும்.

1369. கோழிகூட்டங்களை மயக்கும் ஜாலம்.

கோழிகூட்டங்களை யடைத்துவைத்திருக்கும் கூண்டினிடத்திற் சென்று பொடியையெடுத்து கூண்டினுள்போட்டுவிட்டு வந்துவிடகோழிகளெல்லாம் சுருண்டு மூர்ச்சையாய் விழுந்துவிடும், அதை நீ முன்போல் எழுப்பிக்கொள்ள வேண்டும் என்க.

1370. வான்கோழி கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

வான்கோழிகள் கூட்டமாக மேய்ந்துக்கொண்டிருக்குமிடத்தில் சென்று ஜெகஜாலப்பொடியைக் கொஞ்சமெடுத்து காத்துவாட்டமாக நின்றுவிட அந்த வாடை பட்டவுடன் வான்கோழிகளெல்லாமயங்கி சுருண்டு மூர்ச்சையாய் விழுந்துவிடும், முன்போல் எழுப்பிவிடவும்.

1371. வாத்துகளை மயக்கும் ஜாலம்.

வாத்துகள் கும்பலாக மேயும்படியான குளம் குட்டை மடு முதலான இடங்களிற்சென்று பொடியையெடுத்து தண்ணீரில் தெளிக்க வாத்துகள் மூர்ச்சையடையும். வாத்துக்காரன் அழுதுக்கொண்டு உன்னிடம் ஓடிவருவானானால் உடனே நீ முன்போல் செய்து எழுப்பிவிட வேண்டும்.

1372. புறக்கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

புறக்களை யடைத்துவைத்திருக்கும் கூண்டினிடமாகச் சென்று பொடியை யெடுத்து கூண்டிற்குள்தெளிக்க அந்த கூண்டிற்குள்ளிருக்கும் புறக்கள் யாவும் மயங்கித் தியங்கி மரணமூர்ச்சையாகி விழுந்துவிடும். அப்போது அந்த புறக்காரன் உன்னைத்தேடி வருவானாகில்முன்போல் செய்து எழுப்பிவிடவேண்டும்.

1373. புருஷக்கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

புருஷாள் கூட்டமாக குந்திக்கொண்டேனும் அல்லது நின்றுகொண்டேனு மிருக்குமிடத்தில் யாரோ ஒருவனைப்போல் சென்று

பொடியை கொஞ்சம் யெடுத்து காத்துவாட்டமாக நின்று தெளித்துவிட குந்திக் கொண்டிருந்தவர்களும் நின்றுக் கொண்டிருந்தவர்களும் திகைத்து மயங்கி ஒருவருடன் ஒருவர் பேச சக்தியுமில்லாமல் மூர்ச்சையாய் விழுந்து விடுவார்கள். அப்படியானவரின் வேடிக்கை சற்றுநேரம் பார்த்துக்கொண்டிருந்து முன்போல் செய்து எழுப்பவும். நித்திரை போனவர்போல் எழுந்து இதென்ன விபரீதமென்று எண்ணுதும்எண்ணி பலவாறாக யோசித்து நிற்பார்கள்.

1374. ஸ்திரீகூட்டங்களை மயக்கும் ஜாலம்.

ஸ்திரீகள் கூட்டமாகக்கூடி வீண்வார்த்தைகள் பேசிக்கொண்டு இருக்குமிடத்தில் நீ சென்று பொடியில் கொஞ்சமெடுத்து வாட்டமாக நின்று தூத்திவிட்டு தான் மறைந்திருக்கவேண்டும், அந்த வாடை பட்டவுடன் குந்திக்கொண்டிருந்த ஸ்திரீகள் ஒருவருடன் ஒருவர் பேசாமற்படிக்குச் சுருண்டுபூமியில்விழுந்து மூர்ச்சையடைவார்கள். உடனே நீ முன்போல்செய்து எழுப்பிவிடவேண்டும்.

1375. மயில்கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

மயில்கள் கூட்டமாக மேய்ந்துக்கொண்டிருக்கு மிடத்திற்சென்று பொடியைகொஞ்சமெடுத்து காத்துவாட்டமாக நின்று மயில்மேல் தூத்திவிட அங்கு எத்தனை மயில்கள் மேய்ந்துக்கொண்டிருந்ததோ அத்தனை மயிலும் இருந்தயிடத்தில் தானே கிறுகிறென்று சுழன்று மூர்ச்சையாய் விழுந்துபோகும்; நீ அதனை உடனே முன்போல் செய்து எழுப்ப வேண்டும்

1376. பன்றியை மயக்கும் ஜாலம்.

பன்றிகள் கூட்டமாக மேய்ந்துக்கொண்டிருக்கும் இடத்தில் இந்தப் பொடியைக் கொண்டுபோய் தூத்திவிட பன்றி கூட்டங்களெல்லாம் பதறி மூர்ச்சையடைந்து விழுந்துவிடும் முன்போல்செய்து யெழுப்பிக் கொடுக்கவும் நன்றாகும்.

1377. முள்ளம்பன்றியை மயக்கும் ஜாலம்.

முள்ளம்பன்றி வாழும்படியான காட்டிற்குச்சென்று அந்த கூட்டங்கள் எழுந்து வரும்போது மறைவாகயிருந்து பொடியை தூத்திவிட பன்றி கூட்டமெல்லாம் மூர்ச்சையாய் விழுந்துவிடும்.

1378. காலியமாடுகளை மயக்குஞ் ஜாலம்.

காலியமாடுகள் வாழும் காட்டிற்குசென்று கூட்டங்கள் வரும் போது பக்குவமாக மறைந்திருந்து அவைகள் மேய்ந்துக்கொண்டிருக்கும் சமயத்தில் பொடியெடுத்து காத்துவாட்டமாக தூத்திவிட உடனே மூர்ச்சையாய் விழுந்துவிடும்.

1379. காடைக்கூட்டங்கள் மயக்குஞ் ஜாலம்.

குருவிக்காரன் காடைகளைகூண்டி லடைத்துக்கொண்டு வந்து கடை வீதிகளில் இறக்கிவைத்திருக்கும் சமையம் பொடியை கொஞ்சமெடுத்து அவனுக்குத்தெரியாமல் கூண்டில் தூத்திவிட உடனே அந்த குருவிக்

காரனுக்குக் கூண்டிலிருந்த காடைகள் யாவும் செத்துவிட்டதுபோல் மூர்ச்சையாய்விடும் அப்போது குருவிக்காரன் அங்கம்பதரியழுது உன்னைத்தேடிவந்து காலில் விழுந்து வணங்குவானானால் நீயும் மனமிரங்கி உடனே முன்போல் செய்து எழுப்பிவிடவேண்டும்.

1380. கௌதாரி கூட்டங்களை மயக்கும் ஜாலம்.

முன்போல் ஜெகஜாலப்பொடியில் கொஞ்சமெடுத்து கௌதாரி கூண்டிற் போட அதிலுள்ள கௌதாரிகளெல்லாம் மூர்ச்சையாய் விழுந்துவிடும்; அதையும் பரிட்சித்து முன்போல் எழுப்பிவிட நன்மையாகும்.

1381. கள்ளரை மயக்கும் ஜாலம்.

கள்ளர்கள் களவு செய்யவரும்போதாகிலும் அல்லது களவுசெய்துக்கொண்டு போகும்போதாகிலும் உன்கண்ணுக்குத்தெம்படுவாராகில் உடனே நீ அவர்களுக்கு மறைவாகயிருந்து பொடியைகொஞ்சமெடுத்து காத்துவாட்டமாக நின்று தூவிவிட அந்த வாடைபட்டவுடன் கள்ளர்கள் விழுந்து கிடப்பார்கள். அப்போது நீ அச்சமில்லாமல்அவர்களிடஞ்சென்று அவர்களை சோதனைபோட்டு களவு செய்துக்கொண்டு வந்த நகை ரூபா முதலானதுகளையும் நீ எடுத்துக்கொண்டு முன்போல் நீ மறப்பாயிருந்து எழுப்பிவிட அப்போதவர்கள் திகைப்பூண்டை மிதித்தவர்போல் திகைத்து எழுந்து ஒருவருடனுஞ்சொல்லாது ஓடுவார்கள்.

1382. படையை வெல்லும் ஜாலம்.

படையெடுத்து யுத்தத்துக்கு வரும்போது நீ ஒரு புறமாகயிருந்துக் கொண்டு பொடியை கொஞ்சமெடுத்து காத்துவாம்டமாக நின்று தூவிவிட உடனே அப்படைகள் ஓட்டிற்கும் சுருண்டு பூமியில் விழுந்து மயங்கிக்கிடக்கும்; பின்வரும் படைகளும் இந்த சம்பவத்தை தெரிந்து வந்த வழியே ஓட்டம்பிடிக்கும். பின்பு மயங்கி வீழ்ந்துகிடக்கும் படையை எழுப்பிவிட இவர்களும் வந்தவழியே ஓடுவார்.

1383. சத்துருவை ஜெயிக்கும் ஜாலம்.

தனக்கு சத்துருவாகயிருப்பவனை ஜெயிக்கும்விதம் எவ்விதமெனில் அவன் தனித்துவரும்போது பார்த்துக்கொண்டிருந்து அவன்மீது ஜெகஜால பொடியை தூவிவிட அவன்மயங்கி விழுந்துவிடுவான். அப்போதவனைச் சேர்ந்த பந்துமித்திரர்கள்வந்து உன்னை வணங்கி எழுப்பும்படி கேட்பாராகில் நீயும் மனப்பூர்வமாய் உடனே முன்போல்செய்து எழுப்பிவிட சத்துருவானவன் எழுந்து உன்காலில் வந்து விழுவான்.

1384. எதிரியை மடக்கும் ஜாலம்

தனக்கு எதிரிகளை மடக்கவேண்டில் அவருடைய அரண்மனை வாயிற்சென்று ஒருவர்க்குத்தெரியாமல் பொடியைகொஞ்சமெடுத்து அங்கு தெளித்துவிட்டு வந்துவிட அதுகாத்துக்கு எழும்பி அந்தவாடை வீச அந்தமனையிலுள்ள யாவரும் மூர்ச்சையாவார்கள். அவரை நீயேபோய் எழுப்பவேண்டுமெல்லது வேறொருவராலாகாது; ஆதலால் அவசியம்போயெழுப்பாவிடில் பாபத்திற் காளாவாயென மேலோர் கூறுகின்றனர்.

1385. உலர்ந்தகருவாடு ஜலத்தில்மேயும் ஜாலம்.

சிறிய கருவாடாயினும் பெரியகருடாயினும் அதில் எத்தனைவேண்டுமோ அத்தனை எடுத்து அனைவர்க்குங்காட்டி இதோ இந்த கருவாடுகளை தண்ணீரில் போடுகிறேன் அது உயிருண்டாகி மேயும் விநோதத்தைப் பாருங்களென்று ஒருவர்க்குந் தெரியாமல் எரண்ட சுன்னத்தை கொஞ்சம் தண்ணீரில்விட உயிருள்ள மீன்போல் உலாவி மேயும், அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

1386. உலர்ந்த யிராவிற்கு உயிருண்டாகும் ஜாலம்.

தேவையான காய்ந்த இராவையெடுத்து முன்போல் அனைவர்க்குங் காட்டி இந்த உலர்ந்தயிராக்கள் தண்ணீரில் உயிருடன் உலாவும் உன்னதத்தைப் பாருங்களென்று முன்போல் சுன்னத்தை தண்ணீரில் விட்டு எருவைப்போட உடனே உயிருள்ளதுபோல் விளையாடும்,பார்த்தவர்கள் எல்லாம் பிரமிப்பார்கள்.

1387. உலர்ந்த சென்றாகுன்னி தண்ணீரில் மேயும் ஜாலம்.

ஒரு மரத்தொட்டியிலாவது இன்னம் எந்த ஏனங்களிலாவது ஜலம் விட்டு அந்த ஜலத்தில் எரண்டசன்னம் கொஞ்சம்போட்டு உடனே சென்றாகுன்னியை போட உயிருண்டாகிமேயும், அனைவரும் ஆச்சரியப் படுவார்கள்.

1388. நோட்டு அடிக்கும் ஜாலம்.

வெத்துக்கடுதாசியை நோட்டின அளவாகத் தரித்து யந்திரத்திலுள்ள இரண்டு உருளைகளின் நடுவிற்கோர்த்து டையெந்திரத்தின்கைப் பிடித்து சுழற்றினால் 100 1000 ரூபா நோட்டுகள் யந்திரத்தின் மறுபுறத்தில் வெளிப்படும். வெத்துக்கடுதாசியை சபையோர்களுக்குக் காட்டி பிறகு யெந்திரத்தினின்று நாணயநோட்டுகளை அவர்களுக்கு யெடுத்துக்காட்டுவாயாகில் ஆச்சரியப்படுவார்கள்.

1389. சூட்சுமம்.

இதன் ரகசியத்தை அடியில் விவரிக்கின்றோம். இந்த யந்திரத்தில் அமைத்திருக்கிறபடி மேலே ஒரு உருளை கீழே ஒரு உருளை இணைத்திருக்கின்றது இதிலுள்ள கைப்பிடியால் இதை சுழற்றி முன்பக்கத்தில் ஒரு கடுதாசியை கொடுத்தால் அதைப்பிரஸ்பண்ணி மறுபக்கத்தில் தள்ளிவிடும்; பஞ்சு அரைக்கின்ற மனையை நம்நேயர்களிற் சிலர் பார்த்திருக்கக்கூடும். அதைப்போலவே இந்த யந்திரத்தையும் பாவித்துக் கொள்ளலாம் இந்த உருளைகளின் நீளத்தில் அகலமாயுள்ள ஒரு கருப்புத் துணியை அதிக நீளமாகயெடுத்துமேல் உருளையில் அதிகமாகவும் கீழ உருளையில் அதிகமாகவும் அடியிற்சொல்லியபடி சுற்றிவிடவேண்டும் மேல் உருளையில் கருப்புத்துணி 100 ரூபா 1000 ரூபா நோட்டுகளாகத் தேவையுள்ள வரையில் ஒவ்வொன்றாய் அதிற்கொடுத்து யந்திரத்திற் காட்டியபடி மேலுருளையைச் சுற்றி பின்பக்கம் போகும்படியாகவும் கீழ் உருளையைச்சுற்றி முன்பக்கம் வரும்படியாகவும் சுற்றிவிட வேண்டும். அதன்பின் கைபிடியை சுழற்றும்போது மேலேயிருக்கிற உருளையிலுள்ள கருந்துணி பின்பக்கமாய் பிரிந்துக்கொண்டேபோகும். பிரிந்த துணி

கீழேயிருக்கிற உருளையில் முன்பக்கமாய்ச் சுற்றிக்கொண்டேவரும்; அப்போது நாம் முன்பக்கத்திற் கொடுத்திருக்கிற காகிதம் கீழுருளையிலுள்ள துணியிற் சுற்றிக்கொண்டே உள்ளேபோய்விடும் மேலுருளையிலுள்ள துணி பின்பக்கமாக பிரிந்துக்கொண்டே வருகின்றபடி யந்திரத்தில் ஒளித்துவைத்திருக்கிற நோட்டுத்தாள்கள் பின்பக்கத்தில்போய் விழுந்துவிடும்; மேலுருளையில் எத்தனை நோட்டுகள் ஒளித்துவைத்திருக்கிறதோ அத்தனை தான்தாள் யந்திரத்தின் முன்பக்கத்தில் கொடுக்க வேண்டும்.

1390. சீட்டுசுழலும் ஜாலம்.

தாளிபனையோலையில் ஏதேனுமொன்றை யாவர்க்குங்காட்டி ஜலத்தில் எரண்டகன்னத்தை கொஞ்சம்போட சீட்டானது இருகிறொன்று சக்கரம்போல் சுழலும் ஆச்சரியப்படுவார்கள்.

1391. மாயாமறைவு வித்தை.

ஜாலக்காரன் ஜாலமாடும் சபையில் வந்து நின்று கூற்றுநேரம் பொருத்து சபையில் நின்றபடி மறைவுமையை திலர்தமிட்டுக்கொள்ள மாயமாய் மறைந்து விடுவான். உடனே ஜாலக்காரன் நெற்றியிலுள்ள மையைத் துடைத்துவிட முன்னிருந்த விடத்திலேயே நின்றிருப்பான்.

1392. வீரக்கட்டுசெய்யும் வித்தை.

வேண்டியமட்டும் வீரத்தைக்கொண்டுவந்து சாம்பிராணி விராகனிடை 1, நெல்லிக்காய் கெந்தகம் விராகனிடை 1, இரண்டையும் தூள் செய்து கரண்டியிலிட்டு அனலில்பிடிக்க உருகிவரும் சமயத்தில் வீரத்தைப்போட்டு புரட்டி எடுத்துக்கொள்ளவும், இதை ஜன்னி வாய்வுகளுக்கு உபயோகப்படுத்தலாம்.

1393. மாயமோகினி காட்டும் வித்தை.

இரவில் ஜாலமாடுங்காலத்தில் ஜாலக்காரன் சபையோர்களைப் பார்த்து இதோ மாயமோகினியைக் காட்டும் விநோதத்தைப்பாருங்களென்று பச்சை மஞ்சள் கிழங்கின்மேல் ஐங்கோலக்கருவைத்தடவி பத்திரகாளி மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து மஞ்சள்கிழங்கை பூமியின்மேல்போட மாயமோகினி உருவந்தோற்றும்.

1394. லிங்கக்கட்டு கட்டும் வித்தை.

ஜாதிலிங்கம் 5 விராகனிடை கொண்டுவந்து முலைப்பாலில் ஒரு ஜாமம் சுருக்கொடுத்து எலுமிச்சப்பழரசத்தில் ஒருஜாமம் சுருக்குக் கொடுத்து எரித்துப் பார்க்கட்டும்; அதையெடுத்து வைத்துக்கொண்டு ஜன்னிசுரம் தலைவலி இவைகளுக்கு முலைப்பாலில் உறைத்துக் கொடுக்க வேண்டும்; சீதளம் ஐலுப்பு இவைகளுக்கு முலைப்பாலில் உரைத்துக் கொடுக்கவேண்டும் அரைபுளிப்பு சேர்க்கவும்.

1395. பாதிமனுஷியை காட்டும் வித்தை.

ஒரு அறையைச் சுத்தப்படுத்தி அந்த அறையின் சுவற்றில் தில்லைப் பூராலும் திமிர்பாஷாணத்தையுங் கலந்து பாதிமனுஷியாகத் தோற்றும்

படி எழுதி அந்த அறையைத்தாள்போட்டு வைத்திருக்கவேண்டும், ராத்திரிகாலமானவுடன் ஜாலக்காரன் வேடிக்கைப் பார்க்கவந்தோர்களை அழைத்துக்கொண்டு அந்தஅறையருகில்சென்று கதவைத்திறந்துகாட்ட பாதிமனுஷி பிரகாசமாகத் தோற்றுவாள் பார்த்துஆச்சரியப்படுவார்கள் அப்போது நீ மலையாளபகவதியை நினைத்து துதிப்பவன்போற் கொஞ்சங் கற்பூரத்தைக் கொளுத்திவைக்க பாதிமனுஷி மறைந்துபோகும் கற்பூரம் அவியாமுன்னே அறையைவிட்டு அனைவரையும் வெளியே போகச்சொல்லி கதவைச்சாற்றிவிடவேண்டும்.

1396. பூபதிமாத்திரை செய்யும் ஜாலம்.

நாபி சுக்கு சூதம் திப்பிலி தாரம் மிளகு செந்தி காயமிவைகளைச் சமனிடையாகச்சேர்த்து சித்ரகூலக்கியாழத்தில் 7-நாளரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரைசெய்து தேன் அல்லது இஞ்சசுரசத்தில் சாப்பிட ஜன்னி சுரதோஷம் வாதம்வாய்வு குன்மம்நாவரட்சி க்ஷயகாசமேகம் இவைதீரும். இச்சாபத்தியம்.

1397. ஜீவசஞ்சீவிக்குளிகை செய்யும் வித்தை.

சுக்கு திப்பிலி கடுக்காய் தான்றிக்காய் வசம்பு சித்ரமூலம் வேர் பட்டை சீந்திற்கிழங்கு சேராங்கொட்டை வாய்விளங்கம் நாபி இவைகளை சமனிடையாக நிறுத்தி கல்வத்திலிட்டுகோசலம்விட்டு அரைத்து குண்டுமணிப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலில் உலர்த்தி புட்டியில் போட்டு வைத்துக்கொள்ளவும். இதற்கு அனுபானம் அஜீரணத்திற்கு 1-மாத்திரை வாந்திபேதிக்கு 2-மாத்திரை பாம்பின்விஷத்திற்கு 5-மாத்திரை சன்னிவாதத்திற்கு 4-மாத்திரையாக தேகதிடமறிந்து இஞ்சிசுரத்தில் கொடுக்கவேண்டும்.

1398. மகா யோகக்குளிகை செய்யும் வித்தை.

தங்கரேக்கு விராகனிடை 1 கஸ்தூரி விராகனிடை 1 கோரோசனை விராகனிடை எழுரை பச்சைகற்பூரம் விராகனிடை குங்குப்பூ விராகனிடை 5 மயில்ரோஜனம் விராகனிடை 1 படிகாரச்சுன்னம் விராகனிடை அரை இவைகளை ஈசுரமூலிரசத்தாலரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும். இரவில்புளிப்பு நீக்கி போஜனம் செய்தபிறகு 1-மாத்திரை சாப்பிட்டு 6-பலம் பசும்பால் சாப்பிடவும் போகத்திற்கு முயலுங்கால் மிகவுல்லாசமும் மனக்களிப்புந் தருவதோடு சகல சீதள சுரசன்னிகளும் தீரும்.

1399. சகல சுரத்திற்கும் குளிகைசெய்யும் வித்தை.

ஆடுதின்னாப்பாளைவேரை நிழலிலுலர்த்தி கருவாய்ப்பட்டை சமன் கூட்டி பொடித்து வஸ்திரகாயஞ்செய்து எலுமிச்சம்பழரசத்தாலாட்டி பருத்திக்கொட்டை பிரமாணம் மாத்திரைசெய்து இஞ்சிசுரசம் தேன் இவைகளில்கொடுக்க சகல சுரமும் நீங்கி தேகதிடமுண்டாகி தெளிவு தரும். இச்சாபத்தியம்.

1400. கோழிமுட்டையை முழுங்கும் வித்தை.

ஜாலமாடுமிடத்தில் ஜாலக்காரன் நூறு கோழிமுட்டையைகொண்டுவந்து வேடிக்கைப் பார்க்கவந்த வெகு ஜெனங்களுக்குக் காட்டி இந்த நூறு முட்டையும் விழுங்கிவிடுகிறேன் பாருங்களென்று கண்கட்டுமையையெடுத்து இலர்த்து யிட்டுக்கொண்டு மறைவுமையை இரண்டுகையிலும் பூசிக்கொண்டு ஒவ்வொரு முட்டையாகவெடுத்து முழுங்குவதுபோல் பின்பக்கமாக விட்டு மறைத்து விடவேண்டும்; பார்ப்போர்கண்களுக்கு முழுங்குவதுபோல் தோற்றும் ஆச்சரியப்படுவார்கள்.

1401. பேய்களை சண்டைவிடும் ஜாலம்.

பேய்பிடித்தவராயினும் அல்லது சாதாரணமாக யிருப்போராயினும் நாலு ஐந்து ஸ்திரீகளையாவது புருஷர்களையாவது கொண்டுவந்து நிறுத்தி அனைவர்க்கு முன்பாக தந்திரமாகஜெகஜாலப்பொடியும் எரண்ட சுன்னத்தையுங்கலந்து அவர்கள் மீதுபோட ஒருவர்க்கொருவர் பிடித்து இழுத்து கடித்துக்கொண்டு பேய் போலாடுவார்கள்; ஆனால் சுத்த சலத்தை அவர்கள்மீது தெளிக்க ஆட்டம் நிற்கும்.

1402. கண்கட்டு ஜாலம்.

சிறியதேங்காய்ப் பிரமாணமுள்ள ஒரு இரும்புகுண்டை முழுங்குகிறேன் பாருங்களென்று கண்கட்டுமையை இடதுகையில் பூசிக்கொண்டு அனைவருக்குமுன்பாக வலதுகையில் குண்டையெடுத்து வாயினிடமாகக் கொண்டுபோக பார்ப்போர்க்கு முழுங்குவதுபோலிருக்கும். உடனே இடது கையில்வாங்கிப் பின்னால்போட்டு மறைத்துவிடவும் ஒருவர்க்குந் தெரியாது.

1403. அக்கினிச்சூரணம் செய்யும் ஜாலம்.

கொடிவேலிவேர் திரிகடுகு ஓமம் சிறுதேக்கு ஆனைதிப்பிலி கோஷ்டம் இந்துப்பு வகைக்கு பலம்-1 காயம் வசம்பு கட்டைகரி வகைக்கு பலம் கால் கடுகு பலம் அரை ஓர் நிரையாய் சூரணித்து அதற்கு நிகர் சினிகலந்து திரிகடுகைப்பிரமாணம் வெந்நீரில் கொள்ள அஜீரணம் மந்தம் பொருமல்கிராணி இவைநீங்கும்.

1404. சதையடைப்புக்கு மருந்துசெய்யும் ஜாலம்.

முற்றினகோழியின் குடலிலிருக்கும் சிறுகல்லும் வெள்ளரிவிதையும் பூநாகமும் வெல்லமும் வகைக்கு ஒருகொட்டைப்பாக்களவு எடுத்து அரைத்து ஆவின் பாலில் கலக்கிக்கொடுக்கத் தீரும், ஆனாலிப்படி ஆறு நாள் கொடுக்கவேண்டும்.

1405. பாலசெந்தூரம் செய்யும் ஜாலம்.

சிறியகுடுவையில் கால்பலம் நெல்லிக்காய் கெந்தியை ஒருபலம் வர்லோரசத்திற்கு கீழ்மேலுமிட்டு ஓடுமூடி சீலைசெய்து மூன்று எருவில் புடமிட்டு எடுக்கவும்; அரிசியிடைட்தேனில் இழைத்துக்கொடுக்க வாய்வு அகலும் சுகந்தரும்.

1406. ஒற்றை விரைவாதத்திற்கு மெழுகுசெய்யும் ஜாலம்.

லிங்கம் விராகனிடை ஒண்ணேகால் மிளகு பலம் ஒண்ணு பூரம் களஞ்சி ஒண்ணு இவைமூன்றையும் தேன்விட்டு ஒருஜாம மறைத்து மெழுகு பதத்தில் வழித்துவைத்துக்கொள்ளவும் தூதுளங்காய்பிரமாணம் இருவேளை சாப்பிடவும் தீரும், ஆனால் வாய்வுபதார்த்தமாகாது இச்சாபத்தியம்.

1407. இருமல் நிவாரணலேகியம்.

மிளகு 1-பலம் பசு வெண்ணெய் 1-பலம் சீனி கற்கண்டு 1-பலம் இவைகளில் மிளகை சூரணித்து ஒரு சட்டியை அடுப்பில்வைத்து நெய் யூற்றி உருகினவுடன் மிளகு சூரணம்போட்டு கற்கண்டுபோட்டு சிவந்துவரும் அளவுகிளரி லேகியமாக்கி வைத்துக்கொண்டு கழற்சிக்காயளவு சாப்பிட இரும்பல் நீங்கும்.

1408. கீழாநெல்லிதைல ஜாலம்.

சமூலம் கீழாநெல்லி கொண்டுவந்து இடித்து $\frac{1}{2}$-படி சார்பிழிந்து $\frac{1}{2}$-படி நல்லெண்ணைவிட்டு சித்தாமுட்டி அதிமதுரம் சந்தனம் வகைக்கு 2-பலம் அரைத்துப்போட்டு பதமாய்க்காய்ச்சி தலைமுழுகிவர பித்தம் கைகாலெரிவு வெள்ளோக்காளம் வாயூறல் நீர்சுருக்கு இவை முதலானதும் பறந்தோடும்.

1409. கழுத்துவலி நிவாரண தைல ஜாலம்.

பேய்த்தும்மட்டிக்காய் ஒன்றை சிறுபில்லைகளாக அறிந்து நல்லெண்ணை 5-பலத்திற்போட்டு கிச்சிலிக்கிழங்கு கஸ்தூரிமஞ்சள் இவை யிரண்டும் துட்டெடை கஸ்தூரி ஒரு விராகனிடை இவை மூன்றும் பொடித்து எண்ணெயிற் போட்டுக்காய்ச்சி தலைமுழுகி வரவும் கழுத்திசுப்பு கலங்கியோடிவிடும்.

1410. வயிற்றுவலிக்கு கியாழமிடும் ஜாலம்.

வெப்பாலரிசி 4 பலம் சீரகம் 4-பலம் செசப்பு நெருஞ்சிவேர் $\frac{1}{2}$-பலம் இம்மூன்று மருந்தும் ஒன்றாய்ச்சேர்த்து இடித்து மூன்று நாளைக்கு இருவேளையும் கிழாயம்வைத்துச் சாப்பிட பித்தவாய்வினால் கண்ட வயிற்றுநோய் தீரும் வயிற்றிலுள்ள கிருமிகள் முதலான பூச்சிகளும் மடிந்து வயிற்று சுத்தமாகும்.

1411. பந்துவசிய ஜாலம்.

செங்கழுநீர்செடிக்கு ஆதிவாரத்தில் காப்புகட்டி தூபதீபங்காட்டி வேரைப் பிடுங்கிவந்து தங்கத்தகட்டில் குளிசஞ்செய்து அதில் வேரைப் போட்டு பூசையில்வைத்து நீலகண்டர் மந்திரத்தை 1008-செபித்து குளிசத்தை எடுத்து கையிலாவது இடுப்பிலாவது கட்டிக்கொண்டு பந்துக்கள் வீட்டுக்குப்போக விரோதமா யிருந்தபோதிலும் உன்னை வணங்கி வசியமாவார்கள்.

1412. சமுத்திர கன்னியை அழைக்கும் ஜாலம்.

இரவில் தனக்கு இஷ்டமான சனங்களையும் சிநேகிதர்களையும் அழைத்து சென்று இதோசமுத்திரக் கன்னியை அழைப்பிக்கின்றேன்

பாருங்களென்று சொல்லி சித்ரவிலையாடும் சிட்காமையையும் ஐங்கோலக்கருவையும் கலந்து ஒரு எலுமிச்சம்பழத்தில் தடவி மாயாசத்தி மந்திரத்தை 1008 செபித்து பழத்தை கடலில்விட்டெறிந்து சமுத்திர கன்னிகை தோற்றமாக வேண்டுமென்று ஜாலக்காரன் தியானிக்க உடனே தோற்றமாவாள்.

1413. வஜிகர ஜாலம்.

அஷ்டமாசித்து மையும் ஜெகஜாலக்கருவும் இந்திரஜாலமையும் சிட்காமையும் ஐங்கோலக்கருவும் இவைகளைக் கலந்து வைத்துக் கொண்டு வெளியே புறப்படும்போது திலர்தமிட்டுக் கொண்டுபோக சகலமும் வசீகரமாகும் நினைத்தகாரிய மெல்லாமுடியும்.

1414. கையிலிருக்கும் எலுமிச்சம்பழம் மாயமாகும் ஜாலம்.

இந்திர ஜாலக்கருவை விரலில்தொட்டு எலுமிச்சம்பழத்தின் மேல் தடவி குரளிமந்திரத்தைத் தியானித்து மறைவுமையை கையில் பூசிக் கொள்ள பழம் கையி லிருந்தபோதிலும் எதிரிகண்களுக்குத் தோற்றாது; மாயமாய் போய்விட்டதென்று மதிப்பார்கள்.

1415. கையிலிருக்கும் முட்டை மாயமாகும் ஜாலம்.

முன்போலவே முட்டையை சபையோர் களுக்குக்காட்டி இது மாய மாய்ப்போகும் விநோதத்தைப் பாருங்களென்று முன் கூறியபடி செய்ய முட்டையும் மாயமாய்ப்போவிட்டதென்று மதிமயங்கிநிற்பார்கள்.

1416. கையிலிருக்கும் மோதிரம் மாயமாய்ப் போகும் ஜாலம்.

மோதிரத்தை அனைவர்க்குங்காட்டி கருவைப்பூசி குரளியைத் தியானித்து மறைவுமையை கையிற்பூசிக்கொள்ள மோதிரமிருப்பது தெரியாது. மாயமாய் போய்விட்டதென்று மதிமயங்கி நிற்பார்கள்.

1417. கையில்வைத்த சவரம் மாயமாகும் ஜாலம்.

சவரன் ஒன்றையெடுத்து இது மாயமாய்ப்போகும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் கருமுதலானதும் பூசி குரளியைத் தியானிக்கப் பார்ப்போருக்கு மாயமாய்விட்டது போலிருக்கும்.

1418. கையிலிருக்கும் ரூபாய் மாயமாகுஞ் ஜாலம்.

ஒரு ரூபாயெடுத்து அனைவர்க்குங்காட்டி இந்த ரூபாய் கையிலிருந்து மாய மாய்ப்போகும் மகிமையை பாருங்களென்று முன்போலவே கருவைப்பூசி கையைக்காட்ட ஆச்சரியப்படுவார்கள், ஆனால் குறளி மந்திரத்தை தியானித்துக்கொண்டே யிருக்கவேண்டும்.

1419. கைகுட்டை மாயமாகும் ஜாலம்

ஒரு சிறிய கைக்குட்டையை ஜாலக்காரன் அனைவர்க்குங்காட்டி இதோ இந்த கைகுட்டை மாயமாய்ப்போகும் விநோதத்தைப் பாருங்களென்று மறைவுமையை கையில்தடவி குறளி மந்திரத்தை தியானித்துக் கொண்டே செபிக்க மாயமாகும்.

1420. கைசெடியாரம் மாயமாகும் ஜாலம்.

ஜாலக்காரன் ஜாலமாடும் சபையில் ஒரு கெடியாரத்தை யெடுத்து அனைவர்களுக்குங்காட்டி இதோ இந்த கெடியாரம் மாயமாய்ப்போகும் விநோதத்தை பாருங்களென்று முன்போல் கருவைப் பூசிக்கொண்டு குறளி மந்திரத்தை செபிக்க மாயமாய்ப்போகும்.

1421. ஆடுங்கடுதாசி மாயமாகும் ஜாலம்.

முன்போலவே ஜாலக்காரன் ஆட்டக்கடுதாசி பாக்கி ஒன்றை கையிலெடுத்து இந்த கடுதாசி மாயமாப்போகும் வேடிக்கைப் பாருங்களென்று முன்போல் கருவைத்தடவி குறளிமந்திரத்தை ஜெபிக்க மாயமாகும்.

1422. மரக்கிளி மாயமாகும் ஜாலம்.

ஜாலக்காரன் மரத்தினால் செய்த ஒரு கிளியை யெடுத்து யாவருக்குங் காட்டி இதோ இந்த மரக்கிளி மாயமாய்ப்போகும் மகிமையை பாருங்களென்று முன்போல் கருவைத்தடவி குறளிமந்திரத்தை ஜெபிக்க மாய மாகும்; மயங்குவார்கள்.

1423. மரப்புறா மாயமாகும் ஜாலம்.

ஜாலக்காரன் [illegible]லவே சபையில்வந்து மரத்தினால் செய்த புறாவொன்றை யெடுத்து யாவருக்குங்காட்டி இதோ இந்த புறா மாயமாகப் போகும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபிக்க மாயமாய்ப்போகும்.

1424. கண்ணாடி மாயமாகும் ஜாலம்

ஒரு கண்ணாடியை யெடுத்து வேடிக்கைப்பார்க்க வந்திருக்கும் வெகு ஜனங்களுக்குக்காட்டி இதோ இந்த மகத்துவத்தைப் பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளி மந்திரத்தை ஜெபிக்க மாயமாகும்.

1425. தாம்பூலம் மாயமாகும் ஜாலம்.

கையிலிருக்கும் தாம்பூலத்தை ஜனங்களுக்குக்காட்டி இந்தவேடிக்கையை பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளி மந்திரத்தை ஜெபிக்க மாயமாகும்; மயங்குவார்கள்.

1426. பொடிடப்பி மாயமாகும் ஜாலம்.

ஜாலக்காரன் பொடிடப்பியை கையில்வைத்து கெட்டியாய் பிடித்துக்கொள்ளுகிறேன், அது மாயமாக மறைந்துபோகும் மகிமையைப் பாருங்களென்று முன்போல் கருவைத்தடவி குறளி மந்திரத்தை ஜெபிக்க மாயமாகும்;

1427. மரப்பொம்மை மாயமாகும் ஜாலம்.

ஜாலக்காரன் மரத்தினால் செய்த பொம்மை யொன்றை யெடுத்து வேடிக்கைப் பார்க்கும் வெகு ஜனங்களுக்குக்காட்டி இதோ இந்த மரப் பொம்மை மாயமாய்ப்போகும் விநோதத்தைப் பாருங்களென்று முன் போல் கருவைப்பூசி குரளிமந்திரத்தை ஜெபிக்க மாயமாகும்.

1228. அத்தர்புட்டி மாயமாகும் ஜாலம்.

முன்போல் ஜாலக்காரன் சபையில் நின்று ஒரு அத்தர் புட்டியை எடுத்து யாவருக்குங்காட்டி இதோ இந்த புட்டியை கையில் பிடித்துக் கொள்ளுகிறேன் இதுமாயமாகப்போகும் மகிமையைப்பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளி மந்திரத்தை செபிக்க மாயமாகும்.

1429. பன்னீர்புட்டி மாயமாகும் ஜாலம்.

ஜாலக்காரர் பன்னீர்புட்டி ஒன்றையெடுத்து ஜனங்களுக்குக்காட்டி இதோ இந்த புட்டியைக்கையில் பிடித்துக்கொண்டிருக்க இதுமாயமாய் மறைந்துபோகும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளி மந்திரத்தைச் செபிக்க மறைந்துபோகும்.

1430. தட்டு சோம்பு சந்தனகிண்ணம் மாயமாகும் ஜாலம்.

ஜாலக்காரன் தட்டு பன்னீர்சொம்பு சந்தனகிண்ணம் இவைகளை எடுத்து ஜனங்களுக்குக்காட்டி இதோ இந்த மூன்று சாமானும் மாயமாகும் வேடிக்கைப் பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளி மந்திரத்தைச்செபிக்க அவைமாயமாய்ப்போகும்.

1431 வெள்ளிதடி மாயமாகும் வித்தை.

ஜாலசபையில் நின்று ஒரு தடியைக் கையிலேபிடித்து இதோ இந்த தடி கையில்பிடித்தபடியே மாயமாகப்போகும் மந்திரவலியைப் பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளியை நினைக்க மாயமாய் மறைந்ததுபோல் தோற்றும்.

1432. மரவிநாயகர் மாயமாகும் வித்தை.

மரத்தினால்செய்த ஒரு விநாயகரைக் கையிலெடுத்து அனைவர்க்குங் காட்டி இதோ இந்த விநாயகர் மாயமாகும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளியை நினைக்க மாயமாகும்.

1433. வீரசுத்தி வித்தை.

ஒரு இளநீரில் ஒன்னேகால் வீராகனிடை கற்பூரம்போட்டுகலக்கி சட்டியில் ஊற்றி அடுப்பேற்றி வீரத்தை துலாந்திரமாகக்கட்டி எரித்து எடுத்துக்கொள்ள சுத்தியாகும்.

1434. இரும்புசுத்தி வித்தை.

இரும்புபொடியை பழரசத்தில் ஒருநாள் ஊறவைத்தெடுத்து மறுநாள் எள்ளெண்ணெயில் ஊறவைத்தெடுத்து அயச்சட்டியில்போட்டு வறுத்துக் காடியில் கழுவி வேப்பட்டை கியாழத்தில் கொதிப்பிட்டு மறுபடி காடியில் கழுவி எடுக்கவும்.

1435. இராஜ அமுர்தாதிச்சூரணம் செய்யும் வித்தை.

ஏலம், லவங்கம், அதிமதுரம், சதகுப்பை, மகரப்பூ, குரோசாணி ஓமம், வால்மிளகு, திப்பிலிமூலம், சித்தரத்தை இவைகள் ஒரு நிறையாய் நிறுத்தெடுத்து சூரணஞ்செய்து அதற்குரிய சீனிகூட்டி திருகடிக பிரமாணம் சாப்பிட்டுவர கைகால் குச்சல், உள்ளுருக்கி, எலும்புருக்கி,

பிரமியம், கரப்பான் சூலவாதம், பித்தம், உஷ்ணவாய்வு முதலான சகல வாய்வுந் தீர்ந்து தீரமுண்டாகும்.

1436. கனஜால விநோதம்.

ஜாலமாடுமிடத்தில் தங்களிலொருவனை யழைத்துசபையில் நிறுத்தி பிறகு வரட்டி கட்டை கொண்டுவந்து தகனஞ்செய்ய அடுக்குவதுபோல் அடுக்கி அனைவரும்பார்க்க மனுஷனை அதின்மேல் படுக்கவைத்து மூடி வேடிக்கைபார்க்கும் ஜெனங்களைப்பார்த்து இதோ இவனை தகனஞ் செய்து விடுகிறேன். இவன் மறுபடியும் எழுந்துவரும் வேடிக்கைப் பாருங்களென்று மறைவுமையை அதின்மேல்தெளித்து சித்துவிளையாடும் சிட்காமையை விரலில்தொட்டு கண்டபேரண்ட மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபிக்க இந்தசவம் எறிவதுபோல்தோற்றும்; யாவரும் பதருவார்கள். தீ நீயை அடக்கி எரிந்துப்போனவனை எழுப்புகிறேன் பாருங்களென்று ஐங்கோலக்கருவை தெளிக்க தீயானது அமர்ந்து அவனும் எழுந்து வருவான், எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

1437. அந்தரத்தில் தலைநிற்கும் வித்தை.

மரத்தினாலாவது மண்ணாலாவது மனுஷர் தலைபோல்செய்து அதற்குத் தக்கபடி வர்ணங்கள் கொடுத்து ஜாலமாடுமிடத்தில் கொண்டுவந்து ஜெனங்களுக்கு காட்டி மேஜையின்மேல்வைத்து இதோ இந்த தலை அந்தரமாக எழும்பி நிற்கும் அற்புதத்தைப் பாருங்களென்று அஷ்டமாசித்திமையை அந்த தலையின்மேல் தெளித்து வேதாள மந்திரத்தை உச்சாடனஞ்செய்ய தலையானது மேலுக்கெழும்பி அந்தரமாகநிற்பதுபோல் பார்ப்போர்களினகளுக்குத்தோற்றும். ஆனால் மையைத் துடைத்து நிந்தித்தை நிறுத்திவிட மேஜைமேல் இருப்பதுபோல் தோற்றும்.

1438. பொன்னிமிளை வித்தை.

பொன்னிமிளையை மூன்றுநாள் காடியில் ஊறியபின் கிருஷ்ணஅபிரேக்கு அள் ஒருபடியெடுத்து மூன்றுபடி கோமியத்தில் வேகவைத்து எடுத்து உலர்த்தி நெல்லுசேர்த்து இளிகட்டி காடியில்தோய்த்து இரங்குந்தெளிவை நீங்கி உலர்த்திக்கொள்ள சுத்தியாம்.

1439. கௌரி சுத்தி வித்தை.

வெள்ளைகௌரியைக் கொண்டுவந்து பசும்பால் அல்லது சாணிப்பால் சுண்ணும் நீர் மிளகு கியாழமெதிலாவது தொலாந்திரமாகஅவித்து எடுக்கவும்.

1440. கண்ஞெளி கலிக்கம் செய்யும் வித்தை.

பெருங்காயம் திப்பிலி மிளகு வெள்ளுள்ளி கிராம்பு இவைகளை சமனிடையாய் நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாறு குப்பைமேனிச்சாறு வெள்ளைச் சாரணைச்சாறு இவைகளைவிட்டு ஒருஜாமம் அரைத்து வழித்து மாத்திரைகள்செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு முலைப்பாலில் உரைத்துக் கண்ணுக்குப்போடவும்;ஜன்னிமுதலானதும் நீங்கும்.

1441. கையிலிருக்கும் மாம்பழம் மாயமாகும் ஜாலம்.

மாம்பழமொன்றை யெடுத்து ஜனங்களுக்குக் காட்டி இதோ இந்த பழத்தைக் கையில் இருந்தபடியே மாயமாகப் போகும் வேடிக்கையைப் பாருங்களென்று மறைவுமையைக் கையில் தடவிக் குறளிமந்திரத்தை செபிக்க பழம் மாயமாய் மறைந்ததுபோல் பார்ப்போர்களுக்கு தோற்றும், ஆச்சரியப்படுவர்.

1442. கையிலிருக்கும் மாதுளம்பழம் மாயமாகும் ஜாலம்.

முன்போலவே மாதுளம்பழமொன்றை யெடுத்து சபையோர்க்குக் காட்டி கையிலிருக்கும் இந்தப்பழம் மாயமாகப்போகும் மகிமையைப் பாருங்களென்று முன்போல் மையைப்பூசி குறளிமந்திரத்தை செபிக்க மாயமாய்த் தோற்றும்.

1443. 64 பாஷாணத்திற்கும் ஏகசுத்தி வித்தை.

குப்பைமேனிரசம், தக்காளிரசம், ஊமத்தன்ரசம், பழரசம், சிறுநீர் காடி இவைகளை சமனுகக்கலந்து அதில் உப்புச்சுன்னம் வெடியுப்பு நவாச்சாரம் சீனம் வகைக்குப்பலம் ஒன்று தூள்செய்து கலந்து சரக்குகளை கிளிகட்டி மண்டலமிட்டு எடுத்து உலர்த்திக்கொள்ள சுத்தியாம்.

1444. கிச்சிலிப்பழம் மாயமாகும் ஜாலம்.

சாலக்காரன் சபையில் ஒரு கிச்சிலிப்பழத்தையெடுத்து அனைவர்க்குங்காட்டி இந்த கிச்சிலிப்பழம் மாயமாய்ப்போகும் மகிமையைபாருங்களென்று முன்போல் கருமுதலானதும்பூசி குறளியைத்தியானிக்க பார்ப்போருக்கு மாயமாய் விட்டது போலிருக்கும் பிரமிப்பார்கள்.

1445. வாதுமப்பழம் மாயமாகும் ஜாலம்.

ஒரு வாதுமப்பழத்தை யெடுத்து அனைவர்க்குங்காட்டி இந்தபழம் கையிலிருந்து மாயமாய்ப்போகும் மகிமையைப் பாருங்களென்று முன்போலவே கருவைப்பூசி கையைக்காட்ட ஆச்சரியப்படுவர்கள்.

1446. பச்சை திராட்சப்பழம் மாயமாகும் ஜாலம்.

ஜாலக்காரன் ஒரு பச்சைதிராட்சிப்பழம் கையிலெடுத்து அனைவருக்குங்காட்டி இதோ இந்த பழம் மாயமாய்போகும் விநோதத்தைப் பாருங்களென்று மறைவுமையை கையில் தடவி குறளிமந்திரத்தை ஜெபிக்க மாயமாகும், ஆச்சரியப்படுவார்கள் என்க.

1447. பலாப்பழம் மாயமாகும் ஜாலம்.

ஜாலக்காரன் பலாப்பழம் ஒன்றெடுத்து அனைவர்க்குங்காட்டி கருவையும் பூசி குறளியைத்தியானிக்க பழமிருப்பது தெரியாது, மாயமாய் போய்விட்டதென்று மதிமயங்கி நிற்பார்கள்.

1448. கிணற்றில் புழுக்கள் சுழலும் ஜாலம்.

கற்பூரத்தைக் கைவிரல் நகச்சந்துகளில் அடைத்துக்கொண்டு கிணற்றருகிற் சென்று இந்தக்கிணற்று ஜலத்தில் புழுக்கள் வரும்படி

செய்கிறேன் என்று நகத்திலிருக்கும் கற்பூரத்தைப் பொடியாக்கிமெதுவாய் ஜலத்திலிட அப்படி நீரில் புழுப்போல் சுற்றிசுற்றி வரும்.

1449. அஞ்சனக்கல் சுத்தி வித்தை.

அஞ்சனக்கல்லை புளியாரை ரசத்தில் ஒருநாள் ஊரவைத்து எடுத்துக்கொள்ள சுத்தியாகும்.

1450. பாஷாணசுத்தி வித்தை.

அறுபத்திநாலு பாஷாணங்கள் சுத்திசெய்யவேண்டில் குப்பமேனிரசம் கற்றாழைப்பால் சிறுநீர் பழரசம் செம்பருத்தி வெற்றிலைரசம் வகைக்குப்படி-1 இவைகளைப் பாண்டத்திலிட்டு அதில் பாரையுப்பு வெடிகாரம் நவாச்சாரம் வகைக்கு பலம் கால் தூள்செய்து கலந்து கிளிக்கட்டி இட்டு இட்டு நிழலாய் காற்றில்லாவிடத்தில் பதினைந்துநாள் வைத்தெடுத்து காடியில் ஊரவைத்து எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1451. கொய்யாப்பழம் மாயமாகும் ஜாலம்.

ஜாலக்காரன் முன்போலவே சபையில்வந்து கொய்யாப்பழம் ஒன்றையெடுத்து யாவருக்குங்காட்டி இதோ இந்தபழம் மாயமாகப்போகும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளிமந்திரத்தை ஜெபிக்க மாயமாகும்.

1452. வாழைப்பழம் மாயமாகும் ஜாலம்.

ஜாலக்காரன் வாழைப்பழமொன்றையெடுத்து யாவருக்குங்காட்டி இதோ இந்த பழம் கையில்வைத்து கெட்டியாய் பிடித்துக்கொள்ளுகிறேன். இது மாயமாக மறைந்துபோகு மகிமையைப் பாருங்களென்று முன்போல் கருவைத்தடவி குறளிமந்திரத்தை செபிக்க மாயமாகும்.

1453. அன்னாசிப்பழம் மாயமாகும் ஜாலம்.

சாலக்காரன் அன்னாசிப்பழம் ஒன்றை எடுத்துஎல்லாருக்குங்காட்டி இதோ இந்த பழம் மாயமாய்ப்போகும் விநோதத்தைப்பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளிமந்திரத்தை செபிக்க மாயமாகும்.

1454. ஆரஞ்சிபழம் மாயமாகும் ஜாலம்.

ஆரஞ்சிப் பழத்தையெடுத்து சனங்களுக்குக் காட்டி இந்த வேடிக்கையைப் பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளிமந்திரத்தை செபிக்க மாயமாகும்.

1455. காந்தசுத்தி வித்தை.

காந்தத்தைப் பழரசத்திலும் காடியிலும் மோரிலும் கொதிக்கவைத் தெடுத்து பிறகு சாணிநிழலில் ஏழுதரம் காய்ச்சித்துவைக்க சுத்தியாம்.

1456. அயத்தோட்டி சுத்தி வித்தை.

அயத்தொட்டியை பசும்பாலில் நாலுசாமமும் நெய் தேன் இவைகளில் எட்டுநாளும் ஊறவைத் தெடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1457. தோட்டி பாஷாண சுத்தி வித்தை.

தொட்டி பாஷாணத்தை துண்டு துண்டாய் நருக்கி கிளிக்கட்டி நெல்லில் அவித்து எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1458. சகஸ்ரபேதி சுத்தி வித்தை.

சகஸ்திரபேதியை நாரத்தங்காய் ரசத்திலூறவைத்து எடுத்துக் கொள்ளவும்.

1559. சேங்கொட்டை சுத்தி வித்தை.

சேங்கொட்டை நீரில் ஊறவைத்து மறுநாள் மூக்கைவெட்டி நீக்கி எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1460. சிவதை சுத்தி வித்தை.

சிவதை பசும்பாலில் அவித்தெடுத்து உலர்த்திவைக்க சுத்தியாம்.

1461. அமுக்கி ஞங்கிழங்கு சுத்தி வித்தை.

அமுக்கிஞங்கிழங்கை ஆவின்பாலில் அவித்தெடுக்க சுத்தியாம்.

1462. சுக்கு சுத்தி வித்தை.

சுக்கை மேல்தோல்சீவி சுண்ணாம்புபூசி உலர்த்தி எடுக்க சுத்தியாம்.

1463. திப்பிலி சுத்தி வித்தை.

திப்பிலியை எலுமிச்சம் பழத்தில் ஊறவைத்து எடுக்க சுத்தியாம்.

1464. ஓம சுத்தி வித்தை.

ஓமத்தை சுண்ணாம்புத் தெளிவுநீரில் ஒருஜாமம் ஊறவைக்க சுத்தியாகும்.

1465. இருசீரக சுத்தி வித்தை.

சீரகம் கருஞ்சீரகம் இவைகளை சுண்ணாம்பு நீரில் ஏழுசாமம் ஊறவைத்து எடுத்துக்கொள்ள சுத்தியாகும்.

1466. ஊமத்தன்விரை சுத்தி வித்தை.

ஊமத்தைவிதை ஒருஜாமம் ஜலத்தில் ஊறவைக்க சுத்தியாம்.

1467. ரசசுத்தி வித்தை.

ரசத்தை எருக்கன்பாலில் 1-நாள் ஊறவைத்து செங்கந்தான் கொட்டை சர்க்கரை இவைகளில் அரைத்தெடுக்க சுத்தியாம்.

1468. பூர சுத்தி வித்தை.

பூரத்தை வெற்றிலை மிளகு வியாழமிட்டு அதில் கிளிகட்டி மூன்று நாள் ஊறவைத்து எடுக்க சுத்தியாம்.

1469. கல்நார் சுத்தி வித்தை.

கல்நாரை கழுதை மூத்திரத்தில் மூன்று நாழிகை ஊறவைக்க சுத்தியாம்.

1470. படிகார சுத்தி வித்தை.

படிகாரத்தை எருமைச்சாணத்தில் கிளிகட்டிவைத்து எடுத்துக் கொள்ள சுத்தியாகும் அல்லது சிறுநீரில் மூன்றுநாள் ஊறவைத்து எடுத்தால் சுத்தியாகும்.

1471. லிங்க சுத்தி வித்தை.

லிங்கம் ஒருகட்டியாகவாங்கி தேன் முலைப்பால் இவைகளில் தனித் தனி ஒருநாள் ஊறியபின் மறுநாள் யெடுத்து எலுமிச்சம் பழரசம் கும்பைமேனி ரசம் முலைப்பால் சமமாய்க்கூட்டி அடுப்பின்மேல் சட்டி வைத்து அதில் மேற்படி லிங்கத்தைவைத்து புகையாமல் கருவைக்கொடுக்க சுத்தியாகும்.

1472. வீர சுத்தி வித்தை.

வீரத்தை ஒரு இளநீரில் 1¼-விராகனெடை கர்ப்பூரம் போட்டுக் கலக்கி சட்டியில் ஊற்றி அடுப்பிலேற்றி மேற்படி வீரத்தை தொலாந்திரமாக எரித்து எடுத்துக்கொள்ள சுத்தியாம்.

1473. மிருதார்சிங்கி சுத்தி வித்தை.

மிருதார்சிங்கியை வெள்ளாட்டு கோமியத்தில் ஒருநாழிகை கொதிக்கவைத்து எடுத்துக்கொள்ள சுத்தியாகும்.

1474. மனோசிலை சுத்தி வித்தை.

மனோசிலையைக் காடியில் கிளிகட்டி எடுத்துக்கொள்ளவும் வெள்ளாட்டு மூத்திரத்தில் தொலாந்திரம்கட்டி எரித்தெடுக்க சுத்தியாம்.

1475. கோவைப்பழம் மாயமாகும் ஜாலம்.

ஒரு கோவைப்பழம்யெடுத்து வேடிக்கைப்பார்க்க வந்திருக்கும் சனங்களுக்குக் காட்டி இதோ இந்த மகத்துவத்தைப் பாருங்களென்று முன்போல் கருவைப் பூசி குறளி மந்திரத்தை செபிக்க மாயமாகும்.

1476. எட்டிப்பழம் மாயமாகும் ஜாலம்.

முன்போல் ஜாலக்காரன் சபையில்நின்று எட்டிப்பழத்தை எடுத்து யாவருக்குங்காட்டிஇதோ இந்தபழம் கையில்பிடித்துக்கொள்ளுகிறேன், இது மாயமாகப் போகும் மகிமைப் பாருங்களென்று முன்போல் கருவைப்பூசி குறளி மந்திரத்தைச் செபிக்க மாயமாகும்.

1477. பப்புளி மாஸ்பழம் மாயமாகும் ஜாலம்.

முன்போலவே சாலக்காரன் பப்புளி மாசப்பழம் ஒன்றையெடுத்து இந்த பழம் மாயமாய்ப்போகும் வேடிக்கைப் பாருங்களென்று முன் போல் கருவை தடவி குறளிமந்திரத்தை செபிக்க மாயமாகும்.

1478. எட்டிக்கொட்டை சுத்தி வித்தை.

எட்டிக்கொட்டையை எள்ளில் அவித்து கிருஷ்ணை ரசத்தில் ஊறிய பின் தேத்தாங்கொட்டை ரசத்தில் வழித்து எடுக்க சுத்தியாகும்.

1479. அத்திப்பழம் மாயமாகும் ஜாலம்.

முன்போலவே அத்திப்பழத்தை சபையோர் களுக்குக்காட்டி இது மாயமாகும் விநோதத்தைப் பாருங்களென்று முன் கூறியபடி செய்ய பழம் மாயமாய்ப் போய்விட்டதென்று மதிமயங்கி நிற்பார்கள்.

1480. கருவங்கசுத்தி வித்தை.

கருவங்கத்தை வெள்ளாட்டு மூத்திரத்தில் பிரண்டைவேர் அறைத் துப்போட்டு நல்லெண்ணெய்விட்டு கலக்கிக்கொண்டு அதில் பத்து தரம் உருக்க சுத்தியாம்.

1481. வீரசுத்தி வித்தை.

ரசகத்தை ஆட்டுநெய் கொண்டுவந்து உருக்கி சிறுநீர் பழரசம் கூட்டி காரம் சுண்ணமிட்டு கலக்கிக்கொண்டு அதில் பத்துதரம் உருக் கிச் சாய்க்க சுத்தியாகும்.

1482. கெருடப்பச்சைசுத்தி வித்தை.

கெருடப் பச்சையைப் பயறுபோல் செய்து கிளிக்கட்டி குமரிச் சாற்றில் 3-நாழிகை ஊறவைத்தெடுக்க சுத்தியாம்.

1483. சீனசுத்தி வித்தை.

சீனத்தைப்பசும்பாலில் மூன்றுசாமம் ஊறவைத் தெடுத்துக்கொள்ள சுத்தியாய்ப் போம் என்க.

1484. வெண்காரசுத்தி வித்தை.

வெண்காரம் பொரித்துக்கொள்ள வேண்டுமானால் காடியிலாவது பழரசத்திலாவது அறைத்து பில்லைதட்டி உலர்த்திக்கொள்ள சுத்தியாம்.

1485. கோம்பரக்குசுத்தி வித்தை.

கொம்பரக்கை நல்ல ஜலத்திற்போட்டு அடுப்பில்வைத்து எறித் தெடுக்கவும் சுத்தியாம் என்க.

1486. மாசிக்காய்சுத்தி வித்தை.

மாசிக்காயை பசுநெய்யில் வறுத்து வெடித்தபிறகு எடுத்துக் கொள்ள சுத்தியாம்.

1487. எண்ணெய்சுத்தி வித்தை.

சகலவித எண்ணெய்களையும் நல்ல ஜலத்தில் விட்டு நாலு நாழி சென்று எடுத்துக்கொள்ள சுத்தியாகும்.

1488. அமுக்கிருன்வேர்சுத்தி வித்தை.

அமுக்குரான்வேரை ஆவின்பாலில் கொஞ்சம் வேகவைத்து எடுத் துக்கொள்ள சுத்தியாம்.

1489. புஷ்பமாலை மாயமாய்ப்போகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் ஒரு புஷ்பமாலையை யெடுத்து அனை வருக்குங் காட்டி இதோ இந்தமாலை மாயமாய்ப்போகும் விநோதத்தைப் பாருங்களென்று முன்போல் கருவைப் பூசிக்கொண்டு குறளிமந்திரத்தை ஜெபிக்க மாயமாய்ப் போகும்; ஆச்சரியப்படுவார்கள்.

1490. கொட்டைப்பாக்கு மாயமாகும் ஜாலம்.

ஜாலக்காரன் கொட்டைப் பாக்குகளை யெடுத்து யாவருக்குங்காட்டி இதோ இந்த பாக்குகள் மாயமாய்ப்போகும் மகிமைப் பாருங்களென்று முன்போல் கருவு தடவி குறளிமந்திரத்தை செபிக்க மாயமாகும்.

1491. பலகரை மாயமாகும் ஜாலம்.

பலகரையெடுத்து அனைவருக்கும் நன்றாய்க்காட்டி இதோ இந்தப் பலகரை என்கையி லிருந்தபடியே மாயமாகப்போகும் வேடிக்கைப் பாருங்களென்று முன்போல் மைப்பூசி குறளிமந்திரத்தைஜெபிக்க பல கரைகள் மாயமாய்ப் போய்விட்டதுபோல் தோற்றும்-

1492. சோக்கட்டான் மாயமாகும் ஜாலம்.

சொக்கட்டான் காய் பாச்சிகை முதலானதும் எடுத்து ஜனங்களுக் குக் காட்டி இதோ இந்த சொக்கட்டான்காய் முதலானதும் மாயமாகும் வேடிக்கை பாருங்களென்று முன்போல் மைபூசி குறளிமந்திரத்தைச் ஜெபிக்க மாயமாகும்.

1493. மணிபர்ஸ் மாயமாகும் ஜாலம்.

மணிபர்ஸ் ஒன்றையெடுத்து இதோ இந்த மணிபர்ஸ் மாயமாகும் வேடிக்கைப் பாருங்களென்று முன்போல் மைப்பூசி குறளியைத்தியா னிக்க மாயமாகும்.

1494. முடிதாரசுத்தி வித்தை.

முடிதாரத்தை தப்பனங்கள்ளு படிகாலில் கிளிகட்டி எரித்து எடுக்க சுத்தியாம்.

1495. பால்துத்தசுத்தி வித்தை.

பால்துத்தத்தைக் கிளிகட்டி சிறுவர்கள் மூத்திரத்தில் எழுநாள் ஊறியபின் பசும்பாலில் இரண்டுஜாமம் ஊறவைத்தெடுக்க சுத்தியாம்.

1496. துருசுசுத்தி வித்தை.

துரிசியை தயிரினால் அறைத்து அடைதட்டி ஓடுகாயவைத்து அதில் போட்டு புரட்டியெடுத்து அல்லது தயிரில் ஒருஜாமம் ஊறவைத்தெடுச்க் சுத்தியாம்.

1497. [illegible] துருசுசுத்தி வித்தை.

பச்சைதுரிசியை [illegible] கோமயத்தில் எரித்துக்கழுவி உலர்த்தியெடுக்க சுத்தியாகும் என்க.

1498. பவளப்புத்து சுத்தி வித்தை.

பவழத்தை பசுமோரில் கிளிக்கட்டிவிட்டு நாலுநாழி எரித்து எடுத் துக்கொள்ள சுத்தியாகும்.

1499. கல்மதச்சுத்தி வித்தை.

கல்மதத்தைச் சிறுநீரில் கழுவி எடுக்க சுத்தியாம்.

1500. நாபிசுத்தி வித்தை.

நாபியைப் பரித்தியிலை ரசத்தில் ஊறவைத்து எடுத்து முத்திக்குள் வைத்து சுத்தி கும்பியில் சொருகி ஒருநாழி பொருத்தெடுத்து சீந்தில் இயாழத்தில் தொலாந்திரங்கட்டி எரித்தபிறகு எருக்கன்பாலில் சற்று நேரம் ஊறவைத்து கோமியத்தில் கழுவி எடுக்க சுத்தியாம்.

பீதாம்பர ஐயர் ஜாலத்திரட்டு முற்றிற்று.

67621

இனிய தமிழ் நாவல்கள்.

கமலவல்லி அல்லது கன்னியின் சமர்த்து இரண்டு பாகமும்	3	8	0
ஷை பாகம் 1-க்கு	1	12	0
இளங்கோவன் அல்லது தவளமலைச்சுரங்கம்	1	4	0
தலைவாங்கி அபூர்வசிந்தாமணி	1	0	0
சௌந்தராபாய் அல்லது சதிகொலை	1	0	0
இருகொலைகளின் இரகசியம் (ஓர் துப்பறியும் நாவல்)	1	0	0
ஆனந்த கதாசாகரம் அல்லது அற்புத விநோதக்கதைகள்	1	0	0
தலைவெட்டி தயாபாசுந்தரி	0	12	0
மலையாளமீனுள் அல்லது பொன்மலைப்புதுமை	0	12	0
வசீகரன் அல்லது அடிமையாயடைந்த அரசின் சுதந்தரம்	0	12	0
மோஹன் சிங் அல்லது குடும்பகொலையின் இரகசியம்	0	12	0
பங்கயச்செல்வி அல்லது பதிவிரதா சிரோமணி	0	12	0
விவேகாநந்தபோதம் அல்லது வைதிக வேதியர்	0	10	0
ஆனந்தரங்கன்: ஓர் நூதன துப்பறியும் நாவல்	0	10	0
புவனராணி அல்லது பூவையர் பூஷணம்	0	8	0
கற்பகவல்லி: ஓர் அதிசயக்கதை	0	8	0
ஜயலட்சுமி அல்லது கஷ்டத்தின் சுகம்	0	8	0
தனபதி: கணவனைப்பிரிந்த காதலியின் விசனம்	0	8	0
சுகுணசுந்தரி அல்லது காதலின் அழகும், கற்பின் சிறப்பும்	0	8	0
மோகன வல்லி: ஓர் இன்பரசக் கதை	0	6	0
பூபாலன் புவனசுந்தரி: ஆகாய விமானத்தின் அதிசயம்	0	6	0
மதன மனோகரி: ஓர் கற்பனையலங்காரக் கதை	0	6	[illegible]
தடிராமன்: ஓர் அகட விகட ஆநந்தக்கதை	0	6	[illegible]
விவேகாநந்தன்: இது சோகரசமுள்ள நாவல்	0	6	0
சுந்தராம்பாள்: அதிக வியப்பைத் தரக்கூடிய நாவல்	0	6	0
நாட்டுப்புறத்தான் நகரப்பிரவேசம்	0	4	0
நாட்டுப்புறத்தான் நகரவாசம்	0	4	0
வாயாடிவம்பன்: ஓயாத சிரிப்பைத்தரும் ஓர் நவீனகதை	0	4	0
தங்கவேணி: ஓர் அற்புதக்கதை	0	4	0
பங்கஜம்	1	0	0
ராமாமணி	1	0	0

எமது விலாசம்:—ஸ்ரீ "பாரதி" புத்தகசாலை,
சூளை போஸ்ட், சென்னை.

தென்னாட்டில் தலைமைபெற்றுப் பிரகாசிக்கும
தமிழ் நாவல் எது?

தலைவாங்கி அபூர்வசிந்தாமணி

இது யாவராலும் நன்கு மதிக்கப்பெற்ற ஓர் அற்புத நாவல்.

இதுவரையில் 22-பதிப்புகள் அச்சிடப்பட்டு செலவழிந் திருப்பதே இதன் மேன்மைக்கோர் அத்தாட்சியாகும்.

இதில் ஸ்திரீ, புருஷ, பாலக, பாலகிகளுக்கு இன்றியமையா அநேக அதியற்புத விஷயங்களும், பல நீதிகளும் ஒருங்கே யமைந்திருக்கின்றன படிக்கப் படிக்கப் பரமானந்தத் தையும் கேட்கக் கேட்க இன்பத் தையும் தரும்படி மிகத் தெளி வாய் எழுதப்பட் டிருக்கின்றது. கதாநாயகி தன் ஆசான் உபதே சித்த மூன்று கேள்விகளினால் ஓராயிரத்துத் தொண்ணூற் றொன்பது அரச குமாரர்களைத் தொன்று வீரப் பிரதாபத்துட னிருக்கையில், மெய்யழகனென் னும் ஓர் அரசிளங்குமரன் அவ் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிந்துகொள்ளப் பல தேயங் கள் சென்று ஆங்காங்கு தனக் குற்ற இடையூறுகளினின்றும் நீங் கிக் கடைசியில் அபூர்வசிந்தா மணியை ஜெயிப்பது மிகவும் விந் தையாயிருக்கும். தற்காலத்திய விருப்பத்திற் கேற்பச் சில அலங் காரநடைகளும் சேர்க்கபட்டு.

[illegible] க்ரவுன் 16-பேஜ் அளவில் 388-பக்கங்களுள்ளது. விலை ரூ. 1.

இளங்கோவன் அல்லது தவளமலைச்சுரங்கம்

இஃது அற்புதமான துப்பறியும் நாவல். நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடிய விஷயங்கள் பல அடங்கியிருக்கின்றன. இதில் விவரித்திருக்கும் கதைத்தொடர் வெகுவிமரிசையாய்த் தொகுக்கப்பட்டு இடையிடையே ஆச்சரிய சம்பவங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதில் துப்பறியவந்த துறவியின் திறமையும், படுக்கைக்குச் சென்ற பெண் மாயமானதும், தற் கொலையும் யாவரையும் திடுக்கிடச்செய்யும். இதன் விலை ரூ. 1 4 0

ஸ்ரீ பாரதி புத்தகசாலை, சூளை போஸ்ட், சென்னை.

உங்களுடைய ஓய்வு நேரத்தில்
நீங்கள் படிக்கவேண்டிய புத்தகம் இதுவே!

ஆனந்த கதா சாகரம்

அல்லது

அற்புத விநோதக் கதைகள்.

இதிலுள்ள பல கதைகளில் ஒவ்வொன்றும் அதிக அற்புதத்தையும் ஆனந்தத்தையும் தரக்கூடியது. இதைப் படிக்காதவர்கள் துர்ப்பாக்கியர்களென்றே சொல்லலாம். இதன் விலை ரூ. 1

பொன்மலைப் புதுமை.

இஃது ஓர் துப்பறியும் நாவல். இதில் அந்தரங்க கள்ளகோட்டைச் சாலையின் காட்சியும், இரகசிய அறைகளின் அமைப்பும், காவற்சாலைகளின் சூட்சிகளும், துப்பறியும் உத்தியோகஸ்தர்களின் திறமைகளும் ஆச்சரியத்தை விளைவிக்கும். விலை அணா 10.

சுகுணசுந்தரி.

இஃது ஓர் நவீனநாவல். தெள்ளிய செந்தமிழ் நடையில் விசேஷ அலங்கார சொற்களால் புனைந்தெழுதப் பட்டிருக்கிறது. கதையோ மிகவும் அருமையானது. படிப்போரின் மனதை எவ்வகையிலும் பரவசப் படுத்தக்கூடியது. அணா 8.

வசீகரன்

மிகுந்த ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் உண்டாக்கும் நவீனநாவல்களில் இதுவுமொன்று. இதில் முற்றும் வியப்புக் கிடமானதும், மனந் திடுக்கிடக் கூடியதுமான விஷயங்கள் செறிந்து கிடக்கின்றன. விலை அணா 12.

தடிராமன்.

இஃது ஓர் வேடிக்கையும் விநோதமுமான அகட விகட ஆனந்தக் கதை. விலை அணா 6.

ஆநந்தரங்கன்.

இது மிகவும் வியப்பைத்தரும் ஓர் சிறந்த துப்பறியும் நாவல். இதில் முதலிலிருந்து கடைசிவரையிலுள்ள ஆச்சர்ய சம்பவங்கள் யாவையும் திடுக்கிடச்செய்யும். அணா 10.

சிவசாமி (2-பாகமும்.)

இவ்விரு புத்தகங்களிலும், சிவசாமி என்பவனுடைய நாட்டு வாழ்க்கையையும், நகர வாழ்க்கையையும் பற்றி, மிகவும் விநோதமாய் எழுதப்பட்டிருக்கிறது. அணா 8.

புவனராணி.

இஃது ஓர்மேன்மையானநாவல். இக்கதாநாயகி ஓர் ஆரண்யத்தில் நவரத்தின மிழைத்த மாளிகையிலிருக்கும்போது புவனசக்ரேஸ்வர மன்னன் கண்டு திடீரென்று பிரிவது மிகவும்விந்தையானது. அணா 8.

கற்பகவல்லி

இதில் நல்லொழுக்கம், கற்புநிலை, அறநிலை, இல்லறதர்மம், குருபக்தி முதலிய அம்சங்களுக் குதாரணமாகப் பல மேற்கோள்களையும் எடுத்துக் காட்டி பல அரிய விஷயங்களையும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இக் கதாநாயகி இறந்துபோன தன்புருடன் உயிரைத் தேவலோகஞ்சென்று மீட்டுவருவது மகா விந்தையாயிருக்கும். இதன் விலை அணா 8.

ஸ்ரீ பாரதி புத்தகசாலை, சூளை போஸ்ட், சென்னை.

கமலவல்லி அல்லது கன்னியின்சமர்த்து

மனந்திடுக்கிடக்கூடிய பல அருமையான சம்பவங்களும் ஆச்சரிய வர்த்தமானங்களும் செறிந்துள்ள ஓர் துப்பறியும் நாவல்.

கன்னிகையான கமலவல்லியை காசிபூஷணம் என்பான் மணந்து கொள்ளப் பலகடுமையான சூழ்ச்சிகள் செய்தும் கமலவல்லி தப்பித்துக் கொள்ளும் சாமர்த்தியத்தைப் படிக்குந்தோறும்யாவரும்பரவசமடைவார்கள். மேஜர் ஜெயராம் மீனவதியின் அறையில் வீரகேசரியால் கொல்லப்பட்டது மிகவும் பரிதாபத்தை யுண்டாக்கும். குறிசொல்லும் கிழவியொருவள் கமலவல்லியைப் பல இடையூறுகளி னின்றும் காப்பாற்றப்படுவது மிகுந்த ஆச்சரியத்தை யுண்டாக்கும். முடிவில்விவரித்துள்ள வெள்ளை ரோஜாமலரின் மர்மமும் அதனால் கஷ்டமடைந்த தேவசுந்தரியின் சரித்திரமும் படிப்பவருள்ளத்தைப் பதைக்கச் செய்யும். இடையிடையே விவரித்திருக்கும் காந்தாமணி, கருணாம்பாள், தாட்சாயணி, கோமளாம்பாள், கனகாங்கி முதலியோருடைய சரித்திரங்களால் யாவரும் ஆச்சரிய மடைவார்கள்.

இதிலடங்கியுள்ள விஷயங்கள் அபாரமானதால் இதைத் தனித்தனி இரண்டு பாகங்களாக [illegible] பட்டிருக்கின்றன.

பாகம் 1-க்கு ரூ. 1 [illegible] 0   பாகம் 2-க்கு ரூ. 3 8 0

தங்கவேணி

ஸ்திரீகளுக்கான முக்கிய நாவல்களி லிதுவொன்று. இக் கதையில் பாலகேதுவென்னும்அரசகுமாரன் இக்கதாநாயகியை மணம் புரிவது மகா வேடிக்கையானது. அணா 4.

பூபாலன் புவனசுந்தரி.

இக் கதாநாயகி ஆழியில் விழுந்தும், இக் கதாநாயகன் வேறு நாடடைந்தும் ஒருவரையொருவர் மறுபடியும் சந்தித்தவரையில் மகா ஆச்சரியத்தை விளைவிக்கும். அணா 6.

மதனமனோகரி

இதுமிக்க கற்பனை அலங்காரங்களையும், பலநீதிகளையும் அமைக்கப்பெற்று யாவருக்கும் நன்கு விளக்கத்தக்க தெள்ளியநடையில் எழுதப்பட்டிருக்கிறது. இக்கதா நாயகியின் சரித்திரம் யாவும் கடைசிவரையில் வாசிப்போரின் மனதை வசியப்படுத்தக்கூடியது. விலை அணா 6.

ஸ்ரீ பாரதி புத்தகசாலை, சூளை போஸ்ட், சென்னை.

தலைவெட்டி தயாபரசுந்தரி

இதில் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தக்கூடிய விஷயங்களை யொருங்கே யமைத்துப் பல் கிளைகளையும் அதிற்புகட்டி நல்ல செந்தமிழ் நடையில் இயற்றப்பட்டிருக்கிறது. இக்கதாநாயகி தன்னை மணரவரும் அரசகுமாரர்களைக் கேட்கும் ஆழ்ந்த கருத்துள்ள கேள்விகளும், அவளை விரும்பிவரும் சித்திராங்கதன் என்னும் அரசச் செல்வனுடைய பொருத்தமான விடைகளும் பெரும் வியப்பைத் தருவதன்றி அவளால் அபஜெயமடைந்து துயருற்ற இராஜ குமாரர்களின் சவிஸ்தாரமனைத்தும் மிக்கப் பரிதாபமாயிருக்கும். இதன் விலை அணா 12.

இருகொலைகளின் இரகசியம்.

இஃது ஓர் ஆச்சரியமான நவீன துப்பறியும் நாவல். இதில் வெளியிட்டிருக்கும் துப்பறியும் சூழ்ச்சி வேறெந்த நாவல்களிலும் காணப்படாத விசேடமாகும். இதில் விவரித்திருக்கும் இரண்டு கொலைகளின் இரகசியங்கள் மிகவும் ஆச்சரியத்தைத் தரும். விலை ரூபா 1.

சௌந்தராபாய்

அல்லது சதிகொலை

இஃது ஓர் நவீன துப்பறியும் நாவல். இதில் விவரித்திருக்கும் சதி கொலையும், கொலைக்குப் பிராயத்தினங்களும், கொலையாளிகளின் கொடிய செய்கைகளும் ஆச்சரியமானதுடன் இதில் அநேக அற்புத நிகழ்ச்சிகளும் விவரித்திருக்கின்றன. விலை ரூபா 1.

மோகனவல்லி.

இஃது ஓர் அற்புதக் கதை. உலகத்தில் சுகதுக்கங்கள் ஊழ்வினைப் பயனின்படி நடக்குமென்னும் திருஷ்டாந்தத்தை இதில் விவரித்திருக்கின்றது. விலை அணா 6.

விவேகாநந்தபோதம்.

இது வைதிக வேதியர் என்னும் மதநாமங் கொண்ட ஓர் அற்புத இன்பரசக்கதை. இதில் ஸ்ரீசுவாமிகளின் யாத்திரையில் நேரிடும் சம்பவங்களெல்லாம் படிக்கப் பரமானந்தத்தை விளைவிக்கும். இதன் விலை அணா 10.

தனபதி.

அறிவைப்புகட்டி நன்னெறியில் யாவரையும் ஆண்டுச்செய்யும் இன்றியமையாத ஓர் சிறந்தநாவல். சந்தர்ப்பானு சாரமான மேற்கோள்களுடன் வியப்பைத்தரும் பல அரிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. விலை அணா 8.

சுந்தராம்பாள்.

இஃது ஓர் சோகரசமான நூதன நாவல் இதில் குறித்திருக்கும் சம்பவங்கள் கல்நெஞ்சையும் கரையச் செய்யும் ஆற்றலுடையது. அதிக விந்தையும், வியப்பையும் தரக்கூடிய நாவல்களில் இது முதன்மையானது. இதன் விலை அணா 6.

மோஹன் சிங் அல்லது குடும்ப கொலையின் இரகசியம்.

இஃது ஒரு துப்பறியும் செந்தமிழ்நாவல். மோஹன்சிங் என்பவருடைய விசித்திரமான கொலையும், அக்கொலையைக் கண்டுபிடிக்கும் துப்பறியும் பாபுராவின் சாமர்த்தியங்களும் காஞ்சனன் என்பவள்மேல் ஏற்பட்ட சந்தேகங்களும், கிருஷ்ணசிங் என்பவன் உண்மைக் குற்றவாளி எனக்கண்டுபிடிக்கும் வரையில் சேர்ந்துள்ள விஷயங்களும் யாவும் வாசிப்போரின் மனதைப் பரவசப்படுத்தக் கூடியவைகளாயிருக்கும். விலை அணா 12.

ஜயலட்சுமி அல்லது கஷ்டத்தின் சுகம் 0 8 0

ஸ்ரீ பாரதி புத்தகசாலை, சூளை போஸ்ட், சென்னை.

டெய்லரிங் கட்டிங்!

ஐரோப்பாவில், தேர்ச்சியடைந்த மிஸ்டர் ராபர்ட்ஸ் துரையவர்களிடம் மிக அருமையாகக் கற்ற இரகசியங்களை நம் நண்பர்கள் யாவரும் அறிந்து, ஒருவருடைய உதவி இன்றியே சுலபமாக அளவெடுத்து துணிகளை வெட்டுவதற்குத் தேவையான அளவுகளைப் பிரித்துக் காண்பிக்கக் கூடிய சில விஷயங்களையும், பலவித கோட்டுகள், ட்ரவுசர்கள், அதாவது எஸ். பி. கோட், டி. பி. கோட், ஸ்போர்டிங் கோட், செமிடிரஸ் கோட், மிலிடெரி கோட், சிவில் கோட், ஓவர் கோட், நிக்கர் ட்ரவுசர், பிரீசெஸ் ட்ரவுசர், ரைடிங்பிரீசெஸ் முதலிய அநேக பிரிவுகளைத் தனித் தனி படங்களமைத்து, கணக்குகளைப் பிரித்து, T. M. கோவிந்தசாமி முதலியார் அவர்களால் தெளிவாக எழுதப்பட்டு ராயல் சயிசில் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு வெளியாக்கி இருக்கின்றோம். இதன் விலை ரூபா 1 0 0

வேமன்னபத்தியம்

திருத்தமான இரண்டாம் பதிப்பு மூலமும்—உரையும் 1000 பிரம்ம வித்தியா சுலோகங்கள்

வேமன்ன யோகீஸ்வரர் என்னும் வேதாந்த நிபுணரைப் பற்றிப் பலரும் கேள்விப்பட்டிருக்கலாம். இவர் முற்றும் துறந்த முழுஞானியாய்ப் பல அற்புதங்களைச்செய்து முடிவில்வேதாந்தத்தின் தத்துவப் பொருளைப் பலரும் அறிந்துய்யும்வண்ணம் தெலுங்குபாஷையில் அழகிய சிறு கவிகளாகச் செய்துள்ளார். தெலுங்கு பாஷையறியாத் நண்பர்கள் அதனை புணரக்கூடாத தன்மையிருப்பதால் அக்கவிகளைத் தமிழில் பொழிப்புரையுடன் யாவருக்கும் நன்றாய் விளங்குமாறு பரிசோதித்துசுத்தப் பதிப்பாக டபுல்கிரௌன் 16-பேஜ் அளவில் அச்சிட்டு காலிகோ பயின்டு செய்திருக்கிறது. இதன் விலை ரூபா 1.

பங்கயச்செல்வி அல்லது பதிவிரதா சிரோமணி

இதில் விவரித்திருக்கும் ஆச்சர்ய சம்பவங்களும், அதிவீரச் செயல்களும் விந்தையான மர்ம விஷயங்களும் யாவரையும் பிரமிக்கச் செய்யும். மரணதண்டனையடைந்த ஒரு மனிதனுடைய இரகசியவாழ்க்கையும், அவன் குமாரத்தியான ஓர் இளஞ்சிறுமியின் அதியற்புதச் செயல்களும், மிகவும் கொண்டாடத் தக்கதாகும். விலை அணா 12.

வாயாடி வம்பன்

ஓயாத சிரிப்பைத்தரும் ஓர் இனிய செந்தமிழ் நாவல்.

இப்புத்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்களும் ஆச்சரிய சம்பாஷணைகளும் மிகவும் நகைப்பைத் தரும். இதில் குண்டுணி குப்பம்மாள் பஜாரி பங்கஜம், தடபுடல் தாமோதரன், வம்புக்கார வரதன், தகல்பாஜி தங்கவேலு, தருதலை மாணிக்கம், இவர்களுடைய சரித்திரங்கள் யாவும் மிகவும் விந்தையாயிருக்கும். இதன் விலை அணா 4.

ஸ்ரீ பாரதி புத்தகசாலை, சூளை போஸ்ட், சென்னை.

ஜோதிட பாரிஜாதம்

மூலமும் - உரையும்.

இது ஜோதிடத்தில் பழகுவோருக்கு அதிக அவசியமானது. செய்யுட்களின் பொருள் எளிதில் அறியும்பொருட்டு எளிய உரையும் எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஜாதகருக்கும் அறிந்து கொள்ளவேண்டிய திதிகளின் பலன்களும், நட்சத்திரத்தின் பலன்களும், யோகங்களின் பலன்களும், கரணங்களின் பலன்களும், விவரமாய்க் கூறப்பட்டிருக்கின்றன. நட்பாட்சியுச்சம், பகைநீசம் துவாதசபாவம், கிரகசாரங்கள், கிரகங்களில் நட்பு, சக்கரங்களுடன் விளக்கப்பட்டிருக்கின்றன. பெண் ஜாதகங்களின் விவரங்களையும் கோட்சார பலன்களையும், இராசிகளில் கிரகங்கள் நிற்கும் பலன்களையும் விரிவாய்க் காட்டப்பட்டிருப்பதால் ஒவ்வொருவரும் தாமே ஜாதகத்தைக் கணிக்கலாம். காலிகோ பயின்டிங்க்கு கடிதம். விலை ரூ. 1 0 0

புலிப்பாணி வைத்தியம்

சுத்தப் பதிப்பு மூலமும்-உரையும் **500** கைபாக செய்பாக மர்மங்களுடன்

இந்நூலிற் சொல்லப்பட்டிருக்கிற முறைகளே இக்காலத்தில் வயித்தியர்களால் பல நோய்களுக்குக் கையாடப்பெற்று வருகின்றன. ஆயினும் இதிலுள்ள சில விஷயங்கள் அருமையாய்த் தெரிந்துகொள்ள வேண்டியதாயிருந்ததால், பலர் கேட்டுக்கொண்டபடி அதற்கு விளக்கமான உரை எழுதி அச்சிட்டிருக்கிறோம். வயித்தியர்களாயுள்ளவர்களும், மற்றவர்களும் இதைவாங்கி இதில் சொல்லியபடி நோய்களுக்கு வயித்தியஞ்செய்துபேறடைவார்களென்பதில் ஐயமில்லை. இதன் விலை அணா 12.

இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

ஆண்மக்களும், பெண்மக்களும் மனமொத்த அன்பினராய் ஒருவரையொருவர் மணந்து கூடிக்களிப்புற்று இல்லறத்தை வழுவாமற்செய்து வாழ்ந்துவருவதே இன்பவாழ்க்கையாம். இதன் இரகசியங்களை உணராமல் பெரும்பான்மையோர் மனம்புரிந்தும் மகிழ்ச்சியின்றி, மணவாழ்க்கையின் இன்பத்தை இழந்து துன்பப்பட்டுழன்று திரிகின்றனர். அப்பேர்ப்பட்டவர்களும், புதிதாகக்கலியாண இன்பத்தை அடையவிரும்பும் மற்றவர்களும், காதல்இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து இவ்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப்பேரானந்தக் கடலில்மூழ்கும் மார்க்கங்களை உணர்த்துதற்கு இப்புத்தகம் ஒன்றே நன்மைபயப்பதாகும். நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின் சாராம்சங்களும், பிரான்சு, அமெரிக்கா, ஜப்பான், சைனா, இங்கிலாண்டு முதலிய தேசங்களின் இன்பவாழ்க்கையின் இரகசிய முறைகளும் சேர்த்து, அநேக ஆப்டோன் படங்களுடன் 400-பக்கங்களுக்குமேல் பெதர் வெயிட் பேபரில் அச்சிட்டு காலிகோ பயின்டு செய்துள்ளது. விலை ரூபா 2 0 0

ஸ்ரீ பாரதி புத்தகசாலை, ஜுலை போஸ்ட், சென்னை.

ஸ்ரீ ராமபராக்கிரமம்

கட்டுக் கதைகளடங்கிய புத்தகங்களை வாசித்துக் காலம் போக்குவதைவிட ஸ்ரீமந் நாராயணனுடைய வைபவங்களடங்கிய புத்தகங்களை வாசித்து நற்பயனடைய முன்வாருங்கள். பேய், பில்லி, சூனியம், நோய் முதலான பிணிகளை வரவொட்டாமல் தடுக்கக்கூடிய இப்புத்தகம் ஒன்றே உங்களுக்கு இம்மை மறுமைப் பயன்களை அளிக்கும். இராமாயண முழுச் சரித்திரமும் இதில் அடங்கியிருக்கின்றது. பல அரிய செய்யுட்களையும் இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தைப் பாடசாலைகளில் பாடமாகவும் வைக்கலாம். இதன் விலை அணா 6.

ஸ்ரீ வேங்கடேச பராக்கிரமம்

அல்லது திருப்பதி மான்மியம்.

ஸ்ரீ வேங்கடேசப் பெருமானுடைய வைபவங்களையும் அவர் எழுந்தருளியிருக்கும் மலையின் சிறப்புகளையும் அதிலுள்ள தீர்த்தங்களின் பிரபாவங்களையும் இதில் விவரித்திருப்பதுடன் நான்கு யுகங்களிலும் விருடபகிரி, சேஷகிரி, அஞ்சனாத்திரி, வேங்கடாசலம் என்ற நான்கு பெயர்களுண்டான காரணங்களையும் எடுத்துகாட்டியுள்ளன. விலை ரூ. 1

ஸ்ரீ கேதாரீஸ்வர விரதமகிமை

இவ் விரதத்தின் மகிமையும் அதை அனுஷ்டிக்கும் முறையையும் சகலரும் எளிதிலுணர்ந்து அதன்படி யனுஷ்டித்துச் சகல ஐஸ்வர்யங்களையும் பெற்று இம்மை மறுமைப் பயன்களையடைவார்களென மிகவும் தெளிவான பாட்டு உரையுடன் எழுதி அச்சிட்டிருக்கிறது. விலை அணா 1.

இந்து தேகாப்பியாச சாதனம்:- இது தேகதத்துவ அவயவங்களின் அத்தியாவசியத்தைத் தெரிவித்து சரீரத்தைப்பலமாகவும், சௌக்கியமாகவும் போஷிப்பதற்கான அப்பியாச முறைகளைப் படங்களுடன் விவரித்திருக்கின்றது. 0 8 0

இல்லறமாலிகா அல்லது குடும்ப பூஷணம்:— இதில் சகலரும் அநுஷ்டித்துவரும் பண்டிகை, நோன்பு, விரதம் முதலியவைகளின் சவிஸ்தாரத்தை விளக்கியிருப்பதால் ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டிய ஓர் சிறந்த பொது நூல் 0 6 0

நவரத்தின ஒப்பாரி: இதில் ஸ்திரீகள் துக்கிக்கும் ஒப்பாரிகளும், மன்மதன் ரதிவாக்குவாதமும், ரதிதேவியின் புலம்பல் ஒப்பாரியும், மன்மதன் எரிந்தான் எரியவில்லையென்ற அநேக கிவர்த்திலாவணியுமடங்கியிருக்கின்றன. 0 5 0

ஸ்ரீ கைலாசநாதர் பெரியநாயகி புதிய பக்திரசக் கீர்த்தனம் :— இது நூதன பார்லி சிங்கார வர்ண மெட்டுகளுடன் பாடப்பெற்ற பல கீர்த்தனங்களடங்கியது. 0 5 0

பழனியாண்டவர் பக்திரசக் கீர்த்தனம்:— நவீன டிராமாமெட்டில் திருப்புகழ் சந்தபாக்களும், நூதன வர்ணமெட்டுகளும், நிரம்பப் பெற்றுள்ளதாய் எல்லாராலும் புகழப் பெற்றது. 0 4 0

பாடசாலை மாணவர்களுக்கான தமிழ் புத்தகங்கள்

ஜீமூதவாகனன்	0	8	நாயன்மார் சரித்திரம்	0	8	சூரபத்மன்	0	8
உத்தரகுமாரன்	0	8	முப்பெருந்தொண்டர்	0	8	முத்துக்குமரன்	0	5
மனுச்சோழன்	0	8	தசமுகன்	0	8	அவ்வை	0	4½

ஸ்ரீ பாரதி புத்தகசாலை, ஜுலை போஸ்ட், சென்னை.

ஜீவப்பிரம்மைக்யவேதாந்தரகஸ்யம்

இச்சிறந்தநூல், சென்னப்பட்டணம் ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீசுவரர் அவர்களால் எழுதப்பட்டு வெளிவந்திருக்கின்றது. வேதங்களினுடை யவும், ருஷிகளினுடையவும், அரும்பெரும் ரஹஸ்யங்களையெல்லாம் திரட்டி, வேதங்கள் உபநிஷத்துக்கள், ஸ்ரீ பகவத்கீதை இன்னும் அரியபெரிய நூல்களையெல்லாம் மேற்கோளாய் எடுத்துக்காட்டி யாவரும் உணருமாறு மிக எளியநடையில் எழுதியுள்ளார். யோகாப்பியாசம் செய்யப்பட்டவர்களுக்கும் மனோ ஓட்டத்தை நிறுத்தவேண்டுமென்று எண்ணங் கொண்டவர்களுக்கும் மனதைச்சமாதி நிலையில் நிறுத்தவேண்டுமென்று ஈஸ்வரனைத் துதிசெய்யப் பட்டவர்களுக்கும், மற்றவர்களுக்கும் மிகவும் சுலபமான வழியை இவ்வெட்டாம் பதிப்பில் உபதேசமாய்ச்சொல்லி இருக்கின்றார். இந்நூல் இதுவரையில் எட்டு பதிப்புகள் இருபதினாயிரம் அச்சிட்டு செலவழிந்து இப்போது ஒன்பதாம் பதிப்பு 960-பக்கம்வரையில் ஐயாயிரம் அச்சிட்டு வெளிவந்திருக்கின்றது. இதில் முன் பதிப்புகளைவிட இன்னும் அநேகவித ரஹஸ்யங்களும், முன் படங்களைவிட இன்னும் அதிக படங்களும் அந்தந்தச் சந்தர்ப்பங்களில் அதிகமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.



தாயின் கர்ப்பத்திலுள்ள சிசு பூர்வஜன்மத்துடனிருந்து ஜநநமானவுடன் பூர்வஞானம்மறைந்துபோகும்ரஹஸ்யமும், நமது சுவாசம் நாளுக்குநாள் குறையும் ரஹஸ்யமும் ஸ்திரீ புருஷர்கள் விடும் சுவாசம் (மூச்சு) என்னும்காற்றில் மனதென்னும் அலையும், அவ்வலையிலிருந்து எண்ணங்களென்னும்குமிழிகளும் அடிக்கடி அதிசீக்கிரமாய்ப் பிறந்து பிறந்து அந்த க்ஷணமே மறைந்து விடுகிறதென்னும் திருஷ்டாந்தத்தைக்காட்டி மனோ ஓட்டத்தைநிறுத்தும் ரஹஸ்யமும், அடங்கியிருக்கின்றன. மோக்ஷமென்னும் வீட்டை யடைய இந்நூல் ஒன்றே போதும்.

மேற்படி யோகீசுவரர் எழுதிய நூல்கள்

அநேக தேவரஹஸ்யங்களும், அனேக படங்களும் அடங்கிய ஒன்பதாம்பதிப்பு "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" 960-பக்கங்களடங்கிய காலிகோபயிண்டு ...	4	0	0
ஷை தெலுங்கு ஜீவப்பிரம்மைக்ய ராஜயோக சாராம்ருதம்	4	4	0
ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீபகவத்கீதை	2	4	0
ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம்	2	4	0
ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீசுவரர் பூர்வஜன்ம இச் ஜன்ம சரித்திரம்	0	6	0
மனோ ஓட்டத்தை நிறுத்திக்காட்டும் நூல் ...	0	4	0
தத்துவ பரிசோதனை, அன்னதான பலன்	0	8	0

ஸ்ரீ பாரதி புஸ்தகசாலை, ஜார்ஜ் டோவுன் போஸ்ட், சென்னை.

இப்புத்தகம் ஒன்றே உபாத்தியாயரின் உதவியின்றி
வெகு விரைவில் யாவரையும் ஆங்கிலத்தில் வல்லவராக்கும்.

ஆங்கில போதகன்.

தமிழ் எழுத்துக்களைக்கொண்டே இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்

இதைப்போல் இங்கிலீஷ் பாஷையைப் போதிக்கும் நூல் வேறே கிடையாது

இதை வாசித்தால் அதிக சுலபத்தில் இங்கிலீஷ் எழுதவும் பேசவும் நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம். இதற்கு உபாத்தியாயர் தேவையில்லை. இதில் ஆங்கில எழுத்துக்களையும், பதங்களையும் தமிழில் உச்சரிக்கும் விதங்களைக்காட்டி ஆங்கில பாஷையிலுள்ள இரண்டெழுத்துச் சொற்கள்முதல் பலவெழுத்துச் சொற்களையும் விவரித்து அவற்றிற்குச் சரியான தமிழ் உச்சரிப்புக்களையும், தமிழ் அருத்தங்களையும், அவ்வப்பதங்களைக்கொண்ட வாக்கியங்களையும், படிப்படியாக யாவரும் வெகு சுலபமாய்த் தெரிந்துக்கொள்ளும்படி எழுதப்பட்டிருப்பதுடன் மிருகங்கள், பட்சிகள் வீட்டுச் சாமான்கள், உணவுப்பொருள்கள்; குடும்பவிவகாரங்கள், வியாபார விஷயங்கள், தேகாரோக்கியம், சரீரக்கூறுகள், உத்தியோக விஷயம், நீதிஸ்தானம் முதலிய அரசாங்க விவகாரங்கள், சிநேக சம்பாஷணைகள், கடிதமெழுதும் முறைகள், கிராமாதிசயங்கள், பட்டண வாழ்க்கை, தொழிற் சம்பந்தமான விஷயங்கள் விண்ணப்பங்கள், கலியாண முதலிய சுப விகிதங்கள், வியாசங்கள், சிறு கதைகள், உலக அநுபவத்திற்கான சகல விஷயங்களும் சுலபமான நடையில் இங்கிலீஷிலும், தமிழிலும் எழுதப்பட்டிருக்கின்றன.

இந்த ஆங்கிலம் கற்க அவாவுறும் ஆண்மக்களுக்கும் பெண்மக்களுக்கும் மாத்திரமன்றி கிராமாதிகாரிகள், கணக்கப்பிள்ளைகள், தோட்டக் கங்காணிகள், கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள், இராணுவசிப்பாய்கள், வியாபாரிகள், ஐரோப்பியரிடமிருக்கும் தொழிலாளர்கள் முதலிய யாவருக்கும் மிகவும் அவசியமானது. இக்கு கடிதம் காலிகோ பயின்டு 332 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம் விலை ரூபா 2 0 0

ஸ்ரீ பாரதி புத்தகசாலை, குனா போஸ்ட், சென்னை